வரலாறு



தண்டபட்சம் – புள்ளமங்கை



வெள்ளி விழா விருது பெறும் மு. நளினி

கொடுமையை எதிர்த்து நில்

வரலாறு 26

ஆய்விதழ்

2016

இரா. கலைக்கோவன்
முதன்மை ஆசிரியர்

மு. நளினி
பொறுப்பாசிரியர்

அர. அகிலா
இணை ஆசிரியர்

வெளியிடுவோர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
சி 87, பத்தாம் குறுக்குச் சாலை, தில்லைநகர் மேற்கு,
திருச்சிராப்பள்ளி - 620 018.

வரலாறு 26 (2016)
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
திருச்சிராப்பள்ளி - 620 018.

VARALARU 26

Journal of Dr.M.Rajamanikkanar Centre for Historical Research
Thiruchirappalli - 620 018.

இவ்விதழ் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் (Indian Council of Historical Research) நல்கை உதவியுடன் வெளியிடப் பெறுகிறது. இவ்விதழில் வெளியிடப்படும் செய்திகளுக்கு அவ்வக் கட்டுரை ஆசிரியரே பொறுப்பு. இந்திய வரலாற்று ஆய்வுக் கழகமோ, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமோ எவ்விதத்தானும் பொறுப்பன்று.

'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்'

ஆசிரியர் உரை

தமிழ்நாட்டுக் கலைவரலாற்றில் ஆடற்கலைக்குத் தனி இடமுண்டு. இலக்கியங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் துணை கொண்டு தமிழ்நாட்டின் ஆடற்கலை வரலாற்றை வடிவமைக் கும் முயற்சியை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் 1985இல் இருந்தே மேற்கொண்டுள்ளது. பல ஆண்டு களுக்கு முன் வெளியான சோழர் கால ஆடற்கலை, தலைக் கோல் எனும் நூல்களும் மையத்தின் அண்மை வெளியீடுகளான சங்கச்சாரல், இருண்டகாலமா எனும் நூல்களும் அம்முயற்சி யின் வெளிப்பாடுகளே. பரதர் பதிவுசெய்திருக்கும் 108 கரணங் களுள் ஒன்றான ஊர்த்வஜாநு, 'முழங்கால்' என்ற தலைப்பில் இந்த இதழில் நிறைவான ஆய்வுக்கட்டுரையாக வெளியாகியுள் ளது. 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்நாட்டுக் கோயில் களில் களஆய்வுகளில் கண்டறியப்பட்ட கணக்கற்ற சிற்பங் களைப் பல்வேறு கோணங்களில் அணுகி இந்த ஆய்வுக் கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விதழில் இடம்பெறும் குடக்கூத்துக் கட்டுரையும் இத்தகையதே.

தவத்துறைக் கோயில் பல ஆண்டுகளாக எங்கள் ஆய்வின் கீழ் இருந்தபோதும் 2015இன் இறுதியிலும் 2016இன் தொடக் கத்திலும் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகள் பல புதிய கண்டு பிடிப்புகளைப் பதிவுசெய்தன. அவற்றையும் உள்ளடக்கிய விரிவான கட்டுரையே தவத்துறைக் கல்வெட்டுகள் என்ற தலைப்பில் தொடங்கியுள்ளது.

அண்மையில் இரண்டு செம்மையான தன்வரலாற்று நூல் களை வெளியிட்டதன் வழித் தம்முடைய 75ஆம் பிறந்த நாளைப் பயனுடைய நாளாக மலரச் செய்த திரு. சிவகுமார் ஓவியம், நடிப்பு, பேச்சு எனும் மூன்று துறைகளிலும் உயரங் களைத் தொட்டவர். அவரிடம் நான் கண்டதும் கொண்டதும் பெருமைச்சுவடுகளாகியுள்ளன. உண்டாலம்ம இவ்வுலகம் என உளம் மகிழ்ந்து வாழ்த்த இன்னமும் நல்லவர் பலர் நம்மிடையே இருப்பதை நண்பர் மருத்துவர் மீ. சா. அஷ்ரப் உடனான என் அனுபவங்கள் புலப்படுத்துகின்றன.

- இரா. கலைக்கோவன்

வாழ்வியல் எழுத்தாளர்

டாக்டர் மு. முத்துக்காளத்தியின்

தமிழ்ப் பணிகளைப் போற்றி

அவரது 19ஆம் நினைவாண்டில்

வரலாறு 26ஆம் தொகுதிக்கான

ஆய்வுக்கட்டுரைகளின் களப்பணிகளுக்கு

நல்கை வழங்கியவர்

அவரது திருமகன் திரு. மு. இராசமுருகன்

இந்த இதழில் . . . .

1. புதிய கல்வெட்டுகள்

1. தவத்துறைக் கல்வெட்டுகள் 7
- அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன்

2. பூரத்தூர் முக்தீசுவரம் கல்வெட்டுகள் 36
- அர. அகிலா, மு. நளினி

3. உய்யக்கொண்டான் திருமலைக் கல்வெட்டுகள் 41
- அர. அகிலா, மு. நளினி

2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

1. உய்யக்கொண்டான் திருமலைக் கல்வெட்டுகள் 48
- அர. அகிலா, மு. நளினி

3. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. தவத்துறைக் கல்வெட்டு 52
- அர. அகிலா, மு. நளினி

2. எறும்பியூர்க் கோயில் கல்வெட்டுகள் 54
- அர. அகிலா, மு. நளினி

4. ஆய்வுக்கட்டுரைகள்

1. சங்க காலத்தின் காலம்? 59
- இரா. கலைக்கோவன்

2. வெள்ளறைக் குடைவரை 75
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

3. குடக்கூத்து 83
- இரா. கலைக்கோவன்

4. தவத்துறைக் கல்வெட்டுகள்- 1 94
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

5. நகரி மாடக்கோயில் 120
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

6. குலாலகோட்டையூர்க் குடைவரை 128
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

7. முழங்கால் (ஜாது) 130
- இரா. கலைக்கோவன்

8. திருப்பேர் நகர் 150
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

9. இராஜராஜரின் புதல்வியர் மூவர் 157
- இரா. கலைக்கோவன்

5. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள் 162
- திரு. சிவகுமார்

2. அங்கும் இங்கும் 170

3. அன்புள்ள உங்களுக்கு 178

4. உண்டாலம்ம இவ்வுலகம் 182
- மருத்துவர் மீ. சா. அஷ்ரப்

5 அறக்கட்டளைப் பொழிவு - 15

காலப்போக்கில் தமிழகக் கல்வெட்டுகள் 192
- சு. இராஜகோபால்

இணைப்பு

திரும்பிப் பார்க்கிறோம் - 10 1101-1250
- இரா. கலைக்கோவன்

1. புதிய கல்வெட்டுகள்

1. தவத்துறைக் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன்

சிராப்பள்ளி ஜெயங்கொண்டம் சாலையில் சிராப்பள்ளியிலிருந்து ஏறத்தாழ 20 கி. மீ. தொலைவிலுள்ளது தற்போது இலால்குடி என்றழைக்கப்படும் தவத்துறை. இவ்வூரிலுள்ள சப்தரிஷீசுவரர் கோயிலில் ஆய்வுகள் மேற்கொண்டபோது கண்டறியப்பட்ட கல்வெட்டுகளுள், வரலாறு ஆய்விதழின் தொகுதிகள் 4, 12-13 ஆகியவற்றில் பதிவாகாதன இங்கு இடம் பெற்றுள்ளன. இவற்றைக் கண்டறியத் துணைநின்ற நிருவாக அலுவலர்கள் திரு. சோ. மனோகரன், திரு. இராம. சீனிவாசன், சிவாச்சாரியார்கள் கு. தேஜோவிடங்கர், தே. மகாதேவன் ஆகியோருக்கும் திரு. ம. குமரவேல், திரு. பெ. கருணாநிதி, திருமதி சு. அனிதா, செல்வி ந. மகாலட்சுமி உள்ளிட்ட கோயில் அலுவலர்களுக்கும் நாடுகாண் குழு அமைப்பாளர் அமரர் திரு. இராம. சிவப்பிரகாசத்திற்கும் உடனிருந்து உதவிய அனைத்து அன்பர்களுக்கும் உளமார்ந்த நன்றி.

முதல் கல்வெட்டு

இடம்: பெருமண்டப வடக்குச் சுவர்

செய்தி: பராந்தகபுரத்திருந்த அரிஞ்சிகை ஈசுவரத்து சகல விடங்கதேவருக்கு அவ்வூர் மணிக்கிராமத்து வணிகர் ஆறன் கயிலாயனான மனந்தசெட்டி, வைகாசி விசாகத் திருவேட்டை நாளின்போது பெருந்திருவமுது வழங்க நிலத்துண்டொன்றை விளையுமாறு பண்படுத்தி அளித்தார். இப்படையலில் கார் மணிப்பயறு இடம்பெற்றுள்ளதுடன், எண்ணாழிவிட்டக் கால் எனும் முகத்தலளவையும் குறிக்கப்படுகிறது.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேசரிபம்மற்க்கு யாண்டு 4ஆவது வ்ருச்சிக நாயற்று இடையாற்று நாட்டுப் ப

2 ராந்தகபுரத்து அரிஞ்சிகைய் ஈச்வரக்ருகத்து சகல விடங்கதேவர்க்கு இவ்வூர் மணிக்கிராமத்து

3 வ்யாபாரி ஆறன் கயிலாயனான மனந்தசெட்டியேன்
சந்திராதித்யவற் வைகாசி விசாகத்து தி

4 ருவேட்டை நான்று பெருந்திருவமிர்து செய்ய நான்
இநகரத்தார் பக்கல் விலை கொண்டு நெல் வி

5 ளையக் கல்லுவித்த நிலமாவது இவ்வூர் நாவிதன்
இல்மனைத் தோட்டத்துக்கு மேற்குங் கிழக்கோ

6 டிய வாய்க்காலுக்கு மேற்கு மங்கலவாசலுக்குக் கிழக்
கும் பெருந்தெருவுக்கு தெற்கும் இந்நான்கெல்லையுள

7 கப்பட்ட நிலத்து ஆட்டைக் கடன் நெல்லு இருபத்
தைங் கலமுங் கொண்டு போனகப் பழவரிசி ஐங்க

8 லத்துக்கும் நெல்லு பன்னிரு கலநே தூணிப்பதக்கும்
நெய்யமுது குறுணிக்கு நெல்லு இருகல

9 நே யிருதூணியும் தயிரமுது தூணிக்கு நெல்லு கலமும்
தூப்பருப்புக் குறுணிக்கு நெல்லுத் தூணி நா

10 னாழியும் கார்மணிப்பயறு குறுணிக்கு நெல்லு
முக்குறுணியும் நூறு வாழைப்பழத்துக்கு நெல்லு

11 எழு குறுணி நானாழியும் இருபத்தைம் பல சர்க்கரைக்கு
நெல்லு முக்குறுணியும் பல கறிக்கு நெல்லு

12 க் கலமும் பல காயத்துக்கு நெல்லு முக்குறுணியும் உப்பு
அமுதுக்கு நெல்லுக் குறுணியும் வாழைக்குருத்து

13 க்கு நெல்லு பதக்கும் இதுக்குக் கீழ் அட்ட நெல்லு .....
..யும் அடைக்காயமுது இருநூற்றுக்கும் இரு

14 பது பற்றிலைக்கும் நெல்லு - - வைச்ச நெல்லுக்
கலத்துக்கு நெல்லு நாற்றாணியும் விறகுக்கு நெல்லு

15 தூணிப்பதக்கும் எண்ணெய் நாழிக்கு நெல்லு தூணி
யும் திருமெய்ப்பூச்சுக்கும் பள்ளித்தாமத்துக்கும் நெல்

16 தூணியும் தன்னிறைக்கு நெல்லு இரு கலனே தூணிப்
பதக்குமாக நெல்லு இருபத்தைங்கலமும் இவ்

17 வூர் ரெண்ணாழிவிட்டக்காலால் வாடாக்கடனாக
வைத்தேன் ஆறன் கயிலாயனான மனந்தன்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: சோழகுலசுந்தரியின் அகப்பரிவாரத்துப் பெண் டாட்டி சிங்கன் குப்பை தவத்துறை இறைவன் முன் நந்தா விளக்கொன்று ஏற்ற அளித்த 11 கழஞ்சுப் பொன் கொண்டு காவிதிக்குடி ஊரார்டம் இறையிலியாக வாங்கப்பட்ட காற் செய் நிலவிளைவின் வழி விளக்கேற்றப்பட்டது.

காலம்: முதலாம் இராஜாதிராஜர், பொ. கா. 1045.

1-11 திங்களேர்தரு எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

12 - - ராஜாதிராஜ தேவற்கு யாண்டு 28ஆவது பாண்டி குலாசநி வளநாட்டு இடையாற்று நாட்டு

13 (திருத்தவத்துறை) பட்டாரகற்க்கு பிள்ளையார் சோழ குலசுந்தரியா ரகப்பரிவாரத்து பெண்டாட்டி சிங்கன் குப்பை திருத்த

14 (வத்துறை பட்டா)ரகற்கு ஒரு திருநொந்தாவிளக்கு சந்திராதித்யவற் இரவும் பகலுமெரிவதாக தேவர் பண்டாரத்து வைத்த பெ

15 (பான் 11) பதிநொரு கழஞ்சும் வடகரை இராஜாச்ரய வளநாட்டு நெற்குப்பைக் கண்டத்து காவிதிக்குடி ஊரோம் இத்தேவர்

16 (பண்)டாரத்தில் இப்பொன் 11 கழஞ்சு கொண்டு ஒரு திருநொந்தாவிளக்கினுக்கு நாங்கள் விற்றுக் குடுத்த நீர் நிலமாவது குண்டு வாய்க்காற் செய் காலுக்கு கீழ்

17 பாற்கெல்லை ஒரு மா முக்காணிக்கு மூந்று மாவுக்கு மேற்குந் தெந்பாற்கெல்லை ஒருமாவரைக்கு வடக்கும் மீபாற்கெல்லை இளமாவுடையான் நி

18 லத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை இரண்டு மாவுக்கு தெற்குமாக இந்நான்கெல்லையு ளகப்பட்ட நிலங் காலும் மிகுதிக் குறைவுள்ள

19 டங்க உண்ணிலமொ

20 ழிவின்றி விற்று விலை

21 யாவணஞ் செய்து குடு

22 த்தோம் திருத்தவத்துறை ஈ

23 சுவர பட்டாரகற்க்கு காவிதிக்குடி ஊ

24 ரோம் இந்நிலஞ் சுட்டி வந்த இறை

25 யும் எச்சோறும் வெட்டி வேதினையும்

26 செந்நீர் வெட்டி உட்பட எப்பேற்பட்டதுங் காட்டாமே

27 தாமானோம் காவிதிக்குடி ஊரோம் இதிற்றிறம்பி

28 ல் ஊராகவுந் தனித்தாகவு ஐந்மாசநமுள்

29 ளிட்ட தாந் வேண்டு கோவினுக்கு நூற்றெட்டு

30 காணத் தண்டமிட்டு பின்னையும் மிந்நி

31 லத்திற் போகமே கொண்டு இவ்விளக்கு

32 ஒன்றும் எரிப்பதாக ஒட்டி சிலாலே

33 கை செய்து குடுத்தோம் திருத்தவத்து

34 றை ஈசுவர பட்டாரகற்க்கு காவிதிக்குடி ஊ

35 ரோம் இது பந்மாஹேச்வர ரக்ஷை

மூன்றாம் கல்வெட்டு

இடம்: வெளிச்சுற்றுத் தெற்குச் சுவர்.

காலம்: பொ. கா. 1068.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு ஆறா

2 - - தரையனும் தந்ம ப

3 - - வோம் வீற்றிருந்தா

4 - - நாங்கள் இசைந்தபடி

5 - - நாராயண இவை

6 - - ளிச் செய்தபடி

7 - - யும் நீக்கி - -

8 - - நாங்களே யி

நான்காம் கல்வெட்டு

இடம்: இறைவன் கோயில் பெருமண்டப மேற்கு வாயில் மேலுள்ள உத்திரம்.

காலம்: பொ. கா. 12ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ இவ்வழகிய் சேமன் திருவாசலும்

2 இவ்வழகிய சேமன் நிருத்த மண்டபமும் இன்னாயனார் தி

3 ருவாபரணமும் செய்வித்தான் கங்கன் பெருமாளான இரா(ஜ)ரா(ஜ) மழ்நாடாழ்வான்

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: பெருமண்டபத் தெற்குச் சுவர். கல்வெட்டின் பிற்பகுதி வரிகளின் தொடக்கம் வாயில் அமைத்த நிலையில் சிதைக்கப்பட்டுள்ளது.

செய்தி: இராஜசண்டன் மாளிகைக் கோலால் அளக்கப் பெற்ற ஆயிரம் குழி நிலம் இரண்டு கழஞ்சுப் பொன்னுக்கு இடையாற்றுமங்கலத்து சபையாரால் கோயிலுக்கு விற்கப் பட்டது. நிலத்துக்கு இறைக்காவலாகக் கோயில் 30 கழஞ்சுப் பொன் தந்தது.

காலம்: இரண்டாம் இராஜேந்திரர், பொ. கா. 1054.

1-6 திருவளர் திரள்புயத்த எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

7 க விளக்கிய கோராஜகேஸரிபந்மரான உடையார் ஸ்ரீஇராஜேந்திர தேவற்க்கு யாண்டு நாலாவது பாண்டி குலா

8 சநி வளநாட்டு இடையாற்று நாட்டு ப்ரஹ்மதேயம் இடையாற்றுமங்கலத்து பெரு

9 ங்குறி ஸபையோம் இநாட்டுத் திருத்தவத்துறை உடையாற்க்கு நாங்கள் விலைக்கிசைந்து வி

10 ற்க்கின்ற நிலமாவது நாங்கள் ராதிதரன் திருவணக்குடி நாராயணனும் ஆத்ரயனாராய

11 ணன் ஹவதத்தபட்டநும் பக்கல் விலை கொண்டு உடைய நிலமாவது இவூர் ஸ்ரீவானவன் ம

12 (ா)தேவி வதிக்குக் கிழக்கு ஸ்ரீராஜேந்த்ரசோழ வாக்காலுக்கு வடக்கு இஆ(றா) க(ண்)ணாற்று 3ஞ் சதிரத்து தாநத்தார்பத்து

13 இதற்க்கு கீழ்பாற்க்கெல்லை ராதீதரந் சந்த்ராபரணந் தாயந் நிலத்துக்கு மேற்க்கு தென்பாற்க்கெல்லை சிவதாஸ ஈ

14 ச்வரம் உடையார் நிலம் ஆலம்பள்ளத்துக்கு வடக்கு மீபாற்கெல்லை மும்முடிசோழமங்கலத்து அருமொ

15 ழி மசக்கலுக்குக் கிழக்கு வடபாற்கெல்லை ஸ்ரீகிருஷ்ண புர நாராயண வாய்க்காலுக்கு தெற்கும் இவிசைத்த பெருநான்கெல்லை

16 யுட்பட்ட நிலம் குழி எண்ணூறும் இதன் மீ(தே)த போய் இவ்வதிக்குக் கிழக்கு இகிருஷ்ணபுர நாராயண வாய்க்காலுக்கு வடக்கு

17 1 கண்ணாற்று 3ஆஞ் சதிரத்து நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை இராதிதரன் வடுகந் தாயந் நிலத்துக்கு மேற்க்கும் இவ்வாய்க்காலுக்கு வடக்கு

18 மீபாற்கெல்லை மும்முடிசோழமங்கலத்து நிலத்துக்குக் கிழக்கு வடபாற்க்கெல்லை தேவதாநம் செல்லூர் (வா)ட்க்கை நிலத்துக்கு தெற்க்கு இ(வ்)

19 விசைத்த பெருநான்கெல்லையுட்பட்ட நிலம் குழி இருநூறும் ஆக இரண்டு கிடக்கை நிலமுமாக ராஜ(ச) ண்டந் மாளிகைக் கோலால் குழி

20 ஆயிரமும் இத்திருத்தவத்துறை உடைய (மகாதேவர்) இதேவர் தேவர்கந்மி

21 களும் பந்மாஹேச்வரக் கண்காணி செய்வார்களும் பக்கல் இதேவர் பண்டாரத்து கொண்(ட)

22 விலைப் பொருள் திப்பொக்குச் செம்பொன் குடிஞைக் கல்லால் கொண்ட பொந் இருகழஞ்

23 சு இப்பொந் இருகழஞ்சுங் கொண்டு இந்நிலங் குழி ஆயிரமும் விலைக்கற விற்று

24 ப் பொருளற கொண்டு விற்று விலையாவணஞ் செது குடுத்தோம் இதேவற்கு பெ

25 ருங்குறி ஸபையோம் இநிலத்துக்கு இதுவே பொருமாவறுதிப் பொருட் சிலவோலை ஆ

26 வதாகவும் இதுவல்லது பொருமாவறுதி காட்டக் கடவரல்லாதாராக இப்பரி

27 - - பொனிரு கழஞ்சுக்கும் விற்றுக் குடுத்தோம் இத்திருத்தவத்துறை உடையா

28 - - ங்குறி ஸபையோம் இந்நிலத்துக்கு இறைகாவலாக இதேவர் பண்டா

29 - - ம் பொன் முப்பதின் கழஞ்சு இப்பொன் முப்பதின் கழஞ்சுங் கொண்டு இநில

30 - - திருவாசலில் போந்த குடிமை யெப்பேர்பட்டதுவு நாங்களே இறுக்கக் கடவோமாகவு

31 - - ராகவும் முன்னீர் பாய்ச்சிக்கொள்ளப் பெறுவாராக வும் இதில் திறம்பிற் ஸபை

32 - - மெங்களையே இறை இறுப்பிச்சு மிந்நில இறையிலி இதேவரே யனுபவிக்கப்பெறு

33 - - நிலங் குழி ஆயிரமும் இறையிலியாக விற்றுக் குடுத்தோம் திருத்தவத்துறை உடையாற்

34 - - யோம் திருவடி - - யாத்ரயன் நந்தீசுவரன் ஸ்ரீகிருஷ்ணன் சோமயாஜியாரும்

35-36(சிதைந்துள்ளன)

ஆறாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: தவத்துறைக் கோயிலில் விளக்கேற்ற வீரசிகா மணிப் பல்லவரையர் வைத்த 84 கொங்கலாடும் ஊர்ப் புன்னை மர இலைகளைத் தின்று குடல் அழுகி இறந்தமையால் விளக்

கறத்தைத் தொடரப் புதுக்குடி இராயரி ஆதித்தன் தளிப் பட்டுடையாரிடம் ஞாயிறு எழுந்து விழுமளவும் ஏழு நாழிகைப் போது விளக்கெரிக்கப் பொன் அளித்தார். இறுதிவரி படிக்கமுடியாதபடி சிதைந்துள்ளது.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்மற்கு யாண்டு 12ஆவது இடை

2 யாற்று நாட்டுத் திருத்தவத்துறை ஈச்வர பட்டாரகற்குப் பூதிபல்லவ(ே)ப

3 ரையனான வீரசிகாமணிப் பல்லவரையர் வைச்ச கொங்கலா

4 டு 84 இவை இவ்வூர்ப் புன்னையிலை தின்று குடரழுகிச் சாவ அரை(யரே)

5 வ இவை வைய்ப்பிக்கப் போந்த புதுக்குடானிராயரி ஆதிதனே னிவை விற்(று)

6 முதலாக்கித் திருவிளக்கினுக்கு வைய்த்த பொன் 9 கழஞ்சு 7 மஞ்சாடி குன்றி இப்பொன் ஒன்ப(தி)

7 ன் கழஞ்சே எழுமஞ்சாடியுங் குன்றியுங் கொண்டு நிசத மாழாக்கே யரைப்பி(டி)

8 யெண்ணையால் நாயறெழுந்தது துடங்கி அந்தி பட்டெழு நாழிகைய(ள)வும்

9 தாமே சந்திராதித்தவரை இவிளக்கெரிப்போமாநோ மித் தளிப்பட்டுடையான் கௌசிகன் பட்டன் ச

10 . . . திதரந் சேந்தன் வீரபத்திரநு மாத்தரயந் நக்கந் வடுகந் உள்ளிட்டார் பணி

ஏழாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: இடையாற்று நாட்டுக் கரந்தலப்பால் புதுக்குடி இராயேரி ஆதித்தன் தான் கோயிலுக்களித்த திருப்பள்ளிக் கட்டில் அருகே இரவு முழுவதும் நந்தாவிளக்கொன்று ஏற்ற 15 கழஞ்சுப் பொன் தந்தார். இவ்விளக்கு ஞாயிறு மறைந்தது

தொடங்கி எழும்வரை எரிந்தது. இறுதி இரண்டு வரிகள் வாயிலமைப்பால் சிதைந்துள்ளன.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்மக்கு யாண்டு 9ஆவது
2 இடையாற்று நாட்டுத் திருத்தவத்துறை மஹாதேவ பட்டாரகர்க்கு
3 இந்நாட்டுக் கரந்(ந்)தலபால் புதுக்குடாந் இராயேரி ஆதித்தந் வைச்
4 ச திருப்பள்ளிக்கட்டில்ப் பாடே இரா நொந்தாவிளக்கு 1 ஒன்று எரிய இ
5 வநே வச்ச பொந் 10 கழஞ்சு இப்பொன் பதிந்கழஞ்சுங் கொண்டு சந்த்ராதித்தவற் நொ
6 ந்தாவிளக்கு நாயிறுபாற் ஸந்தி துடங்கி நாயிறு எழுமளவும் எரிய்ப்
7 போமாநோம் - - டையோம் இவநே ஒரு காசு குடுத்து

எட்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: நம்பாலை ஆதித்தன் அகமுடையாள் சுந்தரி நந்தாவிளக்கொன்று ஏற்றக் கோயில் சிவபிராமணரிடம் ஆறு காசுகள் அளித்தார்.

காலம்: விக்கிரமசோழர், பொ. கா. 1121.

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்
2 கிரமசோழ
3 தேவர்க்கு யாண்
4 டு 4ஆவது பாண்
5 டிகுலாசனி வளனாட்
6 டு இடையாற்று னாட்டு
7 திருத்தவத்துறை ஈச்வர
8 பட்டாரகர்க்கு இந்நாட்டு மீ

9 கோழைனாட்டு துகவூர் க

10 ள்ளர் மகந் நம்பாலை ஆதித்த

11 ந் (நக்க)ந் உறைய நாடாழ்வாந(ா)

12 ந அணுக்கநம்பி அகமுடையாள்

13 சோறுடையாள் சுந்தரி

14 சந்திராதித்ய

15 வற் ஒரு திருநு

16 ந்தாவிளக்கு செ

17 ல்வதாக இந்த ஸ்த

18 ாநத்து சிவபிரா

19 ஹ்மணர் வசம் குடுத்த கா

20 சு ஆறு இக்காசு

21 ஆறும் கைக்கொண்டோம் இக்கோயில் காணிஉடைய சிவ - -

22 து பன்மாஹேச்வர ரக்ஷை

ஒன்பதாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: கற்பகம் இராஜேந்திரசோழன் இக்கோயில் இறைவனுக்கு 80 பலத்தில் விளக்கு நிலை ஒன்றும் 60 பலத்தில் கரண்டி ஒன்றும் அளித்தார்.

காலம்: பொ. கா. 11ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருத்தவத்து

2 றை மாதேவற்க்கு கற்ப

3 கம் ராஜேந்திரசோழன் இ(ட்)

4 ட விளக்கு நிறை 80 பலம்

5 சருவம் 1 நிறை 60 பல

6 ம் பன்மாயேச்வர ரக்ஷை

பத்தாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: கோயிலில் மூன்று சந்தியும் மூன்று ஆள் கொண்டு கொட்டச் சடங்கவி அத்யான், சடங்கவி இசக்கன் ஆகியோருக்குத் தாம் கோயிலாரிடம் விலைக்குப் பெற்ற புன்செய்த் தரிசைப் புகழங்காமன் அளித்தார்.

காலம்: முதலாம் பராந்தகர், பொ. கா. 907- 955.

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரையுங் ஈழமுங் கொண்ட கோப்பர கேஸரிபந்மற்கு யா - -

2 நாட்டு பா(ச்சில்) கூற்றத்து கீழ்பிலாற்றுத் துறையூருடை யான் புகழங்காம - -

3 (திருத்தவத்து)றை ஈச்வர பட்டாரகரிடை நாந் விலை கொண்ட புன்செய்த் தி - -

4 குள(த்து)க்கு மேக்குந் தென்பாற்கெல்லை மடவிளாகத் துக்கும் புகழங்காம(ன்) - -

5 . யலி வடபுலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை மேற்றேவதான - -

6 பெருவழிக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான் கெல்லை யுளகப்பட்ட - -

7 உண்ணிலம் ஒழிவின்றி வந்த நிலமெல்லாங் கொண்டு மூன்றாளால் மூன் - -

8 தியும் வழுவாமே கொட்டுவதாக சடங்கவி அத்யா னுக்குஞ் சடங்கவி இசக்கனு(க்கும் குடு)

9 த்தேன் துறையூருடையான் புகழங்காமநேந் இது பன்மாஹேச்வர ரண(க்ஷ)

பதினொன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: இடையாற்று நாட்டுக் கரந்தலப்பால் புதுக்குடி ஓணன் ஆதித்தன் புதுக்குடியில் திசையாயிரத்து ஐயபொழில்

ஐந்நூற்றுவர் பெயரால் பரமேசுவரிக்குக் கோயில் எடுப்பித்தார். இறைவியின் பெயர் ஐயபொழில். கல்வெட்டின் இறுதியில் விளக்கும் பசும்பையும் செதுக்கப்பட்டுள்ளன.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ (இடையா)ற்று நாட்டுக் கரந்தைப்பாற்புது

2 க்குடி புதுக்குடானோண னாதித்தநேன்ப் புதுக்கு

3 டி பரமேச்வரி கோயில் நானெடுப்பித்த ஸ்ரீகோயில்

4 திகையாயிரத் தையபொழி லஞ்ஞூற்றுவர் திரு

5 நாம இது ஐயபொழிலெந்பது நங்கை திருநா

6 மம் இது அஞ்ஞூற்றுவர் ரகைஷ

பன்னிரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: அரையன் சூரியனான இராஜேந்திரசோழ தமிழ தரையன் இக்கோயில் இறைவனுக்கு நீலம், முத்து, வைரம், பச்சை முதலிய விலையுயர்ந்த கற்கள் கொண்டு 23 கழஞ்சுப் பொன்னில் செய்யப்பட்ட அணிகலனை வழங்கியுள்ளார்.

காலம்: முதலாம் இராஜாதிராஜர், பொ. கா. 1018 - 1054.

1 ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீராஜாதிராஜதேவற்(க்கு) யாண்டு 3 . ஆவது

2 இருபத்து முக்கழஞ்சேய் காற்பொன் நீலமிரண்டு மாணி

3 க்க மிருபத்திரண்டோரிண பெருமுத்தமிள வயிர மெண்பத்

4 து நான்கு பச்சையிருபத்திரண்டு தரங்கூட்டி யிரண்டு திருமிக்க

5 கந நாவதாரஞ் செய்தணந்தான்றேன் பனையூர் நாட்டுரவூர் அரை

6 யன் சூரியநாந தருமிக்க கொடை தடக்கை யிராஜேந்த்ரசோழ தமிழ

7 தரை(ய)ன் பொன்நித் தவத்துறை யுலானாற்க்கேய் பன்மாஹே(ச்வர ரகைஷ)

பதின்மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது. கல்வெட்டின் இறுதிப்பகுதி கட்டமைப் பில் சிக்கியுள்ளது.

செய்தி: மூவேந்தரையர் பள்ளியறை நம்பிராட்டி யாருக்கு திருஆடிப்பூரத் திருவிழாவுக்குக் கொடையளித்தார்.

காலம்: முதல் குலோத்துங்கசோழர், பொ. கா. 1070 - 1128.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீகொலோத் - -

2 ராஜராஜ பாண்டி நாட்டு ஆசி நாட்டு - -

3 டையாநாந மூவேந்தரயநேந் இடையா - -

4 ளியறை நம்பிராட்டியார் திருஆடிப்பூரத்தி - -

5 ந் கோயி

6 நோற்(ற)

பதினான்காம் கல்வெட்டு

இடம்: மேலது. கல்வெட்டின் இறுதிப்பகுதி கட்டமைப் பில் சிக்கியுள்ளது.

செய்தி: பிரம்பில் இரையூர்க் கிழவன் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் பெயரால் மண்டபம் எடுப்பித்தார்.

காலம்: பொ. கா. 11ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ இடையாற்று நாட்டு திருத்த - -

2 ற்றத்து மீய் பிரம்பிலிரையூர் கிழவன் - -

3 ந் மண்டபம் திச(ச)யாயிரத்தைஞ் - -

பதினைந்தாம் கல்வெட்டு

இடம்: மேலது. கல்வெட்டின் இடைப்பகுதிகளும் பிற்பகுதியும் கட்டமைப்பில் சிக்கியுள்ளன.

செய்தி: சாலை மாணவர்களுக்கு உணவளிக்க அதிகாரி கருப்பூருடையார் 20 காசுக்கு நிலம் பெற்றுச் சாலாபோகமாக அளித்தார். இவர் இக்கோயிலிலுள்ள மற்றொரு இராஜாதி ராஜர் கல்வெட்டில் கொடையாளியாக இடம்பெறும் மஞ்சத் தில்லைக் கூத்தனான சோழகுல சிகாமணி மூவேந்தவேளாராக லாம். இறைக்காவலுக்கு சபையால் 15 காசு கொள்ளப்பட்டது.

காலம்: முதலாம் இராஜாதிராஜர், பொ. கா. 1018 - 1054.

1-4 திங்களேர்தரு எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

5 - - ஸ்ரீஇராஜாதிராஜ தேவற்கு யாண்டு - -

6 நாட்டு இடையாற்று நாட்டு திருத்தவத்துறை உடைய பரமேச்வரற்கு சத்திரியசிகாமணி வளநாட்டு (மருகல்) நாட்டு கருப்பூர் அதிகாரிகள் கருப்பூருடை - - இத்தேவர் பண்டாரத்து ஒடுக்கின காசு 20 இக்காசு இருபதும் திருத்தவத்துறை சுகாசனமினிதெழுந்தருளி இருந்த பரமச்வாமிக்கு மூலப்ருத்ரியரான ஆதிசண்டேச்வர - -

7 உண்ண வைத்த சாலைக்கு சாலாபோகம் ஆக இராஜாச்ரய வளநாட்டு கலார்கூற்றத்து ப்ரஹ்மதேயம் மணக்கால் சபையோம் இக்காசு இருபதும் கைக் கொண்டு நாங்கள் விற்கின்ற குழி . . . . . யாகக் கொண்ட காசு ஐஞ்சும் இன்னிலங்களுக்கு இறைக்காவலாகக் கொண்ட காசு பதினைஞ்சும் கைக் கொண்டு நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவரை கீழ்பாற்கெல்லை - -

8 - - நிலன் முக்காலே ஒருமாவும் இதன் . . போய் திருவரங்கவதிக்கு கிழக்கு அருள்நிதி வாய்க்(கா)லுக்கு வடக்கு மூன்றாங் கண்ணாற்று முதற் சதிரத்து வடக் கடை - -

பதினாறாம் கல்வெட்டு

இடம்: சிவகங்கைக் குளத்தின் படித்துறை மண்டபத்துக் கிழக்குச் சுவரில் இரண்டு துண்டுகளாக உள்ள கல்வெட்டு.

காலம்: பொ. கா. 1548.

1 சுபமஸ்து சகாப்தம் 1470ன் மேல் செல்லா நின்ற

2 சுக்கில வருஷம் ஆடி மீ 9 இநாயனார் திருத்தவத்துறை உ

3 டைய நாயனார் மழவனைக் கொழுனை நித்தந் சிவ

4 கங்கை திருக்குளம் இறந்து போகையில் இந்தத் திருக்கு

5 ளம் திருச்சிராப்பள்ளி வாணிய

6 நகரத்தாரில் மாளிகை உ

7 டையான் ம . . . . சு . க்கு

8 நாயகப்பிள்ளை திருப்பணி

9 ஆக நடந்தது உ

பதினேழாம் கல்வெட்டு

இடம்: வடக்கு, தெற்கு வெளிச்சுற்றுச் சுவர் தாமரைவரி.

காலம்: பொ. கா. 13ஆம் நூற்றாண்டு.

அ. வடக்கு

1 சோமஸ்தானம்

ஆ. தெற்கு

2 சண்டஸ்தானம்

பதினெட்டாம் கல்வெட்டு

இடம்: முதற் கோபுரம்.

செய்தி: கோயிற் சார்ந்த இடங்களில் தென்னைமரங்கள் விளைவித்துப் பயன் கோயிலுக்குப் பெறப்பட்டது.

காலம்: பொ. கா. 15ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருத்தவத்துறை உடைய நயினார்

2 திருனாமத்துக்காணி திருத்தவத்துறையில்

3 திருமடவிளாகம் திரு . . . . . திருநன்

4 தாவானம் திருவீதிமனைப் பற்று இவையிற்றா

5 லே தென்னை மரம் வைத்து ஐன்யத்து நேர்த்தி ப

6 யிராக்கக் கடவர்களாகவும் பயிர் வந்தவிடத்து

7 - - ஆயிரத்து அறுநூறும் மரத்திலே

8-12 வரிகள் சிதைந்துள்ளன.

பத்தொன்பதாம் கல்வெட்டு

இடம்: மேலது. கல்வெட்டுப் பெரிதும் சிதைந்துள்ளது.

காலம்: பொ. கா. 1471.

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாற்தம் 1393 மேற் துன்மதி வருஷம் ஆவ

2 னி மாதம் - - தோசி தொற்படர் புத்திரற்

3 - - தொற்படர் அவர்கள் கட்ட

4 - - தம்பிள்ளை குமாரர் அய்யர்

5 - - ச்சீர்மைக் குரம்பு

6 - -

7 - - க்குச் சிலாசாதனம் பண்ணிக் கொடுத்த

8 படி இதுக்கு இசனக்குறை . . பலகைகாறருக்கும்

9 ருஷம் இ ஆயிரத்து அறுநூறு பொன்னும்

இருபதாம் கல்வெட்டு

இடம்: வெளிச்சுற்றின் வடகிழக்கிலுள்ள நாற்கால் பந்தல் தரை.

காலம்: பொ. கா. 19ஆம் நூற்றாண்டு.

1 சிறபுறம் கோட்டையிலிருக்கும் தாசி கோதை மக

2 ள் குட்டிப் பாக்கல் றெண்டு உபையம்

இருபத்தொன்றாம் கல்வெட்டு

இடம்: கொடிமரம்.

காலம்: பொ. கா. 1939-40.

1 சிவமயம்

2 லால்குடி தேவஸ்தானம்

3 கட்டை வெட்டி மிராசு

4 மேற்படியூரில் கொத்ததெரு

5 சேவி முத்திரியர் குமாரர்

6 தொந்தி என்கிற அடை

7 க்கலங்காத்தான் முத்

8 திரியர் வேண்டுதல்படி மேற்படி

9 யார் தம்பி நாகமுத்து

10 முத்திரியர் சின்னச்

11 சாமி முத்திரியர் நாங்

12 கள் செய்த உபயம்

13 பிரமாதி ஆண்டு கார்த்தி

14 கை மாதம் 30 தேதி

இருபத்திரண்டாம் கல்வெட்டு

இடம்: மூன்றாம் வாயிலின் படி.

காலம்: பொ. கா. 19ஆம் நூற்றாண்டு.

1	ரவுத்திரி (வருடம்)	2	கார்த்திகை மீ
3	13 உ திருவே	4	ங்கடம் பிள்ளை
5	அவர்கள் உ	6	பையம் உ

இருபத்து மூன்றாம் கல்வெட்டு

இடம்: வாகன மண்டபத்திற்கு முன்னுள்ள நடையில் பாவப்பட்டுள்ள 17 கற்பலகைகளில் காணப்படும் இப்பெயர் கள் அவற்றை அளித்தவர்களுடையனவாகலாம்.

காலம்: பொ. கா. 19ஆம் நூற்றாண்டு.

1.	1	பிறமேசுவற குரு	2	க்கள்
2.	1	கூத்	2	தன்
3.	1	தேவராச பட்டர்	2	சதாசேர்வை
4.	1	நமசிவாய	2	ம் சதாசேர்வை
5.	1	தவத்துறை	2	நம்பிள்ளை
6.	1	தவத்துறை	2	நம்பி
7.	1	சிவந்தபாதம்	2	சதாசேர்வை

8.	1	செத்த ரிஷி	2	குருக்கள்
9.	1	சீரங்	2	கன்
10.	1	வயித்தியனா	2	தன் சதா
	3	சேர்வை		
11.	1	திருமாலை	2	சூரியன் சதா
	3	சேர்வை		
12.	1	தேசவிட	2	ங்கன் தா
	3	ரும்மை		
13.	1	பெருந்திரு	2	த்தாயா
	3	ர் மகன்	4	சத்தரிஷி
14.	1	அய்யர் நம்பி		
15.	1	. ாப்படையா	2	ச்சி நித்தம் சேர்
	3	வை		
16.	1	வெங்கன்	2	நித்தம் சதா சேவை
17.	1	. . சோலை பண்டாரம்	2	ராசு பண்டாரக்
	3	கானி		

இருபத்து நான்காம் கல்வெட்டு

இடம்: வடக்கு, தெற்கு உள்ளுற்றுத் தரையிலுள்ள கற்பலகைகள்.

காலம்: பொ. கா. 19ஆம் நூற்றாண்டு.

அ. வடக்கு

1.	1	பேரம்பலம்	2	சத்தரிழிஇசு
	3	ரசுவாமி		
2.	1	ஆவக்கு	2	நம்பிய
	3	ார் சதா	4	சேர்வை
3.	1	நாய	2	கம் சத
	3	ாசேறு	4	வை உ

ஆ. தெற்கு

4. 1 செல்லம் 2 சதா

3 சேறுவை

துண்டுக் கல்வெட்டுகள்

தவத்துறைக் கோயிலின் வெளிச்சுற்றிலும் மடைப்பள்ளியிலும் தெற்கிலுள்ள தனி அறைகளிலும் தேர்மண்டபத்திலுமாய்க் காணப்படும் துண்டுக் கல்வெட்டுகள் இப்பகுதியிலிருந்த பல கோயில்களை அடையாளம் காட்டுவதுடன், தவத்துறைக் கோயிலுக்குத் தரப்பட்ட கொடைகளையும் சுட்டுகின்றன.

வெளிச்சுற்று

முதல் கல்வெட்டு

இடம்: வடசுவர் - உட்புறம்.

செய்தி: இரண்டு துண்டுகளாக உள்ளது. பவதத்த மங்கலத்து சபையார் ஸ்ரீராகவப் பெருமாளுக்குப் பத்துச் செய் நிலம் இறையிலியாக விற்றனர். மநோமய விண்ணகர் குறிக்கப்படுகிறது.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 .....க்கு வடபாற்கெல்லை ராதிதரன் நா .....

2 த்துக்கும் பாலாசிரியன் குமரன் குமரன் நிலத்துக்கும் கிழக்கு

3 லை மநோமய விண்ணகர் தேவதாநத்துக்கும் பாலாசிரியன்

4 நிலத்துக்கும் தண்டங்குறையுடையான் திருமலை பொய்யிலி

5 க்கு தெற்கும் இவ்விசைத்த பெருநான் கெல்லையுள் ளகப்பட்

6 டை விரிவு இனிலப்படி பத்து செய்யும் மிகுதிக் குறை வுள்ளடங்

7 ராதித்தவற் இறையிலியாக இந்த ஸ்ரீராகவப் பெருமா ளிடை இ

8 ங்கலத்து ஸபையோம் கொண்ட பொன் கழஞ்சி

9 ... யுந் துளையும் வழுவாதது ஊராடு கல்லால்

1 .....சந்த்ராதித்தவற் இந்நிலம் இறையிலியாக இப்பொன் பதின் க

2 ழஞ்சும் அறக்கொண்டோம் இந்த பவதத்தமங்கலத்து ஸபையோம் இ ...

3 ன்றென்றாரை வெவ்வேற்று வகை 25 கழஞ்சு இருபத்தைந் கழஞ்சு இ

4 றுப்பித்தும் இந்நில முற்றும் சந்த்ராதித்யவர் இறையிலி யாக இப்பொ

5 ன் கொண்டு இறையிலியாக செய்து குடுத்தோம் ஸ்ரீராகவப் பெருமா

6 ளுக்கு பவதத்தமங்கலத்து ஸபையோம் பணியால் இவ்விறைகாவல் ஓ

7 லை எழுதினேன் இவ்வூர் மத்யஸ்தந் அலங்காரப் பிரியனாகிய ஊரன் து

8 தியப்பனேன் இவையென்னெழுத்து இப்படியறிவேன் முத்தையில் பா

9 லாசிரியன் நாராயண ஆதித்தனேன் இவை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: சபையின் நிலவிலையாவணம்.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 - -

2 மானஞ் செய்து குடுத்தேன் தாமோதரன் நக்(க)

3 னேன் இவனுக்கு இது கண் ... இப்பரிசு

4 பிரமாணஞ் செய்பித்துக் கு(டுத்)தேன் இ

5 வன் தம் பேர்ப்பன் நக்கன் பத்மநாபனேன்

6 பணிக்க இந்த ப்ரமாணம் எழுதினேன் இவ்வூர் ஸபைக் கணக்க(ந்) மத்யஸ்த

7 மங்கலாதித்தனாகிய திவாகரன்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: அம்மன் திருமுன் கிழக்கு நுழைவாயில்.

செய்தி: நிலவிலை ஆவணமாகலாம்.

காலம்: பொ. கா. 13ஆம் நூற்றாண்டு.

1 சளவீர இராமனாத தேவற்கு - - - - நாயற்று அபர பக்ஷத்து த்ரிதியையும் நா

2 விஷையத்து வாணிக நகரத்த - - - - வாணிகர் நகரத் தாரையும் துணை

3 வாக்காலுக்கு மேற்கு கா - - - - - கொங்கப் பெருவழிக்கு சங்கேந்தி .....

நான்காம் கல்வெட்டு

இடம்: மேலது, இடப்புறம்.

காலம்: பொ. கா. 12ஆம் நூற்றாண்டு.

1 துறை உடைய நாயனாற்கும் தம்மு

2 ஆட்டைக்கு நூற்று இருபதாக வந்த காசு

3 ன்று கேட்டு நிச்சயித்த தெண்டமும்

4 யும் கொள்ளக் கடவர்களாகவும் வெட்டிக் கொ

5 - -

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: வெளிச்சுற்று வடசுவர் - வெளிப்புறம்.

செய்தி: நான்கு மாச்சின்னம் நிலம் அன்றாடு நற்காசு 1க்கு விற்கப்பட்டது. கரிகால சோழன் கரை குறிக்கப்பட்டுள்ளது.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 க்கு மேற்கும் தெந்பாற் - -

2 கரிகால சோழந் கரைக்கு வடக்கும் மீபாற்கெல்லை மேற்படி கரைக்கு

3 புரதாஸந் சோலைப்பிராந் பட்டந் உள்ளிட்டார் புஞ்சைத் தோட்டத்துக்குக் கிழக்கும்

4 டபாற்கெல்லை கண்ணாற்றுக்கு தெற்கும் ஆக இவ்விசைந்த பெ

5 ருநாந் கெல்லைக்கு உள்பட்ட பொத்தகப்படி நிலம் 4 மாச் சிந்நம் (இந்)

6 நாலு மாச் சிந்நமும் விற்றுக் குடுத்துக் கொள்வதாந எம்மிலிசை(ந்த)

7 விலைப்பொருள் அந்றாடு நற்காசு 1 இக்காசு ஒந்றும் ஆவண

8 களியே கைச்செலக்:கொண்டு விற்று விலையாவணஞ் செ

ஆறாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: திருவமுதுக்கு நிலவிற்பனை.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 பெருமாளுக்கு முன் ..... நக்கன் ...

2 க்கு திருவமிர்துக்கு ஆக உதகபூர்வமாகக் குடுத்

3 னங்கை வசக்கல் கிழக்கடைந்த காற்செய்க்கு கீழ்பார்க் கெல்லை

4 யணன் ஸ்ரீகிருஷ்ணந் நிலத்துக்கு மேக்கு தென் ப(ாற்)கெல்லை வாக்காலுக்கு

5 மீபாற்கெல்லை ஆத்ரேயன் அக்கி யிடன்கூடமுடை யான் நில

6 கு கிழக்கும் வடபாற்கெல்லை இந்நிலத்துக்கும் தசத்ரேய

7 அஷ்டமூர்த்தி சேந்தன் நிலத்துக்கும் தெற்கும் இவ்விசை

8 . பெருநான்கெல்லையுள் ளகப்பட்ட நிலம்

ஏழாம் கல்வெட்டு

இடம்: மேலது.

காலம்: பொ. கா. 10ஆம் நூற்றாண்டு.

1 . . . . எழுத்து இப்படியறிவேன் மருதூர் மாறன்

2 . . . எழுத்து இப்படியறிவேன் ஸ்ரீகண்ட சதுர்வேதிம

3 . . லன் வாஸுதேவனடிகளேன் இப்படி அறிவேன் பவத

4 ாடலன் நாகநீலகண்டனேன் இப்படி அறிவேன் கோனா

5 யம்பன் சதிரனேன் இப்படியறிவேன் இந்நாட்டு ப்ரஹ்ம

6 . . . பி ளயன் ஸ்ரீகண்டனேன் இப்படியறிவேன் இ

7 ரான பரமேச்வரனேன் இதந்மம் இபவதத்தமங்

8 யிடையாற்றுமங்கலத்து ஸபையாரும் ஸ்ரீவைஷ்ணவரும்

எட்டாம் கல்வெட்டு

இடம்: நடராஜர் மண்டபத்திற்கு அருகிலுள்ள அறைத் தூண். தொடக்க வரிகள் கட்டமைப்பில் சிக்கியுள்ளன.

செய்தி: வள்ளுவப்பாடி நாட்டான் நூற்றுக்கால் மண்டபத்துக்குத் தூண் அளித்த கொடையாளிகள்.

காலம்: பொ. கா. 13ஆம் நூற்றாண்டு.

1 (ந)ாட்டான் நூற்று

2 கத்துக்கு இந்ந

3 ன தூநந் வல்

4 - -

5 உடையாந்நு

6 மாபவன் வே

7 செய்தோம்

ஒன்பதாம் கல்வெட்டு

இடம்: மேலது. தொடக்க வரிகள் கட்டமைப்பில் சிக்கியுள்ளன.

செய்தி: வள்ளுவப்பாடி நாட்டான் நூற்றுக்கால் மண்ட பத்துக்குத் தூண் அளித்த கொடையாளி.

காலம்: பொ. கா. 13ஆம் நூற்றாண்டு.

1 டி சிற்றூர் 2 யார் காணி

3 உடையாந் 4 ட்டாநேன்

5 தேன்

மடைப்பள்ளிக் கல்வெட்டுகள்

முதல் கல்வெட்டு

இடம்: மடைப்பள்ளியின் வடசுவர்.

செய்தி: மூன்று துண்டுகளாக உள்ளது. நிலவிலை ஆவணமாகலாம்.

காலம்: பொ. கா. 13ஆம் நூற்றாண்டு.

1 யன் எழுத்து (கா)லிங்கார

2 த்து இப்படி . .

3 க்கு இவை மருதூர

4 டிக்கு கழனி . .

5 . . றியக் காணி உ

6 (அ)லை(யூ)ர் உடை

7 டயான் . . .

8 ாம குன்ற . .

9 - -

1 தித்தவரையும் குடுப்பதாக

2 வரைவையாற் குறுணியாக வ

3 வரைவையாற் குறுணியாக வந்(த) வா

4 யடுக . வி தாராக காசு கு

1 இப்படிக்கு இவை திட்டைக்குடி மடிலன் திரும

2 இவை அலையூர் வாதுலன் பள்ளிகொண்ட

3 இப்படிக்கு இவை திருநல்லூர் குலதீப ப்ர

4 நம்பி எழுத்து இப்படிக்கு இவை அபு

5 திருநல்லூர் உடை - - .

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மடைப்பள்ளியின் உட்புறச்சுவர்.

செய்தி: நான்கு துண்டுகளாக உள்ளது. அன்றாடு நற்காசு 18க்குக் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்டது. நிலம், மனை இவற்றுக்கு இறைக்காவலாக 27½ கழஞ்சே 2 மஞ்சாடிப் பொன் பெறப்பட்டது. இதனோடு தொடர்புடைய மற்றொரு துண்டு அம்மன் திருமுன் நந்தி பீடத்தில் உள்ளது.

காலம்: பொ. கா. 11ஆம் நூற்றாண்டு.

1 ட்ட நிலம் கழுகிட்ட ஆண்டு

2 றயிலியாகவும் பின்பு வீரநாராய

3 . . கொள்ளுபடியே கொண்டு த

4 . னூறாக இறுக்க கடவதாகச் சொன்

5 - - - -

1 னுக்குளத்துக்கும் தெற்குமாக நடுவுள்ள இத்.

2 . இறை நிலம் இறையிலி ஆக விற்றுக் குடுத்து இத்தேவ

3 டாரத்து கொண்ட விலைப்பொருள் அந்றாடு நற்காசு 18

4 நிலத்துக்கும் மனைக்கும் சந்திராதித்தவற் இறைகாவ லாக கொ

5 றன்றி பொந் இருபத்தேழுக் கழஞ்சரையே இரண்டு மஞ்சா

1 யாக நிச்சயித்துக் குடுத்
2 இறையிலியான நிலங்.
3 ருவிடையாட்டமான நில
4 ல்லுக் குடுக்கக் கடவோம
5 படிக்குக் கல்லிலும் செம்

1 - - - -
2 றுவுக்கு வேலியால் இருநூற்றுக் கல
3 மாகவும் கழுகு இட்ட தறைக்
4 இறையிலியாகவும் பின்பு வி
5 ..... படியே கொண்டு தலைநீர் ம

இடம்: அம்மன் திருமுன் - நந்தி பீடம்.

1 லத்திலும் மனையிலும் மெ
2 திருமுன்பே உதகம் பண்ணி கு
3 தன் உடையார் திருவேகம்பமுடை
4 பத்தெணாயிரப்பிரியன் எழுத்து

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

காலம்: பொ. கா. 12ஆம் நூற்றாண்டு.

1 திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீராஜாதிராஜ
2 பெற்ற பூர்வ பக்ஷத்து முப்பதாந் தியதி
3 பெற்ற திருவாதிரை நாள் ஐயங்
4 .. தூர் நாட்டுத் துளாருடையான்
5 .. மாத்தாண்டப் பல்லவரை

தனியறைக் கல்வெட்டுகள்

முதல் கல்வெட்டு

இடம்: தெற்கிலுள்ள தனி அறை.

காலம்: பொ. கா. 12ஆம் நூற்றாண்டு.

1 எழுத்து இப்படிக்கு இவை நாவமுடை
2 உடையான் பரம்பன் எழுத்து இப்படிக்கு
3 ணுடையான் வள்ளல் எழுத்து இப்படிக்கு இவை
4 ணறங்குடையான் உடையான் பிள்ளையான் எழு
5 - -
6 பட்டன் எழுத்து இப்படிக்கு இவை
7 எழுத்து இப்படிக்கு இவை வாதுலன் அ
8 து இப்படிக்கு இவை அரிசிகுடி ப
9 ழுத்து இப்படிக்கு இவை வாதுல
10 எழுத்து இப்படிக்கு இவை ஆதினு

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது, மற்றோர் அறை.

செய்தி: அரச ஆணை. கோயில் பூசைக்கும் திருப்பணிக்கும் நிலவருவாய் அளிக்கப்பட்டது.

காலம்: பொ. கா. 12ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவத்திகள்
2 பூசைக்குந் திருப்பணிக்கும்
3 இந்நாட்டு மும்முடிசோ
4 வற்கமும் உள்படத் தந்தோம் இவோலையே
5 யாண்டு 20 நாள் எண்பத்தாறினால் ப்ரஸாதஞ் செய்

தேர்மண்டபக் கல்வெட்டுகள்

இடம்: தேருக்கு அருகிலுள்ள பழைய மண்டபம்.

செய்தி: மூன்று துண்டுகளாக உள்ளது. இரு நாடுகளைச் சேர்ந்த ஊர்களில் உள்ளார் மேற்கொண்ட ஒப்பந்தம் பற்றிப் பேசுகிறது.

காலம்: பொ. கா. 13ஆம் நூற்றாண்டு.

1 .....வடகரை ராஜராஜ வள
2 நாட்டுக் கலாற் கூற்றத்துத் தி
3 .... துத் திருவாடுங்கொ
4 ..... ட நாயினார்கு இக்
5 கலார் கூற்றத்துச் செம்புறை
6 க் கண்டமான ஊர்களிலும்
7 பொய்கை நாட்டூர்களுங்
8 கையடைய இ(து)ஸ்ஜன செம்பி
9 . . டையான் கோமாகுடைய
10 ராண்டான் செம்பிறை நாட்டு

1 காடு . தவங் பெருஞ்செம்பிறை
2 மாகும் . நாள் தென்கோமாகுடி
3 னகுடி . . . கலசப்பாடி . . . . .
4 ல்லியக்குடி நிற புல்லியக்குடி .
5 லுக்குத் திட்டைவேலியும் . . . .
6 யார்பட்டுச் சிறுசெம்பிறை . . .
7 பூண்டியான சுந்தரதந்த வத்த சோ
8 - - லமான இராஜநாராயண

1 ங்கொள்ளக் கடவர்களாகவும் இப்படி சம்மதி
2 குடுத்தோம் செம்பிறையுடையானான கோமாகுடி
3 றை நாட்டு வேளானும் என் (பொண்) நச்சினாற் கன்யான்

4 ர்ரோம் இப்படிக்கு இவை செம்பிறையுடையான் கோமா

5 எழுத்து இப்படிக்கு இவை செம்பிறையுடையான் கோமா

6 ள்ளி கொண்டான் எழுத்து இப்படிக்கு இவை செம்பி

7 ன்னி எழுத்து இப்படிக்கு இவை செம்பிறையுடை யான் வன

8 டி அறிவேன் தத்தநல்லூருடையான் பிருதியங்கரைய

9 ல்லூருடையான் மலையப்பராயனேன் இப்படி அறிவே

10 ரையனேன் இப்படி அறிவேன் திருநயமங்கலமான பங்க

11 - - இப்படி அறிவேன்

12 - -

கடவுள் சான்ற கல்வி

பரணரின் அகப்பாடல் ஒன்றுக்கான உரையாசிரியரின் விளக்கம் கல்வியைக் கையால் தொழும் மரபினை உடைய கடவுள் தன்மை நிரம்பிய செய்வினையாகக் காட்டுகிறது. ஆனால், செய்யுளில் கல்வி என்ற சொல்லோ, கற்றலைக் குறிக்கும் ஓதல் என்ற சொல்லோ இடம்பெறவில்லை. எனினும் நச்சினார்க்கினியரை மேற்கோளாய்க் காட்டி உரையாசிரியர் ஓதல் வினையைக் கைதொழு மரபில் கடவுள் சான்ற செய்வினையாகக் கொள்கிறார். இது சரி எனில், சங்க கால மக்களிடையே கற்றல் எத்தகு உயரிடத் தில் வைத்துப் போற்றப்பட்டது என்பது தெள்ளிதின் விளங்கும். சங்கக் கலங்களில் எழுத்துப் பொறிப்புகள் இருப்பதும் இந்த விழுமிய மரபின் வெளிப்படல் என்றே கொள்ளலாம். (அகம் - 125)

2. பூரத்தூர் முக்தீசுவரம் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. தனினி

மணப்பாறை கோயிற்பட்டிச் சாலையில் பொன்முச்சந் திக்கு அருகிலுள்ள பூர்த்திக்கோயிலான பூரத்தூர் முக்தீசுவரத் திலிருந்து 1909இல் 12 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுத் தென் னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 26இல் பாடங்கள் பதிவாகி யுள்ளன. இக்கோயிலில் திருஆனைக்கா இயற்கை நலவாழ்வு மைய நிறுவனர் திரு. பெ. பாலசுப்பிரமணியன், திரு. பி. லோக நாதன் துணையுடன் ஆய்வு மேற்கொண்டபோது படியெடுக் கப்படாத சில கல்வெட்டுகளை அறியமுடிந்தது.

முதல் கல்வெட்டு

இடம்: பெருமண்டப வடக்குப் பட்டிகை.

காலம்: பொ. கா. 15ஆம் நூற்றாண்டு.

1 ஆபச்சகாயாண்

2 சதாசேவை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது, குமுதம்.

காலம்: பொ. கா. 15ஆம் நூற்றாண்டு.

1 திருமுத்தீசுவரமுடையான் ஸதாஸேர்வை

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது. கல்வெட்டின் இறுதியில் முத்தலை ஈட்டி செதுக்கப்பட்டுள்ளது.

காலம்: பொ. கா. 15ஆம் நூற்றாண்டு.

1 அடை(க்)கலங்கா(த்)

2 தான் சதாசேவை

நான்காம் கல்வெட்டு

இடம்: பெருமண்டப மேற்குச் சுவர்.

செய்தி: நான்கு நாடுகளுக்குள் நிகழ்ந்த ஒப்பந்தம் குறிக்கிறது.

காலம்: பொ. கா. 15ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ புரட்டாதி மீ 3 உ கடுவங்குடி நாட்டு

2 மறவநேரி நாடு மற்று - -

3 டி நம்முடைய . தி புருஷ - - ளிஞ்சு போய் இன்னாள் - -

4 னாள் வரையும் நடந்தபடியினாலே இப்படி கோத்த காரியம் . ம முடையார் திரு

5 .....ல வென்று இந்த நாலு நாட்டுக்கு உள் .....முறையும் ...

6 லே திருமுத்தீச்வரமுடைய நாயனார் சந்நிதியிலே இனி மேல் நம்முடைய

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: பெருமண்டப மேற்குத் தாங்குதளம். 3 துண்டுக் கல்வெட்டுகள்.

செய்தி: அப்பரடி நாட்டார் அமுது, விளக்கு ஆகியவற் றிற்காகக் கொடையளித்தனர்.

காலம்: பொ. கா. 14ஆம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமுத்தீசுரமுடைய நாயனார் கோயில் ....

2 இரண்டூரில் அப்பரடி நாட்டாரோம் இவக் .....

3 ஆழாக்கு ணெய்யும் அளந்து ஆண்ணடை .....

4 ணியும் அளக்க கடவோமாகவும் இப்படி சம்மதி .....

1 கள் தந்ம பண்ணி ... அப்பரடி நாயகப் பெருமாளுக்கு . 1 . வங்கு

2 க்கு உடலாக பண்ணுக்கு கலக கம்பம் அளந்து அய்யன் ..

3 பண்ணின அகத்துக்கும் ஒரு பணமும் குடுத்து அமுது செய்யப் பதக்கு

4 பண்ணிக் குடுத்தோம் அப்பரடி நாட்டவரோம் உ இன்னாட்டார் சொல்படி

ஆறாம் கல்வெட்டு

இடம்: அம்மன்கோயில் வடக்கு, மேற்குக் குமுதம்.

காலம்: பொ. கா. 1788 ஆகலாம்.

1 உ கீலக வருஷம் காற்த்திகை மாதம் 27 உ ஏகாதெசி ரே(வ)தி சோம வாரமும் கூடிந சுபதினத்தில் அந்தால னாயகி அம்மன் கோயில் மடப்ப(ர)தேஷத்தில்

2 மூற்த்தி வாகன மண்டபம் பண்ணி கும்பாஅபிஷேகம் பண்ணிவிச்சு துடகாச்சகம் பட்டம் பண்ணும் ஐயப் பிள்ளை குமாரன் தில்லைனாயகம் பிள்ளை அவர்கள் நித்தம் சதாசேர்வை ஆவத்சகாய குருக்க

3 ள் குமாரன்

4 முத்தைய்ய குருக்க

5 ள் கைஎழுத்து

ஏழாம் கல்வெட்டு

இடம்: பலித்தளத்தின் மேலுள்ள தாமரைத்தளம்.

காலம்: பொ. கா. 17ஆம் நூற்றாண்டு.

1 ஆனந்த வருடம்

2 வையாசி மீ 21 சொக்கனாத

3 பண்டாரத்தின் உ

4 பயம் உ

எட்டாம் கல்வெட்டு

இடம்: கோயிலுக்குப் பின்னுள்ள பெரியகுளத்தில் கண்டறியப்பட்ட சிதைந்த நிலையிலான தூண். தற்போது கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

செய்தி: செம்பியன் ஒல்லையூர் நாட்டு வேளான், பராந்தகன் இரவியான இராசவிச்சாதிரப் பல்லவரையன்

ஆகிய இருவரிடையும் பத்துக் கழஞ்சுப் பொன் பெற்ற கோயில் ஸ்ரீகாரியம் குளிர்வாகை, கோயில் அலுவலர் பல்லவரையர், தளிவண்ணக்கன் பூதிபட்டன் ஆகியோர் தொண்ணூறு ஆடு கொண்டு நெய் அட்டி விளக்கேற்றும் பொறுப்பைத் திலப்பன் வீரன், உலப்பன் பூதி, நகரத்தார்கள் ஐஞ்ஞூற்றுவர், குஞ்சிர மல்லன், நக்கன், பிடாரர்கள் வன்னி, நக்கன், கண்டன் ஆகியோரிடம் ஒப்புவித்ததாகக் கொள்ளலாம்

காலம்: உத்தமசோழர், பொ. கா. 981.

முதற்பகுதி

1 தன் செம்பியன் ஓ
2 ல்லையூர் நாட்டு வே
3 ளானிடையும் பராந்
4 தகன் ரவியான இரா
5 சவிச்சாதி
6 ரப்பல்
7 லவரையனிடையும் உத்தமசோழற்கு யா
8 ண்டு 12 ஆவது இ ..... யறக் கொண்
9 டு யாண்டு 12ஆவது (ஸ்ரீகாரிய)ம் செய்கின்ற
10 குளிர்வாகைக்கும் .... யன் பல்லவ
11 ரயனும் இத்தளி ... தழுடை வண்ண
12 கன் பூதிபட்ட .... இவகளிடை நின்று
13 இப்பொன் ..... பதின் கழஞ்சு முற்கற் செம்
14 மை அற .... சுக் கொண்டோம் இத்
15 தளிபட்டன் ..... திலப்பன் வீரனும் உல
16 ப்பன் பூதியும் நகரத்தானைஞ்ஞூற்றுவ
17 னும் நகரத்தான் குஞ்சிரமல்லனும் நகரத்தா
18 னக்கனும் பிடாரன் வன்னியும் பிடாரநக்கனும்
19 பிடாரன் கண்ட

இரண்டாம் பகுதி

1 ன் 10 கழஞ்சு இப்(பொன்)

2 பதின் கழஞ் . . .

3 ம் ஆட்டை வட்ட ப

4 லிசை நெயட்ட(தொ)

5 ண்ணூ(று)

கால் ஏந்தச் சென்ற கை

'ஊர் மன்றத்தில் அமைதி நிலவுகிறது. மனைகளோ மக்கள் உறங்கத் தொடங்கியதால் ஒலியும் ஒளியுமற்று இருண்டுள்ளன. தனிமையின் கொடுமையால் இந்த நள்ளிரவில் கடல் போல் காமம் வருத்த நான் துயருற்றுள்ளேன். ஆனால், தோழி என்னிடமோ, உன்னிடமோ எதுவும் கேளாது என் நெஞ்சம் எங்கே எதற்குச் சென்றிருக்கிறது தெரியுமா? கேட்டால் வியப்படைவாய்!

சற்றுத் தொலைவிலுள்ள காடு மண்டிக் கிடக்கும் மலைப் பகுதியில் அழகிய சுனை ஒன்றுள்ளது. வண்டுகள் மொய்க்கும் குவளைகள் அங்கு மலரும். அவற்றைப் பறித்துச் சூடி என்னைத் தேடிவரும் என் தலைவன் வரும் வழி, கட்டப்படும் கயிற்றால் யானையின் முதுகில் நேரும் தழும்பைப் போல மிகக் குறுகலானது. பொழியும் மழையால் ஏற்படும் நீரோட்டம் அந்த வழியில் ஆங்காங்கே மண்ணைக் கரைத்து குழிகளை உண்டாக்கியுள்ளது. மேடும் பள்ளமுமான அந்தச் சிறிய வழியில் கொடுமையான இந்த நள்ளிரவில் நடந்து வரும் என் தலைவரின் திருவடிகள் வழித் துன்பத்தில் தளர்ந்து விடாதபடி தாங்கிக் கொள்வதற்காகவே போயிருக்கிறதடி என் நெஞ்சம்!' (அகம் - 128)

3. உய்யக்கொண்டான் திருமலைக் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி

சிராப்பள்ளி நகருக்கருகில் வயலூர்ச் சாலையில் 3 கி. மீ தொலைவிலுள்ளது உய்யக்கொண்டான் திருமலை. 1992-97இல் இக்கோயில் வளாகத்தில் மேற்கொண்ட களஆய்வுகளின்போது கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டுகளுள் 21 ஏற்கனவே வரலாறு இதழின் 1, 2, 7, 25ஆம் தொகுதிகளில் பதிவாகியுள்ளன. எஞ்சியன இவ்விதழில் இடம்பெறுகின்றன. ஆய்வுக்குத் துணைநின்ற கோயில் நிருவாகத்தினருக்கும் திரு. பி. லோகநாதனுக்கும் நன்றி.

முதல் கல்வெட்டு

இடம்: *வசந்த மண்டப மேற்குச் சுவர்.*

செய்தி: *கல்வெட்டு வரிகளின் பிற்பகுதி கட்டமைப்பில் சிக்கியுள்ளது. அனுத்திரப் பல்லவரையர் வைகாசி விசாகத் திருநாள் வழக்கங்களுக்காக நிலக்கொடை.*

காலம்: *முதற் குலோத்துங்கர், பொ. கா. 1091.*

1-4 புகழ்மாது எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

5 டு 21 ராஜேந்திர சோழ வளநாட்

6 னுத்திரப் பல்லவரையந் கேரள

7 திருவைகாசி விசாகத் திருநாளில்

8 ழக்கங்களுக்கு இத்தேவர்

9 பொற்றாழி வாய்க்காலுக்குக் கிழக்

10 ங்கால் நீக்கி இதநோடுமடை

11 ஒரு மா ஊர்க்காலால் உள் நி

12 க்கடவோமானோம் இத்தேவர்கன்

13 னும் இவ்வனைவோம் இக்கோ

14 ச்வர ரக்ஷை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: *சிற்ப மண்டப வடக்குச் சுவர்.*

செய்தி: கோயில் மண்டபத் திருப்பணி பற்றிய பாடல் கல்வெட்டு.

காலம்: மல்லிகார்ச்சுனர், பொ. கா. 1449-50.

1 ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா மண்டலேச்வரற் கெஜவே

2 ட்டை கண்டருளிய ஸ்ரீ வீரப்ரதாப தேவராயர் மஹா ராயர்

3 குமாரர் ஸ்ரீவீரமல்லிகாஅச்சுன மஹாராயர் ப்ருத்

4 விராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் 1371

5 ன் மேல் செல்லா நின்ற ஈச்வர ஸம்வற்ஸரத்து மீன

6 நாயற்று அபரபக்ஷத்து த்ரிதிகையும் ப்ரஹஸ்பதி வார

7 மும் பெற்ற அத்தம நாள் பேணும் புலிசை பிரயாத நாயன்

8 அன்பால் காணும் தவம் பலித்தல் கண்டீரே நீண்நதி அன்றிறங்

9 கல் மீட்டான் அவன் கோயில் மண்டபந்தான் இன்றிறங்

10 கல் மீட்டான் இவன் உ

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: திருப்பணிக்காகக் கரும்பிடு நிலமாக இருவேலி நிலம் அளித்தது இராஜாச்ரய சதுர்வேதிமங்கல சபை.

காலம்: மூன்றாம் குலோத்துங்கர், பொ. கா. 1190.

1-12 புயல் வாய்த்து வளம் பெருக எனும் மெய்க்கீர்த்தி

13 குலோத்துங்க சோழ தேவற்க்கு யாண்டு 12ஆவது இஷப நாயற்று அபரபக்ஷத்து த்ரதியையும் புதந்கிழமையும் பெற்ற பூராடத்து நாள் தெந்கரை இராசகெ

14 ம்பீர வளநாட்டு உறையூர் கூற்றத்து ராசாச்ரய சருப்பேதிமங்கலத்து பெருங்குறி மஹா

15 ஸபையோம் திருக்கற்குடி விழுமிய நாயநார் கோஇ
லில் ஆதிசண்டேச்வர பி(ள்)ளையார் சிபாதத்து இ

16 ந்நாயநார் கோஇல் திருப்பணிக்கு கரும்பிடு தறையாக
நாங்கள் நீர்வார்த்து குடுத்த நிலமாவது உய்ய

17 கொண்டாநான ஸ்ரீமதுராந்தகன் தென்னாற்று பெரிய
குளத்துள் வாய் உய்யக்கொண்டான் கல் வாய்க்கு
வடக்கு

18 தெற்கும் சங்கரநாராயணன் வாய்க்கால் குமிழிக்கு
கிழக்கும் குளத்திலே திருப்பணிக்கு ஸேஷமாக கரும்பி

19 லாமந்து தறையிலே இருவேலி தறை இந்நாயநாற்க்கு
சோம்மாகக் கைக்கொண்டு கரும்பு உள்ளிட்ட

20 பயிர் செது . . செய்கிற இருவேலி நிலத்துக்கும்
திருச்சூலக் கல்லு னாட்டி இந்நிலத்துக்கு கல்லிலும்

21 செம்பிலும் வெட்டிக் கொள்ளக் கடவதாகவும் இப்படி
ஸமதித்து ஆதிசண்டேச்வர பிளையாந்

22 (கையில்) தேவதானமாக நீர்வாத்துக் குடுத்தோம்
பெருங்குறி மஹாஸபையோம் பணி

23 யால் எழுதிநேன் இவ்வூர் மத்தியத்தன் செலூருடை
யான் தேவர்கள்தேவ நாலா

24 இரப் பி(ள்)ளை எழுத்து உ இப்படிக்கு இன்னிலம்
இருவேலிக்கும் இவை காச்யபன் திரு

25 ச்சிற்றம்பலநம்பி எழுத்து உ இப்படிக்கு இ நிலம்
இருவேலிக்கு கராம்பி செல்வ நம்பி

26 எழுத்து உ இப்படிக்கு இந்நிலம் இருவேலிக்கும்
திருக்கடலூர் திருவெண்ணாவல் உடையாந்
திருச்சிற்றம்ப

27 லமுடையான் எழுத்து உ இப்படிக்கு இந்நிலம்
இருவேலிக்கும் இவை புங்கனூ . . . . . டந்

28 எழுத்து இப்படிக்கு இவை . . ச்வ . . . . . விழுமிய தேவந்
ஆதிநாயக நம்பி எழு

29 த்து

நான்காம் கல்வெட்டு

இடம்: மேலது

செய்தி: கல்வெட்டு வரிகளின் தொடக்க எழுத்துக்கள் சிதைந்தும் இறுதிப்பகுதி கட்டமைப்பில் சிக்கியும் உள்ளன.

காலம்: மூன்றாம் குலோத்துங்கர், பொ. கா. 1199.

1-9 ஸ்வஸ்திஸ்ரீ புயல் வாய்த்து மண் வளர் எனும் மெய்க்கீர்த்தி

10 - - மீழமும் பாண்டியந் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவ

11 ற்கு யாண்டு 21ஆவது கற்கடக னாஇற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் நாயற்றுக்கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் தென்கரை இராஜகெ(ம்பீர)

12 (வளநா)ட்டு உறையூர்க் கூற்றத்து ப்ரமதேயம் ஸ்ரீஜகதேக வீரச் சருப்பேதிமங்கலத்து பெருங்குறி மஹாஸபை யோம் நடு . .

13 . . . நாட்டு திருமுனைப்பாடி நாட்டு மங்கலகீழ்பாபத்தா பத்திக் குளைவார் மாதாண்டார்க்கு நாங்கள் நில விலைப் பிரமாண இசைவு . . .

14 . . த்து நமூர் மேல் பிடாகையான மதுராந்த பேரிளமை நாட்டு ஆதித்ததேவநல்லூர் கட்டளையில் அருமொழி தேவ வாய்க்காலுக்கு . . .

15 . . . . க்கு கிழக்கு மூன்றாங் கண்ணாற்றிலும் நாலாங் கண்ணாற்றிலும் அஞ்சாங் கண்ணாற்றிலும் . . நிலத் துக்கு வடக்கு கொடுங்காலி பித்திழவா . . .

16 - - வரையும் இவநுக்கு விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அந்நாடு நற்கா . . .

17 200 (இக்காசு) இருநூறும் ஆவணக்களியே காட்டேற்றிக் கைச்செலவேறக் கொண்டு விற்று விலையாவணம் செது குடுத்தோம் இந்நிலத்துக்கு இதுவே வி . . .

18 - - ப்பொருள் செலவோலையாவதாகவும் இதுவல்லது வேறு பொருமாஅறுதி பொருட்செலவோலை இப்படி

19 - - நாலாஇரப் பிள்ளையான நாலாயிரப் பிரியன் எழுத்து இப்படி சம்மதித்து இநிலம் விலை கொண்டு குடு . . .

20 - - சதுர்வேதிமங்கலத்து பெருங்குறி மஹாஸபையோம் இத்திருவோடை கல்லிலு . . .

21 - - மங்கல --

22 - - முடையான் திருமழபாடி - -

23 - - வெண்ணாவல் உடையான் --

24 ணி பட்டன் எழுத்து உ இப்படிக்கு இவை - -

25 - - இப்படிக்கு இவை காஸ்யபன் - - எழுத்து

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: இரண்டாம் கோபுரக் கிழக்குச் சுவர்.

செய்தி: வைகாசி விசாக விழாவில் தீர்த்தம் எழுந்தருள நிலக்கொடை.

காலம்: இரண்டாம் குலோத்துங்கர், பொ. கா. 1178-1217.

1-13 பூமன்னு பதுமம் எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

14 வது - -

15 - - உடையார் திருக்கற்குடி - -

16 - - ங்கர நாராயண - -

17 வைகாசி விசாகம் திருநாளில் . . . . . தீர்த்த எழுந்தருளு நாளை - -

18 - - தயார் திருக்கற்குடி விழுமிய தேவர் - -

19 - - பெருங்குறி மஹாசபையோம் - -

20 - - னக்கந் பக்கலும் நாங்கள் கொண்ட - -

21 - - த்துப் பெருங்குறி மஹாசபையோம் இப்பரிசு சபையுள்ளிருந்து பணிக்க

22 - - பணியாலும் - - சோலைபிராந் பட்டர் பணியாலும் காற்றி - -

23 - -

24 - - சக்கரபாணி பட்டநேன் இவை என் எழுத்து இப்படி அறிவேன் பாரதாயன் திருநீலகண்டந் திருவெண்ணா வல் உடையானேன் இவை என்நெழுத்து - - ணைய பட்ட - -

ஆறாம் கல்வெட்டு

இடம்: மூன்றாம் சுற்றிலுள்ள பாறை.

செய்தி: கல்வெட்டுப் பெரிதும் சிதைந்துள்ளது. படிக்க முடிந்த பகுதி இருபிரிவுகளாகத் தரப்பட்டுள்ளது. சர்வசிவ பண்டிதர் பெயரும் திருவுலகளந்தபடி எனும் தொடரும் குறிக்கத்தக்கவை.

காலம்: முதல் இராஜேந்திரர், பொ. கா. 1012-1044.

முதல் பகுதி

1 ந கரைக்கு வடக்கு

2 டுவுபட்ட நிலம் அரையே

3 திரிகைக் கீழ் அரையே நான்கு

4 ம் ஒன்றே காலே அரைக்காணி முந்திரி

5 ம் நெல்லு உள்ளிட்ட போகங்கள்

6 மரக்காலால் இத்தன்மங்கள் இவ்வு

7 தருளி நிவந்தம் செய்தருளிநபடிக்கு

8 நாள் ப்ரவாதித்து வந்த திருமுக

இரண்டாம் பகுதி

1 க்கு கிழக்கு முதல் துண்டத்து நிலம் எழுமாவரைக் காணியும் இரண்

2 ஆக நிலம்அரையே முக்காணி அரைக்காணியிநால் திருவுலகள

3 க்கீழ் அரையும் ஆக திருவுலகளந்தருளிநபடி நில பதினே

4 ச்ரயச் சருப்பேதிமங்கலத்து மஹாஸபையார் பக்கல் விலை

5 யும் குடிமையும் இறுப்பார்களாகக் . . . . . .

6 வர் சறுதிக்கு தெற்கும் உய்யக்கொ

7 தேவர் நிலத்துக்கு மேற்கும் ந

8 லம் ஒன்றே காலே அரைக்காணி மு

9 ணியிநால் திருவுலகளந்தபடி

10 நிலங்களில் ஆட்டாண்டு தோறும் விலை

11 பண்டிதந் என்னும் திருநாமம் உடை

12 டயார் ஸ்ரீ ஸர்வஸிவபண்டிதர் திருவாய்மொ

13 முநும் ராஜேந்த்ரசிங்க வளநாட்டு பொ

14 மாத்திரன் கெளி அம்பலத்தாடி எழுத்தி

15 டிதன் என்னும் திருநாமம் உடைய

16 ளிந . கங்களிலே - -

17 - - சாத்திரர் பதினைய் - -

18 த்திரர் ப்ராஹ்மணச் ச

19 ன்மரும் ஆகச் சாத்திரர் இருபதின்மர்

20 நிசதம் நெல்லு கலநே இருதூணிப்

---

2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

1. உய்யக்கொண்டான் திருமலைக் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி

உய்யக்கொண்டான் திருமலைக் கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் 1955-56, 1963-1964ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கைகளில் பதிவாகியுள்ள ஆறு கல்வெட்டுகளில் ஐந்திற்கான பாடங்கள் இங்குத் தரப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டைக் கண்டறியக்கூடவில்லை. (1955-56: 328) ஆய்வுக்குத் துணைநின்ற கோயில் நிருவாகத்தினருக்கும் உதவியாளர் திரு. பி. லோகநாதனுக்கும் நன்றி.

1. கல்வெட்டு எண் 325: 1955 - 56

இடம்: நடராஜர் மண்டபக் கிழக்குச் சுவர்.

செய்தி: திருச்சுற்று மண்டபம் இராஜேந்திரசோழரின் தோள்வலிமை பெருகத் தாயன் திருப்பராயன் ஆடவிடங்கப் பிடாரனால் எடுக்கப்பட்டது.

காலம்: முதல் இராஜேந்திரர், பொ. கா. 1021.

1-12 திருமன்னி வளர எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

13 ன ராஜேந்த்ரசோழ தேவர்க்கு யாண்டு 10ஆவது இந்த திருச்சுற்று மண்டபம் மேல் சதுரத்து ஐ

14 ஞ்சு புருஷப்பிரமாணமும் தென்சதுரத்து இரண்டு புருஷப்பிரமாணமும் கீழ் சதுரத்து மூன்று

15 புருஷப்பிரமாணமும் வடச்சதுரம் நடுவு நின்ற கல்லுக்கு கிழக்கு மூன்று புருஷப்பிரமாணமும்

16 இக்கல்லுக்கு மேற்கு நாலு புருஷம் பிரமாணமும் அகவாய் நாலு சதுரத்துக் காலு

17 நாட்டளவு மலையாகச் செய்து இத்திருச்சுற்று மண்டபம் எடுப்பித்தார் உடையார் ஸ்ரீ

18 ராஜேந்த்ரசோழ தேவர் இத்தேவர்க்கா(ய்) உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு ப்ரஹ்மதேயம்

19 கேரளாந்தகச் சருப்பேதிமங்கலத்து இராமந் அரு மொழி தேவனான உத்தமசோழ ப்ரஹ்மமாராயரை கொ

20 ண்டு வெண்ணப்பம் செய்வித்து இமண்டபம் இத்தேவர் ஸ்ரீபுஜங்கள் வ்யத்ப்பிக்க எடுப்பித்தார்

21 தாயன் திருப்பராயன் ஆடவிடங்கப் பிடாரன்

2. கல்வெட்டு எண் 326: 1955 - 56

இடம்: மேலது.

செய்தி: கோயிலில் நந்தாவிளக்கேற்ற சலவன் பெற்றமை 90 ஆடுகள் கொடை.

காலம்: முதல் இராஜேந்திரர், பொ. கா. 1028.

1-21 திருமன்னி வளர எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

22 - - உடையார் ஸ்ரீராஜேந்திரசோழ தேவற்கு யாண்டு 16 ஆவது கேரளாந்தக வள்நாட் டுறையூர்

23 கூற்றத்துத் திருக்கற்குடி விழுமிய தேவற்கு இந்நாட்டு கோநாட் டுறத்தூர் கூற்றத்து தேராவூரிருக்கும் வெள்ளாட்டி சலவந் பெற்

24 றமை உடையார் கோயிலில் ஒரு திருநொந்தாவிளக்கு இரவும் பகலும் எரிய நித்தம் சூல உழக்கா லுழக்கு நெய்யட்ட சந்திரா

25 தி(த்)தவ லெரிப்பதாக வைத்த சாவாமூவா பேராடு தொண்ணூறு இது பந்மாஹேச்வர ரக்ஷை

3. கல்வெட்டு எண் 327: 1955 - 56

இடம்: மேலது.

செய்தி: மகன் ஆச்சன் கற்பகத்துக்காகக் கோயிலில் அரை நந்தாவிளக்குப் பகலில் ஏற்றத் தாய் மழபாடி 45 ஆடுகள் கொடை.

காலம்: முதல் இராஜேந்திரர், பொ. கா. 1022.

1 இத்தேவற்கே யாண்டு 20 ஆவது கேரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து சிற்ற(ம்பரான) உத்தமசோழபுரத்து

2 வியாபாரி ஆச்சந் கற்பகத்துக்காக இவன் தாய் பேரயந் மழவாடி விழுமிய தேவர் கோயி - - சூலத்தால் ஆ

3 ழாக்கு நெய்யட்டி அரை நொந்தாவிளக்கு பகல் மா சந்திராதித்தவல் - - வைத்த சாவாமூ

4 வாப்பேராடு நூற்பத்தைஞ்சு இது பந்மாஹேச்வர ரக்ஷை

4. கல்வெட்டு எண் 299: 1963 - 64

இடம்: நடராசர் மண்டபக் கிழக்குச் சுவர்.

செய்தி: ஆதித்தன் சூற்றி மூன்று சந்திகளிலும் விளக்கு ஏற்ற 23 ஆடுகள் கொடை.

காலம்: முதல் இராஜேந்திரர், பொ. கா. 1037.

1 ஸ்வஸ்திஸ்ரீ பூர்வதேசமும்ங் . கங்கையுங் கடாரமுங் கொண்ட கோப்பரகேசரிபந்மரான உடையார் ஸ்ரீராஜே

2 ந்தர சோழ தேவர்க்கு யாண்டு 26ஆவது உடையார் ஸ்ரீதிருச்சிற்றம்பல தேவர் தந்து படைகளுக்குப் பணி

3 - - - - பொத்தகமுடைய கிளிநல்லூர் கிழவன் ஆதித்தந் சூற்றி திருக்கற்குடி விழுமிய தேவர்க்கு மூந்று சந்தியும் திரு

4 விளக்கெரிய சந்தி ஒந்றிநுக்கு விளக்கொந்றாக விளக்கு மூந்றுக்கு சூலத்தால் நிசதம் நெய் இரு செவிடரை

5 அட்டக் குடுத்த சாவாமூவாப் பேராடு இருபத்து மூந்றும் சந்திராதித்தவற் செல்ல பன்மாகேச்வரர் ரக்ஷை

5. கல்வெட்டு எண் 300: 1963 - 64

இடம்: மேலது.

செய்தி: சாந்திக்கூத்தி கொங்கவாள் நங்கை 90 ஆடுகள் அளித்து நந்தாவிளக்கேற்றினார்.

காலம்: முதல் இராஜேந்திரர், பொ. கா. 1039.

1-20 திருமன்னி வளர எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி

21 - - - - கோப்பரகேசரிபந்மரான உடையார் இராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு 27ஆவது

22 - - - - ராஜாச்ரய வளநாட்டு பாச்சில் கூற்றத்து கீழ்பலாற்று துறையூர்ரிருக்கும் சாந்திக்கூத்தி அம்பல வன் பசுபதி

23 - - - - (கொ)ங்கவாள் நங்கை கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து திருக்கற்குடி விழுமிய தேவர்

24 - - - - ய் உழக்கு நெயட்டி இரவும் பகலும் சந்திராத்தவர் எரிய வைத்த திருநொ(ந்தாவிளக்கு)

25 - - - - சாவாமூவாப் பேராடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறு வைத்தமைக்கு இது பன்மாஹேச்வர (ரக்ஷை)

பொற்பாவை கவர்ந்தவர்

சங்க காலத்தில் மண்ணால் செய்த பாவைகள் போலவே பொன்னால் செய்த பாவைகளும் இருந்தன. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பேரியாற்றங்கரையிலிருந்த சேரர்களின் வளங்கெழு முசிறியில் பொற்பாவை இருந்ததென்கிறார். யானைப் போரில் வல்லவரான பாண்டிய அரசர் செழியன் முசிறியின் மீது போர்தொடுத்து சேரர்களை வென்று கைப் பற்றிய செல்வத்தில் பொற்பாவையும் அடக்கமாம்.

இந்தச் செழியனின் கூடல் மாநகரம் கொடிகள் அசை யும் தெருக்களைப் பெற்றது. அதன் மேற்கில்தான் இடைய றாத விழாக்களைக் கொள்பவரான முருகனின் பரங்குன்றம் உள்ளது. அம்முருகன் பல பொறிகளையும் வெற்றியையே நல்கும் மயிற்கொடியையும் கொண்டவர். பரங்குன்றத்துச் சுனை ஆழமும் வளமும் மிக்கது. அங்கே பூத்திருக்கும் நீலப் பூக்கள் கண்களைக் கனிய வைப்பன. தலைவியின் குளிர்ந்த கண்கள் புதிதாகப் பூத்த அந்த நீலப்பூக்களில் இரண்டு போல் வன. கண்களுக்கு உவமை தேடிய வழியில் வரலாற்றுக்கு எத்தனை வரவு. (அகம் - 149)

3. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. தவத்துறைக் கல்வெட்டு

அர. அகிலா, மு. தனினி

இடம்: இலால்குடி சப்தரிஷீசுவரர் கோயில் முதல் நுழை வாயிலின் தென்புறமுள்ள தனிப் பலகைக் கல்.

செய்தி: இக்கல்வெட்டு வரலாறு தொகுதி 12,13இல் பக்கம் 20-21இல் பதிவாகியுள்ளது. முதல் படிப்பின்போது கல்வெட் டின் மேற்பகுதி கசடு படிந்து இருந்தமையால் அப்பகுதியில் இருந்த புடைப்புச் சிற்பங்களும் கல்வெட்டு வரிகளும் அந்தத் தொகுதியில் இடம்பெறவில்லை. மீளாய்வின்போது அவை வெளிப்பட்டமையால் (வரிகள் 1-4) இங்குத் தரப்பட்டுள்ளன.

கல்வெட்டின் மேற்பகுதியில் முத்தலைஈட்டியும் இலிங்க மும் அதை நோக்கிய நந்தியும், புடைப்புச் சிற்பங்களாக அமைய, அவற்றுக்கிடையில் கல்வெட்டின் தொடக்க வரிகள் நான்கு செதுக்கப்பட்டுள்ளன. சிறுதையூர்ப் பணங்குடி அண்ணா தீட்சி தர் பொதுமக்களைக் கேட்டுச் சொக்கநாத முதலியார் மகன் சிதம்பர முதலியார் வழி சப்தரிஷீசுவரர் கோயிலுக்குச் சிறுதை யூரில் நிலம் வாங்கினார். பலமரத் தோப்பாக மாற்றப்பட்ட இந்நிலவிளைவில் இரண்டு பங்கு தவத்துறை இறைவனுக்கும் ஒரு பங்கு சிறுதையூர் மணக்கால் கைலாசநாதருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது.

காலம்: பொ. கா. 1758.

1 உ சுபமஸ்து 2 சாலிவாகன

3 சகாப்த(ம்) 16 4 80

5 வெகுதான்ய வருஷம் ஆவணி

6 மாதம் 14 சப்தருஷீயீசுற

7 சுவாமி கோயில் தற்ம

8 த்துக்கு மணக்கால் சிறு

9 தையூர் பணங்குடி

10 அண்ணா தீட்சதர

11 வுகேழ் மகாசணங்க

12 ளைகேட்டு சொக்கனாத

13 முதலியார் குமாரன் சி

14 தம்பர முதலியார் சத்த

15 ரிஷீசுவர சுவாமி கோ

16 விலுக்கு தான சாதன

17 மாக வாங்கினது சி

18 றுதையூர் நிலத்தில் பெரு

19 ந்திருவாட்டி தோட்டம் ரெ

20 ட்டியார் மண்டபம் கீழ்

21 வேலிக்கு கிழக்கு கிறயமா

22 ண மேல் வேலிக்கு மே

23 க்கு பா(ை)தக்கு வடக்கு காவல்

24 செய்க்கு தெக்கு குசவன்

25 குழி உள்பட இதுக்கு

26 உண்டான நிலம் மே

27 காவிலு தோப்பு பல

28 விருசம் போகுவிச்சு

29 யிதிலே வருகிற பல

30 ன் சத்துரிழீஸ்வர சுவா

31 மிக்கு இரண்டு பங்கும்

32 சிறுதையூர் மணக்க

33 ால் கயிலாசநாத சு

34 வாமிக்கு ஒரு பங்கும்

2. எறும்பியூர்க் கோயில் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி

சிராப்பள்ளி மாவட்டம் எறும்பியூர்க் கோயிலில் 1914இல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுள் சில முழுமையாகப் படியெடுக்கப்படாத நிலையில் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 34இல் பதிப்பிக்கப்பட்டுள்ளன. களஆய்வில் இந்தக் கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகள் கண்டறியப் பட்டன அவற்றுள் மூன்று இவ்விதழில் பதிவாகின்றன.

முதற் கல்வெட்டு

எறும்பீசுவரர் கோயில் முகமண்டப வடக்கு உபானத்தில் காணப்படும் இக்கல்வெட்டு மூன்று வரிகள் கொண்டுள்ளது. ஆனால், தொகுதி 34இல் முதல் வரியை மட்டும் தந்து அரசரின் பெயர் மட்டுமே கொண்டுள்ள துண்டுக் கல்வெட்டாக இதைப் பதிவுசெய்திருப்பதுடன், ஆட்சியாண்டையும் 27 என்பதற்குப் பதிலாக 37 என்று தந்துள்ளனர்.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 34இல் 106ஆம் எண்ணின் கீழ்ப் பதிவாகியுள்ள பாடம்

1 ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரிபந்மரான சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 37ஆவது

பதிப்பில் விட்டுப்போன தொடர்ச்சி

2 தெந்கரை ப்ரஹ்மதேயம் ஸ்ரீகண்டசதுர்வேதி மங்க லத்து திருவெறும்பியூர் மலைமேல் தேவர்க்கு பகற் சந்தியுழ் சந்தி விளக்கொன்றாக இவ்வூர்க் காவலுடைய கள்ளந்

3 திருமலகம் நாடாழ்வாநாந ராஜேந்திர முத்தரையநேன்

இரண்டாம் கல்வெட்டு

விமானத்தின் தெற்குக் கண்டபாதம், குமுதம் இரண்டிலு மாய் இடம்பெற்றிருக்கும் மூன்று வரிகள் கொண்ட இந்தக் கல்வெட்டின் இடைப்பகுதி ஆலமர்அண்ணலுக்காக எடுக்கப் பட்டுள்ள தாங்கலில் மறைந்துள்ளது. இதன் தொடக்கமும் இறுதிப்பகுதியும் அத்தாங்கலுக்கு மேற்கிலும் கிழக்கிலுமாக

வெளிப்படத் தெரியுமாறு இருந்தபோதும் கிழக்குப்பகுதி மட்டுமே கல்வெட்டுத் தொகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதன் விளைவாகத் தாங்கலுக்கு முன்பாகவே முடிந்துவிடும் மூன்றாம் வரி விடுபட்டுள்ளதுடன், முதலிரண்டு வரிகளின் தொடக்கங்களும் தொகுதியில் இடம்பெறவில்லை.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 34இல் 124ஆம் எண்ணின் கீழ்ப் பதிவாகியுள்ள பாடம்

1 .....வர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திரநாரமும் தெண்டிரை ஈழமண்டல முழுதும் எறிபடைக் கேரளர் முறைமையில் சூடும் குலதநமாகிய

2 ..... கவிர நாட்டு திருவெறும்பியூர் ஆழ்வார்க்குத் திருநொந்தாவிளக்குக்கு இத்திருவெறும்பியூருடையாந் மாறந்காரி வைத்த வாடு 90ம் மாறந்காரியே சண்டேச்வர பெருமாளுக்கு ஸந்தி விளக்குக்கு

விட்டுப்போன தொடர்ச்சிகளுடன் முழுப்பாடம்

1 ஸ்வஸ்திஸ்ரீ திரும(ன்)னிவளர இருநிலமடந்தையும் போர் செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும் தந் பெரும்தேவியராகி இந்புற நெடுதுயற் ஊழியுள் இட துறை நாடும் துடர்வநவேலிப் - - - - ஆங்கவர் தேவி ஓங்கெழில் முடியும் முந்நவர் பக்கல் தென்னவந் வைத்த சுந்தரமுடியும் இந்திரநாரமும் தெண்டிரை ஈழமண்டல முழுவிலும் எறிபடைக் கேரளந் முறைமையில் சூடும் குலதநமாகிய

2 பலர் புகழ் முடியும் செங்கதிர்மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழந்தீவும் செருவிற் சினவில் இருபத்தொருகால் அரைசுகளைக் கட்ட பரசு ராமந் மேல்வருஞ் சாந்திமற்றீவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு - - - - வடகவிர நாட்டு திருவெறும்பியூர் ஆழ்வார்க்குத் திருநொந்தாவிளக் குக்கு இத்திருவெறும்பியூருடையாந் மாறந்காரி வைத்த வாடு 90 இம் மாறந்காரியே தண்டேச்வர பெருமாளுக்கு ஸந்தி விளக்குக்கு

3 வைத்த வாடு 34ம் ஆக வாடு நூற்று 24 ஆடும் கைக்
கொண்டோம் இவ்வாழ்வார் ஸ்ரீகோயிலுடையோம்

(ஆலமர்அண்ணலுக்காக எடுக்கப்பட்டுள்ள தாங்கலில் மறைந்துள்ள கல்வெட்டின் இடைப்பகுதி இப்பாடத்தில் நான்கு சிறு கோடுகளால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.)

மூன்றாம் கல்வெட்டு

எறும்பீசுவரர் கோயில் விமானத்தின் மேற்குக் கண்ட பாதத்தில் 1-2ஆம் வரிகளும் முகமண்டபத்தின் தெற்கு வேதிகையில் 3-5ஆம் வரிகளும் விமானத்தின் மேற்குக் குமுதத்தில் 6-11 ஆம் வரிகளுமாக வெட்டப்பட்டுள்ள முதலாம் இராஜேந்திரரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தொகுதி 34இல் எண் 120இன் கீழ் எட்டு வரிகள் கொண்ட பாடத்துடன் பதிவாகியுள்ளது. இப்பாடத்தில் முதல் வரி முழுமையும் சரியாக அமைந்துள்ளது. இரண்டாம் வரியில் நான்கு இடங்களில் சொற்கள் மாறுபட்டுள்ளன. 3-5ஆம் வரிகளில் ஓரிரண்டு சொற்களே பதிவாகியுள்ள நிலையில் பெருமளவிற்குப் பாடம் விடுபட்டுள்ளது. 6ஆம் வரி ஆங்காங்கே தொடர்களை இழந்துள்ள நிலையில், 7-8ஆம் வரிகள் குறைவின்றி அமைய, 9-11 வரிகள் முழுமையும் விடுபட்டுள்ளன.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 34இல் 120ஆம் எண்ணின் கீழ்ப் பதிவாகியுள்ள பாடம்

முதல் வரி: ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர எனத் தொடங்கி தண்டாற் கொண்ட கோப்பரகே என முடிகிறது.

இரண்டாம் வரி: சரிபன்மரான எனத் தொடங்கி ஊரிடு வரி எ என முடிகிறது. இரண்டாம் வரியாகப் பதிவாகியுள்ள இப்பாடம் பத்து வரிகளில் தரப்பட்டுள்ளது. ஏழாம் வரித் தொடக்கத்திலுள்ள 'காலக்க' என்ற சொல் கல்வெட்டில் 'கால்க்காசுப்' என உள்ளது. எட்டாம் வரியில் உள்ள 'ஐம்பத்தி' என்ற சொல் 'ஐம்பதரை' என்றும் 'பேர்ப்பட்ட' என்ற சொல் 'எப்பேற்பட்ட' என்றும் அமைய, 'இக்காசி' என்ற சொல்லுக்கு மாற்றாக 'சந்திராதித்தவற்' என்ற சொல் உள்ளது.

மூன்றாம் வரி: 'ப்பேற்பட்ட இறையும்' என்பது மட்டுமே தொகுதியில் பதிவாகியுள்ளது.

நான்காம் வரி: 'தேவதானம்மான நிலம்' என்பது மட்டுமே தொகுதியில் பதிவாகியுள்ளது.

ஐந்தாம் வரி: 'லமன்றி யிறுப்பித்து கு' என்பது மட்டுமே தொகுதியில் பதிவாகியுள்ளது.

ஆறாம் வரி: டுத்தோம் திருவெறும்பியூர் ..... ருக்கு ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி சபையோம் ..... அத்திரையன் மஹாதேவன் பரமேச்வரன் . . பணியால் இவ்வூர் மத்யஸ்தன் உதைய திவாகரன் ..... இவையென் எழுத்து

பதிப்பில் விட்டுப்போன 3-6ஆம் வரிகளின் தொடர்ச்சி

வரி 3 ப்பேற்பட்ட இறையும் நாங்களே யிவ்வூர் நிலத்தால் சந்திராதித்தவற் இறையிறுத்து குடுக்கக் கடவோமாக வும் - - - - இரண்டினாலும் வந்த பலிசைக் காசு ஆண்டு வரை வந்த காசு ஐம்பதரை இக்காசு 50அரை இக்காசும் இத்தேவர்

வரி 4 தேவதானம்மான நிலம் எப்பேற்பட்ட நிலங்களுக்கும் நாங்களேய் சந்திராதித்தவற் இறைஇறுத்தும் - - - - (ம)றையில்லிறுத்தாரையும் பேர்ப்பொன் இருபத்தைஞ்சு கழஞ்சு பொன் பன்மாஹேச்வர

வரி 5 (ரே)மன்றி யிறுப்பித்து பின்னையும் இத்தேவர் நிலம் இறையிலி அனுபவிக்க நாங்களே - - - - சிலாலேகை செய்து குடுக்க கடவோமாகவும் இப்பரிசு பணிப் பணியால் பணித்து பிராமாணஞ் செய்து கு

வரி 6 டுத்தோம் திருவெறும்பியூராழ்வார் சண்டேசுவரப் பெருமாளுக்கு ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலத்துப் பெருங் குறி சபையோம் ஒன்பதாங் கூட்டம் கரையர் பறித்துப் பட்டு இக்கூட்டத்து வாதவூர் ஆத்திரையன் மஹா தேவன் பரமேச்வரன் என் பணியால் இவ்வூர் மத்யஸ்தன் உதைய திவாகரன் சீராளன்னான தந்மப்பிரியனேன் இவையென் எழுத்து

தொகுதியில் 7, 8ஆம் வரிகள் சரியாக உள்ளன.

பதிப்பில் விட்டுப்போன 9 -11ஆம் வரிகள்

9 இப்படி அறிவேன் வலவூர் மாப்பாணி மாறன் நக்கன்னேன்

10 இப்படி அறிவேன் வாதவூர் ஆத்திரையன் பரமேச்வரன் மஹாதேவன்னேன்

11 இப்படி அறிவேன் பெருங்காவில் நாராயணன் சுப்ரமண்யனேன்

சுவடுகள்

சுற்றி நிகழ்வன காண்பதும் உற்றன கேட்பதும் அவற்றுள் உரியன தேர்வதும் கவிஞர்கள் இயல்பு. அப்படித் தேர்ந்தவை அவர்தம் பாடல்களில் உவமைகளாகவும் பாடுபொருளாகவும் பதிவாகும். பாலை பாடிய பெருங்கடுங்கோ கூர்ந்த நோக்கினர். அகம் 155இல் அவர் பயன்படுத்தியிருக்கும் சில காட்சிப் பதிவுகள் காடு, நாடு சார்ந்த சில நிகழ்வுகளை அவர் எப்படியெல்லாம் பார்த்து அனுபவித்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துகின்றன.

பசுக் கூட்டங்கள் சேர்ந்துள்ள பாணாட்டில் அவற்றிற்கு நீர் தரவேண்டிக் கோவலர் தோண்டிய கிணறுகளில் முகந்த நீர், பத்தலின் வளைந்த வாய் வழி வழிந்து, காய்ந்து, நிலம் சேறாகியிருந்தது. அவ்வழி வந்த யானைகள் அங்கு நீர் அருந்த இயலாது சேற்றில் கால் பதித்து வேறிடம் ஏகின. பின் வந்த புலிகளோ யானைகளின் தடம் பிடித்து நடந்தன.

சிறந்த சொற்களைப் பேசும் கலைஞர்களான வயிரியர், தங்கள் தோளின் பின்னே கட்டிச்செல்லும் மத்தளத்தின் கண்ணிடத்தே, அதை இயக்க, அவர்கள் பயன்படுத்திய கை விரல்களின் சுவடுகள் வடுக்களெனத் தோன்றுமாறு போல யானையும் புலியும் நடந்த சுவடுகள் கடுங்கோவிற்குக் காட்சிதந்தன.

4. ஆய்வுக்கட்டுரைகள்

1. சங்க காலத்தின் காலம்?

இரா. கலைக்கோவன்

தமிழரின் தொன்மையான வரலாற்றுக் காலமாக அறியப் படும் சங்க காலத்தின் மேல், கீழ் நிலைகளைப் பற்றித் தொடர்ந்து குழப்பமான சுட்டல்களே நிலவி வருகின்றன சங்க காலத்தின் தொடக்கமாகக் கூறற்கியலா மிகப் பழங்காலம்வரை பயணிக்கச் சில அறிஞர்கள் துணிய, அதன் முடிவுக் காலத்தைப் பொ. கா. மூன்றாம் நூற்றாண்டுவரை நீட்டப் பலர் தொடர்ந்து விழைகின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க சிலர் கூற்றுகளை முன்நிறுத்திப் பார்க்கலாம்.

'பண்டைத் தமிழ்ச் சமூகம், வரலாற்றுப் புரிதலை நோக்கி' எனும் நூலை 2003ல் படைத்திருக்கும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, 'பேராசிரியர்கள் நீலகண்ட சாஸ்திரி, வையாபுரிப் பிள்ளை இவர்கள் சங்க காலத்தை ஏறத்தாழப் பொ. கா. 100 முதல் பொ. கா. 250 வரையுள்ள காலம் எனவே கொள்வர்; பேராசிரியர் காமில் சுவலபில் பொ. கா. மு. 100 முதல் பொ. கா. 250வரை என்பர்', என்று கூறுவதுடன், தம் கட்டுரைகள் எழுதப்பட்ட காலங்களில் அதுவே பொதுப்படையான நடை முறையாக இருந்தது என்றும் சொல்கிறார். இந்த இரண்டு கால எல்லைகளுள் தாம் கொள்ளத் துணிந்தது எதனை என்பது குறித்து அவர் ஏதும் கூறவில்லை.

பொ. கா. 100 என்ற தொடக்கத்திற்கும் பொ. கா. மு. 100 என்ற தொடக்கத்திற்கும் இடையே இருநூறு ஆண்டுகள் உள்ளன. இருநூறு ஆண்டுகள் என்பது வரலாற்றுக் கண்ணோட்டத் தில் ஒன்றாகக் கருதக்கூடிய ஒன்றன்று. எனினும், இருவேறு காலக்கட்டங்களைச் சுட்டும் பேராசிரியர் சிவத்தம்பி, தம் கட்டுரைகள் எழுதப்பட்ட காலங்களில் (பொ. கா. 1966-1992) அதுவே பொதுப்படையான நடைமுறையாக இருந்தது என்கிறார். சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள, 'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலில் பேராசிரியர் மு. வரதராசன், பொ. கா. 100 முதல் பொ. கா. 500 வரையிலான காலக்கட்டத்தைச் சங்கம் மருவிய காலமாகக் குறித்துள்ளார். சாஸ்திரியாரும்

வையாபுரியாரும் குறிப்பிடும், அதுவே பொதுப்படையான நடைமுறை எனச் சிவத்தம்பி ஏற்றுக்கொள்ளும் பொ. கா. 100 - பொ கா 250 எனும் சங்க காலம், வரதராசனின் சங்கம் மருவிய காலத்திற்குள் அடைக்கலம்வதைக் காண்கிறோம். தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள தமிழ்நாட்டு வரலாறு வரிசையில் சங்க காலம் பற்றிய தொகுதி சங்க காலத்தைப் பொ. கா. மு. 400 - பொ. கா. 250 என்று சுட்டுகிறது. சங்க காலத்தின் கீழ் எல்லையைப் பொ. கா. முன்னுறாகக் குறிப்பிடும் பேராசிரியர் மா. இராச மாணிக்கனார் மேல் எல்லை கூறற்கியலாத பழைமையுடையது என்கிறார்.

சங்க காலத்தின் காலத்தை வரலாற்றுச் சான்றுகளின் அடிப் படையில் நிறுவ முயன்றவர்களுள் குறிப்பிடத்தக்க தமிழறிஞர் களாக மா இராசமாணிக்கனாரையும் பேராசிரியர் சிவத்தம்பியை யும் குறிப்பிடலாம். இவர்களுள், மா. இராசமாணிக்கனார் கல்வெட்டுகளோடு நெருங்கிய தொடர்புடையவர். காலத்தால் முற்பட்ட தம்முடைய மொஹெஞ்சொ-தரோ எனும் நூலி லேயே பிராமி எழுத்துக்களைப் பற்றிய தெளிவான கண்ணோட் டத்தை வழங்கியவர். தொல்லியல் ஆய்வாளர்கள் பேராசிரியர் கா. இராசன், முனைவர் சு. இராசவேல், கல்வெட்டாய்வாளர்கள் முனைவர் கே. வி. இரமேஷ், முனைவர் மு. து. சம்பத் இவர்கள் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் கடந்த இருபதாண்டு களாக முன்னெடுத்துச் செல்லும் கூற்றை, 1941லேயே முன் மொழிந்தவர் இராசமாணிக்கனார். என்றாலும், சங்க காலத்தின் தொடக்கத்தைப் பற்றிய அவருடைய காலச்சுட்டல் தெளிவான அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் அமையவில்லை.

திரு. சிவத்தம்பி, சங்க காலத்தைப் பிறர் கூற்றுகளின் அடிப் படையிலேயே வரையறுப்பதைக் காணமுடிகிறது. தொடக்கத் தில் பேராசிரியர் சாஸ்திரி, வையாபுரி, சுவலபில் இவர்தம் கருத்துக்களின் அடிப்படையில், அவை இருவேறுபட்ட கால எல்லைகளைச் சுட்டியபோதும், அவையே பொதுப்படை யான நடைமுறை என ஏற்றுக்கொண்ட சிவத்தம்பி, அறிஞர் ஐராவதம் மகாதேவனின், 'Early Tamil Epigraphy' நூல் வெளி யானதும், மகாதேவன் குறிப்பிடும் கால எல்லையை ஏற்றுப் போற்றுவதைப் பார்க்கிறோம் பொ. கா. மு 200ல் இருந்து பொ. கா.

250வரை எனச் சங்க கால எல்லைகளை அவரால் எளிதாக விரிவு செய்து கொள்ள முடிகிறது. 2004ல் வெளியான இராசனின், 'தொல்லியல் நோக்கில் சங்க காலம்' என்ற நூலைத் தொடர்ந்து, சங்க காலத்தின் மேல் எல்லையைப் பொ. கா. மு. 300க்கும் முன் கொண்டு செல்ல சிவத்தம்பி உளம் கொள்கிறார் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கிடைக்கும் அல்லது முன் வைக்கப் படும் புதிய தரவுகளை, அவை சரியானவைதானா என்ற கண்ணோட்டமின்றி ஏற்றுக்கொண்டு, அதற்கேற்பத் தம் கால எல்லைகளை மாற்றிக்கொள்ளும் போக்கு இப்பெரியாரிடத்து உள்ளது. 2004ல் இலங்கையில் நடந்த சங்க இலக்கியமும் சமூக மும் என்ற கருத்தரங்கில், 'சங்க காலமும் இலக்கியமும் - ஆய்வின் மாறும் பரிமாணங்கள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையில் அவருடைய புதிய கால எல்லைகள் பதிவாகியுள்ளன.

ஒவ்வொருவர் சொல்லும் கருத்தையும் அவரவர்தம் பின் புலம் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், சங்க காலத்தை வரையறுக்கவே முடியாது. அதனால், சொல்வார் பின்புலத் தைப் பார்ப்பதைவிட, சொல்லியிருக்கும் கருத்துக்களில் உள்ள உண்மைத் தன்மையை ஆராய்ந்து ஏற்பதே தகும். ஐராவதம் மகாதேவனின் 'Early Tamil Epigraphy' 2003இல் வெளியான பதிவாகும். தமிழ்நாட்டில் அதுநாள்வரை கிடைத்த பழங் கல்வெட்டுகள் அனைத்தும் இந்நூலில் முறையாகவும் விரிவாக வும் ஆராயப்பட்டுள்ளன. பொ. கா. மு. இரண்டாம் நூற்றாண் டிற்கும் பொ. கா. முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தனவாக 59 பிராமி கல்வெட்டுகளும் பொ. கா. 2ஆம் நூற்றாண்டிற்கும் பொ. கா. 4ஆம் நூற்றாண்டிற்கும் இடைப் பட்டனவாக 30 பிராமி கல்வெட்டுகளும் இடம்பெற்றிருக்கும் இந்நூலில், பொ. கா. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளுக்கு உரியனவாக 21 வட்டெழுத்துக் கல்வெட்டுகள் தரப்பட்டுள் ளன. அவற்றுடன் அகழாய்வுகளில் வெளிப்போந்த பானை யோடுகள், முத்திரைகள், மோதிரங்கள் இவற்றிலுள்ள பிராமி எழுத்துக்களும் ஆராயப்பட்டுள்ளன. 2014இல் வெளியான இந்நூலின் மறுபதிப்பில் 2003 - 2014க்கு இடைப்பட்டுக் கண்டறியப்பட்ட பிராமி கல்வெட்டுகளும் இன்ன பிறவற்றி லுள்ள பிராமி பொறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

ஐராவதம் மகாதேவனின் ஆய்வு முடிவுகளுள் முக்கிய மானவை:

1. எழுதும் முறை தமிழ்நாட்டில் பொ. கா. மு. இரண்டாம் நூற்றாண்டில்தான் தொடங்கியது.

2. இந்த எழுத்துமுறையைத் 'தமிழ் பிராமி' எனலாம்.

3. மௌரியரின் பிராமி எனப்படும் அசோகன் பிராமியே தமிழ் பிராமிக்கு மூல வடிவம்.

4. இந்த எழுத்துமுறையைக் கருநாடகத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த சமண முனிவர்கள் கொணர்ந்தனர்.

1941ல் 'பிராமி எழுத்துக்கள் தமிழ்மொழிக்கென்றே அமைக்கப்பட்டுப் பின்னர் வடமொழிக்கும் பயன்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன' என்று கூறிய மா. இராச மாணிக்கனாரின் கருத்தைப் பி. ஆர். சுப்பிரமணியமும் மொழிந் துள்ளார். இந்தக் கருத்து 1980களில் வலிமை பெற்றது. விரிவான ஆய்வுகளின் வழி இக்கருத்தை முன்னெடுத்துச் சென்ற நடுவணர சின் கல்வெட்டாய்வு நிறுவனத் தலைவர் இரமேஷைப் பின் பற்றி, 1990க்கும் 2000க்கும் இடைப்பட்ட பத்தாண்டுக் காலத் தில் கா. இராசனும் சு. இராசவேலுவும் தொடராய்வுகள் வழி இக்கருத்தை வலியுறுத்துவாராயினர். இதற்குக் கொடுமணலில் நிகழ்ந்த அகழாய்வுகள் பெருந்துணையாயின என்பார் இராசன்.

2004ல் வெளியான தம்முடைய, 'தொல்லியல் நோக்கில் சங்க காலம்' என்ற நூலில் ஐராவதம் மகாதேவனின் முடிவு களைக் கொடுமணல் அகழாய்வுகளின் அடிப்படையில் மறுக்கும் இராசன், பெருங்கற்படைப் பண்பாட்டின் இறுதிக் காலத்திலேயே தமிழ்நாட்டில் பரவலாக எழுத்தறிவு பரவி விட்டது என்கிறார். இதற்குச் சான்றாகக் கொடுமணல் பெருங் கற்படைகளிலும் வாழ்விடத்திலும் கிடைத்த தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற பானையோடுகளைக் காட்டுகிறார்.

சங்க காலத்தில் தமிழ்நாட்டில் எழுத்தறிவு பரவலாக இருந் தது எனும் கருத்தை முதன்முதலாக முன்வைத்தவர் ஐராவதம் மகாதேவன். அக்கருத்தை ஒட்டியே இராசன் இதைக் கூறு கிறார் என்றாலும், பரவிய காலம் பற்றிய கண்ணோட்டத்தில்

இருவருக்கும் வேறுபாடு உள்ளமையை உளங்கொள வேண்டும். மகாதேவனும் இராசனும் முன்வைக்கும் இக்கருத்தைப் பேராசிரியர்கள் கேசவன் வெளுத்தட்டும் சுப்பராயலுவும் ஏற்க மறுக்கின்றனர். மட்பாண்ட எழுத்துப் பொறிப்புகளை ஆராய்ந்த சுப்பராயலு அவற்றில் பிராகிருதக் கலப்பு இருப்பதால், பிராகிருதம் பேசிய வணிகர்களிடமிருந்தே தமிழ் வணிகர்கள் எழுத்துமுறையைக் கற்று அதன் வழித் தமிழ்நாட்டில் எழுத்து முறை வளரத் தொடங்கியது என்கிறார்.

மகாதேவன், சுப்பராயலு, இராசன் எனும் இம்மூன்று சமகால அறிஞர்களின் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்பது சங்க காலத்தின் எல்லைகளை நிருணயிப்பதில் பெரும் இடர்ப்பாட்டை ஏற்படுத்துகிறது. மகாதேவனும் சுப்பராயலுவும் வடபுலத்திலிருந்துதான் எழுத்துமுறை தமிழ் நாட்டிற்கு வந்தது என்பதில் ஒன்றுபட்டாலும் தமிழ்நாட்டு மக்களின் பரவலான எழுத்தறிவு குறித்த கருத்தில் வேறுபடுகின்றனர். எழுத்துமுறை தமிழ்நாட்டில் தோன்றிய காலமாக மகாதேவனும் சுப்பராயலுவும் பொ. கா. மு. இரண்டாம் நூற்றாண்டைக் குறிப்பிட, இராசன் அக்காலத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான காரணங்களை வரிசைப்படுத்துகிறார். அவருடைய பொருந்தல் அகழாய்வு அதற்கான அறிவியல் அடிப்படையை வழங்கியுள்ளது.

இக்கருத்துகளிலுள்ள முரண்பாடுகளுக்குள் நுழைவதற்கு முன், அப்படி நுழைவது சங்க காலத்தின் கால எல்லைகளை அறிய உதவுமா என்பதை உறுதிசெய்யவேண்டும். பானை யோட்டுப் பெயர்களுடன் சங்க இலக்கியங்களில் வரும் ஆட் பெயர்களையும் ஒப்பீட்டிற்கு எடுத்துக் கொண்டதாகக் கூறும் எ. சுப்பராயலு, 'மண்கல, பாறைப் பொறிப்புப் பெயர்களோடு ஒப்பிடும்போது இலக்கியத்தில் பிராகிருதச் சாயல் கொண்ட பெயர்கள் குறைந்த விழுக்காட்டில் உள்ளன. வடமொழி ஒலிகளுக்குப் பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் அறவே இல்லை. எல்லா பிராகிருதப் பெயர்களும் முழுமையாகத் தமிழ்மயம் செய்யப்பட்டுள்ளன. மெய் இரட்டிக்கும் இடங்கள் பிழையின்றி எழுதப்பட்டுள்ளன. இப்பெயர்களுக்கு உரியவர்கள் அக்காலத் தமிழ்ச் சமூகத்தில் பல நிலையில் இருந்து வந்தவர்

கள்' என்று குறிப்பதால் தமிழ்நாட்டின் எழுத்துமுறை பற்றி விரிவாகப் பார்க்கவேண்டியது தேவையாகிறது.

தமிழ் சார்ந்தவையாக இதுநாள்வரை நமக்குக் கிடைத்திருக்கும் வரிவடிவங்கள் நான்காகும்.

1. சிந்துவெளி எழுத்துக்கள் - காலம் பொ. கா. மு. 2500 - பொ. கா. மு. 1500.

2. ஆதிச்சநல்லூரில் கிடைத்ததாக இந்து நாளிதழ் வெளியிட்ட 'முந்து பிராமி' பொறிப்புப் பெற்ற தாழி.

3. குறியீடுகளாய்க் கருதப்படும் கீறல்கள்.

4. பிராமி.

இந்நான்கனுள் சிந்துவெளி எழுத்துக்கள் பற்றிய தெளிவான முடிவுகள் இன்னமும் பெறப்படவில்லை. ஐராவதம் மகாதேவன், அஸ்கோ பர்ப்பேரலா, போஷல், பிரியான் வெல்ஸ் எனப் பல அறிஞர்கள் அவரவர் கருத்துக்களைச் சிந்துவெளி எழுத்தியல் சார்ந்து தெரிவித்திருந்தாலும் அவை தமிழ் சார்ந்த எழுத்தமைப்பைச் சுட்டுகின்றன என்பதைத் தவிர்த்த வேறெந்தத் தெளிவான முடிவுகளும் இன்றுவரை எட்டப்படவில்லை.

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்டதாக இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை அறிவித்து, இந்து நாளிதழால் வெளியிடப்பட்ட, 'முந்து பிராமி' எழுத்துப் பொறிப்புடனான தாழி ஒரு புதிராகக் காட்சியளித்து, ஆய்வாளர்கள் பார்வைக்குச் சிக்காமல் மறைந்துவிட்டது. அந்தப் பானையில், 'முந்து பிராமி' எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இருப்பதாக அதைப் படித்தளித்த நடுவணரசின் மேனாள் கல்வெட்டியல் துறைத் தலைவர் முனைவர் மு. து. சம்பத் இந்து நாளிதழிற்கு நேர்முகம் தந்திருந்தார்.

'முந்து பிராமி' என்ற சொல்லாட்சியில் ஆர்வம் கொண்ட ஐராவதம் மகாதேவன், தமிழ்நாடு அரசின் தொல்லியல் ஆய்வுத் துறையினர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வர்கள் ஆகியோர் தாழியைப் பார்க்க விரும்பிய போது அது போல் பொறிப்புடன் தாழியேதும் இல்லை எனும்

தகவல் முன்வைக்கப்பட்டது. இன்றுவரை அந்தத் தாழி தோன்றி மறைந்த விதம் பற்றிய தெளிவு கிடைக்கவில்லை.

'கீறல்கள்' என்றும் 'குறியீடுகள்' என்றும் குறிக்கப்பெறும் பொறிப்புகள் தொடக்கக் காலத்திலிருந்தே அறியப்பட்டிருப்பினும், அண்மையில்தான் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. அவற்றை விரிவான அளவில் ஆராய்ந்திருக்கும் அறிஞர்கள் சிலர் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் இடைப்பட்ட வரிவடிவங்களாக அவற்றைக் கொள்கின்றனர். இன்று இந்திய அளவில் கிடைக்கும் இத்தகு குறியீடுகளுள் 75% தமிழ்நாட்டில்தான் கிடைக்கின்றன. இவை தனித்தோ, பிராமி கல்வெட்டுகளுடன் இணைந்தோ கிடைப்பது குறிப்பிடத்தக்கது. பானையோடுகளிலேயே இக்குறியீடுகள் அதிக அளவில் கிடைத்திருந்த போதிலும் மோதிரங்கள், முத்திரைகள், நாணயங்கள், கல்வெட்டுகள் என அனைத்து வழியாகவும் இவற்றைப் பெறமுடிவது சிறப்பாகும்.

இவை குறித்த ஆய்வுகளுள் 1960ல் வெளியிடப்பட்ட பி. பி. லாலின் கருத்துக்கள் முக்கியமானவை. பெருங்கற்படைச் சின்னங்களில் கிடைத்த 131 குறியீடுகளை, 61 குறியீடுகளாக வகைப்படுத்தி, அவற்றில் 47 சிந்துசமவெளிப் பண்பாட்டிலும் பெருங்கற்படைப் பண்பாட்டிலும் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இது சார்ந்து நிகழ்ந்த பல ஆய்வுகள் சிந்து வெளி எழுத்துக்களே காலநிலையில் வளர்ச்சி பெற்றுச் செப்புக் காலப் பண்பாட்டின் ஊடாகப் பெருங்கற்காலப் பண்பாட்டை அடைந்தன என்ற முடிவைத் தந்து, சிந்துவெளி மக்களின் தெற்குச் சார்ந்த இடப்பெயர்ச்சியை உறுதிசெய்தன. சிந்துவெளி எழுத்துக்களையும் பிராமி எழுத்துக்களையும் இணைப்பதாக நம்பப்படும் இக்குறியீடுகளைப் படித்தறியும் முயற்சி தொடர்கிறது.

நன்கு படித்துணரப்பட்ட வரிவடிவமாக பிராமியைக் குறிப்பிடலாம். லலிதவிஸ்தரம் எனும் புத்தமத நூலும் பன்ன வணாசுத்த எனும் சமண நூலும் பிராமி வரிவடிவத்தைக் குறிக்கின்றன. தமிழ்நாட்டில் கிடைக்கும் பிராமி கல்வெட்டுகள் தமிழ்மொழியிலும் இந்தியாவின் பிற இடங்களில் கிடைக்கும் பிராமி கல்வெட்டுகள் பிராகிருதத்திலும் இருப்பதால் தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளைத் தமிழ் பிராமி கல்வெட்டுகள் என்று

அழைக்கின்றனர். இன்றைக்குக் கல்வெட்டு, தொல்லியல் அறிஞர்களுக்குள் நிகழும் விவாதங்கள், பிராமி முதலில் தோன்றிய இடம் எது என்பது பற்றியதாகவே உள்ளன. இராசன், இராசவேலு உள்ளிட்ட ஆய்வாளர்கள் பிராமி எழுத்துமுறை தமிழ்நாட்டில் தோன்றியதே என வாதிட, மகாதேவனும் சுப்பராயலுவும் அது வடபுலத்திலிருந்து வந்ததே என்று கூறுகின்றனர்.

பிராமி தமிழ்நாட்டில் தோன்றியதே என்பதற்கான சான்றுகளை இராசன் தம் நூலில் பரவலாகக் காட்டியுள்ளார். 'ஐராவதம் மகாதேவன் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளின் வரிவடிவத்தில் காணப்படுகின்ற அகரமேறிய மெய்யைக் குறிப்பிடுவதற்கு இடப்படும் ஒலிக்குறியீட்டின் அடிப்படையிலும் மெய்யெழுத்திற்கு இடப்படும் புள்ளி வழக்கிற்கு வந்த காலத்தைக் கணக்கில் கொண்டும் தமிழ் பிராமியை I, II, III எனப் பகுத்துள்ளார். தமிழ் பிராமி Iல் அகரமேறிய மெய்யைக் குறிக்கவும் ஆகாரமேறிய மெய்யைக் குறிக்கவும் எழுத்தின் மேல் வலப்புறம் ஒலிக்குறியீடாக ஒரு படுக்கைக் கோடு இடப்பட்டது. தமிழ்மொழி நன்கு கற்றவர்கள் குறிலுக்கும் நெடிலுக்கும் இடையே காணப்படும் பாகுபாட்டை உணர்ந்து படித்துக் கொள்வர்.

ஒரு சொல்லில் வரும் அகரமேறிய அல்லது ஆகாரமேறிய மெய்யைக் குறிக்கும் இவ்வொலிக் குறியீடு குறிலாக மட்டுமன்றி நெடிலாகவும் பொருள் தருவதாக அமைந்துவிடுமானால் அச்சொல்லின் உண்மைப் பொருளைப் புரிந்துகொள்வதில் மொழி அறிந்தவர்களுக்கும்கூடச் சிக்கல் ஏற்பட்டுவிடும். எனவே இச்சிக்கலைத் தவிர்க்கும் பொருட்டுத் தமிழ் பிராமி IIல் இவ்வொலிக் குறியீடு ஆகாரமேறிய மெய்யைக் குறிக்க மட்டும் பயன்படுத்தப்பட்டது. எனவே தமிழ் பிராமி IIல் ஓர் அடிப்படைக் குறியீட்டை உயிர்மெய்க் குறிலாகவோ அல்லது மெய்யாகவோ எடுத்துக்கொள்ளலாம். இம்முறையில் தமிழ் பிராமி Iல் காணப்படும் சிக்கல் ஓரளவு குறைக்கப்பட்டது எனலாம்.

ஆயினும், மெய்க்கும் உயிர்மெய்க் குறிலுக்கும் வரிவடிவத்தில் எவ்விதப் பாகுபாடும் காட்டப்படவில்லை. இது ஒரு குறை எனலாம். எனினும் இக்குறையை முழுவதுமாகக் களைய, தமிழ்

பிராமி IIIல் மெய்யைக் குறிக்க அடிப்படைக் குறியீட்டின் மேல் புள்ளியிடப்பட்டது. எனவே தமிழ் பிராமி I எழுத்துமுறை காலத்தால் முந்தியது எனவும் தமிழ் பிராமி II எழுத்துமுறை காலத்தால் சிறிது பிந்தியது எனவும் தமிழ் பிராமி III எழுத்து முறை அதாவது புள்ளிவைத்து எழுதும் முறை தொல்காப்பிய ரின் எழுத்துச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்டது என்ற கருத்தும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆயினும், பல்வேறு தரவுகளை நுணுகிப் பார்க்கும்போது தமிழ் பிராமி Iம் IIம் தொடக்கக் காலம் முதலே தமிழகத்தில் கலந்தே கிடைப்பதாக இப்பொழுது கருதவேண்டியுள்ளது. புள்ளியியல் அடிப்படையில் ஆய்வினை மேற்கொண்ட மகாதேவன், தமிழ் பிராமி I பொ. கா. மு. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் அதிகமாகவும் பின்னர்க் குறைந்து பொ. கா. மு. முதலாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வழக்கில் இருந்து மறைந்துவிடுவதாகவும் தமிழ் பிராமி II பொ. கா. மு. முதலாம் நூற்றாண்டு தொட்டுக் கிடைப்பதாகவும் மெய்க்குப் புள்ளியிடும் தமிழ் பிராமி III முறை பொ. கா. 2ஆம் நூற்றாண்டில் வழக்கிற்கு வந்ததாகவும் கணித்துள்ளார்.'

அசோகர் காலக் கல்வெட்டுகளையும் தமிழ் பிராமி கல்வெட்டுகளையும் நன்கு ஆராய்ந்த நிலையில், அசோகர் காலக் கல்வெட்டுகளில் காணப்படும் பிராமி எழுத்து முறை மகாதேவன் குறிப்பிடும் தமிழ் பிராமி இரண்டாம் வகையினதாகவே உள்ளதென்கின்றனர் இராசனும் இராசவேலுவும் மகாதேவனும் சுப்பராயலுவும் குறிப்பிடுமாறு அசோகர் பிராமியிலிருந்துதான் தமிழ் பிராமி வந்ததெனில், அசோகர் பிராமியில் காணப்பெறாத 'முதல்வகை' எழுத்துமுறை தமிழ் பிராமியில் மட்டும் இடம்பெற்றிருப்பது எங்ஙனம் எனும் கேள்வியை எழுப்பும் இராசன், எங்கு எழுத்துமுறை தோன்றியதோ அங்குதான் சோதனைகள் நிகழ்த்தப்பட்டு, குழப்பங்கள் நிலவி, தெளிவுகள் ஏற்படமுடியும். அவ்வகையில் பார்த்தால் இவ்வகை எழுத்துமுறை தமிழ்நாட்டிற்கே உரியதாகும் என்று கூறுகிறார்.

தொல்லியல் அடிப்படையிலும் இதற்கான சான்றுகளை இராசன் முன்வைப்பது கூடுதல் சிறப்பாகும். 'கொடுமணல் அகழாய்வுக் குழிகளில் எட்டு வாழ்விட (வீட்டு) மண்தரைகள்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஒரு வீட்டுத் தரையின் பயன்பாட்டின் காலம் குறைந்தது ஐம்பது ஆண்டுகள் என எடுத்துக்கொண்டால், எட்டு வீட்டுத் தரைகள் 400 ஆண்டுகளில் உருவாகியிருக்கவேண்டும். இவற்றின் காலத்தை மேல் மண்ணடுக்கிலிருந்து கீழ் நோக்கியோ, கன்னிமண் மேலுள்ள மண்ணடுக்கு முதல் மேல் நோக்கியோ கணிக்கலாம்.'

இந்த எட்டு மண் அடுக்குகளின் காலம் 8 x 50 = 400 ஆண்டுகளாக அமைகிறது. கொடுமணல் வாழ்விடத் தரையின் கன்னி மண் அடுக்கில் கிடைத்துள்ள பானையோட்டுப் பொறிப்புகள் பிராமி I, II வகையின. திரு. மகாதேவன் கூற்றுப்படிப் பார்த்தால், இவ்வடுக்கின் காலம் பொ கா. மு. முதல் நூற்றாண்டு. இவ்வாழ்விடத் தரையின் மேலடுக்கிலும் இதே வகையினவான பிராமி பொறிப்புகள் கெர்ண்ட பானையோடுகளே கிடைத்துள்ளன. மகாதேவன் வகைப்பாடு கொண்டு பார்த்தால், இவ்வடுக்கின் காலமான பொ. கா. 250க்குரிய புள்ளியிட்ட பிராமி பொறிப்புகளே இங்குக் கிடைத்திருக்கவேண்டும். கிடைத்திருக்கும் பொறிப்புகள் பொ. கா. மு. முதல் நூற்றாண்டுக்குரியன என்பதால், இராசன் மேலிருந்து கீழாகக் கணக்கீடு செய்து கன்னிமண் தரையில் கிடைத்திருக்கும் பானையோட்டுப் பொறிப்புகளின் காலத்தைப் பொ. கா. மு. 400க்கு நகர்த்துகிறார். எனில், 300 ஆண்டுக் காலமாகத் தமிழ் பிராமி வளர்ச்சி ஏதும் காணவில்லை என்றாகும்.

தமிழ் பிராமியின் தொடக்க வரிவடிவத்திற்கு மகாதேவன் அளித்துள்ள காலக் கணிப்பான பொ. கா. மு. 2ஆம் நூற்றாண்டு, தொல்லியல் சான்றுகளுக்கு எதிராக இருப்பதை இராசன் தம் நூலில் நன்கு சுட்டியுள்ளார். கொடுமணலின் எட்டு மண் அடுக்குகளிலும் மகாதேவன் வரையறுத்துள்ள பொ. கா. முதல் நூற்றாண்டுக்குரிய வரிவடிவம் கிடைக்காமையின் மொத்த முள்ள 2 மீட்டர் ஆழப் பண்பாட்டு எச்சங்களையும் பொ. கா. மு. இரண்டிற்கும் ஒன்றிற்கும் இடையேயான கால அளவில் வைக்க வேண்டியுள்ளமை தொல்லியல் மரபுகளுக்கும் கணக்கீட்டிற்கும் முரணாக அமையும் என்பதுடன், கொடுமணல் பகுதியில் பொ. கா. மு. 2ஆம் நூற்றாண்டிற்கு முன் மக்கள் வாழ்ந்தமைக்கான எச்சங்களே இல்லை என்றும் கருத்துக் கொள்ள நேரும் என்று

தெரிவிக்கும் இராசன், அகழாய்வுப் பண்பாட்டுக்கூறுகளின் அடிப்படையில் கொடுமணல் கன்னிமண் தரையின் காலத்தைப் பொ. கா. மு. 400க்கும் முன்னதென உறுதிப்படுத்துகிறார்.

பெருங்கற்படைக் காலமாக முன்வைக்கப்படும் நாகரிகம் இரும்புடன் தொடர்புடையது. கருப்பு சிவப்பு மட்பாண்டங்களைப் பயன்படுத்திய இவர்கள்தான் சங்க காலத்தை உருவாக்கியவர்களின் முன்னோடிகள் என்பது பேராசிரியர் செண்பகலட்சுமியின் கூற்றாகும். பொ. கா. மு. ஆயிரத்திலிருந்து தமிழ் நாட்டில் பெருங்கற்படை நாகரிகம் தென்படுவதைத் தொல்லியல் ஆய்வர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இது பொ. கா. மு. 500 அளவில் வரலாற்றுக் காலமாக மாறியிருக்கலாம் என்பது அவர்தம் துணிபு.

தமிழ்நாட்டில் அரசுருவாக்கம் எப்போது ஏற்பட்டது என்பது மிக முக்கியமான கேள்வியாகும். இந்த அரசுருவாக்கத்தைக் கொண்டே சங்க காலத்தின் தொடக்கத்தைத் தீர்மானிக்க முடியும். சங்க இலக்கியங்களில் பதிற்றுப்பத்து, புறநானூறு, பத்துப்பாட்டு எனும் இலக்கியங்கள் அரசு சார்ந்து வளர்ந்தவை. பதிற்றுப்பத்தில் காணப்படும் சேர மன்னர்களைப் பற்றிய பாடல்களைக் கொண்டு நோக்கும்போது, ஒரு மன்னரின் ஆட்சிக் காலத்தை முப்பதாண்டுகளாகக் கொண்டால்கூட முந்நூறு ஆண்டுக்காலம் தேவைப்படுகிறது. இந்தப் பத்துப் பேர் தவிர, புறநானூறு குறிப்பிடும் சேர அரசர்கள், பிற சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெறும் சேர அரசர்கள் இவர்களை எல்லாம் எந்தக் கால எல்லைக்குள் கொணர்வது?

பொ. கா. 250ல் தமிழ்நாட்டில் பல்லவராட்சி தொடங்கி விடுவதால், சங்க காலத்தின் முடிவு பொ. கா. 250 என்பதில் எந்தத் தடுமாற்றமும் இல்லை. பதிற்றுப்பத்து குறிப்பிடும் சேர அரசர்களைக் கணக்கில் கொண்டாலே, சங்கத்தின் தொடக்கம் பொ. கா. மு. 50க்குப் போய்விடும். எனவே சாஸ்திரி, வையாபுரி இவர்களின் காலக்கணிப்பு சரியன்று என்பது உறுதியாதல் காண்க.

தமிழ்நாட்டு அரசர்களைப் பற்றி வடபுலத்து மன்னர்கள் இருவர்தம் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் காலத்

தால் முற்பட்டது அசோகரின் கல்வெட்டு. குஜராத் மாநிலத்தி லுள்ள கிர்னார் கல்வெட்டு, அசோகரின் அரசுக்கு வெளியில் இருக்கும் அரசர்களாகச் சோழர், பாண்டியர், கேரளர், சத்திய புத்திரர் அரசுகளைக் குறிக்கிறது. பெஷாவருக்கு அருகிலுள்ள ஷாபாங்கார்ஹி எனும் ஊரிலுள்ள பாறைக் கல்வெட்டும் சோழ, பாண்டியர்களைக் குறிக்கிறது..கல்வெட்டில், இவர்தம் நாடுகள் நட்பு நாடுகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டின் காலம் பொ. கா. மு. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி, எனில், பொ. கா. மு. 250ல் தமிழ்நாட்டு அரசர் களாகச் சேரர், சோழர், பாண்டியர், அதியமான் இருந்தனர் என்பது உறுதிப்படும்.

இந்தியாவின் பல பகுதிகளில் காணப்படும் அசோகரின் கல்வெட்டுகள் தமிழ்நாட்டைத் தொடவில்லை. ஆந்திராவில் எர்ரகுடி, கருநாடகத்தில் பிரமகிரி என்று நின்றுவிடுவதைப் பார்க்கிறோம். அவை எதைத் தெரிவிக்கின்றன? மௌரியப் பேரரசின் ஆளுமை தொடமுடியாத வல்லமை கொண்ட அரசர்களின் ஆட்சியில் தமிழ்நாடு இருந்ததைத்தானே? பொ. கா. மு. 250ல் இத்தகு நிலையெனில், தமிழ்நாட்டில் அரசுரு வாக்கம் நிகழ்ந்தது எப்போது? திடீரென இனக்குழுக்கள் ஒன்றாகித் தலைமைகள் சிதறி வேள், வேந்து என அரசு உருவாகிட முடியாது. அதற்கெனக் காலம் வேண்டும். மிகக் குறைவான கால எல்லையைத் தேர்ந்தால்கூட இத்தகு வலிமை நிலையடைய நூற்றைம்பது முதல் இருநூறு ஆண்டுகளாவது வேண்டியிருக்கும்.

எனில், தமிழ்நாட்டில் அரசுருவாக்கம் பொ. கா. மு. 450ல் தொடங்கியதாகக் கொள்ளலாம். பெருங்கற்படைப் பண்பாட்டு மக்கள் வரலாற்றுக் காலத்திற்குள் நுழைவதாகக் கொள்ளப்படும் பொ. கா. மு. 500க்கும் பொ. கா. மு. 450க்கும் இடைப்பட்ட காலம் அரசுச் சிந்தனைகள் உருப்பெற்ற காலமாகலாம். இவையெல் லாம் தொல்லியல், கல்வெட்டியல், இலக்கியச் சான்றுகள் வழி யாக மேலும் முனைப்புடன் ஆராயப்பட வேண்டிய நிலைகள்.

அரசுருவாக்கம் பற்றிய இராசனின் கருத்தும் இவ்விடத்தே நினைக்கத்தக்கதாகும். 'கடந்த 25 ஆண்டுகளாகச் செண்பக

லெட்சுமி, ராஜன் குருக்கள், சிவத்தம்பி, சுதர்சன் செனாவிரத் தினே போன்றோர் சங்க காலச் சமுதாயத்தில் காலந்தோறும் ஏற்பட்ட மாறுதல்களைத் தொல்லியல், கல்வெட்டு, நாணயம் போன்ற தரவுகளை உள்வாங்கிக் கொண்டு மானுடவியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வாளர்கள் அனைவரும் சங்க இலக்கியங்களில் காணப் படும் திணைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஐந்திணைகளில் ஏற்படுகின்ற, ஏற்பட்ட பல்வேறு சமூகச் சூழல் களைச் சுட்டிக்காட்டி அவற்றின் அடிப்படையில் எழுந்த அரசுருவாக்கத்தை விளக்கியுள்ளனர்.

இத்திணைமரபுகளின் அடிப்படையில் வளமையான பகுதியான மருதநிலப் பகுதியிலேயே முதன்முதலில் அரசு உருவாகியிருக்க வேண்டும் என்ற கருத்தினை முன்மொழி கின்றனர். உழவுத் தொழிலைப் பெரிதும் நம்பி அதன் மூலம் ஏற்பட்ட உபரி உற்பத்திப் பெருக்கத்தை மனத்தில் கொண்டு இந்நிலைப்பாட்டை இவ்வாய்வாளர்கள் எடுத்திருக்க வேண் டும். வளமையான பகுதிகளிலேயே அரசு உருவாகியிருக்க முடியும் என்ற கருதுகோளின் அடிப்படையில் எழுந்த ஒரு முடிவு இது எனலாம். ஆனால், அண்மைக் காலங்களில் வெளிக் கொணரப்பட்ட தொல்லியல் சான்றுகள் இம்முடிவுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை.

எடுத்துக்காட்டாக முல்லையும் பாலையும் தாங்கி நிற்கும் கொங்குநாடும் சேர அரசு உருவாக்கத்திற்குப் பெரும் பங்கு புரிந்துள்ளது. இம்முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் இங்குக் கிடைக்கின்ற இரும்புக் கனிமத்தையும் மணிக்கற்களையும் பயன்படுத்தித் தமது தொழில்நுட்பத் திறனால் மிகச் சிறந்த எஃகுக் கருவிகளையும் மணிகளையும் உருவாக்கி மேலை நாடு களுக்குக் குறிப்பாக ரோம நாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளனர். வெளிநாட்டு வணிகத்தின் மூலம் பெற்ற வருவாய் இவர்களது வாழ்க்கை மேம்பாட்டிற்கும் சமூகக் கட்டமைப்பிற்கும் அரசுரு வாக்கத்திற்கும் அடிகோலியது.

இந்தியாவில் கிடைத்த ரோமநாணயங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் கொங்குப்பகுதியிலேயே அதிகமான

நாணயங்கள் கிடைத்துள்ளன. இத்தகைய நாணயங்கள் வளமை யான மருதநிலப்பகுதியில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எனவே, நீர்வளம் மிக்க வளமையான பகுதியில் மட்டுமே அரசு உருவாக்கம் முதன்முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தை மீண்டும் ஆய்விற்கு உட்படுத்த வேண்டியுள்ளது' எனும் இராசனின் கருத்து 'அரசுருவாக்கம்' பற்றி இதுநாள்வரை எழுந்துள்ள கோட்பாடுகளைத் தகர்ப்பது காணலாம். இனக்குழு, தொழில்நுட்பம், வணிகத் தொடர்புகள், எழுத்தறிவு, இலக்கியம், அரசுருவாக்கம் எனப் பல தளங்களில் ஆராய்வதன் வழியே சங்க காலத்தின் காலத்தைப் பற்றிய அறிவியல் சார்ந்த முடிவினைப் பெறமுடியும்.

பிராமி கல்வெட்டுகளை எப்படிக் காலக் கணிப்புச் செய் கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது. அதன் எழுத்தமைதியே இதற்கு உதவுகிறது. அந்த எழுத்தமைதி பார்ப்பவர்க்கேற்ப வேறுபடும் அதிசயமும் உண்டு. மகாதேவனுக்குப் பொ. கா. முதல் நூற்றாண்டினதாகக் காட்சிதரும் ஜம்பைக் கல்வெட்டு தமிழ் நாடு அரசின் தொல்லியல்துறை ஆய்வர்களின் பார்வையில் பொ. கா. மு. இரண்டாம் நூற்றாண்டாகிவிடுகிறது. இருவர் பார்வைக்குமிடையே முந்நூறு ஆண்டுகள் ஊசலாடுவதைக் கருதவேண்டும். இருவர் பார்வையில் எது சரி? பிராமி எழுத்து முறை கருநாடகத்திலிருந்து வந்த சமண முனிவர்களிடமிருந்து தான் தமிழ்நாட்டில் பரவியது என்றால், பல கேள்விகள் எழுகின்றன.

1. மௌரிய பிராமியில் உள்ள வருக்க எழுத்துக்கள், தமிழில் வருக்க ஒலிப்புகள் இருந்தபோதும் ஏன் தமிழ் பிராமி எழுத்துமுறையில் கொள்ளப்படவில்லை?

2. மௌரிய பிராமியில் இல்லாத தமிழுக்கே உரித்தான 'ழ, ள, ற, ன' எழுத்துக்கள் தமிழ் பிராமியில் எப்படி உருவாயின?

3. மௌரிய பிராமியின் 'ம' எழுத்திற்கும் தமிழ் பிராமி யின் 'ம' எழுத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்குக் காரணம் என்ன?

4. மௌரிய பிராமியில் இல்லாத பிராமி ஐ எழுத்துமுறை தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுவது எங்ஙனம்?

5. தமிழ்நாட்டில் பிராமி கல்வெட்டுகள் உருவாகக் காரணர் களாகக் கருதப்படும் கருநாடக சமண முனிவர்கள் ஏன் தாங்கள் வாழ்ந்த இடமான கருநாடகத்தில் பிராமி கல்வெட்டுகள் உருவாக உதவவில்லை?

6. தமிழ்நாட்டு வணிகர்களை பிராகிருத வயப்படுத்தித் தங்கள் எழுத்துமுறையைக் கற்றுத் தந்த வடபுலத்து பிராகிருத வணிகர்கள் ஏன் தாங்கள் வாழ்ந்த பகுதிகளில் பானை யோட்டுப் பொறிப்புகளை இந்த அளவிற்கு உருவாக்கவில்லை?

7. தமிழ்நாட்டுப் பானைப் பொறிப்புகளில் ஐம்பது விழுக்காடு (?) பிராகிருதக் கலப்பு இருப்பதாலேயே எழுத்து முறையைத் தமிழர்கள் பிராகிருதம் பேசிய வணிகர்களிட மிருந்துதான் கற்றார்கள் என்பது பொருந்துமா?

இதில் கவனிக்கவேண்டிய மற்றொரு செய்தியும் உண்டு. தமிழ்நாட்டில் காணப்படும் பிராமி கல்வெட்டுகளுள் பெரும் பான்மையன தமிழர்களின் கொடையைத் தமிழில் குறிப்பன. இவற்றையெல்லாம்விட மிக முக்கியமான செய்தி ஒன்று உண்டு. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டுத்துறை மாணவர்கள் தேனிமாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் உள்ள புலிமான் கோம்பையில் மூன்று சங்க கால நடுகற்களைக் கண்டறிந்தனர். எழுத்துப் பொறிப்புள்ள இந்நடுகற்கள் இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களில் மிகப் பழைமையானவை. அவற்றுள் இரண்டின் எழுத்துப் பொறிப்புகளைப் பொ. கா. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவையாக இராசன் குறிப்பிடுகிறார். இவை பொ. கா. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவையாகலாம் என்று மகாதேவன் கருதுவது குறிப் பிடத்தக்கது.

இந்நடுகற்கள் கிடைப்பதற்கு முன் 'தொல்லியல் நோக்கில் சங்க காலம்' என்ற தம்முடைய நூலில், 'சங்க இலக்கியப் பாடல் களில் உள்ள, 'பெயரும் பீடும் எழுதி', 'பெயர் பொறித்து' என்ற சொற்றொடர்கள் வீரனின் உருவம் வண்ணமாகத் தீட்டப் பட்டதையும் பொறிக்கப்பட்டதையும் குறிக்கின்றனவே தவிர வரிவடிவத்தைக் குறிக்கவில்லை' என்று குறிப்பிட்ட இராசன், 'கூருளி குயின்ற கோடுமாய் எழுத்து' என்ற சங்கத் தொடரைக் கூட வரிவடிவம் குறித்த பாடலடியன்று என்று ஏற்க மறுத்த

இராசன், புலிமான்கோம்பை கண்டுபிடிப்பிற்குப் பிறகு, இதே தொடர்களைச் சுட்டி, 'இக்குறிப்புகள் அனைத்தும் சங்க காலத்தில் எழுப்பப்பெற்ற நடுகற்களில் எழுத்துக்கள் இருந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன' என்று கூறுவது எண்ணத் தக்கது.

இலக்கியம், மொழியியல் சார்ந்த அறிஞர்களுக்கிடையே காணப்படும் கருத்து வேறுபாடுகளைப் போலவே தொல்லியல், கல்வெட்டியல் சார்ந்த அறிஞர்களுக்கிடையிலும் காலக் கணக்கீடுகளில் ஒத்திசைவு இல்லை. அறிவியல் சார்ந்த ஆய்வுத் துறையாகப் போற்றப்படும் தொல்லியல் வழி வெளிப்படும் சான்றுகளைக் கால அட்டவணைப்படுத்துவதில்கூட அறிஞர் களுக்கிடையில் ஒருமைப்போக்கில்லை. ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் கூட்டுறவாக அகழாய்வு செய்யும் இரண்டு அறிஞர் கள்கூட கருத்து விளைவுகளில் ஒன்றுபடுவதில்லை என்பதை யும் காணமுடிகிறது. இதைவிடப் பெருங்குறை ஒன்று உண்டு. கல்வெட்டு, தொல்லியல் சார்ந்த அறிஞர்கள் தேவைக்கு இலக்கியம் படிக்கிறார்கள். இலக்கிய, வரலாற்று அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை நிலைநிறுத்த மட்டுமே கல்வெட்டு, தொல்லியல் சான்றுகளைத் துணைக்குக் கொள்கிறார்கள். இவர்களுக்கிடையில் மொழியியல் வல்லுநர்கள் அவர்களால் இயன்றதைச் செய்து நிறுத்திக்கொள்கிறார்கள்.

கல்வெட்டு, தொல்லியல், இலக்கியம், மொழியியல் இவை அனைத்திலும் சிறந்த அறிஞர்கள் தமிழ்நாட்டில் அருகியுள்ள னர். இருப்பவர்களுக்குள்ளும் ஒத்திசைவு இல்லை. இந்த இடை வெளிதான் இன்றளவும் சங்க காலத்தின் கால எல்லைகள் பற்றியோ, பழந்தமிழ் எழுத்துக்களின் தோற்றக்காலம் பற்றியோ எத்தகு உறுதியான முடிவுகளுக்கும் வரமுடியாச் சூழலில் நம்மைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது. அரசியல், மொழி, இனம், சமயம், இசங்கள், குழுக்கள் சாராமல் உண்மைகளை முன் நிறுத்தி, உண்மைகளை மட்டுமே வெளிப்படுத்தி வரலாற்றுப் பார்வையில் அறிவியல் பின்புலத்தோடு அவற்றை நிறுவ அறிஞர்கள் ஒன்றிணையும் நாள்வரை எது சங்க காலம் என்ற கேள்விக்கு விடை கிடைக்க வாய்ப்பே இல்லை.

2. வெள்ளறைக் குடைவரை

மு. நளினி, இரா. கலைக்கோவன்

சிராப்பள்ளித் துறையூர்ச் சாலையில் சிராப்பள்ளியில் இருந்து 20 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது வெள்ளறை. ஊரின் நடுவே பெருமிதத் தோற்றத்துடன் விளங்கும் தாமரைக் கண்ணர் (புண்டரீகாட்சப் பெருமாள்) கோயிலின் மூன்றாம் சுற்றில் வசந்த மண்டபத்திற்கு வடக்கே காணப்படும் பாறையின் சரிவில் கிழக்கு மேற்காக 12. 93 மீ. நீளத்திற்குத் தென் பார்வையாக அகழப்பட்டுள்ளது வெள்ளறைக் குடைவரை.[1]

முகப்பு

கிழக்கு மேற்காக 12 மீ. நீளம், தென்வடலாக 65 செ. மீ. அகலம், 3. 44 மீ. உயரம் பெற்றுள்ள குடைவரை முகப்பைச் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலான நான்கு முழுத் தூண்களும் பாறைச்சுவர் ஒட்டிய இரண்டு நான்முக அரைத் தூண்களும் அணிசெய்கின்றன.[2] கீழ்ச்சதுரம் மேற்சதுரத்தைப் போல் ஒன்றரை மடங்கு உயரம் பெற்றுள்ளது. அனைத்துத் தூண்களிலும் சிதைந்த நிலையில் பழங்கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தூண்களின் மீதுள்ள போதிகைகளின் பட்டை பெற்ற வளைமுகத் தரங்கக் கைகள், கல்வெட்டுடன் உள்ள உத்திரம் தாங்க, மேலே வாஜனம். போதிகைகளின் மேற்கைகள் கீழ்க்கைகளைப் போல் இருமடங்கு நீளமாக உள்ளன.

வாஜனத்தையடுத்து வளைமுகமாக அகலமான, வெறுமையான வலபியும் கூரைநீட்சியாக வடிவமைக்கப்படாத கபோதமும் காட்டப்பட்டுள்ளன. அரைத்தூண்களை அடுத்துப் பாறைச்சுவர்களை ஒட்டியவாறு தென்முகமாகப் பக்கத்திற்கு ஒன்றாக உள்ள மெல்லிய நான்முக அரைத்தூண்களின் மீதுள்ள போதிகைகளுள் கிழக்குப் போதிகையின் கை சதுரப் பட்டியாகவும் மேற்குப் போதிகையின் கை வளைமுகமாகவும் அமைந்து கபோதம் தாங்குகின்றன. முகப்பிற்கு முன்னுள்ள பாறைத்தரை 12. 93 மீ. நீளம், 30 செ. மீ. அகலம் பெற்றுள்ளது. நடுஅங்கணத்திற்கு முன் பாறைப் படிக்கட்டுகள் உள்ளன. மேல் பாறையின் சரிவு முன்னோக்கி அமைந்திருப்பதால் குடைவரை முகப்பின் சரிவுச்சுவர்கள் இருபுறத்தும் பரந்து விரிந்துள்ளன.

5. 86 மீ. அகலமுள்ள மேற்குச்சுவரில் அகழ்வுப்பணி தொடங்கிய நிலையில் கைவிடப்பட்டுள்ளது. 5. 34 மீ. அகலமுள்ள கிழக்குச்சுவரில் 2. 32 மீ. உயரம், 1. 44 மீ. அகலம், 5 செ. மீ. ஆழம் கொண்ட கோட்டம் அமைத்து நிறைவடையா நிலையில் காவலர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.[3] கரண்டமகுடம், பனை யோலைக் குண்டலங்கள், நிவீத முப்புரிநூல், சரப்பளி, இடைக் கட்டுடனான கோவணஆடை அணிந்துள்ள காவலரின் இட முன் கை கடியவலம்பிதமாக, வல முன் கை முழுமையுற வில்லை. பின்கைகள் உள்ளபோதும் அவற்றிலுள்ள பொருட் களை அறியமுடியவில்லை. இடக்கால் சமத்திலிருக்க, முழங் காலளவில் மடக்கி உயர்த்தப்பட்டுள்ள வலக்கால், நிறைவடை யாத் தன்மையால் எதன் மீது இருத்தப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை.

மண்டபம்

முகப்பை அடுத்த மண்டபம் கிழக்கு மேற்காக 12. 85 மீ. நீளமும் தென்வடலாக 5. 76 மீ. அகலமும் 3. 28 மீ. உயரமும் பெற்றுள்ளது. தெற்கில் வாஜனத்தால் அணைக்கப்பட்டுள்ள மண்டபத்தின் கூரை சீர்மையுற்றுள்ளது. மண்டபத்தின் வட சுவர் வெறுமையாக அமைய,[4] கிழக்கு மேற்குச் சுவர்களில் கருவறைகள் அகழப்பட்டுள்ளன.[5] வடசுவரின் கூரையை ஒட்டிய பகுதியில் உத்திரமும் வாஜனமும் இருந்து சிதைக்கப்பட்டதற் கான அடையாளங்களைக் காணமுடிகிறது. அது போலவே, கீழ்ப்பகுதியை ஒட்டி 64 செ. மீ. உயரத்திற்கு மண்டபத் தரை யிலிருந்து சீரமைக்கப்படாத உபானம் 23 செ. மீ. அகலத்திற்குக் காட்டப்பட்டுள்ளது. வடசுவர் கிழக்கு, மேற்குச் சுவர்களைத் தொடுமிடத்துள்ள நான்முக அரைத்தூண்களுள் மேற்குத் தூண் வளைமுகப் போதிகைக் கையால் உத்திரம் தாங்க, கிழக்குத் தூண் போதிகையின்றி உள்ளது.

மேற்குக் கருவறை

மண்டபத்தின் மேற்குச்சுவரில் அகழப்பட்டுள்ள கருவறை தெற்கில் 23 செ. மீ. அளவும் வடக்கில் 24 செ. மீ. அளவும் மண்ட பத்திற்குள் பிதுக்கமாக அமைந்துள்ளது. ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளால் தழுவப்பெற்ற கண்டம், பட்டிகை, மேற்கம்பு எனக் கருவறையின் தாங்குதளம் 71 செ. மீ. உயரப்

பாதபந்தமாக அமைய,[6] கருவறையின் முன்சுவரில் 79 செ. மீ. அகல, 1. 88 மீ. உயர வாயில், இரண்டு உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்களின் அணைப்பில் திறக்கப்பட்டுள்ளது. அணைவுத்தூண்களில், வடதூணினும் தென்தூண் அகலமாக அமைய, வாயிலுக்கு முன்னால் உள்ள பிடிச்சுவர் அணைப்புப் பெற்ற ஐந்து படிகளுள் கீழ்ப்படி நிலவுக்கல்லாக உள்ளது. கருவறை முன்சுவர் பக்கச்சுவர்களாகத் திரும்பும் இடத்திலும் பக்கத்திற்கு ஒரு நான்முக அரைத்தூண் உள்ளது.

அரைத்தூண்களுக்கு இடைப்பட்டுள்ள சுவர்ப்பகுதிகள் தெற்கிலும் வடக்கிலும் 88 செ. மீ. அகலம், 2 மீ. உயரம், 5 செ. மீ. ஆழம் பெற்றுள்ளன. வெறுமையாக உள்ள இச்சுவர்ப்பகுதிகளை அணைத்துள்ள தூண்களின் மேலுள்ள போதிகைகள் வளைமுகக் கைகளால் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி. பக்கத்தூண் போதிகைகள் நாற்புறத்தும் கைகள் வீச, வாயில் தூண் போதிகைகள் இருபுறக் கைகளை மட்டுமே காட்டியுள்ளன. அவற்றின் மேற்கைகள் கீழ்க்கைகளைவிடப் பெரியவை. நன்கு வடிவமைக்கப்பட்ட கபோதத்தில் கூடுகள் இல்லை. ஆனால், அதன் தென்பகுதியில் கோணப்பட்டத்திற்கான ஒதுக்கீடு உள்ளது. கபோதத்திற்கு மேலே பூமிதேசத்திற்கான இடமும் அதன் பிரதிமுகங்களுக்கான செவ்வகக் கல்துண்டுகளும் இடம்பெற்றுள்ளன.

மேற்குக் கருவறையின் தாங்குதளமும் கூரையுறுப்புகளும் மேற்குச்சுவர் முழுவதையும் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்குச்சுவர், முகப்பைத் தொடும் இடத்துள்ள சீரமைக்கப்படாத நான்முக அரைத்தூண் மேல் இருக்கும் போதிகை வளைமுகக் கையால் உத்திரம் தாங்குகிறது. 1. 92 மீ. உயரம், கிழக்கு மேற்காக 65 செ. மீ. அகலம், தென்வடலாக 2. 19 மீ. நீளம் பெற்றுள்ள அரைவட்ட அமைப்பிலான கருவறையின் தரை, கூரை ஆகியவை ஓரளவிற்குச் சீராக்கப்பட்டுள்ள நிலையில் வெறுமையாக உள்ளன. சுவர் பாறைப்பிளப்பு நிலையிலேயே உள்ளது.

கிழக்குக் கருவறை

மண்டபக் கிழக்குச் சுவரின் நடுவில் சுவரிலிருந்து வடக்கில் 20 செ. மீ. அளவும் தெற்கில் 19 செ. மீ. அளவும் மண்டபத்திற்குள்

பிதுக்கமாய் அமையுமாறு அகழ்ப்பட்டுள்ள கிழக்குக் கருவறையின் முன்சுவரும் 65 செ. மீ. உயரப் பாதபந்தத் தாங்கு தளம் கொண்டுள்ளது. உறுப்பு வேறுபாடற்ற இரு நான்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள கருவறை வாயில் 1. 88 மீ. உயரம், 76 செ. மீ. அகலம் பெற்றுள்ளது. முன்சுவர், வடக்கிலும் தெற்கிலும் பக்கச்சுவர்களாகத் திரும்புமிடத் துள்ள நான்முக அரைத்தூண்களும் வாயில் அணைவுத்தூண் களும் போதிகை தாங்க, அவற்றின் வளைமுகக் கைகள் உத்திரம், வாஜனம், வெறுமையான வலபி ஆகியவற்றைச் சுமக்கின்றன. கபோதம் மேற்கிலுள்ளாற் போலவே அமைய, மேலே பூமிதேசம். கபோதத்தின் இரண்டு மூலைகளிலுமே கோணப்பட்ட ஒதுக்கீடுகள் காணப்படுகின்றன. வாயிலுக்கு முன்னுள்ள தாங்குதளப்பகுதியும் படிக்கட்டுகளும் சிதைக்கப் பட்டுள்ளன.

அரைத்தூண்களுக்கு இடைப்பட்டுள்ள சுவர்ப்பகுதிகள் 1. 99 மீ உயரம், 86 செ. மீ. அகலம், 5. செ. மீ. ஆழம் கொண்டு வெறுமையாக உள்ளன. தாங்குதளமும் கூரையுறுப்புகளும் மேற்கிலுள்ளாற் போலவே கிழக்குச்சுவர் முழுவதற்குமாய்ப் படர்ந்துள்ளன. கிழக்குச்சுவர், முகப்பைத் தொடுமிடத்துள்ள மெல்லிய நான்முக அரைத்தூண் சீரமைக்கப்படாத போதிகை யின் வளைமுகக் கையால் உத்திரம் தாங்குகிறது. அரைவட்ட மாக உள்ள கருவறை நன்கு பொளியப் பெறாமல் தென்வட லாக 1. 69 மீ. நீளம், கிழக்கு மேற்காக 85 செ. மீ. அகலம், 1. 92 மீ. உயரம் பெற்று வெறுமையாக உள்ளது. பின் சுவரையொட்டி 14 செ. மீ. உயரத்திற்குத் தளமொன்று காட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

வெள்ளறைக் குடைவரையிலிருந்து பத்துக் கல்வெட்டு கள்[7] படியெடுக்கப்பட்டுள்ளபோதும் அவை அனைத்துமே சிதைந்தநிலையில் இருப்பதால், முழுமையான தகவல்களைப் பெறக்கூடவில்லை. அவற்றுள், காலத்தால் முற்பட்ட இரண்டாம் நந்திவர்மரின் பதினொன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விசையநல்லூழான் பெயரைத் தருகிறது.[8] இப்பெரு மகன் நந்திவர்மரின் பட்டத்தாள்மங்கலச் செப்பேட்டில் ஆணத்தியாகக் குறிக்கப்பட்டுள்ளார். மன்னர் பெயர் அறிய

முடியாத அளவிற்குச் சிதைந்துள்ள மற்றொரு கல்வெட்டு, திருவெள்ளறைப் பெரிய ஸ்ரீகோயிலில் கண்ணனின் தேவி ருக்மணியின் திருமேனியை எழுந்தருளுவித்து அதற்கான படையல்களுக்குக் கொடையளிக்கப்பட்ட தகவலைத் தருகிறது.[9]

உத்தமசோழருடையதாகக் கருதப்படும் பரகேசரிவர்மரின் 8ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[10] திருவெள்ளறைப் பெரிய கோயிலில் இருந்த கிருஷ்ணருக்கும் ருக்மணி பிராட்டியாருக் கும் ஆனைமேல் துஞ்சிய தேவரான முதலாம் இராஜாதித்தரின் தேவி ஈராயிரன் தேவியம்மனார் அளித்த பொற்கொடையைத் தெரிவிக்கிறது. இக்கொடை கொண்டு இரண்டு உவா, அட்டமி, சங்கிராந்திப் போதுகளில் இத்திருமேனிகளுக்கு நாளொன்றுக்குத் திருமேனிக்கு நானாழி அரிசி அமுது படைக்கப்பட்டது. இவற்றின் முன் விளக்கேற்றவும் அம்மை பொற்கொடை தந்தார். அப்பொன் திருவெள்ளறைக் கல்லால் நிறுத்துத் தரப்பட்டது.

பெயர் அறியமுடியாத இராஜகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தகவல் பெறமுடியாத அளவிற்குச் சிதைந்துள்ளது.[11] மூன்று கல்வெட்டுகள் முதல் இராஜராஜர் காலத்தவை. மன்னரின் மெய்க்கீர்த்தியுடன் உள்ள சிதைந்த கல்வெட்டு, இறைவனின் திருவமுதுக்காக ஐம்பது கழஞ்சுப் பொன் கொடையளிக்கப்பட்டதாகக் கூறுகிறது.[12] ஆட்சி யாண்டை இழந்துள்ள இரண்டாம் கல்வெட்டு, கோயிலின் நாள் தேவைக்கான ஒதுக்கீடுகள் பற்றிப் பேசுகிறது.[13] இராஜ ராஜரின் பதின்முன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, அந்தணர் ஒருவரை உண்பிப்பதற்காகச் சங்கரப்பாடியாரால் கோயிலுக் குத் தரப்பட்ட பொற்கொடையைக் குறிக்கிறது.[14] வீரபாண்டி யன் தலைகொண்ட பரகேசரிவர்மரான ஆதித்த கரிகாலரின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பெரிய ஸ்ரீகோயில் இடம்பெற்றுள்ளது.[15]

இன்னாரென அடையாளப்படுத்த முடியாத பரகேசரி வர்மரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[16] பெரிய ஸ்ரீகோயில் இறைவனுக்குச் சித்திரைத் திங்கள் திருவோணத் திருநாள் அன்று படையலிடக் கொடை தரப்பட்ட தகவலைப்

பகிர்ந்து கொள்கிறது. மன்னர் பெயரையும் ஆட்சியாண்டையும் இழந்துள்ள கல்வெட்டு,[17] பெரிய ஸ்ரீகோயில் இறைவன் திருவாதிரைத் திருநாளில் முழுக்காட்டுப் பெற்று அமுது செய்திடவும் மார்கழி ஏகாதசி அன்று பால்போனகம், பெருந் திருவமுது கொள்ளவும் பரிசட்டத்திற்காகவும் வெள்ளறைப் பாரதாயன் துவிவேதி நாராயணன் கோவிந்தன் அளித்த நிலக் கொடைத் தகவலைப் பகிர்ந்து கொள்கிறது.

குடைவரையின் காலமும் பெரிய ஸ்ரீகோயிலும்

நிறைவடையாதுள்ள வெள்ளறைக் குடைவரையில் காணப்படும் கல்வெட்டுகள் குறிப்பிடும் 'பெரிய ஸ்ரீகோயில்' தற்போதுள்ள தாமரைக்கண்ணர் கோயிலாகும்.[18] பெரிய ஸ்ரீகோயில், பெருந்திருக்கோயில் என்னும் சொல்லாட்சிகள் பொதுவாக மாடக்கோயில்களைச் சுட்டவே கல்வெட்டுகளில் பயின்று வந்துள்ளன.[19] தாமரைக்கண்ணர் கோயில் எத்தனையோ திருப்பணிகளுக்குப் பிறகும் மாடக்கோயிலாகவே நிலைத்துள்ளமை இவ்வுண்மையை உணர்த்தும். 'மாடமதில் வெள்ளறையுள் கல்லறை மேல்'[20] என்ற பாடலடி இக்குடைவரையைக் குறிப்பதாகச் சில ஆய்வர்கள் சுட்டியுள்ளனர்.[21] 'கல்லறை' என்ற மங்கையாழ்வாரின் சொல், மாடக்கோயில் அமைப்பில் கீழ்த் தளமாக இடம்பெறும் வெற்றுத்தளத்தையே குறிக்கிறது என்பதை மாடக்கோயில்களின் கட்டுமான அமைப்பையும் தற்போதுள்ள தாமரைக்கண்ணர் விமான அமைப்பையும் தெளிவுற அறிந்தவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடும்.

இக்குடைவரை வழிபாட்டில் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. குடைவரையில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டதான இரண்டாம் நந்திவர்மரின் கல்வெட்டுக் கொண்டும் சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரையின் அமைப்பைப் பின்பற்றி எதிரெதிராகப் பக்கச்சுவர்க் கருவறைகள் இரண்டு உருவாகியிருக்கும் பாங்கு கொண்டும் இதன் காலத்தைப் பொ. கா. 8ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகக் கொள்ளலாம்.

குறிப்புகள்

1. ஆய்வு நாட்கள்: 24. 2. 1994, 31. 7. 2011, 21. 8. 2011. ஆய்விற்குத் துணைநின்ற இணைஆணையர் திரு. சி. ஜெயராமன்,

கோயில் கண்காணிப்பாளர் திரு. சீனிவாசரங்கன், ஊழியர் திரு. பாலாஜி, நண்பர்கள் சு. சீதாராமன், பால. பத்மநாபன், பி. லோகநாதன் ஆகியோருக்கு உளமார்ந்த நன்றி.

மங்கையாழ்வார், பெரியாழ்வார் ஆகியோரின் பாடல் பெற்ற தலமாக இக்குடைவரை விளங்குவதாகவும் இதுவே புண்டரீகாட்சர் ஆலயம் என்றும் சு இராச வேலுவும் அ. கி. சேஷாத்திரியும் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்கள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 2000, ப. 136.

2. இக்குடைவரைக் கோயில் பிற்காலத்தில் இணைக்கப்பட்ட கட்டடங்களின் அமைப்பினால் தன் சிறப்பை இழந்து காணப்படுவதாகக் கூறுகின்றனர் சு. இராச வேலும் அ. கி. சேஷாத்திரியும். மு. கு. நூல், ப. 136.

3. திருமால் போன்ற உருவம் செதுக்கப்பட்டு முற்றுப் பெறாமல் நிற்பதாகவும் பிற்காலப் பல்லவர் காலத் திற்குரிய உருவ அமைதியுடன் விளங்குவதாகவும் வெ. வேதாசலம் குறிப்பிடுகிறார். திருவெள்ளறை, தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1977, ப. 69.

4. 'இம்மண்டபத்தின் பின்புறச் சுவரில் கடவுளர் உருவங்கள் அமைக்கத் தனித்தனிக் கோட்டங்கள் காணப்படுகின்றன. இக்கோட்டத்தில் புடைப்புச் சிற்பங்களாக நான்முகன், சுப்ரமணியர், சூரியன், கணேசர், துர்க்கை போன்றவை காணப்படுகின்றன. இவை நின்றகோலத்தில் அமைந்தவை. இவற்றுள் ஒரு சில முற்றுப்பெறாமலும் உள்ளன' எனும் சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோரின் கூற்று முற்றிலும் பிழையானது. மு. கு. நூல், ப. 136.

5. ஒரு கருவறை பாதியளவே அகழப்பட்டுள்ளதாகவும் மற்றொரு கருவறை அகழப்படவே இல்லை என்றும் கூறுகிறார் கே. வி. சௌந்தரராஜன். Rock-cut Temple Styles, Somaiya Publications Pvt. Ltd., Bombay, 1998, ப. 74. இக்கருவறைகள் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் அமைந்தவை என்பதுடன் சிவன் கருவறையில் தாய்ப் பாறையிலேயே பீடத்துடன் கூடிய இலிங்கஉருவம்

இருப்பதாகவும் எழுதியுள்ளனர் சு. இராசவேலுவும் அ. கி. சேஷாத்திரியும். மு. கு. நூல், பக். 136-137.

6. எளிமையான அதிட்டானமாகக் கொள்கிறார் வெ. வேதாசலம் மு. கு. நூல், ப. 68.

7. ARE 1905: 531-540. கல்வெட்டுகள் சிலவற்றின் பாடங்களை ஒப்பீட்டாய்வுக்காக அனுப்பி உதவிய முனைவர் கு. சுவாமிநாதனுக்கு உளமார்ந்த நன்றி உரியது.

8. ARE 1905: 537.

9. ARE 1905: 540. இக்கல்வெட்டிற்குரிய மன்னரைத் தந்திவர்மராகக் கொள்கிறார் வெ. வேதாசலம். மு. கு. நூல் ப. 69.

10. SII 3: 132.

11. SII 13: 5. இக்கல்வெட்டிற்குரிய மன்னரை முதலாம் ஆதித்தராகக் கொள்கிறார் வெ. வேதாசலம். மு. கு. நூல், ப. 69.

12. ARE 1905: 531.

13. ARE 1905: 533.

14. ARE 1938: 538.

15. ARE1905: 536.

16. SII 19: 364. இக்கல்வெட்டிற்குரிய மன்னரை விஜயாலயராகக் கொள்கிறார் வெ. வேதாசலம். மு. கு. நூல், ப. 69.

17. ARE 1905: 539.

18. கோயில் படிப்படியாகக் குடைவரையிலிருந்து மாறியிருக்க வேண்டும் என்கிறார் வெ. வேதாசலம், மு. கு. நூல், ப. 75.

19. ARE 1925: 204, 208, 212. கோ. வேணிதேவி, இரா. கலைக்கோவன், மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2011, ப. 16.

20 மங்கையாழ்வார், பெரிய மடல், அடி 118.

21. சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி, மு. கு. நூல், ப. 136.

3. குடக்கூத்து

இரா. கலைக்கோவன்

பழந்தமிழர் கலைவடிவங்களை நன்கு இனங்காட்டும் இலக்கியம் சிலப்பதிகாரம். அரங்கேற்றுகாதை, கானல்வரி, ஊர் காண்காதை, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, நடுகற்காதை எனச் சிலம்பின் பல காதைகளில் ஆடற்கலைச் செய்திகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

சிலம்பில் குடக்கூத்து

'பதினோராடலும் பாட்டுங் கொட்டும் விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து' அரங்கேற்றம் நிகழ்த்திய மாதவி வழியே பதிவாகும் பதினொரு வகை ஆடல்களைக் கடலாடுகாதையே விளங்க உரைக்கிறது. நின்றாடல், வீழ்ந்தாடல் என்று இரண்டு நிலைகளில் ஆடப்பட்ட இவ்வாடல் வடிவங்களுள் குடக் கூத்து நின்றாடல் வகையைச் சேர்ந்தது. 'வாணன் பேரூர் மறுகிடை நடந்து நீணிலமளந்தோன் ஆடிய குடமும்' எனும் சிலம்பின் அடிகள், குடக்கூத்து நிகழ்ந்த இடத்தையும் நிகழ்த்தியவர் பெயரையும் தருகின்றன.

கூத்தின் பின்னணி

வாணன் என்னும் அசுரன் தன் மகள் உழை கார்ணமாகக் காமன் மகன் அநிருத்தனைப் பிடித்து, 'சோ' என்னும் தன் தலைநகரில் சிறை வைக்கிறார்.[1] நெடிய இந்நானிலத்தைத் தம் திருவடிகளால் அளந்த திருமால், சிறைப்பட்ட அநிருத்தனை மீட்பதற்காகச் சோநகர வீதிகளில் குடங்களைக் கொண்டு நிகழ்த்திய திருக்கூத்தே குடக்கூத்து. இக்கூத்தை, 'குடத்தை எடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல எங்கோவே' என்று கொண்டாடுகிறார் ஆண்டாள்.[2] 'குடமாடு கூத்தா' என்றழைக்கும் பெரியாழ்வாரும் 'குடங்கள் எடுத்தேறவிட்டுக் கூத்தாட வல்ல எம் கோவே' என்று பல குடங்களுடன் கண்ணன் கூத்தாடியதைப் பதிவு செய்துள்ளார்.[3] விநோதக்கூத்து வகையைச் சேர்ந்த இதன் உறுப்புகள் ஐந்தென்பர்.[4]

குடக்கூத்தும் கோயிற் சிற்பங்களும்

சிலப்பதிகாரம் அடையாளம் காட்டும் பதினோராடல்களில் இக்குடக்கூத்தே தமிழ்ச் சமூகத்தால் போற்றிக் கொண்டா

டப்பட்ட கலைவடிவமாகத் திகழ்ந்தது என்பதைத் தமிழ் நாட்டுக் கோயில்களில் பரவலாகக் கிடைக்கும் குடக்கூத்துச் சிற்பங்களைக் கொண்டு அறியமுடிகிறது. பிற்பல்லவர் காலந் தொட்டுப் பிற்சோழர் காலம்வரை குடக்கூத்துச் சிற்பங்களைக் கோயில்களில் காணமுடிகிறது என்றாலும், அவை மிகுதியாக வெளிப்பட்டிருப்பது முற்சோழர் கட்டுமானங்களில்தான்.

கண்ணன் ஆடிய கூத்து

கண்ணன் ஆடிய கூத்தாக அபிதான சிந்தாமணி முன் னிருத்தும்[5] இக்குடக்கூத்தைக் கண்ணன் நிகழ்த்துமாறு போல வும் மானுடர் ஆடுமாறு போலவும் தமிழ்நாட்டுக் கோயில்களில் காணக்கிடைக்கும் முப்பத்தாறு சிற்பங்களை டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வர்கள் கள ஆய்வு களில் கண்டறிந்துள்ளனர்.[6] இச்சிற்பங்களின் ஒப்பீட்டாய்வு சிற்பிகளின் கலையுணர்வு, வரலாற்றுநோக்கு, கற்பனையாற்றல் காட்டுவதுடன், பிற்பல்லவர், முற்சோழர் காலத்தில் பரவலாக நிகழ்த்தப்பட்ட கலைவடிவங்களுள் ஒன்றாய்க் குடக்கூத்து திகழ்ந்ததையும் வெளிப்படுத்துகிறது.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், வேலூர், சிவகங்கை, அரியலூர், தருமபுரி ஆகிய ஏழு மாவட்டங்களில்[7] பல்லவர், பாண்டியர், முற்சோழர், பழுவேட்டரையர், நுளம்பர் காலப் பதிவுகளாகக் கிடைக்கும் குடக்கூத்துச் சிற்பங்களுள், அதன் இலக்கணப்படி நின்றாடல் நிலையில் முப்பதும் அமர்ந் தாடல் நிலையில் ஆறும் உள்ளன. அமர்ந்தாடும் ஆறு சிற்பங் களில், கண்ணன் பல குடங்களுடன் ஆடுமாறு போலக் காட்சி தரும் கருடாசனப் பதிவு விழுப்புரம் மாவட்டம் கிராமம் சிவ லோகநாதர் கோயில் கண்டபாதத்தில் செதுக்கப்பட்டுள்ளது. பல குடங்களுடன் கூத்து நிகழ்த்தும் கண்ணனைத் தமிழ் நாட்டளவில் இங்கு மட்டுமே காணமுடிகிறது. இதே கருடா சனத்தில் ஒரு குடம் ஏந்திக் கூத்திடும் பூதம் தவத்துறை சப்தரிஷீசுவரர் கோயில் முகமண்டபத் தெற்கு வலபியில் காட்சி தர, சிவலோகநாதர், வடவாயில் ஸ்ரீகோயில், திருத்தொண்டீசு வரம், திருமூலநாதர் வலபிப் பூதங்கள் குத்துக்கால் வைத்துக் குடக்கூத்து நிகழ்த்துகின்றன.

குடம்

ஆடலுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் குடம் பெரும்பாலான சிற்பங்களில் வாய், கழுத்து, உடல் என மூன்று பிரிவுகளாய் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. குடத்தின் உடற்பகுதி பெரும்பாலும் உருண்டையாகவும் ஒன்றிரண்டில் நீள்உருளையாகவும் காட்சிதர, வாய்ப்பகுதி பெரும்பாலும் இயல்பான அளவிலும் சிலவற்றில் அகலமாகவும் உள்ளது மிகுதியான வேறுபாட்டைக் கழுத்துப்பகுதியிலேயே காணமுடிகிறது. சிறியதாய், நீண்டதாய், அகன்றதாய், ஒன்றிரண்டில் அறவே இல்லாதது போலவும் காட்டப்பட்டிருக்கும் கழுத்துப்பகுதியே குடத்தின் அமைப்பை வடிவமைப்பதாகக் கூறலாம்.

கூத்தில் குடத்தின் நிலை

குடத்தை ஏந்தியிருக்கும் கை வலம், இடம் எதுவாக இருந்தபோதும் மூன்று நிலைகளிலேயே காட்டப்பட்டுள்ளது. தோளுக்கு இணையான நீட்டலாகவும் தோள் அளவிலிருந்து சற்றே இறக்கமாகவும் அல்லது உயர்த்தலாகவும் காட்டப்பட்டிருக்கும் கையில், குடம் நிற்கும் இடமும் சிற்பத்திற்குச் சிற்பம் மாறுபட்டுள்ளது. தோளில், கையின் மேற்பகுதியில் அல்லது முழங்கை மீது அமரும் குடம், கையின் மேற்பகுதியில்கூட மேலே, இடையில், முழங்கை அருகே என மூன்று நிலைகளில் காட்சிதருகிறது. திருமால்பூரில் மட்டும் மணிக்கட்டருகே குடத்தைக் காணமுடிகிறது. குடமேந்திய கையின் நிலையும் குடத்தின் இருப்பும் ஆடுபவரின் காலமைப்பு, குடமேந்தாத கையின் அசைவு, தலைச்சாய்வு, முகத்திருப்பம் உடல்நிலை எனும் ஐந்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருப்பதைச் சிற்பக்காட்சிகள் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

கூத்து நிகழ்த்து முறை

இக்குடக்கூத்து உலோகத்தாலும் மண்ணாலும் ஆன குடங்களைக் கொண்டு ஆடப்பட்டதாகச் சிலம்பின் உரை தெரிவிக்கிறதே தவிர, குடங்கள் உடலின் எப்பகுதியில் கொள்ளப்பட்டன, குடங்களைக் கையிலோ, உடலின் பிற பகுதிகளிலோ, மேலும் கீழுமாக உருட்டி இக்கூத்து நிகழ்த்தப்

பட்டதா, ஆடும் காலம் முழுவதும் குடங்கள் உடலோடு ஒட்டியிருந்தனவா அல்லது தூக்கி எறியப்பட்டு மீண்டும் கொள்ளப்பட்டனவா என்பதற்கான விளக்கங்களை உரைச் செய்திகளில் பார்க்கமுடியவில்லை. இக்கூத்து எவ்வாறு நிகழ்ந் திருக்கமுடியும் என்பதைத் திருக்கோயில்களில் செதுக்கப்பட் டிருக்கும் சிற்பங்களின் ஒப்பீட்டாய்வே கண்முன் காட்சியாய்ப் படம்பிடிக்கிறது.

ஐயாறு சுற்றுமாளிகைத் தூண் ஒன்றில் இடம்பெற்றிருக் கும் குடக்கூத்துச் சிற்பத்தில், குடம், ஆடுநரின் கைமீது இல்லா மல், உயர்த்தி எறியப்பட்டுக் கைக்கு மீளும் நிலையில் காட்டப் பட்டுள்ளமை கருத்தைக் கவர்கிறது. கிராமம் சிற்பம் இதற்கு ஒத்திசைவாய் ஆடுநரை கருடாசனத்தில் காட்டுவதோடு, குடங் களை இரண்டு கால்களிலும் கைகளிலும் தாங்கியுள்ளாற் போல் பதிவுசெய்திருப்பதும் கருதத்தக்கது. ஓர் ஆட்ட நிகழ் வின் பல்வேறு நிலைகளைப் படம்பிடித்திருக்கும் காட்சியாக இதைக் கொள்ளமுடியும். இவற்றின் வழிக் குடங்கள் மேலும் கீழுமாக உருட்டியும் எறிந்து கொள்ளப்பட்டுமே இக்கூத்து நிகழ்த்தப்பட்டதாகக் கருதலாம். திருமால்பூர் கோனார்கோயில் கூத்தர் இருகைகளிலும் குடமேந்தியிருப்பது இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும்.

சிற்பங்களின் இடஅமைவு

ஆய்வுக்குக் கொள்ளப்பட்டிருக்கும் 36 சிற்பங்களும் கோயில் கட்டுமானத்தின் பல்வேறு உறுப்புகளில் செதுக்கப்பட்டுள் ளன. கண்டபாதத்தில் எட்டும் தூண்சதுரம், மகரதோரணம் ஆகியவற்றில் இடத்திற்கு ஐந்தும் கபோதக்கூடு, வேதிபாதம், தூண்தொங்கல் இவற்றில் இடத்திற்கு மூன்றும் வலபியில் ஆறும் பஞ்சரகிரீவம், தூண் வளையம் இவற்றில் இடத்திற்கு ஒன்றும் என 35 சிற்பங்கள் அமைய, கண்டராதித்தக் குடக் கூத்து, பலகைச் சிற்பமாகப் பொருந்தாத இடத்தில் பொருத்தப் பட்டுள்ளது. கோட்டங்களைச் சமயஞ் சார்ந்த இறைவடிவங் களுக்கு ஒதுக்கிய சிற்பிகள் கட்டுமானத்தின் பிறபகுதிகளைச் சமூகப் படப்பிடிப்புகளுக்குக் களமாக்கிக் கொண்டமை குடக் கூத்துச் சிற்பங்களின் இடஅமைவு நோக்கியும் உணரப்படும்.

ஆடியவர்

குடக்கூத்து பெரும்பாலும் ஆடவர்களால் நிகழ்த்தப்பட்டமையை 36இல் 27 ஆடவர் சிற்பங்களாக அமைந்துள்ளமை கொண்டு தெளியலாம். நான்கு சிற்பங்கள் இக்கூத்தைக் கூத்திகளும் நிகழ்த்தியமை காட்ட, இது சிவபெருமானின் பூதப் படையாலும் கொள்ளப்பட்ட கூத்து என்பதை நிறுவுமாறு 5 கோயில்களின் வலபிச்சிற்பங்கள் அமைந்துள்ளன. குடக்கூத்து பெரும்பாலும் இசையற்ற கூத்தாகவே நிகழ்த்தப்பட்டமை சுட்டுமாறு போல 27 சிற்பங்கள் கூத்தர் அல்லது கூத்தியை மட்டுமே படம்பிடிக்க, 9 சிற்பங்களில் மட்டுமே இசைக்கலைஞர்களை உடன்கூட்டமாகக் காணமுடிகிறது. இத்தகு உடன் கூட்டச் சிற்பங்களுள் இசைக்கலைஞரும் ஆடல்நிலையில் உள்ளமையைச் சில இடங்களில் காணமுடிந்தாலும் எறும்பியூர் இணையின் ஒருங்கிணைவும் ஆடற்கோலமும் இணையற்ற பதிவுகளாய்ப் பொலிகின்றன.

சமன்நிலை

குடக்கூத்து, பிற கூத்துகள் போல் அல்லாமல் உடலின் சமன்நிலையை அடிப்படையாகக் கொண்டு, தாங்கியிருக்கும் குடம் கீழே விழுந்து விடாமல், அதே போழ்து அசைவுகளுக்குக் குறைவில்லாமலும் உரிய அவிநயங்களோடும் நிகழ்த்தப்பட்ட தால் கை, கால், உடல் மூன்றும் திறம்பட ஒன்றிணைக்கப்பட்ட நிலையில் அமைந்தமையைச் சிற்பங்கள் நன்கு விளக்குகின்றன. 36 கூத்தர்களில் 20 பேர் குடத்தை வலக்கையில் தாங்கி ஆட, 13 கூத்தர்கள் அதை இடக்கைக்கு மாற்றியுள்ளனர். திருமால்பூர் கூத்தர் இருகைகளிலும் குடமேந்த, கிராமம் கோயில் கூத்தர் வலக்கை, இடக்கை, கால்கள் என அனைத்திடங்களிலும் குடங் கொண்டாடிப் புதிய காட்சி படைத்துள்ளார். சத்திமுற்றத்துப் பெண்மணி இந்நாளைய கரகம் போல் குடங்களைத் தலையில் அடுக்கி ஆடும் கோலம் குடக்கூத்து கரகமாக மாறிய காலப் பின்னணியில் அமைந்ததாகலாம்.

குடமேந்திய கையமைவு

பெரும்பாலான கூத்தர்களின் குடமேந்திய கை, முழங்கை அருகே மடிந்து விரல்கள் விரிந்த அல்லது சற்றே குவிந்தநிலை

யில் கீழிறக்கப்பட்டுள்ளது. சில சிற்பங்களில் இந்தக் கையின் விரல்கள் வயிற்றருகே காணப்படும் அளவிற்கு முழங்கை மடக்கம் அமைந்திருப்பினும் பெரும்பாலான சிற்பங்களில் விரல்கள் மார்பருகே மடங்கி அல்லது நீண்டிருப்பதையே காணமுடிகிறது மிகச் சிலவற்றில் இந்த விரல்கள் இடுப்பருகே காட்டப்பட்டுள்ளமையும் ஒன்றிரண்டில் அவை தொடையளவு தொய்ந்தும் முழங்காலின் மேல் உள்ளமையையும் பார்க்கமுடிவதால் ஆட்டத்திற்கேற்ப, குடமேந்திய கை மேலும் கீழுமாக ஏற்ற, இறக்கமான நிலைகளிலும் அமைந்தமையை அறியமுடிகிறது. உலகபுரக் கூத்தர் குடக்கையை மடித்துக் குடமொட்டி நிறுத்தி உள்ளமையும் ஆட்டத்தின் ஒரு நிலையாகலாம்.

குடமேந்தாக் கையின் அமைவு

குடக்கூத்தர்களின் குடமேந்தாத கையின் அமைப்பும் ஆட்டத்தின் சமன்நிலையைத் தீர்மானிக்கிறது. அதை உறுதிப்படுத்துமாறு போல 22 சிற்பங்களில் குடமேந்தாத கை நெகிழ் கையாகவும் 8இல் அர்த்தரேசிதமாகவும் 2இல் லதாவாகவும் அமைய, 3 சிற்பங்கள் மட்டுமே மார்பருகே மடிந்து பதாக முத்திரை காட்டுகின்றன நெகிழ் கை, அர்த்தரேசிதம், லதா எனும் இம்மூன்று கையமைப்புகளுமே பரதரால் நிருத்தக்கைகளாகச் சுட்டப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது. இவை, உடலின் ஒருபுற அசைவுகளுக்கேற்ப, அதன் மறுபுறத்தைச் சமன்நிலையில் கட்டுப்படுத்த ஆடுநருக்கு உதவும் கையமைவுகளாகும். திருமால்பூரார் இருகைகளிலும் குடமேந்தியுள்ளார்.

கால்நிலை

கால்நிலைகளுள் பெரும்பாலன மண் சார்ந்தே அமைய, சிலவே விண் சார்ந்துள்ளன. 36 கூத்தர்களில் வலக்கால் பதினெழு வருக்குப் பார்சுவமாகவும் எண்மருக்கு அக்ரதலசஞ்சாரமாகவும் அமைய, இருவர் வலமுழங்காலை உயர்த்தி ஊர்த்வஜானுவாக்கியுள்ளனர். இடக்கால் 18 பேருக்குப் பார்சுவமாகவும் நால்வருக்கு அக்ரதலசஞ்சாரமாகவும் ஒருவருக்குத் திரயச்ரமாகவும் அமைய, மூவர் அதை ஊர்த்வஜானுவாக்கியுள்ளனர். ஒரு சிற்பத்தில் இடக்கால் சிதைந்துள்ளது. குத்தாலம், வெள்ளறை, சென்னம் பூண்டிக் கூத்தர்கள் கால்களை ஸ்வஸ்திகமாக்கிட, இருவர்

கருடாசனத்திலும் நால்வர் குத்துக்காலிட்டும் குடக்கூத்து நிகழ்த்துகின்றனர்.

தலைச்சாய்வு

எந்த ஓர் ஆடலிலும் தலையின் நிலை இன்றியமையாதது. அது பெரும்பாலும் ஆடலின் நிகழ்நிலைக்கேற்ப உடல் சமன் பாட்டைக் கருதியே அமைகிறது. கரணச்சிற்பங்களில் பரவலாகக் காணக்கூடிய தலைச்சாய்வுகளைக் குடக்கூத்துச் சிற்பங்களும் கொண்டுள்ளன. 17 கூத்தர்களின் தலை வலச்சாய்வில் அமைய, 12 பேர் அதை இடச்சாய்வில் கொண்டுள்ளனர். எழுவர் நேர்ப்பார்வையில் காட்சிதருகின்றனர். எச்சாய்வில் தலையிருந்தபோதும், பார்வையின் வீச்சு, சாய்விற்கான எதிர்நிலையில் மட்டும் அமையாமல் பல்நோக்குப் பார்வையாய் மேல், கீழ், இடை என மூன்று கோணங்களிலும் சுழன்றுள்ளமை ஆடல் இயக்கத்தின் சூழலுக்கேற்ப அமைந்துள்ளது.

ஆடை

ஒப்பனையில்லாமல் கூத்தில்லை. குடக்கூத்தர்களின் ஆடை, அணிகலன்கள் எளிமையானவையாக இருந்தபோதும் வேறுபாடுகளைக் காணமுடிகிறது. கொற்றமங்கலம், சத்திமுற்றக் கூத்திகள் தவிர்த்த பிறஅனைத்துக் கூத்தர்களும் முழங்காலுக்கு மேல் வரையிலான இடுப்புச் சிற்றாடையே அணிந்துள்ளனர். எழுவர் சிற்றாடை மட்டும் கொள்ள, பதினைவர் அதனோடு இடைத் தொங்கல் ஒன்றும் கட்டியுள்ளனர். இது சிலருக்கு முக்கோண மடிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. நால்வர் சிற்றாடையோடு இடைக்கட்டு அணிந்துள்ளமை அவர்தம் பெருமிதம் காட்டுவதாகக் கொள்ளலாம். பட்டாடை கட்டியுள்ள இரண்டு கூத்திகளும் இடைக்கட்டோ, தொங்கலோ பெற்றுள்ளனர். தருமபுரியார் மரவுரிஆடை கொள்ள, நான்கு கூத்தர்களின் ஆடையமைப்பை அறியக்கூடவில்லை. இரண்டு சிற்பங்களில் சிற்றாடையின் கீழ்ப்பகுதி விசிறிமடிப்புக்களுடன் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளது.

தலையலங்காரம்

காண்பார் கண்முன் கூத்தரின் தோற்றத்தை நிலைநிறுத்துவதில் தலையலங்காரத்திற்குப் பெரும் பங்குண்டு. 36 கூத்தர்களில்

கண்டராதித்தக் கூத்தர் மட்டுமே தலையின் சடைகளை மகுட மாகக் கட்டியுள்ளார். ஏனையர் முடிகளைச் சுருட்டித் தலையின் பின்புறத்தோ, பக்கவாட்டிலோ பெருங்கொண்டையாக முடிந் துள்ளனர் சிலருக்கு இக்கொண்டை வலப்புறத்தும் சிலருக்கு இடப்புறத்துமாக அமைந்துள்ளது. சில கொண்டைகள் குந்தள அமைப்பிலும் சில தமிழம் போலவும் முடியப்பட்டுள்ளன. எறும்பியூர்ப் பஞ்சரக் கூத்தரின் தலைப்பட்டியிலிருந்து வலப் புறத்தே பறக்கும் துணிக்கீற்றுகள் அவரது ஆட்டத்தின் தன்மையைப் புலப்படுத்துவதோடு திருமுகப் பொலிவையும் பன்மடங்கு கூட்டுகின்றன. திருநாவலூர்க் கூத்தர் பல இறகுகள் பொருத்திய தலையலங்காரமும் திருமால்பூரார் தலைப்பாகை போன்ற முடியலங்காரமும் கொண்டுள்ளனர்.

அணிகள்

பெரும்பாலான கூத்தர்கள் கைவளைகளும் சிலர் கை வளைகளுடன் கடகவளைகளும் அணிந்துள்ளனர். கால்களில் சதங்கை, சிலம்பு, தாள்செறி ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றோ, இரண்டோ பெற்றவர்களே மிகுதி. ஒரு சிலர் வெறுங் காலின ராய் ஆடுவதையும் காணமுடிகிறது. சத்திமுற்றப் பெண் முத்து மாலையும் தருமபுரி, பழுவூர், பெருமுடிக் கூத்தர்கள் சவடியும் கண்டராதித்தம், திருமால்பூர், வெள்ளறைக் கூத்தர்கள் சரப் பளியும் அணிந்துள்ளனர். தருமபுரி, தவத்துறைக் கூத்தர்கள் அருமையான நெற்றிப்பட்டம் கொள்ள, கண்டராதித்தம், தஞ்சாவூர் உள்ளிட்ட கூத்தர் சிலர் உதரபந்தம் பெற்றுள்ளனர். சன்னவீரம் ஐவர் மார்பில் அமைய, ஸ்வர்ணவைகாக்ஷம் அணிந்தவர்களும் உள்ளனர். தஞ்சாவூர் வலபியார் முப்புரிநூலி னர். செவிகளில் குதம்பை அணிந்தவர்கள் ஒன்பதின்மராய்க் காட்சிதர, பதின்மர் பனையோலைக் குண்டலங்கள் பெற, தருமபுரியில் பூட்டுக்குண்டலமும் பிறஇடங்களில் இனங்காண முடியாத செவியணியும் காணப்படுகிறது. ஒரு சிலர் அணி கலன் ஏதுமின்றியே குடக்கூத்து நிகழ்த்துகின்றனர்.

இசைக்குழு

36 கூத்தர்களில் இசைக்கலைஞர்கள் கொண்டுள்ளவர் ஒன்பதின்மரே. இடக்கை, மத்தளம், உடுக்கை, ஒருமுக முழவு

முதலிய தோல்கருவிகளும் செண்டுதாளமும் குடக்கூத்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை காணமுடிகிறது. பொதுவாக ஆடல் சிற்பங்களில் மிகுதியும் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவி யாகப் பதிவாகியிருக்கும் புல்லாங்குழல், ஒரு குடக்கூத்துச் சிற்பத்திலும் இடம்பெறாமையும் நரம்புக்கருவிகளின் பயன் பாட்டைக் குடக்கூத்துக் கொள்ளாமையும் அக்கூத்து வலிய வீச்சுக்களுடன் அமைந்தமையினால் ஆகலாம். எறும்பியூர்க் கூத்தருக்குச் செண்டுதாள இசை தரும் கலைஞரும் ஆடலில் ஈடுபட்டுள்ளமை சிறப்பாகும்.

சென்னம்பூண்டிக் குடக்கூத்துச் சிற்பத்தில் கூத்தரின் இரு புறத்தும் பக்கத்திற்கொருவராக நிற்கும் ஆடவர்கள் தோளில் சாய்த்துப் பிடித்திருக்கும் பொருளை இன்னதென அடையாளப் படுத்தக்கூடவில்லை. இடப்புறத்துள்ளவரின் இடக்கை அந்தப் பொருளைப் பிடித்திருக்க, வலக்கை, கூத்தைப் போற்றி மகிழு மாறு அமைந்துள்ளது. வலப்புறத்தார் வலக்கைப் பொருளைத் தோளில் சாய்த்து, இடக்கையை இடையருகே கொண்டுள்ளார்.

முடிவுரை

தமிழ்நாட்டுக் கோயில்களில் கண்டறியப்பட்ட 36 குடக் கூத்துச் சிற்பங்களின் ஆய்வு வழிச் சிலம்பு அறிமுகப்படுத்தும் பதினோராடல்களில் ஒன்று தமிழ்நாட்டுச் சமூகத்தில் முற் சோழர் காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கை அறியமுடிவ துடன், அக்கூத்தின் நிகழ்முறை, அதை நிகழ்த்திக் காட்டிய கலைஞர்களின் புனைவு, கண்ணன் தொடர்பான தொன்மங் கள் மக்களிடையே பரவியிருந்த வகைமை, தமிழ்நாட்டுச் சிற்பிகள் கலைவடிவங்களுக்கு அளித்த சிறப்பிடம், குடக்கூத் திற்குப் பயன்பட்ட இசைக்கருவிகள் ஆகியவற்றையும் தெரிந் துணர இயல்கிறது. கண்ணனோடு தொடர்புடைய இக்கூத்துத் தமிழ்நாட்டின் சைவக்கோயில்களிலேயே பெருமளவிற்காய்ப் படம்பிடிக்கப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்க சிறப்புக் கூறாகும்.

குறிப்புகள்

1. இத்தொன்மம் பற்றிய விரிவான தரவுகளுக்குக் காண்க: ஸ்ரீகூர்ம புராணம், வாசு பிரசுரம், சென்னை, 1969, பக். 244-

247; ஸ்ரீவிஷ்ணு புராணம், பிரேமா பிரசுரம், சென்னை, 1969, பக். 413-418.

2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திரு மன்றப் பதிப்பு, 1981, ப. 141.

3. மேலது, பக். 50, 44. கண்ணன் வாணனை அழித்தமை குறித்துப் பாடும் பெரியாழ்வார் 'மாயப் பொருபடை வாணனை ஆயிரந்தோளும் பொழி குருதிபாய சுழற்றிய ஆழிவல்லான்' என்கிறார். மேலது, ப. 3.

4. சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985, ப. 191.

5. அபிதான சிந்தாமணி மூன்று இடங்களில் இத்தொன் மம் பற்றிய தரவுகளைத் தருகிற்து. அநிருத்தனைக் கண்ண னின் பெயரனாகவும் பிரத்யும்நனின் மகனாகவும் சுட்டி பாணாசுரன் மகளை உஷை என்று ஓரிடத்தில் (ப. 55) குறிப்பிடும் இந்நூல், மற்றோர் இடத்தில் (ப. 448) கண் ணன் அநிருத்தன் பொருட்டு பாணாசுரனை கர்வபங்கம் செய்த தகவலைப் பகிர்ந்துகொள்கிறது. முற்பிறப்பில் மன்மதனாக இருந்தவனே மறுபிறப்பில் கண்ணனுக்கும் ருக்மணிக்கும் பிரத்யும்நனாகப் பிறந்ததாகப் பிறிதோ ரிடத்தில் (ப. 1122) பதிவுசெய்யும் இந்நூல் பாணாசுரனை வாணாசுரன் என்றும் குறிப்பிடுகிறது. சிலம்பின் உரை சோ என்ற பெயரில் சுட்டும் பாணாசுரன் தலைநகரை இந்நூல் சோணிதபுரம் என்றழைக்கிறது.

6. இரா. கலைக்கோவன், குடக்கூத்தும் குழு நடனமும், தினமணி கதிர், 19. 3. 1989, பக். 4-6; சிலம்பின் வரிகளுக்குச் சிற்பச் சான்றுகள், தினமணிகதிர், 19. 8. 1990, பக். 28-29. மு. வீராசாமி, சோழமண்டலக் குடக்கூத்து, தினமணி கதிர், 30. 9. 1990. திருமால்பூர், பேரங்கியூர், திருநாவலூர், கீழூர்க் கோயில்களின் குடக்கூத்துச் சிற்பங்களை அறியச் செய்த ஆய்வாளர்கள் திரு. சு. சீதாராமன், செல்வி க. இலட்சுமி இருவரும் நன்றிக்குரியவர்கள்.

7. தஞ்சாவூர்: ஐயாறப்பர் கோயில் - ஐயாறு, ஆபத்சகா யேசுவரர் கோயில் - ஆடுதுறை, சடையாரிக்கோயில் -

திருச்சென்னம்பூண்டி, சிவன்கோயில் - கூகூர், உமா மகேசுவரர் கோயில் - கோனேரிராஜபுரம், சொன்ன வாறு அறிவார் கோயில் - குத்தாலம், சக்திவனேசுவரர் கோயில் - திருச்சத்திமுற்றம், இராஜராஜீசுவரம் - தஞ்சாவூர், கோடீசுவரர் - திருக்கோடிக்கா, கல்யாணசுந்தரேசுவரர் - நல்லூர்.

திருச்சிராப்பள்ளி: விஷமங்களேசுவரர் கோயில் - துடையூர், சப்தரிஷீசுவரர் கோயில் - தவத்துறை, விஷ்ணு கோயில் - கொற்றமங்கலம், பெருமுடிஈசுவரர் கோயில் - பெருமுடி, அமலீசுவரர் கோயில் - கோபுரப்பட்டி, தாமரைக்கண்ணர் கோயில் - திருவெள்ளறை, எறும்பீசுவரம் - எறும்பியூர். எறும்பியூர்க் கோயிலில் தமிழ்நாட்டில் வேறெங்கும் காணவியலாக் காட்சியாக நான்கு குடைக்கூத்துச் சிற்பங்கள் கண்களுக்கு விருந்தாகின்றன.

பிறமாவட்டங்கள்: விழுப்புரம்: சிவன்கோயில் - உலகபுரம், சிவலோகநாதர் கோயில் - கிராமம், திருமூலநாதர் கோயில் - பேரங்கியூர், திருத்தொண்டீசுவரம் - திருநாம நல்லூர், வீரட்டானேசுவரம் - கீழையூர். வேலூர்: வில்வநாதேசுவரர் கோயில் - திருவல்லம், கோனார்கோயில் - திருமால்பூர். சிவகங்கை: திருத்தளிநாதர் கோயில் - திருப்புத்தூர். அரியலூர்: அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருகம் - கீழையூர், ஆலந்துறையார் கோயில் - சிறு பழுவூர், சிவன் கோயில் - கண்டராதித்தம். தருமபுரி: மல்லிகார்ச்சுனேசுவரர் கோயில் - தருமபுரி.

---

4. தவத்துறைக் கல்வெட்டுகள் - 1

மு. நளினி, இரா. கலைக்கோவன்

திருச்சிராப்பள்ளி மாவட்டத் தவத்துறை சப்தரிஷீசுவரர் கோயிலிலிருந்து இந்திய அரசின் கல்வெட்டுத்துறை 72 கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது.[1] அவற்றுள் 27 கல்வெட்டுகளின் பாடங்கள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதிகளில் வெளியாகியுள்ளன.[2] எஞ்சிய 45 கல்வெட்டுகளின் பாடங்களைப் படிக்க மேற்கொண்ட முயற்சியில்[3] கோயிலின் பல பகுதிகளிலிருந்து 74 புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன.[4]

இந்த 146 கல்வெட்டுகளுள் மூன்று பல்லவ மரபின. ஒன்று வரகுண பாண்டியரின் பதிவாக உள்ளது. 62 கல்வெட்டுகள் சோழர்கள் காலத்தில் வெட்டப்பட்டுள்ளன. ஐந்து கல்வெட்டுகள் இரண்டாம் பாண்டிய அரசுக் காலத்திலும் ஐந்து கல்வெட்டுகள் விஜயநகர அரசர்கள் காலத்திலும் ஒன்று ஓய்சள அரசர் வீரராமநாதர் ஆட்சியின்போதும் பொறிக்கப்பட்டுள்ளன. 69 கல்வெட்டுகள் மன்னர் பெயர் இல்லாதுள்ள போதும் அவற்றுள் 50 விழுக்காடு சோழர் கால எழுத்தமைதியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மன்னர் பெயர் சுட்டும் சோழர் கல்வெட்டுகளில் முதலாம் பராந்தகர் கல்வெட்டுகளே எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளன. சோழ அரசர்கள் அடுத்தடுத்து ஏற்ற பரகேசரி, இராஜகேசரி என்னும் பெருமைப் பெயர்களில் முறையே 16, 8 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை உள்ளீடு, ஆட்சியாண்டு, எழுத்தமைவு கொண்டு இன்னாருடையன எனக் கொள்ளமுடிகிறது.[5]

பொ. கா. 9ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து பொறிக்கப்பட்டிருக்கும் இந்த 146 கல்வெட்டுகளும் அரும்பெரும் பதிவுகளாக அமைந்து தவத்துறைக் கோயிலின் 1000 ஆண்டுக் கால வரலாற்றை வெளிப்படுத்துவதன் வழி அக்கால அரசு, சமுதாயம், சமயம் தொடர்பான பயனுள்ள பல தரவுகளை முன்வைக்கின்றன.

மண்டலம், வளநாடு

தொண்டை மண்டலம், மலைநாடு, மழநாடு, கோனாடு ஆகிய பெருநிலப்பரப்புகள் இக்கோயில் கல்வெட்டுகளில்

சுட்டப்படுகின்றன. கோனாடே பின்னாளில் கடலடையா திலங்கை கொண்ட வளநாடாகவும் அறியப்பட்டது. காவிரி யின் வடகரையில் இருந்ததால் வடகரை மழநாடு என்றழைக் கப்பட்ட நிலப்பகுதி, முதலாம் இராஜராஜர் காலத்தில் இராஜாச்ரய வளநாடானது. இது பிற்சோழர் காலத்தே இராஜ ராஜ வளநாடாகப் பெயர் மாறியது.

முதலாம் இராஜராஜர் ஆட்சியின்போது புதிதாக உருவாக்கப்பட்ட பாண்டிகுலாசனி வளநாடு முதற் குலோத் துங்கர் காலத்தே அவர் தேவியின் பெயரால் தீனசிந்தாமணி வளநாடாகப் பெயர் மாற்றம் பெற்றுப் பாண்டியர் காலத்தில் பாண்டிகுலபதி வளநாடானது. இவற்றோடு, சத்ரியசிகாமணி வளநாடு, ஜயசிங்க குலகால வளநாடு, தியாகவல்லி வளநாடு, இராஜராஜப் பாண்டிநாடு ஆகியனவும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

நாடுகள்

தவத்துறைக் கோயில் கல்வெட்டுகளில் 24 நாடுகளின் பெயர்களைக் காணமுடிகிறது. பனையூர், மருகல் நாடுகள் சத்ரியசிகாமணி வளநாட்டில் இணைந்திருந்தன. சிறுவாயில் நாடு ஜயசிங்ககுலகால வளநாட்டின் கீழும் பொய்கை நாடு தியாகவல்லி வளநாட்டின் கீழும் இருந்தன. பல ஊர்களைப் பெற்றிருந்த கலார்க்கூற்றம்[6] இராஜாச்ரய வளநாட்டில் இணைந் திருந்தது. 12 ஊர்களைக் கொண்டிருந்த இடையாற்று நாடு பாண்டிகுலாசனி வளநாட்டின் கீழ் இருந்தது.[7] ஆறு ஊர்களை வெளிப்படுத்தும் வள்ளுவப்பாடிநாடு கோபாலர்களின் குடி யிருப்புகளைக் கொண்டிருந்தது.[8]

எயில்நாடு, புறக்கிளியூர்நாடு, மெய்வழிநாடு, திருவாலிநாடு, மீகோழைநாடு, செம்பிறைநாடு, ஆசிநாடு, மிழலைக்கூற்றம், தஞ்சாவூர்க்கூற்றம், குன்றக்கூற்றம், பாச்சில்கூற்றம், சேற்றூர்க் கூற்றம், சென்னிக்கூற்றம் ஆகியவற்றுடன் பிரம்மபுரி நல்லூர்க் கண்டம், நெற்குப்பைக்கண்டம், பெருவளநல்லூர்க் கண்டம், செம்புறைக்கண்டம் ஆகிய நான்கும் தவத்துறைக் கல்வெட்டு கள் வழி வெளிப்படும் பிற நாடுகளாம்.

ஊர்கள்

பல்வேறு பின்னொட்டுக்களை உடைய 143 ஊர்களின் பெயர்கள் இக்கோயில் கல்வெட்டுகளில் கிடைத்துள்ளன. சதுர்வேதிமங்கலம், மங்கலம் எனும் பின்னொட்டுக்களோடு அமைந்த பிராமணர் குடியிருப்புகளாக 17 ஊர்களின் பெயர்களைக் காணமுடிகிறது.[9] அவற்றுள் பதிபத்தமங்கலம் பகையறுத்துக்கொண்ட சோழநல்லூராகவும் மும்முடிச்சோழமங்கலம் செம்பியன் நெற்குப்பையாகவும் அறியப்பட்டன. நல்லிமங்கலம் சில கல்வெட்டுகளில் நன்னிமங்கலமாகவும் அழைக்கப்படுகிறது. புரம் என்ற பின்னொட்டோடு பராந்தகபுரம், உய்யக்கொண்டசோழபுரம், இராயபுரம் எனும் மூன்று ஊர்கள் உள்ளன. அவற்றுள் உய்யக்கொண்டசோழபுரம் பெருவளநல்லூர்க் கண்டத்தின் கீழ் இருந்தது. நல்லூர் எனும் பின்னொட்டுக் கொண்டு 7 ஊர்களின் பெயர்கள் அமைய,[10] குடி எனும் பின்னொட்டுடன் 18 ஊர்ப்பெயர்களைக் காணமுடிகிறது.[11] அவற்றுள் கொன்றைக்குடி வீரபாண்டிய சதுர்வேதிமங்கலம் எனும் பெயரையும் கொண்டிருந்தது. 53 ஊர்களின் பெயர்கள் பழங்குடியிருப்புகளாய் ஊர் என்ற பின்னொட்டுடன் வெளிப்பட,[12] 45 ஊர்கள் பல்வேறு பின்னொட்டுக்களைக் கொண்ட பெயர்களுடன் காட்சிதருகின்றன.[13] அவற்றுள் சூறொட்டை, கோபவநல்லூர் என்றும் அறியப்பட்டது. அன்பில், முத்தையில், மணக்கால், அலையூர், சோழமாதேவி ஆகிய ஊர்கள் மங்கலம் அல்லது சதுர்வேதிமங்கலம் எனும் பின்னொட்டுக்கள் கொள்ளாதபோதும் பிரமதேயங்களாக விளங்கின.

தவத்துறைக் கல்வெட்டுகள் வழி வெளிப்படும் 143 ஊர்களில் 70 விழுக்காடு ஊர்கள் இன்றளவும் அதே பெயர்களில் வழங்கி வருகின்றன. சில ஊர்கள் புதிய பெயர்களை ஏற்றும் பழம் பெயர் திரிந்தும் விளங்குவதால் நச்சியூர், நகர் வாழ்க்கை, பூவாழ் சாயங்காணம் முதலிய 20க்கும் மேற்பட்ட ஊர்களை அறிய முடியவில்லை. நகர்வாழ்க்கை, செல்லூர்வாழ்க்கை எனும் பெயர்கள் போலவே பனையூர்வாழ்க்கை, நந்திபுரவாழ்க்கை, கழுமலவாழ்க்கை என்ற பெயர்களிலும் ஊர்கள் இருந்தமையைப் பிற ஊர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[14]

இந்த ஊர்ப்பெயர் ஆய்வு இரண்டு உண்மைகளைக் கண் முன் நிறுத்துகின்றது. ஏறத்தாழ 50 விழுக்காடு ஊர்கள் பழங் குடியிருப்புகளைச் சுட்டும் ஊர், குடி எனும் பின்னொட்டு களில் அமைந்துள்ளமையும் அவற்றுள் பெரும்பான்மையன தவத்துறை சூழ்ந்திருந்தமையும் பொ. கா. 10-12ஆம் நூற்றாண்டள வில் இங்கு நிலவிய வெள்ளான்வகை ஊர்களின் பெருக்கத்தைக் காட்டுவதுடன், வேளாண் மரபின் நீடித்த வளர்ச்சியையும் சுட்டுகின்றன. தவத்துறையைச் சுற்றியிருந்த பிராமணர் குடி யிருப்புகள் இவ்வேளாண் ஊர்களில் நான்கில் ஒரு பங்கின வாகவே இருந்தமையுடன், சோழர் ஆட்சிக்காலத்தே புதிய குடி யிருப்பாக ஒரு பிராமண ஊர்கூட இப்பகுதியில் தோன்றாமை யையும் தவத்துறைக் கல்வெட்டுகள் தெளிவுசெய்வதுடன், வணிகர் குடியிருப்புகள் இங்கு அருகி இருந்தமையையும் வெளிப்படுத்துகின்றன.

தவத்துறை

நாவுக்கரசரின் பதிக அடிகளால் வரலாற்றுக்கு அறிமுக மாகும் தவத்துறை, கல்வெட்டுகளில் கண்காட்டத் தொடங்கிய காலம் முதல் வெள்ளான்வகை ஊராகவே தொடர்ந்து விளங்கியமையை இக்கோயில் வளாகத்திலிருந்து படியெடுக் கப்பட்டுள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. காவிரியின் வடகரையில் வளம் கொழிக்கும் ஊராக விளங்கும் தவத்துறை 16ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இடையாற்று நாட்டுட னேயே இணைக்கப்பட்டிருந்தது. வேங்கடபதிதேவமகாராயர் ஆட்சிக்காலக் கல்வெட்டு, இவ்வூர்ச் சென்னிக்கூற்றத்தின் கீழ் இருந்ததாகச் சுட்டியபோதும் அக்கூற்றம் இடையாற்று நாட்டின் உட்கிடையாகவே இருந்தமையையும் தெரிவிக்கிறது.

வளநாடுகள் உருவாக்கப்பட்ட காலத்தே தவத்துறையைக் கொண்டிருந்த இடையாற்றுநாடு பாண்டிகுலாசனி வளநாட் டில் இணைந்திருந்தது. இவ்வளநாட்டின் பெயர் முதலாம் குலோத்துங்கர் காலத்தே தீனசிந்தாமணி வளநாடாகப் பெயர் மாறி, இரண்டாம் இராஜராஜர் காலத்தே மீளவும் பாண்டி குலாசனி வளநாடானது. இதைத் தென்கரைப் பாண்டிகுலா சனி வளநாடாகவும் இரண்டு கல்வெட்டுகள் சுட்டுகின்றன.[15]

பாண்டியர் எழுச்சி பாண்டிகுலாசனி வளநாட்டைப் பாண்டி குலாதி வளநாடாக்கியபோதும், விருப்பாக்ஷராயரின் பொ. கா. 1497ஆம் ஆண்டுக் கல்வெட்டும் வேங்கடபதிதேவமகாராயரின் பொ கா 1596ஆம் ஆண்டுக் கல்வெட்டும் இவ்வளநாட்டைப் பாண்டிகுலாசனி வளநாடாகவே அழைத்து மகிழ்கின்றன.[16]

புதிய ஊராக்கங்கள்

தமிழ்நாடு முழுவதும் கிடைக்கும் சோழர் காலக் கல்வெட்டு கள் புதிய ஊராக்கங்கள் பற்றிய பல பயனுள்ள செய்திகளைப் பகிர்ந்துகொள்கின்றன. தவத்துறைக் கல்வெட்டுகள் வழி வெளிப் படும் புதிய ஊராக்கங்கள் அனைத்தும் பிற்சோழர் காலத்தும் இரண்டாம் பாண்டிய அரசுக் காலத்திலுமே நிகழ்ந்துள்ளன.

கோயில்களின் பல்வேறு தேவைகளுக்குக் கொடையளிப் பதற்காகக் கூற்றாருடையான் பெரியானான எதிரிலிசோழ மூவேந்த வேளான் எனும் பேராளர் பல ஊர்களிலிருந்து தாம் விலைக்குப் பெற்ற நிலத்தொகுதிகளை நான்கு புதிய ஊர்களாக அமைத்து அவற்றிற்கு வரிநீக்கம் செய்யுமாறு மன்னரிடம் பரிந்துரைக்கச் சேதிராயன் எனும் அரசு உயர் அலுவலரிடம் வேண்ட, அப்பரிந்துரை மூன்றாம் இராஜராஜர் ஆணை வழி நிறைவேற்றப்பட்டது

கண்டராதித்த சதுர்வேதிமங்கலத்தின் பிடாகையான செம்பியன்மாதேவிநல்லூரில் பெரியான் பெற்ற 16 வேலி 8 மா 3½ காணி நிலம் இராஜராஜன் கூற்றூர் என்ற பெயரில் புதிய ஊராக அறிவிக்கப்பட்டது. அது போலவே இருள்நீக்கிக் கொண்ட சதுர்வேதிமங்கலத்தோடு இணைந்து வரி செலுத்திய கற்குடி காரிகுடிச்சேரி, விண்ணமங்கலம் ஊர்களிலிருந்து பெறப் பட்ட 46½ வேலி 2½ மா நிலம் இராஜகம்பீரன் கூற்றூராக மாற்றப்பட்டது. கொற்றமங்கலத்து நிலம் 8¼ வேலி வளகூற்றூர் எனும் பெயரேற்க, பதிபத்தமங்கலமான பகையறுத்துக்கொண்ட சோழநல்லூர் நிலம் 54½ வேலி 3½ மா முந்திரிகையும் சாத்த மங்கலத்திலிருந்து வேறுபிரிந்த அலைவாய் நிலம் 1½ வேலியும் ஒன்றிணைக்கப்பட்டுக் குலோத்துங்கசோழன் கூற்றூர் எனும் பெயர் கொண்டன. இது போல் ஒரே மனிதரால் பல ஊர்களில் நிலத்தொகுதிகள் விலைக்குப் பெறப்பட்டு அவை அரசாணை

வழிப் புதிய ஊர்களாக அறிவிப்பும் வரி நீக்கமும் கொண்ட மையைச் சோழர் காலக் கல்வெட்டுகள் சிலவற்றால் அறிய முடிகிறது.[17]

மூன்றாம் இராஜராஜரின் 15ஆம் ஆட்சியாண்டின்போது கலார்க்கூற்றத்தைச் சேர்ந்த தூவேலிமங்கலத்திலிருந்து 7¾ வேலி 2 மா நிலம் இராஜராஜநல்லூர் என்ற பெயரால் தனி ஊராக்கப்பட்டுத் தவத்துறைக் கோயிலுக்கு மன்னரால் தேவதான இறையிலியாக வழங்கப்பட்டது.

வீரபாண்டியர் ஆட்சிக்காலத்தே அவரது உடன்கூட்ட அலுவலர்களுள் ஒருவர், 30 பட்டர்களைக் குடியிருத்துவதற் காகக் கொன்றைக்குடியை 600 பணத்துக்கு விலைக்குப் பெற்று வீரபாண்டிய சதுர்வேதிமங்கலம் என்னும் அகரமாக்கினார். ஊர்நிலம் 33 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு பட்டர்களுக்கும் ஊரிலிருந்த வரந்தரும் பெருமாள் கோயிலுக்குமாகத் தரப் பட்டதுடன், விலைக்காகவும் கொள்ளப்பட்டது.

ஊரவைகள்

தமிழ்நாட்டு ஊர்களை ஆட்சி செய்த சபை, ஊரார், நகரம் எனும் மூவகை நிருவாக அமைப்புகளைப் பற்றியும் தவத் துறைக் கல்வெட்டுகள் குறிப்பிட்டபோதும் சபை தொடர் பான கல்வெட்டுகளே எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளன. இரண்டு கல்வெட்டுகள் காவிதிக்குடி ஊரார் செய்த நில விற்பனை பற்றியும் ஒரு கல்வெட்டு பராந்தகபுரத்து நகரத்தார் மணிக்கிராமத்து வணிகர் ஒருவருக்கு நிலம் விற்றமை பற்றியும் குறிக்கின்றன. மூன்று நகரங்களைப் பற்றிய சுட்டல்களும் வணிகப் பெருமக்கள் குறித்த தனித்த பதிவுகளும் இருந்த போதும் தவத்துறைக் கல்வெட்டுகளில் நகரத்தார் ஆட்சி பற்றிய செய்திகள் விரிவான அளவில் இல்லை.

நாடுகளை நிருவகித்த நாட்டார் எனும் ஆட்சிக் குழு பற்றிய தரவுகளும் தவத்துறைக் கல்வெட்டுகளில் குறைவாகவே உள்ளன. சடையவர்மர் சுந்தரபாண்டியரின் 17ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு, பாண்டிகுலாசனி வளநாட்டு நாட்டாரும் வடகரை இராஜராஜ வளநாட்டு நாட்டாரும் தவத்துறை இறைவனின் படையல்கள், விழாக்கள், விளக்குகள், இறை

உலாவிற்கான திருவீதி ஆகியவற்றிற்காகத் தரப்பட்ட நிலத் துண்டுகள் சிலவற்றை இறையிலியாக்கியதாகக் கூறுவதுடன், நாட்டுக் கணக்குச் சோழமாதேவி உடையான் அறங்காத்தப் பிள்ளையையும் வெளிச்சப்படுத்துகிறது.

அதே மன்னரின் 3ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, விசைய பன்மர் திருநாமத்துக்காணியாக விலைக்குப் பெற்ற 4 மா நிலத்தின் வரிகளை அரசர் ஆணைக்கேற்ப இடையாற்று நாட்டு நாட்டார் நீக்கி, அதை நாட்டுடன் கூட்டி இறுப்பதாக ஆவண மளித்ததைத் தெரிவிக்கிறது. நாட்டவை உறுப்பினர் பெயர் களைத் தரும் இக்கல்வெட்டால், நாட்டுக்கணக்கு முத்தையில் உடையான் அறிமுகமாகிறார்.

கோயில் தேர்மண்டபச்சுவரில் கண்டறியப்பட்ட மூன்று கல்வெட்டுத் துண்டுகளைத் தொடர்புபடுத்தியபோது பொய்கை நாட்டு ஊர்களும் செம்புறைக்கண்டத்து ஊர்களும் வரியாகச் செலுத்தவேண்டிய நெல்அளவு பற்றிய ஆவணமாக அவை அமைந்திருப்பதை அறியமுடிந்தது. நாட்டார் ஆவணமாகக் கொள்ளத்தக்க இதில் தென்கோமாக்குடி, கலசப்பாடி, புல்லியக் குடி, சிறுசெம்பிறை எனப் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

சபை

பிராமணர் குடியிருப்புகளாய் அமைந்த ஊர்களைக் குட வோலை முறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபை நிருவகித்தது. பல்வேறு வாரியங்களை உள்ளடக்கியதாக இவ்வமைப்பு இருந்ததெனினும் தவத்துறைக் கல்வெட்டுகளில் ஸ்ரீகோயில் வாரியம் செய்தார் மட்டுமே இடம்பெற்றுள்ளனர். சபைச் செயற்பாடுகளின் பதிவுகளாகத் தவத்துறைக் கல்வெட்டுகளுள் பல அமைந்திருந்தபோதும் மிகச் சில கல்வெட்டுகளிலேயே சபை உறுப்பினர்கள் பலராய் இடம்பெற்றுள்ளனர். சபைப் பொதுவான நிலங்களை விற்றல், நிலங்களுக்கான வரியை நீக்கல், கோயில் சார்ந்த அறக் கட்டளைகளின் பொறுப்பேற்றல் எனப் பல்வேறு பணிகள் சார்ந்து சபை கூடி எடுத்த முடிவுகள் மத்யஸ்தர் என்றழைக் கப்பட்ட சபைக்கணக்கரால் ஆவணமாக எழுதப்பட்டன.

அலங்காரப்பிரியனான ஊர்ன், முன்னூற்றுவன், முன்னூற்று வன் நானூற்றுவனான உத்தமப்பிரியன் ஆகியோர் முறையே பவதத்தமங்கலம், மணக்கால், இடையாற்றுமங்கலம் ஆகிய பிராமணக் குடியிருப்புகளில் சபை மத்யஸ்தர்களாக இருந்த மையைச் சில சோழர் காலப் பதிவுகள் தெரிவிக்கின்றன. துண்டுக் கல்வெட்டொன்றில் மங்கலாதித்தனாகிய திவாகரன் சபைக்கணக்காகவும் மத்யஸ்தராகவும் குறிக்கப்படுகிறார்.

சடையவர்மர் சுந்தரபாண்டியர் காலத்தில் நன்னிமங்கலத் தைச் சேர்ந்த மதுராந்தகன் பிரமராயனும் பெரியகோயில் நம்பியும் தவத்துறைக் கோயிலுக்கு 20 பணத்திற்கு 4 மா நிலம் விற்பனை செய்தமையை நிலவிலை பிரமாண இசைவுத் தீட்டாக எழுதியவர் ஊர்க்கணக்குச் சேந்தலூர் உடையான் வழித்துணைப்பெருமாள். இந்த ஆவணத்தில் சான்றாளராகக் கையொப்பமிடவேண்டிய மோத்தூர் நாராயணபட்டன் தற்குறி என்பதால் அவருக்கு மாற்றாக இடையாற்றுமங்கலத்து ஊர்க்கணக்குச் சோழமாதேவி உடையான் மகாஜனப்பிரியன் கையெழுத்திட்டுள்ளார்.

அறக்கட்டளை சார்ந்த நிலவிற்பனைகள்

கோயிலில் விளக்கேற்றவும் வழிபாடு, படையல் முதலியன நிகழ்த்தவும் விழைந்த தனியர் சிலர் அவற்றிற்கான பொன், பொருட்கொடைகளைக் கோயில் அல்லது சபையின் பொறுப் பில் ஒப்புவித்தனர். அதை முதலாகக் கொண்டு அதன் வட்டியில் அறக்கட்டளைகள் நிறைவேற்றப்பட்டதாகச் சில கல்வெட்டு களும் கொடைப்பொருள் கொண்டு அதற்கு நிகரான நிலத் துண்டை விலைக்குப் பெற்று, அதன் விளைவு வழி அறக் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டதாகச் சில கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.

நித்யவினிதமங்கலத்து மகாசபை, முற்றாமத்துக்கோயில் தவத்துறை என்பார் அளித்த 18 கழஞ்சுப் பொன் பெற்று, நான்கு மா முக்காணி நீர்நிலத்தைக் கோயிலுக்கு விற்றது. இந்நிலத்து விளைவு கொண்டு தவத்துறை விரும்பியவாறே கோயிலில் நந்தாவிளக்கேற்ற ஒப்பிய சபையார், விற்ற நிலத்திற்காக எத்தகு வரியையும் கேளோம் என்று கூறியதுடன், விளக்கேற்றத்

தவறினால் 108 பொன் தண்டம் செலுத்துவதாகவும் தெரிவித் தனர் அதே சபை கோக்கிழானடிகளுக்காகக் குன்றப்போழன் அளித்த 30 கழஞ்சுப் பொன்னுக்குக் கோயிலில் விளக்கேற்ற 6 மா, காணி நிலத்தை இறையிலியாக விற்றது. ஆனால், விளக்கேற்றும் பொறுப்பைக் கொள்ளவில்லை. நிலம் தொடர் பான வரிகளுக்கு மட்டுமே பொறுப்பேற்றது.

இவ்விரண்டு நிகழ்வுகளும் நிலவிற்பனை தொடர்பானவை யாகவே இருந்தபோதும் இரண்டு நிலங்களும் கோயிலுக்கே விற்கப்பட்டிருந்தபோதும் இவை இரண்டு சார்ந்தும் சபை ஏற்றுக்கொண்ட பொறுப்புகள் மாறுபட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது. இதே சபை கீழ்மாந்தூர் நக்கன் ஆதித்தன் எனும் தனியருக்கும் நிலம் விற்ற செய்தியை முற்றுப்பெறாத முதல் பராந்தகர் கல்வெட்டுப் பகிர்ந்துகொள்கிறது.

முதலாம் ஆதித்தசோழரின் உடன்பிறந்தாரான நங்கை வரகுணப்பெருமானார் இக்கோயிலில் நாளும் உரி நெய் கொண்டு ஒரு நந்தாவிளக்கு ஏற்றத் தந்த 30 கழஞ்சுப் பொன்னைப் பெற்ற மணக்கால் சபையார், அதை விலைப்பொருளாகக் கொண்டு 10செய் நிலம் இறையிலியாகக் கோயிலுக்கு விற்றனர். இக்கல்வெட்டிலும் நிலம் சார்ந்த பொறுப்புகளை மட்டுமே சபை ஏற்றுள்ளது. விளக்கேற்றும் பொறுப்பு யாரைச் சார்ந்த தாக அமைந்தது என்பதை அறியக்கூடவில்லை.

நிலவிற்பனை பேசும் சபை சார்ந்த வேறு சில கல்வெட்டு கள் நிலஆவணக் கையெழுத்தாளர்களாக சபை உறுப்பினர் களை அடையாளப்படுத்துவதோடு, அவ்விற்பனையின்போது சபைக்கூட்டத்தில் முன்னிலை வகித்த அரசு உயர்அலுவலர் களையும் வெளிச்சப்படுத்துகின்றன. சிவயோகிகளுக்கு உண விடும் சாலை ஒன்றைக் கோயிலில் அமைப்பதற்காக முதலாம் இராஜாதிராஜர் காலத்தில் சோழர்படையைச் சேர்ந்த அரையன் சூரியன் கோயிலாரிடம் 40 காசுகள் அளித்தார். அக்காசு கொண்டு மணக்கால் மகாசபையிடம் 2 வேலி 30 குழி நிலம் கோயிலாரால் இறையிலிச் சாலாபோகமாக விலைக்குப் பெறப் பட்டது. இந்த ஆவணத்தில் சபை உறுப்பினர்கள் சிலரும் அரசு அலுவலர்கள் இருவரும் கோயில் சிவபிராமணர் ஒருவரும் சான்றாளர்களாகக் கையெழுத்திட்டுள்ளனர். அரசு அலுவலர்

கள் அரையன் சசதேவனான சோழமார்த்தாண்ட மங்கலாதி ராசரும் சிறுதனப் பெருந்தனம் அரையன் ஆடவல்லானான இராஜாதித்த விழுப்பரையரும் 'அறிவேன்' என்று கையெழுத் திட்டுள்ளமை சபைச் செயற்பாடுகளுள் குறிப்பிடத்தக்க சில வேனும் அரசு உயர்அலுவலர்கள் அறிய நிகழ்ந்தமையைத் தெளிவுபடுத்தும்.

அதே மன்னரின் ஆட்சிக்காலத்தில் சத்ரியசிகாமணி வள நாட்டு மருகல்நாட்டுக் கருப்பூரைச் சேர்ந்த அரசு அதிகாரி மஞ்சத்தில்லைக்கூத்தரான சோழகுலசிகாமணி மூவேந்த வேளார் சாலை ஒன்றை அமைத்ததுடன், அதை நிருவகிக்க மணக்கால் சபையாரிடம் 5 காசுக்கு நிலத்துண்டொன்றை விலைக்குப் பெற்றுச் சாலாபோகமாக அளித்தார். அந்நிலத்திற்கான இறைக் காவலுக்கு சபையார் 15 காசுகள் பெற்றுக்கொண்டனர்.

அதே மன்னரின் 33ஆம் ஆட்சியாண்டின்போது தவத் துறைக் கோயில் ஆடவல்லான் தேவியான உமாபரமேசுவரிக் கான வழிபாடு, படையல் ஆகியவற்றிற்காக இடையாற்று மங்கலத்துப் பெருங்குறி மகாசபை 8 மா நிலம் கொடையாக நீரோடு அட்டி அடவோலை செய்தளித்தது. அதற்கான ஆவணத்தை எழுதிய ஊர் மத்யஸ்தன் உத்தமப்பிரியன் தம்மை எழுதப் பணித்தவர்களாக நதீசுவரன் ஸ்ரீகிருஷ்ணன், திருவிக்கிர மர் நாராயணன், நெற்றி நாராயணன், சிவபிராஸன் ஊரன், சோமாசி நக்கன், தாசன் சுப்பிரமணியன், நக்கன் சுவரன், அரதாசன் கருமாணிக்கம், ஸ்ரீகிருஷ்ணன் தாமோதிரன், தாயன் அடிகள் நம்பிபட்டன், தாயன் தத்தபட்டன், குமார பரமேசுவரன் சேந்தன், தாமோதிரன் கேசவன், பேரையன் ஊரன் ஆகியோர் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இவர்களுடன் சபை உறுப்பினர்களான வேறு சிலரும் ஆவணத்தில் சான்றாளர் களாகக் கையெழுத்திட்டுள்ளனர். அரசு அலுவலர் அரையன் விக்கிரமசோழனான உத்தமசோழ பிரம்மாதிராஜன் இதில் கையெழுத்திட்டுள்ளமை அவர் முன்னிலையில் இச்செயற் பாடு நிகழ்ந்தமையைக் காட்டுகிறது.

இரண்டாம் இராஜேந்திர சோழரின் 4ஆம் ஆட்சியாண் டின்போது தவத்துறைக் கோயிலுக்கு 2 கழஞ்சுப் பொன்னுக்கு

இராஜசண்டன் மாளிகைக்கோலால் அளக்கப்பெற்ற 1000 குழி நிலம் விற்ற இடையாற்றுமங்கலத்து சபை அந்நிலத்திற்கான இறைக்காவலாக 30 கழஞ்சுப் பொன் பெற்றுள்ளது.

நச்சியூர்ப் பெருமாளுக்கு நந்தாவிளக்கேற்ற விழைந்த நல்லிமங்கலத்து மாற்றுகள்வி மணக்கால் சபையிடம் 32 கழஞ்சுப் பொன்னளித்தார். அதன் வட்டி கொண்டு விளக்கேற்ற ஒப்பிய சபை 9 மா 1 முந்திரிகை அளவிலான பெருமாள் கோயில் நிலங்களையும் இறையிலியாக்கியது. மாற்றுகள்வியோ, கோயிலாரோ அத்தகு வேண்டுகோள் எதுவும் வைக்காத நிலையிலும் மாற்றுகள்வியின் கொடை வழிப் பொலியும் வட்டி விளக்கேற்றவே போதுமானதாக அமையும் என்ற நிலையிலும் மணக்கால் சபை நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்தமையின் பின்புலம் அறியக்கூடவில்லை.

நிருபதுங்கரின் 23ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தவத்துறைக் கோயிலில் நந்தாவிளக்கெரிக்கப் பூதிகண்டன் அளித்த 30 கழஞ்சுப் பொன்னுடன் இறைவனுக்குச் சிறுகாட்டித் திருஅமுது (விடியல் படையல்) ஒன்றளிக்கக் கருதிக் கோயில் நிருவாகம் அளித்த 20 கழஞ்சுப் பொன்னும் பெற்றுச் சிறுகவூரைச் சேர்ந்த நால்வர் இறையிலியாக 1 வேலி நிலம், இல்லவளாகம், தோட்டம், அகையாறு உள்ளிட்டன விற்றுத் தந்தனர். தனியர்களுக்கும் கோயிலுக்கும் இடையில் நிகழ்ந்த இந்த நில விற்பனையை வாழ்த்துவது போல், 'இந்த அறக்கட்டளையைக் காத்தவர் ஆயுளும் செல்வமும் தர்மமும் கொள்வதாக' எனத் தெங்கங்குடி சபையார் ஆவணத்தின் இறுதியில் தெரிவித்துள்ளமை இதுவரை அறிந்திராத புதிய பதிவாகக் காட்சிதருகிறது.

திருமேற்றளிப் பெருமானடிகளின் படையலுக்கு வழங்கப்பட்ட நிலத்தை அலையூர் சபையார் இறையிலியாக்கியமை தெரிவிக்கும் துண்டுக் கல்வெட்டுகள் சபை உறுப்பினர்கள் சிலரை முன்னிருத்துகின்றன. ஸ்ரீராகவப் பெருமாளுக்கு பவதத்தமங்கலத்தார் விற்பனை செய்த 10செய் நிலத்திற்கான இறைக்காவல் ஓலையை மத்யஸ்தன் அலங்காரப்பிரியன் எழுதியுள்ளார். மற்றொரு துண்டுக் கல்வெட்டு மத்யஸ்தன் மங்கலாதித்தனை வெளிப்படுத்துகிறது.

அரச குடும்பத்தினர் தவத்துறைக் கோயிலுக்களித்த கொடை களுள் சிலவற்றை சபைகளே நிருவகித்தன. கோமாறஞ்சடைய ரான வரகுணமகாராயர் இக்கோயிலில் இரு நந்தாவிளக்குகள் ஏற்ற அளித்த 120 பழங்காசுகளைப் பெற்றுக்கொண்ட இடை யாற்றுநாட்டு இளம்பெருங்காய் இருக்கை சபையார் அதன் வட்டி வழி நாளும் நாராய நாழியினால் இரண்டு நாழி நெய் கோயிலுக்களித்து விளக்கேற்ற ஒப்பினர். தெள்ளாறு எறிந்து வென்ற மூன்றாம் நந்திவர்மர் தவத்துறைக் கோயிலில் நந்தா விளக்கேற்றத் தந்த 60 காசுகளைப் பெற்ற நல்லிமங்கலத்து சபையாரோ நாளும் நாராய நாழியால் ஒரு நாழி நெய் தாங்களே கோயிலுக்கு எடுத்துச் சென்று விளக்கேற்ற இசைந்தனர். இவ்விரு கல்வெட்டுகளின் வழி அரச குடும்பத்துக் கொடை களாகவே இருந்தபோதும் சபை ஒப்புக்கொள்ளும் பொறுப்பு களில் வேறுபாடுகள் இருந்தமையை அறியமுடிகிறது.

கவிரபொற்கட்டியூரைச் சேர்ந்த பூதிகண்டன், சித்திரை விஷுத் திருவிழாவுக்குத் தம் அன்னையாரைச் சாத்தி வைத்த 10½ கழஞ்சுப் பொன்னைப் பெற்ற முத்தையில் சபையார், ஆண்டு தோறும் அத்திருவிழா நிகழ்ந்த ஏழுநாட்களும் நாளொன்றுக்கு 1½ கல அரிசி எனக் கணக்கிட்டு மிடாவில், 'ஏழுநாள் முந்துற ஸ்ரீகோயிலுக்கே கொண்டுசென்று அளப்பதாக' உறுதியளித் ததை நிருபதுங்கவர்மரின் 2ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. அறக்கட்டளைப் பொறுப்புகளை ஏற்ற சபையார், கொடையாளிகள் அரசு சாராதவர்களாக இருந்த போதும் அவர்கள் வேண்டுதலுக்கேற்பவே கொடை நோக்கங் களை நிறைவேற்றியமை இந்தக் கல்வெட்டால் தெளிவாதல் காண்க.

ஊரார்

வெள்ளான் வகை ஊர்களை அந்தந்த ஊர் நிலஉரிமை யாளர்களே ஒன்றிணைந்து ஆட்சிசெய்தனர் 'ஊராய்ச் சமைந்த ஊரோம்' என்பன போன்ற கல்வெட்டுத் தொடர்கள் எந்தத் தேர்தலும் இல்லாமல் வேளாண் மரபுசார் ஆட்சி கூட்டுறவின் வெளிப்பாடாய் விளங்கியமையைத் தெளிவு செய்யும். தவத் துறைக் கல்வெட்டுகளில் வெளிப்படும் 143 ஊர்களில் பெரும் பான்மையன வெள்ளான் வகையினவாக இருந்தபோதும் மூன்று

கல்வெட்டுகளே ஊரார் பற்றியனவாக உள்ளன. அவற்றுள் இரண்டு கல்வெட்டுகள் ஊரவையின் செயற்பாடுகளை அறிய உதவுகின்றன.

முதலாம் இராஜாதிராஜரின் 35ஆம் ஆட்சியாண்டின் போது மஞ்சத்தில்லைக்கூத்தனான சோழகுலசிகாமணி மூவேந்த வேளார் எனும் அரசு அலுவலர் தவத்துறைக் கோயிலுக்களித்த 20 காசு கொண்டு, சந்தி வழிபாடுகளின் போது திருப்பதியம் பாடிய இருவருக்கு நாளும் தூணி நெல் அளிக்க வாய்ப்பாகக் கோயிலார் காவிதிக்குடி ஊராரிடம் 10 மா நிலம் இறையிலி யாகப் பெற்றனர். நிலத்தின் விலை 5 காசாகவும் இறைக்காவ லாகக் கொண்ட காசு 15 ஆகவும் அமைய, வரிகளை ஊராரே இறுக்க ஒப்புதலானது. நிலம் பெற்றார் ஆற்றுக்குலை, சென்னீர் வெட்டி செய்யவேண்டியதில்லை என்றுரைக்கும் ஆவணம், நன்னீர் விட்டுப் பாய்ச்சிக்கொள்ள இசைகிறது. இவ்விற்பனை யில் பழுதேற்பட்டால் நாளும் 214 காணம் பணம் தண்டமிறுப்ப தாக ஊரார் உறுதியளித்துள்ள இந்த ஆவணத்தை ஊர் மத்யஸ்தர் குஞ்சரமல்லன் சேந்தன் எழுத, அடிகள் சதுர விடங்கன், சேனன் பழுவேட்டரையன் உள்ளிட்ட ஊரார் கையெழுத்திட்டுள்ளனர்.

வேளான்சூற்றியான நிகரிலிசோழ மழநாட்டு விழுப்பரை யன் எனும் அரசு அலுவலரும் சான்றொப்பம் இட்டுள்ள இவ்விலையாவணத்தில், தற்குறியான வேளான் சீதொங்கனுக் காக உய்யக்கொண்டசோழபுரத்து வியாபாரி பூதலூருடை யான் சாத்தன் தில்லைக்கூத்தன் கைச்சாத்திட்டுள்ளார். இந்த ஆவணத்தின் குறிப்பிடத்தக்க கையெழுத்தாளராக ஊர்த் தட்டார் பட்டநாளைச் சாவானான மழநாட்டுக் கோனைக் குறிப்பிடலாம்.

சோழப் பேரரசர் இராஜாதிராஜரின் மகள் சோழகுல சுந்தரியின் அகப்பரிவாரத்தைச் சேர்ந்த சிங்கன் குப்பை இக்கோயில் இறைத்திருமுன் நந்தாவிளக்கொன்று ஏற்றுவதற் காக 11 கழஞ்சுப் பொன்னளித்தார். கோயில் பண்டாரத்திட மிருந்து அப்பொன்னைப் பெற்ற காவிதிக்குடி ஊரார், 'குண்டு வாய்க்கால் செய்' என்றழைக்கப்பட்ட கால் வேலி நீர்நிலத்தை

இறையிலியாகக் கோயிலுக்கு விற்றனர். இக்கல்வெட்டில் ஊரார் என்ற பொதுச்சொல்லைத் தவிர, விற்பனையாளர்களாகவோ, சான்றாளர்களாகவோ தனியார் பெயர்கள் இடம்பெறவில்லை.

மூன்றாம் குலோத்துங்கர் காலத்து நிறைவடையாத கல்வெட்டு, செம்பியன்காட்டூர் ஊராரைச் சுட்டுவதுடன், அவ்வூர் நிலங்கள் ஆண்டுதோறும் வரிக்கூறுக்கு உட்பட்டு இருந்தமையைத் தெரிவிக்கிறது.

நகரத்தார்

தவத்துறைக்கு அருகிலிருந்த பராந்தகபுரம் நகரத்தார் ஆட்சியில் இருந்தது. இவ்வூரில் வாழ்ந்த மணிக்கிராமத்து வணிகர் ஆறன்கயிலாயனான மனந்தசெட்டி, பராந்தகபுரத் திருந்த அரிஞ்சிகை ஈசுவரகிருகத்து இறைவனான சகலவிடங்க தேவர், வைகாசி விசாகத் திருவேட்டையின்போது பெருந் திருஅமுது கொள்ள நகரத்தார்ரிடம் நிலத்துண்டொன்றை விலைக்குப் பெற்று நெல் விளையுமாறு அதைப் பண்படுத்திக் கோயிலுக்களித்தார். கல்வெட்டு நிலக்கொடை பற்றிப் பேசுவ தால் நகரத்தாரிடம் நிலம் விலைக்குப் பெற்ற தகவல் மட்டுமே கொடையாளியால் தரப்பட்டுள்ளது. ஊரார் போலவே நகரத்தா ரும் பொதுநிலை விற்பனையாளர்களாகவே இருந்துள்ள மையை இக்கல்வெட்டும் உறுதிசெய்கிறது.

அரசாணைகள்

சோழர் கால அரசாணைகள் ஐந்தும் பிற்பாண்டியர் அரசாணைகள் இரண்டும் விஜயநகர அரசுக் கால ஆணை ஒன்றுமாக எட்டு அரசாணைகளைத் தவத்துறைக் கல்வெட்டுத் தொகுப்பில் காணமுடிகிறது. தவத்துறைக் கோயில் நிருவாகத் தினருக்கு மூன்றாம் குலோத்துங்கசோழரின் நான்காம் ஆட்சி யாண்டின்போது வழங்கப்பட்ட அரசாணை, மும்முடிச்சோழ மங்கலமான செம்பியன் நெற்குப்பையில் ஊர் நத்தத்து நிலம் கால் வேலியையும் இறைவனின் நிவந்தங்களுக்கு உடலாகச் செம்பியன்காட்டூரில் 69½ வேலி 1 மா முந்திரிகை நிலத்தையும் இறையிலித் தேவதானமாக்கி, வரியிலாரும் வரிக்கூறு செய்வார்களும் அதை உரியவாறு பதிவுசெய்து கோயிலுக்கு

உள்வரி வழங்குமாறு ஆணையிட்டது. திருமந்திரவோலை சோழேந்திரசிங்க மூவேந்தவேளான் எழுதிய இந்த உத்தரவைச் சரிபார்த்துச் சான்றொப்பம் இட்டவர்களாகச் சிங்களராயன், வில்லவராயன், சேதியராயன், சித்தராயன், மழவராயன் ஆகிய உடன்கூட்ட அலுவலர்களைக் கல்வெட்டுச் சுட்டுகிறது.

இக்கல்வெட்டின் தொடர்ச்சியாக உள்ள உள்வரி, புரவு வரித் திணைக்களத்தாரின் வரியிலி அறிவிப்பாக அமைந்துள்ளது. அதன்வழி இறையிலியாக்கப்பட்ட நிலத்தின் விளைச்சலில் வரியாகப் பெறப்படும் நெல்லளவு தெரிவதோடு, புரவுவரித் திணைக்களத்தில் பணியாற்றிய அலுவலர் பெயர்களும் வெளிப்படுகின்றன. புரவுவரி ஸ்ரீகரணநாயகங்களாகச் சிறுக்குடையாரும் பகடமங்கலமுடையாரும் அமைய, புரவுவரி ஸ்ரீகரணமுகவெட்டிகளாக ஆரூருடையார், நுளம்பராயர், நந்தியராயர், குன்றத்துக் கிழார் ஆகியோர் இருந்தனர். புரவுவரி ஸ்ரீகரண முதலாகப் பந்தணைநல்லூருடையார் கையெழுத்திட்டுள்ளார்.

சேதிராயன் எனும் அரசு அலுவலரின் பரிந்துரையேற்று மூன்றாம் இராஜராஜர் வழங்கிய அரசாணை, கூற்றூருடையான் பெரியானான எதிரிலிசோழ மூவேந்தவேளான்[18] பல ஊர்களிலிருந்து பெற்ற நிலத்தொகுப்புகளை நான்கு புதிய ஊர்களாக்கியதுடன், அவற்றின் வரிகளையும் நீக்கியது. மன்னரின் வாய்மொழி உத்தரவுக்குத் திருமந்திரவோலை நெறியுடைச் சோழ மூவேந்தவேளான் எழுத்து வடிவம் தர, சேதிராயன், அமரகோன், சேதிகுலராயன், பிருதிகங்கரையன், சீமபெயர்த்தரையன், காங்கேயராயன் ஆகிய உடன்கூட்ட அதிகாரிகள் ஆணையைச் சரிபார்த்துக் கையெழுத்திட்டனர்.

இதே மன்னருடைய 15ஆம் ஆட்சியாண்டின்போது கோயில் நிருவாகத்திற்கு வழங்கப்பட்ட அரசாணை, இறைக் கோயில் நிவந்தங்களுக்காகத் தூவேதிமங்கலத்தில் 7 வேலி 2 மா நிலம் தேவதான இறையிலியாகப் பழைய பெயரை நீக்கி இராஜராஜநல்லூர் என்ற புதிய பெயரால் அளிக்கப்பட்டதைத் தெரிவிப்பதுடன், வரியிலார்களும் வரிக்கூறுசெய்வார்களும் உரிய உள்வரி ஓலை வழங்கவும் வகை செய்தது. இவ்வாணையைத் திருமந்திரவோலை நெறியன் மூவேந்தவேளான் எழுத, தொண்டைமானும் காடவராஜனும் சரிபார்த்துக் கையெழுத்

திட்டனர். இக்கல்வெட்டின் இரண்டாம் பகுதியாக விளங்கும் உள்வரி முற்றுப்பெறாமையின் விலக்கப்பட்ட வரியான நெல், பிறபொருள்கள் ஆகியவற்றின் அளவையும் புரவுவரித் திணைக் களத்தார் பற்றிய தகவல்களையும் அறியமுடியவில்லை.

இரண்டாம் இராஜாதிராஜரின் அரசாணையாக விளங்கும் துண்டுக் கல்வெட்டுகளால் விளத்தூர்நாட்டுத் துளாருடை யான் சோழமார்த்தாண்டப் பல்லவரையர் பரிந்துரையேற்றுக் கழுகு இட்ட தரை முதலியவற்றின் வரி நீக்கப்பட்டமையையும் சில நிலங்களின் இறைவிகிதம் திருத்தியமைக்கப்பட்டமையை யும் அறியமுடிகிறது. மன்னர் பெயரற்ற அரசாணை ஒன்று பூசைக்கும் திருப்பணிக்கும் மும்முடிச்சோழமங்கலத்து நிலம் வரிகள் உட்பட அளிக்கப்பட்டமையைத் தெரிவிக்கிறது.

நினைப்பு என்ற சுட்டலோடு அரசாணையேற்ற நாட்டார் செயற்பாட்டைச் சுட்டும் சடையவர்மர் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு, ஆக்கப்பாடி உடையார் வழித்துணைப் பெருமா ளான விசையபன்மர், நன்னிமங்கலத்து மதுராந்தக பிரமராயர், பெரியகோயில் நம்பி உள்ளிட்டாரிடம் திருநாமத்துக்காணி யாக விலைக்குப் பெற்ற நிலம் 4 மாவைத் தவத்துறைக் கோயிலில் விளக்கேற்ற வீதிவிடங்கபட்டனுக்குத் திருவிளக்குப் பெரியநாட்டுப்புறமாகக் காணியாக்கியதைக் கூறுவதுடன், அரசாணைக்கேற்ப அதன் வரிகளை இடையாற்று நாட்டு நாட்டார் நீக்கி, அதைத் தங்கள் பொறுப்பில் ஏற்று, நாட்டுடன் கூட்டி இறுப்பதாக ஆவணமளித்ததையும் தெரிவிக்கிறது.

வீரபாண்டியரின் உடன்கூட்ட அலுவலர்களுள் ஒருவர் கலார்க்கூற்றத்து வெள்ளான்வகை ஊரான கொன்றைக்குடியை, 30 பட்டர்களைக் குடியேற்றுவதற்காக 600 பணத்துக்கு விலைக் குப் பெற்று மன்னரின் பெயரால் வீரபாண்டிய சதுர்வேதி மங்கலம் என்னும் அகரமாக்கி அதை இறையிலியாக்குமாறு அரசரிடம் வேண்ட, மன்னரின் திருமுகம் அவ்வூரின் பண்டுடை யாரையும் பழங்காணியாளரையும் தவிர்த்து, 33 பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஊர் நிலத்தைப் புதிய பங்காளர்களுக்குக் காணி யாகவும் பூதான இறையிலியாகவும் வழங்கியது. இவ்அரசாணை வழி வெளிப்படும் வரியினங்கள் இரண்டாம் பாண்டிய அரசுக் கால இறைவருவாய்த் தரவுகளை முன்வைக்கின்றன.

பொ. கா. 1497இல் கோயில் நிருவாகத்துக்குக் கோனேரி தேவமகாராயரால் அளிக்கப்பட்ட சர்வமானிய உத்தரவு, கோயில் நிலங்கள் சார்ந்த பல வரிகளைத் தவிர்த்து, அவ்வருவாய் கொண்டு கோயிலின் பெரும்பூசை, திருப்பணி ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு வழிகாட்டியது. இக்கல்வெட்டால் விஜய நகர அரசுக் கால வரியினங்கள் தெரியவருகின்றன.

அரசு அலுவலர்கள்

அரசாணைகளில் வெளிப்படும் அரசு அலுவலர்கள் அல்லாமல் கொடையாளிகளாகவும் சான்றாளர்களாகவும் பல அரசு உயர்அலுவலர்கள் தவத்துறைக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர். அரையன் புகுவாயனான வளவ மார்த்தாண்ட விழுப்பரையன், அரையன் விக்கிரமசோழனான உத்தமசோழ பிரம்மாதிராஜன், அரையன் சசதேவனான சோழமார்த்தாண்ட மங்கலாதிராஜன், வேளான்சூற்றியான நிகரிலிசோழ மழநாட்டு விழுப்பரையன், கோட்டூர் ஆயக்கொழுந்து அரிகண்டனான இராஜராஜ முத்தரையன், அரையன் விக்கிரமசோழனான பிரம்மாதிராஜன், கருப்பூர் மஞ்சத்தில்லைக்கூத்தனான சோழ குலசிந்தாமணி மூவேந்தவேளான், குருகுலராயன் குலோத்துங்க சோழ வேளான், மீனவன் விழுப்பரையன், பிரம்மாதிராஜன், பூதிபல்லவரையனான வீரசிகாமணிப் பல்லவரையன், கற்பகம் இராஜேந்திர சோழன் ஆகியோருடன் படைகளைச் சேர்ந்த சிறுதனப் பெருந்தனமாக அரையன் சூரியனான இராஜேந்திர சோழ தமிழதரையன், அரையன் ஆடவல்லானான இராஜாதித்த விழுப்பரையன், மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளப்படையின் அரங்கபட்டாலகன் ஆகியோரும் சிற்றரசராக அடிகள் பழுவேட்டரையர் குமரன்மறவன், கங்கன் பெருமாளான இராஜராஜ மழநாடாள்வான், நம்பாலை ஆதித்தன் நக்கன் உறைய நாடாள்வானான அணுக்கநம்பி ஆகியோரும் சோழர் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளனர். பூவனூர்க் கன்மியாக பிரபுத்திரன் அறிமுகமாகிறார்.

வரிகள்

தவத்துறைக் கல்வெட்டுகளில் நில விற்பனை சார்ந்தனவும் அரசாணைகளாக அமைந்தனவும் அவ்வக்காலத்தே தண்டப்

பெற்ற வரிகளைக் குறிப்பிடுகின்றன. முற்சோழர் கல்வெட்டு களில் இறை, எச்சோறு, வெட்டி, வேதினை, சென்னீர்வெட்டி எனும் வரியினங்களே பரவலாகச் சுட்டப்பட்டுள்ளன. வெட்டி முட்டையாள், கூற்றரிசி, எச்சோற்றுக் கூற்றுநெல், ஆற்றுக் குலை என்பன சில கல்வெட்டுகளிலும் கடமை, மாக்கலம், ஊர் விநியோகம், நாட்டு விநியோகம், ஊரிடு வரிப்பாடு என்பன சில கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் இராஜேந் திரர் கல்வெட்டில் திருவாசலில் போந்த குடிமை இடம்பெற்றுள் ளது. இது அரசுக்காக உழுகுடிகள் செலுத்திய வரியினமாகும்.

எச்சோறு, கூற்றரிசி, எச்சோற்றுக் கூற்றுநெல் எனும் மூன்றும் அலுவல் காரணமாக ஊர்களுக்கு வரும் அரசு அலுவலர்களுக்கு உணவளிப்பதற்காக ஊரவையால் பெறப் பட்ட வரியாகும். வெட்டி, வேதினை, முட்டையாள், சென்னீர் வெட்டி என்பன ஊர் நீர்நிலைகளையும் நீரோடு கால்களையும் பராமரிப்பதற்கான நிலஉரிமையாளர்களின் ஆள்உழைப்பைக் குறித்தன. ஊரிடு வரிப்பாடு ஊரார் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரித்தொகுப்பைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

வீரபாண்டியரின் அரசாணையாக விளங்கும் கல்வெட்டு, இரண்டாம் பாண்டிய அரசுக் காலத்தே பெறப்பட்ட நெல் - காசு - மா - புன்செய்க் கடமைகள், வெட்டிக்காடு, வாக்கறை, கார்த்திகைப் பச்சை, கொற்று - கடைக்கூட்டிலக்கைகள், சந்தி விக்கிரகப்பேறு, கீற்றுவரி, நம்வீட்டுத் தேவை, சிறை அச்சு, தறி - செக்கிறைகள், தட்டொலி, தட்டார் - நீர் - பாசிப் பாட்டங் கள், நாட்டு விநியோகம், ஆள் - இன - ஏர் வரிகள், வாசல் வந்த வாசல்பண்டை, பஞ்சுபீலி, நல் எருது - பசு, இருந்து பரிமாறு வார் ஆயம் முதலிய வரியினங்களை வரிசைப்படுத்துகிறது இவற்றுள் வாசல் வந்த வாசல்பண்டை, இருந்து பரிமாறுவார் ஆயம், வாக்கறை என்பன இதுவரை அறியப்படாத புதிய வரியினங்களாக உள்ளன.

கோனேரிதேவமகாராயரின் கல்வெட்டு, வாசலில் பதிந்து வருகிற கொற்றிலக்கை, சூலவரி, இறை, இலாபரேகையாகப் பதிந்து வருகிற இரேகை, இராய - அவதா - ஓலை - காணிக்கை - சேன வத்தனைகள், குதிரை - நல்லெருது - கொழுந்து - சாத்தா மாத்திரை - கணக்கர் - பத்துக்கிரண்டு - தினசரி - கற்பூரக்

காணிக்கைகள், நாடு தலையாரிக்கம், அரசுப்பேறு, பற்றடை, தட்டு - செக்கு - கிரிகை - கல் ஆயங்கள், குருவிப்பணம், பொது மக்கள் பேரால் வரும் கடமை, மா - மர - குளவடைகள், ஒழுக்கு மீன்பாட்டம், காசு, நெற்கட்டாயம், ஆயம், வகமை, வழிச்சாரி, ஆறு - குள - சமுத்திர வெட்டுகள், வாமனை நிலையாள், தென் னலை ஊழியம், கல்லணை காடுவெட்டு, ஆளமஞ்சி - கொள் - கொடானா ஆள் நிமந்தார் - குசவர் - தச்சுச்சொல் ஊழியங்கள், எடுத்தளவு, விருத்துப்படி, வரிமுட்டு, இடைத்துறை, சாதி - துண்டம் - இடங்கை வலங்கை - பள்ளர் பறையர் - இன வெள்ளாளர் - கொட்டு மணை - முத்தத்த வரிகள், சமயப்படி, பேர்காரிக்கம், உருஊழி, வாசலில் காணும் பழவரி என ஒரு பெரும் பட்டியலையே விஜயநகர அரசர் காலத்து வரியினங் களாய் முன்னிலைப்படுத்துகிறது. இவற்றுள் குருவிப் பணம், சமுத்திரவெட்டு, கொடானர் ஆள்நிமந்தார் முதலிய வரியினங் கள் முதல் முறையாக இக்கல்வெட்டு வழித் தெரியவருகின்றன.

வரிநீக்கம்

உயர் அரசு அலுவலர்கள் பரிந்துரைத்தபோது கோயில் பணிகளுக்காகவும் குடியிருப்புகளுக்காகவும் தரப்பட்ட நிலங் கள் மீதான வரிகள் அரசாணைகள் வழி நீக்கப்பட்டன. சில சோழர் காலக் கல்வெட்டுகளும் வீரபாண்டியர் கல்வெட்டும் அதற்குச் சான்றுகளாய் அமைந்துள்ளன. கோயில் சார்ந்த நிலங் களின் வரிகளை ஊரவைகள் நீக்கம் செய்தபோது அதற்கெனக் கோயிலாரிடமோ அல்லது கொடையாளிகளிடமோ இறைக் காவல் பொருளாகப் பொன்னோ, காசோ பெறப்பட்டது. அவை தொடர்பான ஆவணங்கள் இறைக்காவல் ஓலை என்றும் சுட்டப்பட்டுள்ளன. அத்தகு ஓலை ஒன்றை எழுதியவராக மத்யஸ்தன் அலங்காரப்பிரியனை அறியமுடிகிறது. இரண்டு துண்டு நிலங்களை 20 கழஞ்சுப் பொன்னுக்கு விலைக்குப் பெற்ற காரிஆதித்தன் அதற்கான இறைக்காவல் தொகையாகத் தெங்கங்குடி சபையாரிடம் அவர் 13 கழஞ்சும் கோயிலார் 7 கழஞ்சுமாக 20 கழஞ்சுப் பொன் அளித்தனர்.

பெரும்பாலான விற்பனைகளில் இந்த இறைக்காவல் தொகை நிலவிலையைவிடச் சில மடங்குகள் கூடுதலாகவே

இருந்தது. மஞ்சத் தில்லைக்கூத்தன் காவிதிக்குடி ஊரார்டம் பெற்ற நீர் நிலம் 10 மாவுக்கு 5 காசு விலையளித்தார். ஊரார் இறைக்காவலாக 15 காசுகள் கொண்டனர். அதே அரசு அலுவலர் தாம் அமைத்த சாலைக்கு மணக்கால் சபையாரிடம் 5 காசுக்குச் சாலாபோகமாக பெற்ற நிலத்துண்டிற்கு சபையார் இறைக் காவல் தொகையாக 15 காசுகள் பெற்றனர். அரையன் சூரியனுக்கு மணக்கால் சபையார் பல துண்டுகளாய் 2 வேலி 30 குழி நிலத்தை 5 காசுகளுக்கு விற்றனர். அதற்கான இறைக்காவலாக 35 காசு தரப்பட்டது.

செம்பியன் தேவனுக்கு ¼ வேலி நிலத்தைத் திருவிழாப் புறமாக விற்ற விக்கிரமசோழனான பிரம்மாதராஜன் நிலவிலை யாக 20 காசும் இறைக்காவலாக 55 காசும் பெற்றார். 2 கழஞ்சுப் பொன்னுக்குத் தவத்துறைக் கோயிலுக்கு 1000 குழி நிலம் விற்ற இடையாற்றுமங்கலத்து சபை அந்நிலத்துக்கு இறைக்காவலாக 30 கழஞ்சுப் பொன் பெற்றது. மன்னர் பெயரற்ற துண்டுக் கல்வெட்டு, 18 அன்றாடு நற்காசுக்கு விற்கப்பட்ட நிலத்துக்கு இறைக்காவல் தொகையாக 27½ கழஞ்சு 2 மஞ்சாடிப் பொன் பெறப்பட்டமையைச் சுட்டுகிறது.

நிலவிலையையும் இறைக்காவல் தொகையையும் தனித் தனியே குறிப்பிடாமல், இரண்டையும் உள்ளடக்கிய நிலையில் இன்ன விலைக்கு நிலம் இறையிலியாக விற்கப்பட்டதெனத் தனியரோ, சபையோ, ஊராரோ ஆவணம் அளித்தமைக்கும் தவத்துறைக் கல்வெட்டுகளில் சான்றுகள் உண்டு. பூவாழ் சாயங்கணம் உடையான் தந்த 15 கழஞ்சுப் பொன்னுக்கு ¼ வேலி மூக்காணி நிலத்தை நித்யவினிதமங்கலத்து சபை இறையிலி யாகக் கோயிலுக்கு விற்றது. வரகுணப் பெருமானார் அளித்த 30 கழஞ்சுப் பொன்னைக் கொண்ட மணக்கால் சபை 10 செய் நிலத்தை இறையிலியாகக் கோயிலுக்கு விற்றது.

கோக்கிழானடிகள் தந்த 30 கழஞ்சுப் பொன்னுக்கு நித்ய வினிதமங்கலத்து மகாசபை 6 மா காணி நிலத்தைக் கோயிலுக்கு இறையிலியாக விற்றது. ஊரன்மாறி தந்த 15 கழஞ்சுப் பொன் னுக்குத் தன் காணியான நிலத்தில் ¼ செய்யை ஓணன் ஆதித்த பிடாரன் இறையிலியாக விற்றார். 11 கழஞ்சுப் பொன்னுக்கு காவிதிக்குடி ஊரார் ¼ வேலி நிலத்தைக் கோயிலுக்கு இறை

யிலியாக விற்றனர். இவ்வைந்து ஆவணங்களுமே நிலத்தின் விலை, இறையிலியாக்க முத்லாகப் பெற்ற தொகை ஆகியவற்றைத் தனித்துக் குறிப்பிடாது விலை, வரிநீக்கம் இரண்டுக்கும் சேர்த்து ஒரு பொதுவான தொகையைப் பதிவுசெய்துள்ளன.

பிரம்மாதிராஜன் நித்யவினிதமங்கலத்திருந்த தன் நீர்நிலம் ¼ செய்யைத் தவத்துறைக் கோயிலில் விளக்கேற்றத் தேவதான மாகத் தந்தார். இந்நிலத்திற்கான வரிகளுக்காக சபையார் பொன் கொண்டதாகக் குறிப்பிடும் ஆவணம், அதை இறைக்காவல் என்றோ, இறை இழித்தல் என்றோ குறிப்பிடாமையுடன் நிலத்தையும் இறையிலி எஞ்று சுட்டவில்லை.

வேறோர் அறத்திற்காகத் தரப்பட்ட தொகையை முதலாகக் கொண்டு அவ்வறத்தை நிறைவேற்ற இசையும் சபை அறக் கட்டளையாரோ, கோயிலாரோ கேட்காத நிலையிலும் கோயில் சார்ந்த சில நிலத்துண்டுகளை இறையிலியாக்கிய நிகழ்வுகளும் தவத்துறைக் கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளன. நச்சியூர்ப் பெருமாளுக்கு விளக்கேற்ற மாற்றுகள்வி தந்த 32 கழஞ்சுப் பொன்னை ஏற்ற மணக்கால் சபை, விளக்கேற்ற ஒப்பியதுடன், இறைவனுக்கான பல நிலத்துண்டுகளை இறையிழித்துத் தந்தது.

சில நிகழ்வுகளில் கோயில் நிலங்கள் ஊர், சபை அல்லது நாட்டாரால் வரிநீக்கம் செய்யப்பட்டு அவ்வரியின் பொறுப்பை அந்தந்த ஆட்சியமைப்பே தம் பொறுப்பில் ஏற்பதும் உண்டு. சுந்தரபாண்டியர் கல்வெட்டொன்று, விசையபன்மர் நன்னி மங்கலத்தாரிடம் திருநாமத்துக்காணியாக விலைக்குப் பெற்ற 4 மா நிலத்துக்கு அவ்ஊர் இறுத்துவரும் மரியாதைப்படியான கடமை, ஊர்வினியோகம். நாட்டுவினியோகம், மாக்கலம் ஆகிய வரிகளைத் தம் பொறுப்பில் ஏற்று, நாட்டுடனே கூட்டி இறுப்பதாக இடையாற்று நாட்டார் பொறுப்பேற்றமையைத் தெரிவிக்கிறது.

அளவைகள்

தமிழ்நாட்டின் பிற கோயில் கல்வெட்டுகள் போலவே தவத்துறைக் கல்வெட்டுகளும் அக்கால சமூகத்தில் வழக்கில் இருந்த பல்வகை அளவைகள் குறித்துப் பேசுகின்றன. நிலங்களை அளக்க இப்பகுதியில் ஆறு வகையான நீட்டல் அளவை

கள் வழக்கில் இருந்தன. இராஜவிபாடன்கோல், பன்னீரடிக் கோல், எண்பிடிக்கோல் என்பவற்றோடு சிவன் என்னும் பழங் கோலும் இராஜசண்டன் மாளிகைக்கோலும் அம்மன் கோயில் வளாகத்தே புதிதாகக் கண்டறியப்பட்ட 3. 47 மீ. நீள அளவு கோலும் நிலமளக்கப் பயன்பட்டன. அவற்றுள் பன்னீரடிக் கோல் மனைக்கோலாக விளங்கியமையைப் பொ. கா. 1734ஆம் ஆண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

எண்பிடிக்கோலால் 4 கோல் நீளம், 4 கோல் அகலம், 1 கோல் ஆழம் கொண்டது ஒரு குழி நிலமாகவும் அது போல் குழிகள் 200 சேர்ந்தது ஒரு மாவாகவும் முற்சோழர் காலத்தில் கணக்கிடப்பட்டமையைக் கல்வெட்டொன்றால் அறியமுடி கிறது. திருவுலகளந்தபடி 100 குழி கொண்டது ஒரு மாவாக இருந்தமையும் 10 மா ½ வேலியாகக் கணக்கிடப்பட்டமையும் சோழர் காலக் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன. 'தடி ஆறினால் நிலம் வேலி' எனச் சுட்டும் நிருபதுங்கவர்மரின் கல்வெட்டு, நிலத்துண்டுகளைச் சுட்டத் தடி எனும் சொல் வழக்கிலிருந்தமையைத் தெரிவிக்கிறது. காணி, முந்திரிகை, செய் எனும் நிலஅளவு சுட்டும் பிற சொற்களும் வழக்கிலிருந்தன.

ஆழாக்கு, உழக்கு, நாழி, உரி, பதக்கு, தூணி, குறுணி, கலம் ஆகிய முகத்தலளவைகளுள் முதல் மூன்றும் நெய், எண்ணெய் அளக்கப் பயன்பட்டாற் போலவே தானியங்களையும் அளக்க உதவின. நாராயநாழி என்பது எண்ணெய், நெய் ஆகியவற்றை அளக்கக் கோயிலார் பயன்படுத்திய அளவு நிர்ணயம் செய்யப் பட்ட முகத்தலளவையாக அமைந்தது. பராந்தகபுரத்தில் வழக்கில் இருந்த மரக்கால் எண்ணாழிவிட்டக்கால் என்றறியப்பட்டது.

நிறுத்தல் அளவைகளாகப் பலம், கழஞ்சு, மஞ்சாடி, குன்றி முதலியன வழக்கில் இருந்தன. உலோகப் பாத்திரங்களை அளக்கப் பலமும் பொன்னையளக்கக் குன்றி, மஞ்சாடி, கழஞ்சு என்பனவும் உதவின. முதற் குலோத்துங்கர் காலத்தில் தவத் துறைக் கோயிலில் இருந்த நிறுத்தலளவை நியமக்கோல் எனும் பெயரில் வழங்கியது. ஊராடுகல் எனும் ஊர் சார்ந்த நிறுத்தல் அளவையும் குடிஞைக்கல்லும் பயன்பாட்டில் இருந்தன.

பல்லவர், பாண்டியர் காலத்தில் பழங்காசும் சோழர் காலத்தில் அன்றாடு நற்காசும் வழக்கில் இருந்தன. எந்த

முன்னொட்டும் இல்லாமல் காசு என்றே வழங்கப்பட்ட நாணயங்களும் இருந்தன. பிற்பாண்டியர் காலக் கல்வெட்டுகள் பணம் என்ற சொல்லைப் பயன்படுத்த, 19ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு வராகன் பணத்தைக் குறிக்கிறது.

சில கணக்கீடுகள்

தவத்துறைக் கல்வெட்டுகளில் சில பொதுவான கணக்கீடு களைக் காணமுடிகிறது. 30 கழஞ்சுப் பொன்னளித்து ஏற்றப் பட்ட நந்தாவிளக்குகள் உரி நெய்யால் வெளிச்சம் தந்தன. 15 கழஞ்சுப் பொன் கொடை பெற்ற விளக்குகள் உழக்கு நெய்யா லும் 60 பழங்காசுகள் கொண்ட விளக்குகள் நாழி நெய்யாலும் ஏற்றப்பட்டன. 90 ஆடுகள் கொடையால் வெளிச்சமிட்ட விளக்குகள் உழக்கு நெய் கொண்டன.

12 கழஞ்சுப் பொன்னுக்கு ஆண்டுப் பலிசை 1 கழஞ்சு மஞ்சாடியாக இருந்தது. 1 கழஞ்சுப் பொன்னுக்கு இணையாக 10-10½ கலம் நெல் அமைந்ததாக இரண்டு கல்வெட்டுகள் வழித் தெரியவருகிறது இறைக்காவலாகக் கொண்ட 35 காசுக்கு 'காசின் வாய் திங்கள் அரையாக பொலிந்த பலிசை நிலத்துக்கு இறையாக' எனும் தொடர் ஆண்டுக்கு 6 காசு வட்டியாகப் பெறப்பட்டமை உணர்த்தும்.

(வளரும்)

குறிப்புகள்

1. ARE 1892: 84-89; 1928-29: 98-142; 1931: 250; 1962-63: 660-679
2. SII 4: 531-536; 12: 61; 14: 12 A, B; 13: 74, 75, 123, 204, 240, 325; 19: 71, 112, 113, 146, 270, 271, 288-290, 330, 356, 408.
3. வரலாறு 23, பக். 26-39; வரலாறு 24, பக். 20-51.
4. வரலாறு 4, பக். 9-13; வரலாறு i2-13, பக். 15-21; வரலாறு 26, பக். 5-33.
5. 1962-63ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் 671ஆம் எண்ணின் கீழ் வெளியாகியுள்ள பரகேசரிவர்மரின் கல்வெட்டை அதன் உயரிய ஆட்சியாண்டு (20) கொண்டு

முதற் பராந்தகரின் கல்வெட்டாகக் கொள்ளமுடியும். இக்கல்வெட்டின் எழுத்தமைதி இங்குள்ள பிற முதற் பராந்தகர் கல்வெட்டுகளின் எழுத்தமைதியோடு ஒத்து அமைந்துள்ளது. அது போலவே 1928-29ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் 125ஆம் எண்ணின் கீழ் வெளியாகியுள்ள இராஜகேசரிவர்மரின் கல்வெட்டை அதன் உயரிய ஆட்சியாண்டு (27) கொண்டு முதலாம் ஆதித்த ருடையதாகக் கொள்ளலாம். கல்வெட்டின் எழுத்தமைதி ஆதித்தரின் உடன்பிறந்தாரான வரகுண நங்கையின் கொடையைக் குறிக்கும் அம்மன்னரின் 13ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் எழுத்தமைதியுடன் ஒத்துள்ளமை இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 4இல் எண் 535இன் கீழ் வெளியாகியுள்ள புதுக்குடி ஓணன் ஆதித்த பிடாரனின் தவத்துறைக் கல்வெட்டு முதற் பராந்தகர் காலத்தது. பெருமண்டபத் தெற்குச் சுவரிலிருந்து படியெடுக்கப்பட்ட ஐநூற்றுவர்கோயில் சுட்டும் மன்னர் பெயரற்ற கல்வெட்டைப் புதுக்குடி ஓணன் ஆதித்தன் என்ற பெயர் கொண்டும் அதே சுவரிலுள்ள முதற் பராந்தகர் காலப் புகழன்காமன் கொடைக் கல்வெட்டின் எழுத்தமைதியோடு ஒப்பிட்டும் முதற் பராந்தகரின் கல்வெட்டாக அடையாளப்படுத்த முடிந்தது.

சேரமானார் மகளார் கோக்கிழானடிகளின் கொடை குறிக்கும் பரகேசரிவர்மரின் 16ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டை உள்ளீடு கொண்டும் தவத்துறையில் உள்ள உத்தமசோழர் கல்வெட்டின் எழுத்தமைதியோடு ஒப்புநோக்கியும் பிற சான்றுகளின் அடிப்படையிலும் (இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், பக். 4-8) உத்தமசோழர் காலத்ததாக உறுதிப்படுத்தினோம்.

6. மணக்கால், தூவேதிமங்கலம், காட்டூரான செம்பியன் காட்டூர், சிறுதையூர், வடவூர், நகர் வாழ்க்கை, நகர் திருமழவனூர், திருநச்சியூர், கொன்றைக்குடி, வீர பாண்டிய சதுர்வேதிமங்கலம்.

7. நல்லிமங்கலம், கவிரபொற்கட்டியூர், முத்தையில், இளம் பெருங்காய் இருக்கை, கவிரபொற்கட்டிக்குடி, பராந்தக

புரம், நித்யவினிதமங்கலம், திருமணமேடு, கரந்தலப்பால் புதுக்குடி, சாத்தமங்கலம், புதுக்குடி, மும்முடிச்சோழ மங்கலமான நெற்குப்பை.

8. இருட்டிக்கூவல், பெரிய கண்ணனூர், துறை, ஞாழலூர், பூந்துறை, சூறொட்டையான கோபவநல்லூர்.

9. கண்டராதித்த சதுர்வேதிமங்கலம், இருள்நீக்கிக் கொண்ட சதுர்வேதிமங்கலம், ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலம்.

அனுத்திரமங்கலம், பவதத்தமங்கலம், தந்திவர்மமங்கலம், இடையாற்றுமங்கலம், நல்லிமங்கலம், கொற்றமங்கலம், மும்முடிச்சோழமங்கலம், நித்யவினிதமங்கலம், பகட மங்கலம், பதிபத்தமங்கலம், சாத்தமங்கலம், தூவேதி மங்கலம், விண்ணமங்கலம், திருநயமங்கலம்.

10. செம்பியன்மாதேவிநல்லூர், ஜனநாதநல்லூர், பந்தணை நல்லூர், பெருவளநல்லூர், இராஜராஜநல்லூர், தத்த நல்லூர், வீற்றிருந்தபெருமாநல்லூர்.

11. ஆதிகுடி, அழிசிக்குடி, கரந்தைப்பால் புதுக்குடி, ஆய்க் குடி, சிறுகுடி, கவிரபொற்கட்டிக்குடி, காவிதிக்குடி, கொன்றைக்குடி, கூவங்குடி, நெடுஞ்சேரிக்குடி, புதுக் குடி, தெங்கன்குடி, பனங்குடி, தென்கோமாக்குடி, புல்லி யக்குடி, திருவணக்குடி, இலால்குடி, திட்டைக்குடி.

12. அலையூர், அழுந்தியூர், சிறுதையூர், செம்பியன்காட்டூர், சிறுகொட்டையூர், சிறுபழுவூர், இறையூர், காக்கலூர், களத்தூர், கீழ் மாந்தூர், ஆரூர், கருப்பூர், கவிரபொற் கட்டியூர், கோனூர், குலோத்துங்கசோழன் கூற்றூர், இராஜகம்பீரன் கூற்றூர், இராஜராஜன் கூற்றூர், கூற் றூர், மாத்தூர், மருதூர், ஞாழலூர், பெரிய கண்ணனூர், பெருங்கோனூர், பெரும்பழுவூர், புத்தூர், பூவலூர், துக வூர், குண்டாற்றூர், சாத்தனூர், தஞ்சாவூர், திருமழவனூர், பூவனூர், வரவூர், திருநச்சியூர், கீழைத்திருநச்சியூர், திருநல் லூர், திருமோகூர், திருப்புங்கனூர், துறையூர், கீரனூர், பேரையனூர், பாலையூர், பூதலூர், சேய்ஞலூர், வளகூற் றூர், புள்ளலூர், மோத்தூர், கோட்டூர், நல்லூர், மருதத் தூர், சிறுகவூர், முழையூர், காள்ளூர், பிரம்பில் இரையூர்.

13. வண்டுவராபதி, செல்லூர்வாழ்க்கை, நகர்வாழ்க்கை, ஆக்கப்பாடி, அலைவாய், அட்டுப்பள்ளி நியமம், ஆயிரத்தளி, சங்கேந்தி, சில்லமந்த, சோழமாதேவி, இளம்பெருங்காய்இருக்கை, தூயவேலி, இருட்டிக்கூவல், தெள்ளாறு, திருப்பாற்கடல், களந்தை, கலசப்பாடி, திட்டைவேலி, சிறுசெம்பிறை, பெருஞ்செம்பிறை, குன்றம், நெற்குன்றம், குறுகாடி, மணக்கால், துளார், பூவாழ் சாயங்கணம், திருமணமேடு, தொண்டகை, வலம்புரி, திருவரங்கம், சூறொட்டை, தண்டங்குறை, இசணைக்குறை, ஓவைச்சேரி, கற்குடிக் காரிக்குடிச்சேரி, நெற்குப்பை, வரகுப்பை, அன்பில், முத்தையில், நாஞ்சில், பூந்துறை, துறை, கரந்தை, சிராப்பள்ளி.

14. வரலாறு 2, ப. 29; மு. நளினி, இரா. கலைக்கோவன், வலஞ்சுழி வாணர், ப. 81; SII 8: 624.

15. ARE 1928-29: 129, 1962-63: 666.

16. வரலாறு 12-13, பக். 16-17; ARE: 1962-63: 666.

17. ARE 1961-62: 436; ARE 1972-73: 347; SII 8: 577.

18. தெற்றிப் பெரியான் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் இப்பெரியார் மூன்றாம் குலோத்துங்கர், மூன்றாம் இராஜராஜர் ஆட்சிக்காலத்தே வாழ்ந்த வள்ளல் பெருந்தகையாவார். இவரது வள்ளன்மையைக் குறிக்கும் கல்வெட்டுகள் சிறுபழுவூர் ஆலந்துறையார் கோயில், திருமழபாடி வைத்தியநாதசாமி கோயில், நத்தமாங்குடி சிவன்கோயில் ஆகியவற்றில் காணப்படுகின்றன. 1920: 91; 1928-29: 153; இரா. கலைக்கோவன், பழுவூர் அரசர்கள், கோயில்கள், சமுதாயம், ப. 292.

5. நகரி மாடக்கோயில்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

நாங்கூருக்கு அருகிலுள்ள நகரி திருவாலியுடன் இணைந்த நிலையில் பாடல் பெற்ற ஊராகக் கருதப்படுகிறது.[1] கோயிலின் கிழக்கு நோக்கிய ஏழுதளக் கோபுரத்தின் கீழ்த்தளம் துணைத் தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், கூரையுறுப்புகள் கொண்டுள்ளது. வாயில் இடம்பெற்றுள்ள சாலைப்பத்தி தாமரை ஜகதி, உருள்குமுதம், இவற்றை உறுப்பு வேறுபாடுகளாகக் கொள்ள், வாயிலின் இருபுறத்தும் அகலக் குறுக்கமான வெறுமையான கோட்டங்கள். கோபுரத் தளங் களில் குறைவான் சுதையுருவங்களே உள்ளன.

முதல் கோபுரத்திற்கும் இரண்டாம் கோபுரத்திற்கும் இடைப்பட்டு அமைந்துள்ள நடைப்பத்தியில் பலித்தளம், கொடித்தளம், கருடன் திருமுன் உள்ளன. இரண்டாம் கோபுரம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்ட கீழ்த்தளம் பெற்றுள்ளது. மேலுள்ள நான்கு தளங்கள் செங்கல் கட்டுமானமாக உள்ளன. அதற்கும் மூன்று தளங்கள் பெற்றுள்ள மூன்றாம் கோபுரத்திற் கும் இடைப்பட்ட சுற்றில் தென்புறம் ஆண்டாள் திருமுன் னும் வடபுறம் அமிர்தவல்லித் தாயார் திருமுன்னும் உள்ளன.

திருமுன்கள்

இருதள வேசர விமானம், முகமண்டபம், பெருமண்டபம் பெற்றுள்ள அமிர்தவல்லித் தாயார் திருமுன்னின் விமானக் கீழ்த்தளம், உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள், வெட்டுப் போதிகைகள், கூரையுறுப்புகள் கொண்டுள்ளது. மேலுள்ள ஆரஉறுப்புகளும் இரண்டாம் தளமும் கிரீவ, சிகரமும் செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபம் பக்கத்திற்கொரு கோட்டம் பெற்றுள்ளது. கோட்டங்கள் அனைத்துமே வெறுமையாக உள்ளன. செங்கல் கட்டுமானமாக உள்ள பெரு

மண்டபம், முன்றிலும் சாளரங்களும் பெற்றுள்ளது. கருவறையில் இறைவி அர்த்தபத்மாசனத்தில் முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டு, பின்கைகளில் மலரேந்தியுள்ளார்.

இருதள வேசரமாக உள்ள ஆண்டாள் திருமுன் அமிர்த வல்லித் தாயார் திருமுன் ஒத்த கட்டமைப்பிலேயே விமானம், முகமண்டபம் பெற்றுள்ளது. முன்னால் சிறுமண்டபம் உள்ளது. கருவறையில் ஆண்டாள் வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

மூன்றாம் கோபுரம்

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், பூதவரி பெற்ற வலபி, கூடுவளைவு களுடனான கபோதம் கொண்ட கீழ்த்தளத்தின் நிலைக்கால் களில் கொடிப்பெண்கள் அமைய, கொடிவளையங்களில் சிற்றுருவச் சிற்பங்கள். கோட்டங்களில் நிதிக்கணங்களும் காவலர்களும் இடம்பெற்றுள்ளனர். உடலை ஒருக்கணித்துள்ள காவலர்கள் இருவருமே வலக்கையால் அச்சுறுத்திய வாறு இடக்கையை உருள்பெருந்தடி மேல் இருத்தியுள்ளனர். வாயிலை அடுத்து விரியும் சுற்றின் தெற்கில் ஆழ்வார்கள் மண்டபம் உள்ளது. அங்குத் தேவியருடன் பரமபதநாதர் காட்சி தருகிறார். சுற்றின் நடுவில் வெற்றுத்தளத்தின் மீதமர்ந்த கல்யாண அரங்கநாதர் திருக்கோயில் வரவேற்கிறது.[2]

வெற்றுத்தளம்

3. 30 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் பத்மபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூ மொட்டுப்போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு கல்யாண அரங்கநாதர் திருமுன்னைத் தாங்குகிறது. இந்த வெற்றுத்தளத்தின் மேற்குப்புறத்தே உள்ள கோட்டத்தில் யோக நரசிம்மர் இடம்பெற்றுள்ளார். வடபுறத்தே உள்ள ஏவரி வெஞ்சிலையான் விமானம் தாங்கும் வெற்றுத்தளம் வெறும் கல்லடுக்காக உள்ளது. தென்புறத்தே உள்ள திருமங்கையாழ் வார் திருமுன்னைத் தாங்கும் வெற்றுத்தளம் தாமரைஜகதி, கண்டம், பட்டிகை, தாமரைவரி, உறுப்பு வேறுபாடற்ற,

கொடிக்கருக்கு அலங்கரிப்புக் கொண்ட நான்முக அரைத் தூண்கள் தழுவும் சுவர், தாமரைவரி, பெருவாஜனம் பெற்று உயரமான துணைத்தளமாகக் காட்சிதருகிறது. குமுதம், கூரை யுறுப்புகள் இல்லாமை இதைத் தாங்குதளமாகக் கொள்ளத் தடையாகின்றது.

இம்மூன்று திருமூன்களுக்கும் முன் அமைந்துள்ள பெரு மண்டபத்தைத் தாங்கும் வெற்றுத்தளம் பாதபந்தத் தாங்குதளம், உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ளது. இவ்வெற்றுத்தளத் தின் வடபுறம் ஏவரிவெஞ்சிலையான் திருமூன் அருகே இருக்குமாறு கொடிமரமும் பலித்தளமும் காட்டப்பட்டுள் ளன. பெருமண்டபத்தின் வடசுவர் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்று விளங்குகிறது. சுவரின் நடுப்பகுதியில் சாலை சிகரத்துடன் நெடிய வாயில் உள்ளது. கம்பிக் கதவுகள் பெற்றுள்ள வாயிலின் இருபுறத்தும் வெறுமையான கோட்டப் பஞ்சரங்கள் உள்ளன.

ஏவரிவெஞ்சிலையான்

ஒருதள வேசரமாக உள்ள இவ்விமானம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. கருவறையில் விஷ்ணுவின் திருமேனி காணப் படுகிறது.

திருமங்கையாழ்வார் விமானம்

உபானம், தாமரைவரி, அன்னவரி பெற்ற ஜகதி, சிலம்பு வரிக் குமுதம், கம்புகள் தழுவிய பாதங்கள் பெற்ற கண்டம், பட்டிகை, வேதிகைத்தொகுதி, சதுரபாதமும் நாகபந்தமும் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு இருதள வேசரமாக உள்ள திருமங்கையாழ்வார் விமானக் கீழ்த்தளத் தின் தென்சுவர்க் கோட்டத்தில் இரணிய நரசிம்மர் இடம் பெற்றுள்ளார். இரணியனை மடியில் கிடத்தி சுகாசனத்தில் உள்ள நரசிம்மரின் முன்கைகள் இரண்டும் அவன் வயிற்றைக்

கிழித்தவாறு உள்ளன. அடுத்துள்ள இருகைகளும் இரணிய னின் கால்களையும் தலையையும் பிடித்தவாறு உள்ளன. மூன்றாம் இணைக்கைகள் உருவிய குடலை உயரத் தூக்கிப் பிடித்துள்ளன. பின்னிரு கைகளில் சங்கும் சக்கரமும். கிரீட மகுடம், தோள், கை வளைகள், பட்டாடை அணிந்துள்ள நரசிம்மரின் பிடரிமுடி அழகுபடக் காட்டப்பட்டுள்ளது.

இருபுறத்தும் குடப்பஞ்சரங்கள் பெற்றுள்ள கிழக்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. கபோதக்கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆரஉறுப்புகளும் சற்று உயரமான இரண்டாம் தளமும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. ஆரச்சாலைகளிலும் கிரீவகோட்டங்களிலும் விஷ்ணு தொடர்பான சுதையுருவங் கள் காணப்படுகின்றன.

விமானத்தை ஒத்துள்ள முகமண்டபத்தின் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள்.

பெருமண்டபம்

மூன்றாம் கோபுரத்தின் மேற்கிலுள்ள ஒன்பது படிகள் பெருமண்டபத்திற்கு அழைத்துச் செல்கின்றன. முச்சதுர, இரு கட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் இம்மண்டபத்தின் தெற்கில் திருமங்கையாழ்வார் திருமுன்னும் மேற்கில் கல்யாண அரங்கநாதர் திருமுன்னும் வடமேற்கில் ஏவரிவெஞ்சிலையான் கருவறையும் உள்ளன. திருமங்கையாழ்வார் கருவறை, முகமண்டபம் இவற்றிற்கு முன் நீளமான மேடை. மேடையின் மேற்கில் உள்ள அறையில் ஆழ்வார்கள் மூலவர்களாகவும் செப்புத்திருமேனிகளாகவும் உள்ளனர். பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, கிரீடமகுடம், மகரகுண்டலங்கள் பெற்று, வல முன் கையைக் காக்கும் குறிப்பிலும் இட முன் கையைக் கடகத்திலும் அமைத்து சுகாசனத்தில் உள்ள சேனை முதலியாரின் செப்புத்திருமேனி எழிலார்ந்து காணப்படுகிறது.

மேடையின் தெற்கிலுள்ள திருமங்கையாழ்வார் திருமுன் முகமண்டப வாயிலின் இருபுறத்தும் காவலர்கள். வலப்புறம்

இருப்பவர் வலக்கையால் அச்சுறுத்தி, இடக்கையை உருள் பெருந்தடி மேல் இருத்தியுள்ளார். இடப்புறமுள்ளவர் வலக் கையை உருள்பெருந்தடி மேலிருத்தி, இடக்கையால் அச்சுறுத்து கிறார். இரண்டு கைகளுடன் மட்டுமே காட்சிதரும் இவ்விருவ ரும் ஆடை, அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளனர். முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் மங்கை யாழ்வார் வணங்கிய கைகளுடன் நிற்க, குமுதவல்லியார் இடக் கையில் மலரேந்தி, வலக்கையை நெகிழவிட்டு இடப்புறம் உள்ளார்.

கல்யாண அரங்கநாதர் திருமுன்

பெருமண்டபத்தின் மேற்கில் விளங்கும் இத்திருமுன் இருதளத் திராவிட விமானம், முகமண்டபம், மண்டபச்சுற்று பெற்றமைந்துள்ளது. மண்டபச்சுற்றின் வாயிற்காவலர்கள் மங்கையாழ்வார் திருமுன் காவலர்களைப் போல் முன்கை களை அமைத்து, பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ளனர். கிரீடமகுடம், பட்டாடை அணிந்துள்ள இவர்தம் உருள் பெருந்தடிகளைப் பாம்பு சுற்றியுள்ளது. சுற்றின் வாயிலுக்கு மேல் உள்ள பாம்புப் படுக்கையில் அரங்கநாதர் படுத்துள்ளார். வாயிலைச் சூழ அமைந்துள்ள சுற்றுமாளிகையின் கூரையை நான்முக அரைத்தூண்களை ஒட்டுத் தூண்களாகப் பெற்ற முச்சதுர, இருகட்டுத்தூண்கள் வெட்டுப் போதிகைகளின் உதவியுடன் தாங்குகின்றன.

விமானம்

4. 93 மீ. சதுரமாக அமைந்துள்ள கல்யாண அரங்கநாதரின் விமானம் உபானம், பிரதிவரி பெற்ற கபோதபந்தத் தாங்குதளம், வேதிகை, நாகபந்தம் பெற்ற சதுர பாதங்களின் மீதெழும் எண் முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகை கள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. விமானத்தின் கீழ்த்தளப் பத்திகள் மூன்றுமே ஒன்று போல் புறந்தள்ளியுள் ளன ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். சுவரிலுள்ள மகர தோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் முப்புறத்தும் வெறுமை யாக உள்ளன. கீழ்த்தளத்தின் ஆரச்சாலைகளும் சுதையுருவங் களின்றியுள்ளன. இரண்டாம் தளத்தையடுத்து அமைந்துள்ள

கிரீவகோட்டங்களில் தெற்கில் யோகநரசிம்மரும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் உத்குடியில் பரமபதநாதரும் கிழக்கில் சுகாசனத்தில் வராகரும் இடம்பெற்றுள்ளனர். விமானத்தை ஒத்துள்ள முகமண்டபத்தில் புறந்தள்ளல் இல்லை. விமானத் திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள்.

இங்குள்ள தெலுங்கு, தமிழ்க் கல்வெட்டு பெருமாள் விமானத் திருப்பணி சென்னையைச் சேர்ந்த போலேபல்லி நம்பெருமாள் அறக்கட்டளை அறங்காவலர் இராமாநுஜக் கூடம் இராமாநுஜரால் 29. 1 1940இல் செய்யப்பட்டதாகக் கூறுகிறது. தூண்கள் அணைப்பற்ற வெறுஞ்சுவராக மண்டபச் சுற்றின் புறச்சுவர் அமைந்துள்ளது.

கருவறை

முச்சதுர இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளு டன் கூரை தாங்கும் முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் சுவரொட்டிய மேடையில் கல்யாண அரங்கநாதர் என்று அழைக்கப்படும் பெருமாளும் அவரது இருபுறத்தும் உள்ள திருமகளும் நிலமகளும் சுகாசனத்தில் உள்ளனர். அரங்கநாதரின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடகத்தில் உள்ளது. பின்கைகளில் சங்கு, சக்கரம். கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், கழுத்தணிகள், கையணிகள், பெற்றுள்ள இறைவனின் இடையில் பட்டாடை. திருமகள் வலக்கையைத் தொடையில் இருத்தி, இடக்கையில் மலர் கொண்டுள்ளார். நிலமகள் இடக்கையைத் தொடையிலிருத்தி, வலக்கையில் மலர் கொண்டுள்ளார்.

கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து நான்கு கல்வெட்டுகள் படியெடுக் கப்பட்டுள்ளன.[3] அவற்றுள் காலத்தால் முற்பட்ட விருப்பண்ண உடையாரின் கல்வெட்டு (பொ. கா. 1386) இவ்வூரைத் திருநக ரான விக்னேசுவரநல்லூராக அடையாளப்படுத்துவதுடன் இராஜாதிராஜ வளநாட்டின் கீழ் இவ்வூர் இருந்தமையையும் தெரிவிக்கிறது. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்

டிருந்த நிலப்பகுதியில் வயலாலி மணவாளருக்கு அளிக்கப் பட்ட சர்வமானிய நிலக்கொடைகளைக் கல்வெட்டு வரிசைப் படுத்துகிறது.

கிருஷ்ணதேவராயரின் பொ. கா. 1517ஆம் ஆண்டுக் கல்வெட்டு, மன்னரின் வெற்றிகளையும் திக்விஜயத்தையும் தெரிவிப்பதுடன் சோழமண்டலத்து சைவ, வைணவக் கோயில் களுக்கு அவர் அளித்த வரிவிலக்குகளையும் வெளிச்சப்படுத்து கிறது. சிராப்பள்ளி, காட்டுப்பள்ளி, நகரி, நாங்கூர், அழுந்தூர், தேவூர், திருவிண்ணகர அகளங்கன், மாணிகுழி, புகலூர், முட்டம், வைகல், நாவலூர், பாதிரிப்புலியூர், தினைநகர், இறையா நறையூர், செறவன்மங்கலம், திட்டைக்குடி, கானாட்டமர்புள் ளூர், தியாகவல்லி கிராம விண்ணகர், குறிச்சி, பந்தணைநல்லூர், தலைச்சங்காடு, புன்கூர், குறுக்கை, விசலூர், தலைஞாயிறு, திருமங்கலக்குடி, வெள்ளியக்குடி, திருந்துதேவன்குடி, சூரியனார் கோயில், கோடிக்கா, குற்றாலம், குறையலூர், விற்குடி, சிறுகுடி, ஆச்சாள்புரம், வான்புத்தூர், நல்லூர், ஆண்டார்கோயில், கங்கைகொண்டான், திருமீயச்சூர், வழுவூர் முதலிய சைவ, வைணவக் கோயில்கள் உள்ள ஊர்களின் பட்டியல் இந்தக் கல்வெட்டால் பெறப்படும் புதையலாகும்.

மன்னர் பெயரற்ற கல்வெட்டு, உலகுய்ய வீற்றிருந்தருளிய நாயனாரான வயலாலி மணவாளர் கோயிலில் வேதம் ஓதிய அந்தணர் பெயர்களையும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றிய தகவல்களையும் தருகிறது. ஜயங்கொண்ட சோழ வளநாட்டுத் தலைச்சங்காட்டுப் பற்றைச் சேர்ந்த இராஜேந்திரசோழ நல்லூர் நன்செய், புன்செய் நிலத்துண்டு கள், பசுக்கள், பரிகலங்கள் ஆகியவை கோயில் இறைவனின் படையல், வழிபாடு இவற்றிற்காகக் கொடையளிக்கப்பட்டன.

காலம்

இக்கோயிலில் கிடைக்கும் கல்வெட்டுகள், தற்போது காணப்படும் கட்டமைப்புகள் கொண்டு முதன்மை விமானத் தின் காலத்தைப் பொ. கா. 14ஆம் நூற்றாண்டாகக் கொள்ள லாம். இறைவித் திருமுன்கள் இரண்டுமே காலத்தால் பிற்பட்டவை.

குறிப்புகள்

1 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், குலசேகரர் 725, மங்கை யாழ்வார் 1078, 1188, 1217, 1329, 1519, 1733, 1735, 1850, 2014, 2027, 2063, 2673, 2674.

2. ஆய்வுநாள்: 25. 09. 2009.

3. ARE 1918: 406-409.

தலைநாள் இரவு

அன்று திருமண நாள். அவனுக்கும் அவளுக்கும் அவர்களாகும் தலைநாள். மணவீட்டை அழகுபடுத்தி, மங்கல முழவுகளை ஒலிக்கச் செய்தனர் உறவாய்க் கூடிய அனைவருக்கும் நெய்யும் ஊனும் பெய்து செய்த வெண்சோறு விருந்தானது.

புள் நிமித்தம் பொருந்திய நாள் அது. அகன்ற வானத்தில் விளங்கும் திங்களை உரோகணி இணைந்த சிறந்த போதில் இறைவனை வணங்கி, மணப்பெண்ணை நீராட்டி அழகுபடுத்திய தோழியர் அவள் அழகு கண்டு வியந்து போற்றினர். வாகை இலையையும் அறுகின் அரும்புகளையும் நூலால் கட்டி மாலையாக இட்டு, தூய ஆடை உடுத்தி, உரிய அணிகளுடன் விளங்கிய அவளைச் சுற்றத்தார் அவனுக்கு அளித்தனர். அவனுக்கும் அவளுக்கும் அது முதல் நாள். அவன் உயிருக்கு அவள் உடம்பானாள்.

அந்தத் தலைநாள் இரவில் அவனிடம் வந்தவள் கசங்காத புத்துடையால் உடல் முழுவதும் போர்த்தியிருந்தாள். புழுக்கத்தால் வியர்த்திருந்தாள் காற்றுப்பட்டால் வியர்வை நீங்கும் எனக் கருதி சற்றே ஆடை விலக்கு என்றவன் அன்பு பொங்க அவள் ஆடையை நீக்கினான். உறையினின்று எடுத்த வாளைப் போல அவள் உருவம் வெளிப்பட்டு மின்னியது. எதை மறைப்பது என்பதை அறியாதவளாய்த் தன் கூந்தலால் மறைக்க வேண்டுவன மறைத்து நாணி நின்றாள். (அகம் - 136)

6. குலாலகோட்டையூர்க் குடைவரை

மு. நளினி, இரா. கலைக்கோவன்

புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் அரிமழம் சாலையில் கடியாபட்டிக்கும் இராயவரத்திற்கும் இடைப்பட்ட குலாலகோட்டையூர் எனும் ஊரின் புறத்தே காணப்படும் தாழ்வான பாறையில் கிழக்குப் பார்வையாகக் கருவறை மட்டுமே பெற்றுள்ள குடைவரைக் கோயில் அகழப்பட்டுள்ளது.[1] குடைவரைக்கு முன்னுள்ள தரையில் பின்னாளைய பலித்தளம் காணப்படுகிறது.

1. 39 மீ. உயரம், 2. 05 மீ. அகலம் பெற்றுள்ள கருவறை முன்சுவரின் நடுவில் 1. 39 மீ. உயரம், 82 செ. மீ. அகலம் உள்ள திறப்புச் செய்து மேல், கீழ் நிலைகளுடன் வாயில் அமைக்கப் பட்டுள்ளது. கருவறைத் தரையின் நீட்சியாக விளங்கும் கீழ் நிலை, வாயிலுக்கு முன் ஒரு படியென நீண்டுள்ளது.

தென்வடலாக 1. 70 மீ. நீளம், கிழக்கு மேற்காக 1. 19 மீ. அகலம், 1. 43 மீ. உயரம் பெற்றுள்ள கருவறையின் சுவர்களும் கூரையும் முழுமையுற்ற நிலையில் வெறுமையாக உள்ளன.[2] கூரை 8 செ. மீ. அளவிற்கு நீட்சி பெற்றுள்ளது. முன்சுவர் ஓட்டிய வட, தென்பாறைச் சரிவுகள் மேலிருந்து கீழாக அகலப்பட்டுத் தெற்கில் 59 செ. மீ. அளவும் வடக்கில் 58 செ. மீ. அளவும் அமைந்து தளம் ஒன்றில் முடிகின்றன. நிலத்திலிருந்து 48 செ. மீ. உயரத்தில் இத்தளம் தென்வடலாக 2. 29 மீ. நீளம், கிழக்கு மேற்காக 67 செ. மீ. அகலம் பெற்றுள்ளது. வாயிலுக்கு நேரி ருக்குமாறு தளத்தின் நடுப்பகுதியில் இரண்டு அகலமான படி கள் வெட்டப்பட்டுள்ளன. கீழ்ப்படி நிலத்திலிருந்து 32 செ. மீ. உயரத்தில் உள்ளது. படிகளை ஒட்டிய தளத்தின் பகுதி சற்றே உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது.

கருவறைத் தரையில் ஜகதி, கண்டம், கம்பு, வடிமைக்கப் படாத தாமரை வரி, பெருவாஜனம், மேற்கம்பு எனும் உறுப்புகள் பெற்ற 50 செ. மீ. உயர வேசரஆவுடையார் கருவறைப் பின்சுவருடன் ஒன்றிய நிலையில் தாய்ப்பாறையில் உருவாகியுள்ளது.[3] அதன்மீது 45 செ. மீ. உயர உருளைப்பாணம்

உள்ளது. முழுக்காட்டு நீர் கருவறையில் பரவாது வெளியேற வாய்ப்பாகக் கோமுகத்திற்குக் கீழுள்ள தரைப்பகுதியை ஒட்டிப் பாறையிலேயே வரம்பும் முன்சுவரின் வடபுறத்தே துளையும் தளத்தில் வடிகாலும் இடம்பெற்றுள்ளன. கருவறையில் கல் விளக்கொன்று காணப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத் தின் பிற குடைவரைகளோடு ஒப்பிடுகையில் இதன் காலத்தைப் பொ. கா. 9ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

குறிப்புகள்

1. ஆய்வு நாள்: 14. 03. 2010.

   இக்குடைவரையைப் படத்துடன் தம் கட்டுரையொன் றில் குறிப்பிட்டுள்ள ஜெ. ராஜாமுகமது இது இராய வரத்தில் இருப்பதாக எழுதியுள்ளார். ஆவணம், 19, பக். 174-175. ஆனால், குடைவரை குலாலகோட்டையூரில் உள்ளது. இறைவன் பெயரை மலைக்கொழுந்து ஈசுவரர் என்று ஜெ. ராஜாமுகமது குறிப்பிடுகிறார். மலைக் கொழுந்தீசுவரர் என்ற பெயரில் இராயவரத்தில் வேறொரு குடைவரைக் கோயில் இறைவன் உள்ளார். கோட்டையூர்க் குடைவரை இறைவனுக்குப் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை.

2. கருவறையின் உள்பகுதி முழுவதும் முற்றுப் பெறாத நிலையில் இருப்பதாக ஜெ. ராஜாமுகமது எழுதியிருப் பது சரியன்று. மு. கு. நூல், ப. 175.

3. தமிழ்நாட்டின் வேறெந்தக் குடைவரையின் கருவறையி லும் பின்சுவரோடு ஒன்றிய ஆவுடையாரைக் காணக் கூடாமை குறிப்பிடத்தக்கது.

7. முழங்கால் (ஜானு)

இரா. கலைக்கோவன்

இன்றைக்குக் கிடைக்கும் ஆடற்கலை நூல்களுள் காலத்தால் பழைமையானதாகக் கருதப்படுவது பரதரின் நாட்டிய சாத்திரம். ஆடல், அரங்கம் தொடர்பான தரவுகள் இலக்கண வரையறைகளுடன் இடம்பெற்றுள்ள இந்நூலின் நான்காம் இயல் தாண்டவ நிருத்தத்திற்கு அடிப்படையான 108 கரணங்களை விளக்குகிறது. சிவபெருமான் சொன்னவாறே அவர் சீடரான தண்டு பரதருக்குக் கற்றுத் தந்த இக்கரணங்கள் ஒருங்கிணைந்த கை, கால் அசைவுகளின் வழிப் பிறக்கும் உடல் நிலை எனலாம். காலசைவுகளை 'சாரி' எனும் சொல்லால் குறிக்கும் நாட்டியசாத்திரம் அவற்றை மண், விண் சார்ந்த கால்நிலைகளாகப் பிரித்துள்ளது. மண் சார்ந்த கால்நிலைகள் தரையினின்று நீங்காமல் அசைவு கொள்ள, விண் சார்ந்த கால்நிலைகள் தரை நீங்கி அமையும். கையசைவுகளை நிருத்தக் கைகளாகவும் முத்திரைக் கைகளாகவும் இருவகைப்படுத்தும் நாட்டியசாத்திரம் அவற்றை அமைக்கும் முறைகளையும் விளக்கியுள்ளது.

கரணத்தொடர்கள்

108 கரணங்களுள் பெரும்பான்மையானவற்றைத் தொடராகக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டுக் கோயில்களுள் காலத்தால் முற்பட்டது தஞ்சாவூர் இராஜராஜீசுவரம். கும்பகோணம் சார்ங்கபாணி, சிதம்பரம் நடராஜர், திருவண்ணாமலை அண்ணாமலையார், விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயில்களின் கோபுரங்களிலும் கரணத்தொடர்கள் உள்ளன. கும்பகோணம், சிதம்பரம் கரணச் சிற்பங்களின் கீழே அவை காட்டும் கரணத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளமை அடையாளப்படுத்தலுக்கு உதவுகிறது.

ஊர்த்வஜானுவும் தண்டபக்ஷமும்

அக்கால ஆடலின் அடிப்படைகளாக விளங்கிய இந்தக் கரணங்களுள் ஊர்த்வஜானுவும் தண்டபக்ஷமும் விண் சார்ந்த கால்நிலைகளுள் ஒன்றான முழங்கால் உயர்வை (ஊர்த்வஜானு சாரி) முதன்மையாகக் கொண்டு அமைந்தன. ஒரு கால் தரையில்

ஊன்ற, மறுகாலின் பாதத்தைக் குஞ்சிதமாக்கி, முழங்காலை மார்பளவு உயர்த்துவதே ஊர்த்வஜாநு சாரி. இக்கால்நிலை இரண்டு கரணங்களுக்கும் ஒன்றாக அமைந்த போதும் நிருத்தக் கைகள் அவற்றைப் பிரித்தறிய உதவுகின்றன. ஊர்த்வஜாநுவில் ஆடற்கலைஞரின் விழைவு போல் ஆடலுக்கேற்ப, நிருத்தக்கை எதுவாகவும் அமையலாம். ஆனால், தண்டபக்ஷத்தில் கையைக் கொடி (லதா) போல வளைத்து உயர்த்தப்பட்ட முழங்காலின் மேல் படரவிட வேண்டும்.

தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம் ஆகிய மூன்று கோயில்களிலும் ஊர்த்வஜாநு, தண்டபக்ஷக் கரணச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஊர்த்வஜாநு சிற்பங்களில், முழங்கால் இடுப்பளவே உயர்த்தப்பட்டுள்ளது. பரதரின் வரையறைப்படி மார்பளவு உயர்ந்திருக்க வேண்டிய இம்முழங்கால், மூன்று சிற்பங்களிலும் இடுப்பளவிலேயே நிறுத்தப்பட்டுள்ளமை கருதற்குரியது. ஆனால், கையசைவுகள் மூன்றிலும் மாறுபட்டுள்ளன.

தண்டபக்ஷக் கரணச் சிற்பங்கள் இம்மூன்று கோயில்களிலும் பரதரின் வரையறைக்கேற்ப மார்பளவு உயர்த்தப்பட்ட முழங்காலுடன் அமைந்து, அவர் கூற்றுப்படியே தஞ்சாவூரிலும் கும்பகோணத்திலும் வலக்கையை லதாவாகக் கொண்டுள்ளன. சிதம்பரத்தில் மட்டும் சிற்பத்தின் இரண்டு கைகளும் ரேசிதமாகப் பக்கவாட்டில் வீசப்பட்டுள்ளன.

கரணத்தொடர்கள் உள்ள மூன்று முதன்மைக் கோயில்களில் ஊர்த்வஜாநுவும் தண்டபக்ஷமும் காட்டப்பட்டிருக்கும் இவ்வமைப்பிலிருந்து சிற்பிகள் இவ்விரண்டு கரணங்களையும் எப்படிக் கையாண்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. கையமைப்பு எதுவாக இருந்தபோதும் முழங்கால் இடுப்பளவு உயர்த்தப்பட்டிருந்தாலே அக்கரணத் தோற்றத்தை ஊர்த்வஜாநுவாக அடையாளப்படுத்தலாம். கையமைப்பு லதாவாக இருந்து, உயர்த்தப்படும் முழங்கால் மார்பளவில் அமைந்தால் அக்கரணத் தோற்றம் தண்டபக்ஷமாகும். கையமைப்பு லதாவில் இல்லாத போதும் உயரும் முழங்கால் மார்பளவில் நிற்குமானால் அதையும் தண்டபக்ஷமாகவே கொள்ளவேண்டும் என்பதைச் சிதம்பரம் தண்டபக்ஷக் கரணச் சிற்பம் உணர்த்துகிறது.

பரதரின் கூற்றுப்படி சிதம்பரம் கரணச் சிற்பத்தின் தோற்றம் ஊர்த்வஜாநு அமைப்பென்றபோதும் கரண விளக்கச் சிற்பங்கள் அனைத்திலுமே ஊர்த்வஜாநுவின் முழங்கால் இடுப்பளவு அமைப்பாகவும் தண்டபக்ஷக் கால் மார்பளவு அமைப்பாகவும் இருப்பதால் சிதம்பரம் கரணச் சிற்பத்தை விதிவிலக்கான தண்டபக்ஷமாகக் கொள்வதே பொருந்தும்.

அமைவிடங்கள்

தமிழ்நாட்டுக் கோயில்களில் சிவபெருமான் ஆடுமாறு போலவும் ஆண், பெண் இருபாலரும் நிகழ்த்துமாறு போலவும் அமைந்த கரணச் சிற்பங்களைப் பல்லவர் காலத்திலிருந்தே காணமுடிகிறது. பெரும்பாலும் சிற்றுருவச் சிற்பங்களாக அமைந்துள்ள அவற்றைக் கண்டபாதம் (புள்ளமங்கை, குடந்தை நாகேசுவரர், திருச்சென்னம்பூண்டி முதலியன), தூண்களின் தொங்கல் (பந்தணைநல்லூர், திருமீயச்சூர், திருச்செந்துறை முதலியன), கட்டு (புள்ளமங்கை), தூண் சதுரம் (திருவையாறு, திருவிடைமருதூர், திருவிசலூர் முதலியன), தூண் கொடி வளையம் (திருமீயச்சூர், தாராசுரம் முதலியன), மகரதோரணம் (கீழையூர், புள்ளமங்கை, மழபாடி முதலியன), கபோதக்கூடு (திருப்பழனம், தாராசுரம், திருந்துதேவன்குடி முதலியன) ஆகிய இடங்களில் பார்க்கமுடிகிறது. மிகச் சில கோயில்களில் இவை அளவில் பெரியனவாய்க் கோட்டச் சிற்பங்களாகவும் (திருப்பட்டூர், காஞ்சிபுரம் முதலியன), தாங்கு சிற்பங்களாகத் தூண் பலகைக்கும் கபோதத்திற்கும் இடைப்பட்டும் (மேலைக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் முதலியன) இடைநிலைச் சிற்பங்களாய்க் கூரைகளிலும் (பிரான்மலை, விருத்தாசலம் முதலியன), சுவர்களிலும்கூட (மரக்காணம்) காட்சிதருகின்றன.

காலநிரலான காட்சி

சோழமண்டலத்தில் பரவலாகவும் தொண்டை மண்டலத்திலும் பாண்டியர் பகுதியிலும் குறைந்த அளவிலும் பதிவாகியுள்ள இக்கரணச் சிற்பங்களுள் ஊர்த்வஜாநு, தண்டபக்ஷக் கரணக்கோலங்களைப் பல்லவர் காலத்திலிருந்தே காணமுடிகிறது. அவற்றை நிகழ்த்துபவராக சிவபெருமானையே பல்லவச் சிற்பிகள் காட்சிப்படுத்தியுள்ளனர். காலத்தால் முற்பட்ட

ஊர்த்வஜானு சிற்பம் சிராப்பள்ளி மாவட்டத் திருப்பட்டூர்க் கயிலாசநாதர் கோயிலிலும் தண்டபக்ஷச் சிற்பம் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலிலும் இடம்பெற்றுள்ளன. பல்லவர் காலத்ததாகக் கருதத்தக்கதும் கூரத்தில் கிடைத்ததுமான சிவ பெருமானின் ஊர்த்வஜானு செப்புத்திருமேனி சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.

விஜயாலய மரபுச் சோழர்களின் காலத்தே (பொ. கா. 850-1070) இவ்விரண்டு கரணங்களிலும் சிவபெருமானின் தோற்றங்கள் மிகுதியாகவும் ஆண், பெண் இருபாலரும் நிகழ்த்துமாறு அமைந்த சிற்பங்கள் குறைவாகவும் உருவாயின. ஆனால், சளுக்கியச் சோழர்களின் படைப்புகளாக இவ்விரு கரணங்களையும் காரிகையர் நிகழ்த்தும் சிற்பங்களே மிகுதியாக உள்ளன. சிவபெருமானின் கரணக்கோலங்கள் அருகியே காணப்படுகின்றன.

பாண்டியர் பகுதியில் இறைவன் நிகழ்த்துமாறு போலச் சில கரணச் சிற்பங்களை முற்பாண்டியர் குடைவரைகளில் காணமுடிந்தாலும் ஊர்த்வஜானுவோ, தண்டபக்ஷமோ இடம் பெறவில்லை. இரண்டாம் பாண்டிய அரசுக் காலத்தே அமைந்த ஆடற்சிற்பங்களில், இவ்விரண்டு கரணங்களையும் நங்கையர் நிகழ்த்துமாறு அமைந்த படைப்புகளைப் பிரான்மலைக் கோயிலில் காணமுடிகிறது. விஜயநகர, நாயக்க அரசர்கள் கட்டுமானங்களில் இக்கரணச் சிற்பங்கள் அரிதாகவே தென்பட்டபோதும் திருக்கோடிக்கா, நெடுங்களம், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் முதலிய சில கோயில்களில் தொடராக அமைந்துள்ள கோலாட்டச் சிற்பங்கள் சில ஊர்த்வஜானுவில் உள்ளமையைக் குறிக்கலாம்.

ஊர்த்வஜானு

முழங்கால் உயர்த்தப்படுவதை மையமாக வைத்து உருவான இவ்விரண்டு கரணங்களுள் ஊர்த்வஜானுவே தமிழ் நாட்டுக் கோயில்களில் அதிக அளவில் காணப்படுகிறது. பல்லவர் காலந்தொட்டு விஜயநகர அரசர் காலக் கோலாட்டக் காட்சிகள்வரை தொடர்ந்து ஒளிரும் இக்கரணத்தை வெளிப்படுத்துமாறு அமைந்த சிற்பங்கள் இரு நிலைகளில் காணப்படு

கின்றன. உயர்த்தப்பட்ட முழங்கால் இடுப்பிற்குக் கீழிருக்கு மாறு உள்ள சிற்பங்களை ஊர்த்வஜாநுவின் முதல் நிலைச் சிற்பங்களாகவும் இடுப்பளவில் இருக்குமாறு உள்ளவற்றை இரண்டாம் நிலைப் படைப்புகளாகவும் கொள்ளலாம்.

முதல்நிலை ஜாநுவில் சிவபெருமான்

சிவபெருமான் ஆடுமாறு அமைந்த முதல் நிலை ஊர்த்வ ஜாநு சிற்பங்கள் சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த திருப்பட்டூர், வயலூர், திருமழபாடி, திருச்சென்னம்பூண்டி, புள்ளமங்கை, உடையார்குடிக் கோயில் களில் காணப்படுகின்றன. அவற்றுள் பட்டூர்ச் சிற்பம் பல்லவர் பணியாக அமைய, ஏனைய ஐந்தும் முற்சோழர் படைப்பு களாகும். இவற்றுள் மூன்று மகரதோரணத்திலும் ஒன்று கண்டபாதத்திலும் ஒன்று தூண் சதுரத்திலும் பட்டூர் ஊர்த்வ ஜாநு கோட்டச் சிற்பமாய்ப் பேரளவினதாகவும் அமைந்துள் ளன. இந்த ஆறு கரணத்தோற்றங்களில் உறுப்புகளின் ஒருங் கிணைவால் விளையும் செவ்விய உடலமைப்பு (நாட்டிய சாத்திரம் குறிப்பிடும் சௌஷ்டவம் - அங்கசுத்தம்) புள்ள மங்கைச் சிற்பத்தில் மிகச் சிறப்பாகவும் சென்னம்பூண்டிச் சிற்பத்தில் நன்கும் அமைந்துள்ளது.

ஊர்த்வஜாநுவாக உயர்த்தப்பட்டிருக்கும் முழங்கால் ஆறிலும் வலப்புறத்ததாக அமைய, இடக்கால் பாதங்கள் அனைத்திலும் பார்சுவமாக உள்ளன. பட்டூரும் புள்ளமங்கை யும் ஏறத்தாழ ஒன்று போல் அமைந்த வலக்கால் உயர்வைக் கொண்டுள்ளன பரதர் குறிப்பிடும் குஞ்சிதபாதம் உடையார் குடிச் சிற்பத்தில் மட்டுமே காட்டப்பட்டுள்ளது. ஏனையவற் றில் வலக்கால் பாதம் கீழ்நோக்கியும் இடக்கால் பார்த்தும் சற்றே மேல்நோக்கியும் அமைந்துள்ளமையைக் காணமுடி கிறது. பட்டூர், மழபாடிச் சிற்பங்கள் எட்டுக் கைகள் பெற, ஏனைய நான்கும் நான்கு கைகளுடன் உள்ளன. பட்டூர்ச் சிற்பத் தின் வல முன் கை பதாகத்தில் அமைய, ஏனைய ஐந்தும் காக்கும் குறிப்புக் காட்டுகின்றன. அனைத்துச் சிற்பங்களிலும் வலப் பின் கை உடுக்கை கொண்டுள்ளது. எட்டுக் கைகளுடன் அமைந் துள்ள பட்டூர்ச் சிற்பத்தின் இரண்டாம் மூன்றாம் வலக்கைகள்

திரிபதாக முத்திரையிலும் மழுவேந்தியும் காட்சிதர, மழபாடியில் ஒரு கையில் பாம்பும் மற்றொரு கையில் அடையாளப் படுத்த முடியாத பொருளொன்றும் உள்ளன.

இச்சிற்பங்களின் இட முன் கை நான்கில் அர்த்தரேசித மாகவும் இரண்டில் வேழக்கையாகவும் உள்ளன இடப் பின் கை மூன்றில் தீயகல் கொள்ள, இரண்டில் அவை வியப்பு முத்திரையில் விரிந்துள்ளன. புள்ளமங்கைச் சிற்பத்தின் இடப் பின் கையில் தலையோடு. பட்டூரில் ஒரு கை முத்தலைஈட்டி கொள்ள, மற்றொரு கைப்பொருளை அறியக்கூடவில்லை. மழபாடியிலோ இக்கைகளில் ஒன்று தீயகல் ஏந்த, மற்றொன்று கர்த்தரி முத்திரையில் உள்ளது.

அனைத்து சிவவடிவங்களும் இடுப்பில் சிற்றாடையும் இடைக்கட்டும் கொண்டிருந்தபோதும் அவற்றின் அமைப்பும் அலங்கரிப்பும் ஆட்ட வேகத்திற்கேற்ப அவற்றில் காட்டப் பட்டிருக்கும் அலைப்பும் சிற்பிகளின் கைத்திறனுக்குச் சான்றாகின்றன. மழபாடி சிவபெருமான் நேர்முகம் காட்ட, ஏனைய ஐவரும் தலையை வலப்புறம் சாய்த்துள்ளனர். மழபாடி, பட்டூர், வயலூர் ஆடலர்கள் இடப்புறம் பார்வை திருப்ப, சென்னம் பூண்டியார் முழவிசைக்கும் கலைஞரைக் கண்ணோட்டமிடுகிறார். புள்ளமங்கையாருக்கு மேனோக்கிய பார்வை உடையார் குடியாரோ நேர்ப்பார்வையர்.

இசையில்லாமல் ஆடலில்லைதான். ஆனாலும், புள்ள மங்கை இறையாடலுக்குக் கலைஞர்களின் கையிணைவு இல்லை. சென்னம்பூண்டியிலோ, 'குடமுழவச் சதி வழி' மட்டுமே ஆடல் நிகழ்கிறது. பட்டூர் தவிர்த்த ஏனைய மூன்றில் குட முழவம் உள்ளபோதும் கூடுதலாக இலைத்தாளமும் செண்டு தாளமும் துணையாகியுள்ளன. பட்டூரில் முழவிசைப்பவரைக் காணமுடிந்தபோதும் முழவு உள்ள பகுதி சிதைந்திருப்பதால் முழவின் அமைப்பை அறியக்கூடவில்லை. இங்குக் கூடுதலாகச் சிரட்டைக்கின்னரிக் கலைஞர் இடம்பெற்றுள்ளார். மூன்று கலைஞர்கள் இருக்கும் மழபாடியிலும் நான்கு கலைஞர்கள் உள்ள உடையார்குடியிலும் முழவு, தாளம் தவிர்த்த பிற இசைக்கருவிகளை அடையாளப்படுத்த முடியவில்லை.

குடமுழவர்கள் அனைவருமே இரண்டு கால்களுக்கிடையில் முழவை இருத்தி, இருகைகளாலும் அதை இயக்கினும், அவர்தம் பார்வையும் அதில் விரியும் உணர்வுகளும் மாறுபட்டே உள்ளன. நான்கு முழவர்கள் இடப்புறத்தராய் இருந்த போதும் மூவர் பார்வை இறைவனை நோக்கியுள்ளது. சென்னம் பூண்டியாரோ தாளத்திலேயே குறியாக இருக்கிறார். வயலூர் முழவர் வலப்புறத்தர். இவர்களுள் சிலர் ஒரு கையால் முழவிசைத்து, மறு கையால் இறையாடலைப் போற்றும் காட்சியையும் காணமுடிகிறது.

இந்த ஆறு சிற்பங்களில் உடையார்குடியார், மழபாடியார் ஆடலைப் பார்ப்பவராய் உமை இடம்பெற்றுள்ளார். மேகத் திற்கிடையில் நிகழுமாறு போலக் காட்டப்பட்டுள்ள மழபாடி ஆடற்காட்சியில் ஆடலரின் இடப்புறத்தே மேற்பகுதியில் ஒரு கால் மடக்கி நிற்குமாறு காட்டப்பட்டிருக்கும் உமாவின் தோற்றம் எழிலார்ந்தது. இச்சிற்பத்தில் இறைவனின் வலப் புறத்தே இடுப்பில் கைகள் இருத்திய நிலையில் காளியும் காட்டப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பு. தமிழ்நாட்டின் வேறெந்த ஊர்த்வஜாநு கரணத்தோற்றத்திலும் காளி இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வயலூர்க் கரணர் இடம்பெற்றுள்ள மகரதோரணக் குழிவைச் சுற்றிலும் உள்ள தோரணத்தில் காட்சிதரும் கரணக் காரிகைகள் அச்சிற்பத்தைத் தனித் தன்மைய தாக்கியுள்ளனர். ஆறு கரணர்களில் மிடுக்கும் வீச்சும் விரைவும் காட்டுபவராய்ப் புள்ளமங்கைக் கரணரைக் குறிக்கலாம்.

இரண்டாம் நிலை

சிவபெருமானின் இரண்டாம் நிலை ஊர்த்வஜாநு சிற்பங்கள் சிராப்பள்ளி, தஞ்சாவூர், அரியலூர் மாவட்டங்களின் திருச்செந்துறை, சீனிவாசநல்லூர், கும்பகோணம், திருவிசலூர், திருவையாறு, திருக்கோடிக்கா, கீழையூர், மழபாடி ஆகிய ஊர்களில் இடம்பெற்றுள்ளன. திருக்கோடிக்காவில் காணப்படும் இரண்டு சிற்பங்களில் ஒன்று வல முழங்காலையும் (கோடிக்கா 1) மற்றொன்று இட முழங்காலையும் (கோடிக்கா 2) உயர்த்தியுள்ளன. முற்சோழர் காலத்தனவான இச்சிற்பங்கள் தூண் தொங்கலில் இரண்டும் கண்டபாதத்தில் மூன்றும் தூண் சதுரத்தில் இரண்டும் மகரதோரணத்தில் ஒன்றும் பலகைச் சிற்பமாக

ஒன்றும் உள்ளன. தனித்தும் கலைஞர்களுடனும் காட்சிதரும் இச்சிற்பங்களுள் மழபாடி சிவபெருமானே சௌஷ்டவ நாயக ராகத் திகழ்கிறார். செந்துறை, கோடிக்கா, சீனிவாசநல்லூர் ஆடலர்கள் இவருக்கு அடுத்த நிலையில் சௌஷ்டவம் காட்டு கின்றனர்.

இவ்விரண்டாம் நிலை ஊர்த்வஜானு சிற்பங்களுள் வல முழங்காலை உயர்த்தியனவாய் ஐந்து அமைய, மழபாடி, விசலூர், கோடிக்கா-1, ஐயாறு சிற்பங்கள் இட முழங்காலை உயர்த்தி யுள்ளன. இவை நான்கும் வலப்பாதத்தைப் பார்சுவமாகக் கொள்ள, ஏனைய ஐந்தும் இடப்பாதத்தைப் பார்சுவமாக்கி யுள்ளன. உயர்த்தப்பட்ட முழங்காலின் பாதம் ஒன்பது சிற்பங் களில் ஒன்றில்கூட குஞ்சிதமாக அமையவில்லை. பாதத்தின் பார்வை முதல்நிலை போலவே பன்முகமாக உள்ளது.

ஆறு சிற்பங்கள் நான்கு கைகள் கொள்ள கும்பகோணம், கோடிக்கா-1, கீழையூர்ச் சிற்பங்கள் எட்டுக்கைகள் பெற்றுள் ளன. எட்டுச் சிற்பங்கள் வல முன் கையைக் காக்கும் குறிப்பில் கொள்ள, கோடிக்கா-2ன் வல முன் கை அர்த்தரேசிதத்தில் உள்ளது. எட்டுச் சிற்பங்கள் வலப் பின் கையில் உடுக்கை காட்ட, கோடிக்கா-2 முத்தலைஈட்டி பெற்றுள்ளது. அர்த்த ரேசிதம் எட்டுச் சிற்பங்களின் இட முன் கை காட்டும் நிருத்தக் கையாக அமைய, கோடிக்கா-2 அந்தக் கையில் காக்கும் குறிப்புக் கொண்டுள்ளது. ஐந்து சிற்பங்கள் இடப் பின் கையில் தீயகல் காட்ட, இரண்டில் முத்தலைஈட்டியும் இரண்டில் வியப்பு முத்திரையும் இடம்பெற்றுள்ளன. எட்டுக் கைகள் பெற்றுள்ள கோடிக்கா-1இல் வலக்கைகளுள் ஒன்று மழு பெற, இட இடைக்கைகள் முத்தலைஈட்டியும் பாம்பும் கொண்டுள்ளன. கீழையூரார் வல, இட இடைக்கைகளில் முத்தலைஈட்டி, குறுந் தடி, தலையோடு, பாம்பு ஆகியன பெற்றுள்ளார். கும்பகோணத் தாரின் இடைக்கைகளில் ஒன்றில் தலையோடு உள்ளது. இம்மூன்று சிற்பங்களின் பிற கைக்கருவிகளை அடையாளப் படுத்தமுடியவில்லை.

ஆடையமைப்பு ஒன்பதிலும் முதல் நிலை ஊர்த்வஜானு போலவே சிற்றாடையும் இடைக்கட்டும் என உள்ளது. தலைச் சாய்வு நான்கில் வலப்புறமாகவும் மூன்றில் இடப்புறமாகவும்

அமைய, ஐயாறு, செந்துறைச் சிற்பங்கள் நேர்நோக்கியனவாய் உள்ளன கலைஞர்களற்ற தனித்த ஆடலர்களாய்ச் செந்துறை, ஐயாறு சிற்பங்கள் அமைய, ஏனைய ஏழும் இசை பெற்றே கரணம் காட்டுகின்றன அவற்றுள் கீழையூர்ச் சிற்பமே ஐந்து கலைஞர்கள் கொண்டுள்ளது. ஒருவர் இரண்டு ஒருமுக முழவு களை அருகருகே நிறுத்தி ஒலிக்க, நீண்ட குழலொன்றை மற்றொருவர் இசைக்க, செண்டு தாளமும் இலைத்தாளமும் உடன் பயில, நரம்புக் கருவியாகச் சிரட்டைக்கின்னரி இடம் பெற்றுள்ளது. கீழையூர் தவிர்த்த ஆறு சிற்பங்கள் குடமுழவு கொள்ள, கோடிக்கா-2இல் மட்டுமே முழவர் வலப்புறம் அமர்ந் துள்ளார். மழபாடி ஆடலருக்குக் குடமுழவு மட்டுமே இசை கூட்டுகிறது ஏனைய கரணர்கள் முழவொலியுடன் செண்டு தாளம் அல்லது இலைத்தாள இசையும் பெற்றுள்ளனர்.

ஆடல், இசை இரண்டும் இயைந்து உச்சக்காட்சியாகப் படம்பிடிக்கப்பட்டிருப்பது கீழையூர்ச் சிற்பமே. இதில்தான் ஐந்து இசைக்கலைஞர்களும் கருவியோடும் கரணரோடும் ஒன்றி ஆடலுக்கு உயிர்ப்பூட்டுவதோடு, காட்சியின் தன்மையை யும் பன்மடங்கு உயர்த்தியுள்ளனர். கூடுதல் சிறப்பாகச் சூரிய னும் சந்திரனும் மலரேந்திய கையர்களாய் இந்த ஆடலுக்குப் போற்றிப் பாடுகின்றனர். சீனிவாசநல்லூரில் இறையாடல் பார்க்கும் நந்தியின் முழுமையான வடிவம் வேறெந்தக் கரணக் காட்சியிலும் காணவியலாச் சிறப்பாகும். கோடிக்கா-2இன் தனித்துவமாக அதில் உமை இடம்பெற்றிருப்பதையும் இறைவ னின் முப்புரிநூல் நிவீதமாகக் காட்சிதருவதையும் குறிக்கலாம். செந்துறை சிவபெருமான் வேறெவரும் கொள்ளாத பெரு முத்துத் தலைப்பட்டம் தம் சடைமகுடத்தைச் சூழ்ந்திருக்க ஆடுகிறார்.

மானுடர் ஜாநு முதல்நிலை

இறையாடல் சிற்பங்கள் போலவே மனிதர்கள் ஆடுமாறும் ஊர்த்வஜாநு கோலங்கள் தமிழ்நாட்டுக் கோயில்களில் காணக் கிடைக்கின்றன. அவையும் சிவச் சிற்பங்கள் போலவே இரண்டு நிலைகளில் உள்ளன. முதல்நிலைச் சிற்பங்கள் சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, கடலூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்

டங்களைச் சேர்ந்த திருவரங்கம், வலஞ்சுழி, இடைமருதூர், தாராசுரம், மீயச்சூர், பந்தணைநல்லூர், நல்லூர், விஜயாலய சோழீசுவரம், விருத்தாசலம், மரக்காணம் கோயில்களில் இடம் பெற்றுள்ளன. முத்தரையர், முற்சோழர், பிற்சோழர் காலத்தன வாக உள்ள இச்சிற்பங்கள், கோயில் தூண்களின் தொங்கல், கொடி வளையம், சதுரம் ஆகியவற்றிலும் கண்டபாதம், கபோதக் கூடு, தளச்சுவர், ஆரச்சுவர், கூரை ஆகிய இடங்களிலும் செதுக்கப்பட்டுள்ளன. சௌஷ்டவம் எனப்படும் செவ்விய உடலமைப்பு விஜயாலய சோழீசுவரத்திலும் தாராசுரத்திலும் செம்மையாகப் படம்பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பன்னிரண்டு சிற்பங்களுள் திருவரங்கச் சிற்பம் மட்டுமே இருவர் ஆடுமாறு போல அமைந்துள்ளது. இதில் ஆடும் ஆடவர் இருவரில் ஒருவர் வல முழங்காலையும் மற்றொருவர் இட முழங்காலையும் உயர்த்தியுள்ளனர். ஏனைய பதினொன்றனுள் ஐந்து சிற்பங்களில் இட முழங்காலும் ஆறு சிற்பங்களில் வல முழங்காலும் உயர்த்தப்பட்டுள்ளன. ஒரு சிற்பத்தில்கூடப் பாதம் குஞ்சிதமாக இல்லை. என்றாலும், பாதத் தின் பார்வை பன்முகமாகவே உள்ளது. ஊன்றியுள்ள காலின் பாதம் அனைத்துச் சிற்பங்களிலும் பார்சுவமாகவே உள்ளது. அனைத்து ஆடலர்களுமே சிற்றாடையும் இடைக்கட்டும் அணிந்திருந்தபோதும் ஒவ்வொன்றிலும் ஆடையமைப்பு மாறு பட்டுள்ளது. சில இடங்களில் இடைக்கட்டு முடிச்சுகளும் தொங்கல்களும் ஆட்ட விரைவிற்கேற்பப் பரந்தும் தொய்ந்தும் காட்டப்பட்டுள்ளமை காணத்தக்கது. வலஞ்சுழி ஆடலர் மடிப்பாடை அணிந்து தனித்துக் காட்சிதருகிறார். திருவரங்கம், இடைமருதூர் ஆடலர்கள் ஆடவராய் அமைய, ஏனைய பத்து இடங்களிலும் பெண்களே கரணம் நிகழ்த்துகின்றனர்.

மரக்காணம், தாராசுரம் ஆடற் பெண்கள் இரண்டு கை களையும் ரேசிதமாக்க, பிற இடங்களில் வலக்கை அர்த்த ரேசிதம், வேழம், டோலம், கடகம், உயர்த்தப்பட்ட பதாகம் ஆகிய அமைப்புகளில் உள்ளது. இடக்கையை அர்த்தரேசித மாக மூவரும் கடகமாக மூவரும் காட்ட, இருவர் நெகிழ்கை யாக்கியுள்ளனர். ஒருவர் பதாக முத்திரை கொள்ள, மற்றொரு வர் அக்கையில் முத்தலைஈட்டி ஏந்தியுள்ளார். விஜயாலய

சோழீசுவரம், பந்தணைநல்லூர், மீயச்சூர், வலஞ்சுழி, தாராசுரப் பெண்கள் இசைக்கலைஞர்கள் இன்றித் தனித்தாட, ஏனையர் வீணை, இடக்கை, தாளம், மத்தளம் எனும் கருவிகளின் இசைக்கு ஆடுகின்றனர். இக்கலைஞர்களில் பெண்களும் ஆண்களும் இணைய உள்ளனர். இப்பன்னிரண்டு கரணச் சிற்பங்களில் நெடிய திருமேனியாகவும் எழிலார்ந்த ஆடற்கோலமாகவும் நளின நங்கையாகவும் வடிக்கப்பட்டிருப்பது விஜயாலய சோழீசுவரச் சிற்பம் என்றால், ஒயிலும் ஒசிந்த கோலமும் கண்களை ஈர்க்கும் கவர்ச்சியும் தாராசுரத்தழகியைப் பார்வையில் நிறைத்துப் பதிவுசெய்கிறது.

இரண்டாம் நிலை

ஊர்த்வஜானுவின் இரண்டாம் நிலையில் உருவாக்கப் பட்டிருக்கும் மானுடச் சிற்பங்கள் தஞ்சாவூர், சிவகங்கை, கடலூர், சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த தாராசுரம் (2), மீயச்சூர், பந்தணைநல்லூர், ஐயாறு, புள்ளமங்கை, பிரான்மலை (3), மேலைக்கடம்பூர், திருவரங்கம், வேங்கடத்தான் துறையூர் முதலிய ஊர்களில் முற்சோழர், பிற்சோழர், பிற்பாண்டியர் காலச் சிற்பங்களாகக் கோயில் தூண்களின் தொங்கல், கொடிவளையம், சதுரம், கண்டபாதம், கபோதக்கூடு ஆகிய இடங்களிலும் தாங்கு சிற்பங்களாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் செவ்விய உடல்நிலை காட்டுவனவாகத் தாராசுரம், மேலைக் கடம்பூர்ச் சிற்பங்களைக் குறிக்கலாம்.

அச்சிற்பங்களுள் பதினொன்று தனிக் கரணர்களையும் பிரான்மலைச் சிற்பமொன்று இருவர் இணைந்து ஆடும் நிலையையும் படம்பிடித்துள்ளன. பிரான்மலைத் தொகுதியில் காட்டப்பட்டுள்ள இரண்டு ஆடற்பெண்களில் ஒருவர் ஊர்த்வ ஜானுவின் முதல் நிலையிலும் இரண்டாமவர் அதன் இரண்டாம் நிலையிலும் வல முழங்காலை உயர்த்தியுள்ளனர். ஏனைய பதினொரு சிற்பங்களில் வல முழங்காலை உயர்த்தியிருப்பன ஏழு நான்கில் இடமுழங்கால் உயர்த்தப்பட்டுள்ளது. ஜானுவின் முதல் நிலை போலவே இங்கும் குஞ்சிதபாதம் காணுமாறு இல்லை. ஆனால், உயர்த்தப்பட்டுள்ள பாதம் பன்முகப் பார்வையிலேயே உள்ளது. ஊன்றியுள்ள கால் பார்சுவமாக அமைந்

துள்ள இப்பன்னிரண்டு சிற்பங்களில், பதினொன்று பெண் களைக் காட்சிப்படுத்த, ஐயாற்றில் மட்டும் ஆடவர் ஆடல் அமைந்துள்ளது. தாராசுரச் சிற்பம் பட்டாடை கொள்ள, பலர் சிற்றாடையும் இடைக்கட்டுமாய் உள்ளனர். பிரான்மலைக் கரணர்கள் சற்று மாறுபட்ட ஆடையமைப்புப் பெற்றுள்ளனர்.

வலக்கையை எண்மர் பதாகமாகக் கொள்ள, இருவர் வேழக்கையாகவும் ஒருவர் அர்த்தரேசிதமாகவும் வீசியுள்ளனர். வேங்கடத்தான் துறையூர்ப் பெண் அக்கையை விரிதாமரையாய் (அலபத்மம்) கொண்டுள்ளார். இடக்கை வேழம், அர்த்தரேசி தம் ஆகிய நிருத்தக் கைகளிலும் நெகிழ்கையாகவும் காட்டப் பட்டுள்ளதுடன், வியப்பு, விரிதாமரை, கடகமுத்திரைகளிலும் உள்ளது ஒரு பெண் இடக்கையை இடுப்பில் வைத்துள்ளார். பிரான்மலைத் தொகுதியில் ஒருவரது இடக்கை இடுப்பிலும் மற்றொருவர் இடக்கை மேல்நோக்கிய பதாகமாகவும் அமைய, இருவரும் வலக்கையை அர்த்தரேசிதத்தில் வீசியுள்ளனர்.

ஆறு சிற்பங்களில் ஆடல் இசைக்கலைஞர்கள் துணை யின்றித் தனித்து நிகழ, ஏனையவற்றில் மத்தளம், இடக்கை, செண்டுதாளம் ஆகியவற்றை இயக்குபவர்களாய் ஆண், பெண் இசைக்கலைஞர்களைக் காணமுடிகிறது. இப்பன்னிரண்டு சிற்பங்களில் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாய் அனைத்து வகைகளிலும் உயர்ந்தோங்கி நிற்கும் சிற்பங்கள் பிற்சோழர் காலத்தில் மலர்ந்த தாராசுரம், மேலைக்கடம்பூர் படைப்புகளே என்பது குறிப்பிடத்தக்கது.

ஊர்த்வஜானு செப்புத்திருமேனிகள்

இரண்டாம் நிலை ஊர்த்வஜானு கரணத்தில் அமைந்த சிவபெருமானின் பல்லவ, சோழர் காலச் செப்புத்திருமேனிகள் மூன்றும் அண்மைக் காலத்தனவான முதல் நிலை ஊர்த்வஜானு திருமேனிகள் இரண்டும் கிடைத்துள்ளன பல்லவர் கால ஊர்த்வஜானு கூரத்தில் கிடைத்துத் தற்போது சென்னை அருங் காட்சியகத்தில் உள்ளது. சோழர் காலத் திருமேனிகளில் ஒன்று திருவக்கரை சிவன்கோயிலிலும் மற்றொன்று மயிலாடுதுறை ஆனந்ததாண்டவபுரம் சிவன்கோயிலிலும் உள்ளன.

பல்லவர் காலக் கூரம் திருமேனி இட முழங்காலை உயர்த்தி யுள்ளது. குப்புறப் படுத்துள்ள முயலகன் மீது இடப்பாதத்தைத் திரயச்ரமாக்கியுள்ள பெருமானின் வல முன் கை காக்கும் குறிப்பிலும் இட முன் கை வேழக்கையாகவும் அமைய, பின் கைகளில் வலப்புறம் உடுக்கையும் இடப்புறம் பாம்பும் உள்ளன. தாண்டவபுரத்தார் இட முழங்காலை உயர்த்தி, வலப்பாதத்தை முயலகன்மீது திரயச்ரமாக்கியுள்ளார். வல முன் கை காக்கும் குறிப்பிலிருக்க, இட முன் கை வேழ வீச்சில் உள்ளது. பின்கை களில் வலப்புறம் உடுக்கை, இடப்புறம் தீயகல். திருவக்கரையார் கூரத்தார் போல வல முழங்காலை உயர்த்தியிருந்தபோதும் உயர்த்தல் மேனோக்கி அமையாமல் பக்கவாட்டில் உள்ளது. குப்புறப் படுத்திருக்கும் முயலகன் மீது இடப்பாதம் பார்சுவ மாகப் பின்கைகளில் வலப்புறம் உடுக்கை, இடப்புறம் தீயகல். இட முன் கை மற்ற இருவர் போலவே வேழமாக இருந்த போதும் வல முன் கை கடகத்தில் காட்டப்பட்டுள்ளது.

இம்மூன்று திருமேனிகளில் தாண்டவபுரத்தார் இடப் பார்வை கொள்ள, கூரத்தார் நேர்நிமிர்ந்த முகத்தராய்க் காட்சி தருகிறார். திருவக்கரையார் முகம் இடத்திருப்பமாய் உள்ளது. தொடையளவாய் உடலோடு ஒட்டிய இடையாடையும் இடைக்கட்டும் மூவருக்கும் உள்ளபோதும் அவற்றின் அமைப் பும் இடைக்கட்டுத் தொங்கல்களின் பரவலும் பெரிதும் மாறுபட்டுள்ளன. அது போலவே சடைமகுட அலங்கரிப்பு, குண்டலங்கள், அணிகலன்கள் என அனைத்திலும் குறிப்பிடத் தக்க மாறுபாடுகளைக் காணமுடிகிறது. சிவபெருமானின் ஊர்த்வஜாநு கற்சிற்பங்களில் காணமுடியாத முயலகன் இக்கரணத் திருமேனிகளில் கிடந்த கோலத்தில் இறையடி தாங்குநராய்ச் சிறக்கக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. முகத்தோற்றத்திலும் அதன் உணர்வலைகளிலும் இணை யற்றதாய் விளங்கும் கரணத்திருமேனி திருவக்கரையினது என்றாலும், கரண வீச்சில் முதலிடம் பெறுபவர் கூரக் கரணரே.

பூம்புகார் விற்பனை நிலையத்தில் கண்ட சிவபெருமா னின் ஊர்த்வஜாநு திருமேனி வலப்பாதம் தரையில் திரயச்ர மாக அமைய, இட முழங்காலை உயர்த்திப் பாதத்தைப் பட மெடுத்த பாம்பின் தலைமீது இருத்தியுள்ளது. முன்கைகளுள்

வலக்கை காக்கும் குறிப்பிலும் இடக்கை அர்த்தரேசிதத்திலும் உள்ளன. பின்கைகளில் மழு, மான். சிற்றாடையும் இடைக் கட்டும் கொண்டுள்ள இப்பெருமான் இடப்பார்வையில் உள்ளார். ஆடரங்கொன்றில் பார்த்த சிவபெருமானின் ஊர்த்வ ஜாநு கோலம் வல முழங்காலை உயர்த்தி, தரையில் ஊன்றி யுள்ள இடக்கால் பாதத்தைப் பார்சுவமாக்கியுள்ளது. குறங்கு செறி இறுக்கிய சிற்றாடையும் இடைக்கட்டுமாய் விளங்கும் இத்திருமேனியின் பின்கைகளில் உடுக்கை, தீயகல். வல முன் கை காக்கும் குறிப்பிலிருக்க, இட முன் கை வேழவீச்சில் உள்ளது. இதன் இருபாதங்களும் குப்புறப் படுத்திருக்கும் முயலகனின் தலைமீதும் முதுகின் கீழ்ப்புறத்தும் இருத்தப்பட்டுள்ளன.

இவ்விரண்டு பின்னாளைய திருமேனிகளுமே பல புத்திணைவுகள் பெற்றுச் சிறக்கின்றன. இரண்டு கரணர்களின் வல முன் கைகளையும் படமெடுத்த பாம்பு தழுவியுள்ளது. அரங்கக் கரணர் சடைமகுடமும் விரிசடையும் இணையப் பெற்றுத் திருவாசி சூழ ஆடும் தமிழ்நாட்டின் ஒரே ஊர்த்வ ஜாநராய் மிளிர, பூம்புகார்ச் செல்வர் உமையையும் ஜாநு கரணத்தில் தனித்த திருமேனியாய் உடன் கொண்டு ஒளிர் கிறார். உமை வல முழங்கால் உயர்த்தி, வலக்கையை வேழத்தில் வீசி, இடப்பாதம் திரயச்ரமாக, இடக்கையில் கடகம் காட்டி மகிழ்கிறார். தமிழ்நாட்டில் கிடைக்கும் உமையின் ஒரே ஜாநு கரணத் தோற்றம் இதுதான் எனலாம். இதைக் கருவுயிர்த்த கற்பனையாளர் உமையையும் தாண்டவ நிருத்தத்தில் சிவனோடு இணைத்த முதல் மனிதராய்ச் சிறக்கிறார்.

தண்டபக்ஷம்

உயர்த்தப்பட்ட முழங்காலைக் கொடியெனத் தவழும் கை தொடுமாறு அமைந்த தண்டபக்ஷமும் சிவபெருமான் ஆடுவது போலவும் மானுடர் ஆடலாகவும் தமிழ்நாட்டுக் கோயில்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மார்பளவு உயர்த்தப்படும் முழங் காலே இக்கரணத்தை ஊர்த்வஜாநுவில் இருந்து பிரித்தறிய உதவு கிறது. அதனாலேயே, கையமைவுகள் எப்படியிருந்தபோதும் முழங்கால் உயர்த்தலை முதன்மை அளவுகோலாகக் கொண்டு இக்கரணம் அடையாளப்படுத்தப்படுகிறது.

இறைவனின் தண்டபக்ஷம்

அரியலூர், சிராப்பள்ளி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் எனும் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த மழபாடி, துடையூர், புள்ள மங்கை, திருப்பழனம், காஞ்சிபுரம் கோயில்களில் பல்லவர் படைப்பாக ஒன்றும் முற்சோழர் உருவாக்கமாக நான்கும் இறைவ னின் தண்டபக்ஷக் கரணக் கோலங்களாகக் காட்சிக்குக் கிடைக்கின்றன. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் கோட்டச் சிற்பமாகவும் மழபாடியில் பலகைச் சிற்பமாகவும் பழனத்தில் கபோதக்கூட்டிலும் துடையூரிலும் புள்ளமங்கையிலும் கண்ட பாதச் சிற்பமாகவும் அமைந்துள்ள இறைவனின் இக்கரணக் கோலம், அமைந்துள்ள அனைத்து இடங்களிலும் செவ்விய உடலமைப்புடன் காட்டப்பட்டிருந்தபோதும் இணையற்ற தாகப் புள்ளமங்கைக் கரணமே முதன்மை பெறுகிறது.

மழபாடிக் கரணர் இட முழங்காலை மார்பளவு உயர்த்தி யிருக்க, ஏனைய நால்வரும் வல முழங்காலை அதே அளவிற்கு உயர்த்தியுள்ளனர். ஊன்றியுள்ள கால் அனைவருக்கும் பார்சுவ மாகவே அமைந்துள்ளது. இடையாடையும் அதை இருத்தும் இடைக்கட்டும் ஒவ்வொரு சிற்பத்திலும் தனித் தன்மையுடன் காட்டப்பட்டுள்ளன. ஆட்டச் சுழற்சிக்கும் கை, கால்களின் ஒருங்கிணைந்த அசைவுகளுக்கும் ஏற்ப ஆடைகளில் காட்டப் பட்டிருக்கும் பரவலும் விரிவும் சிற்பிகளின் ஆடற்கலை அறிவுக்குச் சான்றாகின்றன.

காஞ்சிபுரக் கரணர் பத்துக் கைகளுடனும் புள்ளமங்கைக் கரணர் எட்டுக் கைகளுடனும் ஆட, ஏனைய மூவரும் நான்கு கையர்களாய்க் கரணம் நிகழ்த்துகின்றனர். அனைவருமே வல முன் கையைக் காக்கும் குறிப்பில் இருத்தியிருந்தபோதும், இட முன் கை இருவருக்கு அர்த்தரேசிதமாகவும் மூவருக்கு வேழ மாகவும் அமைந்துள்ளது. வலப் பின் கையில் மூவர் உடுக்கை கொள்ள, மழபாடியார் தீயகலும் காஞ்சியார் பாம்பும் பெற்றுள்ளனர். இடப் பின் கையில் இருவர் தீயகலும் ஒருவர் உடுக்கையும் ஒருவர் முத்தலைஈட்டியும் கொள்ள, காஞ்சிபுரத் தார் அதை அர்த்தரேசிதமாக்கியுள்ளார். புள்ளமங்கையாரின் இடைக்கைகளில் வலப்புறம் மழுவும் இடப்புறம் முத்தலை

ஈட்டி, பாம்பு ஆகியனவும் உள்ளன. ஒரு கையின் பொருளை அடையாளம் காணமுடியவில்லை. காஞ்சிபுரத்தாரின் வல இடைக்கைகளுள் இரண்டாம் மூன்றாம் கைகள் பாம்பைப் பிடித்திருக்க, நான்காம் கை கடகத்தில் உள்ளது. இடப்புறத்தே இரண்டாம் கை, வலமேற்கை பிடித்துள்ள பாம்பின் தலை பற்றியவாறு உள்ளது. பிற இடக்கைகளில் ஒன்று கடகம் காட்ட, மற்றொன்று இறைவன் தலைப்புறம் வணங்கிய நிலையிலுள்ள கங்கையின் தோகையைப் பிடித்துள்ளது.

மூன்று கரணர்கள் தலையை வலப்புறம் சாய்த்து ஆட, இருவர் இடச்சாய்வில் உள்ளனர். துடையூர்க் கரணர் இடச் சாய்வு காட்டியபோதும், நேர்ப்பார்வையில் உள்ளார். இந்தக் கரணர்களுக்கு மூன்று இடங்களில் குடமுழவும் பழனத்தில் ஒருமுக முழவும் இசைக்கூட்டுகின்றன. காஞ்சிபுரத்தார் இசைக் கலைஞர்கள் பெறாது நடம் பயில்கிறார். புள்ளமங்கையில் முழவோடு இணைந்த இசையாய்ச் சிரட்டைக் கின்னரியாம் நரம்புக்கருவியைக் காணமுடிகிறது. தமிழ்நாட்டின் வேறெந்தக் கரணக்கோலத்திலும் காணப்பெறாத கின்னரத்தின் இலைத் தாள இசையைப் பழனம் பெற்றுள்ளது. அது போலவே துடை யூர்க் கரணரின் இடப்புறம் ஆடலாசான் எனக் கொள்ளத்தக்க ஆடவர் அமர்ந்து இடக்கையைத் தொடையிலிருத்தி, வலக் கையால் போற்றும் காட்சியைக் காணமுடிகிறது. இவரை நாட்டியசாத்திரம் தந்த பரதராகவே நினைக்க வேண்டியுள்ளது. இந்த அற்புதக்காட்சி சிறப்புக்குரியதென்பதை இறைவனின் இருபுறத்தும் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ள கவரிகளே மெய்ப்பிக்கின்றன.

காஞ்சிபுரத்தார் இசைக்கலைஞர்களைப் பெறவில்லை என்றாலும், அவர் ஆடல் கண்ட ஊக்கத்தால் வலப்புறத்தும் இடப்புறத்தும் பக்கத்திற்கொருவராய் நடமிடும் இரண்டு கலை ஞர்களைக் கீழ்ப்பகுதியில் கொண்டுள்ளார். வலப்புறத்தர் விருச்சிகக் கரணத்தில் தம் திறமை காட்ட, இடப்புறத்தர் இன்ன தென அடையாளப்படுத்த முடியாத ஆடற்கோலத்தில் அழகு காட்டுகிறார். இச்சிற்பத்தின் பெருஞ்சிறப்பாக இறைவனின் ஆடல் காண அவரது இருதேவிகளுமே இங்கிருப்பதைக் குறிக்க

லாம். வணங்கிய நிலையில் இறைவனின் இடப்புறத்தே மகுடத் தருகே காட்சிதரும் கங்கையும் ஒல்கி, ஒசிந்து நின்றகோலத்தில் ஆடலை இரசிக்கும் உமையும் பல்லவச் சிற்பிகளின் கற்பனை வளம் காட்டும் கவினுறு வடிவங்களாக ஒளிர்கின்றனர்.

மானுடர் தண்டபக்ஷம்

சிராப்பள்ளி மாவட்டம் வேங்கடத்தான் துறையூர் மதுர காளியம்மன் கோயிலில் இரண்டும் கடலூர் மாவட்டம் விருத்தா சலம் விருத்தகிரீசுவரர் கோயிலில் இரண்டும் தஞ்சாவூர் மாவட் டம் புள்ளமங்கை ஆலந்துறையார் கோயிலில் இரண்டும் அதே மாவட்டத்தின் மேலப்பெரும்பள்ளம் வலம்புரநாதர் கோயிலில் ஒன்றுமாக ஏழு மானுட தண்டபக்ஷச் சிற்பங்கள் கிடைத்துள் ளன. அவற்றுள் முற்சோழர் காலத்தனவாக இரண்டையும் பிற் சோழர் காலத்தனவாக ஐந்தையும் குறிக்கலாம். இவை தூண் களின் தொங்கல், சதுரம், தாங்குதளக் கண்டபாதம், கூரை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இடையில் சிற்றாடையும் குறை வான அணிகலன்களும் கொண்டுள்ள இக்கரணச் சிற்பங்களுள் ஆறு பெண் ஆடலர்களைப் படம்பிடிக்க, புள்ளமங்கையில் மட்டும் ஆடவர். செவ்விய உடலமைப்பும் எழிலார்ந்த கரணத் தோற்றமும் புள்ளமங்கையாரின் இணையற்ற சொத்துக்களாகும்.

இக்கரணச் சிற்பங்கள் ஏழனுள் வல முழங்காலை மார்பளவு உயர்த்தியுள்ளவை ஐந்து. இரண்டில் இட முழங்கால் அதே அள விற்கு உயர்ந்துள்ளது. ஊன்றியுள்ள காலின் பாதம் அனைத்தி லும் பார்சுவமாக உள்ளது. மூன்று கரணர்கள் வலக்கையை வேழத்தில் அமைக்க, மூவர் உயர்த்திய பதாகமாக்கியுள்ளனர். புள்ளமங்கைக் கரணர் குடக்கூத்தாடுமாறு போல அக்கையை உயர்த்தி மடக்கியுள்ளார். இடக்கையோ வேழம், அர்த்தரேசி தம் எனும் நிருத்தக் கைகளிலும் விரிதாமரை, பதாகம் எனும் முத்திரைகளிலும் அமைந்துள்ளது. மதுரகாளியம்மன் சிற்பம் ஒன்று இக்கையை அர்த்தரேசிதத்தில் வீசியுள்ளது.

ஆண், பெண் கருவிக்கலைஞர்கள் இணையக் காணப் படும் இச்சிற்பங்களில் செண்டுதாளம், மத்தளம், உடுக்கை, இடக்கை எனும் கருவிகள் கையாளப்பட்டுள்ளன. புள்ள

மங்கையிலும் விருத்தாசலத்திலும் இசைக்கலைஞர்கள் இடம் பெறவில்லை. விருத்தாசலத்தில் தண்டபக்ஷக் கரணர் இடம் பெற்றிருக்கும் தூண் சதுரம் அரங்கம் போல் அலங்கரிக்கப் பட்டுள்ளது. சிறு தாங்குதளமும் அதிலிருந்து எழும் இரண்டு நான்முக அரைத்தூண்களும் அவை தாங்கும் கூரையுறுப்பு களும் கபோதம், பூமிதேசம் என மேலுறுப்புகளும் கொண் டுள்ள இவ்வரங்கத்தின் நடுவில் கரணம் நிகழ்த்தும் விருத்தா சலக் காரிகை தமிழ்நாட்டுக் கரணப் பெண்களுள் நனி பேறு பெற்றவரெனலாம்.

பார்சுவஜானு

உயர்த்தப்படும் முழங்காலோடு தொடர்புடைய மற்றொரு கரணமான பார்சுவஜானுவில் ஊன்றிய காலின் பாதம் சமத்தில் அமைய, முழங்கால் அளவில் மடிக்கப்பட்ட மற்றொரு கால் பக்கவாட்டில் உயர்த்தப்படும். இந்த உயர்த்தல் எந்த அளவிற்கு அமையவேண்டும் என்ற வரையறையை பரதர் தரவில்லை. அது போலவே எந்தக் கை என்ற சுட்டல் இல்லை என்றாலும், அது அல்லது அவை முஷ்டி முத்திரையில் மார்பருகே இருக்கவேண்டும் என்கிறார் அவர். இக்கட்டுரையில் ஊர்த்வ ஜானுவாகக் கொள்ளப்பட்டுள்ள இறை, மானுடச் சிற்பங்கள் பலவற்றில், முழங்காலின் அமைப்புப் பக்கவாட்டில் உயர்த்தி யிருப்பது போலக் காட்டப்பட்டிருப்பினும் பார்சுவஜானுக் குரிய பிற இரண்டு வரையறைகள், அவற்றில் ஒன்றிலேனும் இடம் பெறாமையின் அவற்றை ஊர்த்வஜானுவாகவே கொண்டுள் ளோம். பார்சுவஜானுவாகக் கும்பகோணம், சிதம்பரம் தொடர் களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சிற்பங்கள் பரதரின் வரை யறைகளை ஏற்றுள்ளமையும் இக்கொள்ளலை வலியுறுத்தும்.

முடிவுரை

பரதரின் நாட்டியசாத்திரம் வெளிப்படுத்தும் கரணங்கள் பல்லவர் காலத்திருந்தே தமிழ்நாட்டில் பெருவழக்குப் பெற்றிருந்தமையைத் தொண்டை மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் பரவலாகக் காணப்படும் ஆடற்சிற்பங்களும் சில கோயில்களில் பதிவாகியுள்ள கரணத்தொடர்களும் நன்கு

நிறுவுகின்றன. பரதர் விரித்துரைத்திருக்கும் நூற்றியெட்டுக் கரணங்களுள் தனித்துக் காட்டத் தமிழ்நாட்டுச் சிற்பிகளால் தேர்ந்து கொள்ளப்பட்டவை மிகச் சிலவே. அவற்றுள் தலை யாய கரணமாய் முதன்மையில் நிற்பது ஊர்த்வஜானுவே.

உடலமைப்பின் அழகுகளையும் ஆடற்கலையின் நுட்பங் களையும் நன்கு புலப்படுத்த இந்த மண்ணின் உளி விற்பன னர்கள் விழைந்து கொண்ட இந்தக் கரணம், விண் சார்ந்த கால் நிலைகளில் உயர்த்தப்பட்ட முழங்காலே உன்னதமானது என்பதை நிறுவுவதுடன், எல்லைக்குட்பட்ட இலக்கண நெகிழ்வுகளோடு, ஈடு, இணையற்ற கற்பனையாற்றலையும் வழக்கிலுள்ள மரபுகளையும் வழங்கு கதைகளையும் இரண் டறக் கலந்து, கண்களில் விழுந்து கருத்தினில் நிறையும் கரண வடிவங்களை உருவாக்குவதில் அவர்தம் நிகரற்ற ஆற்றலையும் தெற்றெனப் புலப்படுத்துதல் எண்ணி மகிழத்தக்கது.

பார்வை நூல்கள்

1. Adya Rangacharya, Natyasastra, IBH Prakashana, Bangalore, 1986.

2. Kapila Vatsyayana, Dance Sculpture in Sarangapani Temple, SAHER, Chennai, 1982.

3. Manomohan Gosh (Translator), The Natyasastra, Manisha Grantalaya Pvt. Ltd., Calcutta,1967.

4. C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature, Publication Division, New Delhi, 1994.

5. Venkata Narayana Swami Naidu and Others, Tandava Laksanam, Munshiram Manoharlal Publishers, New Delhi, 1980.

6. இரா. கலைக்கோவன், பழுவூர் அரசர்கள், கோயில்கள், சமுதாயம், இலக்கியப்பீடப் பதிப்பகம், சென்னை, 2002.

7. இரா. கலைக்கோவன், சோழர் கால ஆடற்கலை, அலமு பதிப்பகம், சென்னை, 2003.

8. இரா. கலைக்கோவன், தலைக்கோல், சேகர் பதிப்பகம், சென்னை, 2004.

9. இரா. கலைக்கோவன், சங்கச்சாரல், டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2015.

10. இரா. கலைக்கோவன், இருண்டகாலமா? டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப் பள்ளி, 2015.

கட்டுரைகள்

1. இரா. கலைக்கோவன், கரணக் காவியங்கள், அமுதசுரபி தீபாவளிமலர், 1987.

2. இரா. கலைக்கோவன், ஆடல் நாயகனின் அரிய திருக்கோலங்கள், சஷ்டி, நவம்பர், டிசம்பர், 1988.

3. இரா. கலைக்கோவன், ஊர்த்வஜானு, தினமணி கதிர், 26. 2. 1989.

4. இரா. கலைக்கோவன், தண்டபட்சம், தினமணி கதிர், 9. 4. 1989.

5. இரா. கலைக்கோவன், புகழ் பூத்த புள்ளமங்கை, கலைமகள் தீபாவளிமலர், 1989.

6. இரா. கலைக்கோவன், தென்வாயில் தோரணங்கள், தினமணி கதிர், 27. 5. 1990.

7. இரா. கலைக்கோவன், புதிய வார்ப்புகள், தினமணி கதிர், 3. 6. 1990.

8. மு. நளினி, இரா. கலைக்கோவன், முத்திரை பதிக்கும் க்ரணப்பதிவுகள், அமுதசுரபி தீபாவளிமலர், 2002.

9. Karana Sculptures of Thirumazhapadi, Indian Express, 27. 11. 1987.

10. Karana Sculptures of Kizhaiyur, Indian Express, 1. 7. 1988.

8. திருப்பேர்நகர்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

திருச்சிராப்பள்ளித் திருக்காட்டுப்பள்ளிச் சாலையில் 24 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது கோயிலடி.[1] காவிரியின் வடகரை ஊராக விளங்கும் இதன் பழம் பெயர் திருப்பேர்நகர். பெரு மாளுக்கொன்றும் சிவபெருமானுக்கொன்றுமாய் இவ்வூரில் இரண்டு கோயில்கள் உள்ளன. கல்வெட்டுகளில் பெரிய ஸ்ரீகோயில் என்றழைக்கப்படும்[2] பெருமாள்கோயில் பாடல் பெற்ற[3] மாடக்கோயிலாய் அமைந்துள்ளது.

சுற்றிலும் மதிலால் சூழப்பட்டுள்ள கோயில் வளாகத்தின் ஒரே வாயிலாய் மேற்குக் கோபுரம் அமைந்துள்ளது. முத்தளக் கட்டுமான்மாய் அமைந்துள்ள அதன் கீழ்த்தளம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்பு கள் பெற்றுக் கருங்கல் பணியாக உள்ளது. மேற்றளங்களும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. கீழ்த்தளக் கிழக்குக் கபோதத்தில் இறைவனை வணங்கியவாறு கருடன் அமர்ந்துள்ளார். வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டப் பஞ்சரங்கள் மேற்கிலும் கிழக்கிலும் வெறுமையாக உள்ளன.

வெளிச்சுற்றின் வடமேற்கில் மண்டபம் அமைய, தென் மேற்கில் ஒருதள நாகர விமானத்தில் பிள்ளையார் இடம் பெற்றுள்ளார் கரண்டமகுடம், சிற்றாடை, உதரபந்தம் அணிந்து இடம்புரியாக உள்ள பிள்ளையாரின் வலத்தந்தம் உடைந்துள் ளது. பின்கைகளில் அங்குசமும் பாசமும் ஏந்தி, அர்த்தபத்மா சனத்தில் உள்ள அவரது வலக்கையில் உடைந்த தந்தம். இடக்கை தொடைமீதுள்ளது. சுற்றின் தென்கிழக்கில் மதிலை ஒட்டியுள்ள மாளிகையின் அறைகள் வெறுமையாக உள்ளன.

வெற்றுத்தளம்

வளாகத்தின் நடுவிலுள்ள பள்ளிகொண்ட பெருமாளின் விமானம், முகமண்டபம், பெருமண்டபம், மண்டபச்சுற்று, முதல் மண்டபம் இவையனைத்தும் 2. 35 மீ. உயரமுள்ள வெற்றுத்

தளத்தின் மீது அமைந்துள்ளன. வெற்றுத்தளம் சுவர், கூரை யுறுப்புகள் பெற்று அனைத்துத் திசைகளிலும் ஒன்று போல் அமைந்துள்ளது முதல் மண்டபத்திற்கான படிகள் வெற்றுத் தளத்தின் வடமேற்குப்பகுதியில் இரண்டு நிலைகளாக அமைந்து, இருபுறமும் பிடிச்சுவர் கொண்டுள்ளன. இருபத்திரண்டு படிகள் உள்ள இந்தப் படித்தொடரின் முதல் நிலை மேடையில் கொடிமரமும் பலித்தளமும் உள்ளன. கொடிமரத்தில் மேற்குப் பார்வையாக அரங்கநாதரும் கிழக்குப் பார்வையாக அர்த்த பத்மாசனத்தில் கருடனும் அமைய, தெற்கிலும் வடக்கிலும் முறையே சங்கும் சக்கரமும் காட்டப்பட்டுள்ளன.

முதல் மண்டபம்

வாயிலின் மேல் சாலைசிகரம் பெற்றுள்ள முதல் மண்ட பத்தின் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. இத்தூண்களின் கீழ்ச்சதுரங் கள் நாகபந்தம் பெற்றுள்ளன. சில சதுரமுகங்களில் தாமரைப் பதக்கங்களும் சிலவற்றில் வேணுகோபாலர் முதலிய சிற்பங்க ளும் அமைய, வடபுறம் பள்ளியறையும் மேடையுமுள்ளன. மேடையில் சிறு அளவிலான அனுமார் சிற்பமும் விஷ்வக் சேனரின் பெரிய அளவிலான சிற்பமும் உள்ளன. பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி சுகாசனத்திலுள்ள விஷ்வக்சேனரின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை தொடைமீது வைக்கப்பட்டுள்ளது. கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், தோள், கை வளைகள், சரப்பளி, பட்டாடை அணிந்துள்ள இவர் மார்பில் முப்புரிநூல் இல்லை. மண்டபத்தின் நடுப்பகுதியில் பெருமாள் திருமுன்னை நோக்கி வணங்கியவராய்க் கிழக்குப் பார்வையாக இலலிதாசனத்தில் அமர்ந்துள்ள கருடன் கரண்ட மகுடம் அணிந்துள்ளார்.

தாயார் திருமுன்

மண்டபத்தின் தென்புறத்தில் கமலவல்லித் தாயாரின் இரு தள வேசர விமானமும் முகமண்டபமும் கிழக்குப் பார்வையாக அமைந்துள்ளன. முறையான தாங்குதளம், அரைத்தூண்களற்ற நிலையில் இவ்விமானத்தின் கீழ்த்தளமும் முகமண்டபமும் சுவர், கூரையுறுப்புகள் மட்டுமே பெற்றுள்ளன. முகமண்டபம்

வெறுமையாக அமைய, கருவறையில் இறைவி மூலவராகவும் உற்சவராகவும் இடம்பெற்றுள்ளார். அர்த்தபத்மாசனத்தில் உள்ள மூலவர் பின்கைகளில் மலர் மொட்டுக்களும் முன்கைகளில் காக்கும், அருட்குறிப்பும் கொண்டு பட்டாடையுடன் திகழ, உற்சவர் மூலவரை ஒத்த கோலத்தில் விளங்குகிறார்.

தாயார் திருமுன்னுக்கு எதிரில் நடையாகத் தொடரும் முதல் மண்டபம் கீழ்ச்சுற்றுக்கு இறங்கும் படிக்கட்டுகளில் முடிகிறது. முதல் வரிசைப் படிகள் நாகர அமைப்பிலான வண்டிக் கூடு கூரை பெற, எஞ்சிய படிகள் தகரக்கூரை பெற்றுள்ளன. கீழ்ச்சுற்றுவெளியின் வடகிழக்குப்பகுதியில் படிகள் முடியுமிடத்து, நாயக்கர் கலைமுறையில் அமைந்த வளைவுக் கூரை பெற்ற நான்கு பேருருளைத் தூண்கள் உள்ளன.

மண்டபச்சுற்று

முதல் மண்டபத்தின் கிழக்கில் அமைந்துள்ள வாயில் மண்டபச் சுற்றுக்கு வழிவிடுகிறது. மேற்கில் உருளைத் தூண்கள் தாங்கும் மண்டபமாகத் தொடங்கி வடக்கு, கிழக்கு, தெற்கு முப்புறத்தும் துணைத்தளம் தாங்கும் மாளிகைச் சுற்றாக வளரும் இதில் சிற்பங்கள் ஏதுமில்லை. வடபுறத்தே உள்ள வாயில் சொர்க்க வாயிலாக அமைந்து, கீழ்ச்சுற்றுக்குப் படித்தொடர் வழி அழைத்துச் செல்கிறது. மாளிகையின் பெரும்பகுதியை உருளைத்தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளின் துணையுடன் தாங்குகின்றன.

பெருமண்டபம்

பாதபந்தத் தாங்குளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றமைந்துள்ள பெருமண்டபத்தின் வடக்கு, தெற்குச் சுவர்களில் பக்கத்திற்கு மூன்று கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன.

முகமண்டபம்

பெருமண்டபத்தின் கட்டமைப்பை ஒத்துள்ள முகமண்டபம் அளவில் சிறியது. அதன் வடக்கு, தெற்குச் சுவர்களிலுள்ள கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன.

விமானம்

இருதளச் சாலையாக அமைந்துள்ள இறைவன் விமானத்தின் கீழ்த்தளம் முகமண்டபம் ஒத்த கட்டமைப்பில் விளங்கிய போதும் பல மாற்றங்களைக் காணமுடிகிறது. தென்வடலாக 8 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 6. 33 மீ. அகலமும் பெற்றுள்ள இந்தத் தளத்தின் கர்ணபத்திகள் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் கொள்ள, சாலைகளில் கோட்டப்பஞ்சரங்கள் காணப்படுகின்றன. வடக்குச் சாலைக் கோட்டத்தில் மட்டும் பரமபதநாதர் காட்சிதருகிறார். பிறகோட்டங்கள் வெறுமையாக உள்ளன. சுவர்த் தூண்களின் மாலைத்தொங்கல்களில் குடக்கூத்து உள்ளிட்ட பல சிற்றுருவச் சிற்பங்களைக் காண முடிகிறது. விமானத்தின் ஆரச்சாலைகளில் வடக்கில் பூவராகரும் கிழக்கில் சுகாசனப் பெருமாளும் தெற்கில் நரசிம்மரும் உள்ளனர். மூவருமே தேவியின் துணையுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்கு ஆரச்சாலை வெறுமையாக உள்ளது. கிரீவகோட்டங்களில் வடக்கில் விஷ்ணுவும் கிழக்கில் பூவராகரும் மேற்கில் விஷ்ணுவும் தேவியருடன் அமைய, தெற்கில் வணங்கிய கைகளுடன் அனுமார்.

பெருமண்டப வாயிலின் இருபுறத்தும் பக்கத்திற்கொருவராகக் காவலர்களைப் பெற்றுள்ள கோட்டங்கள் மேற்பகுதியில் வளைமுகத் தலைப்புப் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பக்கத்திற்கொரு கோட்டப்பஞ்சரமும் உள்ளது. தெற்குக் காவலர் வலக்கையை உருள்பெருந்தடிமேல் இருத்தி, இடக்கையால் அச்சுறுத்த, வடக்குக் காவலர் இடக்கையை உருள் பெருந்தடிமேல் இருத்தி, வலக்கையால் அச்சுறுத்துகிறார். சமபங்கத்தில் நிற்கும் இருவருமே கிரீடமகுடம், பட்டாடை அணிந்துள்ளனர். பெருமண்டபத்தின் கூரையை முச்சதுர, இருகட்டுத்தூண்கள் பெருமொட்டுப் போதிகைகளின் உதவியுடன் தாங்குகின்றன. தூண்களின் கீழ்ச்சதுரங்கள் பேரளவு நாகபந்தம் பெற்றுள்ளன.

தூணொன்றின் இடைச்சதுரத்தில் தாமரையில் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்த இலட்சுமியின் அழகிய சிற்பம் இடம் பெற்றுள்ளது. பின்கைகளில் மலர்மொட்டுகளும் முன்கைகளில் காக்கும், அருட்குறிப்புகளும் கொண்டுள்ள தேவியின்

தலையில் கரண்டமகுடம். இடையில் பட்டாடை செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். மண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள அறை ஆழ்வார் பெருமக்களின் செப்புத் திருமேனிகளைக் கொண்டுள்ளது. பெருமண்டபத்தையடுத்துள்ள முகமண்டபம் சிறிய அளவிலானது. வெறுமையாக உள்ள இதையடுத்து இறைவன் கருவறை அமைந்துள்ளது.

கருவறை

அப்பக்குடத்தான் திருமுன் என்றழைக்கப்படும் இந்தக் கருவறையில் ஆதிசேடனின் கட்டுடல் மீது வடக்கில் தலை வைத்துத் தெற்கில் திருவடி நீட்டிப் படுத்திருக்கும் பள்ளி கொண்ட பெருமாளின் இடக்கை வயிற்றருகே உயர்ந்து கடகத்தில் உள்ளது. வலக்கை மேலுயர்த்தப்பட்டுப் படுக்கையை விட்டு நீங்கிய நிலையில் தரைக்காய்த் தாழ்ந்துள்ளது. இறைவனின் மார்புக்கு மேற்பட்ட பகுதி வல ஒருக்கணிப்புக் கொண்டு மேற்குப் பார்வையில் அமைய, கிரீடமணிந்த தலை இரண்டு தலையணிகளின்மீது சற்றே தூக்கலாகவும் வலப்புறம் திரும்பிய நிலையிலும் உள்ளது. திரயச்ரத்தில் உள்ள திருவடிகள் தலையணை ஒன்றைத் தொட்டவாறுள்ளன. செவிகளில் மகர குண்டலங்கள். மார்பில் திருமறு பெருமாளின் நீட்டிய வலக்கைக்குக் கீழிருக்குமாறு கருவறையின் வடபுறத்தே கருடாசனத்தில் வணங்கிய நிலையில் மார்க்கண்டேயர் காணப்படுகிறார்.

மார்க்கண்டேயரின் பின்புறம் கருவறையின் வடசுவரை ஒட்டியவாறு உள்ள வெள்ளிக்குடம் இறைவனுக்கான அப்பமிடும் குடமாகக் கூறப்படுகிறது. இது கொண்டே இறைவன் அப்பக்குடத்தான் என்றழைக்கப்படுகிறார். கருவறையின் தென்புறத்தே அர்த்தபத்மாசனத்தில் வணங்கிய நிலையில் நிலமகள் உள்ளார்.

அப்பால் ரங்கன் என்றழைக்கப்படும் உற்சவர் நின்ற திருக்கோலத்தில் வலக்கையில் காக்கும் குறிப்பு காட்டி, இடக்கையை உருள்பெருந்தடி மேல் இருத்தியுள்ளார். பின்கைகளில் சங்கு, சக்கரம். வலப்புறமுள்ள திருமகள் வலக்கையை நெகிழ்த்தி, இடக்கையில் மலர் கொண்டுள்ளார். இடப்புறமுள்ள நிலமகள் வலக்கையில் மலர் கொண்டு , இடக்கையை

நெகிழ்த்தியுள்ளார். இருவரும் கரண்டமகுடம் அணிந்துள்ளனர். இவர்கள் தவிர தீர்த்தபேரர், சந்தான கோபாலகிருஷ்ணன் திருமேனிகளும் உள்ளன.

வளாகத்தின் புறச்சுவர்

வெற்றுத்தளத்தின் மேலுள்ள மொத்தக் கட்டமைப்பின் புறச்சுவர்கள் ஒன்று போலத் தூண்களற்ற சுவரும் கூரையுறுப்புகளும் பெற்றுள்ளன. பெருமண்டபப் புறச்சுவர் வடக்கு, தெற்கு இருபுறத்தும் சாளரங்கள் பெற்றுள்ளது.

கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளுமே[4] விஜய நகர அரசர் காலத்தவை. பொ. கா 1521இல் வெட்டப்பட்டுள்ள கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு, தையலார் பிள்ளை திருப்பேர்நகர்க் கோயில் சேனாபதி பண்டாரத்துக்களித்த வல்லநாட்டுப் பொக்கரசன்பேட்டை நீர் நிலம் இரண்டு வேலியை மன்னரின் வாசலான மல்லப்ப நாயக்கரின் மகன் திம்மப்ப நாயக்கர் சர்வமானியமாக அறிவித்த மையைத் தெரிவிக்கிறது. சதாசிவராயரின் பொ. கா. 1569ஆம் ஆண்டுக் கல்வெட்டு, ஆளிய ராமைய்யதேவ மகாராஜாவின் பெயரைத் தருவதுடன் வேப்பம்பேட்டையைச் சேர்ந்த நாயக்கர் சிலரின் பெயரையும் கிராம சாசனம் பற்றிய குறிப்புகளையும் தருகிறது. கல்வெட்டுப் பெரிதும் சிதைந்திருப்பதால் முழுத் தகவல்களையும் பெறக்கூடவில்லை.

குறிப்புகள்

1. ஆய்வு நாட்கள்: 12. 12. 1983, 13. 10. 2009. ஆய்விற்குத் துணை நின்ற நா. சீனிவாச பட்டாச்சாரியார், சு. சேகர் ஆகியோருக்கு நன்றி. இந்தக் கோயில் பற்றிய முதல் கட்டுரை 1986 மார்ச்சுத் திங்கள் திருக்கோயில் இதழில் திருப்பேர்நகர் என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.
2. SII 7: 498. சிராப்பள்ளி மாவட்டம் திருவெள்ளறையிலுள்ள மாடக்கோயிலான புண்டரீகாட்சப் பெருமாள் கோயிலும் கல்வெட்டுகளில் பெரிய ஸ்ரீகோயில் என்றே அழைக்கப்படுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 173, 205, 1428-1437, 1851, 1857, 2048, 2050, 2059, 2060, 2079, 2417, 2673, 2674, 3744-3754.

திருப்பேர்க்கிடந்த, குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ் திருப்பேரான் எனும் பாசுர அடிகள் குறிப்பிடத்தக்கன.

4. ARE 1968-69: 273, 274.

பொதியிலில் தங்கும் அவலம்

'பொருளீட்டப் புறப்படு என்கிறாயே நெஞ்சே, இன்றைய பொழுது மேகலை அணிந்த இடையினை உடைய தலைவியுடன் விண்ணளாவிய அவள் மாளிகையில் பூக்கள் பரப்பிய வேலைப்பாடமைந்த படுக்கையில் இன்பமுற முடிந்தது. இந்த இனிய நலம் நீங்கிப் பொருளீட்டப் புறப்பட்டால் பாழடைந்த பொதியிலில் தங்கும் அவலமல்லவா நேரும்!' நெஞ்சைக் கடிந்து பயணம் தவிர்க்கும் தலைவன் சுட்டும் அந்தப் பொதியில் அவலம் அகப்பாடலில் (167) காட்சியாகியுள்ளது.

வழிச் செல்லும் வணிகச் சாத்தினைக் கொன்று அவர் பொருளைக் கொள்ளை கொள்ளும் வில்லும் அம்பும் ஏந்திய மறவர் பகையைக் கருதி குடிகள் இடம்பெயர்ந்தமையின் வளனற்று நின்றது அவ்வூர். ஊரின் மீர்க்குப் படர்ந்த பாழிடத்தில் இருந்த பொதியிலோ முருங்கையைத் தின்ற யானையின் பிடரி உராய்ந்ததால் தளர்ந்து, செங்கல் சுவர் சிதைந்து உத்திரம் இழந்தது.

பொதியிலின் மரம் சோர்ந்ததால் மாடங்களில் வாழ்ந்த மணிப்புறாக்கள் இடம் மாறின. வரையப் பெற்ற ஓவியமாய் உள்ளிருந்த கடவுளும் வழிபாடில்லாமையால் அவ்விடம் நீங்கினார். இடையறாது நிகழும் பலி நின்றமையால் மெழுகப் படாதிருந்த திண்ணையில் குட்டிகளை ஈன்ற நாய் பள்ளம் பறித்துத் தங்க இடம் அமைத்தது. கறையான் புற்றெடுத்துப் பரவியதால் பொதியிலின் கூரைகள் சிதைந்தன. பாழ்பட்டுப் போன அந்தப் பொதியிலில் தங்க நேர்வது அவலந்தானே!

9. இராஜராஜரின் புதல்வியர் மூவர்

இரா. கலைக்கோவன்

சோழப் பேரரசின் இணையற்ற மாமன்னராக விளங்கித் தஞ்சாவூரில் தாம் எடுப்பித்த மாபெரும் கற்றளியாம் இராஜ ராஜீசுவரத்தால் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றில் சிறப்புக்குரிய தோர் இடத்தைப் பெற்றுள்ள பெருவேந்தர் முதலாம் இராஜ ராஜருக்கு மூன்று பெண்கள் இருந்தனர். அம்மூவருள் தமிழ் நாட்டு மக்களுக்கு நன்கு அறிமுகமான பெயர் குந்தவை.

குந்தவை நங்கை

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருவலஞ்சுழிக் கோயில் வளாகத்துள் இராஜராஜரின் பட்டத்தரசியான உலகமாதேவி எழுப்பிய சேத்ரபாலர் கோயில் உள்ளது. அக்கோயில் இறைவ னுக்குப் பொன்னும் பொன்னாலான நகைகளும் குந்தவை வழங்கியதாக அங்குள்ள இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண் டுக் கல்வெட்டு சொல்கிறது.[1] குந்தவையைக் குறிப்பிடும்போது, 'ஸ்ரீராஜராஜதேவர் திருமகளார் விம்லாதித்ததேவர் மகாதேவி யார் ஸ்ரீகுந்தவை நங்கையார்' என்று அவருடைய தந்தையார் பெயரையும் மணவாளர் பெயரையும் கூறிச் சிறப்பிக்கும் கல்வெட்டு, இராஜராஜரின் மற்றொரு மகளையும் வெளிச்சத் திற்குக் கொணர்கிறது.

மாதேவடிகள்

மாதேவடிகளார் என்றும் நங்கை மாதேவடிகளார் என் றும் அறியப்படும் இராஜராஜரின் இந்தப் பெண்ணை, 'நடுவில் பெண் பிள்ளை', 'நடுவில் பிள்ளையார்' என்று அறிமுகப் படுத்துவதன் வழி, இராஜராஜரின் மூன்று பெண்களுள் இவர் இடைப்பட்டவர் என்று தெளிவுபடுத்தும் இக்கல்வெட்டு, சேத்ரபாலருக்கு மாதேவடிகள் தந்த நகைகளைச் சுட்டுமிடத்து, 'ஸ்ரீராஜராஜதேவர்க்கு ஆடியருள பிரசாதம் பெற்ற பொன்னில்' அவர் அவ்வணிகலன்களைச் செய்தளித்ததாகக் கூறுகிறது.

இராஜராஜரின் இந்த இரண்டு பெண்களில் நடுவிற் பெண் ணாகக் குறிக்கப்படும் மாதேவடிகள் தஞ்சாவூர் மாவட்டத்தி

லுள்ள திருவையாறு கோயில் வளாகத்தின் வடபகுதியில் முதலாம் இராஜராஜரின் பட்டத்தரசியார் உலகமாதேவியார் எடுப்பித்த மற்றொரு கற்றளியான உலகமாதேவீசுவரம் கல்வெட்டிலும் இடம்பெற்றுள்ளார். கோயில் அர்த்தமண்டபத்தின் வடக்குத் தாங்குதளத்தில் உள்ள இக்கல்வெட்டில், 'ஸ்ரீராஜராஜதேவர் திருமகளார் மாதேவடிகளார் திருவையாற்று ஒலோகமாதேவி ஈச்வரமுடையார்க்குத் தாம் உடையார் ஸ்ரீராஜராஜதேவர்க்கு ஆடிஅருளிப் பிரசாதம் பெற்ற பொன்னில்' கொடுத்த நகைகள் பதிவாகியுள்ளன. மன்னரின் 25ஆம் ஆட்சியாண்டின் 144ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டுள்ள பதினைந்து வரிகளாலான இக்கல்வெட்டு மிக முக்கியமானதாகும்.

அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி

இராஜராஜரின் மூன்றாவது மகளைக் குறிக்கும் கல்வெட்டும் இதே உலகமாதேவீசுவரத்தின் தெற்குத் தாங்குதளத்தில்தான் உள்ளது. 'உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருமகளார் அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவியார்' என்று இவரை வெளிப்படுத்தும் அக்கல்வெட்டு, கோயிலுக்கு இவ்வம்மை பொன்னாலான ஈச்சோப்பிக்கை வழங்கியதைப் பதிவுசெய்துள்ளது.

வலஞ்சுழிக் கல்வெட்டின் அடிப்படையில் வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் இராஜராஜருக்கு மூன்று பெண்கள் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளபோதும் குந்தவை, மாதேவடிகள் எனும் இரண்டு பெண்களின் பெயர்களே அவருடைய நூலில் இடம்பெற்றுள்ளன.[2] மூன்றாம் பெண்ணின் பெயரோ, அப்பெண்ணின் பெயர் சுட்டப்படும் ஐயாறு கல்வெட்டுப் பற்றிய குறிப்போ அவரது நூலில் இல்லை. சோழர் வரலாற்றைத் தமிழில் உருவாக்கித் தந்த வரலாற்றறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் தம்முடைய நூலில் சந்திரமல்லியையும் மாதேவடிகளையும் ஒரே பெண்ணாகக் கொண்டு, இராஜராஜருக்கு இரண்டு பெண்கள்தான் என்று முடிவு செய்துள்ளார்.[3]

உலகமாதேவீசுவரத்திலுள்ள மாதேவடிகளின் கல்வெட்டும் கங்கமாதேவிக் கல்வெட்டும் தற்போது முழுமையான அளவில் படிக்கப்பட்ட நிலையில்[4] பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி

யாரின் கூற்றுப்படி இராஜராஜரின் புதல்வியர் மூவர் என்பது உறுதிப்படுவதுடன், அவர்தம் பெயர்களும் முழுமையான அளவில் அறியப்பட்டுள்ளன.

இராஜராஜரின் மூன்று மகள்களுள் குந்தவையும் மாதேவடிகளும் சேத்ரபாலருக்குக் கொடையளிக்க, மாதேவடிகளும் சந்திரமல்லியும் உலகமாதேவீசுவரத்திற்குக் கொடையளித்துள்ளனர். இம்மூவருள் இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண்டில் கணவர் பெயருடன் அறியப்படுபவர் குந்தவை மட்டுமே அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி எனும் பெயரிலுள்ள, 'கங்கமாதேவி' எனும் பிற்பகுதி கொண்டு இப்பெண் கங்க அரசரை மணந்தவராகலாம் என்று கூறியுள்ளார் திரு. சு. இராஜகோபால்.[5]

கங்கமாதேவி என்பது சந்திரமல்லியின் மற்றொரு பெயராகவே கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 'அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி' என்றே கல்வெட்டு அவரை அறிமுகப்படுத்துகிறது. கங்க அரசரின் மனைவியாக அவர் இருந்திருப்பின், வலஞ்சுழிக் கல்வெட்டுக் குந்தவையைச் சுட்டுமாறு 'ஸ்ரீராஜராஜ தேவரின் திருமகளார் கங்கமன்னரின் மகாதேவியார்' என்றே ஐயாறு கல்வெட்டு அவரையும் சுட்டியிருக்கும். ஆனால், இங்கு உள்ள கல்வெட்டு மிகத் தெளிவாக அருமொழி சந்திரமல்லியான கங்கமாதேவி என்றே அப்பெண்ணைச் சுட்டுவதால் அவரை கங்க மன்னருக்கு மணம் முடிக்கப்பட்டவராகக் கொள்ள முடியவில்லை.

சில கேள்விகள்

இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண்டில் அவரது மூன்று பெண்களுள் குந்தவை மட்டுமே கணவர் பெயருடன் காட்சி தருகிறார். மற்ற இரண்டு பெண்களின் நிலை என்ன என்பதில் தெளிவில்லை. இந்த மூன்று பெண்களுமே பட்டத்தரசி உலக மாதேவி எடுப்பித்த கற்றளிகளுக்கு மட்டுமே கொடையளித்துள்ளனர். அக்கற்றளிகளும் பாடல் பெற்ற இருபெரும் கோயில் வளாகங்களுக்குள்ளேயே எடுக்கப்பட்டுள்ளமை கருதத்தக்கது.

இவர்தம் தந்தையான இராஜராஜர் தஞ்சாவூரில் எடுப்பித்த இராஜராஜீசுவரத்திற்கு யாதொரு கொடையும் இவர்களால் வழங்கப்படவில்லை. 'நாம் குடுத்தனவும் அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும்' எனத் தந்தார் தந்ததையெல்லாம் பதிவு செய்துள்ள இராஜ ராஜர், 'நம் பெண்கள் குடுத்தனவும்' என்று சுட்டி மகிழ இவர் கள் ஏன் இராஜராஜீசுவரத்தைத் தழுவாது போயினர் என்பது புதிராகவே உள்ளது.

இம்மூன்று பெண்களில் குந்தவையும் சந்திரமல்லியும் சொல்லாத ஓர் அரிய தகவலை மாதேவடிகள் தாம் இடம் பெறும் இரண்டு கல்வெட்டுகளிலும் தவறாமல் வெளிப்படுத்தி யுள்ளார். 'உடையார் ஸ்ரீராஜராஜதேவர்க்கு ஆடிஅருளிப் பிரசாதம் பெற்ற பொன்'னிலேயே மாதேவடிகளின் இரண்டு கோயில் கொடைகளும் அமைந்துள்ளன. இராஜராஜருக்கு நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் இந்தத் திருமுழுக்கு அவரது 25ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளிலேயே இடம்பெற்றுள் ளது. இந்த முழுக்குப் பொன்முழுக்கு என்றே கருத வேண்டியுள் ளது. அப்படி அவர் ஆடிஅருளிய பொன்னையே மாதேவடி கள் பிரசாதமாகப் பெற்று, அதிலிருந்தே கோயில்களுக்குக் கொடையளித்துள்ளார் எனும்போது, அது போன்ற பிரசாதம் குந்தவைக்கோ, சந்திரமல்லிக்கோ கிடைக்கவில்லையா அல்லது கிடைத்தும் அதை அவர்கள் கொடையளிக்கவில்லையா எனப் பல கேள்விகள் விடை தேடி எழுகின்றன.

இராஜராஜருக்குத் திருமுழுக்கு நிகழ்ந்ததும் அந்நிகழ்வில் நடுமகள் மாதேவடிகள் பிரசாதம் பெற்றதும் அரிய வரலாற்றுத் தரவுகளாக இரண்டு கல்வெட்டுகள் வழிப் பதிவாகியுள்ள போதும், இராஜராஜரின் 25ஆம் ஆட்சியாண்டில் கங்க மாதேவியும் மாதேவடிகளும் ஏன் கணவர் பெயரின்றிக் குறிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியக்கூடவில்லை.

வரலாறு எப்போதுமே இப்படித்தான்; ஒரு கதவைத் திறந்து பல வழிகளைக் காட்டும். சில வழிகள் உடன் வெளிச்சம் பெற்றுப் பயணங்களைத் தொடரவைக்கும். சில வழிகளோ,

தேட வைக்கும்; தயங்க வைக்கும்; தளராமல் நடந்தால் மெல்ல, மெல்ல இலக்கைக் காட்டும்

குறிப்புகள்

1. மு. நளினி, இரா. கலைக்கோவன், வலஞ்சுழி வாணர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2005, ப. 129.
2. K. A. Nilakanta Sastri, The Colas, Madras University, Chennai, 1964, p. 187.
3. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974, ப. 133.
4. இரா. கலைக்கோவன், ஆடி அருளப் பிரசாதம் பெற்ற பொன்னில் . . . , வரலாறு மின்னிதழ், ஜனவரி, 2012.
5. சு. இராஜகோபால், திருவையாறு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 1976, ப. 91.

21

கழுவுள் காமூர்

'பாறைகளின் மீது சிதறிக் கிடக்கும் இருப்பைப் பூக்கள் தந்தத்தால் செய்த கழங்குகளை ஒக்கும் காட்டு வழியில் என் தலைவர் சென்றிருக்கிறார். அவரை நினைத்து அழகு கெட்டு மையெழுதும் குளிர்க் கண்கள் நீரைப் பெருக்க ஆதிமந்தி போல அறிவு திரிந்து அவலமுற்றுள்ளேன்.

போர்களை விரும்புபவரும் மிக்க புகழுடையவரும் வானளாவிய குடை கொண்டவருமான கழுவுள் என்ற அரசரைப் பதினான்கு வேளிர்கள் ஒருங்கிணைந்து தாக்கிய போது அவரது ஊரான காமூர் எத்தகு துன்பங்களையுற்றுக் கலங்கி நின்றதோ, அது போல் ஆனது என் நெஞ்சு' துன்பியல் படப்பிடிப்பில் பரணர் பதிவு செய்திருக்கும் (அகம் - 135) சங்கச் சிற்றரசர் ஒருவரின் வாழ்க்கை நமக்கு வரலாறு.

5. பொதுப்பகுதி

1. பெருமைச்சுவடுகள்

திரு. சிவ்குமார்

சரியாக 50 ஆண்டுகளுக்கு முன் சென்னை மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு எம். பி. பி. எஸ். படித்துக் கொண்டிருந்தபோதுதான் திரு. சிவகுமாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. எஸ் ஷகுப்புத் தோழரும் இனிய நண்பருமான மருத்துவர் பொ. பெருமாள் மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு முன் சென்னைக் கலைக் கல்லூரியில் ஓராண்டு பயின்றவர். அப்பயிற்சிக் காலத்தே அக்கல்லூரியில் இறுதியாண்டு மாணவராக இருந்தவர் திரு. சிவகுமார். இருவரும் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அவர்கள் நெருங்கிப் பழக வாய்ப்பானது. அந்த நட்பு பெருமாள் மருத்துவக் கல்லூரி மாணவரான பின்பும் தொடர்ந்தது. சிவகுமார் திரை வாய்ப்பு அமைந்து காக்கும் கரங்கள் படத்தில் நடிக்கத் தொடங்கியிருந்தார்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரின் வழியும் நெடிய இடைவெளிக்குப் பிறகு எங்கள் கல்லூரியில் 1966இல் நிகழ்ந்த பொங்கல் விழாவை முன்னிருந்து நடத்தியவர்கள் என்ற முறையிலும் எனக்கும் பெருமாளுக்கும் இடையே நட்பு மலர்ந்தது. 1966இன் இறுதியில் ஒரு நாள் தியாகராயநகரில் இருந்த தம் நண்பர் சிவகுமாரைக் காணச் செல்வதாகவும் உடன் வருமாறும் பெருமாள் அழைக்க, சிவகுமாருடனான என் முதல் சந்திப்பு அவர் இல்லத்தில் அமைந்தது. அதுநாள்வரை அவர் போன்ற ஓர் அழகரை நான் சந்தித்ததில்லை. ஆண்கள் இத்தனை அழகாகவும் இருக்கமுடியும் என்பதே அன்றுதான் எனக்குத் தெரிந்தது. இளமையின் பூரிப்பும் இடையறாத பயிற்சியின் காரணமான உடற்கட்டமைப்பும் முறுவல் தவழும் முகமும் அவரை முதல் சந்திப்பிலேயே உள்ளத்தில் நிறுத்தின. அன்றைய உரையாடல் நேரம் முழுவதும் அவரது சிறப்பான தமிழ் உச்சரிப்பையும் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளும் நேயமான பாங்கையும் பெரிதும் இரசித்தேன். அன்று திரும்பும்

போது நானும் பெருமாளும் அந்தச் சந்திப்புக் குறித்தே மிகுதியும் பேசியதாக நினைவு.

அதற்குப் பிறகு பல முறை அவரைச் சந்தித்து உரையாடி யிருக்கிறேன். அவருடைய வாழ்க்கை நிகழ்வுகள் அனைத்தை யும் பகிர்ந்துகொண்டிருக்கிறார். உழைப்பும் ஊக்கமும் நேர்மை யும் விடாமுயற்சியுமே மிக எளிய நிலையிலிருந்த அவரைப் படிப்படியாக உயர்த்தி இன்று நாடறிந்த மனிதராக்கியுள்ளன. அவர் வரைந்த ஓவியங்களையும் அவற்றை வரைய அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் அவர் வாய்மொழியாகப் பல முறை கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு முறை கேட்கும்போதும் அவர் ஓவியத்தை எந்த அளவிற்கு நேசிக்கிறார் என்பதை நினைத்து வியப்பேன். பென்சில் கொண்டு அவர் வரைந்த மானுடக் கோலங்களைப் பார்க்கும் வாய்ப்பு எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கும் என்று தெரியவில்லை. எனக்கு அந்த வாய்ப்பு அவரோடு பழகிய தொடக்கக் காலத்திலேயே கிடைத்தது. நண்பர் பெருமாளின் பென்சில் கோலங்களைப் பார்த்து வியந்த கண்களுக்கு சிவகுமாரின் கோடுகளுக்குள் மானுட உடலின் மகத்துவம் புலப்பட்டது. உடலை அணு வணுவாக அணுகிப் பார்த்து மருத்துவம் பயின்ற என் உள்ளம் அந்த உடலின் அழகுகளை சிவகுமாரின் பென்சில் தீட்டல் களில் அறிந்தபோது மெய்மறந்தது. சிவகுமார் அனைத்து வகை ஓவியங்களிலும் திறன் காட்டியவர்.

அவரது பல ஓவியங்கள் பார்க்கும் முதல் பார்வையிலேயே நெஞ்சை அள்ளும் என்றாலும், அந்த ஓவியத்தின் பாங்கையும் அதன் பின்னணியையும் அவர் விளக்கும்போது கூடுதல் தெளிவு கிடைப்பதோடு, இரசிப்பு மேன்மையடைவதைப் பலமுறை உணர்ந்திருக்கிறேன். 'என்ன ஒன்றும் சொல்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாய்' என்று சில நேரம் அவர் கேட்பார். கண் களில் விழுந்து கருத்தைக் கனியவைக்கும் காட்சிகளில் மூழ்கும் போது சொற்களுக்கு எங்கே இடம்! அப்போதெல்லாம், 'எப்படி, இப்படி!' என்பதுவே வியப்பிலும் களிப்பிலும் விரியும் என் கண்களில் வெளிப்படும் உணர்வு மொழியாக அமையும்.

மருத்துவக் கல்லூரிப் படிப்பின்போது நானும் பிற கல்லூரி நண்பர்கள் சிலருமாய்ச் சேர்ந்து, 'பூச்செண்டு' என்ற பெயரில்

கல்லூரி மாணவர்களுக்காக ஒரு திங்கள் இதழை அச்சிட்டு வெளியிட்டோம். அந்த இதழில் அக்காலத்தே பெரிதும் பேசப் பட்ட, 'மாடர்ன் ஆர்ட்' பற்றி சிவகுமாரிடம் நேர்முகம் கண்டு ஒரு கட்டுரை வெளியிட விரும்பினேன். அவரும் என் வேண்டு கோளை ஏற்று, ஒரு மாலை முழுவதும் அந்நேர்முகத்திற்காக ஒதுக்கினார். மிகச் சிறந்த ஓவியரிடம் கேட்கப் போகிறோம் என்பதற்காகவே மிக முயன்று கேள்விகளைத் தயாரித்துக் கொண்டு அவரை அணுகினேன். என் கேள்விகள் எழுதப்பட்ட தாளை அவரிடம் அளித்தேன். அவற்றைப் பார்த்துவிட்டு மெலிதாகப் புன்னகைத்தவர், 'உனக்கு மாடர்ன் ஆர்ட்டைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்பதை உன் கேள்விகளே காட்டுகின்றன' என்றார்.

அடுத்து ஒரு மணிநேரம் மாடர்ன் ஆர்ட்டின் அனைத்துப் பரிமாணங்களையும் மிக எளிமையாக, ஓவியம் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கூடப் புரிந்து கொள்ளுமாறு விளக்கினார். அவர் உரையில் வெளிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் கேள்விகளை அமைத்துக்கொண்டு அந்த நேர்முகத்தைப் பூச்செண்டு இதழில் வெளியிட்டேன். நான் பொறுப்பிலிருந்த வரை பூச்செண்டு வெளியிட்ட நேர்முகங்களில் அதுவே தலை யாயதாக அமைந்தது. எவ்வளவு கடினமான செய்தியையும் எல்லோருக்கும் புரியுமாறு எளிமைப்படுத்திச் சொல்வதில் அவருக்கு இருக்கும் திறமை அளப்பரியது. அதை அந்த நேர் முகம் 48 ஆண்டுகளுக்கு முன்பே வெளிப்படுத்தியதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

நான் திருச்சிராப்பள்ளியில் கண்மருத்துவனாக வாழ்க்கை தொடங்கிய காலம் அவர் திரையுலகில் உச்சத்திற்கு வந்து கொண்டிருந்த நேரம். அவர் பங்கேற்ற திரைப்படங்களைப் பார்த்துக் கருத்தெழுதுவது அப்போதுதான் தொடங்கியது. உள்ளத்தில் உணர்ந்ததை உண்மையான நட்புணர்வுடன் எழுது வதையே அவர் விரும்புவார். போலியான புகழ்தலை அவர் ஏற்பதில்லை. அதனால், நிறை, குறைகளை எள்ளளவும் தயக்க மின்றி எழுதியிருக்கிறேன். எல்லா மடல்களுக்கும் அவர் கையெழுத்திலேயே பதில் வரும். ஓயாத படப்பிடிப்புகளுக்கு

இடையிலும் அன்பானவர்களுக்குப் பதிலளிப்பதைக் கடமை யாகக் கொண்டிருந்தார்.

1976 மேத்திங்களில் வெளியான அன்னக்கிளி வெள்ளி விழாப் படமாக அமைந்தது. சிரர்ப்பள்ளி பத்மாமணி திரை யரங்கில் படத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் பங்கேற்கச் சிராப்பள்ளி வந்தவர் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்தார். விழாவில் கலந்துகொள்ளுமாறு என்னை அழைத்தார். நான் தயங்கினேன். திரைப்பட விழா என்பதால் அரங்க மேடையில் பெருங்கூட்டத்திற்கு இடையில் அவரைச் சந்திப்பது கடினமாக இருக்கும் என்று கருதினேன். ஆனால், அங்குச் சென்றபோது அவர் செய்திருந்த முன்னேற் பாடுகள் எந்தச் சிக்கலும் இன்றி அவரைச் சந்திக்க வழி வகுத் தன. அந்த மேடையில் அமர்ந்தவாறே அவருக்குச் செய்யப் பட்ட சிறப்புகளைக் காணப் பெருமையாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

தம் நடிப்புத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக மேஜர் சுந்தரராஜனுடன் இணைந்து நாடகங்களில் நடித்த காலத்தில் அவரது 'அப்பாவி' நாடகம் சிராப்பள்ளியில் நிகழ்ந்தது. தெப்பக்குளம் பிஷப் ஈபர் பள்ளி மைதானத்தில் நிகழ்ந்த அந்நாடகத்தைக் காண எங்களை அழைத்திருந்தார். அரங்கிற்கு வந்ததும் தம்மைத் தொடர்புகொள்ளுமாறு கூறியிருந்தார் நாங்கள் அரங்கிற்குச் சென்றபோது அவர் ஒப்பனை அறையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அங்குச் சென்றபோது அறைக்கு வெளியில் இருந்த காவலர்கள் அவரைச் சந்திக்க இயலாதென்று கூறினர். எவ்வளவோ விளக்கியும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. எங்கள் உரையாடலைக் கேட்டு ஒப்பனை அறையிலிருந்து வெளியில் வந்த சிவகுமார் காவலர் களைக் கடிந்துகொண்டதுடன், நாடகம் ஏற்பாடு செய்திருந்த வர்களை வரவழைத்து நாங்கள் முதல் வரிசையில் அமருமாறு செய்தார் பாதி ஒப்பனையில் அவர் அது போல் வெளிவந்து எங்களை எதிர்கொள்ளும் சூழல் அமைந்தமை குறித்து ஆழ வருந்தினோம். இந்த இரண்டு நிகழ்வுகளும் தம்மால் அழைக்கப் படுபவர்கள் எவ்விதத் துன்பமுமின்றித் தம் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வேண்டும் என்பதில் அவர் எவ்வளவு கவனத்தோடும்

அக்கறையோடும் இருப்பார் என்பதை எங்கள் உள்ளத்தில் ஆழப் பதியச் செய்தன. அன்றிலிருந்து இன்றுவரை இந்தப் பண்பில் எள்ளளவு மாற்றமும் இல்லை.

அண்மையில் ஈரோட்டுக் கல்லூரி ஒன்றில் அவரது மகா பாரதப் பொழிவு நிகழ்ந்தது. அதற்குச் சென்றபோதும் நாற்ப தாண்டுகளுக்கு முன் எப்படி ஏற்பாடுகள் செய்திருந்தாரோ அதைவிடக் கூடுதல் சிறப்பாகவும் உளமார்ந்த அன்போடும் கவனிக்கப்பட்டோம். அவரது நிலையிலிருக்கும் ஒருவர், ஆயிரக் கணக்கில் உறவுகளும் நட்பும் சூழ இருப்பவர், தாம் அழைக்கும் ஒவ்வொருவரையும் கருத்தில் நிறுத்தி அக்கறையோடு கவனிப்ப தென்பது எளிதான செயலன்று. சிவகுமாரின் தனித்த உயர் பண்புகளில் இதுவும் ஒன்று.

சிவகுமாரின் நினைவாற்றல் இணையற்றது. இளம் வயதில் இருந்தே நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர். அவரது நினைவாற்றலும் எதையும் எளிமையாகவும் சுவையாகவும் இயல்பாகவும் எடுத்துச் சொல்லும் திறனுமே அவரை மக்கள் விரும்பும் உரையாளராக மலர வைத்தன. கம்பராமாயணப் பொழிவிற்காகத் தம்மை அவர் தயார்படுத்திக் கொண்டிருந்த காலத்தில் பலமுறை நாங்கள் தொலைபேசியில் உரையாடி யிருக்கிறோம். உரைக்காக அவர் தேர்ந்தெடுத்த பாடல்களையும் அவற்றிற்கான இணைப்புரைகளையும் அவர் சொல்லும்போது அத்தனை இனிமையாக இருக்கும்.

அவரது தமிழ் உச்சரிப்பு கம்பரின் பாடல்களுக்கு உயிரூட்டும். இணைப்புரை மக்கள் மொழியில் அமைந்து மிக எளிதாகச் செவிகளில் இறங்கி நெஞ்சில் நிறையும். கம்பராமா யணத்தைப் பேராசிரியர் சோ. சத்தியசீலனிடம் நான் உள்ளிட்ட மருத்துவர்கள் சிலர் முறைப்படிப் படித்திருக்கிறோம். என்றா லும், சிவகுமாரின் உச்சரிப்பில் கம்பரின் செய்யுள்கள் வெளிப் பட்டபோதுதான் கம்பத் தமிழின் பெருமையும் சீர்மையும் சட்டென விளங்கின. ஓவியராகவும் நடிகராகவும் விளங்கிய அவரால் மக்கள் மனங்கவர்ந்த உரையாளராகவும் வெல்ல முடிந்த மைக்கு அவரது இடையறாத உழைப்பும் தளராத முயற்சியுமே முதன்மைக் காரணங்கள். வளர் இளம் பருவத்தினருக்காக

அவர் நிகழ்த்தியிருக்கும் பேருரைகள் இளம் சமுதாயத்திடம் சிவகுமார் கொண்டிருக்கும் அக்கறையை வெளிப்படுத்து கின்றன. அவர் சொல்லும் செய்திகள் அன்றாட வாழ்க்கையில் அனைத்து நிலை மக்களும் எதிர்கொள்ளும் நிகழ்வுகளின் பிழிவுகளாகவே அமைவதால்தான், அவரது உரைகள் பெருந்திரளான மக்களை ஈர்த்து நெறிப்படுத்துகின்றன.

சிவகுமாரின் நடிப்பாற்றல் இணையற்றது. திரையில் அவர் அறிமுகமான தொடக்க நாளிலிருந்து அவரது படங்களைப் பார்த்தவர்கள் படிப்படியாக அவரது நடிப்பு மெருகேறி வந்தமையை உணரமுடியும். உணர்வுகளை மிக இயல்பாக வெளிப்படுத்தி நாடக பாணியைத் தவிர்த்துத் தம் நடிப்பை வாழ்க்கையோடு ஒன்றியதாக அவர் அமைத்துக் கொண்டமை அவர் திரையில் ஒளிர்ந்த காலத்தே மிக அரிய பாங்காக வரவேற் கப்பட்டது. அவரது பெரும்பாலான படங்கள் வெற்றிப் படங் களே என்றபோதும், நடிப்பில் அவர் சிகரத்தைத் தொட்ட படங்களாக அக்னிசாட்சி, வண்டிச்சக்கரம், ரோஜாப்பூ ரவிக்கைக்காரி, சிந்து பைரவி, மறுபக்கம், இனி ஒரு சுதந்திரம், பசும்பொன் முதலியவற்றை மக்கள் என்றும் நினைவில் கொண்டிருப்பர். கதாசிரியர்கள் மிக முயன்று உருவாக்கும் அற்புதமான கதை நாயகர்களைத் திரையில் வாழ வைப்பவர் கள் நடிகர்களே. அவர்களது உழைப்பும் முயற்சியுமே நடிப் பாற்றலாகப் பரிணமித்து அக்கதை நாயகர்களை வரலாற்றுச் சித்திரங்களாக உருமாற்றுகின்றன. மேற்சொன்ன படங்களின் நாயகர்கள் இன்றும் மக்கள் உள்ளங்களில் வாழ்கிறார்கள் என்றால், அந்த நினைவுப் பதிவின் பின்னே நிமிர்ந்து நிற்பவர் திரு. சிவகுமார்.

ஆடற்கலையின் தொடக்க நிலைகளைக்கூட அறியா திருந்த அவர் காரைக்கால் அம்மையார் திரைப்படத்தில் ஆடலரசி திருமதி ஸ்ரீவித்யாவுக்கு இணையாக ஆடிய சிவ தாண்டவம் ஒன்று போதும் சிவகுமார் என்ற நடிகரின் முயற்சி மேருவின் பெரியது என்பதைப் புலப்படுத்த. முயன்றால் எதுவும் முடியும் என்பதைத் தம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் வெளிப்படுத்தி வென்ற பேராற்றலாளர் அவர்.

திரையுலகில் இறைத்தோற்றம் என்றாலே திரு. என். டி. இராமாராவ்தான் என்றிருந்த நிலையை மாற்றியவர் திரு. சிவ குமார். அவரது களையான முகமும் மனம் நிறைக்கும் சிரிப்பும் இடையறாத பயிற்சியால் கட்டமைப்புப் பெற்றிருந்த உடலும் அவரைக் கடவுள் நடிகராகவே மாற்றிவிட்டன. ஒரு காலக்கட் டத்தில் கடவுள் வேடத்திற்காகவே பிறந்தவராக அவர் கொண்டா டப்பட்டதும் உண்டு. நண்பர்களுடன் உரையாடுகையில் கடவுள் வேடமேற்று நடிப்பதில் உள்ள நெருக்குதல்களையும் சிக்கல்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். மகுடம், அணி கலன்கள், இறுக்கமான ஆடைகள், இயல்புக்கு மீறிய ஒப்பனை இவற்றுடன் படப்பிடிப்புத் தளங்களில் படப்பிடிப்பிற்காகக் காத்திருத்தல் எனப் பல துன்பங்கள் கடவுள் வேட நடிகர் களுக்கு உண்டு. 'பம்மல் சம்பந்தம்' படத்தில் திரு. கமலஹாசன் சிவபெருமான் வேடமேற்று இந்தத் துன்பங்களை எல்லாம் நடிப்பு, உரையாடல் வழி வெளிப்படுத்தியிருப்பதை நினைவு கூர்ந்தால், திரு. சிவகுமார் எத்தனை அரும்பாடுபட்டுக் கண்ண னாகவும் கந்தனாகவும் சிவபெருமானாகவும் காட்சிதந்திருக் கிறார் என்பதை உணரமுடியும்.

சிவகுமார் கல்வியின் அருமை தெரிந்தவர். கல்வியாளர் களைப் பெரிதும் மதிப்பவர். பயிலும் தலைமுறைகளிடம் இணையற்ற அன்பும் அக்கறையும் கொண்டவர். அதனால் தான், அவரது உரைகளெல்லாம் பல்கலை, கல்லூரி, பள்ளி வளாகங்களிலேயே பெருமளவிற்கு அமைகின்றன. வாழ்க்கை வளப்பட்டவுடன் அவர் செய்த முதற் பணி கல்விக்கெனத் தம் ஊதியத்திலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கியதுதான். பள்ளி இறுதி வகுப்பு, மேனிலை வகுப்புத் தேர்வுகளில் உயர் மதிப் பெண் பெற்ற மாணவ, மாணவிகளைத் தம் இல்லத்திற்கே வர வழைத்து, விருந்தூட்டி, அவர்களுக்குப் பரிசளித்துப் பெருமைப் படுத்தியவர் அவர். பல ஏழை மாணவர்கள் அவரிடம் கல்வி உதவி பெற்றிருக்கிறார்கள். அவருடைய இந்தப் பணியே அவரது திருமகன் சூர்யாவால் மிகப் பெரிய அளவில் அகரம் கல்வி அமைப்பாக ஏற்றம் பெற்று இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்களின் வளமான வாழ்க்கைக்கு வழியமைத்துத் தருகிறது.

சிவகுமார் மிகச் சிறந்த குடும்பி. தாய், துணைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என அனைவரிடமும் இணை யான பாசமும் உரிமையுடனான அக்கறையும் கொண்ட அவரது அன்பு வளையம் யாரையும் வயப்படுத்தும் ஆற்றல் உடையது. திருமணத்திற்கு முன்பிருந்தே அவரிடம் பழகி யிருப்பதால் அவருடைய நெறியான வாழ்க்கை எங்கள் அனைவருக்குமே வழிகாட்டுதலாக இருந்தது அறிவுரைகள் என்று அவர் ஏதும் சொல்வதில்லை. அவர் வாழ்க்கை அனுபவங்களே அவரோடு பழகும் அத்துனை பேருக்கும் தேவையான அறிவுரைகளை வழங்கிவிடும். தம்மோடு பழகும் அனைவர்தம் குடும்பங்களையும் தம் குடும்பத்தார் போலவே நேசிப்பதும் அவர்தம் இன்ப, துன்பங்களில் தயங்காமல் பங்கேற்பதும் தேவை நேரின் தேவைக்கேற்பத் துணைநிற்பதும் அவரது மிக உயர்ந்த பண்புகளுள் தலையாயதாகும்

சிவகுமார் வாழ்க்கையில் நான்கு படிநிலைகள் மிக முக்கிய மானவை. தாயன்பு தவிர வேறொன்றும் துணைநிற்காத வளர் பருவ அனுபவங்கள் அவரைப் பண்படுத்தின. ஓவியப் பயிற்சி யுடன் மலர்ந்த இளமைப் பருவம் தேடலையும் உழைப்பையும் ஆற்றலையும் அவருக்குள் பெருக்கின. நடிப்புச் செல்வராக மாறியபோது அவர் பார்த்துப் பழகிய உலகம் அவரைச் செதுக்கிச் செம்மலாக்கியது. மேடைப் பொழிவாளராக உருமாறியபோது பாதைகளைக் காட்டும் பண்பாளராக அவர் உயர்ந்தார். சிலர் வழிகாட்டுவதற்காகவே பிறக்கிறார்கள். பலர் வழி நடப்பதற்காகவே தொடர்கிறார்கள். சிவகுமார் போன்ற ஒரு சிலரே தங்கள் வாழ்க்கையே வழிகாட்டுமாறு நெறியாளர் களாக நிலைக்கிறார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் சிவகுமார் நட்புக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவத்தின் மொத்த வடிவம்.

இரா. கலைக்கோவன்

---

2. அங்கும் இங்கும்

1. ரோட்டரி சங்க விழா

4. 8. 2015 இரவு 7 மணியளவில் ஓட்டல் சங்கத்தில் அமைந்த சிராப்பள்ளி நடுநகர் ரோட்டரி சங்கச் சிறப்புச் சந்திப்பில், 'கோயில்களை நோக்கி' என்ற தலைப்பில் டாக்டர் இரா. கலைக் கோவன் காட்சியுரை நிகழ்த்தினார். அவை நிறைத்து அமர்ந் திருந்த உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கலந்துரையில் ஈடுபட்ட னர். தலைவர் வி. வி. சுப்ரமணியன் வரவேற்க, செயலர் எம். மோகன்குமார் நன்றி கூறினார். மேனாள் மாவட்ட ஆளுநர் ஏ என். முத்துராமன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

2. பத்மபூஷண் கூ. ரா. சீனிவாசன் நினைவு அறக்கட்டளைப் பொழிவு

சிராப்பள்ளிப் பாவாணர் தமிழியக்கமும் டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும் இணைந்து நிகழ்த்திய கல்வெட்டறிஞர் ஐராவதம் மகாதேவனின் பத்மபூஷண் கூ ரா. சீனிவாசன் நினைவு அறக்கட்டளைப் பொழிவு 23. 8. 2015 பிற்பகல் 3. 30 மணியளவில் தூய பவுல் இறையியல் கல்லூரி அரங்கில் நிகழ்ந்தது. முனைவர் கு. திருமாறன் தலைமையேற்க, முனைவர் பி. தமிழகன் வரவேற்புரை நிகழ்த்த, முனைவர் மு. நளினி பொழிவாளரை அவைக்கு அறிமுகம் செய்தார். 'காலப்போக்கில் தமிழகக் கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராஜகோபால் அறக்கட்ட ளைப் பொழிவாற்றினார். மருத்துவர் சுப்பிரமணியம் பழனி யாண்டி அறக்கட்டளையின் சிறந்த கல்வெட்டறிஞர் விருதைத் திரு. இராஜகோபாலுக்கு மருத்துவர் சு. பழனியாண்டி வழங்கிச் சிறப்பிக்க, முனைவர் அர. அகிலா நன்றி கூறினார்.

3. பூம்புகார் மீட்டுருவாக்கக் கருத்தரங்கம்

சென்னை அமெட் பல்கலைக்கழகம் 24. 8. 2015 அன்று துணைவேந்தரின் மாநாட்டுக் கூடத்தில் நிகழ்த்திய பூம்புகார் மீட்டுருவாக்கம் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கில், பேராசிரியர் சோம இராமசாமி அதன் நோக்கம் விவரிக்க, திருவாளர்கள் நடன. காசிநாதன், சு. இராசவேல், ந. அதியமான், கே. பி. மோகன்

தாஸ், இரா. கலைக்கோவன் ஆகியோர் பூம்புகார் தொடர்பான அகழாய்வு, இலக்கியம், கல்வெட்டுகள் குறித்து உரையாற்றினர்.

4. அறிஞர் போற்றுதும் விருது விழா

சிராப்பள்ளிச் சமயபுரம் எஸ். ஆர். வி. மேனிலைப்பள்ளி 29. 8. 2015 மாலை நிகழ்த்திய அறிஞர் போற்றுதும் 2015 தமிழ் விருதுகள் வழங்கும் விழாவிற்குத் திரு. ஏ. இராமசாமி தலைமை யேற்க, திரு. பி. சுவாமிநாதன் வரவேற்றார். திருவாளர்கள் ஞாநி, ச. தமிழ்ச்செல்வன் வாழ்த்துரை வழங்கிய இவ்விழாவில், பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதிக்கும் அறிவியலாளர் மயில் சாமி அண்ணாதுரைக்கும் வாழ்நாள் தமிழ் விருது வழங்கப் பட்டது. டாக்டர் இரா. கலைக்கோவனும் முனைவர் இரா. வேங் கடாசலபதியும் தமிழ் இலக்கிய விருது பெற்றனர். மூவருக்குச் சமூக நோக்கு விருதும் மூவருக்குப் படைப்பூக்க விருதும் வழங்கப்பட்ட இவ்விழாவில் திரளான மாணவர்களும் மக்க ளும் பங்கேற்று விருதாளர்களைப் பாராட்டி வாழ்த்தினர். முதல்வர் க. துளசிதாசன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

5. மரபுரிமை வார விழா

சிராப்பள்ளி ஓட்டல் உரிமையாளர்கள் சங்கமும் சுற்றுலாப் பயணியர் அமைப்பும் இணைந்து 24. 9. 2015 மாலை மேற்கொண்ட மரபுரிமை வார விழாச் சுற்றுலாவிற்கு டாக்டர் மா. இராசமாணிக் கனார் வரலாற்றாய்வு மைய இயக்குநர் டாக்டர் இரா. கலைக் கோவனும் மதிப்புறு இணை இயக்குநர் பேராசிரியர் முனைவர் மு. நளினியும் நெறியாளர்களாக அமைந்தனர். வெள்ளறைக் குடைவரைகளையும் பெரியழுகோயிலையும் மாற்பிடுகு பெருங் கிணற்றையும் சுற்றுலாவில் பங்கேற்றவர்களுக்கு அவர்கள் விளக்கிக் காட்டியதுடன், அவற்றின் வரலாற்றுப் பின்னணியை யும் எடுத்துரைத்தனர். பங்கேற்றவர்கள் அனைவருக்கும் 'வாருங்கள் வலம் வருவோம்' என்ற தலைப்பிலான சிறு கையேடு வழங்கப்பட்டது.

6. குடும்பச் சந்திப்புப் பட்டிமன்றம்

இந்திய மருத்துவ மன்றச் சிராப்பள்ளிக் கிளை உறுப்பி னர்களின் குடும்பச் சந்திப்பு விழா எஸ். ஆர். எம். உணவகத்தின்

விருந்தரங்கில் மன்றத் தலைவர் மருத்துவர் சொ. சேதுராமன் தலைமையில் 27. 9. 2015 மாலை நிகழ்ந்தது. நிகழ்வில், 'துணைவர் மருத்துவராக அமைந்துவிட்டால் வாழ்க்கை இன்பமே/ இடையூறே' என்ற தலைப்பிலான பட்டிமன்றம் மருத்துவர் இரா. கலைக்கோவன் தலைமையில் அமைந்தது. இன்பமே என்று மருத்துவர்கள் அவ்வை கலைக்கோவன், இரமணிதேவி சென்னியப்பன், அ. ஜமீர் பாஷா ஆகியோர் வாதிட, இடையூறுதான் என்று மருத்துவர்கள் ஜ. இலட்சுமி நாராயணன், சொ. சேதுராமன், பிரேமாவதி பிரபுஇளங்கோ ஆகியோர் உறுதியாக எதிர்த்தனர். இன்பமும் இடையூறும் அவரவர் பார்வையைப் பொறுத்ததே என்று தொடங்கி, துணைவர் மருத்துவராக அமைவதில் சிறுசிறு இடையூறுகள் இருந்தபோதும் இன்பமே மிகுதி என்று தீர்ப்பு வழங்கினார் நடுவர் கலைக்கோவன்.

7. வரலாறு வெள்ளி இதழ் வெளியீட்டு விழா

சென்னை மயிலாப்பூர் இராகசுதா அரங்கில் 31. 10. 2015 சனிக்கிழமை மாலை நிகழ்ந்த வரலாறு வெள்ளி இதழ் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்று, வரலாறு வெள்ளி இதழை வெளியிட்டுப் பேசிய தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் அவ்வை நடராசன், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் ஆய்வுப்பணிகளையும் பதிப்புகளையும் பாராட்டினார். நூலின் முதற்படியைப் பெற்று வாழ்த்துரைத்த சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறை மேனாள் தலைவர் பேராசிரியர் கோ. வேணிதேவி வரலாற்றுத்துறையும் ஆய்வு மையமும் இணைந்து கடந்த மூப்பதாண்டுகளாகச் செய்திருக்கும் பணிகளை முதன்மைப் படுத்திப் பேசியதோடு கல்வெட்டாய்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின்போது சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய மதிப்புறு கல்வெட்டாய் வாளர்களான சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் மு. நளினி, முசிறி அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி வரலாற்றுத்துறை உதவிப்

பேராசிரியர் அர. அகிலா ஆகியோரின் களஆய்வுப் பணிகளை யும் வரலாற்றுக் கண்டுபிடிப்புகளையும் பாராட்டும் விதமாக அவர்கள் இருவருக்கும் வரலாறு மின்னிதழ்க் குழுவினரின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இவ்விருது களை வழங்கிய தினமணியின் மேனாள் ஆசிரியரும் கல்வெட் டறிஞருமான திரு. ஐராவதம் மகாதேவன் பேராசிரியர்களின் ஆய்வுப்பணிகளைப் பெரிதும் பாராட்டி வாழ்த்தியதுடன், தமிழ்நாட்டின் வரலாற்றிற்கு அவர்தம் உழைப்பு பல அரிய தகவல்களை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார். அவர்க ளுடைய உழைப்பில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வெளிவரும் வரலாறு ஆய்விதழின் சிறப்புத் தன்மைகளை அவைக்கு விளக்கிய மகாதேவன், டாக்டர் இரா. கலைக் கோவனின் வழிகாட்டலில் இளம் தலைமுறையினர் சாதனை கள் படைத்து வருவதாக மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

விருது பெற்றவர்களை வாழ்த்திப் பேசிய பச்சையப்பன் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் மா. ரா. அரசு வரலாறு ஆய்விதழின் அரும்பணிகளை அவையில் பதிவு செய்தார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய கல்வெட்டுகளைக் கண்டு பிடித்து வரலாற்றுக்குப் பெருமை சேர்த்திருக்கும் பேராசிரியர் கள் நளினிக்கும் அகிலாவிற்கும் தமிழ்நாடு மிகவும் கடமைப்பட் டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். சிறப்புரையாற்றிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய இயக்குநர் ட்டாக்டர் இரா. கலைக்கோவன் கடந்த முப்பதாண்டுகளாகச் சிராப்பள்ளி மாவட்டத்திலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்டு வரும் ஆய்வுகளை முதன்மைப்படுத்தி உரை யாற்றினார். தமிழ்நாட்டுக் கோயில்கள் வரலாற்றுக் களங்கள் என்பதால் அவற்றைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தியதுடன், ஊடகவியலாளர்கள் மையத்தின் ஆய்வுப்பணிகளில் காட்டும் ஆர்வத்திற்கு நன்றி தெரிவித்து, அவர்தம் உதவியோடு ஆய்வு மையம் பல அரிய செய்திகளைத் தமிழகம் முழுவதும் கொண்டு சேர்த்திருப்பதாகப் பெருமிதப் பட்டார்.

விழாவில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற் றாய்வு மையத்தின் பணிகளைப் பற்றிப் பேராசிரியர் மு. நளினி

யும் பதிப்புகளைப் பற்றி பேராசிரியர் அர. அகிலாவும் விரித்துரைத்தனர். வரலாறு மின்னிதழ் ஆசிரியர் குழு சார்பில் திரு. ச. கமலக்கண்ணன் வரவேற்புரை நிகழ்த்த, திருவாளர்கள் சே. கோகுலும் சு சீதாராமனும் விருது பெற்ற பேராசிரியர்களின் சிறப்புகளையும் உழைப்பையும் விரித்துரைத்தனர். திரு. பால. பத்மநாபன் நன்றி கூறினார்.

8. அரிமா, அரிமா நங்கையர் சங்கக் கருத்தரங்கம்

18. 12. 2015 காலை 11 மணியளவில் சிராப்பள்ளி உருமு தனலட்சுமி கல்லூரியில் அரிமா, அரிமா நங்கையர் சங்கங்கள் இணைந்து நிகழ்த்திய இளைஞர் முன்னேற்றக் கருத்தரங்கில் டாக்டர் இரா. கலைக்கோவன் கலந்து கொண்டு கோயில்களும் இளைஞர்களும் என்ற தலைப்பில் காட்சியுரை நிகழ்த்தினார். பேராசிரியர் விஜயசுந்தரி உரையாளரை அறிமுகப்படுத்த, திருமதி செல்வி நன்றி கூறினார்.

9. மருத்துவ மன்றப் பொங்கல் விழா

இந்திய மருத்துவ மன்றச் சிராப்பள்ளிக் கிளையின் பொங்கல் விழா 14. 2. 2016 மாலை மருத்துவர் மதுரம் நினைவரங்கில் மரு. சு. ஜம்புநாதன் தலைமையில் நிகழ்ந்தது. அறிமுக உரைகளை மருத்துவர்கள் திருமதி அவ்வை கலைக்கோவனும் திரு. சு. பழனியாண்டியும் நிகழ்த்தினர். மருத்துவர் அர. கணேசன் கலைவிருது மருத்துவர் சு. பொன்னம்மாளுக்கும் மருத்துவர் சு. பழனியாண்டி அறக்கட்டளையின் 2016ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழறிஞர் விருது பேராசிரியர் அ. அறிவுநம்பிக்கும் வழங்கப்பட்டன. 'சிந்தனையே சீர்மை தரும்' என்ற தலைப்பில் திரு அ. அறிவுநம்பி சிறப்புரையாற்றினார்.

10. பராசக்தி கல்லூரியின் மாநிலக் கருத்தரங்கு

'கல்வெட்டுகள் வழி வெளிப்படும் தமிழ் அரசர்களின் நீராதாரப் பாராமரிப்பும் மேலாண்மையும்' என்ற தலைப்பில் 18. 2. 2016 அன்று குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி வரலாற்றுத் துறை நிகழ்த்திய மாநிலக் கருத்தரங்கில் துறைத்தலைவர் முனைவர் எஸ். அமிர்தவல்லி வரவேற்க, முதல்வர் முனைவர் கே. திரிபுரசுந்தரி தலைமையேற்க, டாக்டர் இரா. கலைக்கோவன்

தொடக்கச் சிறப்புரை நிகழ்த்தினார். முனைவர் வெ. வேதாசலம், திரு. சந்திரவாணன் ஆகியோரின் உரையும் திருமதி எஸ். சரோஜாவின் நிறைவுப் பேருரையும் தொடர்ந்தன.

11. விக்கிரமன் விருது

இலக்கியப்பீடம் திங்களிதழின் 20ஆம் ஆண்டுத் தொடக்க விழா சென்னை மாம்பலம் சந்திரசேகரர் திருமண மண்டபத்தில் 19. 3. 2016 மாலை தினமணி ஆசிரியர் திரு. கே. வைத்திய நாதன் தலைமையில் நடந்தது. அவ்விழாவில் அமரர் கலைமாமணி விக்கிரமனின் 89ஆம் ஆண்டுப் பிறந்த நாள் நினைவாக டாக்டர் இரா. கலைக்கோவனுக்கு அவரது வரலாறு, இலக்கியப் பணிகளைப் போற்றுமாறு விக்கிரமன் விருது வழங்கப்பட்டது. முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார் இலக்கியப்பீட விருது பெற்றார். விருதுகளை வழங்கி விருதாளர்களைப் பாராட்டித் திரு. வைத்தியநாதன் உரையாற்ற, இலக்கியப்பீட ஆசிரியர் திரு. கண்ணன் விக்கிரமன் அனைவரையும் வரவேற்று நன்றி கூறினார்.

12. பள்ளி ஆசிரியர்களுக்குக் கருத்தரங்கு

ஏப்பிரல் 9, 10 இரண்டு நாட்களும் சிராப்பள்ளிச் சமயபுரம் எஸ். ஆர். வி. மேனிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கான கல்வெட்டுப் பயிற்சி முகாம் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வாளர்கள் வழிகாட்டலில் நிகழ்ந்தது. முதல் நாள் காலை இலக்கியம், வரலாறு குறித்து டாக்டர் இரா. கலைக்கோவனும் கோயிற்கட்டடக்கலை, கல்வெட்டியல் குறித்துப் பேராசிரியர் மு. நளினியும் காட்சியுரை நிகழ்த்த, மதியம் ஓவியம், செப்புத்திருமேனிகள் குறித்த கலந்துரை நிகழ்ந்தது. வினா-விடை நிகழ்வு சிறப்பாக அமைய, மறுநாள் காலை தவத்துறை சப்தரிஷீசுவரர் கோயிலில் ஆசிரியர்கள் களப் பயிற்சி பெற்றனர். பேராசிரியர்கள் நளினியும் அர. அகிலாவும் கல்வெட்டுப் படியெடுப்புச் செய்து காட்ட, பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கல்வெட்டு வாசிப்பில் ஈடுபட்டனர். இருநாள் படிப்புத் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட போட்டிகளில் வென்ற வர்களுக்கு ஆய்வு மைய வெளியீடுகள் பரிசாகத் தரப்பட்டன.

13. எஸ். ஆர். எம். மருத்துவக் கல்லூரிக் கலைவிழா

14. 5. 2016 மாலை சிராப்பள்ளி எஸ். ஆர். எம். மருத்துவக் கல்லூரிக் கலையரங்கில் நிகழ்ந்த மாணவர் கலைவிழாவிற்கு மருத்துவமனை முதன்மையர் திரு. சுகுமாறன் அண்ணாமலை தலைமையேற்க, துணை இயக்குநர் மருத்துவர் ந. பாலசுப்ர மணியன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொண்டு உரையாற்றிய டாக்டர் இரா. கலைக் கோவன், விழாக்களின் பெருமை குறித்தும் தம் கல்விக் கால விழாக்கள் பற்றியும் மாணவர்களிடையே கருத்துப் பகிர்வு செய்தார்.

14. மருத்துவர் நாள் விருது வழங்கும் விழா

இந்திய மருத்துவ மன்றத்தின் தமிழ்நாடு கிளை 22. 7. 2016 மாலை சென்னை ஓட்டல் சவேராவில் நிகழ்த்திய மருத்துவர் நாள் விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்நாடு அரசின் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சி. விஜயபாஸ்கர், தமிழ்நாடு முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் இரா. கலைக்கோவன் உள்ளிட்ட 15 சிறந்த மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார். நலத்துறைச் செயலர் மருத்துவர் ஜே. இராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்த இந்நிகழ்விற்கு மருத்துவர் எஸ். தாமோத ரன் தலைமையேற்றார். மருத்துவர் என். முத்துராஜன் வரவேற்க, மருத்துவர் கே. இராஜசேகர் நன்றி கூறினார்.

15. வரலாற்று மன்றத் தொடக்கவிழா

சிராப்பள்ளி பிஷப் ஈபர் கல்லூரி வரலாற்றுத் துறையின் சார்பில் 29. 7. 2016 அன்று நிகழ்ந்த வரலாற்றுத்துறைத் தொடக்க விழாவிற்குத் துறைத் தலைவர் பேராசிரியர் முனை வர் ஆர். இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந் தினராகப் பங்கேற்று, 'தமிழ்நாட்டுக் குடைவரைகளும் கற்றளி களும் ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் மு. நளினி காட்சியுரை நிகழ்த்தினார்.

16. க. ப. அறவாணர் சாதனை விருது

சென்னை அமைந்தகரை தமிழ்க்கோட்ட அறவாணர் ஆராய்ச்சிக் கட்டளையின் 2015ஆம் ஆண்டிற்கான அறவாணர் சாதனை விருது டாக்டர் இரா. கலைக்கோவனுக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் தொடர்பியல்-இதழியல் துறைத் தலைவர் முனைவர் கோ. இரவீந்திரனுக்கும் எழுத்தாளர், இதழாசிரியர் க. ஜீவபாரதிக்கும் 13. 8. 2016 அன்று வழங்கப்பட்டது.

சென்னைப் பல்கலைத் துணைப் பேராசிரியர் வாணி அறிவாளன் வரவேற்க, தூத்துக்குடி வ. உ. சிதம்பரனார் கல்விக் குழுத் தலைவர் திரு. ஏ. பி. சி. வீ. சொக்கலிங்கம் தலைமையேற்று, விருது பெற்ற அறிஞர்களைப் பாராட்டினார். விருது பெற்ற மூவருக்கும் பேராசிரியர் அறவாணன் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கினார். டாக்டர் இரா. கலைக்கோவனின் 30 ஆண்டுக் கால வரலாற்றாய்வுப் பணிகளை அவையோருக்கு அறிமுகப்படுத்திய மருத்துவர் சீ. அருள்செங்கோர், தமிழ்நாட்டுக் கலைவரலாற்றிற்கு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் பங்களிப்பினைப் பல சான்றுகளுடன் நினைவுகூர்ந்தார்.

ஏற்புரையின்போது, தமிழறிஞர்களும் வரலாற்றறிஞர்களும் கோயிற்கலைகளிலும் கல்வெட்டுகளிலும் அடிப்படைப் பயிற்சியேனும் பெற்றால்தான் தமிழ்நாட்டு வரலாற்றை நேர்மையான முறையில் மீட்டுருவாக்கம் செய்யமுடியும் என்று குறிப்பிட்ட டாக்டர் இரா. கலைக்கோவன், களஆய்வுகளில் கருத்துச் செலுத்தினால் மட்டுமே தமிழர் வரலாற்றை முழுமையாகப் பதிவுசெய்யமுடியும் என்றதுடன், தம் பணிகளில் துணைநின்ற அனைவருக்கும் தாம் பெற்ற விருது உரியதாகும் எனப் பெருமிதப்பட்டார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பேராசிரியர் தாயம்மாளும் திரு. அறிவாளனும் வரவேற்றனர்.

---

3. அன்புள்ள உங்களுக்கு

31. 10. 2015 வரலாறு 25ஆம் தொகுதி வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றதை எண்ணி இருவரும் மிக மனநிறைவு கொள்கிறோம். அவ்விதழில் என்னைப் பற்றி 'பெருமைச் சுவடுகள்' எனும் தலைப்பில் தாங்கள் எழுதிய கட்டுரையை நேற்றுதான் பார்த்துப் படித்து மகிழ்ந்தேன். எத்தனை ஆண்டு நிகழ்ச்சிகளை அப்படியே மனதில் பதிந்து தாங்கள் எழுதி யிருப்பது எங்களுக்கு வியப்பை அளித்தது. தங்களைப் போன்ற ஒருவரை நான் பணியாற்றிய பல்கலைக்கழகங்களில் முன் னிலைப்படுத்த வாய்ப்பு நேர்ந்தது பற்றி மிக மகிழ்கிறேன்.

தாங்கள் அந்தக் களத்திற்கு வரும் முன்பு ஆனந்தரங்கர் நாள்குறிப்பைப் பற்றி உரையாற்றப் பலரை அழைத்திருந்தோம். அவர்களுக்கு மிக விலையுள்ள இராம் இண்டர்நேஷனல் விடுதியில் அறை போட்டுத் தங்கவைத்து உரையாற்றச் செய்திருந்தோம். உரைக்காகத் தனி மதிப்பூதியமும் வழங்கி னோம். வந்திருந்தோரில் பெரும்பாலோர் புதுவைக்கு வந்த பின்பே அறையில் தங்கியிருந்துகொண்டு எங்களிடமே புத்தகத்தைப் பெற்று அவசர அவசரமாகப் புரட்டி வந்து மேடையில் உரையாற்றியதை நேரில் கேட்டிருக்கிறோம். மனம் பதைக்கும்.

தாங்கள் வரத் தொடங்கிய பின்பே இந்த நிகழ்ச்சியில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. பல்கலையில் நான் இருந்தவரை தங்களைத் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருந்தேன். புதுவை மக்கள் பொதுவாக விழிப்புடையவர்கள். ஆனந்தரங்கர் நாள் குறிப்பைப் பற்றி முன்பே அறிந்தவர்கள். அவர்களிடையே தங்கள் உரைகள் பெரும் பேரை வாங்கித் தந்தன. மருத்துவத் துறையில் இருந்துகொண்டு வாசிப்பதற்கு எளிமையில்லாத ஒரு பெரும் நூலைப் படித்து, அதில் உள்ள அரிய பகுதிகளை எடுத்து அளித்தது மிகப் பாராட்டத்தக்கது. நான் அங்கு இருந்த வரை தாங்கள் ஆற்றிய உரையைத் தொடர்ந்து அச்சிட்டு வந்தேன். அதற்குப் பிறகு என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியாது.

ஒரு வேலையை எடுத்துக்கொண்டால் அதனைச் செவ்வை யாகச் செய்யவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உடைய

வர்கள் தாங்கள் என்பதைத் திருச்சிராப்பள்ளியிலும் புதுவையி லும் இன்னபிற இடங்களிலும் நேரில் பார்த்திருக்கிறேன். தங்களது அருமை அறிந்து முன்னாள் துணைவேந்தர் ஐயா முத்துக்குமரன் அவர்களும் பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சி மன்றத்தில் தங்களை உறுப்பினராக அமர்த்திய செய்தியையும் அறிந்தேன்.

இது மட்டுமின்றித் திருச்சிராப்பள்ளி வந்தபோதெல்லாம் தங்கள் இல்லத்தில் தங்கி, தங்கள் துணைவியார் அளித்த விருந்தோம்பலை நிறைவுடன் ஏற்றுப் பயன் கொண்டவன் நான். மேலும், டாக்டர் நாராயணன் அவர்களை அறிமுகப் படுத்தி எனக்கு ஒவ்வொரு முறையும் மருத்துவம் பார்க்கச் செய்தீர்கள். இவ்வுதவிகளை மறக்கவே முடியாது. இதற்கும் மேலாகத் தாங்கள் வெளியிட்டு வரும் சிறந்த நூலில் என்னைப் பற்றி நல்ல கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறீர்கள். என் நெஞ்சுவந்த நன்றி.

க. ப. அறவாணன்
சென்னை - 600 029

3. 11. 2015 நாளிட்ட தினமணியில் கல்வெட்டு ஆராய்ச்சி யாளர்கள் பேராசிரியர்கள் மு. நளினி, அர. அகிலா ஆகியோ ருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிய செய்தி அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் எந்த இலாப நோக்கமும் இன்றிக் கல்வெட்டாராய்ச்சி மேற்கொண்டு வருவது பாராட்டத்தக் கது. கல்வெட்டுகள், சிற்பங்கள், கட்டமைப்புகள் ஆகியவற்றின் தன்மைகளையும் அவை தொடர்பான கால ஆய்வுகளையும் உங்கள் கருத்து முடிவுகளையும் வரலாறு இதழ்களில் வெளியிட்டு ஆய்வு உலகிற்கு வழங்கி வருகிறீர்கள். நாளிதழ்கள் வழிக் கண்டுபிடிப்புச் செய்திகளைப் பொதுமக்களுக்கும் தெரிவித்து வருகிறீர்கள்.

ஒரு பல்கலைக்கழகம், அரசுக் கல்வெட்டு ஆராய்ச்சித் துறை கள் ஆற்றவேண்டிய பணியைத் தாங்கள் கடந்த 25 ஆண்டு களுக்கும் மேலாக மேற்கொண்டு வருகிறீர்கள். தங்களது

விடாமுயற்சியை உளமாரப் பாராட்டுகிறேன். வெள்ளி விழா கண்ட வரலாறுக்கு வாழ்த்துக்கள்.

எஸ். ஏ. சம்பத்குமார்,
திருப்பனந்தாள்.

வரலாறு 25இல் வெளியாகியுள்ள இலக்கியம் சார்ந்த குன்றக்குரவை, அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப ஆகிய இரண்டு கட்டுரைகளுமே மிகச் சிறந்த படைப்புகள். இலக்கிய ஆளுமைகள் சமுதாயப் பார்வைகளை எப்படியெல் லாம் உள்வாங்கிக் கொள்கின்றன என்பதை மிக அழகாக வெளிக்கொணர்ந்துள்ளீர்கள். சிற்பக் காட்சிகளைக் கொண்டே இலக்கியப் பின்னணிகளை வரைந்து காட்டியிருக்கும் பாங்கு பாராட்டிற்குரியது. காலந்தோறும் நிகழ்ந்த மகளிர் மனநிலை மாற்றங்களை இலக்கியங்கள் படம்பிடித்திருக்கும் வகைமை குன்றக்குரவையில் நன்கு பளிச்சிடுகிறது.

மா. ரா. சிவஅரசி,
பெங்களூரு.

வரலாறு 25 அதிகப் பக்கங்களுடன் மிகச் சிறப்பான உள் ளடக்கத்துடன் பெருமைக்குரிய இதழாக வெளிவந்துள்ளமை மகிழ்வளிக்கிறது. சென்ற சில இதழ்களினும் இவ்விதழில் புதிய கல்வெட்டுகள் பெருகியுள்ளன. பேராசிரியர் இளங்கோவன் பற்றிய தகவல்கள் நெஞ்சை நெகிழ வைத்தன. பேராசிரியர் மு. நளினியின் அறக்கட்டளைப் பொழிவு வரலாறு படைத்துள் ளது. நானறிந்த அளவில் இவ்வளவு நேர்த்தியாக ஒரு மாவட்டத் தின் கோயிற் கட்டடக்கலை இதுநாள்வரை சொல்லப்பட வில்லை. ஆழமான அறிவும் வலிமையான களப்பணிப் பின்புல மும் இருந்தால் தவிர இத்தகு சிறப்பான கட்டுரைகளை எழுத இயலாது. கட்டுமானங்களின் அனைத்துக் கூறுகளுக்குள்ளும் நுழைந்து ஒப்பீடு செய்து தரவுகளைத் தொகுத்தளிப்பது என்பது மிக அரிய செயல். இந்த ஒப்பற்ற கட்டுரைக்காக பேராசிரியர் நளினிக்கு என் வாழ்த்துக்கள்.

ப. சுந்தரேசன்,
சென்னை.

வரலாறு 25 இதழின் உள்ளடக்கம் அருமை. அனைத்துக் கட்டுரைகளுமே மிக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் அழுத்தமான உண்மைகளை முன்வைக்கிறது திருச்சிராப்பள்ளி மாவட்டக் கோயிற் கட்டடக்கலை பற்றிய மு. நளினியின் ஒப்பாய்வுக் கட்டுரை வரலாறு இதழின் தலைமைக் கட்டுரை எனலாம். திரும்பிப்பார்க்கிறோம் 9ஆம் தொகுதி உங்கள் அனுபவங்களை மட்டுமல்லாமல் சமூகத்தில் ஆய்வுகள் எப்படி எல்லாம் நிகழ்த்தப்படுகின்றன என்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. இலக்கியச் செய்திகள் ஆர்வத்தைத் தூண்டுமாறு அமைந்துள்ளன. தொடர்க உங்கள் பணி.

க. மகிழ்நன்,
சென்னை.

வரலாறு 25ஆம் இதழில் வெளியாகியுள்ள குடைவரைக் கட்டுரைகள் என் ஆய்வுக்கு மிகவும் உதவியாக உள்ளன. தங்கள் குடைவரை நூல்கள் அனைத்தையும் பெற்றுள்ளேன். ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள சில குடைவரை நூல்களை விடத் தங்கள் நூல்களில் கூடுதல் செய்திகள் உள்ளன. கள ஆய்வின் அருமை தெரிகிறது. இந்த இதழில் நீங்கள் எழுதியுள்ள தலையங்கம் உங்கள் பயணத்தின் அருமையையும் உங்கள் உழைப்பின் நேர்மையையும் தெளிவாய்க் காட்டுகிறது. கள ஆய்வுகளில் உங்களோடு இணைந்து பணியாற்றும் வாய்ப்பை எதிர்நோக்கியுள்ளேன்.

சு. இலட்சுமிதேவி,
திருச்சிராப்பள்ளி.

---

4. உண்டாலம்ம இவ்வுலகம்

மருத்துவர் மீ. சா. அஷ்ரப்

1985 அக்டோபரில்தான் மருத்துவர் மீ. சா. அஷ்ரபை முதன் முதலாகச் சந்தித்தேன். அது சமயம் டாக்டர் மா. இராச மாணிக்கனார் இலக்கிய மன்றம் திருச்சிராப்பள்ளிப் பொது மக்களுக்காகத் திங்கள்தோறும் தமிழில் மருத்துவச் சொற் பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டிருந்தது. 1983 அக்டோபரில் தொடங்கப்பட்ட அந்நிகழ்ச்சித் தொடர் இரண்டாண்டு களைக் கடந்த நிலையிலேயே எங்கள் சந்திப்பு அமைந்தது. சிராப்பள்ளியிலிருந்த பெரும்பாலான மருத்துவர்களை எளிய தமிழ்நடையில் முற்காப்பு மருத்துவத்தையும் நலக்காப்புச் செய்திகளையும் மக்களிடையே பகிர்ந்துகொள்ள வைத்த நிலையில் அஷ்ரபின் அறிமுகம் கிடைத்தது.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவர் பணியாற்றியபோது அவர் எடுத்த வகுப்புகளின் சிறப்புக் குறித்து அவரது மாணவர்களும் நண்பர்களும் என்னிடம் பகிர்ந்து கொண்டபோதே அவரை மக்களுக்கு மருத்துவச் சொற்பொழி வாற்ற அழைப்பதென உறுதிகொண்டேன். அவரது மாமனார் திரு. காதர்சாகிபும் என் மாமனார் கண் மருத்துவர் தி. வ. அரங்க நாதனும் இணையற்ற நண்பர்கள். அதனால், அஷ்ரபை எளி தாகத் தொடர்புகொள்ளமுடிந்தது.

என் அழைப்பை ஏற்றுக்கொண்டபோதிலும் தமிழில் உரையாற்ற, அதுவும் மக்கள் அவையில் பேச அவர் மிகவும் தயங்கினார் அவர் வகுப்பறைப் பொழிவுகளைச் சுட்டி, அதில் அவர் சிறந்து விளங்குவதை எடுத்துக்காட்டி அவர் தயக்கம் நீக்கினேன் என்றபோதும், உரைத் தயாரிப்பின்போதும் அதை பேசிப் பழகிக்கொண்டபோதும் பல முறை அவர் என்னைக் கலந்துகொண்டமை, எதையும் ஒழுங்காகச் செய்யவேண்டும் என்ற அவரது இயல்பை வெளிப்படுத்தியது. அவர் கூற்றின்படி அவரது முதல் மக்கள் உரையாக அமைந்த 'நலம் காப்போம்' என்ற அந்த மருத்துவச் சொற்பொழிவு கேட்டவர் அனைவருக் கும் பயனுடையதாகவே இருந்தது. தம் முதல் உரைக்குப் பேரள வில் தயங்கிய அந்த அஷ்ரப்தான் இன்று மிக விரும்பப்படும்

சொற்பொழிவாளராக மாதத்தில் பாதிநாட்கள் தமிழகத்தின் பல மேடைகளில் மின்னிக் கேட்பார் உள்ளங்களை நகைச் சுவை இழையோடும் தம் இணையற்ற உரைகளால் கவர்ந்து வருகிறார்.

இந்திய மருத்துவ மன்றச் சிராப்பள்ளிக் கிளையின் செய லாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகே எங்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டது. அளப்பரிய அவரது ஆற்றல், அனைவ ரையும் தழுவிச் செல்லும் இணக்கமான பண்பு, எல்லோருக்கும் உதவிடும் இனிய உள்ளம் ஆகிய இம்மூன்றும் சிராப்பள்ளிக் கிளையின் நெறியாளராக அவரை மாற்றியது. அவர் செயல ரான முதலாண்டே தமிழ்நாட்டளவில் பரிசுகள் பெற்ற சிராப் பள்ளிக் கிளை அடுத்த சில ஆண்டுகளில் இந்திய அளவிலான பரிசுகளைப் பெற்றுத் தமிழ்நாட்டின் முன்னணிக் கிளைகளில் ஒன்றாக உருமாறியது. அக்கிளையின் துணைத் தலைவராக வும் தலைவராகவும் நான் இருந்த இரண்டு ஆண்டுகளிலும் அவரே செயலராக இருந்தார்.

அக்காலக்கட்டத்தில்தான் இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையின் வரலாற்றில் முதல் முறையாக அகில இந்திய மருத்துவ மாநாட்டைச் சிராப்பள்ளியில் நிகழ்த்த அவர் உளம்கொண்டார். நம் சக்திக்கு மீறிய செயலாக அமைந்துவிடுமோ என்று நாங்களெல்லாம் தயங்கியபோதும் அவர் அளித்த நம்பிக்கைதான் அந்நிகழ்வுக்கு எங்களைத் திட்டமிடத் தூண்டியது. மாநாட்டுக்காகப் பணியாற்றிய அந்த இரண்டு ஆண்டுகளும் என் வாழ்வில் மறக்க முடியாதவை. சிராப்பள்ளியின் பல முன்னணி மருத்துவர்களும் மூத்த மருத்துவர்களும் கையிணைத்து உழைத்த அந்தப் பெருநிகழ் வின் பின்னணியில் அஷ்ரபின் ஆற்றல் இணையற்ற உந்து சக்தியாக விளங்கியது. அவரது அன்பிற்குக் கட்டுப்பட்டு எத்தனை பேர் உழைத்தார்கள் என்பதை நான் அறிவேன்.

எங்களில் பலருக்கு அம்மாநாடு முதன்மையான சிந்தனை யாக விளங்கிய நிலையில், அவருக்கு அந்த இரண்டு ஆண்டு களிலும் மாநாடு தவிர வேறு சிந்தனையே இல்லை. அதனால் தான், பெருவெற்றியுற்ற அம்மாநாட்டின் நிறைவு விழாவில்

தலைவர் என்ற முறையில் அவருக்குப் பட்டாடை போர்த்தி என் வாழ்த்துக்களையும் சிராப்பள்ளி மருத்துவ மன்ற அனைத்து உறுப்பினர்கள் சார்பிலான வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்ந்தேன். இந்தியா முழுவதிலும் இருந்து வந்திருந்த பல மாநில மருத்துவர்களும் சிராப்பள்ளி மாநாட்டை அனைத்து விதங்களிலும் சிறப்புக்குரியதாக அமைந்ததென்று உளமாரப் பாராட்டினர். இம்மாநாட்டினால் மருத்துவர் அஷ்ரப் அகில இந்தியப் பார்வையைப் பெற்றார். உண்மையான தம் உழைப்பால் பல உயரங்களை அவர் அடையப்போகிறார் என்பதற்கு இம்மாநாடு சிறந்த சான்றாக அமைந்தது.

அஷ்ரபின் பன்முக ஆற்றல்களில் நடிப்பாற்றலும் ஒன்று. மக்கள், மருத்துவர்கள் சந்திப்பாக ஆண்டுதோறும் பொங்கல் விழாவைக் கொண்டாடும் எங்கள் சிராப்பள்ளி மருத்துவ மன்றம், அது போழ்து தமிழமுது பருகப் பொழிவுகளும் கலை யமுது கொள்ள நாடகங்களும் நடத்துவதை மரபாகக் கொண் டுள்ளது. செயலராகச் சேர்ந்த ஆண்டிலேயே பொங்கல் விழா நாடகத்தில் அறிமுக நடிகராக இரட்டை வேடமேற்று நடித்த பெருமை அவருக்குண்டு. தொடக்கத்தில் இரட்டை வேடம் ஏற்க அவர் மிகவும் தயங்கியபோதும் அவர் திறனும் முயற்சியும் அறிந்த நான், அவரால் முடியும் என ஊக்குவித்து நடிக்கச் செய்தேன். மருத்துவர் சு. தியாகராஜன் மேடைக்கதை அமைத்து இயக்கி அரங்கேற்றிய சாண்டில்யனின் ஜீவபூமியில் மௌல்வியாகவும் மால்தேவாகவும் அவர் இயங்கினார். மௌல்வி வயோதிகர். மால்தேவ் இளைஞர். இரண்டு முற்றிலும் மாறுபட்ட உடல்மொழிகளை மிக எளிமையாகக் கையாண்டு அரங்கிலிருந்த அனைவர் கைத்தட்டலையும் பெற்ற பெருமை அவருக்குண்டு. தொடர்ந்து நிகழ்ந்த பல நாடகங்களில் சிறப்பான நடிப்பைத் தந்ததுடன், நாடக ஒத்திகைகள் அனைத்தையும் தம் இல்லத்திலேயே நிகழ வைத்து, இடைவேளை உணவுமளித்து ஒப்புரவு செய்த பெருமை அவருக்கும் அவர் உளம் தொட்டு நடக்கும் அவர் துணைவியாருக்கும் உண்டு.

சிராப்பள்ளி மருத்துவ மன்ற அரங்கினை 1976இல் நான் செயலராக இருந்தபோது மறு கட்டமைப்புச் செய்தோம்.

அவ்வரங்கினை இன்றிருக்கும் நிலைக்குப் பல கட்டங்களில் மேம்படுத்திக் கீழே குளிர்மை அரங்கும் மேலே உணவுச் சாலையும் அமையப் பாடுபட்ட நண்பர் அஷ்ரப், அதற்கான பொருளைப் பெறுவதற்காக மேற்கொண்ட முயற்சிகளை அனைவரும் அறிவர். சிராப்பள்ளி மருத்துவ மன்றத்திலிருந்து தமிழ் நாடு மாநிலத் தலைமைக்குப் பொறுப்பேற்ற ஒவ்வொருவர் காலத்திலும் மன்றக் கட்டடம் சீரமைப்பையோ, புதிய இணைப்பையோ பெறத் தவறவில்லை. அஷ்ரப் மேற்கொள்ளும் பணிகளாயினும் துணைநிற்கும் செயல்களாயினும் அவை அனைத்தும் ஏதேனும் ஒரு வகையில் மன்றத்தை வளர்க்க, செழிக்கச் செய்யத் தூண்டுகோலாயின. ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய மருத்துவ மன்றத்தின் சிராப்பள்ளிக் கிளை அவருடைய வழிகாட்டலிலும் கண்ணோட்டத்திலும் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த மருத்துவக் கிளையாகக் கல்வி வளர்ப்பதிலும் பயிற்சி அளிப்பதிலும் முன்னணியில் இருப்பதைக் குறிப்பிட்டாகவேண்டும்.

1999 ஆகஸ்டு 7 நள்ளிரவில் இதயத்தசைச் செயலிழப்பு நேர்ந்தபோது மருத்துவர் அஷ்ரப்தான் மருத்துவர் குணசேகரனுடன் இணைந்த நிலையில் உரிய முதலுதவிகள் செய்து இதய மருத்துவர் சென்னியப்பன் மருத்துவமனையில் என்னை ஒப்புவித்தார். அங்கிருந்து நலமாகி நான் இல்லம் திரும்பிய பிறகு ஒவ்வொரு நாள் இரவும் மருத்துவமனையிலிருந்து திரும்பும் வழியில் என்னைச் சந்தித்து இரத்த அழுத்தமும் நாடித் துடிப்பும் பார்த்துச் சில சொற்களேனும் பேசிச் செல்வதை அவர் வழக்கமாகக் கொண்டார். அவரது வருகை நான் விரைந்து நலமாவதற்குக் காரணமானது. ஏறத்தாழ ஒரு மாதம் தொடர்ந்த இந்த வருகை அவர் மீது அளவற்ற அன்பையும் இணையற்ற மதிப்பையும் ஏற்படுத்தியது.

இதய அறுவை நிகழ்ந்து நான் சிராப்பள்ளி மீண்டபோது அவரே விமான நிலையம் வந்து தம் காரில் என்னை இல்லம் சேர்த்தார். அப்போதும் அவரது வருகை எனக்கு மிகுந்த நம்பிக்கை அளித்து நான் விரைந்து நலம் பெறப் பெருந்துணையானது. அஷ்ரப் மிகச் சிறந்த நண்பர் என்பதை என் இதய நோய்க் காலம் உறுதிப்படுத்தியது. அவர் நண்பர்களாய்க்

கொண்டுள்ள அனைவரிடமுமே இது போன்ற நேயமான நெருக்கத்தைத் தொடர்வது நான் இப்போதும் கண்டு மகிழும் ஒன்றாகும். எவ்வளவு பணிகள் இருந்தாலும் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அவ்வப்போதேனும் நண்பர்களுடன் உரையாடுவதைக் கடமையாகக் கொண்டிருக்கும் அவர், நண்பர்களின் குடும்ப உறுப்பினர்களோடும் நெருங்கிய தொடர்பில் இருப்பவர். என் மகள், மகன் இருவரது வாழ்க்கையையும் தொடர்ந்து பின்பற்றி, வேண்டும்போது துணையிருக்கத் தயங்காத உள்ளம் அவருடையது.

எந்த வகை உதவியானாலும் எந்த நேரத்தில் அது தேவைப்பட்டாலும் எந்தத் தயக்கமும் இல்லாமல் நண்பர்கள் அவரை அணுகலாம். தம் எல்லைக்குள் அமையவில்லை என்றாலும், தமக்குத் தெரிந்தவர்கள் துணையுடன் தேவைப்பட்டவர்களுக்கு உரியதைச் செய்வதில் அவருக்கு நிகர் அவர்தான். இது போல் உதவிகள் பலவற்றை அவரிடம் நான் பெற்றதுண்டு. தாம் செய்யும் உதவிகளை விளம்பரப்படுத்திக் கொள்ளும் போக்கும் அவரிடம் இல்லை. ஒரு முறை வரலாறு ஆய்விதழ் பெரும் பொருளாதாரச் சிக்கலில் இருந்தபோது, மருத்துவ மன்றக் கூட்டத்திற்கு வந்திருந்த தம் நண்பர்கள் சிலரின் பாக்கெட்டில் உரிமையுடன் கைவிட்டுக் கிடைத்ததை எடுத்து வரலாறு வெளிவரத் துணைநின்ற பெருந்தகையாளர் அவர். வரலாற்றாய்வு மையத்தில் இடம்பெற்றிருப்பதாலேயே மைய ஆய்வர்களிடமும் அன்பு கொண்டிருப்பவர்.

கலை 66 நிகழ்ச்சி அமைக்கப் பேராசிரியர் மு. நளினிக்குப் பலவகையிலும் அவர் துணைநின்றார். நிகழ்ச்சி தொடர்பாகவும் பணிப் பாராட்டு நூல் தொடர்பாகவும் அவ்வப்போது நளினியிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டதுடன், நிகழ்ச்சிக்கான இடத்தை ஏற்பாடு செய்யவும் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கவும் விருந்துக்கான உணவுகளைத் தேர்வதிலும் அவர் காட்டிய அக்கறையும் அளித்த ஒத்துழைப்பும் மறக்க முடியாதவை. வரலாற்றாய்வு மையப் பணிகளிலும் அவருக்கு ஆர்வமுண்டு. இந்திய அளவிலான எங்கள் களப்பயணங்களின் போதெல்லாம் அவருடைய கவனம் எங்கள் மீதிருப்பதைத் தொலைபேசி

உரையாடல்கள் உணர்த்தியுள்ளன. மையப் பணிகளை அவர் சார்ந்த நண்பர்களிடத்தும் கொண்டு சேர்த்துள்ளார். சுருங்கச் சொன்னால் எங்கள் ஆய்வு மையத்தின் வளர்ச்சியில் அவருக்கும் பங்குண்டெனலாம்.

உலகத்தின் பல நாடுகளைப் பார்த்திருக்கும் அவருக்கு நண்பர்கள் இல்லாத நாடுகள் குறைவு. ஒரு முறை நாங்கள் சிங்கப்பூர் சென்றிருந்தபோது அவருடைய நண்பர் இல்லத்தில் இரவு உணவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். இலங்கை சென்றிருந்தபோது அவருடைய நண்பர்தான் எங்கள் பயணம் முழுவதற்கும் துணையிருந்தார். தம் மகிழ்வுந்தை ஒரு வார காலத்திற்கு எங்களுக்கு அளித்து உதவியதுடன், நினைவில் நிற்கும் சுவையான விருந்தொன்றையும் அவர் அளித்துச் சிறப்பித்தார். எங்கள் இலண்டன் பயணத்தின்போது தம் நண்பர் மகன் உதவியுடன் அருமையான தங்குமிடத்தை அவரே ஏற்பாடு செய்திருந்தார். அங்கு இருந்த 15 நாட்களும் நாவிற்குச் சுவையான நல்விருந்து கிடைத்தமையால் வெளிநாட்டிலிருந்த உணர்வே இல்லாமல் வயிறு அமைதி காத்தது. அமெரிக்காவில் அவரது நண்பரும் கல்லீரல் மாற்று மருத்துவருமான திரு. தினேஷ் பென்சில்வேனியா பார்ப்பதற்கும் அங்குள்ள அருங்காட்சியகத்தைக் கண்ணுறுவதற்கும் துணைநின்றார். 'யாதுமாகி நின்றாய் காளி' எனும் பாரதியின் தொடர்தான் அஷ்ரபின் துணையிருப்பிற்குப் பொருத்தமான பதிவாக இருக்கும்.

இந்திய, தமிழ்நாடு, சிராப்பள்ளி மருத்துவ மன்ற அமைப்புகளில் திரு. அஷ்ரபைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. இம்மூன்று நிலை அமைப்புகளிலும் அவரால் பொறுப்புக்கு வந்தவர்களும் அவர் வழிகாட்டலில் நிருவாகம் செய்தவர்களும் அவருக்கு அணுக்கமானவர்களும் ஏதாவதொரு வகையில் அவரால் பயன் பெற்றவர்களும் நிறைந்திருப்பதை இன்றும் காணமுடியும். அன்பாலும் குறைகளைக் கருதாது நிறைகளைப் போற்றும் பண்பாலுமே அவர் இதைச் சாதித்திருக்கிறார். அவரது பன்முகத் திறமைகளும் எதையும் செம்மையாய்ச் செய்து முடிக்கும் ஆற்றலும் பழகும் பாங்குமே அவரை இத்தகு உயரத்திற்கு வழிநடத்தியுள்ளன.

பொதுநல மருத்துவராக இருந்தபோதும் நீரிழிவுச் சிறப்பு மருத்துவத்திலேயே அவர் மிகுந்த ஈடுபாடுடையவர். மக்கள் மருத்துவராகப் பொருளை மட்டுமே கருதாத உள்ளத்துடன், ஏழைகளிடம் எதையும் பெறாதவராய்க் கடந்த 30 ஆண்டு களாகத் தம் செல்வ மகளின் பெயரால் அமைந்த ஆயிஷா மருத்துவமனையை அவர் நடத்திவரும் பாங்கு சிறப்புக்குரியது. தம் நோயாளிகளுக்கு உயர் மருத்துவ உதவி தேவைப்படும் எனக் கருதினால், தாமே நேரடியாக அவ்வத்துறை சார்ந்த சிறப்பு மருத்துவர்களையோ அல்லது உயர்நிலை மருத்துவமனை களையோ தொடர்புகொண்டு நோயாளிகளின் பொருளாதார நிலைக்கேற்ப உரியன செய்திடும் பண்பாளர் அவர்.

அவரது ஆதரவில் கல்வி தொடரும் மாணவர்களை நானறிவேன். அவர் குடும்ப அறக்கட்டளையின் சார்பில் காயல்பட்டினத்தில் இயங்கும் மேனிலைப்பள்ளியும் வசதி வாய்ப்பு குறைந்தவர்களுக்கான மருத்துவமனையும் சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கல்வியிலும் நலத்திலும் அவர் கொண்டிருக்கும் அக்கறையைக் காட்டுவனவாகும். அவரது கல்விப் பணிகளைச் சிறப்பிக்கும் விதமாகவே பார்தீதாசன் பல்கலைக்கழகம் அவரைப் பேரவை உறுப்பினராக்கி மகிழ்ந் தது அவரது மருத்துவப் பணிகளும் கல்விப் பணிகளும் அறிந்தே இலண்டன் இராயல் மருத்துவக் கல்லூரி இந்தியா வில் அது நடத்தும் சிறப்புநிலைத் தேர்வுகளுக்கு அவரைத் தேர்வாளராகக் கொண்டுள்ளது.

சிராப்பள்ளி மருத்துவ மன்றத்திற்கும் சிராப்பள்ளியின் சிறப்புக்குரிய மருத்துவர்களுக்கும் தமிழ்நாடு, இந்திய மருத்துவ மன்றங்களின் சிறப்பு விருதுகள் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருப்பதற்கு அவரே காரணர். தகுதி வாய்ந்தவர்கள் உரிய பாராட்டுக்களைப் பெறவேண்டும், அதுவே அவர்களை அவர்தம் பணிகளில் ஊக்கப்படுத்தி மேன் மேலும் சிறக்கச் செயல்பட வைக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டவர் அவர். அதனால்தான், தமிழ்நாடு மருத்துவக் குழு மம், டாக்டர் எம் ஜி ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் முதலிய மருத்துவ உயர் அமைப்புகளிலும் சிறப்புக்குரிய சிராப்பள்ளி மருத்துவர்கள் தத்தம் ஆற்றலுக்கும் திறனுக்கும் பங்களிப்பிற்கும்

ஏற்ப உரிய விருதுகளைப் பெறமுடிந்தது தகுதி உள்ளவர் களைத் தேடித்தேடி அவர்கள் மக்களின், கல்வி அமைப்பு களின் கவனத்தைப் பெறச் செய்தமையால்தான், அவரைத் தேடி விருதுகளும் பாராட்டுக்களும் குவிந்துகொண்டுள்ளன.

பல மருத்துவ அமைப்புகளின், தமிழ்நாடு அரசின், உயர் கல்வி நிறுவனங்களின் விருதுகளை அவர் பெற்றிருந்தபோதும் இந்தியக் குடியரசுத் தலைவரின் கைகளால் பெற்ற மருத்துவர் பி. சி. ராய் விருது அவரது பெருமைக்கும் புகழுக்கும் உரிய உயர் விருதாக அமைந்தது. தமக்களிக்கப்பட்ட அவ்விருதுத் தொகை யைக்கூடச் சிராப்பள்ளி மருத்துவ மன்றத்திற்கு வைப்புநிதியாக அளித்து, அதிலிருந்து வரும் வட்டி கொண்டு ஆண்டுதோறும் சிராப்பள்ளி மருத்துவ மன்ற உறுப்பினர்களில் மக்கள் பணி யில் சிறந்து விளங்கும் சிலரைத் தேர்ந்து மருத்துவர் நாள் விழா வின்போது விருது வழங்குமாறு ஏற்பாடு செய்த பேருள்ளத் தினர் அஷ்ரப். விருதுகளின் எண்ணிக்கை உயர்ந்தபோது வைப்புநிதியையும் தம் சொந்தப் பொறுப்பில் உயர்த்திய அவரது பண்பை என்னென்பது!

அஷ்ரப் வாசிப்பில் நாட்டமுடையவர். தளராத் தமிழ்ப்பற்று இருந்தபோதும், ஆங்கில வழிக் கல்வி பெற்றவர் என்பதனால் ஆங்கில இலக்கிய நாட்டம் அவரிடம் சற்றுக் கூடுதலாகவே உண்டு. மருத்துவப் படிப்புக் காலத்திலிருந்தே தமிழுக்கு இணையாக ஆங்கிலத்திலும் இலக்கியம், கவிதை, புதினம் படிக்கும் ஆர்வம் எனக்கும் இருந்தமையால், வாய்ப்பமையும் போதெல்லாம் எங்கள் வாசிப்புகளைப் பகிர்ந்து கொள்வோம். தமிழில் தமக்குள்ள ஈடுபாட்டின் காரணமாகவே சிராப்பள்ளி மருத்துவ மன்றம் பொங்கல் விழாவை முன்னிட்டு ஆண்டு தோறும் நிகழ்த்தும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான தமிழ்ச் சொல்லாற்றல் போட்டிகளில் தவறாமல் பார்வையாளராகக் கலந்துகொண்டு, இளைய தலைமுறையின் ஆற்றலும் அறிவும் கண்டு மகிழ்ந்து போற்றுவார். அவரது காயல்பட்டினத் தமிழ்ப் பேச்சு மிகவும் இரசிக்கும்படியாக இருக்கும். அங்கு வழங்கும் பல பழமொழிகளை அவர் எடுத்தாளும்போது அவை தமிழுக்கு எத்தகு கொடை என நான் வியப்பேன். நிலம் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் பிறக்கும் அனுபவ மொழிகளல்லவா பழமொழிகள்.

அஷ்ரப் இதழியல் ஆய்வாளர் இல்லை எனினும் இதழியல் பற்றிய அடிப்படை ஞானம் உடையவர். சிராப்பள்ளிக் கிளை யின் நெறியாளராக அவர் இயங்கிவரும் இந்த 30 ஆண்டுகளில் அவரோடு இணைந்து பல மாநாட்டு மலர்களை நான் ஆசிரிய ராக இருந்து உருவாக்கியுள்ளேன். மலர் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தொடக்கத்திலேயே தெரிவித்துவிட்டா லும் மலரின் வளர்நிலைகளை ஆர்வத்தோடும் கவனத்தோடும் கேட்டறிவார் மலரின் சீர்மையே கருத்தாக அதன் வளத்துக்கும் செழிப்புக்கும் ஏற்பப் பொருளைத் திரட்டுவது அவர் வழக்கம். நான் தயாரித்த மலர்களின் அட்டைகளையும் தலையங்கப் பக்கங்களையும் இரசித்துப் பாராட்டுவார்.

அவரது மேற்பார்வையில் சிராப்பள்ளி மருத்துவ மன்றம் காலாண்டு இதழ் ஒன்றைக் கொணர்ந்தது. அந்த இதழ் வெளியாவதற்கும் சிறப்பான முறையில் சில காலம் தொடர் வதற்கும் அவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கன. ஒவ்வோர் இதழிலும் என் பங்களிப்பும் இருக்கவேண்டும் என அன்போடு கேட்பார். அவர் தூண்டலில் மருத்துவர்களைக் கவரும் வகை யிலான சில வரலாற்றுச் செய்திகளை அவ்விதழ்களில் நான் பகிர்ந்துகொண்டதுண்டு. தம்முடைய வெளியீடாகவே சொந்தப் பொறுப்பில் மருத்துவம், மருத்துவஞ் சார் வரலாறு பற்றிய திங்களிதழ் ஒன்றைக் கொணர அவர் பேரார்வம் கொண்டு அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். அந்த இதழ், முழுமையும் அவரது வீச்சுக்களுடன் வெளிவரும் என்ற நம்பிக்கையில் எதிர்பார்த்திருக்கிறேன்.

அஷ்ரபின் நகைச்சுவை உணர்வு அளப்பரியது. இயல் பாகவே அவரது பேச்சுக்களில் நகைச்சுவை ததும்பும். மருத்துவ மன்ற மேலாண்குழுக் கூட்டங்களில் கடுமையான சூழல்கள் நிலவியதே இல்லை என்றால், அதற்குக் காரணம் எதையும் எளிதாக்கிவிடும் அவரது நகைச்சுவை ஆற்றல்தான். கடினமான செய்திகளைக்கூடச் சிரிக்கப் பேசி அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதில் அவர் வல்லவர். அரங்க அதிர்வுகள் இல்லாமல் அவருடைய பொழிவுகள் நிகழ்ந்ததில்லை. 'அஷ்ரப் ஒரு ஜோக் சொல்லுங்கள்' என்று பொதுமேடைகளில்கூட அவரைக் கேட்டு நகைச்சுவைப் பிழிவுகளைக் கொள்ளும்

இரசிகர்களை நான் சந்தித்திருக்கிறேன். சிரிக்கப் பேசினாலும் சிந்திக்க வைக்கவும் அவர் தவறியதில்லை. அருமையான கருத்துக்களை, பின்பற்றத்தக்க நெறிகளை மிக மென்மையாக அனைவரும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுத்துரைப்பதில் அவருக்கு நிகர் அவரே. அதனால்தான், 30 ஆண்டுகளாகியும் அவரது மேடைப் பேச்சுக்கள் தொடர்ந்து இனிக்கின்றன.

பள்ளிப் பருவத்திலிருந்தே பல உண்மையான நண்பர் களைப் பெறும் பேறு எனக்கு வாய்த்திருக்கிறது. மகிழ்வில் அதைப் பகிர்ந்து கொள்ளவும் துன்பத்தில் அதைக் குறைக்கத் துணைநிற்கவும் காலந்தோறும் என்னுடன் அந்நண்பர்கள் கையிணைத்துள்ளனர். அவர்களில் சிலர் அறிவுரை கேட்பவர் களாகவும் வேறு சிலர் வேண்டும் காலங்களில் அறிவுரை வழங்கு பவர்களாகவும் இருந்து வருகின்றனர். அஷ்ரப் அத்தகு அரிய மனிதர்களுள் ஒருவர். கேட்காமலேயே துணையிருப்பவர். என் நலத்திலும் என் போல் எண்ணற்ற நண்பர்களின் நலத்திலும் தொடர்ந்த அக்கறையுடையவர். கனிந்த மனமும் கனிவான பேச்சும் நிறைந்த அன்பும் உறவாய்ச் சூழும் உயர்ந்த நட்பும் கொண்டிலங்கும் இனிய மனிதர் அஷ்ரபைப் பார்க்கும் போதெல்லாம் உண்டாலம்ம இவ்வுலகம் என்றே என் உள்ளம் சிலிர்த்துக்கொள்கிறது.

- இரா. கலைக்கோவன்.

5. பத்மபூஷண் கூ. ரா. சீனிவாசன் நினைவு அறக்கட்டளைப் பொழிவு - 15

காலப்போக்கில் தமிழகக் கல்வெட்டுகள்

சு. இராசகோபால்

ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் என அனைத்து எழுத்துச் சான்றுகளிலும் தமிழகமே இந்திய அளவில் எண்ணிக்கையில் முன் நிற்கிறது.[1] இம்மூன்றில் கல்வெட்டுகள் மட்டுமே ஓரிடத்தில் நிலைத்து நிற்கும் அசையாச் சான்றுகள் என்று கூறலாம். தமிழகத்தில் இவை 2500 ஆண்டுகளாக இடைவெளியின்றித் தொடர்ந்து காணப்படுகின்றன. காலப் போக்கில் இவற்றின் அமைப்பு, தன்மை, செய்தி தரும் போக்கு ஆகியவற்றில் காணப்படும் மாற்றங்களும் பெருக்கங்களும் ஒரு வரலாறாகவே அமைகின்றன. அதன் பின்னணியில் சமூகப் பொருளாதார அரசியல் காரணிகள் உள்ளன.

குறியீடு, படம், கருத்துப்படம், எழுத்து என்பதே உலக அளவிலான எழுத்தின் வரலாறாகும். தமிழகத்தைப் பொறுத்த வரை தொடக்கக் காலப் படங்கள், பாறை ஓவியங்களாக நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் கிடைத்துள்ளன. குறியீடுகள் அகழாய்வில் கிடைத்த மட்கலங்களில் ஆயிரக்கணக்கில் உள்ளன.[2] பாறை ஓவியங்களில் உடுக்கை வடிவ உடலமைப்பும் பறவை முகமும் கொண்ட மனித உருவங்கள் பரவலாகக் காணக் கிடைப்பவை. இவ்வுருவங்கள் வெகுதொலைவு இடைவெளியுடைய இடங்களிலும் ஒப்பக் கிடைப்பது நோக்கத்தக்கதாகும்.

கீழ்வாலை, மெய்யம், கருங்காலக்குடி, அழகர்மலை, திருமலை ஆகிய இடங்களில் இவ்வகை மனித உருவங்கள் செங்காவி நிறத்தில் கோட்டுருவமாகக் கிடைத்துள்ளன. பெருமுக்கல், கேரளத்து எடக்கல் ஆகிய இடங்களில் இதே உடுக்கை உடல் மனித உருவங்கள் பாறைகளின் மீது கீறல் கோட்டுருவங்களாகக் காணப்படுகின்றன. எகிப்திய பிரமிடுகளிலும் இவ்வகை உருவங்கள் ஓவியங்களாக உள்ளன. பின்னாளில் போசளர், விஜயநகர அரசர் காலக் கண்டபேருண்டச் சிற்பங்களும் பறவைமுக மனித உருவில் உள்ளன. எனவே, தமிழகப்

பாறை ஓவியங்களில் காணப்படும் மனித விலங்கு உருவ ஒற்றுமையைக் காணும்போது ஒருவகை எழுத்து ஒழுங்கு முறை (System) ஏற்பட்டு விட்டது என்று கருதத் தோன்றுகிறது.

தமிழக அகழாய்வுகளில் கிடைத்துள்ள மட்கலச் சில்லு களில் ஏராளமான குறியீடுகள் கிடைத்துள்ளன. அவை பெரும் பாலும் ஈமச்சின்னங்களைச் சார்ந்தவை. ஓர் ஈமச்சின்னத்திற்கு ஒரு குறியீடு என்று கிடைத்துள்ளமையால் இக்குறியீடுகள் குலக்குறியீடு அல்லது குழுக்குறியீடு என்று கருதப்படுகின்றன. எனினும் ஒரு பகுதியில் கிடைக்கும் குறியீடு தென்னிந்தியாவில் தொலைவில் உள்ள பிறபகுதிகளிலும் கிடைப்பது நோக்கத்தக் கது. அதாவது ஒரு குறியீடு ஒரு குல/குழுக் குறியீடு எனில் அக்குறியீடு பிற பகுதிகளிலும் கிடைப்பது, பிற வேறுபட்ட குல/குழுக்களும் அதே வகைக் குறியீடுகளைக் கொண்டிருந் தன என்று கருத வைக்கிறது. பின்னாளில் மீன், வராகம், நந்தி, வில், யானை முதலிய அரசகுலச் சின்னங்கள் இந்திய அளவில் ஒன்றிற்கு மேற்பட்ட அரச குலங்களுக்குக் குலச்சின்னமாக இருப்பதை இங்குக் கருதிப் பார்க்கலாம்.

சில மட்கலங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட குறியீடுகள் அடுத்தடுத்துப் பொறிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது அவை ஏதோ ஒருவகையில் சொல்-தொடர் அமைப்பைக் குறிப்ப தாகக் கருதத் தோன்றுகிறது. கீழ்வாலைப் பாறைஓவியம், கொடு மணல் பானையோடு, செம்பியன்கண்டியூரில் கிடைத்த புதிய கற்காலக் கருவி ஆகியவற்றில் காணப்படும் அடுத்தடுத்த குறியீடு கள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் குறியீடுகளுடன் ஒப்பிடத்தக்கனவாய் உள்ளன.[3] இவற்றைப் படித்துப் பொருள் காண இயலவில்லை என்றாலும், அவை ஏதோ ஓர் எழுத்து முறை ஒழுங்கைச் சார்ந்தவை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தொடக்கக் கால நாணயங்களாகக் கருதப்படும் முத்திரைக் காசுகளில் (punch marked coins) குறியீட்டுப் படங்கள் மட்டுமே உள்ளன. இலங்கை ஆனைக்கோட்டையில் கிடைத்த முத்திரை யில் மேல்வரிசையில் குறியீடுகளும் கீழ்வரிசையில் எழுத்துக் களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. கொடுமணல் பானையோடு கள், எகிப்திய பெரனிகே பானையோடு, எடக்கல், அழகர்மலை, கொங்கற்புளியன்குளம் முதலிய இடங்களின் தமிழ் - பிராமித்

தொடர்கள் இவற்றிலுள்ள குறியீடுகள் குறிப்பிடத்தக்கவை. சாதவாகனரின் இருமொழிக்காசு, சங்கப் பாண்டியரின் பெரு வழுதிக் காசு முதலியவற்றில் தமிழ் - பிராமி எழுத்துக்களில் மன்னர் பெயரும் அத்துடன் குறியீடுகளும் படங்களும் உள்ளன இவ்வகையில் எழுத்துக்களும் குறியீடுகளும் இணைந்து எழுதப்படும் மரபு இருந்தமை உணரலாம்.

சங்க இலக்கியங்களில் வரைந்த படங்களும் கீறிய உருவங்களும் எழுத்தென்றே சொல்லப்படுகின்றன. இவ்வகையில் படமும் எழுத்தும் 'எழுத்து' என ஒரே பெயரைப் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

'கூர் உளி குயின்ற கோடுமாய் எழுத்து' - அகம். 342.

'பெயர் பயம் படர தோன்று குயில் எழுத்து' - அகம். 297.

'அவற்றுள் நறா இதழ் கண்டன்ன செவ்விரற்கு ஏற்பச்
சுறா ஏறு எழுதிய மோதிரம் தொட்டான்' - கலி. 84: 22-23.

'ஓவத்து எழுது எழில் போலும் மா' - பரி. 21: 28.

'பெரும்பூட் பொறையன் பேஎழுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை எழுதிய
நல்லியற் பாவை யன்ன' - குறு. 89: 4-6.

மேலேயுள்ள அகப்பாடல் அடிகள் உளியால் கீறிக் (குயின்று) கோடுகளாய் எழுத்து அமைத்தமையையும் கீறி எழுதப்பட்ட எழுத்து குயின் எழுத்து என்றே பெயர் பெற்ற மையையும் காட்டுகின்றன. இவை கல்லில் உளியால் எழுதப் பட்ட கோடுகளாலான எழுத்துக்கள். கலித்தொகை, வெவ்விய விரலில் அணிந்துள்ள மோதிரத்தில் உள்ள 'சுறாஏறு' உருவத் தினை எழுதப்பட்ட ஒன்றாகவே காட்டுகிறது. இது உலோகத் தில் கீறி எழுதப்பட்ட உருவம் என்பது தெளிவு.

சங்க இலக்கியங்கள், தலைவனின் பிரிவுத்துயரை வெளிக் காட்டப் பெண்கள் நாட்களை எண்ணிச் சுவர்களில் கோடுகள் இடுதலை 'இழைத்தல்' என்றும் குறிக்கின்றன.

'நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி உழந்து
ஆழல்வாழி, தோழி' - அகம். 61.

'சேண்உறை புலம்பின் நாண்முறை இழைத்த
திண்சுவர் நோக்கி, நினைந்து கண்பனி
நெகிழ்நூல் முத்தின் முகிழ் முலைத் தெறிப்ப' - அகம். 289.

புலி முதலிய அரச சின்னங்கள் வெற்றி கண்ட மாற்றரசர் களின் கோட்டை வாயில்களிலும் துறைமுகம் முதலிய வணிக இடங்களில் வணிகப்பொருள்களின் மீதும் பொறிக்கப்பட்டதை யும் சங்க இலக்கியங்களில் பார்க்கமுடிகிறது

'ஏழெயில் கதவம் எறிந்து கைக்கொண்டு நின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை
பாடுநர் வஞ்சி பாட' - புறம். 33.

'புலிபொறித்துப் புறம் போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்' - பட்டினப்பாலை 131.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் எழுத்து, படம் இரண்டுமே எழுத்தென்றே சொல்லப்படுவதையும் எழுதுதலைக் குறிக்க, 'குயில்தல்', 'எழுதுதல்', 'இழைத்தல்', 'பொறித்தல்' ஆகிய சொற்கள் பயன்பட்டதையும் காண்கிறோம். இவ்வகையில் எழுத்து என்பது பெருமை, நினைவுகூர்தல், அழகுபடுத்துதல், வணங்குதல், எண்ணிக்கை, அரசின் வெற்றி, அரசின் வரி விதிப்பு ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டமையும் தெரிய வருகிறது.

காலவரிசையில் எழுதுதல் என்பது தொடக்கத்தில் மிக அரிதாகவும் பின்னர் மெல்லமெல்ல எழுத்தறிவின் பரவல், எழுதுவோர் எண்ணிக்கைக் கூடல், எழுதப்படும் - எழுதும் பொருள்களின் எளிமை, சமூகத்தின் தேவை, சமூகத்தில் ஏற்படும் பிணக்குகள் - நெறிமுறைகள் மிகல் ஆகியவற்றின் காரணமாக அளவில் பெருகுவதைக் காண்கின்றோம்.

தமிழகத்தில் எழுத்துக்கள் பாறைகளில் எழுதப்பட்ட போது தொடக்கத்தில் ஒழுங்கற்றவையாகவும் ஒரே வரியில் எழுதப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. அழகர்மலைக் கல்வெட்டில் பதினொருவர் கொடுத்த கொடைகள் ஒரே வரியில் சுமார் 36 அடி நீளத்திற்குப் பொறிக்கப்பட்டுள்ளது.[4] அப்படிப் பொறித்திடக் குகைத்தளத்தின் 10 அடி உயரத்தில்

நெற்றியாக அமைந்த நீர்வடி விளிம்புப் பகுதியும் வாய்ப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சித்தண்ணவாசல் கல்வெட்டு சுமார் 6 அடி நீளமுடையது. இது கற்படுக்கையின் பக்கவாட்டிலும் தலைப்பகுதியிலுமாக ஒரே வரியில் மடித்து எழுதப்பட்டுள்ளது.

புலிமான்கோம்பை, தாதப்பட்டி ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ள தொடக்கக் கால நடுகற்கள் கல்லின் நீளக் குறைவு காரணமாக மடக்கி எழுதப்பட்டுள்ளன. எனினும், உயர வாக்கில் நிறுத்தப்பட்ட இவற்றில் பக்கவாட்டில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளமையும் உருவச்செதுக்கு ஏதும் இல்லா மையும் கல்வெட்டுகளின் 'தொடக்க நிலை என்று கருதலாம்.[5] இக்கல்வெட்டுகள் பொதுக்காலத் தொடக்கத்திற்கு முந்தியவை. யானைமலை, புகழூர்க் கல்வெட்டுகள் 2 மற்றும் 4 வரிகள் என மடக்கி எழுதப்பட்டுள்ளன. வரிகள் நேர்க்கோடாக அமைய வில்லை. இவை எழுதுவோர், எழுதப்படும் தேவை/பயன்பாடு குறைவாக இருந்த சூழலைக் காட்டுகின்றன எனலாம்.

தமிழ் - பிராமியிலிருந்து வடிவம் பெறும் தொடக்க நிலை வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது இசைக்குறிப்புகளைச் சொல்லும் அரச்சலூர் கல்வெட்டா கும். இதில் எழுத்துக்கள் பழகிவந்ததின் காரணமாக வடிவத் தில் வளைவுகள் பெறுகின்றன. கல்வெட்டும் மடித்து எழுதப் படுகிறது. இசைக்குறிப்புக்கள் ஐந்து வரிசையில் ஐந்து பத்தி களாக எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு பொ. கா. 3ஆம் நூற் றாண்டுக்குரியதாகக் கருதப்படுகிறது. 'எழுத்து' என்ற சொல் லும் முதன்முறையாக இக்கல்வெட்டிலேயே கிடைக்கின்றது. இதில் இசைக்குறிப்புகளே எழுத்து எனப்படுகின்றன.[6] ஓரிரு நூற்றாண்டுகளுக்குப் பிறகு காணப்படும் பெரும்பாணர், சிங்க விண்ணபருமர் நடுகற்களில் தேவைக்கு ஏற்ப உருவம் வடிக்கப் பட்டு, அதன் அருகில் கல்லில் கிடைக்கும் இடத்தில் மடித்து மடித்துக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது, கல்லில் எழுதும் வழக்கு மேலும் பழகி வந்துள்ள மையை நன்கு அறிகின்றோம். முன் நிகழ்வுகளைவிடத் தற்பொழுது காலக்குறிப்பாக மன்னர் பெயர், அவரது ஆட்சி யாண்டு ஆகியவை குறிக்கப்படுவதையும் காண்கின்றோம்.

இதே காலத்தை ஒட்டிய பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் கல்லெழுத்தின் பயன்பாடு இன்னும் மேலெடுத்துச் செல்லப் பட்டதைக் காணலாம். தமிழகக் கல்வெட்டுகளில் ஆவணத் தன்மை பெற்ற முதல் கல்வெட்டு இது என்று சொல்லலாம். மன்னர் பெயர், ஓர் ஆண்டுத் தொடரின் (Era) ஆண்டுக்குறிப்பு, அரசரின் வாய்மொழி ஆணை, கேட்டெழுதியவர், ஓலையில் எழுதியவர், கல்லில் எழுதியவர், அரசின் இறைவிதிப்பு - இறை விலக்குச் செய்திகள், காவலர், படை போன்ற குறிப்புகள் அனைத்தும் இக்கல்வெட்டில் உள்ளன.[7] எழுதுவோர், எழுத் தின் பயன்பாடு, என்றும் நிலைத்திருக்கும் எழுதுதளத் தேர்வு ஆகியவை இக்காலக்கட்டத்தில் இணைந்து எளிமை பெற்றுள் ளன என்று சொல்லலாம்.

இதனை அடுத்து வரும் காலக்கட்டத்தில் தமிழகத்தில் குடைவரைக் கோயில்கள் தோன்றியதால் கல்வெட்டுகள் அவற்றில் வெட்டப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். அவை பெரும்பாலும் அவற்றை யார் தோற்றுவித்தார்கள் என்பதைச் சொல்கின்றன. அவை தோற்றுவித்த அரசர்களின் சிறப்புப் பெயர்களுடன் சமஸ்கிருதச் சுலோகங்களாகவும்[8] தமிழ் வெண் பாக்களாகவும் அமைந்துள்ளன. சில உரைநடையிலும்[9] உள் ளன. ஒன்றிரண்டில் மட்டும் ஆண்டுக் குறிப்புகள் காணப்படு கின்றன. இக்காலத்தே வெளியிடப்பட்ட செப்பேடுகளில் ஆண்டுக் குறிப்புகள் தவறாது உள்ளன. இந்நிலையில், இரு மொழிப் பயன்பாட்டுடன் தமிழ், கிரந்தம், வட்டெழுத்து என ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களில் கல்வெட்டுகள் காணப் படுவதை நோக்க வேண்டும். கல்தச்சர்களின் பெருக்கத்தாலும் அவர்தம் கைப்பழக்கத்தின் காரணமாகவும் எழுத்துக்கள் தெளிவாகவும் அழகுபடவும் ஒழுங்குபடவும் எழுதப்படுவதை யும் பார்க்கின்றோம். எழுத்தின் பயன்பாடு இக்காலத்தே ஓர் உச்சநிலையைத் தொட்டுள்ளது என்று கருதலாம்.

முற்காலப் பல்லவர் - பாண்டியர் ஆட்சியின் பின்பகுதியில் பல கட்டடக் கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டதால் அக்கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகள் பலகைக் கற்களில் பொறிக்கப்பட்டுக் கோயில்களின் முன் நிறுத்தப் பட்டன.[10] ஏற்கனவே இருந்த குடைவரைக் கோயில்களுக்குக்

கொடுக்கப்பட்ட கொடைகள் அருகில் இருந்த பாறைகளில் வெட்டப்பட்டுள்ளன.[11] இக்காலத்தில் ஏரிகள், வாய்க்கால்கள், அவற்றில் அமைந்த மதகு, மடை, தூம்பு, கலிங்கு முதலியவை யும் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. இவை குறித்த கல்வெட்டுகள் பலகைக் கற்களிலும் தூண்களிலும் பிற அமைப்புகளிலும் பொறிக்கப்பட்டுள்ளதைக் கர்ண்கின்றோம்.[12]

ஆதித்தசோழன் காலம் தொடங்கிச் செங்கற்கோயில்கள் கற்கோயில்களாக மாற்றப்பட்டதால், கோயில் சுவர்களிலேயே கல்வெட்டுகள் இடம்பெற்றன. நுணுக்கமான சிறு சிற்பங் களைச் செதுக்கக் கல் தச்சர்களின் கைகள் பழகி இருந்தமை யால் அவர்கள் கோயில் கற்சுவர்கள், தூண்கள் மீது கல்வெட்டு களை வெகு இலகுவாகப் பொறித்துள்ளதைக் காண்கின்றோம்.

தொடக்கத்தில் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவை பரவலாக வும் ஒரு சில இடங்களில் கன்னடம்,[13] தெலுங்கு மொழிகளும் அவற்றிற்கு ஏதுவாகத் தமிழ், வட்டெழுத்து, கிரந்தம், நாகரி என்று எழுத்துக்களும் இருந்தமை நாளடைவில் பெருகி 18ஆம் நூற்றாண்டு அளவில் பார்சீகம், இலத்தீன், ஆர்மினியன், ஆங்கிலம், மராத்தி என்று பல்வேறு மொழிகளும் எழுத்துக் களும் தமிழகக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளமையை நாம் காணலாம். எனினும் இக்கல்வெட்டுகள் மெல்ல கோயிற் சுவர்களிலிருந்து பலகைக் கற்களுக்கு இடம்பெயர்ந்து விட் டன என்பதும் நினைவு கொள்ளத்தக்கதாகும்.

எழுத்துப் பதிவுகளுக்கான காரணிகளை உரிமை - பெருமை பாராட்டல், நினைவு - தகவல் குறிப்பு, ஆவணப்படுத்துதல், நெறிமுறைகளை எடுத்துக்காட்டுதல், மகிழ்வுந்தல், பொழுது போக்கு, அரசியல்-சமூகப் பொருளாதார நிகழ்வுகள் என்று மேலோட்டமாக வகைப்படுத்த முடியும்.

மனிதன் கற்கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்தில் தனக்கென்று கருவிகள் வைத்துக்கொள்ளும் நிலை யிலேயே உரிமை பாராட்டல் தொடங்கிவிட்டது எனலாம். வேட்டை, மேய்ச்சல் பகுதிகளை உரிமை கொண்டாடியதும் உரிமை பாராட்டல்தான். பாறைகளில் படங்களைத் தீட்டியது

பொழுதுபோக்கு, மகிழ்வுந்தல், நினைவுக்குறிப்பு, அச்சம் அகற்றல், மாந்திரக சக்தி தொடர்பானவை எனலாம்.

அகழாய்வுகளில் கிடைத்த மட்கல ஓடுகளில் குறியீடுகளும் தமிழ் - பிராமி எழுத்துக்களும் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன. தமிழ் - பிராமி எழுத்துக்கள் உள்ள 800க்கும் மேற்பட்ட கல ஓடுகளில் ஆட்பெயர்களே உள்ளன. இப்படிப் பெயர் உள்ள மட்கல ஓடுகளில் வழுவழுப்பான கருப்பு-சிவப்பு ஓடுகள், செங்காவி பூசிய ஓடுகள் மிகுதி. அம்பரோ, ரௌலெட்டெட் என்று சொல்லப்படும் ரோமானியக் கலங்களிலும் சில உள்ளன. இக்கலங்கள் மதிப்புறு சிறு கலன்கள் (Table ware) ஆகும். சொரசொரப்பான, அளவில் பெரியவையான மட்கல ஓடுகள் ஒன்றிரண்டு தவிர பிறவற்றில் எழுத்துக்கள் இல்லை.

தமிழகம் தவிர இந்தியாவின் பிற இடங்களான சாஞ்சி, கஸ்ரவாத், ஸ்கல்கர், பர்ஹூத் ஆகிய பகுதிகளிலும் இலங்கையிலும் அகழாய்வு மட்கல ஓடுகளில் எழுத்துக்கள் கிடைத்துள்ளன. இவ்விடங்கள் புண்ணிய இடங்களாகும். எனவே அவை சமயம் சார்ந்தவை என்பது வெளிப்படை. தமிழகத்தில் புண்ணிய இடங்கள் அல்லாது பிற இடங்களில் இவை கிடைப்பதால் வணிகத் தொடர்புடையவை என்று கருதலாம். இவற்றில் காணப்படும் ஆட்பெயர்களில் ஐம்பது விழுக்காடு பிராகிருதச் சாயல் உடையவை என்பதும் அவற்றின் வணிகத் தொடர்பைக் காட்டுகின்றன. பிராகிருதச் சாயல் உடையவற்றில் 'ஸ, ஹ, ச$_0$' என்று முடியும் பெயர்கள், 'உடைய' என்று பொருள் தருபவை. எனவே பெயர் பொறித்த கலங்கள் இன்னவரின் உரிமை/கிழமை என்பதை உணர்த்துகின்றன.[14]

பாறைகளில் கிடைக்கும் தொடக்கக் காலக் கல்வெட்டுகள் 'பெருமை பாராட்டும்' நோக்கம் சார்ந்தவை. துறவிகளுக்குப் படுக்கைகளையும் உறைவிடங்களையும் தந்த கொடையாளர்களின் அறச்செயலை விளம்பரப்படுத்துபவை. நடுகற்கள் வீரர்களின் 'பீடு' சொல்பவை. அடுத்துள்ள நிலையில் கிடைக்கும் நடுகற்கள், பூலாங்குறிச்சிக் கல்வெட்டு முதலியவை மேலே சொன்ன உரிமை, பெருமை பாராட்டுதல் ஆகியவற்றோடு ஆவணப்படுத்துதலையும் காட்டுகின்றன. மன்னர் பெயர், ஆண்டுக்குறிப்பு, வீரனின் ஊர், பூசலின் தன்மை, வாள்

- கேடயம் - வீரனின் உருவம் ஆகியவை இவற்றில் ஆவணப் படுத்தப்படுகின்றன. மேலும் இந்நடுகற்கள் வழிபடப்பட்டவை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

முற்பல்லவர்-பாண்டியர் காலங்களில் வழிபாட்டிடங்கள் பெருகுவதையும் அவ்விடங்களில் கல்வெட்டுகள் பொறிக்கப் படுவதையும் காண்கின்றோம் பல்லவர் குடைவரைக் கல்வெட்டு களில் சமஸ்கிருதமொழியும் கிரந்த எழுத்தும் மிகுதியாகக் காணப்படுகின்றன. மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, சிராப் பள்ளி, சீயமங்கலம் முதலிய இடங்களில் மகேந்திரன் தனது விருதுப் பெயர்களால் கோயில்களை எடுத்த செய்தி சமஸ் கிருதச் சுலோகங்களில் காட்டப்பட்டுள்ளது.[15] தளவானூரில் நரேந்திரன் எடுத்த குடைவரை அழகிய தமிழ் வெண்பாவால் சுட்டிக்காட்டப்படுகிறது.[16] பாண்டிய மன்னர் மாறனின் ஏனாதிக் கல்வெட்டு, ஸ்ரீமாறஸ்ரீவல்லபனின் சித்தண்ணவாசல் பொறிப்பு ஆகியவையும் பாடல் கல்வெட்டுகளே.[17]

வல்லம் குடைவரையை மகேந்திரரின் அடியான் கந்த சேனன் எடுத்த செய்தி தமிழ் உரைநடையில் உள்ளது. திருக்கழுக் குன்றக் குடைவரைக் கல்வெட்டு நிலக்கொடை பற்றித் தமிழில் தெரிவிக்கின்றது.[18] மாமல்லை ஆதிவராகக் கோயிலில் ருத்திரன் புகழ், தசாவதாரங்களைச் சொல்லும் சமஸ்கிருதச் சுலோகக் கல்வெட்டுகள் உள்ளன.[19] சிராப்பள்ளி, சாளுவன்குப்பம், மாமண்டூர் முதலிய இடங்களில் காணப்படும் சமஸ்கிருதச் சுலோகக் கல்வெட்டுகள்,[20] குடுமியான்மலையில் காணப்படும் இசைக்கல்வெட்டு,[21] திருத்தணி, திருவெள்ளறை ஆகிய இடங் களில் உள்ள தமிழ்ப் பாடல் கல்வெட்டுகள் எனக் கல்வெட்டு களில் சமயம், இலக்கியம், கலை ஆகியவற்றின் தாக்கங்கள் பெருகிவருவதை நாம் உணரலாம்.

குடைவரைகளை அடுத்துக் கட்டுமானக் கோயில்கள் கற்களால் மட்டுமல்லாது செங்கற்களாலும் அமைக்கப்பட்டுப் பெருகின. செங்கற் கோயில்கள் முன் நிறுத்தப்பட்ட பலகைக் கற்கள், வாயில் நிலைக்கால்கள்[22] தூண்கள்[23] ஆகியவற்றில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன. அறச்செயல்களாக ஊர்ப் பொது மண்டபங்கள், ஏரிகள் அவற்றில் அமையும் நீர்ப்பாசன

அமைப்புகள், எண்ணெய்ச் செக்குகள் என்று பலவும் உண்டாக்கப்பட்டதால் அவ்விடங்களிலும் கல்வெட்டுகள் பெருகின. இவ்வகையில் கல்வெட்டுப் பொறிக்கும் இடங்கள்/பரப்புகள் விரிவடைவதையும் காண்கின்றோம்.

சங்க காலத்தில் பாணர்கள் அரசர்களின் புகழ் பாடிப் பரிசில் பெற்றமையை பரக்கக் காணலாம். வேதபிராமணர் வருகை காரணமாக இந்நிலை மாற்றம் பெற்று அரசர்களுக்காக வேதபிராமணர்கள் வேள்வி வேட்டு பரிசில்/காணிக்கை பெறத் தொடங்கினர். அரசர்கள் வேள்வி வேட்டலை அறச்செயலாகக் கருதியதால் பிராமணர்களுக்குக் கால்நடைகள், ஊர்கள்/நிலங்கள் கொடை கொடுப்பதை அறச் சிறப்பாகக் கருதினர். பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி கொற்கைக்கிழான் நற்கொற்றனுக்கு பழனக் கிடக்கை நீர்நாட்டில் வேள்விச்சாலை முன்நின்று வேள்விக்குடி என்ற நற்பதியை நீரோடு அட்டிக் கொடுத்தமை இதனைக் காட்டுகிறது.[24] இவ்வறச் செயல்கள் தடைபட்டாலும் வேதபிராமணர்கள் அவற்றை மீட்டெடுத்தமையை வேள்விக்குடிச் செப்பேடு காட்டுகிறது.

வேதபிராமணர்களுக்கான பிரமதேயங்கள் அரசர்களைப் போலவே அரசியர், சிற்றரசர்கள் ஆகியோராலும் வரிவிலக்குடன் நல்கப்பட்டு பிராமணர்கள் அங்குக் குடியமர்ந்தனர். இதன் காரணமாக வரிவிலக்கு நிலங்கள் பலவகையில் புதிதாக ஏற்பட்டன. பிராமணர்கள் பெருகப்பெருகக் கோயில்களும் பெருகின. கோயிலுக்களிப்பது அறச்செயலாகக் கருதப்பட்டமையால் ஊர்கள் தேவதானமாக வழங்கப்பட்டதோடு விளக்கேற்றல், படையல், வழிபாடு இவற்றிற்கென நிலங்கள், கால்நடைகள், காசு, பொன் ஆகியவையும் கொடையாகத் தரப்பட்டுக் கல்வெட்டுகளில் பதிவாயின. நீர்ப்பாசன வசதிகளும் அறச்செயலாகக் கருதப்பட்டதால் அதற்கெனப் புதிய ஏரி, குளங்கள் வெட்டியும் வாய்க்கால்கள் அமைத்தும் மடை, தூம்பு, வாய், தலை, கலிங்கு முதலிய நீர்ப்போக்கைக் கட்டுப்படுத்தும் அமைப்புகளைச் செய்தும்[25] கன்னி நிலங்களைத் திருத்தியும் புதிதாக நிலங்கள் விளைச்சலுக்குக் கொண்டுவரப்பட்டன. அரசின் வருவாய் நிலவரி மூலம் பெருகியது. நிலங்கள் பல தரங்களாகப் பிரிக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டன.

கோயில்களுக்கு வரிவிலக்கு நிலங்கள் நல்கப்பட்டபோது அந்நிலங்களைப் பதிவுசெய்து ஆவணங்கள் ஏற்பட்டன. கோயில்களின் கற்சுவர்கள் அவற்றைப் பதிவுசெய்யப் பயன் படுத்தப்பட்டன. ஓலையில் தரப்பட்ட அரசாணைகள் கல்லி லும் பதிந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. நிலங்களைக் கொடையாகப் பெற்ற கோயில்களும் பிராமணர்களும் நிலங் களை விற்பது, வாங்குவது போன்ற பரிமாற்ற நடவடிக்கை களில் ஈடுபட்டதால் ஆணை-ஓலை-வியவஸ்தை என்ற வகை யில் அரசு, கோயில், ஊர்/நாடு, சபை ஆகிய அமைப்புகள் ஆணைகளைப் பிறப்பிப்பதும் அவை கல்வெட்டாகப் பதிவு பெறுவதும் எனக் கல்வெட்டுகளின் எண்ணிக்கை மிகுந்தது.

ஆணைகள் தெய்வங்களின் பெயராலும் பிறப்பிக்கப் பட்டன. சிவன்/திருமால் கோயில் கணக்குகள் தெய்வீகக் கணக்கர்களான சண்டேசுவரர்/சேனாமுதலிகள் ஆகியோர் பெயரால் பராமரிக்கப்பட்டன ஊர்க்கணக்கர், சபைக் கணக் கர், கோயிற் கணக்கர் என்று கணக்குகள் பராமரிக்க அலுவலர் களும் அரசு நிலவருவாயைப் பராமரிக்கப் பல அடுக்கு நிலை களில் அலுவலர்களைக் கொண்ட புரவுவரித் திணைக்களங் களும் உருவாகின.[26] நிலஉரிமைகள் மிகைப்பட உரிமைப் பிணக்குகளும் மிகுந்தன. உரிமைப் பிணக்குகளைத் தீர்த்திடும் சான்றுகளாக அனுபவ உரிமை, ஆவண உரிமை ஆகியவை முதலிடம் பெற்றன.[27] நேரில் கண்டவரின் சாட்சி, மனிதர்களின் நினைவாற்றல் ஆகியன ஆறு திங்கள்களுக்கு மேற்பட்டவை யன்று என்பதால் இரண்டாம் நிலையையே பெற்றன. ஆவணச் சான்றுகள் முதல் நிலை பெற்றதால் அவை அழியாது என்றும் நிலைத்திடும் கல்வெட்டுச் சான்றுகளாகப் பெருகின என்பது வெளிப்படை.

தொடக்கத்தில் நிலக்கொடைகள் நிலங்களின் பெயர் களை மட்டும் குறித்துப் பதிவுசெய்த நிலை மாறி, நாற்புறமும் அமைந்த நிலங்களின் பெயர்களும் நீர்நிலைகள், வாய்க்கால் முதலிய பாசன வசதிகளின் பெயர்களும் ஆவணங்களில் இடம்பெற்றன. நில உரிமை மாற்றம், வரிவிலக்குத் தொடர்பான ஆவணங்களில் புரவுவரித் திணைக்களத்தின் பல அலுவலர் களும் 'எழுத்து' என்று கையொப்பமிட்டனர். பிராமண சபை,

ஊர்/நாடு நிருவாகத்தினர், கோயில் சார்ந்த தலத்தார் எனப் பலரும் 'எழுத்து' என்றே கையொப்பமிட்டனர். சாட்சிகள் 'அறிவேன்' என்று கையொப்பமிட்டனர். கையொப்பமிட்ட வர்களின் ஊர், பட்டம், பணிநிலை ஆகியவை அவர்களது பெயர்களுடன் சேர்க்கப்பட்டன. கையொப்பம் இடத் தெரியா தவர்களுக்குப் பதிலாக எழுதத் தெரிந்த பிறர் கையொப்ப மிட்டனர்.

விரிவான ஆவணங்கள் தயாராகிக் கல்வெட்டானபோது அவை கல்வெட்டுகளில் மிக நீண்ட பல மரபுச் சொற்றொடர் களுடன் இடம்பெற்றன.[28] அவற்றைப் பொறிப்பதற்கு விரிவான அளவில் கட்டப்பட்ட கற்றளிச் சுவர்கள், மண்டபச் சுவர்கள், உயர்ந்து நீண்ட மதில் சுவர்கள் ஆகியவற்றின் கற்பரப்பு இடம் தந்தது. இவ்வகைக் கல்வெட்டுகள் 10ஆம் நூற்றாண்டு இறுதியிலிருந்து 14ஆம் நூற்றாண்டுவரை அமைந்த சோழர், பிற்காலப் பாண்டியர் காலத்தவை. வரிவிலக்கு அளிக்கப்பட்ட செய்தியைச் சொல்லும்போது பல்வேறு வரிகளின் பெயர் களும் இடம்பெற்றுக் கல்வெட்டுகளை இன்னும் நீளமாக்கின அரசர்களின் மெய்க்கீர்த்திகள் அந்நீளத்தைக் கூடுதலாக்கின

அரசாணைக் கல்வெட்டுகளில் அரசரின் ஆணை ஒரு பகுதியாகவும் எல்லா வகையான வரி, நில விவரங்கள் ஒரு பகுதியாகவும் எழுதி வெளியிடப்பட்ட ஆணை மற்றொரு பகுதியாகவும் ஒரு கல்வெட்டு ஒரே செய்தியை மூன்று முறை மூன்று பகுதிகளாகச் சொல்வதாக நீண்டு அமைவதையும் பார்க்கலாம்.[29] பல இடங்களில் கல்வெட்டின் நீட்சியைக் குறைக்க மெய்க்கீர்த்தியைப் பொறிக்காது, 'மெய்க்கீர்த்திக்கு மேல்' என்ற குறிப்புடன் கல்வெட்டுகள்[30] தொடங்கப்பட்டன. அதே போல, அரசரின் வாய்மொழி ஆணையை நீளமாகக் குறிப்பிடாது 'கோனேரின்மை கொண்டான்'[31] என்ற குறிப்பு டன் கல்வெட்டுகள் தொடங்கப்பட்டன.

தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜராஜனின் கல்வெட்டு களில் நில அளவுகள் எழுத்தால் ஒவ்வொரு முறையும் வேலி-காணி-முந்திரி என்று ஓர் ஒழுங்கு முறையோடு குறிக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.[32] பின்னர் வந்த இரண்டாம் இராஜ ராஜன், பிற்பாண்டியர் காலங்களில் எண்களும் அளவுகளும்

எழுத்தால் விரித்துக் கூறப்படாமல் குறியீடுகளாலும் இலக்கங் களாலும் குறிக்கப்பட்டுக் கல்வெட்டுகளின் நீளத்தைக் குறைக்க முற்பட்டிருப்பதையும் பார்க்கின்றோம்.[33] இத்தகைய ஆவணங் களை வடிவமைப்பதற்கும் அவற்றைக் கோயிற் சுவர்களில் பொறிப்பதற்கும் சிறந்த கணக்கர், கல் தச்சர்கள் இருந்தனர். பலர் அவற்றைப் படித்தறியவும் அறிந்திருந்தனர்.

செங்கல் தளிகளிலிருந்த பலகைக் கல் பொறிப்புகள் அத்தளி கள் கற்றளிகளானபோது படியெடுக்கப்பட்டுப் புதிய கட்டு மானத்தில் பொறிக்கப்பட்டன. செம்பியன்மாதேவி இப்படிச் செய்தமை திருக்கோடிக்கா கல்வெட்டுகள் மூலம் அறியக் கிடைக்கின்றது[34] எனினும், இலால்குடியிலும் பிற இடங்களி லும் கல்வெட்டுகள் படியெடுத்து வெட்டப்பட்டமை பற்றிய குறிப்புகள் இல்லாமல் உள்ளதால் ஆய்வாளர்கள் அவற்றை எழுத்தமைதி, செய்தி, இன்னபிற கொண்டு அவை மீளப் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் என்று குறிப்பிடுகின்றனர்.

திருவொற்றியூரில் முதலாம் இராஜேந்திரசோழன் பழைய கோயிலைப் புதிதாகக் கட்டிய பிறகு அவருடைய மற்றும் அவருக்குப் பின் வந்தவர் கல்வெட்டுகள் கோயிற் சுவர்களில் இருக்க, அவருக்கு முற்பட்ட அபராஜிதன், கம்பவர்மன், நிருபதுங்கன், இராட்டிரகூடக் கன்னரதேவன், பரகேசரி, இராஜ கேசரி, பராந்தகசோழன் எனக் குறிக்கப்பட்ட கல்வெட்டுகள் அறுபதுக்கு மேற்பட்டவை பலகைக் கற்களிலேயே காணப்படு கின்றன குடுமியான்மலைக் குலோத்துங்கசோழன் கல்வெட்டு ஒரு சிதைந்த பகுதியிலிருந்து படியெடுத்துப் பொறிக்கப் பட்டுள்ளது இக்கல்வெட்டின் இடைப்பகுதியில் 'இதுக்கு பின்பு இருபதெழுத்து தெரியாது' என்ற குறிப்பு இரு கூட்டல் குறிகளுக்கு இடையே பொறிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது படியெடுப்பதில் உள்ள கடினத்தை அறியமுடிகிறது.[35] திருமெய்யத்தில் பல்லவ கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப் பட்ட இசைக்கல்வெட்டு சுமார் 600 ஆண்டுகள் இடைவெளி யில் வழக்கில் இல்லாத கல்வெட்டாகவும் மொழி தெரியாத கல்வெட்டாகவும் பார்க்கப்பட்டது.[36] திருமெய்யம் சிவன் - திருமால் கோயில்களுக்கிடையிலான பிணக்குத் தீர்க்கப்பட்ட போது போசளர் தளபதியின் ஆணை பெற்று அந்த பாஷை

தெரியாத கல்வெட்டு அழிக்கப்பட்டு, அதன் மீது பிணக்குத் தீர்த்த கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது.

குற்றாலத்தில் 'திருமலை ஜீரணிக்கையால் உத்தாரணம் பண்ணினவிடத்து கல்வெட்டு வட்டமாகையில் தமிழாகப் படியெடுத்து'[37] என்று வரும் குறிப்பிலிருந்து வட்டெழுத்து வழக் கொழிந்ததை ஊகிக்கலாம். சில கல்வெட்டுகள் 'பொத்தகப் படி', 'கைத்தடிப்படி' என்று குறிப்பதால் ஆவண நகல்கள் வரிக்கணக்கு அலுவலகங்களில் உள்ள பதிவுகளிலிருந்து பெறப்பட்டமையைப் புரிந்துகொள்ளலாம்.[38] சமூகத்தில் இது போல் கல்வெட்டுகள் புரிந்தும் புரியாமலும் தேவைப்பட்டும் தேவைப்படாமலும் மாறுகின்ற சூழ்நிலை அவற்றின் பெருக்கத்தால் காலப்போக்கில் ஏற்பட்டிருக்கிறது.

தமிழகக் கல்வெட்டுகளில் நிலவிலை ஆவணம்/பிரமாணம், குளவிலைப் பிரமாணம், விலை பிரமாணத் தீட்டு என்று விலை தொடர்பான பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் இசைவுத்தீட்டு, விலை பிரமாணத்தீட்டு, விலைப்பொருள் மாவறுதித் தீட்டு என்ற படிநிலைகளையும் கல்வெட்டுகள் காட்டுகின்றன. தொடக்கத்தில் ஆவணம் என்ற சொல் எழுதப் பட்ட ஆவணங்களுக்குப் பெயராக இருந்து பின்னர், அந்தச் சொல்லின் இடத்தில் 'பிரமாணம்', 'தீட்டு' என்ற சொற்கள் இடம்பெறுவதைக் காணலாம். எனினும் ஆவணக்களம் என்ற பொருளில் 'ஆவணம்' என்னும் சொல் பின்னாளில் பயன்பாட்டில் இருந்தது. ஆவணக்களத்தில் நண்பகல், முன்பகலில் கூடி ஒருகாலாவது, இருகாலாவது முக்காலாவது என்று முதலில் விளித்து (முற்கூற) வாங்குபவர் கொள்வேன் என்று பிற்கூறக் கிழி (பணமுடிப்பு) கைச்செலவற விற்பனை நிகழ்ந்துள்ளது.[39]

பேராசிரியர் எ. சுப்பராயலு 2001 வரை இந்திய அளவில் படியெடுக்கப்பட்ட 58,000 கல்வெட்டுகளை மொழிவாரியாகப் பின்வருமாறு காட்டியுள்ளார்: சமஸ்கிருதம்-7,000; வடஇந்திய மொழிகள்-5,000; தமிழ்-28,000; கன்னடம்-11,000; தெலுங்கு-5,000; பாரசீகம், அரபி, பிற-3,000.

28,000 தமிழ்க் கல்வெட்டுகளை அவர் கால வரிசைப் படுத்திப் பின்வருமாறு பகுத்துள்ளார்.

பொ. கா. மு. 300 முதல் பொ. கா. 500 முடிய	100
பொ கா. 600 முதல் 900 முடிய	900
பொ. கா. 1000 முதல் 1300 முடிய	19,000
பொ. கா. 1400 முதல் 1600 முடிய	6,000
பொ. கா. 1700 முதல் 1900 முடிய	2,000

இதைப் பார்க்கும்போது மொழி வரிசையில் தமிழ்க் கல்வெட்டின் மிகுதியையும் கால வரிசையில் இடைக்காலக் கல்வெட்டுகளின் மிகுதியையும் அறிந்துகொள்ளலாம். சோழர் காலத்தில் அரசின் வருவாய் நிலம் சார்ந்த வரிகளாக இருந்தது. அதற்கு மாறாக விஜயநகரக் கால அரசின் வருவாய் வணிக வரிகள் சார்ந்ததாக மாறியதைப் பேராசிரியர் கராஷிமா குழுவினர் ஆய்வு மூலம் அறிந்துகொள்ளலாம். நிலஉரிமைகள் முதலில் சமூகப் பொதுஉரிமைகளாக இருந்ததையும் பின்னர் அவை தனிநபர் உரிமைகளாகி 13ஆம் நூற்றாண்டில் உச்ச நிலையை எட்டியதையும் தமது புள்ளியியல் ஆய்வின் மூலம் கராஷிமா வெளிப்படுத்தியுள்ளார். இத்தகைய சமூகப்போக்கும் கோயில்கள் புதிது புதிதாகத் தோன்றிச் சிறிய வழிபாடுகள் பெரிய வழிபாடுகளாகவும் விழாக்களாகவும் மாறிய சமயப் போக்கும் காலவசையில் கல்வெட்டுகளின் ஏற்ற இறக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன.

பெரிய விழாக்கள் அரசர்களின் பிறந்தநாள் நட்சத்திரத் தினைத் தீர்த்தமாடும் நாளாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டன. விழாச் செலவுகளின் விவரம், அவற்றிற்காக நெல், நெல்லிற்காக நிலக்கொடைகள், படையல் பொருள்களின் பட்டியல் மற்றும் அவற்றிற்கான நிலக்கொடைகள் என்று கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டன.[40] அதனால், கல்வெட்டுகள் நீண்டன. விழாக்கள் பெருகியதால் மக்கள் கூட்டமும் பெருகி அவர் களின் வசதிக்காக மண்டபங்கள் கட்டப்பட்டன. கோயில் வளாகம் பெரிதானதால் அதற்கான புதிய கோபுர வாயில்களும் ஏற்பட்டுச் சிறிய கோயில்களைப் பெரிதாக்கின. அதனால், கிடைத்த கற்சுவர்ப் பரப்புகள் நீண்ட கல்வெட்டுகளை வெட்டு வதற்கு இடமளித்தன. திருவரங்கம், சிதம்பரம், திருமலை, திருவண்ணாமலை, காஞ்சிவரதராஜர் கோயில், திருவானைக்

கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், அழகர்கோயில் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

விழாக்களில் தெய்வங்களை உலா எடுத்துச் செல்லும் பொருட்டுச் செப்புத்திருமேனிகளும் புதிது புதிதாக செய்து வழங்கப்பட்டன. செப்புத்திருமேனிகள், பரிகலன்கள், சங்கு, மணி போன்ற வழிபாட்டுப் பொருள்களிலும் பொறிப்புகள் உள்ளன. சிராப்பள்ளி மேல் குடைவரையில் சிராப்பள்ளி அந்தாதி என்ற பெயரில் நூறு செய்யுள்கள் கல்லில் பதியப் பட்டமை சிறப்பாகும்.[41] சிதம்பரத்தில் அமைந்த நரலோக வீரனின் நூற்றுக்கால் மண்டபத்தில் தமிழிலும் அதற்கு இணையாகச் சமஸ்கிருதத்திலும் பாடல்களும் சுலோகங் களும் தூண்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.[42]

திருக்கோயிலூரை அடுத்த கீழூரில் முதலாம் இராஜராஜ னின் சிறப்புகளைக் குறித்துச் சங்க இலக்கியப் பாடல் போலவே கொடைச்செய்தி பதிவுசெய்யப்பட்டமையும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். திருவெள்ளறை, செங்கம் ஆகிய இடங் களில் சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, மலைபடு கடாம் குறித்த குறிப்புகள் கிடைப்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். திருவானைக்காவல், குடுமியான்மலை, மதுரை மேலைக் கோபுரம் ஆகிய இடங்களில் பாண்டியர்களின் இலாஞ்சனைகளான கயலும் செண்டும் கொண்டு தமிழ்ப் பாடல்கள் உள்ளன. தேவாரப் பாடல் ஒன்று கோவிந்தபுத்தூரில் பதிவாகியுள்ளது.[44] நாயன்மார் வரலாறு தாராசுரம் கோயிலில் சிற்பங்களாகப் பதிவுசெய்யப்பட்டு அவற்றிற்கேற்பக் கல் வெட்டுகளும் பதிவாகியிருப்பதைக் கருத்தில் கொண்டால் இலக்கியங்களின்பால் அன்றைய சமூகம் கொண்டிருந்த ஈடு பாட்டை உணரலாம். திருவரங்கத்தில் சக்கராயனின் பாடல் கள் பதிவும் தென்காசியில் தென்காசிப் பாண்டியர்களின் பாடல்கள் பதிவும் காஞ்சிபுரம் வரதராஜர் கோயில், தாதா சாரியார் சமுத்திரம் ஆகிய இடங்களில் அனுமன் பற்றிய சுலோகப் பதிவும் இங்குக் குறிப்பிடத்தக்கவை.

மானூரில் உள்ள முற்காலப் பாண்டியர் கல்வெட்டு சபைக்குத் தகுதியானவர்களைச் சுட்டுகிறது.[45] உத்திரமேரூர் பராந்தகன் கல்வெட்டுகளில் பிராமண சபைக்கான வாரியத்

தினரைக் குடவோலை முறையில் தேர்வு செய்வதற்கான விதிமுறைகள் பதிவாகியுள்ளன. திருவாரூரில் ரதகாரர்களின் குலத்தகுதிகள் குறித்த கல்வெட்டு பல்வேறு ஆகம, புராண நெறிமுறைகளை மேற்கோள் காட்டிப் பெரிய அளவில் மணிப் பிரவாள நடையில் கல்வெட்டாகப் பதிவாகியிருக்கிறது.[46]

இடைக்காலத்தில் பல்வேறு இடங்களில் கைப்பிழையால் உயிர்ச்சேதங்கள் நிகழ்ந்தபோது தண்டனையாகக் கோயில்களில் விளக்கெரிக்கச் செய்தமையைக் கரந்தை, தாமரைப்பாக்கம் கல்வெட்டுகளால் அறியலாம். குடுமியான்மலையில் காய்ச்சிய கொழுவினை உருவி பிரத்தியம் செய்து பிழை/பிழையின் மையை உறுதி செய்ததை ஒரு கல்வெட்டுப் பதிவு காட்டுகிறது. ஜம்பையில் அதிக/தவறான வரிவிதிப்புக் காரணமாகப் பெண்ணொருத்தி தன் உயிரை மாய்த்துக்கொண்ட செய்தியும் பதிவாகியுள்ளது. சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூரில் கணக்கர் செய்த பிழையும் அதற்கான தண்டனை குறித்தும் கல்வெட்டுப் பதிவு உள்ளது. இவற்றை நெறிமுறைகள் குறித்த கல்வெட்டுகளாகக் கொள்ளலாம்.

சோழராட்சி வலுவிழந்த இறுதிக் கட்டத்தில் சிற்றரசுகள் நிலமைத் தீட்டு என்ற பெயரில் உடன்படிக்கைகள் எழுதிக் கொண்டமை கல்வெட்டுகளாகப் பதிவாகியுள்ளன.[47] 'தோற்ற அரசர்கள் நெஞ்சில் ஆளோலை (அடிமை ஓலை) எழுதிக் கீழ்ப்படிவார்கள் என்ற செய்தியும் கல்வெட்டில் உள்ளது.[48] 'ஆள் ஓலை' என்ற அடிமை ஓலை பெரிய புராணத்தில் சுந்தர ரைத் தடுத்தாண்ட புராணத்தில் இடம்பெறுவதைக் குறிப்பிட வேண்டும்.

காலப்போக்கில் தமிழ்க் கல்வெட்டுகளின் அளவும் அவை தரும் செய்திகளும் பல்வேறு காரணிகளாலும் சமூக, சமய, பொருளாதார உந்துதல்களாலும் பெருகியும் மாறியும் வந்திருப் பதை இதுவரை தரப்பட்டுள்ள தரவுகள் உணர்த்த வல்லன.

குறிப்புகள்

1. http://www.tnarch.gov.in/epi/lang.htm; http://www.tnarch.gov.in/epi/copper.htm.
2. K. Rajan, Early Writing System, 2014, Table 3.

3. கல்வெட்டு, காலாண்டிதழ், 70, ஏப்ரல் 2006, பக். 53 - 55.
4. I. Mahadevan, Early Tamil Epigraphy, 2003, pp. 441- 443.
5. தமிழ்-பிராமி கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, 2006, பக். 156-157.
6. எழுத்துப் புணருத்தான் மலையய் வண்ணக்கன் தேவன் சாத்தன், I. Mahadevan, மு. கு. நூல், pp. 369-383.
7. ஆவணம் 1, பக். 57-66.
8. EI 17 : 5; 6: 12; 5: 8-9; 10: 12; SII 1: 32, 33, 35.
9. EI 12 : p. 225; SII 12: 16.
10. SII 14: 15, 16, 16A; SII 12: 51, 53.
11. SII 13: 27, 28.
12. தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைச் சொற்பொழிவு, மார்ச்சு 1984; தினமலர் 29. 6. 1984, 5. 7. 1984.
13. http://www.tnarch.gov.in/epi/kan. htm; http://www.tnarch.gov.in/epi/ins6. htm.
14. எ. சுப்பராயலு, மண்கல தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புகள், ஆவணம் 19.
15. குறிப்பு எண் 8 பார்க்கவும்.
16. குறிப்பு எண் 9 பார்க்கவும்.
17. ஆவணம் 7, பக். 13-14; SII 14: 45.
18. SII 2: 70; SII 12: 16.
19. SII 12: 116, 117.
20. SII 1: 32, 33, 35; EI 10: 12; SII 4: 136.
21. EI 12: p. 231.
22. ஆவணம் 8, ப. 4.
23. ஆவணம் 17, ப. 23.
24. வேள்விக்குடிச் செப்பேடுகள், பாண்டியர் செப்பேடுகள் பத்து, 1967.
25. குறிப்பு எண் 12 பார்க்கவும்.

26. Y. Subbarayalu, A Side Light on Cola Officialdom, pp. 17-21; The Cola State, pp.116-118, Kaveri, 2001.
27. M. K. Sharan, Court Procedure in Ancient India, 1978, p. 82.
28 Y. Subbarayalu, Sale Deeds, pp. 40-52, Kaveri; SII 4: 424, 539; 14: 194, 250.
29. SII 14: 254, 144, 145.
30. SII 14: 233.
31. எ. சுப்பராயலு, கோனேரின்மை கொண்டான் ஒரு மீள் பார்வை, தொல்லியல் நோக்கில் தமிழகம், த. நா. தொ. து. 1999.
32. SII 2: 4.
33. SII 5: 662, 745.
34. SII 12: 55, 74, 78; 19: 292.
35. IPS: 221.
36. IPS: 340.
37. தெ. இ. கோ. சா. தொகுதி 3, பாகம் 2.
38. SII 8: 709, 714.
39. SII 19: 162; 5:723, 1351.
40. SII 14: 191.
41. SII 4: 167.
42. தெ. இ. கோ. சா. தொகுதி 3, பாகம் 2.
43. SII 7: 863.
44. ARE 1929: 192.
45. SII 14: 37.
46. SII 17: 37.
47. SII 7: 117.
48. SII 17: 177.

வருந்துகிறோம்

பேராசிரியர் நொபோரு கராஷிமா



1933 ஏப்பிரல் 24இல் ஜப்பானில் பிறந்த திரு. நொபோரு கராஷிமா பிறப்பால் ஜப்பானியர் என்றாலும், உணர்வாலும் உழைப்பாலும் ஆர்வத்தாலும் அன்பாலும் தமிழராகவும் இந்தியராகவுமே வாழ்ந்தவர். தமிழ்நாட்டின், தென்னிந்தியாவின் வரலாற்றை உலக அரங்கில் உயர்த்திப் பிடித்த அப்பெருமகனார் இந்தியக் கல்வெட்டறிஞர் குழுமத்தின் தலைவராகவும் உலகத் தமிழாய்வு மன்றத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்த பெருந்தகையாவார். தென்னக வரலாற்றறிஞர்களால் ஒன்றுபோல் நட்பு பாராட்டப் பெற்ற, மதிக்கப் பட்ட திரு. நொபோரு கராஷிமாவின் குடும்பமே அறிவுசால் குடும்பமாகும்.

நொபோருவின் தாய் வழிப் பாட்டனாரும் தந்தையாரும் சீன இலக்கியத்தில் புலமை பெற்றவர்கள். பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாக இருந்தவர்கள். தந்தை வழியில் சீன இலக்கியம் படிக்காமல் இந்திய வரலாற்றின் பக்கம் நொபோருவின் பார்வை திரும்பியது. அதற்கு ஆசியா பற்றிய அவரது எண்ண ஓட்டங்களே காரணமாயின என்று அவரே தெரிவித்திருக்கிறார்.

இந்திய வரலாற்றைப் படிக்க விழைந்த நொபோரு தமிழக வரலாற்றை ஆய்வுசெய்ய முடிவு செய்தார். அவர் படித்த காலத்தில் ஜப்பானில் இந்திய வரலாறு என்றால் அது வடஇந்திய வரலாறாகவே இருந்தது. 1958இல் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்தவர், அதற்கென அளித்த ஆய்வேடு சோழர் வரலாறு பற்றியதாக அமைந்தது. அதே பல்கலையில் முனைவர் பட்டத்திற்குச் சேர்ந்த நிலையில், 1963இல் தமிழ்நாடு வந்து சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் தம்மை ஆய்வு மாணவராகப் பதிவுசெய்து கொண்டார். கல்வெட்டுகளை ஆய்வுசெய்யத் தலைப்பட்ட

தால் உதகமண்டலத்திலிருந்த அரசுக் கல்வெட்டு ஆய்வகத்தி லேயே அவரது காலம் கனிந்தது. அங்குதான் தமிழ்க் கல்வெட்டு களைப் படிக்க முறையான பயிற்சி பெற்றார். தமிழையும் குருகுல வழியில் கற்றார். ஆய்வகத்திருந்த இளம் ஆய்வாளர்களுடன் இணைந்து களஆய்வுகளிலும் கல்வெட்டுகளைப் படிப்பதிலும் முனைந்த திரு. நொபோரு பிற ஆய்வாளர்களைப் போல் கல்வெட்டைப் படியெடுப்பது அதன் பாடம், உட்கரு எழுதி வைப்பது ஆகியவற்றுடன் தம் பணி நிறைவுற்றதாகக் கருத வில்லை. அக்கல்வெட்டுத் தரவுகள் கொண்டு வரலாற்றை உய்த் தறிவதில் ஆர்வம் காட்டி, அதில் முனைப்பாக இருந்தார்.

1968இல் இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்னை வந்த திரு. நொபோருவுக்குச் சென் னைப் பல்கலைக்கழகப் பண்டைய வரலாறு, தொல்லியல் பிரிவில் ஆய்வு மாணவராக இருந்த எ. சுப்பராயலுவுடன் நட்பு ஏற்பட்டது. அந்நட்பு காலப்போக்கில் மலர்ந்த நிலையில் இருவரும் இணைந்து பல ஆய்வுகளைச் செய்தனர். நொபோரு பின்னாளில் எழுதிய நூல்கள் சிலவற்றிற்குத் திரு. சுப்பராயலு இணை ஆசிரியராக இருந்துள்ளார். 1969இல் மைசூர்க் கல்வெட் டியல் பிரிவில் சில காலம் தங்கி ஆய்வுசெய்யும் வாய்ப்புப் பெற்ற திரு. நொபோரு தம் துணைவியாரையும் அன்னையாரையும் இந்திய மணம் நுகரச் செய்தார். பின்னாளில் இவரும் இவரது துணைவியும் இணைந்து எழுதிய எங்கள் இந்தியா என்ற நூல் இந்தியாவின் மீது அவர்கள் கொண்ட அன்பிற்குச் சான்றாக அமைந்தது. சிறுவர்களுக்காகத் திரு. நொபோரு காந்தியைப் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளமை பெரும்பாலோருக்குத் தெரிந்திராது.

திரு. நொபோரு கராஷிமாவின் ஆய்வுகள் பெரும்பாலும் தமிழக வரலாற்றுக்கே முக்கியத்துவமளித்தன. 13-17ஆம் நூற் றாண்டுகளுக்கு இடைப்பட்ட வரலாற்றை விரிவாக ஆய்வு செய்துள்ள இப்பெருந்தகை தென்னகத்தின் சிறந்த கல்வெட் டியலாளர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். இந்தியக் கல்வெட்டியல் குழுமத்தின் 11ஆவது மாநாட்டின் தலைவராக இருந்த அவர் அதன் 21ஆவது மாநாட்டில் அக்குழுமத்தின் மதிப்புறு உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த

மாநாட்டின்போது அவரது பணிகளைப் பாராட்டிச் செப்புப் பட்டயம் வழங்கப்பட்டது.

கல்வெட்டாய்வில் புள்ளியியல் முறையை அறிமுகம் செய்து அதன் வழித் தரவுகளை ஒப்புநோக்கி முடிவு காணும் புதிய ஆய்வுமுறைக்குத் திரு. நொபோருவே தந்தை எனலாம். அது போலவே ஆய்வுப் பணிகளில் கூட்டு முயற்சிகளை ஊக்குவித்து ஒருங்கிணைத்த பெருமையும் அவருக்குண்டு. பின்னாளில் பல உலகளாவிய குழுக்களை அமைப்பதற்கும் தலைமை யேற்று வழிநடத்துவதற்கும் இக்கூட்டு ஆய்வுகள் அவருக்குத் துணையாயின. தென்னிந்திய - தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே நிகழ்ந்த வணிகப் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் பற்றிய ஆய்வுத் திட்டத்திலும் தென்னிந்தியாவின் கடற்கரைப் பட்டினங்களில் காணப்படும் சீன நாட்டுப் பீங்கான்கள் பின்னணியிலான வணிக உறவுகள் பற்றிய ஆய்வுத்திட்டத்திலும் பல இந்திய ஜப்பானிய ஆய்வாளர்கள் இணைந்து பணியாற்றினர்

அதன் விளைவாகப் பண்டைக் காலத்திலும் இடைக் காலத்திலும், 'இந்தியப் பெருங்கடலில் நிகழ்ந்த வணிக உறவுகள்' நூல் உருவானது. இது போன்ற பெருந்திட்டங்களுக்கான நல்கைகளைப் பெறுவதில் ஜப்பானிய அரசுப் பல்கலைகளும் மித்சுபிசி அறக்கட்டளையும் அவருக்குத் துணையாக இருந்தன. அவரது ஆய்வு வரைவுகள் ஜப்பானிய மொழியில் இருந்த போதும் உலகளாவிய தொடர்புக்காக ஆங்கிலத்திலும் தம் படைப்புகளைப் பதிவுசெய்துள்ளார். தம் ஜப்பானிய மாணவர்களையும் ஆங்கிலம் கற்க அறிவுறுத்தியுள்ளார்.

1966இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடங்கி, ஆறு மாநாடுகளில் அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மொரீசியஸில் நிகழ்ந்த மாநாட்டில் உலகத் தமிழாய்வுக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 2010ஆம் ஆண்டுவரை அப்பொறுப்பில் இருந்தார். 1967இல் டோக்கியோ அயல் மொழிகள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்த திரு. நொபோரு, 1974இல் அதே பல்கலைக்கழகத்தின் ஆசிய வரலாற்று இணைப் பேராசிரியரானார். 1984 முதல் 1994வரை பேராசிரியராகப் பணி தொடர்ந்து ஓய்வு பெற்றார்.

சோழர் கல்வெட்டுகளில் உள்ள பெயர்களின் தொகுப்பு, விஜயநகர ஆட்சியில் தென்னிந்திய சமுதாயம், இந்திய வரலாற்றில் அரசர்கள், தென்னிந்தியாவில் வரலாறும் சமூகமும், தென்னிந்தியாவில் விஜயநகரக் கல்வெட்டுகள், மாறிவந்த தென்னிந்திய சமூகம், தென்னிந்தியாவின் ஒரு சுருக்கமான வரலாறு - சிக்கல்களும் தீர்வுகளும் முதலியன அவரது ஆய்வு நூல்களில் பெரும் வரவேற்பைப் பெற்றனவாகும்.

அவரது முன்னோடி ஆய்வுகளைப் போற்றும் விதமாகப் பல பட்டங்களும் விருதுகளும் அவரை அடைந்தன. ஆசிய கலாச்சாரத்தைக் காப்பதில் சிறந்து விளங்கிய தனி மனிதர் எனப் போற்றி ஃபுகுவோகா பரிசு திரு நொபோருவுக்கு 1995இல் அளிக்கப்பட்டது. சிறந்த அறிவியல், கல்விப் பங்களிப்புகளைப் பாராட்டும் நோக்கில், ஜப்பானியக் கலைக்கழகம் அளிக்கும் கல்விக்கான பரிசு திரு. நொபோருவின் தென்னிந்தியாவில் வரலாறும் சமூகமும் என்ற நூலுக்காக 2003இல் அவருக்கு வழங்கப்பட்டது. கலாச்சாரத் தகைமையாளர் எனும் ஜப்பானின் பெருமைக்குரிய விருதை 2007இல் அவர் பெற்றார். இந்திய அரசின் உயரிய விருதுகளுள் ஒன்றான தாமரைத்திரு, அவரது ஆய்வுப்பணிகளைப் பாராட்டி இந்திய வரலாற்றுக்கு அவருடைய பங்களிப்பைப் போற்றும் விதமாக 2013இல் வழங்கப் பட்டது. இவ்விருதை பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் தம் ஜப்பான் பயணத்தின்போது திரு நொபோருவுக்கு நேரிடையாக வழங்கினார் என்பது பெருமைக்குரியதாகும்.

திரு. நொபோரு கராஷிமாவை இரண்டு முறை சந்திக்கும் வாய்ப்பமைந்ததே தவிர, அவருடன் பழகும் பேறு வாய்க்கவில்லை. அவரது கட்டுரைகள், நூல்கள் வழியே அவரது ஆய்வுத் திறத்தையும் நுண்ணோக்குப் பார்வையையும் நன்குணர்ந்திருந்தேன். ஒரு முறை பேராசிரியர் எ. சுப்பராயலு வரலாறு ஆய்விதழின் தொகுதிகளைத் திரு. நொபோருவின் பயன்பாட்டிற்காகத் தம் ஆய்வு மாணவர் வழி என்னிடமிருந்து பெற்றளித்தமை நினைவிலுள்ளது. பரந்த பார்வையும் விரிந்த சிந்தையும் புதியன நோக்கும் எண்ணமும் உலகளாவிய நண்பர்களும் தம் ஆய்வு அணுகுமுறைகளை அடியொற்றிய மாணவர்களும் கொண்டு விளங்கிய வரலாற்று அறிஞரான திரு. நொபோரு

கராஷிமா 2015 நவம்பர் 26இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உழைப்பால் உலகப் பார்வைக்கு உயர்த்தப்பட்ட தென்னிந்திய வரலாற்றாய்வு, அவரது நண்பர்களாலும் மாணவர்களாலும் மேன்மேலும் சிறப்பெய்தும்.

நன்றி : நொபோரு கராஷிமா - நினைவேந்தல்
தமிழகத் தொல்லியல் கழக வெளியீடு.

பேராசிரியர் முனைவர் ச. முத்துக்குமரன்



வாழ்க்கையின் வனப்பான நடையில் எத்தனையோ இனிமையான சந்திப்புகள் நேர்கின்றன. அவற்றுள், என்றென்றும் நினைத்து மகிழுமாறு நெஞ்சில் நிறைந்திருப்பவை நம் நடையை நேர்செய்வதுடன், நம் வாழ்க்கையையும் சமுதாயத்திற்குப் பயனளிப்பதாக வடிவமைக்கின்றன. சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ச. முத்துக்குமரனாருக்கும் எனக்கும் இடையில் நிகழ்ந்த சந்திப்பு அத்தகையதோர் அரிய சந்திப்பாகும். புன்னகை மலர்ந்த முகம், சிந்தனை மிளிரும் கூர்விழிகள், யாரையும் எளிதில் ஆட்கொள்ளும் அருள் நிறைந்த கம்பீரத் தோற்றம், இனிய எளிய தமிழில் இயலபான உரையாடல் - இப்படித்தான் முதல் சந்திப்பு அவரை எனக்குள் நிறைத்தது. அவர் துணைவேந்தராகவும் நான் பேரவை உறுப்பினராகவும் ஒரே பல்கலையில் ஆறாண்டுகள் இருந்தமை எங்கள் இருவரையும் பல நிலைகளில் நெருக்கமாக்கியது. அந்த நெருக்கம் முத்துக்குமரன் என்னும் மாமனிதரைப் பயிலவும் புரிந்துகொள்ளவும் பின்பற்றவும் வாய்ப்பானது.

பெரும் பொறுப்பிலிருந்தபோதும் காட்சிக்கு எளியராய், இன்சொல்லராய், யாரும் அணுகத் தக்கவராய், நியாயமான கேட்புகளுக்கு உடன் தீர்வு வழங்குபவராய், நெறிகளின் ஊற்றாய் விளங்கிய பெருந்தகை அவர். நல்ல முயற்சிகளை

ஊக்குவிப்பதும் அவற்றிற்குத் துணைநிற்பதும் தம் கடமை என்று கருதிச் செயலாற்றியவர். தவறுகளை மன்னித்தவர்; மறந்தவர். பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தத் தயங்காதவர். ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர். தம் அலுவல் நேரம் தவிர பிற நேரங்களில் வேட்டியும் சட்டையுமணிந்து நாட்டுடை நாடியவர். தனிப்பட்ட முறையில் யாரிடமும் பகை கொள்ளாத வர். நட்பிற்காகவும் எல்லைகள் மீறாதவர். எல்லாவற்றினும் மேலாய் இனிய மனிதர். ஆம்! மனிதம் நிரம்பித் தளும்பிய உண்மையான மனிதராக வாழ்ந்தவர்.

துணைவேந்தராக இருந்தபோது தமிழுக்கும் கல்வி உலகத்திற்கும் இளைஞர்களுக்கும் அவர் ஆற்றிய இணையற்ற பணிகளுள் சிலவற்றையேனும் இங்குப் பதிவுசெய்வது கடமை. கல்வியிலும் கற்பிக்கும் முறைகளிலும் பல பயனுள்ள எதிர்கால நோக்குடைய மாற்றங்களை அவர் ஏற்படுத்தினார். எதிர்கால வியல் என்றே ஒரு துறையையும் பல்கலையில் உண்டாக்கினார். ஆய்வு மாணவர்கள் பயனடைய நிரந்தர நிதியமைப்புகளை உருவாக்கப் பெருமுயற்சி செய்து வெற்றி கண்டார். அவரது அயராத உழைப்பால் பல்வேறு துறை சார்ந்த நாற்பதிற்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்கள் பயனடைந்தனர். மாணவர் கல்வி நலத்திற்காகப் பல்கலைத் திட்டக்குழுவில் முதன்மை வாய்ந்த சிந்தனைகள் பல அவரால் முன்வைக்கப்பட்டன. பல் கலைக்கழக நல்கைக் குழுவுடன் பேராடிப் பாரதிதாசன் பல் கலைக்கழகத்தில் வரலாறு ஒரு துறையாக அமையுமாறு செய்த பெருமை அவருக்குண்டு. அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சி கள் மகத்தானவை; மறக்கமுடியாதவை. வரலாற்றில் அவருக் கிருந்த இணையற்ற ஈடுபாட்டை வெளிப்படுத்தியவை.

தமிழின் வளமை, ஆற்றல் குறித்து அறிஞர்கட்கு ஒரு கண்திறப்பாக அமையவென்றே பாரதிதாசன் பல்கலைக்கழகத் தில் தமிழரின் தொன்மை அறிவியல், தொழில்நுட்பம் பற்றிய இருநாள் கருத்தரங்கை அவர் நடத்தினார். ஏறத்தாழ நாற்பதுக் கும் மேற்பட்ட அரிய கட்டுரைகள் படித்தளிக்கப்பட்ட அந்தக் கருத்தரங்க நிகழ்வு திரு. முத்துக்குமரனாரின் தமிழ் வளர்ச்சிப் பணிகளில் தலையாயதாகும். நூலாகவும் வெளிப்பட்ட அந்தக் கருத்தரங்கின் முத்தாய்ப்பான சில கட்டுரைகளைப் பதிப்பித்து

தமிழர் அறிவியல் திறனை இந்தியத் திருநாடே அறியுமாறு செய்தது இந்து நாளிதழ்.

ஆங்கிலத்தில் காலாண்டிதழாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த சூழலியல் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளின் சுருக்கக் களஞ்சியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடத் துணைவேந்தர் மேற்கொண்ட முயற்சிகள் மதிப்பிற்குரியவை. பல்துறை அறிஞர் குழுவை ஏற்படுத்தி, உடனுக்குடன் சூழலியல் இதழின் பதிவுகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடச் செய்தார். அவர் பொறுப்பில் இருந்த காலம் முழுவதும் அப்பணி தொய்வின்றித் தொடர்ந்தது. அதனால், தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக அறிவியல் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் இந்திய அளவில் ஆய்வாளர் மேற்கொண்டிருந்த முயற்சிகளையும் அவற்றின் பயன்களையும் தமிழர் அனைவரும் அறியும் வாய்ப்பேற்பட்டது. இது ஆய்வுகளை ஒருங்கிணைக்கவும் முடிவுகளின் பயன்களை மாணவர்களும் மக்களும் பரவலாகப் பயன்படுத்தவும் வழிகோலியது. முத்துக்குமரனார் தொடங்கிய இந்த அரிய பணியைப் பல்கலை தொடர்ந்து நடைமுறைப்படுத்தியிருந்தால் தமிழ்நாட்டின் அறிவியல் வளம் பெருமைப்படத்தக்க அளவில் செழித்திருக்கும்.

பாரதிதாசன் கவிதைகளில் அறிவியல், இந்திய மெய்யியலுக்குத் தமிழர் கொடை எனத் தமிழ் நலம் நாடும் பல கருத்தரங்குகள் முத்துக்குமரனார் பணிக்காலத்தில் நிகழ்ந்தன. பல்கலையின் அனைத்துத் துறைகளையும் ஆய்விதழ்கள் வெளியிடுமாறு பேரவைக் கூட்டத்திலேயே வேண்டுகோள் வைத்தவர் அவர். பெரியபுராணத்தின் அறிவியல், வரலாற்றுத் தடங்களை அடையாளப்படுத்தும் முயற்சியாகப் பல்துறை சார்ந்த அறிஞர்கள் ஒருங்கிணைந்து அவ்விலக்கியத்தைப் படித்துக் கருத்துப் பரிமாற்றம் கொள்ள ஓர் உரத்த சிந்தனை அமைப்பை உருவாக்கித் தொடர்ந்து நடத்திய பெருமையும் அவருக்குண்டு. அந்த அமைப்பில் பங்கேற்றபோதுதான் தமிழ் இலக்கிய வளத்தின் மேன்மையையும் செழுமையையும் அதன் பன்முகத் தன்மையையும் எங்களால் அறியமுடிந்தது. தமிழறிஞர்கள் தொடாத இடங்களும் நோக்காத கோணங்களும் பல்துறை அறிஞர்களின் படிப்பினால் வெளிச்சமாயின. முத்துக்

குமரனாரின் இந்த முயற்சி தமிழ் இலக்கியப் படிப்பு, ஆய்வு வரலாற்றில் மிக முன்னோடியான ஒன்றாகும்.

இதனை இதனால் இவர் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவர்கண் விடல், தேர்ந்த ஆளுமை உள்ளவர்களுக்கே இயலுவது. முத்துக்குமரனார் இந்த ஆளுமையை இயல்பாகக் கொண்டிருந்தார். வரலாற்றுப் புகழ் பெற்ற தமிழ் இசைக் கலைக்களஞ்சியத் தொகுதிகளை இசைத்தமிழ் அறிஞர் பேரா சிரியர் வீ. ப. கா. சுந்தரனாரைக் கொண்டு அவர் உருவாக்கியமை தமிழையும் இசையையும் இணைய வளப்படுத்தியது. அகர வரிசையில் அமைந்த அத்தொகுதிகளைச் செழுமை செய்ய இசை நோக்குடைய பல்துறை அறிஞர்களை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழு அமைத்து, சுந்தரனார் பணியைத் தொய் வின்றித் தொடர உதவினார். அக்களஞ்சியங்களின் அறிமுகக் கூட்டங்கள் இசைஆய்வு அரங்கங்களாகவே அமைந்தமை கூடுதல் பயனளித்தது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பு எளிதான தல்ல. நாளும் பொழுதுமாய்ப் பல இடையூறுகள் பல பணித் தளங்களில் உற்பத்தியாகும். சில மிகப் பெரிதாகவும் வடிவெடுக் கும். முத்துக்குமரனார் அவற்றைக் கையாண்டவிதங்களில் அவரது ஆளுமையை வியந்திருக்கிறேன். இங்கு எழுதமுடியாத பல இடையூறுகளைத் தம் நேர்மைத் திறத்தாலும் அறிவாற்ற லாலும் அனுபவ முதிர்வாலும் பக்குவமாக அப்பெருந்தகை எதிர்கொண்டிருக்கிறார். இடையூறுகளை, இவை உடனுக் குடன் தீர்க்கவேண்டியவை, இவை ஆறப்போட்டுத் தீர்க்க வேண்டியவை என்று சட்டென அடையாளம் கண்டுகொள் ளும் திறம் அவரிடம் இருந்தமையால், எந்த இடையூறும் அப்பெருந்தகையிடம் நல்ல முடிவையே கண்டது.

தமக்கு அனைத்தும் தெரியும் என்று எப்போதும் அவர் நினைத்ததில்லை. கற்றுக் கொள்வதற்கு ஒருபோதும் தயங்கி யதே இல்லை. கற்றாரை மதிப்பதையும் அவர்களுக்குப் பாராட்டுச் செய்து போற்றுவதையும் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆங்கி லத்தில் இணையற்ற திறன் இருந்தாலும் தமிழ்ச் சிந்தனை யாளராக வாழ்ந்தவர் அவர். தமிழ், தமிழர், தமிழ்நாடு குறித்த

அவர் சிந்தனைகள் பல அரிய நூல்களாக வெளிவந்துள்ளன. சமச்சீர்க் கல்வி அவரது அரும்பாடுகளின் விளைவு. ஓர் ஆய்வாளராகவே கல்வியாளர்களையும் பயிற்றுனர்களையும் பயில்பவர்களையும் பெற்றோர்களையும் கலந்து, உரையாடி மிகுந்த எதிர்காலச் சிந்தனையுடன் அவர் வடிவமைத்த சமச் சீர்க்கல்விக் கோட்பாடுகள் காலம் உள்ளளவும் நிலைத்திருக்கும்.

துணைவேந்தர் பொறுப்பிற்குப் பலர் வருவர், போவர். ஆனால், திட்பமும் மதிநுட்பமும் மனிதமும் நிறைந்த பேராசிரியப் பெருந்தகை முனைவர் ச. முத்துக்குமரனார் போல்வரே அப்பொறுப்பிற்குப் பெருமை சேர்ப்பதுடன், வரலாற்றிலும் விடிவிளக்குகளாய் என்றென்றும் ஒளிர்கின்றனர். நெஞ்சில் நிறைந்த அப்பெருந்தகையின் நோக்கலில், சுட்டலில், தழுவலில், தமிழில் தழைத்த, சமூகம் சூழ்ந்த பயனுறு பணிகள் வளர்ப்பதும் தொடர்வதும் அவரின் நெருக்கம் பெற்ற பேறுடையார் ஒவ்வொருவருக்கும் கடமையாகும். தமிழுக்காகவே வாழ்ந்த அப்பெருந்தகையின் மறைவு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திற்குப் பேரிழப்பாகும்.

கலைமாமணி விக்கிரமன்



இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு மாலைப் பொழுதில் அவரைச் சந்திக்கும் பேறுபெற்றேன். சிராப்பள்ளி அரிமா பட்டாபிராமன் விழா ஒன்றிற்காக அவர் திருவரங்கம் வந்திருந்தார். விழாவில் நானும் பங்கேற்றதால் சந்திக்கும் வாய்ப்பு கேட்காமலேயே கிடைத்தது. முதல் சந்திப்பு தான் என்றாலும், மலர்ந்த முகத்துடன் நட்பு மணக்கப் பேசினார். அவரது அந்தத் தழுவலான அன்பு என்னை ஈர்த்தது. எழுதப் பழகிக் கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே என் எழுத்தைக் கேட்டு வாங்கி அச்சாக்கிய அவர் பெருந்தன்மையே என் வளர்ச்சிக்கு முதன்மையான காரணம். 'நந்திபுரத்து நாயகி' வழி எனக்கு அறிமுகமாகியிருந்த

அவரது வரலாற்று உணர்வுகள் எவ்வளவு ஆழமானவை என்பதைக் காலநடை உணர்த்திற்று.

எழுத்தாளர் மன்றம், நூல் வெளியீட்டு விழா, சொல்லாற்றல் போட்டி எனப் பல நிகழ்வுகள் அவரைச் சிராப்பள்ளிக்கு வரவழைத்தன. வரும்போதெல்லாம் அவரை அன்போடு வரவேற்று விருந்திடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என் வாழ்வரசியிடம் கனிவோடு பேசுவார். தந்தை, தமையன், நண்பர், நெறியாளர் எனப் பல நிலைகளில் அவர் அன்பைப் பெற்று வளர்ந்தேன்.

எழுத்தாளர் நலன், இலக்கிய நிலை, அதன் மதிப்பியல் போக்குகள், இளைஞர் கொள்ள வேண்டிய எழுத்தார்வம் என அவர் சிந்தனை வட்டம் எப்போதும் எழுத்தைச் சுற்றியே இருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். அவ்வப்போது அவர் என்னில்லம் வந்தமையால் அவரைச் சந்திக்க வந்த கல்கிதாசன், கோவி. மணிசேகரன், தமிழினியன் எனப் பல எழுத்தாளர்களுடன் எனக்கு நட்பேற்பட்டது. அன்பு வட்டத்தைப் பயன் வளையமாகச் சுருக்கிக் கொள்ளத் தெரியாதவர் அவர். உலகத்தைப் போலவே பரந்து விரிந்தது அன்பு என்ற அவர் கண்ணோட்டமே அவரின் மாண்பு. அவருடைய இந்தப் பார்வை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் சட்டையைப் போலவே அவர் உள்ளமும் வெள்ளை. எதையும் மறைத்துக் கொள்ளத் தெரியாவதர்; விரும்பாதவர்; அவரிடம் உரையாடும் காலங்களில் அவருடைய நேர்மைத் துணிவு கண்டு வியந்திருக்கிறேன். அதைக் கொள்ளவும் முயன்றிருக்கிறேன்.

அருமொழிவர்மரின் கைவண்ணமான இராஜராஜீசுவரத்தை விரிவாகப் பார்க்க நானும் அவரும் நளினியும் ஒரு முறை சென்றோம். சோழர் காலச் சுவரோவியங்கள் அவரைப் பெரிதும் ஈர்த்தன. 'பலமுறை பார்த்திருக்கிறேன். என்றாலும், ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் புதிய சிந்தனைகள் ஊற்றெடுப்பது வியப்பாக உள்ளது. புதுப்பித்துக் கொள்ளும் இந்தப் பாங்குதான் வரலாற்றின் பெருமையோ' என்று கிளர்ந்தார். எத்தனை எளிதாக வரலாற்றை வரையறுத்துவிட்டார் என்று அன்று முழுவதும் நளினியிடம் பேசிப் பேசிப் பூரித்

தேன். வரலாறு தன்னை நெருங்குபவர்களையும் புதுப்பிக்கிறது. தானும் கால அலைகளில் புதுப் பொலிவு பெற்று மிளிர்கிறது; வளர்கிறது. இந்த அதிசய உண்மையை வரலாற்றைக் காதலிப் பவர்கள் ஒவ்வொருவரும் அநுபவித்து மகிழலாம்.

அவர் மீது எனக்கிருந்த அன்பை அவருடைய கட்டுரை ஒன்று பத்திமையாக்கியது. மாமல்லபுரப் பயணம் பற்றிய அந்தக் கட்டுரையில், செங்கற்பட்டிலிருந்து பல்லவ உளிவண் ணங்களைக் காண்பதற்காகவே கால்நடையாக அவர் மல்லை சென்று வந்த வரலாறு படித்தேன். அந்தக் கட்டுரையின் ஒவ்வொரு வரியும் எனக்கு வலித்தது. வரலாற்றிலும் கலை யிலும் எத்தனை ஈடுபாடு இருந்திருந்தால் சரியான சாலை களோ, தங்குமிடங்களோ, உணவகங்களோ, வேறெந்த வசதி வாய்ப்புகளோ அறவே அற்ற காலக்கட்டத்தில் தம் பாதங்கள் நோக அந்தப் புழுதிச் சாலையில் அவர் பயணப்பட்டிருப்பார். கட்டுரையை முடித்தபோது என் கண்கள் குளமாகியிருந்தன. கலைக்காக வலிக்க வலிக்க பயணப்பட்ட அந்தக் கால்களும் காணவேண்டும் என்ற தவிப்பையே தெம்பாக்கிப் பயணப் பட்ட அவர் உள்ளமும் வணங்கத்தக்கன.

எந்த எழுத்தாளரையும் எல்லோரும் போற்றுவதில்லை. எல்லோரையும் ஈர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு யாரும் எழுதுவதும் இல்லை. என்றாலும், பெரும்பாலோர் விரும்பும் எழுத்தும் பழகும் பாங்கியலும் கொண்டவர்கள் சிலர் உண்டு. அத்தகையோருள் முதன்மையில் வைக்கத்தக்கவர் அவர். யாரையும் தழுவிச் செல்லும் அன்புள்ளம் அவருக்கு. அதனாலேயே அவர் கொள்கையில்லாதவர் என்று பொரு ளல்ல. தழுவுதல் தகைமையது என்று எண்ணுபவர். பொய்மை கண்டு பொங்குவார் என்றாலும், வெகுளி அவருக்கு உறவன்று. கனன்று கொண்டிருக்கும் கரியின் நெருப்பல்ல அவர் வேகம். கற்பூரமாய்ப் பொங்கினாலும் கற்பூரமாகவே அன்புக்குக் கரைந்துவிடும் நெகிழ்வு அவரிடம் மட்டுமே கண்டிருக்கிறேன்.

அவர் எழுத்தையும் அநுபவத்தையும் பண்பையும் தமிழ் நாடு இன்னமும் சரியான தளங்களில் அணுகவேயில்லை. சுற்றியிருப்பவர்கள் கூட அவர் அன்பில் திளைத்தார்களே

தவிர, அந்த அன்புள்ளத்தை உரியவாறு மக்களுக்கு அடை யாளப்படுத்த முயலவில்லை. விருதுகளை அவர் நாடவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அந்த மனிதரைப் பெருமைப்படுத்த விருதுகள் தவறியதும், உரியவர் கள் மறந்ததும். ஆனால், இளம் எழுத்தாளர்களை ஊக்கு விக்கவும் வளர்க்கவும் தொடர்ந்து எழுதவைக்கவும் அவர் பலப்பல விருதுகள் தோற்றுவித்தார்.


வரலாறு ஆய்விதழை நேசித்தும் வாசித்தும் வாழ்ந்த அப்பெருந்தகையின் மறைவு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திற்குப் பேரிழப்பாகும்.

திரு. நெல்லை நெடுமாறன்




வரலாறு ஆய்விதழின் வாழ்நாள் உறுப்பினரும் டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையத் தின்பால் ஆழ்ந்த பற்றுடையவரு மான திரு. நெல்லை நெடுமாறன் மறைவு குறித்து ஆழ வருந்துகிறோம். வரலாற்றாய்வில் அளப்பரிய ஆர்வத் துடன் ஈடுபட்டு, நாடாள்வார் பற்றிய கல்வெட்டுகளைத் தேடிப் பெறுவ தில் இணையற்ற முனைப்புடன் செயற்பட்ட நெடுமாறன் மைய ஆய்வுகளில் மிகுந்த மதிப்புடையவர். சிறந்த இதழியலாளராக வும் அரசியல் அமைப்புகளில் பற்றுடையவராகவும் விளங்கிய திரு நெடுமாறன் இந்தியக் கல்வெட்டாய்வுக் கழகத்தின் புரவலராவார். உற்றுழி உதவும் நண்பராகவும் வேண்டுவார்க்கு வேண்டுவன செய்யும் அருள் உள்ளத்தவராகவும் விளங்கிய திரு. நெடுமாறனை இழந்திருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் வரலாறு ஆய்விதழ் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது

- இரா. கலைக்கோவன்.




வெள்ளறைக் குடைவரை



முகப்பு - கிழக்குச் சரிவுச் சுவர்

காவலர் சிற்பம்




வெள்ளறைக் குடைவரையின் மேற்குக் கருவறை




வெள்ளறைக் குடைவரையின் கிழக்குக் கருவறை



திருஎறும்பியூர்
எறும்பீசுவரம்




தஞ்சாவூர்
இராஜராஜீசுவரம்




திருவையாறு
வடகயிலாயம்




திருஎறும்பியூர்
எறும்பீசுவரம்



தருமபுரி மல்லிகார்ச்சுனர்



கண்டராதித்தம்



துடையூர் விஷமங்களேசுவரர்




கிராமம் சிவன்கோயில்


தவத்துறைப் பெருமண்டபத் தூண்களின் படவெடுப்பு



தவத்துறை ஐயபொழில் கல்வெட்டு




குலாலகோட்டையூர்க் குடைவரை



நகரி மாடக்கோயில்



காஞ்சிபுரம் கயிலாசநாதர் ஊர்த்வஜாநு



திருப்பட்டூர்க் கயிலாசநாதர் ஊர்த்வஜாநு



மழபாடி ஊர்த்வஜானு




மழபாடி தண்டபட்சம்



திருச்செந்துறை
ஊர்த்வஜானு



சீனிவாசநல்லூர்
ஊர்த்வஜானு



திருப்பழனம் தண்டபட்சம்



புள்ளமங்கை தண்டபட்சம்



திருக்கோடிக்கா ஊர்த்வஜானு



திருவரங்கம் ஊர்த்வஜானு



ஆனந்ததாண்டவபுரம் ஊர்த்வஜாநு



திருவையாறு ஊர்த்வஜாநு



திருச்சென்னம்பூண்டி ஊர்த்வஜானு



கீழையூர் ஊர்த்வஜானு



திருப்பேர்நகர் மாடக்கோயில்



வரலாறு வெள்ளி இதழ் வெளியீட்டு விழா



எஸ்.ஆர். வி. மேனிலைப்பள்ளியின் தமிழறிஞர் விருது



ஆசிரியர்களுக்குக் களக்கல்வி




சிறந்த மருத்துவருக்கான மருத்துவர் நாள் விருது

திருமலைச்சாரல் மலர்வில்


கீழ்வாலை,
திருவெடியம்
பாறைஓவியங்கள்.
பெருமுக்கல்,
வட்டக்கல்
பாறைகுறியீடுகள்.
கரூர்
முத்திரைக்காசு

கொடுமணல்
குறியீடுகள்
இந்தியக்குறியீடுகள்




சிந்துவெளி குறியீடுகள் ஒத்த
குறியீடுகள் உள்ள செம்பியன்கண்டியூர்
கற்கருவி, கொடுமணல் பானை ஓடு, கீழ்வாலை
பாறை ஓவியம் மற்றும் பிற குறியீட்டு ஓடுகள்


குறியீடுகள்



1. மேட்டுப்பட்டி 2. சித்தண்ணவாசல் 3. முதலைக்குளம் 4. ஐம்பை







அரச்சலூர்,
பிள்ளையார்பட்டி,
எடக்கல்,
அம்மன்கோயில்பட்டி
வட்டெழுத்துக்
கல்வெட்டுகளும்
அகரம்சேரி
கலப்பு எழுத்துக்
கல்வெட்டும்

மண்டகப்பட்டு, தளவானூர், மாமல்லபுரம் கல்வெட்டுகளில் சமஸ்கிருத எல்லோகங்கள் கிரந்த எழுத்தில்

சாத்தூர் பாடல் கல்வெட்டு வட்டெழுத்தில்

திருவெள்ளாறை செந்தலை பாடல் கல்வெட்டுகள் தமிழ் எழுத்தில்

வாயில் நிலை, கோபுரங்கள், செக்கு மாறும் சங்கில் காணப்படும் கல்வெட்டுக்களும் சித்திரமேழி விண்ணகரம், திருநாமம் குளம், அதிபயான் பெருவழி அடையாளக் கற்களும்

விற்பனைக்கு

வரலாறு	7, 8, (ஒவ்வோர் இதழும்)	ரூ. 150
வரலாறு	26	ரூ. 400

இரா. கலைக்கோவனின்

திரும்பிப்பார்க்கிறோம் - தொகுதிகள் - 4, 6, 8, 9, 10 (ஒவ்வொரு தொகுதியும்)	ரூ 100
வாருணிக்கு எழுதிய வரலாற்று மடல்கள்	ரூ. 200
சோழர் கால ஆடற்கலை	ரூ. 225
சங்கச் சாரல்	ரூ. 250
இருண்டகாலமா?	ரூ. 250

மு. நளினியின்

பாதைகளைத் தேடிய பயணங்கள்	ரூ. 150

மு. நளினி, இரா. கலைக்கோவனின்

பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்	ரூ. 120
வலஞ்சுழி வாணர்	ரூ. 120
கோயில்களை நோக்கி . . .	ரூ. 120
தென்மாவட்டக் குடைவரைகள்	ரூ. 200
புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள்	ரூ. 300
மாமல்லபுரம் குடைவரைகள்	ரூ. 250
பல்லவர் பாண்டியர் அதியர் குடைவரைகள்	ரூ. 300
மகேந்திரர் குடைவரைகள்	ரூ. 225
தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள்	ரூ. 200
தவத்துறையும் கற்குடியும்	ரூ. 200
வாணன் வந்து வழி தந்து . . .	ரூ. 400

கோ. வேணிதேவி, இரா. கலைக்கோவனின்

மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள்	ரூ. 300

நூற்றாண்டு, பணிப்பாராட்டு நூல்கள்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு மலர்	ரூ. 200
கலை 66 (டாக்டர் இரா கலைக்கோவன் பணிப்பாராட்டு நூல்)	ரூ. 500

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
C87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி -18.
kalaikkovanr@yahoo.com தொடர்புக்கு: 0431-2740302

திரும்பிப்பார்க்கிறோம்

(பத்தாம் தொகுதி)

இரா. கலைக்கோவன்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
சி 87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர் மேற்கு,
திருச்சிராப்பள்ளி - 620 018

வரலாற்றைத் தேடிய

வாழ்க்கைப் பாதையின்

இந்த வனப்பான பக்கங்கள்

தமிழை முறைப்படி பயில்வித்த

என் அன்பிற்குரிய ஆசான்

புலவர் மாமணி கு. அரங்கசாமியின்

இணையற்ற எளிமைக்கும்

ஈடற்ற பேரன்பிற்கும்

இனிமை நிறை பண்புகளுக்கும்

திரும்பிப்பார்க்கிறோம் – 10

திருநெல்வேலி மாவட்டம் தாருகாபுரத்தையடுத்த சிற்றூரான மலையடிக்குறிச்சியின் வடபுறக் குன்றின் கீழ்ப்பகுதிப் பாறையில் அகழப்பட்டிருக்கும் குடைவரை பற்றிய கட்டுரையைத் திட்டமிடலுடன் 2007 டிசம்பர் பிறந்தது. பேராசிரியர்கள் வேணி, கீதாவுடன் நானும் நளினி, அகிலா ஆகியோரும் 90களில் அக்குடைவரைக்குச் சிலமுறை சென்று, காலை தொடங்கி மாலைவரை அவ்வளாகத்தே உழைத்திருக்கிறோம். அங்குச் சிதறியிருக்கும் கல்வெட்டுத் துணுக்குகளைப் படியெடுத்து ஒருங்கிணைக்க நளினியும் அகிலாவும் பட்ட பாடுகளை நினைத்த படியே கட்டுரையைத் தொடங்கினேன். தமிழ்நாட்டுக் குடைவரைகள் வரிசையில் நான்காம் தொகுதியை 'தென்மாவட்டக் குடைவரைகள்' என்ற தலைப்பில் வெளிக்கொணர எண்ணியதால், அந்நூலில் இணைக்கவே மலையடிக்குறிச்சி கட்டுரையாகத் தொடங்கியது.

கருவறை, முகமண்டபம், பெருமண்டபம் என அமைந்துள்ள அக்குடைவரை முற்பாண்டியர் கைவண்ணம். பாண்டிய மன்னர் மாறன்சேந்தன் பணிக்க, பாண்டி மங்கலவதி அரசர் சேவூர்க் கிழார் சாத்தன் ஏறன் பொ. கா. 637இல் உருவாக்கிய கல் திருக்கோயில் அது. குடைவரையின் குறிப்பிடத்தக்க சிறப்புகளாக முகப்புத்தூண்களின் பதக்கங்களில் காட்டப்பட்டிருக்கும் சிறிய அளவிலான தெய்வவடிவங்களையும் கருவறை வாயிலுக்கு மேலே அமைந்துள்ள மகரதோரணத்தையும் சுட்டலாம். முற்பாண்டியர் உருவாக்கங்களில் பல்லவர் பணி போல் அழகூட்டல் நிறைந்த, பரந்து விரிந்த மகரதோரணங்கள் அமையவில்லை. என்றாலும், கிடைக்கும் மிகச் சில மகரதோரணங்கள் குறிப்பிடும்படியாகவே கவனத்தைக் கவரும் வகையில் வடிவெடுத்துள்ளன. இத்தோரணங்களின் வளர்ச்சி, செழிப்புக் குறித்து விரிவான ஆய்வுகள் நிகழ்த்துதல், பொ. கா. 6-9ஆம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் நிலவிய கலைச் சிந்தனைகளை அடையாளப்படுத்த உதவும் என்பதை நளினியிடமும் அகிலாவிடமும் தெரிவித்து, அத்தகு ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ளவேண்டும் என்று நெறிப்படுத்தினேன்.

'புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள்' என்ற தலைப் பிலான எங்கள் நூலுக்காகவும் திருமதி சுமிதாவின் முனைவர் பட்ட ஆய்வேட்டிற்காகவும் நகரத்தார்மலையில் உள்ள பழி யிலி ஈசுவரம் குடைவரை பற்றிய கலந்துரை தொடங்கியது. சுமிதா ஆர்வம் நிறைந்தவர் என்பதால் கருத்துக்களை உன்னிப் பாகக் கேட்பார். உரையாடலில் கேள்விகள் இருக்கும். பழியிலி ஈசுவரத்தின் அமைப்பு, அங்குள்ள கல்வெட்டுகள் குறித்த வினா-விடைகள் என நானும் நளினியும் அக்குடைவரை பற்றி விரிவான அறிமுகம் தந்தோம். களத்திற்குச் செல்லும்போது குடைவரையை அணுகும் முறைகள் பற்றியும் பேசினோம்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் இணை ஆணையர் திரு. இராஜாவிடமிருந்து வந்த மடல், அக்கோயிலில் அமைய உள்ள ஒலி, ஒளிக்காட்சிக்கான உரைக்கோவையைத் தயாரித் துத் தருமாறு கேட்டிருந்தது. தென்மாவட்டக் குடைவரைகள் நூலுக்கான பணியைத் தொடங்கியிருந்தமையாலும் வரலாறு ஆய்விதழின் தயாரிப்புப் பணிகள் இருந்தமையாலும் அவர் வேண்டுகோளை ஏற்கத் தயக்கமாக இருந்தது. மதுரை என் பள்ளிப்பருவ வாழ்க்கையை வளமாக்கிய ஊர். மூன்றாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரை அங்குள்ள தூய வளனார் உயர்நிலைப்பள்ளியில்தான் பயின்றேன். தந்தையார் தியாக ராயர் கல்லூரியிலும் அன்னையார் பாத்திமா கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியர்களாக விளங்கினர். மஞ்சனக்காரத் தெரு வில் வீடு. திருமலைநாயக்கர் அரண்மனையைச் சுற்றியிருந்த பகுதிகள்தான் என் விளையாட்டரங்கம்.

மீனாட்சியம்மன் கோயில் என் இளம் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஓர் இடமாகத் திகழ்ந்தது. பொற்றாமரைக் குளப் படிநடையும் வளாகத்திருந்த திருவள்ளுவர் மன்றமும் என் நினைவேடுகளில் அழுந்தப் பதிவாகியுள்ளன. எத்தனை நாட்கள், எத்தனை விதமான காட்சிகள், மறக்கக்கூடிய வாழ்க்கையா அது! கோயில் வளாகத்தை முழுமையும் பார்க்கா மல் அங்குள்ள கல்வெட்டுகளை அறியாமல், சிற்பத்தொகுப்பு களை ஆராயாமல் உரைக்கோவை எழுதுவது கடினம் என்ப தாலேயே தயங்கினேன். பலமுறை செல்லவேண்டியிருக்கும் என்ற எண்ணமும் என் தயக்கத்திற்குக் காரணம். என்

இளவலும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான அரசுவிடம் இது பற்றிப் பேசியபோது அவர் என் தயக்கத்தை உடைத்தெறிந்தார். 'வாழ்க்கையில் இது ஓர் அரிய வாய்ப்பு, நாம் வாழ்ந்த மண்ணில் புகழ்பெற்று விளங்கும் ஒரு கோயிலை ஆய்வு செய்யக் கிடைத்திருக்கும் வாய்ப்பு, எக்காரணம் கொண்டும் இதை விடுதல் வேண்டா. ஒப்புக்கொண்டு சிறக்க முடித்துக் கொடுங்கள்' என்ற அவரது அறிவுறுத்தல் என் குழப்பத்தை நீக்கியது. அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி மதுரை மாவட்டக் கோயில்களை ஆய்வுசெய்ய உறுதிகொண்டேன். சுந்தரேசுவரரே மதுரைக்கு அழைப்பதாக எண்ணி இப்பணி மேற்கொள்வோம் என்று நளினியும் ஊக்கினார். மீனாட்சியம்மன் கோயில் இணை ஆணையருக்கு இசைவு மடல் அனுப்பினேன்.

டிசம்பர் 3 அன்று என்னைச் சந்தித்த இந்தியத் தொல்லியல்துறையின் கல்வெட்டுப் பிரிவு அலுவலக நண்பர் முனைவர் சூ. சுவாமிநாதன் சிராப்பள்ளியில் தம் துறை அமைக்க விருந்த தொல்லியல் கண்காட்சித் தொடக்க விழாவில் உரை நிகழ்த்த வேண்டினார். அவர் அன்பு கருதி உடன் ஒப்பினேன். சுவாமிநாதன் என் இனிய தொல்லியல்துறை நண்பர்களுள் ஒருவர். நாங்கள் புதிதாகக் கண்டறிந்த கல்வெட்டுகளை எல்லாம் தொல்லியல்துறைக்காகப் படியெடுத்துப் பதிவுசெய்தவர். துறைசார்ந்த எத்தகு உதவி என்றாலும் தயங்காமல் செய்பவர். பல ஆய்வுகளின்போது ஏற்கனவே படியெடுக்கப்பட்ட கல்வெட்டுப் பாடங்களின் படிகளைத் தேவைக்கேற்பத் தந்து உதவியவர். அவரோடு பங்கேற்கும் நிகழ்வாக அக்கண்காட்சி அமைந்ததில் மிகவும் மகிழ்ந்தேன்.

சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள பைஞ்ஞீலிக் கோயில், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையில் கல்வெட்டுப் பட்டயப் படிப்புப் பயின்றபோது, தம் ஆய்வேட்டிற்காக நளினி ஆய்வு செய்த வளாகம் அங்குள்ள குடைவரை சிராப்பள்ளி மாவட்டத்தின் ஐந்து குடைவரைகளுள் ஒன்று. அளவில் சிறிய தென்றாலும், பெருமைக்குரிய சோமாஸ்கந்தர் சிற்பத்தைக் கொண்டிருக்கும் குடைவரை அது. நூலாக்கத்திற்காகப் பைஞ்ஞீலிக் குடைவரையை மீளாய்வு செய்யக் கருதினோம்.

நளினி அங்கு ஆய்வுசெய்தபோது உதவியாக இருந்த திரு. ஆறு முகம் ஓய்வுபெற்ற நிலையில் அவரது மகன் திரு. சாமிநாதன் அங்குப் பணியாற்றுவது அறிந்து அவருடன் பேசினேன். துணையிருப்பதாக உறுதியளித்தார்.

டிசம்பர் 9 அக்கோயிலுக்குச் சென்றோம். கோயில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருந்தது. 1990இல் பார்த்த குடை வரையின் முன் இப்போது 'புதிய கட்டுமானங்கள் விளங்கின. சுவாமிநாதன் உடனிருந்தும் சோமாஸ்கந்தர் சிற்பத்தைப் பார்க்க மட்டுமே முடிந்தது. ஆராய்வதற்கு அனுமதி கிடைக்க வில்லை. சந்தனப்பூச்சுகளாலும் தொடர் முழுக்காட்டல்களா லும் அச்சிற்பத்தொகுதி பார்க்கமுடியாத கோலத்தில் இருந்தது. கழுவித் தூய்மை செய்தாலொழிய அச்சிற்பத்தை உரியவாறு அணுகமுடியாது என்று கருதியதால், இனிய நண்பரும் துணை ஆணையருமான திரு இலட்சுமணனுக்குத் தொலைபேசி னேன். என் வேண்டுகோளை ஏற்ற அவர், கோயில் நிருவாக அலுவலருக்குப் பேசி ஆய்வுக்கு அனுமதி பெற்றளித்தார். அதன் பிறகே ஆய்வு இயலுவதானது. குடைவரையில் அளவுகள் எடுத்துக்கொண்டு கோபுரச் சிற்பங்களை ஆய்வுசெய்து குறிப்பு கள் எடுத்தோம்.

சாமிநாதனுடன் அவர் இல்லம் சென்று நலக்குறைவாக இருந்த அவரது தந்தையாரைப் பார்த்து நலம் விசாரித்துத் திரும்பினோம். தமிழ்நாட்டுக் கோயில்களில் ஆய்வுசெய்வது நாளும் கடினமாகி வரும் நிலை வருத்தமளித்தது. இருபதாண்டு களுக்கு முன் இருந்த நிலையிலிருந்து அக்குடைவரை முற்றி லும் மாறி இறைவடிவம் சேதப்பட்டிருப்பது உள்ளத்தை வருத்தியது. பொருளொன்றே குறியாகப் பொய்க்கதைகளில் சிக்கிக் கோயில்களும் பழஞ் சிற்பங்களும் பாழாகிக் கொண் டிருப்பதை எப்படி நிறுத்தப் போகிறோம் என உள்ளம் குமைந்தது. தம் கோயில்களை அந்த இறைவன்தான் அழிவி லிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

டிசம்பர் 11 மதிய அஞ்சலில் பாடுகளின் கனிவாய் உருவா கிய 'மதுரை மாவட்டக் குடைவரைகள்' நூலின் அச்சு மெய்ப் பும் அட்டைப்படமும் வந்தன. பலமுறை சென்னை அலமு பதிப்பகத்தாரோடு கலந்துரையாடி வடிவமைத்த அவ்வட்டை

எங்கள் எண்ணம் போல அமைந்திருந்தமை மகிழ்வளித்தது. பரங்குன்றம் குடைவரையின் இருட்டுக் கொட்டகை இராவணன் முன் அட்டையை அலங்கரிக்க, கயிலை மலையசைத்த இராவணனை எதிர்க்கும் பூதப்படை பின் அட்டையில் பொலிந்தது. நான் அறிந்தவரையில் இக்குடைவரைச் சிற்பங்கள் வெளியாவது அதுவே முதல் முறை இச்சிற்பத்தொகுதியை வெளிப்படுத்தத் துணைநின்ற அறநிலையத்துறையின் இணை ஆணையர் திரு. க. இராஜநாயகம் நினைவில் நிறைந்தார்.

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறைச் செயலர் திரு. இறையன்பு சுற்றுலாத்துறை வெளியிட்டுள்ள பல ஊர்களைப் பற்றிய ஆங்கில அறிக்கைகளைத் தமிழ்ப்படுத்தித் தருமாறு கேட்டிருந்தார். அப்பணியைச் செய்ததுடன், ஊர்களைப் பற்றிய தகுதி சான்ற வரலாற்றுத் தரவுகளையும் இணைத்தளித்தேன். டிசம்பர் 15 மாலை சென்னை கன்னிமாரா நூலகத்தில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் நினைவுச் சொற்பொழிவை வழங்குமாறு பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு. குருநாதன் கேட்டிருந்தார். அதற்காகச் சென்னை சென்றபோது தாம்பரம் இரயில்நிலையத்தில் இறங்கி அகிலா இல்லம் சென்றேன். மதிய உணவும் ஓய்வும் அங்கு அமைந்தன.

மாலை, நிகழ்ச்சிக்குச் சென்றபோது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, பேராசிரியர் ச. முத்துக்குமரன் ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்பமைந்தது. அரசுவும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். 'ஞால வெளியில் ஒரு காலநடை' என்ற தலைப்பில் இராசமாணிக்கனாரின் ஆய்வு வாழ்க்கையை வரலாற்று வரைவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அவையோருக்கு எடுத்துரைத்தேன். ஏறத்தாழ ஒரு மணிநேரம் அமைந்த அப்பொழிவு உரிய வரவேற்பைப் பெற்றது. இரவு அரசுவுடன் பயனுள்ள உரையாடலில் முடிந்தது.

டிசம்பர் 16 காலை அகிலாவுடன் மாமல்லபுரம் ஒருகல் தளிகள் ஆய்வு நிகழ்ந்தது. பல்லவர் மண்ணின் இணையற்ற அப்படைப்புகளை முழுமையாக ஆய்ந்து ஒரு நூலாக்க வேண்டும் என்ற என் நெடுங்கால எண்ணம் அன்றைக்கு வடிவம் கொள்ளத் தொடங்கியது. என்னுடன் இணைந்து அந்த ஆய்வை மேற்கொள்ள அகிலா மகிழ்வுடன் முன்வந்தார்.

அவரது உடனிருப்பு எப்போதுமே என்னுள் மிகுந்த ஆற்றலை உண்டாக்கும். இந்தியத் தொல்லியல்துறைப் பராமரிப்பு அலுவலர் திரு. ஜெயகரனின் அனுமதியுடன் உதவியாளர் திரு. இராமலிங்கம் துணையிருக்க, அருச்சுனரதத்தில் ஆய்வு தொடங்கியது. வெயில் இருந்தபோதும் டிசம்பர் மாதம் என்பதால் அதிகத் துன்பமில்லை.

அருச்சுனரதம் இருதளத் தளி. முதல் தளம் போலவே இரண்டாம் தளமும் சிற்பங்கள் கொண்ட தளி. பகல் முழுவதும் அருச்சுனரத ஆய்வே நேரத்தைக் கொண்டது. மதிய உணவுக்குப் பிறகு யாளிமண்டபத்தில் ஆய்வு மேற்கொண்டோம். பல்லவ மண்ணுக்கே உரிய அற்புதப் படைப்புகளில் யாளி மண்டபத்திற்குத் தனி இடமுண்டு. மாமல்லபுரத்தில் அது போல் ஏழு சிற்பப்பாறைகள் உள்ளன. பார்க்குந்தோறும் வியப்பூட்டும் அந்தக் கலைவடிவங்கள் தமிழ்நாட்டின் வேறு பகுதிகளில் பார்க்கமுடியாதவை. யாளிமண்டபம் குறித்துத் தனிக் கட்டுரை எழுதக் கருதியிருந்தமையால் அதன் அனைத்துப் பகுதிகளிலும் ஆய்வுசெய்து குறிப்பெடுத்தோம். மாலை மயங்கிய தால் அகிலா இல்லம் சென்று உணவருந்தி ஊர் திரும்பினேன்.

வரலாறு 17ஆம் தொகுதிக்கான பணிகள் முடிவுற்றன. நளினியின் உழைப்புத் தொகுதியைச் சிறக்க வடிவமைத்திருந்தது. அட்டை, ஒளிப்படங்கள் முடிவுசெய்த நிலையில் இதழை அச்சிடுவதற்காக நண்பர் ஞானசேகரனிடம் ஒப்புவித்தோம். 30 ஞாயிறன்று சுமிதா, அவர் கணவர் மூர்த்தி, நான், நளினி நால்வரும் மலையடிப்படிக் குடைவரைகள் ஆய்வுக்காகச் சென்ற போது விசலூர்க் கோயிலைப் பார்வையிட்டோம். சுமிதா அந்தக் கோயிலை முதன்முறையாகப் பார்ப்பதால் கோயிலை அவருக்கு அறிமுகப்படுத்தினேன். நளினி கல்வெட்டுப் படிப்பில் மூழ்கினார். கோயிலிலிருந்த சேட்டைத்தேவியின் சிற்பம் அவ்வழிபாடு பற்றிய உரையாடல்களுக்கு வித்திட்டது.

11 மணியளவில் மலையடிப்பட்டி அடைந்து சிவபெருமான் குடைவரையில் ஆய்வு தொடங்கினோம். குடைவரைச் சுவர்களின் சிற்பக்காட்சிகள் சுமிதாவைக் கவர்ந்தன. எழுவர் அன்னையர் சிற்பங்களையும் முருகன், கொற்றவை, சங்கரநாராயணர் சிற்பங்களையும் கைவிளக்குகளின் ஒளியில் நன்கு

ஆய்ந்து, ஐயத்திற்கிடமற்ற நிலையில் கட்டுரைக் குறிப்புகளை நேர்செய்தோம். சுமிதா குடைவரைக் கட்டமைவை விளங்கிக் கொள்ளும் முயற்சியில் முனைந்தார். குடைவரையின் புறத்தே இருந்து நளினி கண்டறிந்த கல்வெட்டுகளின் பாடங்களைச் சரிபார்த்தோம். மதிய உணவிற்குப் பிறகு ஒளிபதி விஷ்ணுகிருகம் ஆய்வுக்காளானது. சிற்பங்களின் எண்ணிக்கை அங்கு மிகுதியாக இருந்தமையால் மாலைவரை ஆய்வுசெய்து சமணப் படுக்கைகள், அமலிக் கல்வெட்டுள்ள பாறைத்தளம் பார்த்துத் திரும்பினோம்.

2008 ஜனவரி 3 அன்று இந்தியத் தொல்லியல்துறையின் கல்வெட்டுப் பிரிவு, சிராப்பள்ளித் தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரியில் கல்வெட்டுக் கண்காட்சியைத் தொடங்கியது. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அந்தோணி குருசுவின் முயற்சியால் கல்லூரி நிருவாகம் அந்நிகழ்வை ஏற்றுப் போற்றியது. கண்காட்சியைத் திறந்து வைக்கும் வாய்ப்பை நண்பர் சுவாமிநாதன் எனக்களித்திருந்தார். அவர்கள் துறையின் தலைவரும் திருவாளர்கள் கருப்பையா, பன்னீர்செல்வம் ஆகியோரும் உடனிருந்தனர். தொடக்கவிழா சிறப்பாக அமைந்தது. நண்பர் சுவாமிநாதனுக்காக நான் கொண்ட முயற்சி பயனுற அமைந்ததில் மகிழ்ந்தேன். தமிழ்த்துறை, கல்வெட்டுத்துறை நண்பர்களைப் பாராட்டி, மாணவர்கள் அக்கண்காட்சியைக் கண்டு பயன்பெறச் செய்திட வேண்டி விடைபெற்றேன்.

6 ஞாயிறன்று, சென்னையில் திரு. சத்தியவேல்முருகன் தலைமையில் இயங்கும் சோமசுந்தரர் ஆகமத் தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி மன்றம் எனக்கும் நளினிக்கும் எங்கள் ஆய்வுப் பணிகளைப் பாராட்டித் தமிழாய்வுமணி விருது வழங்கும் விழா அமைத்திருந்தமையால் சென்னை சென்றேன். மதுரை மாவட்டக் குடைவரைகள் நூல் அச்சான நிலையில் அலமு பதிப்பகத்தார் நூற்படிகளை வழங்கினர். எண்ணம் போல நூல் வந்திருந்தமை மகிழ்வளித்தது. சைதாப்பேட்டையில் மாலை நடந்த விழாவில் அரசுவும் கலந்து கொண்டார். சத்தியவேல் முருகன் அன்புடன் வரவேற்று அனைவருக்கும் அறிமுகம் செய்தார். அறிஞர் பலர் கலந்துகொண்ட அவ்விழாவில் எங்கள் பணிகள் தக்கவாறு அறிமுகம் செய்யப்பட்ட நிலையில் எனக்கும் நளினிக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

சிவகங்கை மாவட்டம் திருக்கோளக்குடிக் கோயிலைப் பார்வையிட்ட திரு. வேதாசலம் அங்குள்ள மலைப்பாறை ஒன்றின்மீதிருந்து எங்களால் கண்டறியப்பட்ட 'ஸ்ரீபதப்பிலீசு வரம்' கல்வெட்டின் இடத்தை அறிய விழைந்து தொலைப் பேசினார். அவ்விடத்தை அவருக்கு அடையாளப்படுத்திய துடன், அரளிப்பட்டிக் குடைவரை இலிங்கப் பிள்ளையாரைப் பற்றியும் தெரிவித்தேன். இந்தியத் தொல்லியல்துறையினர் சிராப்பள்ளி வந்திருந்த சென்னை வட்டக் கண்காணிப்பாளர் திருமதி சத்யபாமா என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித் தமையால், அலுவலகத்தில் அவரைக் கண்டு உரையாடி, மதுரை மாவட்டக் குடைவரைகள் நூலையளித்தேன்.

ஜனவரி 26இல் சிராப்பள்ளியில் இந்தியத் தொல்லியல் துறையின் சார்பில் தொல்லியல் விளக்க மையம் அமைக்க விருப்பதாகத் தெரிவித்த சத்யபாமா அந்நிகழ்ச்சியில் என்னைப் பங்கேற்குமாறு கேட்க, இசைந்தேன். 24 அன்று தஞ்சாவூர்ப் பிரிவுப் பராமரிப்பு அலுவலர் திரு. சரவணன் அழைப்பிதழ் தந்தார். சிராப்பள்ளிக் கோட்டையின் முதன்மைக் காவல் வாயிலில் நிகழ்வு அமைந்தது. இந்தியத் தொல்லியல்துறை நண்பர்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆசிஷ்வச்சானி 'சிற்பப் பெருமை' எனத் தலைப்பிடப்பட்ட படஅறிக்கையை வெளி யிட நான் அதைப் பெற்றுக்கொண்டேன். மிகச் சுருக்கமான நிகழ்வாக அது அமைந்தபோதும், அன்றிலிருந்து சிராப்பள்ளி யில் தொல்லியல் அருங்காட்சியகம் செயற்படத் தொடங்கிய தில் மகிழ்ந்தேன்.

29, பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த்துறை நிகழ்த்திய செம்மொழிப் பயிலரங்கில் உரையாற்ற அழைத்திருந்தமையால், வழியில் தமிழ்ப் பல் கலைக்கழக ஆய்வு மாணவர்கள் கண்டறிந்திருந்த கூத்தம் பூண்டியான் வலசுக் குடைவரைகளைக் காணச் சென்றோம். குடைவரை அருகே குடியிருந்த திரு. கௌதமன் உதவியுடன் நிறைவடையா அக்குடைவரைகளை ஆய்வுசெய்தோம். மதியம் பொள்ளாச்சியில் பேராசிரியர் முனைவர் சிற்பி பாலசுப்பிர மணியன் முன்னிலையில், 'சங்க இலக்கியம் நல்கும் வரலாற்றுச்

சான்றுகள்' என்ற தலைப்பில் ஆய்வுரை அமைந்தது. பயிலரங் கில் மாணவர்களின் கலந்துரை பயனுடையதாக இருந்தது

ஐராவதி நூலுக்கான பணிகள் முழுவீச்சில் இயங்கின. முதல் பகுதியில் பேராசிரியர்கள் சம்பகலட்சுமி, கிருஷ்ண மூர்த்தி, இந்திராபார்த்தசாரதி, சுப்பராயலு, இராசவேலு, சாந்த லிங்கம், சண்முகம், இராசன், வேலுப்பிள்ளை, ரோமிலா தபார், துப்யான்ஸ்கி, ஹேரிபாஃக், மைக்கேல் லாக்வுட், அஸ்கோபர் போலா, கிரகோரிபொஸல் ஆகியோரின் 16 ஆங்கிலக் கட்டுரை கள் அமைந்தன. இரண்டாம் பகுதியில் அரசு, கலைக்கோவன், திருப்பூர் கிருஷ்ணன், அகிலா, ஆறுமுக சீதாராமன், நளினி, இராமதுரை, வேதாசலம் ஆகியோரின் தமிழ்க் கட்டுரைகள் இடம்பெற்றன. மூன்றாம் பகுதியில் ஐராவதம் பற்றிய குறிப்பு களும் அவர் ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பும் அவரது பழந்தமிழ்க் கல்வெட்டுகள் நூல் குறித்த சம்பகலட்சுமி, இராஜன் குருக்கள் ஆகியோரின் கருத்துரையும் அமைந்தன.

அப்பகுதியில் திரு. மகாதேவனின் ஆங்கிலக் கட்டுரைகள் 2ம் தமிழ்க் கட்டுரைகள் 2ம் இணைக்கக் கருதி உரிய கட்டுரைகளை அவரே தேர்ந்தெடுத்து வழங்கிடக் கேட்டோம். ஓரிரு வாரங்களில் கட்டுரைகள் வந்தன. மகாதேவனை நேர் முகம் கண்ட இராம் அவர் உள்ளத்தின் உரையாடலாக அதைக் கட்டுரையாக்கி அளித்தார்.

பணிப் பாராட்டு நூலின் இம்மூன்று இயல்களையும் உருவாக்குவதில் கோகுல், கமலக்கண்ணன், இராம் மூவரும் பெருந்துணையாயினர். அவர்தம் உழைப்பும் ஆர்வமும் ஈடு பாடுமே ஐராவதி உருவாகக் காரணமாக அமைந்தது. கட்டுரை களை முறைப்படுத்துவதிலும் மெய்ப்புத் திருத்துவதிலும் நளினியும் அகிலாவும் ஏறத்தாழ 6 திங்கள்கள் தங்கள் உழைப்பைத் தந்தனர். பழந்தமிழ்க் கல்வெட்டுகளுக்காகத் தம் வாழ்நாள் உழைப்பைத் தந்த இனிய மனிதர் மகாதேவனுக்குத் துறை சாராத ஒரு சக ஆய்வாளன் என்ற முறையில் இந்த நூலை உருவாக்கித் தருவதை என் கடமையாகக் கொண்டேன். இந்த அரிய வாய்ப்பை நீங்கள் ஏற்றுச் செய்யவேண்டும் என்று வேண்டியபோதும் தமிழகத் தொல்லியல் கழகம் அதைத் தவிர்த்துவிட்ட காரணத்தை இன்றுவரை அறியக்கூடவில்லை.

பேருழைப்பை மதிக்கும் பெருமித உணர்வு ஏனோ தமிழ் நாட்டில் அருகி வருகிறது.

பிப்ருவரி 3இல் மலையடிப்பட்டிக் குடைவரைகளையும் குன்றாண்டார்கோயில் வளாகத்தையும் சுமிதா இணையருடன் மீளாய்வு செய்தோம். மலையடிப்பட்டியில் திரு. மீனாட்சி சுந்தரமும் குன்றாண்டார்கோயிலில் திரு. முத்துக்கிருஷ்ணனும் துணையிருந்தனர். குன்றாண்டார்கோயில் பெரிய வளாகம். மூன்று குடைவரைகளும் ஓர் ஆடலரங்கமும் அவ்வளாகத்துள்ளன. நடுக்குடைவரை பெரிய அளவினதாக முற்றுப்பெற்ற நிலையில் அமைய, வல, இடக்குடைவரைகள் சிறிய அளவின வாய் நிறைவடையாதுள்ளன. நடுக்குடைவரையின் இடப்புறம் திருச்சுற்று அமைக்கக் கருதித் தொடங்கிய அகழ்வுப் பணி தொடக்க நிலையிலேயே ,கைவிடப்பட்டுள்ளது. இக்குடைவரையின் மிகப் பெருஞ் சிறப்பாக அதன் முகமண்டபச் சுவர்களிலுள்ள பிள்ளையார், சிவன்உமா இணையர் சிற்பங்களைக் குறிக்கலாம்.

தமிழ்நாட்டுக் குடைவரைகளில் வேறெங்கும் காணவியலாப் பேரளவினதாய் அமைந்துள்ள சிவன்உமா சிற்பத்தொகுதி ஊரகப் பின்னணியில் உருவாக்கப்பெற்ற மிக அரிய தொகுதியாகும் சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்தப் பின்னணியில் அமைந்த பைஞ்ஞீலி சோமாஸ்கந்தரையும் கீழ்க்குடைவரைக் கொற்றவையையும் ஒரு நிலையில் வைத்து ஆராய்வது கலை முறைகளில் தெளிவு காண உதவும் என்று சுமிதாவிடம் பேசினேன். அன்று முழுவதும் குடைவரைச் சிற்பங்களைப் பற்றிய பயனுள்ள உரையாடல்களில் காலம் சென்றது.

நளினியின் முதுகலை மாணவி ஆ. வித்யாவின் ஆய்வேட்டிற்காக நகரத்தார் மலை சென்றோம். நகரத்தார் மலைக் குடைவரைகளான பழியிலி ஈசுவரத்தையும் பதினெண்பூமி விண்ணகரையும் வித்யா ஆய்வுக்களங்களாகத் தேர்ந்திருந்தார். துடிப்பும் ஆர்வமும் உழைப்பும் நிறைந்த அப்பெண்ணின் கேள்விகள் நகரத்தார் மலைக் கோயில்களைப் பற்றிய பல சிந்தனைகளுக்கு வித்திட்டது. நகரத்தார் மலை இயற்கை வளம் சூழ்ந்த குறிஞ்சி நிலமாகும். பல குன்றுகளின் தொகுதியாக விளங்கும் அம்மலைப்பகுதியில் பல கோயில்கள் உள்ளன.

முத்தரையர்களின் கைவண்ணம் காணக் கல்வெட்டுச் சான்றுகளோடு குடைவரையும் கற்றளியும் காலத்தை வென்று நிற்கும் இடம் அது. பழியிலி ஈசுவரம் அளவில் சிறியதென்றாலும் பயனுள்ள கல்வெட்டுகளைக் கொண்டுள்ளது. பதினெண் பூமி விண்ணகர் வியப்பின் குறியீடாக முகமண்டபத்தில் ஏறத்தாழ ஒரே அமைப்பிலான விஷ்ணுவின் பன்னிரண்டு சிற்பங்களையும் கருவறையில் சிதைக்கப்பட்ட ஆவுடையாரையும் கொண்டுள்ளது. குடைவரையின் முகப்புப் பின்னாளில் மறுபணிக்கு ஆட்பட்டதோ எனக் கருதி அது குறித்துக் கலந்துரையாடினோம். கல்வெட்டுகளைப் படிக்க நளினியின் துணையுடன் வித்யா முயன்றமை மகிழ்வளித்தது.

பேராசிரியர் சோ. சத்தியசீலனை நிருவாக அறங்காவலராகக் கொண்டு சிராப்பள்ளியில் அமைக்கப்பெற்ற தமிழ்த் தொன்மை மையத்தின் வழிகாட்டும் குழுவில் நான் இடம்பெற வேண்டும் எனக் கேட்டுப் பேராசிரியர் சத்தியசீலன் எழுதியிருந்தார். பணிச்சுமைகளின் காரணமாகப் புதிய பொறுப்புகளில் பங்கேற்பதில்லை என எடுத்திருந்த முடிவினை அவருக்குத் தெரிவித்தேன். இவ்வமைப்புத் தொடர்ந்து செயற்பட்டதா என்பதை அறியக்கூடவில்லை.

தூத்துக்குடி நண்பர் திரு. ஈஸ்டர்சன் எங்கள்பால் மிகுந்த அன்பும் எங்கள் ஆய்வுகளில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டவர். வரலாறு 17ஆம் தொகுதி, எங்களின் முதலிரு குடைவரை நூல்கள், நூற்றாண்டு மாணிக்கம் ஆகிய நூல்களைப் படித்த நிலையில் அவர் எழுதியிருந்த மடல் எங்கள் குடைவரை ஆய்வுப் பணிகளை மகிழ்ந்து போற்றியிருந்தது. கழுகுமலைக் குடைவரைப் பணியின்போது வெட்டுவான் கோயிலையும் முழுமையான நிலையில் ஆய்வுசெய்து சிறந்த நூலொன்றை வெளியிடவேண்டும் என்ற ஆவலை அம்மடலில் தெரிவித்திருந்த அவர், 'My only wish is that a thorough and detail study need to be done on this temple. Though others have attempted, they are very much sketchy, not comparable to the quality of work you and your team used to carry out' என்றும் எழுதியிருந்தமை நெஞ்சை நெகிழ்வித்தது. வெட்டுவான்கோயிலைத் தாம் ஆய்வுசெய்ய முயன்றது குறித்து விவரித்திருந்த ஈஸ்டர்சன் அப்பொழுது எடுக்கப்பட்ட குறிப்புகளையும் படங்களையும் தம் மடலுடன் இணைத்து அனுப்பி

யிருந்தார். அவரது அன்பும் எதிர்பார்ப்பும் என்றேனும் ஒரு நாள் வெட்டுவான்கோயிலை முழுமையாகப் பதிவுசெய்யும் வாய்ப்பை எங்களுக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அவருக்கு மடல் எழுதினேன்.

பிப்ருவரி 12 திரு. ஐராவதம் மகாதேவன் எங்கள் மையத்தில் அமைத்திருந்த பத்மபூஷண் திரு. கூ. ரா. சீனிவாசன் நினைவு அறக்கட்டளைப் பொழிவு பிஷப் ஈபர் கல்லூரித் தமிழ்த்துறையின் துணையுடன் நிகழ்ந்தது. துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் சுபாஷ் சந்திரபோசு உரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்தியத் தொல்லியல்துறையின் கல்வெட்டுப் பிரிவு முது நிலை அலுவலரும் மையத்தின் இனிய நண்பருமான முனைவர் சு. இராசவேல் 2008 அறக்கட்டளைப் பொழிவிற்கான உரையாளராகத் தேர்வு செய்யப்பட்டிருந்தார். சிராப்பள்ளிக்குத் தாம் வந்துவிட்டமையைத் தொலைபேசி வழித் தெரியப்படுத்திய அவர் 11 மணியளவில் என்னைச் சந்திக்க வந்தார். இருவரும் மருத்துவர் சு. பழனியாண்டியுடன் அரங்கை அடைந்தோம். இந்து நாளிதழின் செய்தியாளர் திரு. கணேசனும் பேராசிரியர் வேணி தேவியும் அரங்கில் இருந்தனர். சரியாக 11. 45 மணியளவில் தொடங்கிய நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றியபோது நண்பர் இராசவேலின் உழைப்பையும் கண்டுபிடிப்புகளையும் ஆற்றலையும் உரியவாறு அவைக்கு அறிமுகப்படுத்தினேன். சிறந்த கல்வெட்டறிஞர் விருதை இராசவேலுக்குப் பழனியாண்டி வழங்க, முதல்வரின் தலைமையுரைக்குப் பிறகு 'தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் இராசவேலு சிறப்புரையாற்றினார். மதிய உணவுக்குப் பிறகு நானும் அவரும் கருத்துப் பரிமாற்றத்தில் மகிழ்ந்தோம்.

17 ஞாயிறன்று இந்திய மருத்துவ மன்றச் சிராப்பள்ளிக் கிளையின் பொங்கல் விழாவிற்கான தமிழ்ச் சொல்லாற்றல் போட்டி நிகழ்ந்தது. பல ஆண்டுகளாக எங்கள் மருத்துவ அமைப்புத் தொடர்ந்து நிகழ்த்தி வரும் அப்போட்டியை நிகழ்த்திட மன்றத்திற்கு வந்தபோது 2008க்கான தமிழ்நாடு மருத்துவ மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மருத்துவர் இரா. குணசேகரனைச் சந்திக்கும் வாய்ப்பமைந்தது. பொன்னாடை போர்த்தி அவரது வெற்றிக்கு வாழ்த்துக் கூறி

னேன். குணசேகரன் எங்கள் ஆய்வு மையத்திடம் மிகுந்த ஈடு பாடும் பற்றும் கொண்டவர். தம் தளராக் கொடைகளால் வரலாறு ஆய்விதழை வளர்த்து வருபவர். எல்லார்க்கும் இனிய வர். அவரும் மருத்துவர் மீ. சா. அஷ்ரப்பும் உடனிருக்கப் போட்டிகள் இனிதே நிறைவேறின.

பிப்ருவரி 19 தென்மாவட்டக் குடைவரைகள் பற்றிக் கலந் துரையாட இந்தியத் தொல்லியல்துறையின் கோயில் ஆய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் முனைவர் து. தயாளன் அனுப்பிய தாக அத்துறை ஆய்வாளர் திரு. அனில்குமார் வந்திருந்தார். ஏற்கனவே தென்மாவட்டக் குடைவரைகள் ஆய்வை நாங்கள் முடித்திருந்தமையால், அவருடன் விரிவான அளவில் உரை யாடினேன். குடைவரை ஆய்வில் கோயில் ஆய்வுப் பிரிவு முழு மூச்சில் ஈடுபட்டுள்ளதை அறியமுடிந்தது. வரலாறு இதழ் 18இல் வெளியிடுவதற்காக விஜயாலய சோழீசுவரம் பற்றிய குறிப்புகளைக் கட்டுரையாக்குவதில் முனைந்தோம். கட்டமைப் புக் குறித்து நேர்ந்த சிறுசிறு ஐயங்களைச் செல்வி வித்யா கள ஆய்வுகள் மூலம் நேர் செய்ய உதவினார். கட்டுரை முழுமை யடைந்தபோது, கட்டுரையாளர்கள் பட்டியலில் வித்யாவின் பெயரையும் இணைத்தோம். இவ்விதழிற்கான பிற ஆய்வுக் கட்டுரைகளாக அப்போது எங்கள் ஆய்வின் கீழிருந்த ஒருகல் தளிகளில் பிடாரித்தளிகளையும் பெருஞ்சாலைத் தளியையும் குறிப்புகள் நிலையிலிருந்து கட்டுரை உருவாக்கத்திற்கு உரியன வாக மாற்றினோம். அகிலாவுடன் இணைந்த ஆய்வு என்பத னால் அக்கட்டுரைகள் எங்கள் இருவர் பெயர்களிலும் பதிவா யின. குடைவரை சார்ந்த கட்டுரைகளாக சுமிதாவுடன் இணைந்து நாங்கள் ஆய்வுசெய்த பதினெண்பூமி விண்ணகரும் பழியிலி ஈசுவரமும் இவ்விதழில் இடம்பெற்றன.

புதிய கல்வெட்டுகளாகச் சடைமுடிநாதர், சேத்ரபாலர் கோயில்களின் கல்வெட்டுகள் ஏறத்தாழ 15 பக்க அளவிற்கு இடம்பெற, பதிப்பிக்கப்படாத பாடங்களாகச் சடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகள் நான்கும் விட்டுப்போன தொடர்ச்சி கள் பகுதியில் சேத்ரபாலர் கோயில் கல்வெட்டு ஒன்றும் பதிவாயின. பொதுப்பகுதியில் பெருமைச்சுவடுகளாக நினை வில் நிறைந்திருக்கும் என் ஆசிரியப் பெருமகனார் மருத்துவர்

தி. வ. அரங்கநாதனின் இணையற்ற செயற்பாடுகள் கட்டுரையாயின. 2007இல் நண்பர் திரு. வெ. வேதாசலம் நிகழ்த்திய கூ. ரா. சீனிவாசன் அறக்கட்டளைப் பொழிவு, 'மதுரையில் சமணசமயம்' என்ற தலைப்பில் இணைக்கப்பட்டது.

நான் ஆய்வு தொடங்கிய காலத்திலிருந்து ஓர் உடன் தோன்றல் போலவே என் ஆய்வுகளின் அனைத்து முகங்களாகவும் விளங்கி என் பணிகளைச் செழிக்கச் செய்த திரு. தி. நா. ஆறுமுகம் 'உண்டாலம்ம இவ்வுலகம்' பகுதிக்காகவே பிறந்தவர். நெஞ்சில் நிறைந்த அவரது துணையிருப்பை நான் உணர்ந்தவாறெல்லாம் கட்டுரையாக்கி வரலாறு 18ஆம் தொகுதியைப் பெருமைக்குரிய இதழாக்கினேன். கட்டுரையின் இறுதிப்பத்தி இன்றளவும் என் நினைவில் அப்படியே நிலைத்திருக்கிறது.

'என்னுடைய சுருங்கிய வாழ்க்கையில் எத்தனையோ பேருடன் நான் பழகியிருக்கிறேன். அவர்கள் அனைவருமே அன்பானவர்கள்தான்; நல்லவர்கள்தான்; உடன்வருபவர்கள் தான். ஆனால், ஆறுமுகம் நிழலைப் போல. நமக்கு முன் சில சமயம் நடப்பார். அது நீமக்கு வழிகாட்டுவதாக இருக்கும். தேவைப்படும் நேரங்களில் நமக்குப் பின் நிற்பார். அது நம்மைப் பாதுகாப்பதாக அமையும். உச்சிநேரத்தில் நிழல் நிஜத்துடன் சேருமாறு போலத் துன்பம் நேர்கையில் ஒன்றுக்குள் ஒன்றாகி நமக்கு உலகமே துணையிருப்பது போன்றதோர் உணர்வை ஏற்படுத்திவிடும் உயர்ந்த மனிதர் அவர்.'

வரலாறு 17ஆம் தொகுதியில் எங்கள் ஆய்வுப் பயணத்தின் பட்டறிவுச் செல்வத்தை, 'திரும்பிப்பார்க்கிறோம்' என்ற தலைப்பில் பகிர்ந்துகொள்ளத் தொடங்கியிருந்தோம். அதற்குக் கிடைத்த வரவேற்பு எங்களை பிரமிக்கச் செய்தது. தஞ்சாவூர் மருத்துவர் கூ. நரேந்திரன், சிராப்பள்ளிக் கடவுச் சீட்டு அலுவலர் திரு. பாலச்சந்திரன் உள்ளிட்ட எண்ணற்ற பெருமக்களின் அன்பான, ஆர்வம் நிறைந்த மடல்கள் அத்தொடரைத் தளர்வின்றிப் பெருக்க ஊக்கமளித்தன. 18ஆம் தொகுதியில் அதன் இரண்டாம் பகுதியை எங்கள் கோப்புகளிலிருந்த மடல்கள், அழைப்பிதழ்கள், நினைவுக் குறிப்புகள், ஆய்வுத் தரவுகள் ஆகியவற்றின் பின்னணியில் ஏறத்தாழ 100 பக்க அளவில் உருவாக்கி இணைத்தோம்.

பிப்ருவரி 25 சிராப்பள்ளி வள்ளார் கல்லூரி வரலாற்றுத் துறை சார்பில் நிகழ்ந்த கருத்தரங்கில், 'வாணன் வந்து வழி தந்து' என்ற தலைப்பிலான உரையைப் படக்காட்சியுடன் நிகழ்த்தும் வாய்ப்பமைந்தது. பேராசிரியர் ஆண்ட்டோ வரவேற்றார். அன்றிரவு கன்னியாகுமரி மாவட்டக் குடைவரைகள் சில வற்றை ஆய்வுசெய்யும் நோக்கில் நானும் என் வாழ்வரசியும் நாகர்கோயில் பயணப்பட்டோம். தொடர்வண்டி நிலையத் திற்கு வாணியின் தந்தை திரு. சந்திரசேகரன் மகிழுந்து அனுப்பி யிருந்தார். வாணியின் அன்னை திருமதி செல்வி அன்புடன் அளித்த சிற்றுண்டிக்குப் பிறகு ஆய்வாளர் திரு சிவ. பத்மநாபன் துணையுடன் குறத்தியறைக் குடைவரை சென்றோம். பத்மநாபன் இருந்தமையால் குடைவரையைக் கண்டறிவது எளிதானது. நான் அதுநாள்வரை கண்ட குடைவரைகளில் அதுவே மிகச் சிறியது. கருவறை மட்டுமே பெற்றிருந்த குடைவரையின் பின் சுவரில் திருமாலின் சிதைந்த திருமேனி. குடைவரையின் வலப் புறப் பாறைப்பகுதியில் பிள்ளையாரும் இடப்புறப் பாறைப்பகுதி யில் நிறைவடையாத சிற்பமும் உள்ளன. வேண்டிய குறிப்புகள் எடுத்ததும் சிவகிரிக் குடைவரை சென்றோம்.

சிவாச்சாரியார் இல்லாதபோதும் அவரது துணைவியார் தம் மகனை அனுப்பிக் குடைவரையைக் காண உதவினார். குறத்தியறை போலன்றி முன்புறத்தே கட்டுமானங்கள் பெற்ற அக்குடைவரை தாய்ப்பாறை இலிங்கம் கொண்டிருந்தது. வெளிக் கட்டுமானங்களை ஆய்வுசெய்து குறிப்புகள் எடுக்க என் வாழ்வரசி துணையிருக்க, கருவறை அளவுகளை இளைய சிவாச்சாரியார் எடுத்தளித்தார். திருநெல்வேலி மாவட்டத்து சிவகிரியில் இக்குடைவரையைத் தேடிய பழங்கதையை பத்ம நாபனுடன் பகிர்ந்தபடி ஆய்வு முடித்து, சிவாச்சாரியார் துணைவியாருக்கு நன்றி கூறி விடைபெற்றோம். மதிய உணவு நாகர்கோயிலில் திருமதி செல்வி இல்லத்தில் அமைந்தது.

ஆரல்வாய்மொழி அறிஞர் அண்ணா கல்லூரி மாணவர் சேவை மையத்தில் உரையாற்ற பத்மநாபன் ஏற்பாடு செய்திருந் தமையால் பிற்பகல் அங்குச் சென்றோம். மாணவர்களிடம் வரலாற்றின் பெருமைகளை, 'வரலாற்றின் வளமை' என்ற தலைப் பில் உரையாகப் பகிர்ந்துகொண்டேன். கல்லூரித் தாளாளர்

மருத்துவர் ச. மனகாவலப்பெருமாள் எங்கள் ஆய்வுகளில் ஆர்வம் காட்டிக் கல்லூரி நூலகத்திற்கு நூல்கள் அனைத்தையும் கேட்டுப் பெற்றார். மாலை திரு. சந்திரசேகரன் திருமதி செல்வி இணையருடன் அங்குத்துறைக் கடற்கரை சென்று, இரவுத் தங்கலுக்குக் குலசேகரம் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்களாக இருந்த வகுப்புத் தோழர்கள் மருத்துவர்கள் காந்திமதி, பரத்வாஜ் இணையர் இல்லத்திற்குச் சென்றோம்.

மறுநாள் காலை திருவட்டாறு கோயிலைப் பார்வையிட்டோம். கருவறை அடுத்திருந்த மண்டப மரக்கூரையில் அமைந்திருந்த சிற்பங்கள் கருத்தைக் கவர்ந்தன. கருவறைப் பெருமாளும் மனதிற்கினியவராகவே இருந்தார். கிருஷ்ணன் கோயில் ஓவியங்களையும் கந்திற்பாவைகளையும் ஆய்வுசெய்து திருநந்திக்கரை சென்றோம். அக்குடைவரையை முன்பே பார்த்திருந்தபோதும் தென்மாவட்டக் குடைவரைகள் நூலுக்காக விரிவான அளவில் ஆய்வுசெய்யக் கருதியே உரிய இசைவுடன் சென்றோம். குடைவரைக் காவலர் திரு. இராஜப்பா உதவியாக இருந்தார். சிற்ப வேலைப்பாடுகள் இல்லாதபோதும் ஓவியங்களைக் காண முடிந்தது. பிள்ளையாரின் தோற்றம் மிகச் சிறப்பாக, கம்பீரமாக வரையப்பட்டிருந்தது. மாலையில் பணி முடிந்ததும் பேச்சிப்பாறை அணை, திற்பரப்பு அருவி கண்டு திரும்பினோம்.

28 திரு. பத்மநாபனுடன் விழிஞம் குடைவரை சென்றோம். திரு. அய்யப்பப்பிள்ளை உடனிருந்து உதவினார். அக்குடைவரையை நான் காண்பது அதுவே முதன்முறை என்பதால் விரிவான ஆய்வு தேவைப்பட்டது. கல்வெட்டுகள் ஏதுமற்ற அக்கருவறைக் குடைவரையின் புறத்தே சிற்பங்கள் இருந்தன. தென்கோட்டத்தில் சிவபெருமானும் இடக்கோட்டத்தில் ஆடல் நிலையில் ஆடவர் ஒருவர் சிற்பமும் நிறைவடையாத மற்றொரு சிற்பமும் இருந்தன. கருவறையில் வீணையேந்தியவராய் 15ஆம் நூற்றாண்டுக் கலையமைதியில் சிவபெருமான் சுகாசனத்தில் இருந்தார்.

ஆய்வு முடிந்ததும் திருவனந்தபுரம் பல்கலைக்கழகம் சென்று, நூலகம் பார்த்தோம். திரு. பத்மநாபன் அரசர் மார்த்தாண்டவர்மரைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தமையால், மன்னரின் பட்டம் மாளிகைக்குச் சென்றோம். மிக எளிமையாகவும்

இன்முகத்தோடும் நேர்முகமளித்த அரசர், ஆய்வு மையம் பற்றிய செய்திகளைக் கேட்டறிந்தார். அறிவார்ந்த, பயனுள்ள உரையாடல், அவர்மீது மிகு மதிப்புக் கொள்ளச் செய்தது. மாலை உறவினர் திரு. விவேகானந்தன் இல்லம் சென்றபோது அங்கோர்வாட் பயணத்தின்போது அவர் எனக்காக வாங்கி யிருந்த நூலைப் பரிசாகத் தந்தார். அங்கோர்வாட் போகக் கருதியிருந்த என் ஆவலை அந்நூல் பெரிதும் தூண்டியது. மாலை மயங்கும் வேளையில் கோவளம் கடற்கரை சென்று இல்லம் திரும்பினோம்.

காந்தி, பரத் இணையருடன் மறுநாள் கன்னியாகுமரியில் கோயில், விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் சிலை ஆகியன பார்த்தோம். திருவள்ளுவர் சிலையைப் பார்ப்பது அதுவே முதன்முறை. கடற்கரையிலிருந்து பார்த்தபோதே பிரமிக்க வைத்த அச்சிற்பம் அருகே செல்லச்செல்ல உணர்வு வயப்பட வைத்து உளம் குளிரச் செய்தது. 'பெரிதினும் பெரிது கேள்' என்ற பாரதியின் ஆத்திச்சூடிதான் நினைவில் நிறைந்தது. அதன் உருவாக்கத்திற்குக் காரணமான அனைவரையும் பாராட்டிய தோடு, வள்ளுவரை வணங்கி அவர் குறளை நினைந்து மகிழ்ந்து உரையாடினோம். மதிய உணவுக்குப் பிறகு காந்தி நினைவகமும் திரு. குமரிஅனந்தனின் அருங்காட்சியகமும் நாகராஜர் கோயி லும் பார்வையிட்டுக் குலசேகரம் திரும்பினோம். குடைவரை ஆய்வுகளுக்குத் துணைநின்ற இந்தியத் தொல்லியல்துறையின் நாகர்கோயில் பராமரிப்பு அலுவலர் திரு. கலைச்செல்வனுக்குத் தொலைபேசி வழி நன்றி தெரிவித்தேன். அண்ணா கல்லூரித் தாளாளர் திரு. மனகாவலப்பெருமாள் பூதப்பாண்டியில் ஒரு குடைவரை இருப்பதாகத் தகவல் தந்ததையடுத்து, மறுநாள் காலை திரு. பத்மநாபனுடன் அங்குச் சென்றோம். நாங்கள் கோயிலுக்குள் நுழைவதற்குள் கருவறையை அடைத்துவிட்ட தால் குடைவரையைக் காணக்கூடவில்லை. வெளிமண்டபங் களை ஆய்வுசெய்து சிராப்பள்ளி திரும்பினோம்.

மார்ச்சு 4 செவ்வாய் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த செம்மொழித் தமிழ்ப் பயிலரங்கில் பங்கேற்றுச் சங்க இலக்கியங்களிலிருந்து அறியப்படும் கலையியல் தரவுகளைப் பகிர்ந்துகொண்டேன். முனைவர்கள் கு. திருமாறனும் பி. தமிழக

னும் உடனிருந்தனர். பேராசிரியர் இராமர் இளங்கோ நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மாணவர்கள் பல அரிய கேள்விகளுடன் என் உரையை எதிர்கொண்டமை மகிழ்வளித்தது. தொல்காப்பியத்தின் காலம் பற்றிச் சுவையான கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்தது. மதுரை மீனாட்சியம்மன் கோயில் இணை ஆணையர் திரு. இராஜா தொலைபேசி, கோயில் ஆய்வுக்கு வருமாறு அன்போடு அழைத்தார். ஆய்வு, தேவைகள் குறித்து அவருடன் உரையாடினேன். மிகப் பெரிய வளாகமான மீனாட்சியம்மன் கோயிலை ஆய்வுநோக்கில் அணுகும் வாய்ப்பு அமைந்தது பெரும் பேறே. அதே சமயம் அந்தப் பொறுப்பிலிருந்த துன்பங்களையும் உணரமுடிந்தது.

மார்ச்சு 9 சிவகங்கை மாவட்டம் திருமலைக் குடைவரை ஆய்வுக்காகச் சென்றிருந்தோம். ஏற்கனவே எங்களால் அணுகப்பட்ட கோயில்தான் என்றாலும், தென்மாவட்டக் குடைவரைகள் நூலுக்காக அதை முழுமையான அளவில் ஆய்வுசெய்து தரவுகள் தொகுத்தோம். கோயில் நிருவாகத்தினர் துணையிருந்தனர். கோயில் உயர்அலுவலர் திரு. பூசை வேண்டும் உதவிகள் செய்தார். கருவறைக்கு முன்னிருக்கும் படிக்கட்டுப் பகுதி பின்னாளில் தளமாக்கப்பட்டமையால் கீழிறங்கி, அங்கு இருந்த பிற்பாண்டியர் கல்வெட்டுகளைப் படித்தோம். குடைவரைப் பகுதியிலிருந்த சிற்பங்களை விரிவான அளவில் பார்த்துக் குறிப்புகள் எடுத்தோம். மாலை மலை மேல் சென்று பழங்கால ஓவியப்பதிவுகளைக் கண்டு, 5 மணிக்கு மேல் திருக்கோஷ்டியூர்க் கோயிலைப் பார்வையிட்டுத் திருப்புத்தூர் வழியாகச் சிராப்பள்ளி திரும்பினோம். திருமலைக் குடைவரை அளவில் சிறியதென்றாலும், அதன் கருவறைச் சிற்பத்தொகுதி மாறுபட்டதாக, பிரான்மலைக் குடைவரைக் கருவறைச் சிற்பங்களை ஒத்ததாக அமைந்திருந்தமை குறித்துச் சிந்தித்தோம். அது போலவே திருமலைக் குடைவரையின் தூண்களும் மாறுபட்ட அமைப்பில் உள்ளமை நினைவில் நிறைந்தது.

மார்ச்சு 15 மாமல்லபுரம் ஆய்வுகளுக்காகச் சென்னை சென்றோம். இலாவண்யா, இராம், அகிலா துணையுடன் பெருவராகர் குடைவரை ஆய்வு தொடங்கியது. பட்டாச்சாரியார் திரு. சந்தானம் உடனிருந்து உதவினார். இக்குடைவரை மாமல்ல

புரத்தின் பிற குடைவரைகளிலிருந்து அமைப்பிலும் சிற்ப இருப்பிலும் மாறுபட்டது. பல்லவர் குடைவரைகளில் கங்கா தரரைக் காணக்கூடிய இரண்டாம் இடம் இதுதான். அது போலவே நான்முகனும் சிராப்பள்ளிக் கீழ்க்குடைவரையிலும் இங்கும் மட்டுமே பல்லவர் படைப்பாகக் காட்சிதருகிறார். துணைவியருடனான அரசர்களின் உருவச் சிற்பங்கள் தமிழ் நாட்டிலுள்ள குடைவரைகளில் இங்கு மட்டுமே காணப்படுவ தும் பெயர்ப் பொறிப்புடன் அவை அமைந்துள்ளமையும் இக்குடைவரையின் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

இராமும் இலாவண்யாவும் அக்குடைவரையைக் காண் பது அதுவே முதல் முறை என்பதால் நெடுநேரம் உரையாடல் தொடர்ந்தது. சிற்பங்களைத் தூய்மை செய்ய இந்தியத் தொல் லியல்துறையின் உதவியாளர் திரு. இராமலிங்கமும் அகிலாவும் உதவினர். தேவையான அளவுகள் எடுத்ததோடு, தூண்கள், கூரை யுறுப்புகள் ஆகியவற்றையும் நன்கு ஆய்வுசெய்தோம் மதிய உணவுக்குப் பிறகு வராகர் குடைவரையை ஒப்பாய்வுக்காக அணுகினோம். யானைத்திருமகள் தொகுதியும் கொற்றவைத் தொகுதியும் இரு குடைவரைகளிலுமே இருப்பதால் இரண்டு குடைவரைகளிலும் அவை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அமைப்புக் குறித்துப் பேசினோம். ஒரே நிகழ்வைச் சற்று முன் பின்னான காலக்கட்டத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளு டன் பல்லவச் சிற்பிகள் பதிவு செய்திருக்கும் சிறப்பு எங்கள் அனைவரையுமே வியக்கச் செய்தது. இரண்டு குடைவரைகளி லுமே கருவறை அமைப்பு மாறுபட்டிருந்தது. தூண்களின் அமைப்பிலும் குடைவரைகளின் பிற அலங்கரிப்புகளிலும் உள்ள நுண்ணிய வேறுபாடுகளைக்கூட நளினியும் அகிலாவும் கண்டறிந்து தொகுத்தனர்.

மறுநாள் நான், நளினி, அகிலா மூவர் மட்டும் ஒருகல் தளிகளை ஆய்வுசெய்ய மாமல்லை சென்றோம். நகுலசகாதேவ ரதத்திலும் அருச்சுன ரதத்திலும் அளவுகள் எடுக்க வேண்டி யிருந்தது. அருச்சுன ரதத்தின் இரண்டாம் தளச் சுவர்ச்சிற்பங் களை விரிவாகப் பார்த்துத் தரவுகள் தொகுத்தோம். வேறெந்த ஒருகல் தளியிலும் இல்லாத அமைப்பாக இணையர் சிற்பங்கள் இடம்பெற்றிருந்த அத்தளம் சிந்தனையைத் தூண்டியது. கீழ்த்

தளச் சிற்பங்களையும் இத்தளச் சிற்பங்களையும் இணைய வைத்துச் சிற்பிகளின் கண்ணோட்டங்களை அறிய முயன் றோம். சிற்பஆய்வு கட்டடக்கலை ஆய்வினும் மிக ஆழமானது. மிக எளிதாக முதன்மையான குறிப்புகளைக்கூடத் தவறவிடப் பெருவாய்ப்புள்ள இடமென்பதால், ஒவ்வொரு சிற்பத்தையும் ஒருமுறைக்கு இருமுறை பார்த்ததோடு, கருத்துப் பரிமாற்றமும் கொண்டோம்.

மதிய உணவுக்குப் பிறகு பீமரத ஆய்வு தொடங்கியது. மாமல்லை ஒருகல் தளிகளில் பீமரதம் பல புத்தமைப்புகள் கொண்டது அதன் கூரையேறி கிரீவத்தை ஆய்வுசெய்தோம். கிரீவத்திலிருந்த ஆடவர் சிற்பங்கள், அலங்காரிப்புகள் அனைத் தும் பார்த்துக் குறிப்பெடுத்தோம். இரவு சூழத் தொடங்கியதால் சென்னை திரும்பிச் சிராப்பள்ளி மீண்டோம். ஊர் திரும்பிய தும் தொகுத்த தரவுகளின் அடிப்படையில் கட்டுரை உருவாக் கம் தொடங்கியது. பெரும்பாலான ஒருகல் தளிகளின் ஆய்வு முழுமை பெற்றிருந்ததால், ஒப்பாய்வு எளிதாக இருந்தது.

மார்ச்சு இறுதியில் திருவாவடுதுறை ஆதீனத்தாரிடமிருந்து வந்த மடல், ஏப்ரல் முதல் நாள் திருமடத்தின் சார்பில் எனக்கு 'தொல்லியல் தோன்றலார்' விருது வழங்க முடிவு செய்திருப்ப தாகத் தெரிவித்தது. நிகழ்வன்று காலையில் திருவாவடுதுறை செல்லும் வழியில் வலஞ்சுழி காணச் சென்றோம். துணை ஆணையர் திரு. இலட்சுமணன் அன்புடன் வரவேற்றுக் கோயில் திருப்பணி அமைப்புகளைச் சுற்றிக் காட்டினார். சீதாராமன், பத்மநாபன் துணையுடன் பஞ்சவன்மாதேவீசுவரம் சென்று முதலாம் இராஜேந்திரரின் கல்வெட்டை மீளாய்வு செய்தோம். வரலாறு இதழில் கல்வெட்டின் பாடத்தைப் பதிவு செய்ய விருந்ததால் ஐயமிருந்த இடங்களைச் சரிபார்த்து, சீதாராமன் இல்லம் சென்று, பின் திருமடம் சென்றோம். திரு. நாரயண சாமியும் திரு. செந்திலும் வரவேற்றனர். 6. 30 அளவில் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளைச் சந்தித்து, அங்கு நிகழ்ந்த கருத்தரங் கில் பங்கேற்று உரையாற்றினேன். நிகழ்வின் முடிவில் சிவப் பிரகாசர் பொன்னாடை போர்த்தி விருது வழங்க, அவரது வாழ்த்துடன் விடைபெற்றோம்.

மீனாட்சியம்மன் கோயில் இணைஆணையர் திரு. இராஜா தொடர்பு கொண்டு மதுரைப் பயணத்தை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். ஏற்கனவே பயணச்சீட்டுகள் பதிவுசெய் திருப்பதைக் கூறி, 4 இரவு அங்கிருப்பதாகச் சொன்னேன். 4 மாலை வைகை விரைவு வண்டியில் நானும் நளினியும் மதுரை சென்றோம். கோயில் அலுவலர்கள் வரவேற்று, உணவளித்து, தங்கச் செய்தனர். மறுநாள் காலை, கோயில் புலவர் திரு. த. விசய ரகுநாதன் விடுதி வந்து அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். உரியவர்களைச் சந்தித்த பிறகு ஆய்வு தொடங்கினோம். மங்கம் மாள் ஓவியம் பார்த்த பிறகு, சிவாச்சாரியார் திரு. இராஜா, மீனாட்சியம்மன் திருமுன் முன்னிருந்த சிற்பங்களை விளக்கினார்.

கோயிலுக்குள் நுழைந்ததிலிருந்தே என் உணர்வுகள் உச்சத்திலிருந்தன. அப்பா, அம்மா, குடும்பத்தார் நினைவுகள் சென்றவிடமெல்லாம் தொடர்ந்தன. கோயிலின் அனைத்து இடங்களுமே என் வாழ்க்கைப் பக்கங்களைத் திருப்பிக் காட் டின. அக்கோயில் வளாகத்திருந்த திருவள்ளுவர் மன்றத்தைப் பார்த்தபோது தந்தையார் அங்கு உரையாற்றிய காட்சிகள் நிழலாடின. இளமையில் உறவு கொள்ளும் ஒரு கோயில் எத் தனை ஆழமாக நினைவுகளை நெஞ்சத்தில் தேக்கிவிடுகிறது என்பதற்கு அன்று நானே சான்றாக நின்றேன். அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு அந்த வளாகத்தில் சுற்றியதெல் லாம் கண்களில் காட்சிகளாயின. அதற்கு முன் நினைவைத் தொட்டிராத கணக்கற்ற நிகழ்வுகள் சொல்லி வைத்தாற் போல் படக்காட்சியென ஒன்றன்பின் ஒன்றாய்க் 'கண்ணாமூச்சி' ஆடின.

புலவரிடமும் நளினியிடமும் சிறு பிள்ளை போல என் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டே, பனித்த கண்களுடன் கோயிலில் உலா வந்தேன். முதல் நாள் என்பதால் பார்வைப் பயணம் மட்டுமே நிகழ்ந்தது. கோபுரங்கள், திருமுன்கள், மண்டபங்கள், திருமண அரங்குகள், பொற்றாமரைக் குளம், சுற்றுகள் என எல்லா இடங்களிலும் இருந்தோம். அந்த இருப்பு கோயிலுடன் என்னை நெருக்கமாக்கியது. மறுநாள் காலை புதுமண்டபம், ஆயிரக்கால் மண்டபம் இரண்டையும் விரிவா கப் பார்த்தோம். புதுமண்டபத்திலிருந்த திருமலைநாயக்கர்

உள்ளிட்ட நாயக்க அரசர்களின் உருவச் சிற்பங்களை ஆய்வு செய்து தரவுகள் தொகுத்ததுடன், அச்சிற்பங்களின் மேல் தெரிந்த அவர்தம் பெயர்களையும் படித்தறிந்தோம்.

இணைஆணையர் அச்சிற்பங்களை எல்லாம் உரியவர் கொண்டு தூய்மை செய்து ஒளிப்படங்கள் எடுக்க உதவினார். புதுமண்டபத்திலிருந்த கல்வெட்டுகளையும் பிற பெருஞ் சிற்பங் களையும் அவருக்குக் காட்டி விளக்கினோம். மதுரையில் பள்ளியில் படித்த காலத்தில் புதுமண்டபத்திருந்த புத்தகக் கடைகளில்தான் வகுப்புக்குத் தேவையான அனைத்தும் வாங்குவது வழக்கம். அந்த நினைவின் பின்னணியில் நான் வழக்கமாக வாங்கிய கடையைத் தேடினேன். அதைக் காணக் கூடவில்லை. விசாரித்தபோது நெடுங்காலத்திற்கு முன்பே அக்கடை மூடப்பட்டமை அறிந்தேன்.

மதிய உணவுக்குப் பிறகு வெள்ளியம்பலம் சென்றோம். கால் மாறி ஆடிய இறைவன் கம்பீரமாகக் காட்சிதந்தார். இறைவடிவம் முழுவதையும் வெள்ளித் தகடுகளால் போர்த்தி யிருந்தமையால், திருமேனியின் உண்மையான அமைப்பை அறியக்கூடவில்லை. ஆண்டுக்கு ஒருமுறைதான் அத்தகடுகள் அகற்றித் திருமேனி திருமஞ்சனம் காணும் என அறிந்தேன்.

தமிழ்நாட்டில் பல கோயில்களில் ஆடவல்லானின் கல் திருமேனிகள் காணப்பட்டாலும் மதுரை வெள்ளியம்பலக் கால் மாறி ஆடிய பெருமான் பேரளவினர், தனித்துவமானவர். இது போன்ற கால் மாறி ஆடும் சிவபெருமானின் திருத்தோற் றம் சிறிய அளவினதாய்க் கண்டபாதச் சிற்பமாய்த் தஞ்சாவூர் மாவட்டம் திருப்புறம்பியம் கோயிலில் இடம்பெற்றுள்ளமை நினைவிற்கு வந்தது. அது போலவே ஊற்றத்தூர் தொகுமாமணி ஈசுவரத்து ஆடவல்லான் திருமேனியும் கண்முன் நிழலாடியது. சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கோயில் களில் காணக்கிடைக்கும் சிவபெருமானின் ஆடவல்லான் கோலக் கல் திருமேனிகளில் ஊற்றத்தூர் வடிவமே அளவில் பெரியது. உடனிருந்த புலவரிடம் ஆடவல்லான் சிற்ப வடிவத் தின் தோற்றம், வளர்ச்சி எனப் பலவும் பேசி மகிழ்ந்தோம். மாலையில் இணைஆணையருடன் கோயில் தேர் காணச் சென்றோம். தேரிலிருந்த பல மரச்சிற்பங்கள் கருத்தைக்

கவர்ந்தன. ஓர் ஆடவரைக் கழுதை மேலேற்றி நையப் புடைக்கும் காட்சி ஊர்கத் தண்டனையைக் கண்முன் நிறுத்தியது.

சிறிய குடுமியும் தொங்கு மீசையும் சுருக்கிய சிற்றாடையு மாய், 'என்னை மன்னித்து விட்டுவிடுங்கள்' என்பது போல் கைகளைக் கூப்பிய நிலையில் கழுதைமேல் அமர்ந்திருக்கிறார் அந்த ஆடவர். என்ன தவறு செய்தார் என்பது தெரியவில்லை. அவரைச் சுற்றியுள்ள மூன்று பெண்களுள் ஒருவர் கழுதைக்கு முன்னாலும் மற்றவர்கள் பின்னாலும் நிற்கின்றனர். பின்னால் நிற்கும் பெண்களில் ஒருவர், உயர்த்திப் பிடித்த சட்டியிலிருந்து எதையோ (சாணக்கரைசல்?) அந்த ஆடவரின் தலையில் ஊற்று கிறார். இரண்டாவது பெண் காலியான சட்டி ஒன்றை இடக் கையில் பிடித்தபடி, வலக்கையிலுள்ள துடைப்பத்தை உயர்த்தி அந்த ஆடவரை அடிக்க முயல்கிறார். கழுத்தணி அணிந்த வலப் பெண் தம் கையிலுள்ள செருப்புப் போன்ற பொருளால் ஆடவரின் தலையில் அடிக்கிறார். இந்தத் தண்டனைக் காட்சியைப் பார்த்தவாறு வலப்புறம் வயதில் சிறிய பையன் ஒருவன் நிற்கிறான். பெண்கள் மூவரும் சேலை அணிந்துள்ள னர். இச்சிற்பம் செய்யப்பட்ட காலத்தில் சேலை அணியும் பழக்கம் வழக்கிற்கு வந்துவிட்டது போலும்.

செவியணிகள், தோள், கை வளைகள், கழுத்தணிகள் பெற் றுள்ள இப்பெண்களின் இதழ்க்கடையில் எள்ளல் புன்னகை பளிச்சிடுகிறது. தவறு செய்தவர்களைக் கழுவேற்றும் காட்சி பல கோயில்களில் ஓவியமாகவும் சிற்பமாகவும் இடம்பெற் றுள்ளது. ஆனால், தவறு செய்தவர் தலையில் சாணத்தைக் கரைத்து ஊற்றி, செருப்பாலும் துடைப்பத்தாலும் அடித்துத் தண்டிக்கும் பழக்கம் காட்டும் சிற்பம் எங்கள் கண்களில் பட்டது இதுவே முதல் முறை. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் மதுரையின் சுற்றுப்புற ஊர்களில் இது போல் பழக்கம் இருந்து, அதை ஒரு மரத்தச்சர் வரலாற்றுப் பதிவாக்கியிருந்தமை வியப்பளித்தது. புலவரும் இணைஆணையரும் அச்சிற்பம் பற்றிய விளக்கம் அறிந்ததும் மிகுந்த வியப்புடன் பல கேள்விகளை எழுப்பினர். சிற்பங்கள் சமூக வரலாற்றுப் பதிவுகளாகவே விளங்குமாற்றை வேறு சில காட்டுகளுடன் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

மாலை மயங்கும் நேரத்தில் 9 தளங்கள் பெற்ற சுந்தர பாண்டியன் கோபுரத்தில் ஏறி, மதுரை மாநகரை ஒரு பறவைப் பார்வையாகப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றோம். கோபுரத்தின் உள் கட்டுமானம், அதில் இடம்பெற்றிருந்த மரத்தாலான தூண்கள், உத்திரங்கள், படிகள் அமைக்கப்பட்டிருந்த நேர்த்தி, கிரீவ சிற்பங்கள், ஒவ்வொரு தளத்திலும் வெளிக்காட்சி காண அமைக்கப்பட்டிருந்த சாளரங்கள் என அனைத்தும் எங்களை வியப்பிலாழ்த்தின. எத்தகு ஆற்றலும் கணக்கீடுகளும் திட்ட மிடலும் இருந்திருந்தால் இத்தகு எழுச்சிமிகு கட்டுமானங் களைத் தமிழ்ப் பொறியியல் அறிஞர்கள் உருவாக்கியிருப்பார் கள் என்பதை நினைத்தபோதே எங்களையும் அறியாமல் நெஞ்சு நிமிர்ந்தது.

மார்ச்சு 27 நாகர்கோயிலில் இருந்து வந்த மருத்துவர் ச. மன காவலப்பெருமாளின் மடல் ஆரல்வாய்மொழிக் கல்லூரியில் என் உரை சரியான தளத்தில் ஏற்கப்பட்டமை உணர்த்தியது. 'தங்கள் நூல்கள் கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றன. தங்களைப் பற்றி ஏறத்தாழ 15 வருடங்களாகவே கேள்விப்பட்டுள்ளேன். நேரில் சந்திப்பேன் என்று கனவிலும் கருதவில்லை. சிறுவயது முதலே எனக்குத் தமிழார்வம் உண்டு. பொன்னியின் செல்வன் என்னை வரலாற்றின் பக்கம் அழைத்துச் சென்றது. எங்கள் கல்லூரிக்குத் தாங்கள் வந்தது நாங்கள் செய்த பேறு. எளிமை யாகவும் இனிமையாகவும் உணர்ச்சிவசப்படாமல் தெளிந்த நீரோடை போல் தமிழக வரலாற்றை விளக்கிப் பேசிய பாங்கு எங்கள் எல்லோரையும் கவர்ந்துவிட்டது. தமிழ், வரலாற்று ஆசிரியர்கள் நெடுநேரம் தங்கள் உரை பற்றியே பேசிக்கொண் டிருந்தார்கள்' என்ற மருத்துவரின் மனவோட்டம் என் பணியைச் செம்மையாக முடித்த நிறைவேற்படுத்தியது.

தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பதிவாளர் மருத்துவர் தி. கண்ணன் மருத்துவத் தமிழ் மேம்பாட்டிற்காகக் கண்ணியல் துறையில் 200க்குக் குறையாத தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்கி அனுப்புமாறு வேண்டி யிருந்தார். கண்ணியல் துறையில் வானொலிக்காக நான் மொழி பெயர்த்திருந்த தமிழ்க் கலைச்சொற்களை அனுப்பினேன்.

சேலம் தமிழ்க் காப்பு மன்றச் செயலர் திரு. இரா. மோகன் குமார் எழுதியிருந்த மடல், தமிழ் மொழி மேம்பாட்டுப் பணி குறித்து மாநில அளவில் ஒருமித்த செயல்திட்டம் ஒன்றை உருவாக்கச் சேலத்தில் தமிழ் அறிஞர்களின் கலந்துரையாடல் அமைத்திருப்பதாகவும் அதில் நான் கலந்துகொண்டு பங்களிப் புச் செய்யவேண்டும் என்றும் கூறியது. நிகழ்வு நாளில் எனக்கு வேறுபணிகள் இருந்தமையால் கலந்துகொள்ளக்கூடவில்லை. சமயபுரம் எஸ். ஆர். வி. பள்ளி முதல்வர் திரு. துளசிதாசன் தம்முடைய அரிமா சங்க வெள்ளி விழாச் சிறப்பிதழுக்காகக் கட்டுரையொன்று கேட்டிருந்தார். தஞ்சாவூர் இராஜராஜீசு வரத்தைப் பற்றி நான் எழுதியிருந்த 'காதலாகிக் கசிந்துருகி' என்ற கட்டுரையை அவருக்கு அனுப்பிவைத்தேன். கட்டுரை யைப் படித்தவர் அதைப் பதிப்பித்ததுடன், கட்டுரை பற்றிய தம் கருத்தையும் மடலாக்கி அனுப்பியிருந்தார். காதலைப் பற்றியும் அழுகையைப் பற்றியும் புதிய பார்வைகளை அக்கட்டுரை வழங்கியதாக அவர் குறிப்பிட்டிருந்தமை வரலாற்றின் பக்கம் அவர் ஈர்க்கப்பட்டுள்ளமை உணர்த்தியது.

சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறையின் முதுகலை மாணவிகள் ஏப்ரல் 8 அன்று துறைத்தலைவர் பேராசிரியர் கோ. வேணி தேவியுடன் மையத்தில் என்னைச் சந்தித்தனர். அவர்களுள் சிலர் எங்கள் வழிகாட்டலில் அவர்தம் முதுகலை ஆய்வேடுகளை முடித்திருந்தனர். கோயிற்கலை, கல்வெட்டுப் பாடங்கள் பாடத்திட்டத்தில் இருந்தமையால் எங்கள் பணிகளைப் பற்றிய அறிமுகம் அவர்களுக்கு இருந்தது. வரலாற்றாய்வு மையத்துடனும் எங்கள் நூல்களுடனும் பழகிப் பெற்ற அனுபவங்களை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். வரலாற்றாய்விலும் எங்களிடத்தும் அவர்களுக்கிருந்த பற்று உள்ளத்திற்கு நிறைவளித்தது. 2 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த உரையாடல் பல பயனுள்ள தகவல்களைப் பரிமாறிக் கொள்ள உதவியது. மைய வெளியீடுகளில் சிலவற்றை அவர் களுக்குத் தந்து வாழ்த்தி அனுப்பினேன்.

மதுரை வாழ் நண்பர் திரு. எஸ். எஸ். இராஜன் மையத்தின் பணிகளைப் பாராட்டி எங்கள் பணிகளுக்குத் துணைநிற்க விழைந்தார். ஒலி, ஒளிக் காட்சி உரைக்காக மதுரை தொடர்

பான அனைத்து நூல்களையும் சேகரிக்கத் தொடங்கினோம். மதுரைக் கோயில்களிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டு களைப் படிக்குமாறு நளினிக்கு அறிவுறுத்தினேன். பல பாடங் கள் வெளியாகாமல் இருந்தமையால் திரு. சுவாமிநாதனுக்குத் தொலைபேசிக் கல்வெட்டின் பாடங்களை அனுப்பி உதவ வேண்டினோம்.

வரலாறு மின்னிதழுக்காகத் திரும்பிப்பார்க்கிறோம் 18ஆம் இயல் எழுதும் பணி தொடங்கியது. நினைவுக் குறிப்புகளையும் தொடர்புடைய மடல்களையும் நிகழ்நிரல் அட்டைகளையும் கோப்புகளிலிருந்து பார்த்துக் காலநிரலான அனுபவங்களைப் பதிவுசெய்தேன். ஒரு வாரம் அதே பணியாக இருந்தமையால் கட்டுரையை முடித்து அனுப்பமுடிந்தது. திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண தபோவனத் தலைவர் நாங்கள் எழுதி வெளி யிட்டிருந்த பராய்த்துறைக் கட்டுரையின் படி ஒன்றினைத் தந்து உதவுமாறு வேண்ட, உடன் அனுப்பி வைத்தேன்.

ஏப்பிரல் 21இல் 60 வய்து நிறைவதை நினைவுகூரும் வகை யில் நான் முற்றிலும் எதிர்பார்த்தவாறு என் இல்லத்தில் மகள் குந்தவி, நண்பர்கள் சந்திப்பொன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார். 20 ஞாயிறன்று நிகழ்ந்த அந்தச் சந்திப்பில் வரலாறு மின்னிதழ் நண்பர்களும் கலந்துகொண்டனர். அந்நாளில் மணிவிழாச் சிறப்பிதழ் ஒன்றை மின்னிதழ் வெளியிட்டது. என்னைப் பற்றிய நெருங்கிய உறவுகளின் கருத்துக்கூறல்களைப் பதிவுசெய்திருந்த ஒலி, ஒளிப்பேழையை அன்று பார்க்கவும் கேட்கவும் வாய்த்தது. அதைத் தயாரிக்க என் மகள் மேற்கொண்ட முயற்சிகளை அறிய நேர்ந்தபோது கண்களில் நீர் கசிந்தது. பிள்ளைகளின், நண்பர்களின் வாழ்த்துக்கள் உள்ளத்தை நிறைக்க, அவர்தம் நம்பிக்கை கூடுதலாக உழைக்க ஊக்கமளித்தது. அன்றைய பொழுது வாழ்நாளில் மறக்க முடியாத ஓர் இனிய அனுபவமாக அமைந்தது.

ஏப்பிரல் 22 சமயபுரம் எஸ். ஆர். வி. மேனிலைப்பள்ளியில் உரையாற்றுவதற்காக இனிய நண்பர் திரு. சிவக்குமார் சிராப் பள்ளி வந்தார். அவருடன் பள்ளி முதல்வர் திரு. துளசிதாசனும் எழுத்தாளர் திரு. ஞானியும் உடன்வந்தனர். சிவக்குமாருடன் உரையாட, மருத்துவர்கள் சு. பழனியாண்டி, மீ. சா. அஷ்ரப், சுமிதா

- மூர்த்தி இணையர் வந்திருந்தனர். இளம்பிள்ளைகளுக்கு ஏற்ற வகையில் தம் வாழ்க்கையின் பாடுகளையும் பயன்களையும் சிவக்குமார் பகிர்ந்துகொண்டபோது மாணவர்கள் உற்சாக மடைந்ததைக் காணமுடிந்தது. அஷ்ரப் வழிக் கடவுச்சீட்டு அலுவலர் திரு. பாலச்சந்திரன் அறிமுகம் நிகழ்ந்தது. வரலாற்றில் அவருக்குள்ள ஈடுபாடு மகிழ்வளித்தது. இனிய நண்பர்களுடன் அன்றைய பொழுது உலகியல் அறிவதில், வரலாறு பகிர்வதில் இனிதே நிறைந்தது.

26 காலை ஒருகல் தளிகள் ஆய்வுக்காக மாமல்லபுரம் சென்றோம். திரு. இராமலிங்கம் துணையிருந்தார். சென்ற வருகைகளின்போது தொகுத்திருந்த தரவுகளின் அடிப்படையில் எழுதப்பட்டிருந்த கொற்றவைத் தளி, பெருஞ்சாலைத் தளிக் கட்டுரைகளை நளினி படிக்க, நானும் அகிலாவும் கட்டமைப்புகளின் முன் நின்று சரிபார்த்தோம். விடுபட்டிருந்த சில தரவுகளை இணைக்கவும் பொருந்தாதிருந்த சில தொடர்களை நேர்செய்திடவும் அது வாய்ப்பானது. ஒரு கட்டுமானத்தை அது கண்முன் படமாவது போலவே கட்டுரையாக்குவது எளிதான செயலன்று. அதனாலேயே, கட்டுரை அமைப்புக்குத் தரவுகள் வரும் நிலையில் கட்டுமானத்தோடு கட்டுரையை ஒப்பிட்டுப் படிக்கும் வழக்கத்தை நாங்கள் கொண்டிருந்தோம். தரவுகள் பொருந்தும் நிலையில் ஒப்பாய்வு தொடங்கும். உறுப்புகள், அலங்கரிப்புகள், சிற்பங்கள் எனப் பகுத்துக்கொண்டு ஒப்பாய்வு நிகழும். அதன் காரணமாகவே எங்கள் கட்டுரைகளில் கால நிரலான கட்டுமானக் கூறுகளின் வளர்ச்சி பதிவாகிறது. நாள் முழுவதும் இந்த இரண்டு தளிகளின் ஆய்வில் நிறைந்தது. மாமல்லையை நீங்கும்போது இரவு தொடங்கிவிட்டது.

மே முதல் நாள் என் இனிய நண்பரும் இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையின் நீண்ட கால நெறியாளருமான திரு. அஷ்ரப் மதிப்புமிகு மருத்துவர் பி. சி. ராய் விருதைப் பெற்ற தகவல் கிடைத்தது. அவரது தொண்டுள்ளத்திற்கும் நட்பைப் போற்றும் பெரும் பண்பிற்கும் அனைவரையும் தழுவிச் செல்லும் பாங்கிற்கும் கிடைத்த விருதாகவே அதைக் கருதி அவரை வாழ்த்தினோம். வரலாறு ஆய்விதழிற்கும் ஆய்வு

மையத்தின் பணிகளுக்கும் எப்போதும் துணையிருக்கும் இனிய பேராளர் அவர்.

மே 11 நண்பர் பத்மநாபனுடன் திருச்செந்துறை, அல்லூர்க் கோயில்களைப் பார்வையிடச் சென்றோம். என் தொடக்கக் காலப் பணிகளுள் அக்கோயில்கள் அடக்கம். செந்துறையில் தான் சக்திசதுஷ்கா திருமேனியைக் கண்டறிந்து வெளிப்படுத்தினேன். வைகுந்த நாராயணர் என்ற பெயரில் காஷ்மீரத்தில் வழக்குப் பெற்றிருந்த திருமாலின் இறைவடிவத்திற்கான தேவியாக சக்திசதுஷ்கா குறிக்கப்படுகிறார். இக்கண்டுபிடிப்புப் பற்றிய கட்டுரை தினமணிகதிரிலும் கலைமகளிலும் சிறக்க வெளியிடப்பட்டிருந்தது. கோயில் திருப்பணியின்போது கோபுரத்திலிருந்த அந்த இறைவடிவம் முற்றிலுமாய் மாற்றப்பட்டு அதன் பெருமையை இழந்தது. பத்மநாபனிடம் வைகுந்த நாராயணர் குறித்த பல செய்திகளைப் பகிர்ந்து கொண்டதோடு அந்தக் கோபுரத்தில் ஆனந்ததாண்டவ விஷ்ணுவைக் கண்டறிந்தது குறித்தும் கூறினேன் கோபுரத்திலிருந்த பாலுணர்வுச் சிற்பங்களைப் பற்றிப் பேசியவாறே கோயிலுக்குள் நுழைந்தோம்.

விமானக் கட்டுமானத்தில் பத்மநாபன் ஈடுபட்டார். தாங்குதளத்திலும் சுவர்களிலும் இருந்த கல்வெட்டுகளை ஆய்வு செய்தபடி தென்புறத்தே இருந்த நிலமளந்தகோல்களைப் பார்வையிட்டோம். இரண்டு கோல்களும் கல்வெட்டுப் பொறிப்புகளால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தமை காட்டி விளக்கினேன். தென்மேற்கிலிருந்த விசுவநாதர் திருமுன் தூண்களின் கட்டு, தொங்கல் சிற்பங்களையும் தாங்குதளத்திருந்த புழலைய விண்ணகரம் குறித்த கல்வெட்டுகளையும் நளினி விளக்கினார். கிரீவத்திலிருந்த ஆடற்சிற்பங்களையும் பார்த்து முடித்து அல்லூர் புறப்பட்டோம்.

அல்லூர்ப் பசுபதீசுவரம் மறக்கமுடியாத ஆய்வுக்களமாகும். நான், வாணி, அப்துல்மஜீது, ஆறுமுகம் நால்வரும் இணைந்து ஆய்வுசெய்த கோயிலது. அக்கோயில் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்தவாறே, கோயிலின் வெளிப்புறத்தை ஆய்வுசெய்தோம். சுந்தரசோழரின் கல்வெட்டுகளைப் படிக்கும் முயற்சியில் பத்மநாபன் ஈடுபட்டார். சிவாச்சாரியார் துணையுடன் உள்ளிருந்த சிற்பங்களையும் ஆய்வுசெய்தோம். சிறிய கோயில் என்றாலும்

அல்லூர், அமைந்திருக்கும் இடத்தாலும் கல்வெட்டு இருப்பாலும் சிராப்பள்ளி மாவட்டத்தின் சிறப்புக்குரிய கோயிலாகவே கொள்ளப்படும்.

மே 17 சனியன்று திருவானைக்காவில் அமைந்துள்ள திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான தேவாரப்பள்ளிக்கு மடத்தின் தலைவர் சீர்வளர்சீர் சிவப்பிரகாசர் வந்திருப்பதாகவும் அவர் என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் திரு. இரா. காளத்தி நாதன் தெரிவித்தார். சந்திப்புப் பயனுடையதாக அமைந்தது. கோயில்கள் தொடர்பாகப் பலவும் பேசினோம். திருவிடை மருதூர்த் திருக்கோயிலில் இருந்த நல்லூர் ஆடவல்லான் திருமேனியை மீளாய்வு செய்ய அவரது இசைவைப் பெற்றேன். திருமடம் சார்ந்த கோயில்களை முழுமையான அளவில் ஆய்வு செய்து நூலாக்க வேண்டுமென்று அப்பெருந்தகை விரும்பினார். நன்கு திட்டமிட்டு அப்பணியை மேற்கொள்ளலாம் என முடிவு செய்தோம்.

வரலாறு 19ஆம் தொகுதிக்கான கல்வெட்டுகள் குறித்துத் திட்டமிட நிருவாகக் குழுக் கூட்டம் கூடியது. புதிய கல்வெட்டுகளாக உடையாளூர்க் கயிலாசநாதர் கோயிலில் நானும் நளினியும் படியெடுத்த 10 கல்வெட்டுகளையும் துண்டுக் கல்வெட்டுகள் சிலவற்றையும் பதிப்பிக்கக் கருதினோம். பதிப்பிக்கப்படாத பாடங்கள் பகுதியில் உடையாளூர்க் கயிலாசநாதர் கோயில் கல்வெட்டுகள் 12 இடம்பெற்றன.

19 இந்தியத் தொல்லியல்துறையின் தஞ்சாவூர்ப் பராமரிப்பு அலுவலர் இசைவுடன் இராஜராஜீசுவரத்தின் சோழர் ஓவியங்களை, பத்மநாபன், சீதாராமன், இலலிதாம்பாள் துணையுடன் 'வாணன் வந்து வழிதந்து' நூலுக்காக மீளாய்வு செய்தோம். அலுவலர்கள் குமாரும் அண்ணாதுரையும் உடனிருந்து உதவினர். தடுத்தாட்கொண்ட புராணம் தொடர்பான சுவரோவியக் காட்சிகளை மட்டுமே அன்று விரிவான பார்வைக்கு எடுத்துக் கொண்டோம். சுந்தரரின் வாழ்க்கைக் காட்சிகளில் உச்சமான சிலவற்றைத் தேர்ந்து, சுவரின் அளவிற்கேற்ப மிக நன்கு திட்டமிட்டு அவற்றைப் பதிவுசெய்திருக்கும் சோழ ஓவியர்களின் ஆற்றலும் திறனும் காணக்காண வியப்பு மேலிடச் செய்தன.

பல ஆண்டுகளுக்கு முன்பே அகிலாவும் நளினியும் அந்த ஓவியங்களை மிகுந்த அக்கறையுடனும் எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் அணுகி அளவற்ற தரவுகளைத் தொகுத்திருந்தனர். பல இடங்களில் ஓவியங்கள் சிதைந்திருந்தபோதும் தென்பட்ட அனைத்தையும் அவர்கள் சேகரித்திருந்த அருமைப் பாட்டை அன்று நன்கு உணர்ந்தேன். ஐயப்பாடு நேர்ந்த மிகச் சில இடங்களில் ஒருமுறைக்கு இருமுறை பார்த்துத் தரவுகளை நேர்செய்து கொண்டோம். பத்மநாபனும் சீதாராமனும் நளினி, அகிலாவின் உழைப்பை வியந்து போற்றினர். அச்சுவரோவியத்தில் வெளிப்பட்ட சோழர் கால நாகரிகம், பண்பாடு குறித்து அன்று மிக விரிவாகப் பேசினோம். வரலாறும் காலமும் ஒன்றையொன்று சார்ந்தும் தழுவியும் எப்படியோ, எவ்வாறோ காட்சிகளாகப் பதிவாகிவிடுகின்றன.

கரணச் சிற்பங்களையும் வளாகத்திருந்த திசைத்தெய்வங்களையும் மாலையில் பார்த்தோம். அக்னி, வருணன், ஈசானன், குபேரன் சிற்பங்கள் கண்களை நிறைத்தன. முன்பே பார்த்தவைதான் என்றாலும், அளவும் அமைப்பும் அவற்றை இணையற்ற சோழர் காலத் திசைத்தெய்வங்களாக நிலைநிறுத்தியுள்ளன. தமிழ்நாட்டில் வேறெந்தக் கோயிலிலும் இவற்றிற்கு இணையான சிற்பங்களைக் காணவியலாது.

24, 25 இருநாட்களும் பழுவூர், கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம் கோயில்களைப் பார்க்கும் வாய்ப்பமைந்தது. காலை 8. 30 அளவில் மேலப்பழுவூர்ப் பகைவிடைஈசுவரத்தில் சிவாச்சாரியார் வாமதேவசிவத்தின் உதவியுடன் ஆய்வு தொடங்கினோம். தொடக்கக் காலப் பழுவூர் ஆய்வுகளின் நினைவுகள் போகும் இடமெல்லாம் பின்தொடர, சிற்பங்களை ஒவ்வொன்றாக மீளாய்வு செய்தோம். தமிழ்நாட்டின் மிகச்சிறந்த சோழர் காலச் சேட்டைத்தேவியின் சிற்பம் அங்குதான் உள்ளது. எழுவர் அன்னையரின் சிற்பத்தொகுதியையும் ஊர்த்வதாண்டவரின் எழிலார்ந்த கோலத்தையும் மீண்டும் மீண்டும் இரசித்து மகிழ்ந்தோம். தமிழ்நாட்டில் இன்றைக்குப் பார்வைக்குக் கிடைக்கும் சோழர் கால எழுவர்அன்னையர் தொகுதிகளில் மிகச் சிறந்த இரண்டு தொகுதிகள் பழுவூரிலேயே அடைக்கலமாகியுள்ளன.

சிராப்பள்ளி மாவட்டம் நெடுங்களத்திலும் நங்கவரத்திலும் உள்ள தொகுதிகளினும் இவை சற்றே அழகு கூடுதலானவை. பகைவிடைஈசுவர விமானத்தின் சாந்தார நாழியில் சுற்றி வந்தபோது அகிலாவுக்காக அந்தக் கோயிலை முழுமையான அளவில் ஆய்வுசெய்தமை நினைவுக்கு வந்தது. ஒரு கோயிலை பலமுறை பார்க்கும்போதுதான் புரிதல் கூடுதலாகிறது. கால இடைவெளிகள் பார்வைகளைக் கூர்மைப்படுத்த, பட்டறிவு, அணுக்கத்தின் விளைவாக வரலாற்றை விரிவு செய்யும் ஆற்றலைத் தருகிறது.

கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருகம் என்றென்றும் எங்கள் கருத்தில் நிறைந்த இரட்டை விமான வளாகமாகும். 15 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த நிலையிலிருந்து அணுவளவு முன்னேற்றமும் இல்லாமல், பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னம் என்னும் பரிதாப அறிவிப்பைச் சுமந்தபடி அக்கோயில் எங்களைப் பார்த்த பார்வையில் கவலையும் துன்பமும் தெரிந்தது. சோழர்களின் எழுச்சி மிகு சிற்றரசர்களாக வாழ்ந்து மறைந்த பழுவேட்டரையர்களின் 9ஆம் நூற்றாண்டுப் படைப்புப் புதையல்களான அக்கோயில்கள் அரசின், மக்களின் பரிவின்மையால் வாடிக்கொண்டிருந்தன.

தலையை கனக்கச் செய்யும் அளவிற்கு பக்தி இருக்கும் நமக்கு, கோயில்களிடம் அன்பு இல்லையே என்று வருந்திய படியே அந்தச் சிற்பக் களஞ்சியங்களை உலாவந்தோம். தென்வாயில் ஸ்ரீகோயிலின் மகரதோரண ஊர்த்வஜாநு, சாலை, கிரீவகோட்டச் சிற்பங்கள், வலபிப் பூதங்கள் ஆகியன எத்தனை முறை பார்த்தாலும் தெவிட்டாத கண்ணமுதுகள் தமிழ்நாட்டில் பல கோயில்களில் சிவபெருமானின் ஊர்த்வஜாநுச் சிற்பங்கள் இடம்பெற்றிருந்தாலும் தென்வாயில் போன்ற இசைக்கூட்ட ஊர்த்வஜாநுவை வேறெங்கும் காணமுடிவ தில்லை. தோல், காற்று, நரம்பு, கஞ்ச வகை சார்ந்த நான்கு இசைக்கருவிகளும் கொண்டு கணங்கள் முழக்க, இறைவன் கரணம் நிகழ்த்தும் பழுவூர்க் காட்சி நானறிந்த அளவில் இந்தியாவிலோ, கம்போடியா உள்ளிட்ட கீழ்த்திசை நாடு களிலோ வேறெங்கும் கண்டிராதது. ஒரு சிற்றுருவச் சிற்பத்தில்

உலக சாதனை புரிந்துள்ள பழுவூர்ச் சிற்பிகளை உளமாரப் போற்றியபடியே அவனியிடம் விடைபெற்றோம்.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் காவலர் திரு. ஸ்ரீராம் அளித்த மதிய உணவுக்குப் பிறகு முதலாம் இராஜேந்திரரின் கட்டுமான அற்புதத்தைக் கண்களில் நிறைத்துக் கொள்ளச் சுற்றில் கால் பதித்தோம். முதலாம் இராஜராஜரின் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் கட்டுமான கம்பீரம் என்றால், இராஜேந்திர ரின் கங்கைகொண்ட சோழீசுவரம் கட்டுமான அற்புதம் என்பதே பொருந்தும். நாகரமாகத் தொடங்கித் திராவிடமாக வளர்த்தி, வேசரமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் சோழீசுவர விமானம் தமிழ்நாட்டின் கட்டுமான இமயம். அதைக் காணும் போதெல்லாம் என் உள்ளம் பெருமிதத்தால் விம்மும். எப்படிச் சாதித்தனர் இதை எனக் கேள்விகள் கூத்திடும். விளங்கிக் கொள்ளமுடியாத அந்தப் பொறியியல் வீரியம் தமிழ்த் தொழிலர் களின் அறிவு நேர்த்தியையும் ஆற்றலின் அடங்கா உயரத்தை யும் கண்முன் நிறுத்திக் களிப்படையச் செய்யும். ஸ்ரீராம் கருவறையைச் சுற்றியுள்ள சாந்தாரத்திற்குள் அழைத்துச் சென் றார். இராஜராஜீசுவரம் போல் இங்குச் சாந்தாரத்தில் ஓவியங் களோ, கரணச் சிற்பங்களோ இல்லை என்றாலும், அந்தச் சாந்தாரப் பாதையிலிருந்து இது வேறுபட்டிருப்பதையும் தனித்துவத்தோடு விளங்குவதையும் அறியமுடிந்தது. தமிழ் நாட்டிலேயே மூன்று தளங்களில் சாந்தார நாழி பெற்று விளங் கும் ஒரே திருக்கோயிலாகக் கங்கைகொண்ட சோழீசுவரமே திகழ்கிறது. சாந்தாரநாழியின் பூதவரியும் தனித்துவமானது.

கோயிற் கட்டடக்கலை பயிலும் ஆய்வாளர்கள் அனைவ ருமே கங்கைகொண்ட சோழீசுவரத்தை நன்கு பார்த்துப் பயிலுதல் பயன்தரும். ஸ்ரீராமின் உதவியோடு மகிடாசுரமர்த்தினி உள் ளிட்ட அனைத்துச் சிற்பங்களையும் நன்கு ஆய்வுசெய்ய வாய்த் தது. கங்கைகொண்டசோழீசுவரத்தைப் பற்றிய முழுமையான நூல் படைப்பது இயலுவதன்று என்பதை அன்று உணர்ந் தேன். அந்தக் கோயில், காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரம், தஞ்சா வூர் இராஜராஜீசுவரம் போலக் காண்பதற்கும் களிப்பதற்கும் காதலிப்பதற்கும் மட்டுமே உருவான கட்டுமானம். அதைக் கைக்குள் பிடிப்பதோ, சொற்கட்டுக்குள் சிறைப்படுத்துவதோ இந்தச் சிறுவனுக்கு இயலுவதன்று.

மறுநாள் காலை திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயிலுக்குச் சென்றோம். கோயில் அலுவலர் திரு. செந்தில் அன்புடன் வரவேற்றுக் கோயிலைச் சுற்றிக் காட்டினார். சில செப்புத்திருமேனிகளையும் பாவைவிளக்குகளையும் பார்வையிட்டோம். மண்டபமொன்றின் தூண்களிலிருந்து கல்வெட்டுகளையும் பிற்சோழர் காலச் சிற்பங்களையும் கண்டறிந்தோம். பல அரிய சிற்பங்கள் ஆய்வில் வெளிப்பட்டன. அவற்றுள் சிவபெருமானின் ஆடற்கோலங்கள் குறிப்பிடத்தக்கன மதிய உணவுக்குப் பிறகு தாராசுரம் ஐராவதீசுவரர் கோயிலுக்குச் சென்றோம். இந்தியத் தொல்லியல்துறையின் உதவியாளர்கள் துணையுடன் நாயன்மார் சிற்பத்தொகுதிகளையும் சுற்று மாளிகையின் சிற்பத்தொகுதிகளையும் மீளாய்வு செய்தோம் பல புதிய தகவல்களைப் பெறமுடிந்தது.

பிற்சோழர் காலத்திலேயே தமிழ்நாட்டில் கோலாட்டம் இடம்பெறத் தொடங்கிவிட்டமை தெரியவந்தது. விஜயநகர அரசுக் கால முதன்மை ஆடலாகக் கோலாட்டம் தமிழ்நாட்டின் பல கோயில்களில் சிற்பக் காட்சிகளாகப் பதிவாகியுள்ளது. கத்திக்கூத்தும் கழைக்கூத்தின் ஓர் அங்கமாகத் தாராசுரத்தில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது. இந்த முறை பேடியாடலையும் பார்த்து ஆராய முடிந்தமை குறிப்பிடத்தக்கது. தாராசுரம் கோயில் ஆடற்கலைச் சிற்பங்களின் அற்புதக் களஞ்சியம். வாய்ப்பமையும்போது அதை விரிவான அளவில் ஆராயவேண்டும் எனக் கருதினேன். சுருங்கிய வாழ்க்கையில் எவ்வளவோ நினைத்தாலும் அனைத்தையுமா செய்யமுடிகிறது. எது அமைகிறதோ அதுவே வாழ்க்கையாகிறது. கனவுகளோடு கனத்த இதயம் கண்களைப் பனிக்க வைத்தது.

திரு. மகாதேவன் பணிப்பாராட்டு நூல் சென்னை அலமு அச்சகத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. நூல் வெளியீட்டு விழாவை எப்போது வைத்துக் கொள்ளலாம், விழாவிற்கு யார் யாரை அழைக்கலாம் என்பது குறித்துக் கலந்துரையாடப் பதிப்புக் குழுக் கூட்டம் கூடியது. தமிழகத் தொல்லியல் கழகத்தை வழிநடத்திச் செல்பவரும் தமிழகத்தின் பெருமைக்குரிய கல்வெட்டறிஞருமான பேராசிரியர் எ. சுப்பராயலு இந்நிகழ்ச்சியில் பங்கேற்று மகாதேவனைப் பெருமைப்படுத்த வேண்டுமென நான் விரும்பிய

தால், அதைக் குழுவினரிடம் தெரிவித்தேன். அனைவரும் என் கருத்தை ஒருள்ளத்தினராய் ஏற்றதுடன், பேராசிரியரை அழைக்கும் பொறுப்பை என்னிடமே ஒப்புவித்தனர்.

விழாத் தொடர்பான கலந்துரையாடல் பேராசிரியர் அரசு வின் வழிகாட்டலில் நிகழ்ந்தது. ஆகஸ்டு 16 ஐராவதி பணிப் பாராட்டு நூல் வெளியீட்டு விழாவைச் சென்னைப் பல்கலைக் கழக மரினா வளாகக் கூடத்தில் அமைக்க முடிவாயிற்று. அண்ணா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் திரு. ஆனந்த கிருஷ்ணனை நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்க அழைக்கலா மென முடிவு செய்தோம். நிகழ்ச்சியின் பிற பங்கேற்பாளர்களா கத் தமிழ்நாடு தொல்லியல்துறையின் ஆணையர் திரு. அருள் மொழி, அறநிலையத்துறை ஆணையர் திரு. பிச்சாண்டி ஆகியோரை அழைக்கக் கருதினோம். விழாத் தொடர்பான பொறுப்புக்களைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் தங்களுக்குள் மிகுந்த மகிழ்வோடும் விருப்போடும் பகிர்ந்து கொண்டனர்.

ஜூன் 5ஆம் நாள் மீனாட்சியம்மன் கோயில் ஆய்வுக்காக நானும் நளினியும் மதுரை சென்றோம். புலவரும் திரு. இராஜே ஷும் வரவேற்றுத் தங்கவைத்தனர். 6 காலை நண்பர் வேதாசலத் துடன் அழகர்கோயில் சென்றோம். சிறுவயதில் பார்த்த அந்த வளாகத்தைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு பார்ப்பதில் மனம் மகிழ்ந்தேன். அருமையான ஒருதள வேசர விமானம். தூண் சிற்பங்களில் மகப்பேறு சிற்பம் உளம் கவர்ந்தது. விமானத்தின் உபானத்தில் இரண்டு கூட்டல் குறிகளுடன் 76 செ. மீ. நீள முள்ள தச்சக்கோல் ஒன்றின் பொறிப்பினை நளினி கண்டறிந் தார். இத்தச்சக்கோல் பொ. கா. 1464இல் திருமாலிருஞ்சோலை நின்றான் மாவிலி வாணாதராயன் அழகர்கோயில் விமானத்தை உபானம் முதல் தூபிவரை புதுப்பித்துக் கட்டியபோது பயன் படுத்தியதாகலாம். விமான வடக்குச் சுவர் கருங்கல் சாளரக் கீழ்ப்பகுதியில் அர்த்தபத்மாசனத்தில் கண்டறியப்பட்ட உருவச் சிற்பம் வாணாதராயன் உறங்காவில்லிதாசனாக இருக்கலாம் என ஊகித்தோம். பலராலும் ஆராயப்பட்ட கள்ளழகர் கோயி லில் இரண்டு புதிய கண்டறிதல்களை நிகழ்த்த முடிந்தமை பெருமகிழ்வளித்தது.

மதிய உணவுக்குப் பிறகு கோயில் சுற்றையும் கல்வெட்டு களையும் வசந்த மண்டபத்தையும் பார்த்தோம். வசந்த மண்டபச் சுவரிலும் கூரையிலும் வரையப்பட்டிருந்த இராமாயண ஓவியங்கள் சுண்ணாம்புப் பூச்சால் சேதமாகியிருந்தன. அவற்றைச் சரிசெய்து பாதுகாக்குமாறு கோயில் இணை ஆணையரிடம் வேண்டுகோள் வைத்தோம். பழமுதிர்சோலை, நூபுரகங்கை சென்றபோது சிறுவயதில் என் குடும்பத்தாருடன் அவ்விடங் களைப் பார்வையிட்ட நினைவுகள் மலர்ந்தன. சுற்றியிருந்த மலைத்தொடரும் தொலைவில் தெரிந்த மேகங்களும் அந்த இடத்தின் அழகைக் கூடுதலாக்கின. மதுரை திரும்பியபோது அரசுவிடம் என் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டேன்.

மறுநாள் காலை நண்பர் வேதாசலம், புலவர், இராஜேஷ் உடன்வர நன்மைதருவார் கோயிலில் ஆய்வு தொடங்கினோம். மிக எளிய அமைப்பிலிருந்த அக்கோயிலைப் பார்வையிட்டு வண்டியூர் மாரியம்மன் கோயிலையும் தெப்பக்குளத்தையும் காணச் சென்றோம். நீராழிமண்டபம் மீண்டும் நினைவுகளைக் கிளறியது. எதிரிலிருந்த தியாகராயர் கல்லூரியில்தான் தந்தை யார் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். கல்லூரியையும் தமிழ்த்துறை அறையையும் பார்க்கக் கருதிப் புலவர் துணை யுடன் அங்குச் சென்றேன். கல்லூரி விழாவொன்றில் தந்தையா ருடன் கலந்துகொண்ட நினைவுகளும் கல்லூரி மாணவர் களும் ஆசிரியர்களும் இணைந்து இராஜராஜசோழன் நாடகம் நடத்தியமை குறித்த நினைவுகளும் நெஞ்சைச் சூழ்ந்தன.

கூடலழகர் கோயில் மதுரையின் மிகச் சிறந்த கட்டுமானங் களில் ஒன்று. மாடிக்கோயிலாக அமைந்த தமிழ்நாட்டின் மிகச் சில வைணவக் கோயில்களில் அதுவும் ஒன்று. அக்கோயிலை ஆய்வுசெய்யவேண்டும் எனப் பலமுறை கருதியதுண்டு. அந்த வாய்ப்பு அன்றைக்கு வாய்த்தது. கோயிலின் அனைத்துப் பகுதி களையும் நன்கு பார்க்கமுடிந்தது. கட்டுமான உத்திகளை இரசித்துக் குறிப்புகள் எடுத்தோம். காஞ்சிபுரம் பரமேசுவர விண்ணகரம், மன்னார்கோயில் இராஜேந்திரசோழ விண்ணக ரம், சேரன்மாதேவி இராமசாமிகோயில் முதலிய பிற மாடிக் கோயில்களோடு ஒப்பிட்டுக் கூடலழகரின் தனித் தன்மைகளை அறிய முயற்சித்தோம். மதிய உணவு நண்பர் வேதாசலத்தின்

இல்லத்தில் அமைந்தது. அவரது துணைவியார் மிகச் சிறப்பான உணவளித்துப் போற்றினார். அன்போடு அளிக்கப்படும் உணவின் சுவையே தனிதான். மாலையில் ஐயபொழில் ஈசுவரம் கண்டு திருவாதவூர்த் திருக்கோயில் சென்றோம். கோயில் அமைப்பும் சூழலும் உள்ளத்தைக் குளிர்வித்தன. திரும்பும் வழியில் என் வகுப்புத்தோழர் மருத்துவர் இலட்சுமணனைச் சந்திக்கும் வாய்ப்பு வேதாசலத்தின் உதவியால் அமைந்தது.

மறுநாள் காலை மீனாட்சியம்மன் கோயிலின் சங்கப் புலவர் திருமுன், இறைவன், அம்மன் திருமுன் விமானங்கள், எழுவர் அன்னையர் - சூரியன் சிற்பங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தோம் வேதாசலம் உடனிருந்தார். மதிய உணவு அவர் இல்லத்திலேயே அமைந்தது. அவரது திருமகள் நங்கையைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அருமையான குடும்பம். நண்பர் வேதாசலத்தின் நூலகம் என்னை அதிரவும் மகிழவும் செய்தது. நூல்களுக்காக நிறைய உழைத்திருக்கிறார். பல அருமையான நூல்களைக் காணமுடிந்தது. நான் அறிந்தவரையில் தொல்லியல்துறையில் இத்தகு நூலகம் கொண்டவர்கள் மிகச் சிலரே. வேதாசலத்தின் மேல் மிகுந்த மதிப்பேற்பட்டது. படிப்பதுடன், படித்தவற்றைப் பகிர்ந்துகொள்ளும் பண்பாளர் அவர். எங்கள் ஆய்வுகளின்போது தேவையான சில கட்டுரைகளையும் நூல்களையும்கூட அவர் ஒளிப்பதிவு செய்து வழங்கியுள்ளமை என்றும் நன்றியுடன் நினைக்கத்தக்கது. மாலை, 11 நிலைகள் பெற்ற பராக்கிரமபாண்டியன் கோபுரத்தில் ஏறினோம். மதுரையின் காட்சி மனதை மயக்கியது.

ஜூன் 16 அன்று அந்தமான் தீவுகள் பார்ப்பதற்காக நானும் என் வாழ்வரசியும் போர்ட்பிளேர் சென்றோம். முதற் பயணம் ராஸ் தீவில் எஞ்சியிருந்த வரலாற்றுச் சுவடுகளைக் காண்பதாக அமைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது இந்தத் தீவை ஜப்பானியர்கள் தங்கள் கைக்குள் வைத்திருந்ததாகக் கூறினார்கள். கட்டடச் சிதைவுகளின் மீது அவற்றைத் தழுவி வளர்ந்திருந்த மரங்களும் கொடிகளும் அரிய காட்சியைத் தந்தன. ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழும் இத்தீவு சில காலம் இருந்துள்ளது. ஓர் ஊரைப் போர் எப்படிச் சிதைக்கமுடியும் என்பதற்கு இத்தீவு சான்றாக நின்றது. வைப்பர் தீவு, நார்த்பே பார்த்தோம்.

பவழப்பாறைகள் பார்க்கப் படகில் சென்றோம். கடல் பார்வை யாகப் பவழப்பாறைகளைப் பார்ப்பது அதுவே முதல் முறை. படகின் கீழ்ப்பகுதியில் கண்ணாடி பதிக்கப்பட்டிருந்ததால் மிக நன்றாக அவற்றைக் காணமுடிந்தது.

மாலை அந்தமான் சிறையைப் பார்வையிட்டோம். அதைப் பற்றியும் அங்கு நிகழ்ந்தன பற்றியும் விரிவான அளவில் படித் திருந்தபோதும் வளாகத்திற்குள் கால் பதித்தபோது அறியாத பல வற்றை அறிந்துகொள்ளப் போகும் உணர்வே மேலோங்கியது. ஒலி, ஒளிக்காட்சியில் அச்சிறையின் வரலாற்றை மிகச் செழுமையுடன் படம்பிடித்திருந்தார்கள். எத்தகு பேரிழப்பிற் குப் பிறகு இந்திய மண் விடுதலைக் காற்றை உள்ளிழுத்திருக் கிறது என்பதை உணர நேர்ந்தபோது உள்ளம் குலுங்கியது. இந்த விடுதலைக்குப் பின் எத்தனை மனிதர்களின் உழைப்பும் உயிர் இழப்பும் இருந்திருக்கிறது என்பதை ஒவ்வொரு தலைமுறை இந்தியர்களும் அறிதல் வேண்டும். கனத்த நெஞ்சோடு விடுதி திரும்பினோம்.

செவ்வாய் அன்று ஹேவ்லாக் தீவுக்குச் செல்வதற்காகக் கப்பலில் பயணப்பட்டோம். ஏறத்தாழ நான்கு மணிநேரப் பயணத்தில் தீவையடைந்து விடுதியில் ஓய்வெடுத்து மாலை இராதாநகர் கடற்கரைக்குச் சென்றோம். நான் எதிர்பார்த்ததை விட மிக அழகாகவும் தனிமையின் பெருமையை உணர்த்துவ தாகவும் அக்கடற்கரை அமைந்திருந்தது. ஆள்நடமாட்டமே இல்லாத அக்கடற்கரையில் மனம் போன போக்கில் உலவி யமை இப்போது நினைத்தாலும் தென்றலின் வருடல் போல குளிர்விக்கிறது. ஆழிப்பேரலையின் விளைவாக விழுந்த மரங் களும் கடலோரம் ஒதுக்கப்பட்ட சிதைந்த படகுகளின் எச்சங் களும் பரவிக்கிடந்த சங்குகளும் மாலை நேர வானத்தின் வண்ணங்களும் உள்ளத்தில் பல்விதமான உணர்வுகளை எழுப்பின. இலேசாக இருட்டும்வரை கடலையும் கரையையும் வானையும் இரசித்தபடி இருந்து விடுதி திரும்பினோம். விடுதிக் குப் பின்னிருந்த கடற்கரையில் சிறிது நேரம் அமரக்கருதிச் சென்றபோது பல திசைகளிலிருந்தும் படையெடுத்து வந்த நண்டுக் கூட்டம் அச்சுறுத்தியது. நூற்றுக்கணக்கான நண்டு களைக் கடற்கரை மணலில் நேரடியாகப் பார்ப்பது அதுவே

முதல் முறை. தொலைவிலிருந்து சிறிது நேரம் நண்டுகளின் ஊர்வலத்தைக் கண்டு களித்து விடுதி திரும்பினோம்.

மறுநாள் காலை பவழப்பாறைகளைப் பார்ப்பதற்காக யானைத்தீவுக்குச் சென்றோம். தனியானதொரு படகில் வங்காள விரிகுடாவில் பயணித்த அந்த ஒரு மணிநேரம் வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது. யானைத்தீவை அடையும் வரை எங்கள் உயிர் எங்களிடம் இல்லாதது போலவே உணர்ந்தோம். அலைகளின் வழக்கத்திற்கு மாறான எழுச்சியும் அச்சத்தைக் கூட்டியது. தீவின் கடற்கரையில் உரிய மூச்சுக் கருவிகளின் துணையோடு படகோட்டி திரு. கமலின் வழிகாட்டலில் ஆழமற்ற கடலுக்குள் நீந்திப் பவழப்பாறை களைப் பார்த்தோம். படகிலிருந்து பார்த்ததைவிட நேரடியாக அருகிலிருந்து பார்த்தது பிரமிப்பூட்டுவதாக இருந்தது. ஆளரவமற்ற அக்கடற்கரையிலும் சில மணி நேரம் உலவி மகிழ்ந்தோம். தனிமையின் பெருமை இயற்கையின் தழுவல் அனைத்தும் உணர்ந்தோம். மீண்டும் விரிகுடாவில் படகுப் பயணம். மாலை இராதாநகர் கடற்கரை எங்களை வரவேற்றது. மூன்று மணிநேரம் வரலாற்று நிகழ்வுகளைப் பகிர்ந்தபடி கடலோடு கலந்திருந்தோம். இரவு தழுவத் தொடங்கியபோது நண்டுகளின் ஊர்வலம் கண்டோம். மருட்சியும் வியப்புமாய் ஹேவ்லாக் திரும்பினோம்.

வியாழன் காலை யானைகளின் பயிற்சிக்கூடம் பார்ப்ப தற்காகக் காட்டுக்குள் சென்றோம். யானைப்பாகனின் துணைவி காட்டின் ஒரு பகுதியைக் காட்டி விளக்கிக் கொண்டிருக்கும் போதே அந்த அதிசயம் நிகழ்ந்தது. எத்தனையோ கட்டுரை களில் 'அரவணைப்பு' என்ற சொல்லை எண்ணற்ற முறைகள் பயன்படுத்தியுள்ளேன். கோயில் சாளரங்கள் சில, பாம்புகள் பின்னிப் பிணைந்திருக்குமாறு செதுக்கப்பட்டுள்ளமையையும் கண்டிருக்கிறேன். ஆனால், பாம்புகள் எப்படித் தழுவிக் கொள்ளும் என்பதை நேரிடையாகப் பார்த்ததில்லை. அன்று தான் முதல் முறையாக இரண்டு பாம்புகள் ஒன்றையொன்று தழுவிப் பின்னிப் பிணைந்து, நெடுக எழுந்து, தாழ்ந்து புணர்ந்த காட்சியைப் பார்த்தேன். உள்ளத்தை உறைய வைத்த காட்சியது. சில நிமிடங்களே கண்டிருந்தபோதும் அழுத்தமாக நினைவுத்

திரையில் பதிவாகிவிட்ட அந்தப் பாம்புப் பிணைப்பே அரவணைப்பை எனக்கு விளக்கியது. அருகே இருந்த கடற் கரையில் விதம்விதமான சங்குகளைப் பார்த்தோம். பிற்பகல் ஹேவ்லாக்கை நீங்கி, போர்ட்பிளேரை அடைந்தோம்.

மறுநாள் தாவரவியல் பூங்கா சென்றோம். அந்தமான் தீவுகளில் வளரும் மரங்கள், செடிகளைப் பாலக்காட்டு நண்பர் ஒருவர் காட்டி விளக்கினார். தேசியக் கடல் பூங்கா அந்தமானின் கடல் வளத்தை அறியச் செய்தது. ரெட்ஸ்கின் தீவுக்கான பயணம் பெரிய அளவிலான படகில் அமைந்தது. தீவிற்குச் சற்று முன்பே படகு நிறுத்தப்பட்டது. சிறிய அளவிலான விசைப்படகுகள் எங்களைத் தீவுக்கு அழைத்துச் சென்றன. வேறெந்தத் தீவிலும் பார்க்காத சங்கு, கிளிஞ்சல் வகைகளைக் கண்டோம். தீவில் கால் போன போக்கில் நெடுந்தூரம் நடந்து சென்று தீவின் அழகையும் தனிமையையும் இரசித்து மகிழ்ந்தோம். அந்தமான் தீவுகளின் சிறப்பே இயற்கையோடு இயைய நமக்குக் கிடைக்கும் நிகரற்ற தனிமைதான். இங்கும் பவழப் பாறைகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. போர்ட்பிளேர் திரும்புகையில் வழியில் வாந்தூர் கடற்கரையில் சில மணி நேரம் கடலும் வானமும் காட்டிய காட்சிகளை இரசித்தபடி, உரையாடி, வரலாறு பேசி இராஜராஜரை நினைத்துத் திரும்பினோம்.

சனியன்று தேசிய, காடுசார் அருங்காட்சியகங்கள் பார்க்க வாய்த்தது. அந்தமான் தீவுகளைப் பற்றிய கூடுதல் புரிதலை அவை அளித்தன. காலை 11. 30 அளவில் அந்தமான் சிறைச் சாலை சென்றோம். உள்ளத்தை உலுக்கும் அதன் வரலாற்றைப் பார்த்தும் கேட்டும் உறைந்தோம். சில நூல்கள் கேட்டுப் பெற்றேன். மாலை வைப்பர் தீவு சென்றோம். உலகப்போர் வரலாற்றை அத்தீவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பார்க்க முடிந்தது. 20ஆம் நூற்றாண்டு இந்திய, உலக வரலாற்றில் அந்த மானுக்குக் குறிப்பிடத்தக்க இடம் உள்ளது. தேசிய விடுதலை வரலாற்றைப் பயில்வோரும் பயிற்றுவிப்போரும் அந்தமான் தீவுகளில் சிறுநடையாவது பழகவேண்டும். அடுத்தநாள் அந்தமான் பயண அனுபவங்களை அரசுவிடம் பகிர்ந்துகொண்டேன். தேசிய விடுதலை வரலாற்றில் தெளிவான அறிவும்

பரந்துபட்ட படிப்பும் கொண்ட அவர் அந்தமான் தீவுகள் பார்க்கவேண்டிய அவசியத்தை உணர்த்தினேன். அந்தமான் பயணம் உலகப் போர் பற்றிய என் கண்ணோட்டத்தை மாற்றியது. அந்தச் சிறைச்சாலை, அதன் சூழல், அங்கிருந்த பதிவுகள் முதலியன இந்திய விடுதலைப் போர் பற்றிய தெளிவான சிந்தனைகளுக்கு வித்திட்டன. அந்தமானின் அழகான கடற்கரைகள் தனிமையின் பெருமையை என்னுள் நிலைநிறுத்தின. சுருங்கச் சொன்னால் அந்தமான் எனக்குப் பேரெழுச்சி தந்தது.

ஜூன் இறுதி வாரம் மாமல்லபுரம் ஒருகல் தளிகள் பற்றிய ஒப்பாய்வில் ஈடுபட்டோம். வேண்டுமளவிற்குக் களப்பணிகளை முடித்திருந்த நிலையில் சேகரித்திருந்த தரவுகளின் அடிப்படையில் தளிகளின் ஒவ்வோர் உறுப்பாக ஒப்பீட்டைத் தொடங்கினோம் துணைத்தளம், தாங்குதளம், விமானங்களின் கீழ்த்தளம், சுற்றுவழி, முகப்பு இவை பற்றிய ஒப்பீடு பல்லவக் கட்டுமானங்கள் குறித்த பல உண்மைகளை முன்வைத்தது. நாங்கள் அறிந்தவரையில் அதுநாள்வரை இத்தளிகள் குறித்து இத்தகு ஒப்பீட்டு ஆய்வுகள் வரவில்லை. அதனால் மிகுந்த கவனத்தோடு, நன்கு உரையாடி ஆய்வைத் தொடர்ந்தோம்.

முன்றில், முகமண்டபம், முதல், இரண்டாம், மூன்றாம் தளங்கள், அவற்றின் ஆரங்கள் ஆகியவற்றின் தரவுகள், ஒருதள - இருதள - முத்தள விமானங்கள் பல்லவக் கைகளில் எத்தகு கட்டமைப்பைக் கொண்டன என்பதை நன்கு விளக்கின. இந்தத் தெளிவு பல்லவக் கற்றளிகளைப் புரிந்துகொள்ள உதவியது. பல்லவ ஆரங்கள் தனித்தன்மையன. அவற்றின் கட்டுக்கோப்பே தளிகளுக்குத் தனி அழகு தருவதைக் கள ஆய்வுகளில் உணர்ந்து மகிழ்ந்துள்ளோம். ஒப்பீட்டாய்வு பல்லவர்களின் அழகுணர்ச்சியையும் ஒருங்கிணைப்பில் அவர்களுக்கிருந்த அளப்பரிய திறத்தையும் வெளிப்படுத்தியது. நானும் நளினியும் அகிலாவும் கலந்துரையாடிப் பெற்ற ஆய்வு முடிவுகளைக் கட்டுரையாக்கினோம்.

கிரீவம், சிகரம், தூபி இம்மூன்றுமே ஒரு விமானத்தை முழுமை பெறச் செய்கின்றன. அவற்றை வடிவமைக்கும் சிற்பிகள் கீழ்க் கட்டுமானத்திற்கு உகந்த வகையில் இம்மேல் உறுப்புகளைத் திட்டமிட்டு எழுப்ப வேண்டும். மாமல்லபுரம் ஒருகல்

தளிகளில் பலவற்றிற்குத் தூபி கிடையாது. எனினும், அந்த விமானங்களைக் காணும்போது, தூபி இல்லாமை ஒரு குறை யாகவே கண்களில் படுவதில்லை. பலநிலைகளில் முழுமை யடையவில்லை என்றபோதும் ஒருகல் தளி விமானங்கள், எதிரில் நின்று பார்வைகளால் அளவளாவும் அன்பர்களுக்கு விருந்து படைக்கத் தவறுவதில்லை. இதைப் பல முறை உணர்ந்து உரையாடியிருந்த நிலையில் கிரீவம், சிகரம், தூபி ஒப்பாய்வில் எங்கள் எண்ணங்களைப் பதிவுசெய்தோம்.

இத்தளிகளின் கருவறைகளில் இரண்டில் மட்டுமே பல்லவர் கைவண்ண இறைவடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டுமே வடிவமைக்கப்பட்டுள்ள முறையில் இணை யற்றவை. எனினும், கொற்றவைத்தளியின் கருவறை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. தமிழ்நாட்டில் காணக் கிடைக்கும் காலத் தால் முற்பட்ட கொற்றவை விமானம் இது ஒன்றுதான். பிற தெய்வங்களுக்கு இணையாகப் பல்லவர் காலத்திலும் பழை யோள் மதிக்கப்பட்டமைக்குக் கொற்றவைத் தளியே சிறந்த சான்று. ஒரு பெண்தெய்வம் ஆண்தெய்வங்களுக்கு இணை யாகக் காவலர்கள் பெற்றுப் பழங்கால விமானம் ஒன்றில் ஆட்சி செலுத்துவது இங்கு மட்டும்தான். அத்யந்தகாமத்தினும் (தருமராஜர்தளி) கட்டுக்கோப்பான கருவறைக் காட்சிகளைக் கொற்றவைத் தளியிலேயே காணமுடிகிறது.

தமிழ்நாட்டில் நின்று நிலவிய கொற்றவை வழிபாட்டின் படப்பிடிப்பைக் கருவறைச் சிற்பங்கள் நிறுவ, கோட்டச் சிற்பங்கள், கொற்றவை மகிடாசுரமர்த்தினியாக மாற்றப்பட்ட வரலாற்றிற்குச் சான்றுகளாய் விளைந்துள்ளன. முல்லைப் பாட்டுக் காட்டும் சங்க காலப் பாசறைப் பெண்டுகளின் தொடர்ச்சி போலக் கொற்றவைத் தளி வாயிலின் இருபுறத்தும் நிற்கும் பெண்காவலர்களின் கைக்கருவிகள் பல்லவப் பெண் களுக்கு நாணமும் வெட்கமும் மட்டுமல்ல, வீரமும் வல்லமை யும்கூடக் கைவந்தவை என்பதை நன்கு வெளிப்படுத்துமாறு அமைந்துள்ளன.

ஒன்பது தளிகளின் கருவறை வாயில்களுள் மகரதோரண வாயில் கொற்றவைத் தளிக்கு மட்டுமே வாய்த்துள்ளது அத்யந்த காம மேற்றளக் கருவறை வாயில், கபோதத்தில் பூதத்தோரணம்

பெற்றுள்ளது. பழையோள் உமையோடு இணைந்து பழை யோள் குழவி மலைமகள் மகவாகும் விந்தையை இலக்கியப் பின்னணியில் இவ்விரு கருவறைகளும் படம்பிடித்து வைத் திருப்பதை வரலாற்று உணர்வுடையோர் தொடர்புபடுத்திக் கொள்ளமுடியும். பழையோளின் பழைமையைக் கட்டமைப்பி லும் நிறுவ விழைந்த பல்லவச் சிற்பிகள் அத்தளியைக் குடிசை வடிவிலேயே செதுக்கித் தந்திருப்பதை உணர்ந்து மகிழ்ந்தோம்.

தளிகளின் சிற்பங்கள் பேருழைப்பைக் கொண்டன. இச்சிற்பங்கள் 7, 8ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் நிலவிய நாகரிகம், பண்பாடு இவற்றை வெளிப்படுத்தும் வரலாற்று வடிவங்களாகத் திகழ்வதைத் தரவுகள் தெளிவாக் கின. ஆடை, அணிகலன்கள், முடியமைப்பு, உடலமைப்பு, இயங்கு நிலைகள், கருவிகள், உணர்வு வெளிப்பாடுகள், பழக்க வழக்கங்கள், பழகியிருந்த கலைகள், சமுதாயப் படிநிலைகள், வாழ்க்கை அமைப்பு, நம்பிக்கைகள், சடங்குகள் என இந்தச் சிற்பங்கள் வழி வெளிப்படும் பல்லவர் காலப் பண்பாட்டை மிகுந்த முயற்சியுடன் தொகுத்தோம். சிற்பங்களின் பொதுக் கூறுகளையும் உரியவாறு பதிவு செய்தோம். கைகளும் கைப் பொருள்களும் பல தெளிவுகளைத் தந்தன. தளிகளின் ஒப்பாய்வு முடிவுரையை நோக்கி நூலை நகர்த்தியது.

ஜூன் 28-30 மாமல்லபுரம் குடைவரைகள் ஆய்வுக்காகவும் ஒருகல் தளிகள் நூலுக்கான முடிவுரை குறித்த சிந்தனைகளை ஒருமுகப்படுத்தவும் நான், நளினி, அகிலா மூவரும் மாமல்ல புரத்தை முற்றுகையிட்டோம். குடைவரைத் தொகுதிகளில் ஒரு தொகுதியை முற்றிலுமாய் மாமல்லபுரத்துக் குடைவரைகளை விரித்துப் பேச ஒதுக்கிய நிலையில் முதல் நாள் வராகர் குடைவரையில் தொடங்கியது. சுவர்ச்சிற்பங்கள் இரண்டை யும் ஏற்கனவே ஆய்வுசெய்து தரவுகள் தொகுத்திருந்ததால் அவை தமிழ் இலக்கியங்களோடு எங்கேனும் ஒன்றுகின்றனவா என்ற கண்ணோட்டத்தில் உரையாடினோம். உலகளந்த பெருமாளின் உயர்த்திய திருவடிக்கு நான்முகன் பூசை செய்து போற்றும் நிகழ்வு முதலாழ்வார்களுள் ஒருவரான பூதத்தாழ் வார் அந்தாதித் தொகுப்பில் இடம்பெற்றுள்ளமை நினைவுக்கு வந்தது. வராகர் குடைவரைக் கருவறை, கட்டமைப்பில் மாறு

பட்ட அமைப்பினது. அது போலவே அக்குடைவரையில் நிகழ்ந்துள்ள பின்னாளைய பதிவுகளையும் கருத்தில் கொண்டோம். அன்று முழுவதும் அக்குடைவரை பற்றிய கருத்தாய்வே மூவரையும் முழுமையாய்க் கொண்டிருந்தது.

இரண்டாம் நாள் மும்மூர்த்தி குடைவரை சென்றோம். ஆளுக்கொரு பகுதியைத் தேர்ந்து முந்து ஆய்வுகளில் சேகரித்திருந்த தரவுகளைச் சரிபார்த்தோம். கொற்றவைப் பதிவு சிலப்பதிகாரத்தை நினைவூட்டியது. மிக விரிவான அளவில் அப்பதிவை நோக்கிக் கருத்துப் பரிமாற்றம் கொண்டோம். அதன் தோரண அமைப்பு மாமல்லபுரத்தின் வேறெந்தக் கட்டுமானத்திலும் பதிவாகாமை உணர்ந்தோம். தனித்துவம் வாய்ந்த அத்தோரணம் சிலம்பின் அடிகளுக்குள் எங்களைப் பயணப்பட வைத்தது. பெண்தெய்வ வழிபாட்டில் இது பற்றி விரிவான அளவில் குறிப்பிட்டுள்ளமை நினைவிற்கு வந்தது. இலக்கியப் பின்புலம் இல்லாமல் செய்யப்படும் கோயிலாய்வுகள் சமுதாயத்தின் நாகரிகப் பண்பாட்டு இழைகளை முறையாக வெளிப்படுத்தத் தவறிவிடுவதைப் பல நூல்களின் வழி அறிந்திருந்தமையால், எங்கள் ஆய்வுகளில் வாய்ப்புகள் அமையும் போதெல்லாம் இலக்கியத் தொடர்புகளை இணைத்தே வரலாற்றை வடிவமைத்திருக்கிறோம். இங்கும் அதே பின்புலத்தில் மும்மூர்த்தி குடைவரை கட்டுரையாகத் தொடங்கியது.

மூன்றாம் நாள் மாமல்லபுர ஒருகல் தளிகள் அனைத்தையும் முடிவுரை நோக்கில் பார்வையிட்டோம். மண்டபம், கிருகம், ஆயதனம், தேவகுலம் எனும் கட்டமைப்புப் பெயர்களைப் பல்லவக் கட்டுமானங்களோடு இணைத்துப் பார்த்தோம். தமிழ்நாட்டில் பார்வைக்குக் கிடைக்கும் எந்த ஒரு குடைவரையும் பிறந்த காலத்தில் ஆறங்கம் பெற்ற விமானமாக உருக்கொள்ளவில்லை. மகேந்திரர் குடைவரைகளிலோ, நரசிம்மரின் கல்வெட்டுள்ள கழுக்குன்றம் குடைவரையிலோ, மாமல்லபுரம் இராமானுஜ மண்டபத்துள்ளாற் போன்ற விமான அமைப்புச் சுட்டும் சிற்பங்களைக்கூடக் காணக்கூடவில்லை. பாண்டியர் பகுதியில் வரிச்சியூர் இரண்டாம் குடைவரையில் மட்டுமே விமானச் செதுக்கலைப் பார்க்கமுடிகிறது. இராமனுஜர் மண்டபமும் வரிச்சியூர் இரண்டாம் குடைவரையும் பொ. கா. 8ஆம்

நூற்றாண்டினவாகக் கொள்ளப்பட்ட நிலையில் மல்லைக் கடலோரம், திடீரென அதே காலகட்டத்தில் ஒன்பது விமானங்கள், ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட அமைப்பில் தோற்றம் காட்டியிருப்பதன் பின்னணியை ஆராயவேண்டிய அவசியத்தை உணர்ந்தோம்.

சங்கத் தமிழ் இலக்கியங்களிலோ, 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டுக் கிடைக்கும் கல்வெட்டுகளிலோ, பத்திமை இலக்கியங்களிலோ விமானம் என்ற சொல்லாட்சி இடம்பெறவில்லை. கோயில் சார்ந்த எண்ணற்ற கலைச்சொற்களைக் கையாண்டிருக்கும் சங்க, பத்திமை இலக்கியங்களின் இந்த மௌனம் வியப்பளித்தது. சங்கப் பாடல்கள் மண்டபக் கோயில்களே அக்காலப் பெருவழக்கென்பதைச் சுட்ட, கோட்டம், கோயில், நியமம், மன்றம் எனப் பல்வேறு சொற்களால் இறையகங்களைக் குறிக்கும் சிலம்பின் அடிகளும் கோபுரம், மாளிகை, சூளிகை எனும் கட்டுமானம் சார்ந்த பத்திமைக் காலச் சொல்லாட்சிகளும் பெருந்திருக்கோயில், கொகுடிக்கோயில், ஆலக் கோயில், கரக்கோயில், மாடக்கோயில், தூங்கானை மாடம் எனும் இறைக்கோயில் வகைப்பாடுகளும் பல்லவருக்கு முற்பட்ட காலத்திலேயே இறைக்கோயில் வடிவங்கள் தமிழ்நாட்டில் பல்வகைப்பட்டு இருந்தமையை உணர்த்துவது தெளிந்தோம்.

தமிழ்நாட்டுக் கோயில்களின் எண்ணிக்கையைச் சுட்டி, பின்னொட்டுக் கொண்டு அவற்றைப் பகுத்துக் காட்டி, மூன்றரை நூற்றாண்டுக் காலக் கட்டுமானக் கலை எழுச்சியைச் சரியான தளங்களில் அடையாளப்படுத்தியிருக்கும் ஒரே வரலாற்றறிஞரான அப்பரின் பார்வை, ஒருகல் தளிகள் ஒன்பதின் மாறுபட்ட வடிவங்கள் இயல்பான கலையெழுச்சியின் தோற்றங்களே என்பதைப் புரியவைத்தன. பல காலக்கட்டங்களில் நிகழ்ந்திருக்க வேண்டிய செயற்பாடுகள் என்று கருதத்தக்க அளவில் இத்தளிகளின் கட்டுமான உறுப்புகளும் உத்திகளும் பல்வேறு வளர்நிலைகளின் பரிமாணங்களைத் தொட்டுள்ளமை வியப்பளித்தது.

முன்றில், முகமண்டபம் இவற்றுடனும் இவை ஏதுமற்ற நிலையிலும் தோன்றியிருக்கும் விமானங்கள், சுற்றுவழிக்

கருவறைகள், நெருங்கிய, தள்ளிய ஆரவரிசைகள், பல்வேறு விமான வடிவங்களைக் கொண்ட கிரீவகோட்டங்கள், மாறி மாறி வரும் அன்னவரிகள், பஞ்சரங்கள் இவையும் தமிழ் நாட்டுக் கலைவரலாற்றின் முதலும் முடிவுமாகக் காட்சிதரும் சிற்பங்களும் முதன்முதலாகக் காட்சிதரும் சிற்பங்களும் பின்னாளைய உளிச்சிந்தனைகளால் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட சிற்பங்களும் இந்த ஒன்பது தளிகளில் உருவாகியிருக்கும் மாட்சி எண்ணுந்தோறும் அதிசயிக்க வைத்தது. இத்தளிகளில் வழங்கப்பட்டிருக்கும் சிந்தனை மலர்வுகளைப் பின்னாளைய தளிகள் எவற்றிலும், அவை பல்லவக் கைவண்ணங்களாகவே இருந்தபோதும், காணமுடியாமை, இவற்றை உருவாக்கிய சிற்பிகளுக்கு உந்து சக்தியாக விளங்கிய படைப்பாளியின் நிகரற்ற ஆற்றலையும் கற்பனை விரிவையும் பண்பாட்டுப் பார்வையையும் வரலாற்று நோக்கையும் தெளிவாக விளக்குவதைக் கலந்துரையாடல் வழி உறுதிசெய்தோம்.

இந்த ஒருகல் தளிகளின் படைப்பாளியைக் கண்டறியப் பல நோக்குகளில் அனைத்து வரலாற்றுத் தரவுகளையும் முன் வைத்துச் சிந்தித்தோம். எங்கள் கண் முன் இராஜசிம்மரே பேருருக் கொண்டு தோன்றினார். அவரது கற்றளிப் படைப்புகள் காட்டும் மாறுபட்ட காட்சிகள், அலங்கரிப்புப் புதுமைகள், அளவீடுகளில் உள்ள இடநேர்த்தி என அனைத்தும் ஒருகல் தளிகளில் இடம்பெற்றுள்ளமை அவரையே இத்தளிகளின் படைப்பாளியாக உறுதிசெய்யத் தூண்டியது.

இந்த மூன்று நாட்களில் வாய்ப்பமைந்த இரண்டாம் நாள் இரவு நானும் அரசுவும் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன் இல்லம் சென்று ஐராவதம் மகாதேவன் பணிப் பாராட்டு நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்று நடத்தித் தருமாறு அவரை அன்புடன் கேட்டோம். மிகுந்த மகிழ்வுடன் இசைவு தெரிவித்த பேராசிரியர் எங்கள் ஆய்வு மையத்தின் வரலாற்றுப் பணிகளைக் கேட்டறிந்தார். வரலாறு மின்னிதழ் பற்றிய தகவல்கள் அவருக்குக் கூடுதல் களிப்பூட்டின. அண்ணா பல்கலைக் கழகத்தில் அவர் முன்னிலையில் நான் ஆற்றிய உரைகளை நினைவுகூர்ந்த அப்பெருந்தகை வரலாறு இதழ்களைத் தமக்குத் தொடர்ந்து அனுப்புமாறு வேண்டினார்.

ஜூலை 7 இரவு மீனாட்சியம்மன் கோயில் ஆய்வுக்காக மதுரை சென்றோம். மறுநாள் காலை வெள்ளியம்பல ஆடவல்லானைத் திருமஞ்சன நிலையில் காணமுடிந்தது. திருமேனியின் அமைப்பு, ஆடையணிகளின் இருப்பு ஆகியன கொண்டு அதன் காலத்தை ஒருவாறு ஊகிக்க முடிந்தது. 63 நாயன்மார்கள், சோமாஸ்கந்தர், சண்டேசுவரர், தென்திசைக்கடவுள் சிற்பங்களை ஆய்வுசெய்து காளி, ஊர்த்வதாண்டவர் சிற்பங்களைப் பார்த்தோம். மாலை வடக்குக் கோபுரம் ஆய்வுக்காளானது. மறுநாள் காலை வீரவசந்தராயர் மண்டபம், கம்பத்தடி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம் ஆகியவற்றிலிருந்த விளக்குத்தோரணங்களை ஆய்வுசெய்தபோது அவற்றில் எழுத்துப் பொறிப்புகள் இருந்தமை கண்டறியப்பட்டது.

வீரவசந்தராயர் மண்டப விளக்குத்தோரணம் பேச்சியம்மன் மண்டப வாயிலை அலங்கரித்தவாறு இறைவன் திருமுன்னுக்கான தோரணமாக 6. 13 மீ. உயரத்தில் விளங்குகிறது. அதன் வலத்தாங்கலில் ஒரு பொறிப்பும் இடத்தாங்கலில் ஒரு பொறிப்பும் உள்ளன. 66 வரிகள் பெற்றுள்ள வலப்பொறிப்பு பொ. கா. 1819 செப்டம்பர்த் திங்கள் 13ஆம் நாள் வெட்டப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த ரோஸ்பீட்டரின் ஆணைக்கிணங்க, மதுரை மாடக்குளம் வட்டாட்சியர் சையது இசுமாயில் அனைத்து மக்களுக்கும் விளக்குத் தோரணம் அமைத்த வரலாற்றை அது அளித்தது. தோரணத்தை விளக்கு மாலை எனக் குறிப்பிடும் பொறிப்பு, அது 616 விளக்குகள் கொண்ட தாக, 1500 பணத்தில் அமைக்கப்பட்டமை கூறியது. விளக்குத் தோரணம் அமைத்தவர்களாகச் சிலம்பம் மாம்பழ ஆசாரி மகன் முத்து வயிரவன் ஆசாரி, காமாட்சி ஆசாரி தம்பி பரிமளம் ஆசாரி, அம்மமுத்து ஆசாரி மகன் சொக்கலிங்கம் ஆசாரி ஆகியோர் பெயர்களை இடப்பொறிப்பு அளித்தது.

கம்பத்தடி மண்டப விளக்குத்தோரணத் தாங்கலின் கீழ்ப் புறத்தே காணப்படும் பொறிப்பு ஜெய வருடம் மாசி 12ஆம் நாள் பொறிக்கப்பட்டுள்ளது. விசுவநாத நாயக்கர் மரபைச் சேர்ந்த திருமலைநாயக்கருக்குப் புண்ணியமாகக் குப்பையாண்டிச் செட்டியார் செய்தமைத்த புவனேசுவர விளக்காக இந்தத் தோரணத்தைக் குறிப்பிடும் அப்பொறிப்பு அதுபோது கோயில்

பாரபத்தியப் பணியில் இருந்தவராக நாவாயி ஆனந்த வீரப்பச் செட்டியார் பெயரைத் தருகிறது.

இக்கோயிலிலுள்ள மூன்று பெரிய விளக்குத்தோரணங் களுள் எழிலார்ந்ததும் கம்பீரமானதும் அதிக வேலைப் பாடுடையதுமான தோரணம் மீனாட்சி நாயக்கர் மண்டபத் தின் பிற்பகுதியில் இருட்டு மண்டப வாயிலுக்கு முன்பாக அமைந்துள்ளது. அலங்கரிக்கப்பட்ட யானைகளின் மீது பக்கத் திற்கு ஒன்றாக எழும் தோரணத்தாங்கல்கள் இரண்டும் 48 செ மீ. அகலம் பெற்றுள்ளன. யானைகளையடுத்து வாயிற்காவலர்கள். 6. 89 மீ. உயரத்திற்கு எழும் தாங்கல்கள், 3. 82 மீ. அகலத்திற்கு 78 செ. மீ. உயரத்தில் பிறையென வளைந்து, விரிந்து 1. 64 மீ. உயரக் கீர்த்திமுகத்தைத் தலைப்பாகக் கொண்டு முடிகின்றன. பிறைவளைவு தொடங்குமிடத்துக் காட்டப்பட்டுள்ள வானவப் பெண்கள் ஒரு கையில் அகலும் மறுகையில் மணியும் கொண் டுள்ளனர். பிறைவளைவு முழுவதும் இருபுறத்தும் பக்கத்திற்குப் பதின்மூவராக உள்ள அழகுப் பெண்கள் ஊர்த்வஜாநு கரணத் தில் காட்சிதரக் கைகளில் மலர்கள்.

இத்தோரணத்திலுள்ள பொறிப்பு, பொ. கா. 1898 நவம்பர் 21ஆம் நாள் ஆதி மீனாட்சி நாயக்கரின் கொடையாகச் செய் தளிக்கப்பட்ட இத்தோரணத்தின் செலவினங்களுக்காக ஆவி யூரை உள்ளடக்கிய 5 ஊர்களின் வருவாய் செலவிடப்பட்ட தாகக் கூறுகிறது. இத்திருப்பணியின் மேலாண்மை சிவகங்கை ஜமீன்தார் முத்து விஜய ரகுநாத துரைசிங்கமாகிய கௌரி வல்லபத்தேவர், மீனாட்சி நாயக்கரின் வாரிசு பங்காரு திருமலை சாமி நாயக்கர் ஆகியோரிடமிருந்தது. இத்தோரணத்தைச் செய்தவராகத் திருநெல்வேலி முத்துசாமி ஆசாரி மகன் இராச கோபால் ஆசாரி பெயர் சுட்டப்பட்டுள்ளது. 1003 அகல்கள் பெற்றுள்ள இவ்விளக்குத்தோரணத்தைச் செய்யத் தேவைப் பட்ட பித்தளையின் அளவு, தோரணத் திருவாசியைத் தாங்கும் தாங்கல்கள், நின்று விளக்குப் போடுகிற தாங்கல், விளக்கேற்றப் பயன்படும் மரஏணி ஆகியவற்றிற்கான செலவினங்களையும் இப்பதிவு குறிப்பிடுகிறது.

விளக்குத்தோரணங்களில் புதிதாகக் கண்டறியப்பட்ட இம்மூன்று பொறிப்புகளும் கோயில் நிருவாகத்திற்கும் எங்களுக்

கும் அளவற்ற மகிழ்வைத் தந்தன. இம்மூன்றையும் படித்துப் படியெடுக்கவும் தோரணங்களின் அலங்கரிப்புத் தரவுகளைத் தொகுக்கவும் அன்றைய பொழுது முழுமையும் செலவானது. மறுநாள் மீனாட்சி அம்மன் திருமுன் ஆய்வு மேற்கொண்டோம். இறைவி விமானம் இருதள நாகரமாகக் கபோதபந்தத் தாங்குதளத்துடன் மிகுந்த அலங்கரிப்புடன் விளங்கியது. விமானத்தின் கர்ணபத்திகள் சற்றே முன்தள்ளியும் சாலைப் பத்திகள் நன்கு முன் தள்ளியும் அமைய, இடைப்பட்ட சுவர்ப் பகுதிகளில் கோட்டப்பஞ்சரங்கள். முகமண்டபம் இது போன்ற முன்தள்ளல்கள் ஏதுமின்றி நேர்க்கோட்டில் அமைய, மேற்கில் விரிந்தும் பிற முத்திசைகளில் சுருங்கியும் உள்ள அம்மன் திருமுன் சுற்றின் கூரையைத் தூண்கள் தாங்குகின்றன.

இச்சுற்றின் துணைத்தளத்தை விமானம், முகமண்டபம் சூழ்ந்த பகுதிகளில் மட்டுமே காணமுடிகிறது. இத்தளத்திலும் விமானத்தின் துணைத்தளத்திலும் கண்டப்பகுதியில் முத்திசைகளிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதுநாள்வரை வரலாற்று வெளிச்சத்திற்கு வராதிருந்த அச்சிற்பத் தொகுதிகளை நன்கு ஆராய்ந்த நிலையில் அவற்றுள் பெரும்பான்மையன ஆடற்சிற்பங்களாக உள்ளமையை அறியமுடிந்தது. செவ்வியல், ஊரக ஆடற்சிற்பங்களாக அமைந்திருந்த அவற்றுள் விருச்சிகம், லலாடதிலகம், ஊர்த்வஜானு, சூசிவித்தா முதலிய கரணங்களையும் காணமுடிந்தது. சில கரணக் கோலங்கள் கோலாட்டத்துடன் இருந்தன. இக்கோலாட்டம் மத்தளம், பறை, வீணை, தாளம் முதலிய கருவிகளின் இசைக்கேற்ப நிகழ்வது போல் படம்பிடித்துள்ளனர்.

இச்சிற்பங்களின் ஆடையணிகள், மெய்ப்பாட்டு நிலைகள், உடல்நிலைகள் முதலியவற்றைக் காணும்போது இத்தளம் விஜயநகர அரசர் கால அல்லது நாயக்கர் காலத் திருப்பணியின் எச்சமாக இருக்கலாம் எனத் தோன்றியது. இங்குள்ள ஊரக ஆடல் சிற்பங்களுள் கவரியாடல், காவடியாட்டம், பறையாடல், முழக்குக் கருவிகளுடனான போட்டியாடல், வங்கிய இசையாடல் போன்றன சிறக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. ஓரிரு குழு ஆடல்களையும் காணமுடிந்தது. ஆடற்கலைஞர்களாய்ப் பெண்களும் இசைக்கருவிகளுடன் ஆண்களும் காட்சி

தரும் மீனாட்சி அம்மன் திருமுன் சிற்பத்தொகுதிகள் 14, 15ஆம் நூற்றாண்டுகளில் கருவிக் கலைஞர்களாய் ஆடவர்களே திகழ்ந்தமையை நன்கு புலப்படுத்துகின்றன.

வேட்டைக்காட்சிகள், விளையாட்டுக்கள் முதலியவற்றை யும் இச்சிற்பக் களஞ்சியம் கொண்டுள்ளது. வில்லில் அம்பு பூட்டிச் சிங்கத்தை வேட்டையாடும் காட்சியும் தலையைக் கடிக்க வரும் சிங்கத்தைக் கத்தியைப் பாய்ச்சிக் கொல்லும் காட்சியும் அக்கால வீரமரபுகளை வெளிக்காட்டுமாறு உள்ளன. மற்றொரு வேட்டைக்காட்சியில் விலங்கொன்றின் முன்னும் பின்னுமாய் நின்றவாறு இரு ஆடவர்கள் அதைக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை படம்பிடிக்கப்பட்டுள்ளது. முன்னால் நிற்ப வர் வில்லில் அம்பு பூட்டி விலங்கை நோக்கி எய்ய, பின்னால் இருப்பவர் கைத்தடியை விலங்கின் பிறப்புறுப்பில் நுழைத்து அதைத் துன்பப்படுத்துகிறார். நாங்கள் அறிந்தவரையில் இது போன்ற வேட்டைமுறை தமிழ்நாட்டின் வேறெந்தக் கோயிலி லும் சிற்பக்காட்சியாக இல்லை.

மற்றொரு சிற்பம் நீர்ப்பாய்ச்சு விளையாட்டைக் கண்முன் நிறுத்தியது. உள் தண்டு பெற்ற நீண்ட மூங்கில் குழாய்களில் வண்ணப் பொடிகள் கலந்த நீரேற்றி, வருவார், போவார் மீதெல்லாம் அந்நீரைப் பாய்ச்சி வண்ணப்பூச்சு நிகழ்த்தி மகிழ்ந்திடும் இவ்விளையாட்டும் வேறெந்தக் கோயிலிலும் கண்டதில்லை. சிலப்பதிகாரம் குறிக்கும் பதினோராடல்களில் ஒன்றான மல்லாடல் இங்குள்ளது.

கபோதக் கூட்டிலுள்ள சிற்பங்களில் தனிமையில் சோர்வு டன் அமர்ந்துள்ள சூலுற்ற பெண்ணின் தோற்றம் உள்ளத்தை உருக்கியது. கழுதையெனக் கொள்ளத்தக்க விலங்கொன்று குட்டி ஈனும் காட்சியும் யானை காலால் இடறிக் குற்றவாளி ஒருவரைக் கொல்லும் காட்சியும் அரிதானவை. இந்த யானை இடறல் காட்சி குன்றுவரன் கோட்டை, தவத்துறை, உய்யக் கொண்டான் திருமலைக் கோயில்களிலும் உள்ளது புதியன பல கண்டறிய முடிந்த ஜூலைப் பயணம் பயனுடையதானது.

புதுச்சேரி முனைவர் திரு. சொ. சேதுபதி தாம் தினமணி யில் தொடர்ந்து எழுதிய 'பாதம் பதியாத பாதை' என்ற தலைப் பில் அமைந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கியிருப்ப

தாகவும் அதனைத் தவறான தகவல்கள் ஏதும் இடம்பெறா வண்ணம் திருத்தி உதவுவதுடன் அன்புரை ஒன்றும் நல்க வேண்டும் என்று வேண்டி எழுதியிருந்தார். திரு. மு. இளங்கோ வன் வழி அறிமுகமாகியிருந்த தொடரும் இதழின் தயாரிப்புக் குழுவில் இருந்த திரு. சேதுபதியை குன்றக்குடித் திருமடத்தில் சந்தித்ததோடு, தினமணியில் அவரது கட்டுரைகளை அவ்வப் போது படித்திருக்கிறேன். அதனால், அவரது தொகுப்பை முழுவதுமாகப் படித்துத் திருத்தியதுடன், அவர் கேட்டவாறு வாழ்த்துரை ஒன்றும் அனுப்பியிருந்தேன். அவருடைய நூலில் வெளியான வாழ்த்துரையை இங்கு இணைப்பது பொருத்த மாக இருக்கும்.

"சேதுபதி எனும் ஆசிரியரின் பெயரிலேயே வரலாறு இருக் கிறது. அதனால்தான், வரலாற்றை நினைத்து வருந்தியிருக்கிறார். வரலாறு நடந்த வழியில் ஓர் ஆர்வமுள்ள வழிப்போக்கனைப் போல் நடக்க முயன்றிருக்கிறார். உள்ளத்தின் போக்கில் அவர் அடிகளைத் திருப்பியதால் இருபத்தேழு சுட்டிக்காட்டல்களைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில்தான் தமிழரின் வரலாறு இருக்கிறது என்ற உண்மை இந்த நாட்டை ஆள்பவர்களுக்கும் தெரியவில்லை; இந்த மண்ணில் வாழ்பவர்களுக்கும் புரிய வில்லை. அதனால்தான், அனைத்து நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து போட்டி போட்டுக்கொண்டு திருக்கோயில்களைச் சீரழித்து வருகின்றன. கடந்த முப்பதாண்டுகளாகக் கோயில் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் எனக்குக் கிடைத்திருக்கும் அனுப வங்கள் மிகவும் கசப்பானவை. ஆனால், அவைதான் உண்மை!

தமிழனின் வரலாற்றை அறியத் தமிழனே விரும்பவில்லை. குறிப்பாக, உதவக்கூடிய நிலையில் இருக்கும் யாரும், எந்த நிறுவனமும் வரலாற்றிற்காகச் செலவழிக்க விரும்பவில்லை. 'சட்'டென்று பெயரும் புகழும் தரக்கூடிய செயற்பாடுகளுக்கு உதவுவதையே பொருட்செல்வர்களும் அருட்செல்வர்களும் விழைகின்றனர்.

கல்வெட்டுகளைப் படிக்கும் பயிற்சி பெறத் தமிழாசிரியர் களுக்கு நாட்டமில்லை. காரணம், கைநிறைய ஊதியம் பெற்றா லும் அதைப் பெற்றுத் தரும் தமிழுக்குச் சில காசுகளையேனும்

செலவழிக்க அவர்களுக்கு உள்ளமில்லை. கல்வெட்டுப் படிப்பதும் அதிலிருந்து வரலாறு தேடுவதும், 'செலவழிக்கும்' நிலைகள். திருக்குறளை வாங்கக்கூடத் தயங்கும் தமிழ் உள்ளங்கள் நிரம்பிய இந்த நாட்டில், கல்வெட்டாவது, வரலாறாவது!

'அந்தக் கோயில் இப்படி இருக்கிறதே, இந்தக் கோயில் அழிந்துவிட்டதே' என்று வருந்திக் கண்ணீர் வடித்துப் பயனில்லை. அரசு செய்யவேண்டும், திருமடங்கள் உதவவேண்டும், நிறுவனங்கள் கைசேர்க்க வேண்டும் என்றெல்லாம் வேண்டுகோள் வைத்து நடக்கப்போவதும் எதுவுமில்லை. காரணம், 'வரலாறு' தெரிந்து கொள்வதால் மேற்சொன்ன நிறுவனங்களுக்கு எந்தப் பயனுமில்லை. 'வருவாய்' அல்லது 'புகழ்' இவை தவிர இன்றைக்கு வேறு நோக்கங்களுக்கும் அவர்களிடம் இடமில்லை.

வாய் கிழிய வரலாறு பேசியே நாட்டை ஏய்த்துக் கொண்டிருக்கும் வீணர்களை நம்பாமல், உண்மையிலேயே வரலாறு பற்றிய கவலை இருக்குமானால், சேதுபதியும் சரி, வேறு யாராயினும் சரி, களத்துக்கு வாருங்கள். கைக்காசைச் செலவழியுங்கள். யாரையாவது இணக்கப்படுத்த, இளகச் செய்ய முடியுமானால் உதவிகளைப் பெறுங்கள். உங்கள் கண்களால் தேடப்படும் வரலாறும் கைகளால் எழுதப்படும் வரலாறும்தான் தலைமுறைகளை அடையாளப்படுத்தும்."

18 அன்று என்னைச் சந்தித்த திரு. சுந்தர் பரத்வாஜ் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு மாணவராகத் தாம் சேர்ந்திருக்கும் தகவலைத் தந்தார். திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் வழிகாட்டலில் முதலாம் இராஜராஜரைப் பற்றி ஆய்வு செய்யவிருந்த அவரை வாழ்த்தினேன். வரலாற்றில் மிகுந்த ஈடுபாடும் இராஜராஜர்பால் தளராக் காதலும் கொண்டிருக்கும் சுந்தரின் நட்பு எங்கள் ஆய்வு மையத்திற்குக் கிடைத்த நல்வாய்ப்பாகும். மதுரை அரவிந்தர் கண் மருத்துவமனையின் இயக்குநரும் தமிழ்நாட்டின் தலை சிறந்த கண் மருத்துவர்களுள் ஒருவருமான திரு. நம்பெருமாள்சாமியுடன் உரையாட வாய்த்த போது, தாம் தியாகராயர் கல்லூரியில் படித்த காலத்தே என் தந்தையார் அங்கு விடுதிப் பொறுப்பாளராக இருந்ததாகவும்

அவரது தமிழ் உரைகளைத் தாம் விரும்பிக் கேட்டிருப்பதாகவும் கூறியதோடு, டாக்டர் மா. இராசமாணிக்கனாரைத் தம் அன்புக் குரிய ஆசிரியரென்றும் குறிப்பிட்டார். என் வரலாற்றுப் பணி களைப் பின்பற்றி வருவதாகவும் அவற்றின் அருமை பெருமைக் குரியதென்றும் கூறிய அவரது இன்மொழிகள் உற்சாகமளித்தன.

ஜூலை 29 மாலை சிராப்பள்ளிக் காவேரி ரோட்டரி அமைப்பின் கூட்டத்தில் நளினி தமிழ்நாட்டுத் திருக்கோயில் கள் பற்றிப் படக்காட்சிகளுடன் உரையாற்றினார். ரோட்டரி தலைவர் தியாகராஜன் வரவேற்க, செயலாளர் முரளி நளினியை அறிமுகப்படுத்தினார். தேர்ந்தெடுத்த பல்லவ, சோழர் காலக் கோயில்களைக் காட்சிப்படுத்தி அவற்றின் கலைச் செழுமையை, வரலாற்றுப் பின்புலத்தை நளினி விளக்கிய பாங்கினை உறுப்பினர்கள் வெகுவாக இரசித்தனர்.

ஆகஸ்டு முதலிரு நாட்கள் மாமல்லபுரம் ஆய்வுக்காகச் சென்னை சென்றோம். முதல் நாள் ஒருகல் தளிகளின் முடிவுரைப் பகுதியை அத்தளிகளின் முன்பே அமர்ந்து படித்து விவாதித் தோம். மறுநாள் மகிடாசுரமர்த்தினி குடைவரை ஆய்வு தொடங்கியது. மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் குடைவரைகள் அனைத்துமே அற்புதமானவைதான் என்றாலும், இயக்க நிலை யில் படைக்கப்பட்டுள்ள பல்லவச் சிற்பத்தொகுதிகளில் மகிடா சுரமர்த்தினி தொகுதிக்கு இணையானது வேறொன்றுமில்லை. குடைவரையின் ஒரு பக்கச்சுவரை இக்காட்சிக்கென ஒதுக்கிய நிலையில் பல்லவச் சிற்பிகள் ஒரு தேவ அசுரப் போரை அதற்கே உரிய வலிய வீச்சுக்களுடன் இங்குக் காட்சிப்படுத்த எப்படியெல்லாம் திட்டமிட்டிருப்பார்கள் என்று நினைத்த வாறே அத்தொகுதியை விழிகளால் பருகினோம்.

முதல் முறை பார்த்த நாளிலிருந்தே அந்தத் தொகுதியின் உயிரோட்டமான படப்பிடிப்பு என்னை அதிசயிக்க வைத்துச் சிற்பிகளின் எண்ணவோட்டங்களைக் கற்பனை செய்யத் தூண்டியிருக்கிறது. பல்லவர் காலப் போர்க்களம் ஒன்றைக் கண்முன் நிறுத்தக் கூரம் செப்பேடுகள் உதவினாலும் கள நிகழ்வுகள் வழி வெளிப்படும் உணர்ச்சிக் குமுறல்களை உள் வாங்க இச்சிற்பத்தொகுதியே உதவுகிறது. களத்தின் நிலைப்

பாட்டைக்கூட காட்சிப்படுத்தலில் இரு படைகளுக்கும் ஒதுக்கி யிருக்கும் இடத்தைக் கொண்டே தீர்மானித்துவிட முடிகிறது.

இதனோடு ஒப்பிடக்கூடிய மற்றொரு தொகுதி மாமல்லைக் கடலோரத்தே அதிரணசண்டேசுவரம் குடைவரையின் முன்பு காலத்தின் கைகளில் கரைந்துகொண்டிருக்கிறது. அளவுகடந்த பக்தி ஆர்ப்பரித்துக் கிடக்கும் இந்த மண்ணில் கலை உணர்வோ, வரலாற்று நோக்கோ, நம் மரபின் பெருமையும் எழுச்சியும் பூரிப்புடன் பதிவாகியிருக்கும் உளிப் படைப்புகளைக் காப்பாற் றும் கருத்தோ, அவற்றைப் பின்வரும் தலைமுறைகளுக்குக் காத்துத் தரும் எண்ணமோ மிகமிகக் குறைந்த அளவிலேயே காணப்படுவதுதான் துன்பமான உண்மை. எத்தனையோ இடங் களில் கற்பூரம் ஏற்றி வழிபட வாய்ப்புகள் இருந்தபோதும் இச்சிற்ப அற்புதத்தையும் பத்திமைக் கைகள் கருக்க வைத்துள் ளன. நாங்கள் முதல் முறை பார்த்தபோது எந்தப் பூச்சும் இல்லாமல் இருந்த முகுந்த நாயனார் கருவறை சோமாஸ் கந்தரும் பக்தியின் பெயரால் சந்தனமும் திருநீறும் உடல் முழுவதும் பூசப்பட்ட நிலையில் பொலிவிழந்து பழைமையின் சாயல் குன்றிக் காட்சிதருவதை எண்ணிப்பார்த்தோம்.

மகிடாசுரமர்த்தினி குடைவரையின் ஒரு சுவர் இயக்கத்தின் உச்சம் காட்டவும் மற்றொரு சுவர் சுற்றுப்புற இயக்கத்தைப் பற்றிக் கவலையுறாமல் இயங்கா நிலையில் காக்கும் கடவுள் உறங்கும் காட்சி காட்டவும் பயன்பட்டுள்ளன. கருவறையில் சோமாஸ்கந்தர். நளினியும் அகிலாவும் ஆளுக்கொரு சுவரைத் தேர்ந்து தரவுகள் தொகுக்க, திரு. மைக்கேல் லாக்வுட் அந்தக் குடைவரையின் கருவறை பற்றித் தெரிவித்துள்ள கருத்துக் களின் உண்மைத் தன்மையை அறிய நான் முற்பட்டேன். அன்று முழுவதும் அக்குடைவரையிலேயே பணி செய்தோம்.

ஆகஸ்டு 16 'ஐராவதி' பணிப் பாராட்டு நூல் வெளியீட்டு நிகழ்ச்சி சென்னையில் இருந்தமையால் அதற்கு முந்தைய நாளான 15 அன்று பனைமலைக் கோயிலையும் தளவானூர், மண்டகப்பட்டுக் குடைவரைகளையும் பார்க்க விரும்பிய நூல் பதிப்புக் குழுவினருடன் நானும் இணைந்து கொண்டேன். செஞ்சியில் இந்தியத் தொல்லியல்துறை அலுவலர் திரு. மணி யைச் சந்தித்து அளவளாவிப் பனைமலை சென்றோம். நான்,

நளினி, அகிலா தவிர்த்த பிற அனைவருக்கும் பனைமலை பார்ப்பது அதுவே முதல் முறை என்பதால் இராஜசிம்மரைப் பற்றிய ஓர் அறிமுகத்துடன் கோயிலைக் காட்டி விளக்கினேன். பத்திப் பிரிப்புகளைக்கூடத் தனித் திருமுன்களாக்க முடியும் என்ற தெளிவைத் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றிற்கு அறிமுகப் படுத்திக் காட்டிய பல்லவக் கலைவல்லுநர்களின் அறிவாற்றலை யும் கற்பனைத் திறனையும் செய்நேர்த்தியையும் கட்டமைப் பின் முன் நின்று விளக்கியபோது அனைவருமே அதை நன்குணர்ந்து போற்றினர். சாலைப்பத்தித் திருமுன் உள்ளிருந்த ஓவியத்தைக் கண்டு களித்து அதில் வெளிப்பட்டிருந்த உமை யின் கோலத்தை இராஜராஜீசுவர சோழர் ஓவிய உமைக் கோலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தனர்.

மதிய உணவிற்குப் பிறகு மண்டகப்பட்டு சென்றோம். ஏறத்தாழ ஒரு மணிநேரம் அக்குடைவரையின் அமைப்பை உள்வாங்கித் தளவானூர் அடைந்தபோது மாலை முடியத் தொடங்கியிருந்தது. தளவானூர்க் குடைவரையை அப்படி ஒரு பொழுதில் நான் அனுபவித்தது அதுவே முதல் முறை. வயல் வெளிகளும் பாறையடுக்குகளும் சரிந்து கிடந்த மலையும் இருள் நுழையத் தொடங்கியிருந்த காலமும் மங்கிய வெளிச்சத்தில் கலைப்பேழையாய் மின்னிய குடைவரையும் மனதை மயக்கின. வெளிச்சம் முழுவதுமாய் இற்றுப்போவதற்குள் குடைவரை யைக் கண்களால் துழாவிக் கருத்தில் நிறைத்துக் கொண்ட நண்பர்கள் குடைவரையின் முன்னிருந்த புல்தரையில் அமர்ந்து அளவளாவினர். அகிலாவும் இராமும் தேவாரப் பதிகங்களைப் பாட உள்ளம் என்னிடம் இல்லை. தளவானூர்க் குடைவரை ஒரு கட்டுமானமாக என்னில் நிறைந்திருக்குமாறு போலவே ஒரு கலைதிகழ் வளாகமாகவும் கவினுறு காட்சிகளின் நடுவில் நிறைந்திருக்கும் வரலாற்றுப் பதிவாகவும் எப்போதும் மகிழ் வூட்டிக் கொண்டிருக்கிறது.

ஆகஸ்டு 16 சனிக்கிழமை எங்கள் அனைவர் வாழ்விலும் குறிப்பிடத்தக்க ஒரு நாளாக அமைந்தது. மாலை 4. 15 அளவில் அரங்கத்தை அடைந்தோம். இலலிதாம்பாளும் அகிலாவும் நூல் விற்பனைப்பகுதியைப் பார்த்துக்கொள்ள நளினியும் சுமிதாவும் வரவேற்பில் ஈடுபட்டனர். பேராசிரியர் ஆனந்த

திருஷ்ணன் தவிர்க்கமுடியாத காரணங்களால் விழாவில் கலந்து கொள்ளக்கூடவில்லை என்பதறிய வருத்தமாக இருந்தது. எனினும், தேநீருக்குப் பிறகு சரியாக 5. 30 மணியளவில் நிகழ்வு தொடங்கியது. சிறப்பு விருந்தினர்கள் ஒவ்வொருவரையும் அவைக்கு அறிமுகப்படுத்தி, மேடைக்கு அழைத்தேன். தமிழ்த் தாய் வாழ்த்துக்குப் பிறகு இராமின் வரவேற்புரை அமைந்தது. கமலக்கண்ணன் ஐராவதி பணிப் பாராட்டு நூல் பிறந்து வளர்ந்த கதையை அவையினரிடம் பகிர்ந்துகொண்டார்.

பேராசிரியர் சுப்பராயலு பணிப் பாராட்டு நூலை வெளியிட, பேராசிரியர் வெங்கடாசலபதி முதற் படியைப் பெற்றுக் கொண்டார். இருவருமே திரு. மகாதேவனின் உழைப்பையும் ஆய்வுத் திறனையும் பாராட்டி உரைத்தனர். திரு. அருள்மொழி பணிப் பாராட்டு நூலின் குறுந்தகடு வடிவத்தை வெளியிட, பேராசிரியர் சு. இராசவேலு அதைப் பெற்றுக்கொண்டார். இருவரும் ஐராவதத்தின் பெருமைகளை அவையோருடன் பகிர்ந்து கொண்டனர். மகாதேவனின் ஏற்புரைக்குப் பிறகு வரலாறு மின்னிதழின் 50ஆம் இதழைத் திரு. பிச்சாண்டி வெளியிட, பேராசிரியர் அரசு அதைப் பெற்றுக்கொண்டு, பணிப் பாராட்டு நூலை உருவாக்கிய அனைவரையும் அவரவர் உழைப்பு, திறன் சுட்டி வாழ்த்திப் பாராட்டினார். அகிலாவின் நன்றியுரையோடு முடிந்த அந்நிகழ்வில் திரு. மகாதேவனின் உதவியாளர் திருமதி இராம. இலட்சுமி, விழா நிகழ்வுகளை ஒருங்கிணைத்த திருவாளர்கள் பத்மநாபன், சீதாராமன், கிருபாகரன், செல்வமூர்த்தி, நூலைப் பதிப்பித்த அலமு இராமநாதன் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

அக்கூட்டத்தில் பங்கு பெற்றிருந்த அனைவர் சார்பாகவும் விழாக் குழுவினர் அன்று நிறைவேற்றிய தீர்மானத்தை நான் முன் மொழிந்தேன்: 'கல்வெட்டாய்வு தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் வரவேற்புப் பெறாத ஒரு துறை. தம்முடைய சொந்தக் கையிருப்பிலிருந்து இந்த ஆய்வில் வல்ல அறிஞர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கத் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் பெருந்தகை ஒரு கோடி ரூபாய் தொகையை வைப்புநிதியாகத் தந்திருப்பதற்காக அப்பெருந்தகையை வரலாறு

மின்னிதழ்க் குழுவினரும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தினரும் உளமாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறோம். உலகத்தின் எந்த முதலமைச்சரும் கல்வெட்டாய்விற்கு, வரலாற்றிற்குச் செய்யாத உயரிய மரியாதை இது.

இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படவிருக்கும் முதல் விருதைத் தம் வாழ்நாள் உழைப்பைக் கல்வெட்டாய்வுக்கு வழங்கி, கல்லை அழித்துக் காசாக்கும் உலகத்திடமிருந்து பழந்தமிழ்க் கல்வெட்டுகளைக் காப்பாற்ற அவற்றைக் களஞ்சியமாக்கி வழங்கியிருக்கும் கல்வெட்டறிஞர் திரு. மகாதேவனுக்கு அளித்திடல் வேண்டும் என டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் சார்பிலும் வரலாறு மின்னிதழ்க் குழுவினர் சார்பிலும் இங்குக் கூடியிருக்கும் அவையோர் சார்பிலும் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் பெருந்தகை அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.' (செம்மொழி அமைப்பின் தொல்காப்பியர் விருது பின்னாளில் திரு. மகாதேவனுக்கு வழங்கப்பட்டதை இங்கு மகிழ்வோடு நினைவுகூரலாம்.)

அன்றிரவு மிகுந்த மனநிறைவுடன் அனைவரிடமும் விடை பெற்றேன். திரு. மகாதேவனின் பழந்தமிழ்க் கல்வெட்டு நூல் வெளியீட்டு விழாவின்போது தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களோ, தமிழ்நாட்டரசோ, தொல்லியல் அமைப்புகளோ மகாதேவனின் உழைப்பைப் போற்றும் வகையில் பணிப் பாராட்டு நூல் ஒன்றை உருவாக்கிடவேண்டும் என்று அவையில் நான் வைத்த வேண்டுகோளை நானே நிறைவேற்றி அப்பெருந்தகையின் வாழ்நாள் உழைப்பைச் சிறப்பிக்க முடிந்த தவப் பேற்றினை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறினேன். கருத்துக்களில் மாறுபாடு இருந்தாலும் உழைப்பை மதிக்கும், உணர்வைப் போற்றும் பண்பாடு தமிழ்நாட்டில் செழிக்க வேண்டும். எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கிடையில் வாழ் நாளின் பெரும் பகுதியைப் பழந்தமிழ்க் கல்வெட்டுகளின் இத்தொகுப்பிற்காகவே தத்தம் செய்திருக்கும் மகாதேவனுக்கு இளைஞர்கள் சூழ இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் தன் கடமையைச் செய்து முடித்ததில் எங்கள் அனைவருக்கும் நிறைவேற்பட்டது.

ஆகஸ்டு 20 அன்று திரு. மகாதேவன் தம் கைப்பட எழுதிய மடலை இங்கு நினைவுகூர்வது எங்கள் பணி குறித்து அவர் கருதியது அறிய உதவும். 'அன்புமிகு கலைக்கோவன் அவர்களுக்கு, ஆசிகள் ஒரு கோடி, நன்றி பல கோடி. கோடி கொடுத்தும் கிடைக்கப் பெறாத இளைஞர்குழாத்தின் தலைமையேற்று நீங்கள் நடத்திய இன்ப விழா என் வாழ்நாளில் இது வரை நடந்திராத மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் உங்கள் வரலாறு குழுவினரும் நெடு நாள் வாழ்க என்ற வாழ்த்துக்களுடன் அன்பன் ஐ. மகாதேவன்.'

மறுநாள் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலைப் பார்வையிடச் சென்றோம். தினமணி, இந்து, தினமலர் முதலிய நாளிதழ்கள் பணிப் பாராட்டு நூல் வெளியீட்டு விழா பற்றிய செய்திகளை மிக விரிவான அளவில் படங்களுடன் வெளியிட்டிருந்தமையை நண்பர்கள் பெருமிதத்துடன் பகிர்ந்துகொண்டனர். வரலாறு மின்னிதழ்க் குழுவினருடன் அக்கோயிலை வலம் வருவது அது இரண்டாம் முறை. அவர்களின் முதல் பயணத்திற்கும் இந்த இரண்டாம் பயணத்திற்கும் இடையில் இருந்த வேறுபாட்டை மகிழ்வோடு இரசித்தேன்.

முதல் பயணத்தின்போது பார்வையாளர்களாக இருந்த அவர்கள், இந்தப் பயணத்தின்போது ஆர்வலர் நிலையையும் தாண்டி ஆய்வாளர்களாக மலரத் தொடங்கியிருந்தமையை உள்ளம் பூரிப்போடு எண்ணி இறும்பூதெய்தியது. கமலக் கண்ணனும் இராமும் வளாகச் சுற்றுக் கோயில்களின் சிற்பங்களை மிகுந்த உற்சாகத்துடன் ஆராய்ந்தனர். எழுவர்அன்னையர் தொகுதி குறித்துப் பாண்டியர்பகுதியுடன் ஒப்பிட்டுப் பல்லவர் பங்கீட்டினை விளக்கினேன். அத்யந்தகாமத்தில் காணப்படும் சிவபெருமானின் தவக்கோலச் சிற்பம் கயிலாசநாதர் விமான வடபுறச் சுவரில் இம்மியும் மாறாமல் அது போலவே இடம்பெற்றிருப்பதைச் சுட்டி, அத்யந்தகாமத்தின் படைப்பாளியை அடையாளப்படுத்தியதன் பின்புலத்தைத் தெரிவித்தேன். விமானச் சுவரில் வீணையும் யாழும் இருப்பதை இராமுக்குக் காட்ட, அவர் இசைக்கருவி ஆய்வுகளில் மூழ்கினார். அன்றைய பொழுது இராஜசிம்மரின் வழிகாட்டலில் பல்லவப் பேராசான்களின் கலைப்பதிவுகளை இரசிப்பதிலும் அவற்றை

நெஞ்சில் நிலைநிறுத்திக் கொள்வதிலும் வளர்ந்து நிறைந்தது. கடற்கரைத் தளியைப் போலவே கயிலாசநாதர் தளியும் என் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது. நினைக்குந்தோறும் காலை, நண்பகல், மாலை, இரவு எனத் தனிமையிலும் உறவுகள் சூழவும் அங்கிருந்த பொழுதுகள் கண்களின் முன் காட்சி களாகப் படரும்.

இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்திலிருந்து 23. 4. 2008 அன்று பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனால் எழுதப்பட்ட கடிதம் அவ்வமைப்பு ஆகஸ்டு 2-4இல் கொழும்புவில் 'சோழப் பேரரசும் சமயப் பெருநெறி களும்' என்ற பொதுத் தலைப்பின் கீழ் நிகழ்த்தவிருந்த இந்து சமயத் தமிழிலக்கிய ஆய்வரங்கில், 'சோழர் காலக் கட்டடக் கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை' எனும் சிறப்புத் தலைப்பு களில் உரையாற்ற வருமாறு என்னை அழைத்தது. இசைவு தெரிவித்து எழுதியிருந்தேன். தவிர்க்கவியலாத காரணங்களால் அந்த மாநாடு ஒத்திவைக்கப்பட்டமையால் அதில் கலந்து கொள்ளக் கூடவில்லை. புலவர் திரு. ப. கண்ணையன் தாம் எழுதிய, 'தமிழ்ச் சுவடிகளில் எண் கணிதம்' எனும் நூலின் படிகளை அனுப்பி அவற்றைப் படித்துக் கருத்துத் தெரிவிக்கு மாறும் தவறுகள் இருந்தால் திருத்தி உதவுமாறும் கேட்டிருந் தார். நூலை கவனமுடன் படித்து உரியன செய்தேன்.

பாரதிதாசன் பல்கலைக்கழகம், புதுக்கோட்டையில் அமைந் திருந்த எஸ். ஆர். ஐ. மருத்துவஞ்சார் கல்வி நிறுவனத்தைப் பார்வையிட்டு ஆய்வுசெய்து மருத்துவஞ்சார் துணைக்கல்விப் பாடங்களை நடத்த அந்நிறுவனம் தகுதியுடையதுதானா எனத் தெரிவிக்குமாறு கேட்டிருந்தது. பல்கலைக்கழகப் பேராசிரியர் பார்த்தசாரதியும் நானும் ஒருங்கிணைந்து அப்பணியை மேற் கொண்டோம். இது போன்ற பணிகள் பல்கலைக்கழக நடை முறைகளை விளங்கிக்கொள்ளவும் செல்லும் இடங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டுமானங்களை ஆய்வுசெய்யவும் பேருதவியாயின. புதுக்கோட்டைப் பயணத்தின்போது அருங் காட்சியகம் பார்க்க வாய்த்தது.

'பழந்தமிழரும் கூத்துக்கலையும்' என்ற தலைப்பில் திரு. இல. கணபதி முருகன் எழுதி, தினமணியின் தமிழ்மணிப்

பகுதியில் 10. 8. 2008 அன்று வெளிவந்திருந்த கட்டுரையில் பிழைகள் மலிந்திருந்தன. ஆடற்கலை பற்றிய தெளிவில்லாமல் அக்கலை குறித்த கட்டுரைகளை எழுதுவது சரியன்று. ஆனால், பலர் அதைப் பற்றிச் சிந்தியாமல் நூல்களில் படிப்பதை அப்படியே தொகுத்துக் கட்டுரைகளாக்கி வெளியிட்டு விடு கிறார்கள். கட்டுரையின் கருத்துக்கூறல்களில் இருந்த பிழை களைச் சுட்டி தினமணி ஆசிரியருக்கு விரிவான மடல் எழுதி னேன். அம்மடல் 24. 8. 2008 தமிழ்மணி இதழில் வெளியானது.

1. 'சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக் காதை அபிநயம் பற்றி விளக்குகிறது' என்று கணபதி முருகன் எழுதியுள்ளார்.

- அரங்கேற்று காதையில் 'அபிநயம்' என்ற சொல்லே கையாளப்படவில்லை. 'அவிநயம்' என்ற சொல் சிலப்பதி காரத்தில் ஒரே ஒரு முறை எடுத்தாளப்பட்டுள்ளது. அவிநயம் பற்றிப் பேசியிருப்பவர் அடியார்க்குநல்லார்.

2. 'பாடலின் பொருளை முகபாவம், அங்க அசைவுகள் போன்றவற்றின் வாயிலாக விளக்குவதே நாடகம் (அ) கூத்து' என்று வரலாற்று ஆய்வாளரான என். சுப்பிரமணியன் விளக்கம் தந்திருப்பதாக கணபதி முருகன் குறிப்பிட்டுள்ளார்.

- அரங்கேற்று காதைக்கான உரையில் அடியார்க்குநல்லார் குறிப்பிடும் 'சொக்கம்' எனும் ஆடல் வகை பாடலுடன் தொடர் புடையதன்று. பாடலின் பொருளை அங்கங்களின் வழி விளக் கும் ஆடல் அவிநயக் கூத்து. கதை தழுவி வரும் கூத்தே நாடகம்.

3. 'கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வரையப்பெற்ற சித்தன்ன வாசல் ஓவியங்கள் வாயிலாக பல்லவர் நடனக்கலையின் சிறப் பம்சத்தை உணரலாம். இங்குள்ள பரதநாட்டிய அபிநயங்களில் 'ஹஸ்த அபிநயச் சிற்பம்' குறிப்பிடத்தக்கது' என்ற அவர் கூற்றும் சரியன்று.

- சித்தன்னவாசல் ஓவியங்கள் பாண்டியர் காலத்தவை என்பதும் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த மதுரை இளங் கௌதமனின் திருப்பணியின்போது வரையப்பட்டவை என்ப தும் கல்வெட்டுச் சான்றுடன் நிறுவப்பட்டுள்ளமை அறிக. 'ஹஸ்த அபிநயச் சிற்பம்' இக்குடைவரையில் எங்கும் இல்லை. ஓவியங்களிலுள்ள இடுப்பளவிலான இரண்டு பெண்களின்

ஆடல் தோற்றங்கள் பரதநாட்டிய அவிநயங்கள் இல்லை. பரத நாட்டிய அவிநயங்களில் 'ஹஸ்த அபிநயம்' என்ற சொல் லாட்சி இல்லை. முத்திரைகளே உள்ளன.

4. 'இராஜராஜ சோழன் 108 பரதநாட்டிய கரணங்களை, பிரகதீஸ்வரர் ஆலயத்தின் உச்சியில் வரையுமாறு செய்ததில் இருந்து அம்மன்னனுக்கு நாட்டியத்தின்மீது கொண்ட ஈடு பாடு விளங்கும்' என்று குறிப்பிட்டிருக்கிறார் கட்டுரையாளர்.

- ஆனால், தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்தில் (பிரகதீசுவரர் என்ற பெயர் கோயில் கல்வெட்டுகளில் இடம்பெறவில்லை.) காணப்படும் கரணங்கள் பரதநாட்டியக் கரணங்கள் அன்று. அவை நாட்டியசாத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அங்க காரங்களின் கூறுகள். இராஜராஜர் அவற்றை வரையவில்லை. சிற்பிகளைக் கொண்டு சிற்பங்களாகச் செதுக்கியிருக்கிறார். 108 கரணங்களும் செதுக்கப்படவில்லை. 81 கரணங்களே வடிவம் பெற்றுள்ளன. அவையும் ஆலய உச்சியில் இடம்பெறவில்லை. இரண்டாம் தளச் சாந்தார நாழியில் உள்ளன.

5. 'தமிழகத்தில் தேவதாசி முறையைப் புகுத்தியவர்கள் சோழர்கள் என்பர்.'

- கட்டுரையாளரின் இக்கருத்து முழுமையும் தவறானது. பல்லவர் காலத்திலேயே தளிக்கூத்திகள் இருந்துள்ளனர். இரண்டு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

6. 'முதலாம் இராசராசனால் குடியமர்த்தப்பட்ட பெண்டு கள் அனைவரும் சோழர் பழந் தலைநகரமான 'பழையாறை யின்' வடதளி, தென்தளி எனப்படும் சிவாலயங்களைச் சேர்ந்தவர் களாவர்.'

- இதுவும் முற்றிலும் தவறான கூற்று. இராஜராஜீசு வரத்திற்குக் குடியேறிய 400 ஆடற்பெண்களும் சோழ மண்ட லத்தின் 102 தளிச்சேரிகளிலிருந்து வந்தவர்கள். கல்வெட்டுச் சான்று உள்ளது.

7. 'தலைக்கோலி, காவிதி கானை பேராள், காவிதி தாங்கி போன்ற பட்டங்கள் தேவரடியார்களுக்கு வழங்கப்பட்டன' என்கிறார் கட்டுரையாளர்.

- எந்தக் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் இத்தரவு கொள்ளப்பட்டுள்ளது என்பதறிய விழைகிறேன். ஏனெனில் 'காவிதி' எனும் சொல் கணக்கரைக் குறிக்கும் சொல்லாகவே கல்வெட்டுகளில் ஆளப்பட்டுள்ளது.

8. 'இந்திரவிழாவின்போது தலைக்கோலுக்குப் பூசை நடத்தப்பட்டு ஆடல் மகளிருக்கு இக்கோல் வழங்கப்பட்டது' என்பதும் சரியன்று.

- இந்திரவிழாவின்போது தலைக்கோல் சிறப்பிக்கப்பட்டது. ஆனால், ஆடல் மகளிருக்கு வழங்கப்படவில்லை. தலைக்கோலிப் பட்டம் மட்டுமே வழங்கப்பட்டது.

9. 'தமிழ்க்கூத்துக் கலையிலிருந்து பிரிந்து உருவான பரதம்' எனும் கூற்றுக்கு அடிப்படைச் சான்றுகள் ஏதும் கட்டுரையாளரால் முன்வைக்கப்படவில்லை.

தமிழ்மணியில் என் விளக்கஉரை வெளியானதும் திரு. இல. கணபதிமுருகன் என்னை நேரில் சந்தித்து உரையாடினார். உரையாடலின்போது அவரது உள்ளம் உணர்ந்தேன். கற்றுக்கொள்ளும் ஆர்வம் அவரிடமிருந்ததை அறியமுடிந்தது. எதிர்காலத்தில் தாம் எழுதும் கட்டுரைகள் மிகுந்த எச்சரிக்கையுடன் உருவாக்கம் பெறும் என்று நம்பிக்கை தெரிவித்த முருகன் இன்றளவும் ஆய்வு மையத்துடன் தொடர்பிலுள்ளார்.

ஆகஸ்டு 23 அன்று துவரங்குறிச்சி முன்னாள் நகரத் தலைவர் திரு. கு. ஆறுமுகம், மருங்காபுரி ஒன்றிய இசைவேளாளர் சங்கத் தலைவர் திரு. ஆர். எம். சேதுராமன் ஆகியோர் அழைப்பையேற்று அவ்வூர் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆய்வுக்காகச் சென்றோம். கோயில் வளாகத்திலிருந்த அனைத்துக் கல்வெட்டுகளுமே திருப்பணிகளின் காரணமாகத் துண்டாடப்பட்டிருந்தன. நடுவணரசின் கல்வெட்டுத்துறை 1964-65ஆம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் நான்கு கல்வெட்டுகளைப் பதிப்பித்திருந்தது. அவற்றை அடையாளப்படுத்திய பிறகு இரண்டு புதிய கல்வெட்டுகளை நளினி கண்டறிந்தார். அவற்றுள், குலசேகரபாண்டியரின் கல்வெட்டு குறிப்பிடத்தக்கது. எழுத்தமைதி கொண்டு 13ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க இக்கல்வெட்டில் அழகப்பெருமாள் சொக்க

னாரான துவராபதிவேளார் குறிக்கப்பட்டுள்ளார். துவரங் குறிச்சியையும் அதன் சுற்றுப்புற ஊர்களையும் கையகப்படுத் தித் தம் ஆளுகையின் கீழ் ஒன்றிணைத்திருந்த ஆட்சியாளர் களாகத் துவராபதி வேளார்களைக் குறிக்கலாம். இப்பகுதியி லுள்ள பல கல்வெட்டுகளில் அவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

துவரங்குறிச்சியிலிருந்து 3 கி. மீ. தொலைவிலுள்ள சடை வேளான்பட்டிக்கு அருகிலுள்ள மோரணிமாமலை என்னும் குன்றின் சரிவில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, இத்துவராபதி வேளாரின் ஆணைக்கேற்பவே தேவன் கண்டனான இலங்கே சுவர தேவன் என்பார், 'இழுவை' என்ற பெயரில் அப்பகுதியில் பெருவழக்காய் இருந்த நிலமளந்தகோல் ஒன்றை மலைச்சரிவுப் பகுதியில் வெட்டி வைத்த தவலைத் தருகிறது. இக்கல்வெட்டின் கீழ் மூன்று செங்குத்துக்கோடுகளுக்கு இடைப்பட்டு இருக்கு மாறு 7. 06 மீ. அளவினதாக ஆழமான செதுக்கலாய் அந்நில மளந்தகோல் காட்சிதருகிறது.

அதே குன்றின் சரிவிலுள்ள மற்றொரு கல்வெட்டு, காவற் காடு ஒன்றின் மேற்கெல்லையைச் சுட்டுவதுடன், கல்வெட்டை வெட்டியவராகத் தேவன் கண்டனான இலங்கேசுவரனைக் குறிக்கிறது. இந்த இலங்கேசுவரன் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கல்வெட்டொன்றிலும் இடம்பெறுவது நோக்கத் துவராபதி வேளாரின் கீழ் இப்பகுதியை ஆண்ட குறுநிலத் தலைவராக இலங்கேசுவரனைக் கருதமுடிகிறது. இரண்டாம் பாண்டிய அரசுக் காலத்தில் இத்தகு குறுநிலத் தலைவர்களை உள்ளடக்கிய ஒரு நிலப்பகுதியை ஆண்ட துவராபதி வேளார் களுள் ஒருவரே அழகப்பெருமாள் சொக்கனார். தம்முடைய நிலப்பகுதிக்குள் அடங்கிய 5 மா நிலத்துண்டொன்றைக் கோயி லில் பணியாற்றிய கருவி இசைக்கலைஞர்களுக்கு அவர் கொடையாகத் தந்துள்ளார். அந்நாளில் கருவிக்கலைஞர்கள், 'உவச்சர்' என்றழைக்கப்பட்டனர். அவர்களுக்கு அளிக்கப் பட்ட நிலம், 'உவச்சக்காணி, உவச்சர் பேறு' என்று கல்வெட்டு களில் சுட்டப்பெறுகிறது.

இங்கிருந்து ஏற்கனவே படியெடுக்கப்பட்ட கல்வெட் டொன்றில், இக்கோயில் இறைவனுக்குத் திருமடைப்பள்ளிப்

புறமாக நிலத்துண்டு ஒன்றைத் தந்தவராகத் துவராபதி வேளா ரான இராசராசன் அழகியபெருமாள் வெளிப்படுகிறார். இங்கிருந்து கண்டறியப்பட்ட மற்றொரு புதிய கல்வெட்டு, கோயிலுக்குத் தரப்பட்ட குடிக்காடு ஒன்றைச் சுட்டுவதுடன், அதையொட்டி அமைந்திருந்த கொங்கவேளார் குளத்தையும் குறிப்பிடுகிறது. இந்நிலத்துக்கான வேளாண் வரியாக ஒரு கலம் தூணிப்பதக்கு அளவிலான நெல் தரப்பட்டது. இக்கல்வெட் டோடு தொடர்புடையதாகக் கருதப்படும் துண்டுக் கல்வெட்டு இங்குக் கொண்டாடப்பட்ட திங்கள் திருநாள் குறித்தும் மாணிக்க நாடாள்வான், கோயில் சிவபிராமணர் குறித்தும் சில செய்திகளைத் தருகிறது.

ஆய்வின்போது உடனிருந்து உதவிய திரு. சேதுராமன் துவரங்குறிச்சிக்குச் சற்றுத் தொலைவிலுள்ள மலம்பட்டிக் காட்டுப்பகுதியில் ஒரு கல்வெட்டு இருப்பதாகத் தெரிவித்து, எங்களை அங்கே அழைத்துச் சென்றார். கல்வெட்டு இருக்கும் இடம் தெரிந்த ஒருவர் வழிகாட்ட, ஒருவர் பின் ஒருவராக மிகுந்த எச்சரிக்கையோடு, ஏறத்தாழ அரைமணி நேரத்திற்கும் மேலாக அக்காட்டுக்குள் பயணப்பட்டுக் கல்வெட்டு இருந்த இடத்தை அடைந்தோம். மண்ணில் புதையுண்ட நிலையில் நான்கு புறமும் எழுத்துப் பொறிப்புகளுடன் ஆளுயரக் கல் ஒன்று எங்களை வரவேற்றது. மாலை நேரம் என்பதாலும் மரங் கள் அடர்ந்திருந்த பகுதியாக இருந்தமையாலும் மேலோட்ட மாகவே கல்வெட்டை ஆராயமுடிந்தது. வணிகக் குழு தொடர் பான அக்கல்வெட்டை மற்றொரு நாள் வந்து படித்துத் தருவ தாகக் கூறி விடைபெற்றோம். துவரங்குறிச்சிக் கல்வெட்டுகள் பற்றிய செய்தி 13. 9. 2008 இந்து நாளிதழிலும் 12. 9. 2008 தினமணி நாளிதழிலும் வெளியாயிற்று.

ஆகஸ்டு 30, 31இல் மாடக்கோயில் ஆய்வுகளுக்காகக் கும்ப கோணம் சென்றோம். இராம், இலலிதாம்பாள், பத்மநாபன், சீதாராமன் உடனிருந்தனர். குடவாயில் கோணேசர் கோயிலில் ஆய்வு தொடங்கியது. எழுவர்அன்னையர் சிற்பங்கள், கல்வெட் டுச் சிதறல்கள் ஆகியவற்றைச் சரி பார்த்தோம். மாடக்கோயில் மண்டபத்திருந்த ஆடற்சிற்பங்களையும் விமானத்தின் ஆரச் சுதையுருவங்களையும் ஆய்ந்து குறிப்புகள் தொகுத்தோம். மதிய

உணவு திருச்சேறையில் அமைந்தது. தொடர்ந்து நாலூர் மாடக் கோயில் ஆய்வுக்காளானது. தூங்கானைமாட விமானம் பெற்ற மிகச் சில மாடக்கோயில்களுள் அது ஒன்றாகும். ஏற்கனவே இக்கோயிலில் இருந்து முதலாம் ஆதித்தரின் 24ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டும் முதலாம் பராந்தகரின் 22ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டும் நடுவணரசின் கல்வெட்டுத் துறை யினரால் படியெடுக்கப்பட்டிருந்தன. எங்கள் ஆய்வின்போது, முக்கரையைச் சேர்ந்த வியாபாரி நக்கன் ஆதித்தன் நாலூர்த் திருக்கோயிலில் நாள்தோறும் உழக்கு நெய் கொண்டு நந்தா விளக்கொன்று ஏற்றக் கோயிலாரிடம் 92 ஆடுகள் கொடை யளித்த தகவலைப் பகிர்ந்துகொண்ட முதலாம் பராந்தகரின் 38ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கண்டறியப்பட்டது. நாலூர்க் கோயிலின் அறங்காவலர் திரு. இர. வாசுதேவன் ஆய்வுக்கு மிகவும் உதவியாக இருந்தார். நாலூர் மயானம் அருகி லிருந்தமையால் அக்கோயிலையும் பார்வையிட்டோம்.

அங்குள்ள கல்வெட்டுகளுள் சில நாலூர் மாடக்கோயில் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொண்டன. முதற் பராந்தகரின் 4ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தென்கரைத் திருநறையூர் நாட்டைச் சேர்ந்த அக்கிரமக்கோட்டச் சதுர்வேதிமங்கலத்து ஊரவையார் நாலூர்க் கோயிலுக்கு நிலமளித்த தகவலைத் தருகிறது. முதலாம் இராஜராஜரின் 24ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சம்பரீசுவரத்து மகாதேவர் திருக்கோயிலின் முன் இருந்த இராஜராஜன் கூடத்தில் நாலூர் ஊரவை கூடிய தகவலைப் பகிர்ந்துகொள்கிறது.

இக்கூடம் கண்டராதித்தர் பெயரைக் கொண்டிருந்தமை முதலாம் இராஜராஜரின் 23ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட் டால் தெரியவருகிறது. மன்னர் பெயரற்ற கல்வெட்டொன்றும் சம்பரீசுவரத்துப் பெருமானடிகளைக் குறிப்பிடுகிறது. வான வன் மாதேவிச் சதுர்வேதிமங்கலமாகவும் நாலூர் அறியப் பட்டமையை விக்கிரமசோழரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் வழி அறியமுடிகிறது இவ்வூரில் அகத்தீசுவரம் என்ற பெயரில் ஒரு சிவன்கோயிலும் திருநாராயண விண்ணக ரம் என்ற பெயரில் ஒரு பெருமாள் கோயிலும் விளங்கியதாகக் கல்வெட்டுகள் கண்காட்டுகின்றன.

மாலை நன்னிலம் சென்றோம் வெளிச்சுற்று, சுற்றாலை விமானங்கள், மதுவனேசுவரி கோயில் ஆகியவற்றை ஆய்வு செய்தோம். மறுநாள் காலை அம்பர் பெருந்திருக்கோயிலில் ஆய்வு தொடங்கியது. பூங்குழல்நாயகித் திருமுன்னில் தரவு களைச் சரிபார்த்தோம். வாகனமண்டபம், சுற்றாலைத் திருமுன் கள் முடித்து, வளாகத்தின் நடுவிலுள்ள பிரம்மபுரீசுவரர், சோமாஸ்கந்தர் திருமுன்களைத் தாங்கும் வெற்றுத்தளங்களை ஆய்வு செய்தோம். முறையான தாங்குதளமற்ற நிலையில், ஆங்காங்கே நான்முக அரைத்தூண்கள் தழுவிய காரைக் கட்டுமானமாய் 2. 42 மீ. உயரம் பெற்று அமைந்துள்ள வெற்றுத் தளச்சுவரில் மூன்று பழைமையான சிற்பங்கள் உள்ளன. ஒன்றில் அதிகாரநந்தியும் அவரது துணைவியும் காட்சிதர, மற்றொன்றில் ஆடற்காட்சி. மூன்றாம் சிற்பத்தில் அழகிய தேர் வடிக்கப்பட்டிருந்தது. கடிவாளத்தைப் பிடித்தவாறு சின் முத்திரையுடன் பாகர் அமைய, தேருக்குள்ளிருப்பவர் கிரீட மகுடமணிந்திருந்தார். கைகள் சிதைந்திருந்தபோதும் அவை வணக்க முத்திரையில் இருந்தமையை ஊகிக்க முடிந்தது. இது கீதோபதேசக் காட்சியாகலாம் என்று அகிலா கூற, அக்கருத்து நன்கு விவாதிக்கப்பட்டது.

கொல்லமாங்குடியில் மதிய உணவருந்திக் கோனேரிராச புரம் சென்றோம். திருமதி, திரு. காசிநாதன் இணையர் எங்களை அன்புடன் வரவேற்றுக் கோயிலைச் சுற்றிக் காட்டினர். உடன் வந்தவர் அனைவருக்கும் கண்டராதித்தர் சிற்பத்தைக் காட்டி விளக்கினேன். சிற்பத்தின் கீழிருந்த கல்வெட்டை எழுத் தெண்ணி நளினி படிக்க, நான் விளக்கவுரை தந்தேன். மிகுந்த தெளிவுடன் பொறிக்கப்பட்டிருக்கும் அக்கல்வெட்டுச் செய்தி யின் பொருளுணராமல், என். சேதுராமன் உள்ளிட்ட பல ஆய்வாளர்கள் அங்குச் செம்பியன்மாதேவியை அடையாளம் கண்டு கட்டுரைத்திருக்கும் தகவல்களை அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன்.

சிற்றுருவச் சிற்பங்களையும் தேவகோட்டச் சிற்பங்களை யும் நண்பர்கள் அனைவரும் பார்த்துக் கருத்துப் பரிமாற்றம் கொண்டனர். மாலைத் தேநீருக்குப் பிறகு செம்பியன்மாதேவிக் காலச் செப்புத்திருமேனிகளைக் கண்டு இரசித்தோம். அந்தக்

கோயிலிலிருந்த மணவழகர் தொகுதியின் ஆண்வடிவத்தையும் முப்புரமெரித்தவர் தொகுதியின் பெண்வடிவத்தையும் ஏதோ ஒரு காலகட்டத்தில் கோயில் இழந்திருக்கிறது. இழப்பை உணராத நிலையில் பின்னால் வந்தவர்கள் எஞ்சி நின்ற மண வழகரின் பெண்வடிவத்தையும் முப்புரத்தாரின் ஆண்வடிவத்தை யும் அருகருகே நிற்க வைத்து ஓர் இணையாக்கிவிட்டனர். எங்கள் முதலாய்வின்போதே இவ்வுண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்திய தகவலை நண்பர்களுடனும் கோயிலாருட னும் பகிர்ந்துகொண்டேன்.

வரலாறு 19ஆம் தொகுதியின் புதிய கல்வெட்டுகள் பகுதி யில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் கண்டறியப்பட்ட மூன்று விளக்குத்தோரணக் கல்வெட்டுகளின் பாடங்களையும் இணைத்தோம். பெருமைச்சுவடுகள் பகுதியில், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் புகழ் மிக்க ஆய்வுகள் குறித்து வரலாற்று வரைவியல் அடிப்படையில், 'ஞாலவெளியில் ஒரு காலநடை' என்ற தலைப்பில் நான் கன்னிமாரா நூலகத்தில் நிகழ்த்திய உரையைக் கட்டுரையாக்கிப் பதிவுசெய்தோம். அந்தக் கட்டுரையின் இறுதிப் பத்திகள் இரண்டும் இங்கு இடம்பெறத் தக்கன.

'வரலாற்றறிஞர்களுக்கு ஆழமான இலக்கியப் பயிற்சி இருப்ப தில்லை. தமிழறிஞர்களோ வரலாற்றுப் பார்வை கொள்வ தில்லை. இந்த இரண்டும் சரியான அளவுகளில் கலந்திருந்த இராசமாணிக்கனாரை இனங்கண்ட நிலையிலேயே, வரலாறு அவரைச் சூழ இருந்து ஆட்கொண்டது. அவர் தமிழாசிரியர் தான். ஆனால், வரலாற்றை ஆராதித்த அறிவியல் பார்வையர். அவர் வாழ்ந்த காலக்கட்டத்தில் தமிழர்களுக்கு அவர்களை யார் என்று அடையாளம் காட்டவேண்டிய தேவையிருந்தது. அந்தத் தேவையை முற்றிலுமாய்ப் புரிந்துகொண்ட நிலையில் தான், 'இதை, இவர் கொண்டு, இப்படிச் செய்திடல் வேண்டும்' என்ற கருத்துடன் காலம் அவரைக் கைப்பிடித்தது. எந்தத் துகளில் இருந்தும் இமயம் உருவாகலாம் என்பது போல் அந்தக் கையிணைப்பு, தமிழர் துயில் கலைக்க, அவர்தம் வேர்களைப் புலப்படுத்த இராசமாணிக்கனாரை ஒரு வரலாற்றறிஞராக உருமாற்றியது.

அறிவும் அன்பும் சரியான அளவுகளில் கலந்த கவர்ச்சிக் கண்களும் பரந்த நெற்றியும் இலேசாய் நெகிழ்ந்த இதழ்களில் இளநகையும் எவரையும் எளிதாய்ச் சென்றடைந்த நகைச்சுவை இழையோடும் அவருடைய அகல உரைகளும் அந்த மனிதரை, 'மக்களின் மைந்தராக' வாழவைத்தன. நாடெங்கிலும் இருந்த நற்றமிழர் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்த அந்த அற்புத வாழ்க்கையின் அடையாளம்தான் அவருடைய பத்துப்பாட்டு ஆராய்ச்சி. அது அவருடைய வாழ்நாள் சாதனை; காலம் ஒரு மனிதரைக் கொண்டு தன்னில் ஒரு துளியை முழுமையாகப் பதிவுசெய்து கொண்ட வரலாற்றின் வரலாறு.'

செப்டம்பர் 2ஆம் நாள் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி யின் வரலாற்றுத் துறையில் சோழர்கள் வரலாறு குறித்து வகுப்பெடுத்தேன். மாணவிகள் உளங்கொள்ளும் வகையில் பல்லவ அரசைப் பற்றிய முன்னுரையுடன் ஏறத்தாழ மூன்றரை நூற்றாண்டுகள் தமிழ்நாட்டையாண்ட சோழர்களின் ஆட்சி முறை, கலைப்புல ஆற்றல், ஆளுமை, வணிகம் எனப் பலவும் குறித்துக் கலந்துரையாடல் அமைப்பிலேயே அவ்வகுப்பு அமைந் தது. மிக இன்றியமையாத செய்திகளை மட்டுமே பகிர்ந்து கொண்டதால் இரண்டரை மணி நேரத்தில் உரை முடிக்க முடிந்தது. மாணவிகள் ஆர்வத்துடன் எழுப்பிய வினாக் களுக்கு உரிய விடைகள் தந்தேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு வகுப்பாசிரியனாய் மாறியது மகிழ்வளித்தது.

சிராப்பள்ளி கரூர்ச் சாலையில் மகாதானபுரத்தின் தென் பகுதியில் 12 கி. மீ. தொலைவில் உள்ள பழைய செயங்கொண் டம் ஆளவந்தீசுவரம் திருக்கோயில் நிருவாக அலுவலர் வேண்டுகோளை ஏற்று செப்டம்பர் 7 அன்று அக்கோயில் ஆய்வை மேற்கொண்டோம். சிதைந்த நிலையில் உள்ள ஆள வந்தீசுவரம் சோழர் காலத்தில் கட்டப்பட்டு இரண்டாம் பாண்டிய அரசின் காலத்தே திருப்பணிக்கு ஆளாகியமையை ஆங்காங்கே சிதறிக் கிடந்த கல்வெட்டுகள் உணர்த்தின. ஆய்வின்போது புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. இங்குள்ள சண்டேசுவரர் திருமுன்னைக் கட்டியவராக மத்தி யப்ப ஞானியர் பெயரைத் தரும் 19ஆம் நூற்றாண்டு எழுத் தமைதியிலான கல்வெட்டு, சிவஞானபோதம் படைத்த ஞானி

யார் சுவாமிகளை மக்கள் தொடர்ந்து நினைவு கொண்டிருந்த மையைச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

விமானத்தின் தென்திசைக் கோட்டத்தில் உள்ள ஆலமர் அண்ணலுக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கும் சிறு மண்டபத் திற்கான தூண்களைத் தந்தவர்களாக இரண்டு கொடையாளி களின் பெயர்கள் கிடைத்தன. தென்மேற்குத் தூணைத் தந்தவ ராகக் கருதநாகப் பெருமாள் என்பவரும் தென்கிழக்குத் தூணைத் தந்தவராக இருவன் என்பவரும் அறிமுகமாயினர். விமானத்தின் முன்னுள்ள முகமண்டபத்தை அடுத்திருக்கும் பெருமண்டபத் தாங்குதளத்தின் தெற்கிலும் கிழக்கிலுமுள்ள குமுதத்தில் காணப்படும் இரண்டு கல்வெட்டுத் துணுக்குகளும் திருப்பணியின்போது சிதறடிக்கப்பட்ட பிற்சோழர் காலக் கொடைக் கல்வெட்டொன்றின் எச்சங்களாகும். இரண்டை யும் படியெடுத்துப் படித்த நிலையில், இறைவனின் முழுக்காட் டிற்கும் படையல், வழிபாடு ஆகியவற்றிற்குமாக ஆளவந்தீசு வரர் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக நிலத்துண்டு ஒன்று கொடையளிக்கப்பட்டமை தெரிந்தது.

கோயில் வளாகத்தின் தென்பகுதியில் உள்ள எழுவர் அன்னையர் சிற்பத்தொகுதி பழைமையான பலகைச் சிற்ப மாகும். கோயிலுக்குரியதாகக் குறிக்கப்படும் குளம் ஊரின் புறத்தே நன்கு சீரமைக்கப்பட்ட சுற்றுச் சுவருடன் இருந்தது. அதன் நாற்புற வாயில்களும் அமர்நிலை நந்திச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நந்திக்குக் கீழ்ப்பட்ட நிலையில் தெற்கில் கண்ணனின் குருந்தமரத் திருவிளையாடலும் வடக் கில் ஆடவர் ஒருவர் நீண்ட குழாய் ஒன்றின் வழியே புகை பிடிக்கும் காட்சியும் செதுக்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டுச் சைவத் திருக்கோயில்களில் நந்தியின் சிற்பம் மிக இயல்பான ஒன்று என்றாலும், இதுநாள்வரை எங்களால் பார்க்கப்பட்ட நந்தியின் சிற்பங்கள் எவற்றிலும் இது போன்ற கூடுதல் காட்சி கள் செதுக்கலாக இடம்பெறாமை வியப்பை உண்டாக்கியது. கண்ணனைக் காட்டும் காட்சியொன்றும் சமூகப் படப்பிடிப் பொன்றும் நந்தியுடன் இணைந்த நிலையில் காட்டப்பட்டிருப் பதன் பின்னணியை உணரக்கூடவில்லை. இக்கண்டுபிடிப்புச் செய்திகள் 25. 9. 2008 இந்து நாளிதழில் வெளியாயின.

மேட்டுமகாதானபுரம் சோழீசுவரம் திருக்கோயிலில் ஆய்வு மேற்கொண்டபோது சில புதிய கல்வெட்டுகள் கண்டறியப் பட்டன. கோயில் உள்மண்டபத்தைத் தாங்கும் முச்சதுர, இருகட்டு உடல் தூண்களுள் முதல் வரிசையில் உள்ள வடக்கு, தெற்குத் தூண்கள் இரண்டின் மேற்சதுரத்தில் அவற்றை அளித்த கொடையாளிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள் ளன. 18, 19ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள அவற்றுள் ஒன்று தன்மராயன் என்ற பெயரைத் தர, மற்றொன்று நல்ல தம்பிப் புலவன் என்ற பெயரைத் தருகிறது.

தமிழ்நாட்டுக் கோயில்களில் அரிதாகக் காணப்படும் உச்சிஷ்ட கணபதி இக்கோயில் பெருமண்டப முன்சுவரில் காணப்படுகிறது. அதில் பிள்ளையார் இலலிதாசனத்திலிருக்க, அவரது இடத்தொடையில் தேவி வீற்றிருக்கிறார். பிள்ளையா ரின் வலப் பின் கையில் அங்குசமும் முன்கையில் உடைந்த தந்தமும் உள்ளது. இடப் பின் கை தேவியை அணைத்தவாறு உள்ளது. இட முன் கையைக் காணக்கூடவில்லை. முதல் இராஜேந்திரரின் 4ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஸ்ரீகயி லாசமான ஸ்ரீமதுராந்தக ஈசுவரமுடையார் கோயிலாகச் சுட்டப்படும் இச்சோழர் காலச் சோழீசுவரம் ஓய்சளர் காலம் வரை சிறப்பாக இருந்தமைக்கு வீரசோமேசுவரரின் படைத் தலைவர் சோமய தண்டநாயக்கர் காலக் கல்வெட்டுச் சான்றா கிறது. பேரழிவிற்கு ஆளாகியிருந்த இக்கோயில் பற்றிய தகவல் கள் தினமணி நாளிதழில் 30. 11. 2008 அன்று வெளியாயின.

செப்டம்பர் 14 காலை துவரங்குறிச்சிச் செல்லும் வழியில் கொடும்பாளூர் மூவர் கோயிலைப் பார்வையிட்டோம். தொல் லியல்துறை உதவியாளர் பழனிச்சாமி உடனிருந்து உதவினார். எத்தனையோ முறை பார்த்த கோயில்கள் என்றாலும், கொடும் பாளூர்க் கலைமுறை கண்களை நிறைப்பது, காணத் தெவிட் டாதது என்பதால் பிரியும்போது மனம் வலிக்கவே செய்தது. 11 மணியளவில் திரு. சேதுராமன் துணையுடன் துவரங்குறிச்சிப் பாலக்குறிச்சிப் பாதையில் 3 கி. மீ. தொலைவிலுள்ள மலம் பட்டிக் காட்டுக்குள் இருந்த, உள்ளூர் மக்களால் நட்டக்கல்லு அய்யனாராக வழிபடப்படும் வணிகக் கல்வெட்டு பொறிக்கப் பட்டிருந்த கற்பலகை இடத்தையடைந்தோம். அக்கல்வெட்டி

லுள்ள செய்தியைத் தெரிந்துகொள்வதற்காகப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. பக்கத்து சிற்றூர்களைச் சேர்ந்த பல பெரியவர் கள் ஆர்வத்தோடு எங்களை அணுகினர்.

அந்தப் பலகைக் கல்லுக்கு ஆண்டுதோறும் பூசை, படைய லுடன் பெரிய அளவில் விழா எடுப்பதாகக் கூறிய அவர்கள் அக்கல்வெட்டுச் செய்தியை அறிந்துகொள்ளப் பேரார்வம் காட்டினர். மண்ணில் புதையுண்ட நிலையில், ஏறத்தாழ நான் கரையடி உயரமிருந்த அக்கருங்கல் பலகையின் நாற்புறத்தும் எழுத்துக்கள் ஆழமாக வெட்டப்பட்டிருந்தன. 88 வரிகளில் அமைந்திருந்த அந்த ஆவணத்தை, ஐயபொழில் பரமேசுவரி யின் மக்களாகத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் திசை யாயிரத்து ஐநூற்றுவரில் கொடும்பாளூரைச் சேர்ந்த வீர பட்டனம் குழுவினரும் மதுரை அடிக்கிட்டனம் குழுவினரும் இணைந்து உருவாக்கியுள்ளமையை அறியமுடிந்தது. மிகுந்த முயற்சியுடன் கல்வெட்டைத் தூய்மை செய்து படித்ததில் பல செய்திகளைத் தொகுக்க முடிந்தது.

வணிகப் பொருட்களோடு பெருவழிகளில் செல்லும்போது, கொள்ளையர்களிடமிருந்து தங்களையும் வணிகப் பொருட் களையும் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தென்னக வணிகக் குழுக்கள் தங்களுக்கெனக் காவற்படை அமைப்புகளைக் கொண்டிருந்தன. அத்தகு படைகளில் பணியாற்றியவர்கள் பல்வேறு வீரக்குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். வேளைக்காறர், கவறைகள், கண்டழி, கண்டச்செட்டி, வலங்கை, சிங்கம், வீரர் எனும் ஏழு குழுக்களைச் சேர்ந்த வீரர்கள் மலம்பட்டிக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளனர். அவர்களில் கவறைகள், கண்டழி என்ற குழுக்களைச் சேர்ந்த வீரர்களே எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளனர். தசமடிக் கவறைகள், கொங்குமண்டலக் கவறைகள் என அவர்கள் இரு பிரிவுகளாக இருந்தனர். இவ்வீரர் குழுக்களை வணிகக் குழுக்கள், 'நம் மக்கள்' என்றே குறிப்பிடுகின்றன.

திசையாயிரத்து ஐநூற்றுவருக்குத் தொடர்ந்து தொல்லை தந்த இருவரை வணிகக் குழு வீரர்கள் கொன்றழித்த தகவலை மலம்பட்டிக் கல்வெட்டு பகிர்ந்துகொண்டது. வீரன் நாடாள் வான் என்பவரைக் கொன்றவர்களாக எட்டு வீரர்களின் பெயர்

கள் இடம்பெற்றுள்ளன. அவர்களில் மூவர் இராஜராஜர், இராஜேந்திரர் பெயர்களைத் தங்கள் பெயர்களின் முன்னொட்டுக்களாகக் கொண்டுள்ளனர். அகப்பிஞ்சி என்பவரைக் கொன்றவர்களாக 14 வீரர்களின் பெயர்கள் தரப்பெற்றுள்ளன. இவர்களில் கவறைகளும் கண்டழியும் கூடுதலாக உள்ளனர்.

வீரச்செயல் நடந்த வணிக ஊரைப் பெருமைப்படுத்தும் விதமாக ஐநூற்றுவர் அதை வீரதாவளமாக அறிவித்தனர். வீரப் போரில் இறந்தவராக ஊகிக்கத்தக்க கவறை உய்யக்கொண்டானின் குடும்பத்திற்கு வயல், குளம் அளித்துள்ளனர். அந்த வயலை வீரகள்வேளைக்காறனான வீரகள்மதலை உழுது, உரிமையாளர்களுக்கு உரியன தந்து தாமும் அனுபவித்துக்கொள்ள வழியமைத்தனர். ஊரிலிருந்த அம்பலத்தை மெழுக வாய்ப்பாகக் கவறை விடங்கனுக்கு மெழுக்குப்புறமாக நிலத்துண்டும் பாவாடையாகத் துணியும் அளித்தனர்.

பொ. கா. 11ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் விளங்கிய அக்கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்தோம். பேராசிரியர் எ. சுப்பராயலு எறிவீரபட்டனங்களைப் பற்றி மையத்தில் ஆற்றிய உரை நினைவுக்கு வந்தது. வணிகச் சாத்துகளைக் காவல் காத்துச் சென்ற வீரர் குழுக்களின் சமுதாய நடவடிக்கைகளையும் அவர்தம் பண்பாட்டு நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தும் இது போன்ற கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் மிகக் குறைந்த அளவிலேயே கிடைத்துள்ளன. தாத்தையங்கார் பேட்டையருகே இது போன்ற கல்வெட்டு ஒன்றை ஆய்வு மையம் கண்டறிந்து வெளிப்படுத்தியமை, நத்தம், திண்டுக்கல், சிங்களாந்தகபுரம், கோவில்பட்டி ஆகிய ஊர்களிலும் இலங்கையின் சில பகுதிகளிலும் வீரத்தளம், வீரத்தாவளம் தொடர்பான வணிகக்குழு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை என அனைத்துச் செய்திகளையும் கூடியிருந்த ஊர் மக்களிடம் அவர்களுக்குப் புரியுமாறு கூறி, அக்கல்வெட்டுப் பலகையின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அதை நன்கு பாதுகாக்கவேண்டும் என வேண்டி அவர்கள் உதவியுடன் கல்வெட்டை மசிப்படியெடுத்தோம். இக்கண்டுபிடிப்புப் பற்றிய செய்தி மீள்படிப்பிற்குப் பிறகு 27. 5. 2009 தினமணியில் விரிவான அளவில் வெளியானது.

இக்கல்வெட்டுச் செய்தியைப் படித்த பேராசிரியர் எ. சுப்பராயலு திரு. சு. இராஜவேலுவை மலம்பட்டி சென்று இக்கல்வெட்டைப் படியெடுத்துவருமாறு ஆற்றுப்படுத்த, இராஜவேலு என்னைத் தொடர்பு கொண்டார். திரு. சேதுராமனின் முகவரியையும் தொடர்பு எண்ணையும் அவருக்கு அளித்த தோடு, சேதுராமனோடு பேசி இராஜவேலு வரும்போது உரிய உதவிகளைச் செய்திடுமாறு வேண்டிக்கொண்டேன். மலம்பட்டிக் கல்வெட்டின் பாடம், நளினியின் பெயரில் ஆவணம் இதழில் வெளியானது. இக்கல்வெட்டில் புரிபடாதிருந்த சில தொடர்கள் குறித்துத் திரு. சுப்பராயலு விளக்கமளித்ததாக அறிந்தோம். தமிழ்நாட்டின் வணிகக் காப்புப் படை வரலாற்றிற்கு எங்கள் கொடையாக மலம்பட்டிக் கல்வெட்டு அமைந்ததில் நானும் நளினியும் நிறைவுற்றோம்.

14 ஞாயிறன்று மதிய உணவுக்குப் பிறகு திரு. சேதுராமன் எங்களைத் தளவாய்ப்பட்டிக்கு அழைத்துச் சென்றார். அவ்வூரில் சாலையோரத்தே மண்ணில் புதையுண்டிருந்த சுந்தர பாண்டியரின் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருந்த கற்பலகையை ஊரார் உதவியுடன் அகழ்ந்தெடுத்துக் கல்வெட்டைப் படித்தோம். அவ்வூரிலிருந்த ஊருணி ஒன்றுக்கு அளிக்கப்பட்ட கொடை பற்றிய கல்வெட்டாக அது அமைந்திருந்தது. கிராமத்தின் தென்மேற்குப்பகுதியில் உள்ள தனியார் தோப்பில் பாதி புதைந்த நிலையில் காணப்பட்ட பலகைக் கல்லில் பொ. கா. 13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியுடன் இருந்த கல்வெட்டைப் படித்தோம்.

பூச்சயபுரம் என்று அவ்விடத்தைக் குறிப்பிட்ட கல்வெட்டில் வில், குடை, கமண்டலம் முதலிய சின்னங்கள் கோட்டுருவங்களாக நாற்புறமும் வெட்டப்பட்டிருந்தன. 9 வரிகளில் அமைந்திருந்த கல்வெட்டு, நாங்கூர் நாட்டு மண்குறிச்சியிலிருந்த படையாரைச் சுட்டிக் காட்டியதுடன், அவர்களுள் மிறைமிடன் மாணிக்கனான முழுதுமல்ல தேவன் உள்ளிட்டாரும் அங்கிருந்த குளமும் முழுதுமல்லருக்கும் மலைதகர்த்த கண்டருக்கும் அடைக்கலமாக இருந்த தகவலைத் தந்தது. இந்தக் கல்வெட்டு 1964இல் நடுவணரசால் படியெடுக்கப்பட்டிருந்தும் பாடம் வெளியாகவில்லை.

இத்தோப்புக்கருகிலுள்ள மணல்மேட்டில் பாண்டியர் காலத்ததாகக் கொள்ளத்தக்க நந்தியொன்றும் சிவலிங்கமொன்றும் கண்டறியப்பட்டன. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் இந்தப் பகுதியில் இருந்து அழிந்த சிவன்கோயில் ஒன்றின் எச்சங்களாக அவற்றைக் கொண்டோம் இப்பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகள் இக்காலத்தே இங்குக் குறுநில மன்னர்களின் ஆட்சி செல்வாக்குப் பெற்றிருந்தமையை உணர்த்துகின்றன. அவர்களுக்கிடையே தொடர்ந்து நிகழ்ந்த போர்கள் இப்பகுதி ஊர்களில் நிம்மதியின்மையை உருவாக்கியிருந்தமையையும் முக்கியமான ஊர்களில் சிறுசிறு படைகள் தங்கியிருந்தமையையும் பூச்சயபுரம் கல்வெட்டுப் போன்ற ஆஸ்ரயக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன என்பதை வந்தவர்களிடம் பகிர்ந்தோம்.

21 அன்று மீளாய்வுக்காகக் குன்றாண்டார்கோயில் சென்றோம். கட்டடக்கலை ஆய்வு முடிந்திருந்தமையால் கல்வெட்டுகளைச் சரிபார்க்கத் தொடங்கினோம். புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுத் தொகுதிகள், தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் துணையுடன் அனைத்துக் கல்வெட்டுகளின் பாடங்களையும் களத்தில் படித்துக் குறைகளை நிறை செய்தோம். இவ்வாய்வின்போது புதிய கல்வெட்டுகள் சில கண்டறியப்பட்டன. சில கல்வெட்டுகள் மிகவும் சிதைந்த நிலையில் இருந்தமையால் படிப்பதற்குப் பெருமுயற்சி தேவையாக இருந்தது. தொல்லியல்துறை உதவியாளர் திரு. முத்துக்கிருஷ்ணன் உடனிருந்து உதவினார். கோயில் அறங்காவலர் செப்புத்திருமேனிகளை ஆய்வுசெய்யத் துணைநின்றார்.

நடுக்குடைவரையின் அளவுகளை நளினி, சுமிதா துணையுடன் எடுக்க முடிந்தது. தென், வடகுடைவரைகள் சிறியனவாக இருந்தமையால் எளிதாக அளவெடுத்தோம். குன்றாண்டார் கோயில் வளாகமே தமிழ்நாட்டளவில் ஆடரங்கு ஒன்றுடன் அமைந்த ஒரே குடைவரை வளாகம். அவ்வாடரங்கை முழுமையாக ஆய்வுசெய்து தனிக் கட்டுரை ஒன்று உருவாக்கியிருந்தோம். அக்கட்டுரையையும் அன்று படித்துத் தரவுகளைச் சரிபார்த்தோம். தமிழ்நாட்டுக் கோயில்களில் இது போன்ற ஆடரங்குகள் பல இருக்கலாம். அவற்றை அடையாளப்படுத்தித் தொகுப்பது தமிழ்நாட்டு ஆடற்கலை வரலாற்றிற்குப் பெருமை சேர்க்கும்.

27, 28 இரண்டு நாட்களும் மாடக்கோயில்கள் மீளாய்வுக் காக நாகபட்டினம் சென்றோம். தேவூர்க் கோயில் கட்டுமானக் குறிப்புகளையும் கல்வெட்டுத் துணுக்குகளையும் சரிபார்த்தோம். கோபுரக்கூரையில் தென்பட்ட புதிய கல்வெட்டை நளினி படித்துப் படியெடுத்தார். சோமாஸ்கந்தர் உள்ளிட்ட செப்புத் திருமேனிகளைக் கோயிலார் உதவியுடன் பார்த்துக் குறிப்புகள் எடுத்தோம். மதிய உணவு நாகபட்டினம் துணை வட்டாட்சியர் திரு. இராமச்சந்திரனின் ஆதரவில் செம்பியன்மாதேவி கயிலாச நாதர் கோயிலில் அமைந்தது. அக்கோயிலை எண்பதுகளி லேயே நான் பார்த்திருந்தபோதும் இம்மீள்பார்வை செம்பியன் மாதேவி கலைமுறையைப் புரிந்துகொள்ள உதவியது. சுற்று மாளிகையில் இருந்த எழுவர்அன்னையர், சேட்டைத்தேவி சிற்பங்கள் சிறக்க வடிக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்து இராமச்சந்திரனின் ஆய்வுக்கு உட்பட்டிருந்த சோழவித்யாபுரம் எனும் சிற்றூரிலிருந்த சிதைந்த கோயில் ஒன்றைச் சென்று பார்த்தோம். இராமச்சந்திரனின் நண்பர்கள் வரவேற்றுக் கோயிலைச் சுற்றிக் காட்டினர். 3 மணியளவில் வலிவலம் மாடக்கோயிலை அடைந்தோம். கோயில் சிவாச்சாரி யார் நீண்ட இடைவெளிக்குப் பிறகு பார்த்த நிலையிலும் என்னை அடையாளம் கண்டு கொண்டார். கோயிலை மீளாய்வு செய்ய வந்திருப்பது அறிந்து மகிழ்ந்தார். அவரது உதவியுடன் கோயில் செப்புத்திருமேனிகளையும் சிற்பங்களையும் பார்த்துக் குறிப்புகள் எடுத்தோம். கோயில் கட்டுமானம் விரிவான அளவில் ஆய்வு செய்யப்பெற்றது. கோயிலாருடன் உள்ளூர்ப் பெரியவர்கள் சிலரும் உடனிருந்து வேண்டும் உதவிகள் செய்து ஆய்வுக்குத் துணை நின்றமை பெருமகிழ்வளித்தது.

வலிவலத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பாக அக்கோயில் குளத்தைக் குறிக்கவேண்டும். குளக்கரையில் நான் இருந்த நேரம் கதிரவன் மறையும் காலமாக அமைந்தமையால் வானம் வண்ணங்களில் மூழ்கியிருந்தது. குளத்து நீரும் அந்த வண்ணங் களின் எதிரொளிப்பை வெளிப்படுத்தியது. தனிமையில் இருந்த தால் என் விருப்பம் போல் சூழலை அனுபவிக்க வாய்த்தது. ஒரு கோயிலுக்குக் குளம் எத்தனை அவசியமானது என்பதை அந்தக் கோயிலைச் சூழ வாழும் ஊரே நிருணயிக்கிறது. வலிவலம்

அந்த வகையில் பெருமைக்குரிய ஊராகக் குளம் காத்து வளம் கொழிக்கும் சிறப்போடு திகழ்கிறது.

ஞாயிறு காலை சுனாமியினால் ஏற்பட்ட மாற்றங்களைக் காட்டுவதற்காகத் திரு. இராமச்சந்திரன் எங்களை நாகபட்டினம் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். சுனாமி அனுபவங்களை அவர் சொல்லச்சொல்ல நாங்கள் அனைவருமே வேதனையின் உச்சிக்குச் சென்றோம். வரம்புகள் மீறப்படும்போது அது மனிதகுலத்தையே அழிப்பதாக அமைந்து விடுகிறது. சிற்றுண்டிக்குப் பிறகு கீழ்வேளூர் சென்றோம். அங்குள்ள கேடிலியப்பர் கோயில் தமிழ்நாட்டிலுள்ள 34 மாடக்கோயில்களுள் குறிப்பிடத்தக்கதாகும். மிகுதியான அளவில் பாலுணர்வுச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ள அக்கோயிலின் சுற்றுச் சுவரில்தான் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் வேறெங்கினும் காணவியலாத யானை மகப்பேறு சிற்பமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. பல்லக்குப் பயணக் காட்சிகளும் அச்சுற்றுச் சுவரில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கணக்கற்ற பிற்காலக் கல்வெட்டுகளைக் கீழ்வேளூர்க் கோயிலிலிருந்து படியெடுத்தோம்.

இக்கோயிலில்தான் அர்த்தஸ்வஸ்திகக் கரணத்திலமைந்த ஆடவல்லான் படிமம் உள்ளது தமிழ்நாட்டில் மிகச் சில இடங்களிலேயே இக்கரணத்திலமைந்த செப்புத்திருமேனிகளை நான் பார்த்திருக்கிறேன். கோயிலார் துணையுடன் அத்திருமேனியைப் பார்த்து வேண்டும் தரவுகள் தொகுத்தோம். குப்புறப் படுத்திருக்கும் முயலகன் மீது இடக்காலைத் திரயச்ரத்தில் ஊன்றி, வலக்காலை இடக்காலுக்கு முன், பாதம் அக்ரதல சஞ்சாரத்தில் அமையுமாறு ஸ்வஸ்திகமாக்கி, பத்துத் திருக்கைகளுடன் கரணம் நிகழ்த்தும் இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை வேழமுத்திரையில் உள்ளது. வலப் பின் கைகளில் கீழிருந்து மேலாகக் கத்தி, மழு, முத்தலைஈட்டி, உடுக்கை அமைய, இடப் பின் கைகளில் கேடயம், மாட்டுக்கொம்பு வடிவிலமைந்த தடி, பாசம், தீச்சுடர் இவை உள்ளன.

கொக்கிறகும் மண்டையோடும் பொருந்திய சடைமகுடம், சவடி, கண்டிகை, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கடக, கை வளைகள், மரமேறிஆடையணிந்து ஆடும் இறைவனின்

வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம். விரிசடையின் வலப்புறம் கங்கை, இடப்புறம் பிறை. இந்நெற்றிக்கண்ணரின் இடப்புறமுள்ள இறைவி சமபங்கத் தில் மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், ஸ்கந்தமாலை, தோள், கடக, கை வளைகள், பட்டாடையணிந்து தலைச்சக்கரம் பொருந்திய சடைமகுடராய் வலக்கையைக் கடகத்திலிருத்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

இவ்விணைக்கு முன்னால் இறைவனின் ஆடலுக்கு இசை தருபவர்களாய் நான்முகனும் விஷ்ணுவும் தத்தம் தேவியருடன் காட்சிதருகின்றனர். முன்கைகள் வீணை வாசிக்க, பின்கை களில் அக்கமாலை, குண்டிகை ஏந்தி நிற்கும் கலைமகளுடன் செண்டுதாளம் கொண்டவராய்ப் பின்கைகளில் அதே கருவி களுடன் காட்சிதருகிறார் நான்முகன். பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, முன்கைகளால் மத்தளம் வாசிக்கும் விஷ்ணு வுடன், பின்கைகளில் மலர்மொட்டுகள் கொண்டு முன்கை களால் தாளம் எழுப்பும் நட்டுவாங்க நாயகியாய்த் திருமகள் இயங்குகிறார். தமிழ்நாட்டின் வேறெந்தத் திருக்கோயிலிலும் காணமுடியாத இந்த ஆடல்கூட்டம் கீவளூரின் தனிப் பெருமையாகும்.

மதிய உணவுக்குப் பிறகு சிக்கலில் உள்ள பால் வெண் ணெய் நாயனார் மாடக்கோயிலுக்குச் சென்றோம். பாடல் பெற்ற சிவன்கோயிலாக அமைந்திருந்தபோதும், சுற்றாலைத் தெய்வமான முருகன் முதன்மை பெற்றதால் சிக்கல் சிங்கார வேலர் கோயிலாகவே இது அறியப்படுகிறது. முன்பு பார்த்திருந்த போதும் ஆய்வுநோக்கில் இக்கோயிலை அணுகுவது இதுவே முதல் முறை என்பதால் மிகுந்த கவனத்துடன் தரவுத் தொகுப் பில் ஈடுபட்டோம். முன்மண்டபங்கள் அனைத்தும் பிற்காலப் பணிகளாக இருந்தன. தியாகராஜர் என்றழைக்கப்படும் சோமாஸ் கந்தர் திருமுன்னும் இறைவன் விமானமும் மாடக்கோயில் அமைப்பில் இருந்தன. இரண்டின் வெற்றுத்தளங்களும் 2. 29 மீ. உயரம் கொண்டிருந்தன.

விமான வெற்றுத்தளத்தின் முப்புறத்தும் உள்ள கோட்டங் களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவ ரும் அமைய, வடக்குக் கோட்டம் வெறுமையாக இருந்தது.

இறைவன் விமானம் 5. 57 மீ. பக்கமுடைய பிரதிபந்தத் தாங்கு தளம் கொண்ட வேசரமாக அமைந்துள்ளது. இக்கோயிலில் இருந்து 6 கல்வெட்டுகள் 1911இல் படியெடுக்கப்பட்டிருந்தன. படியெடுக்கப்பட்ட காலத்திலிருந்த நிலையினும் சிதைந்திருந்த அக்கல்வெட்டுத் துணுக்குகளை நளினி படித்தார். மாலை மயங்கும் நேரத்தில் நாகபட்டினம் புத்தவிகாரமாக இராமச்சந்திரன் கண்டறிந்திருந்த கட்டடப்பகுதியைப் பார்த்து, அவரால் கண்டு பிடிக்கப்பட்ட தீர்த்தங்கரர் சிற்பத்தையும் பார்வையிட்டோம்.

அக்டோபர் 19 கல்கி இதழில் திரு. த. கி நீலகண்டன் எழுதியிருந்த 'அண்டமுற நிமிர்ந்தாடும் அப்பன்' கட்டுரை படித்து அதிலிருந்த பிழைகள் குறித்துக் கல்கி ஆசிரியருக்கு எழுதினேன். "திருவாலங்காட்டில் இருக்கும் சிவபெருமானின் ஆடற்கோலத் திருமேனி, 'ஊர்த்வதாண்டவம்' வகையினது அன்று. பரதர் தம்முடைய நாட்டியசாத்திரத்தில் கூறியுள்ள 108 கரணங்களுள் ஒன்றான, 'விஷ்ணுகிராந்தம்' வகையைச் சேர்ந்த திருமேனி இது. அம்மை பாடுவது போல அண்டம் உற நிமிர்ந்த கோலம்தான். ஆனால், ஊர்த்வதாண்டவம் அன்று.

ஊர்த்வதாண்டவத்தில் கால் உடலோடு ஒட்டித் தலை யளவு உயர்ந்திருக்கும். சில திருமேனிகளில் வலக்காலும் சில திருமேனிகளில் இடக்காலும் உயர்ந்திருக்கும். திருவாலங்காடு திருமேனியில் இடக்கால் இடப்புறம் வீசப்பட்டுள்ளது. திரிவிக்கிரமர் கோலத்தில் காட்டப்படும் கால் வீச்சு இது. அதனால்தான், அந்தக் கால்வீச்சுடன் அமைந்த கரணத்தை விஷ்ணுகிராந்தம் என்கிறது நாட்டிய சாத்திரம். மாமல்லபுரம், நாமக்கல் குடைவரைகளில் காணப்படும் திரிவிக்கிரமரின் பக்கவாட்டில் உயர்ந்து நீளும் காலுடன் ஒப்பிடக்கூடிய வகையில் அமைந்துள்ளது திருவாலங்காட்டாரின் இடக்கால் வீச்சு.

திரு. நீலகண்டன் தொங்கும் கரமாக (டோலஅஸ்தம்) குறிப்பிட்டிருக்கும் இடமுன்கை வேழமுத்திரையில் (கஜஅஸ்தம்) உள்ளது. பொதுவாக ஆடற்கோலங்களில் சிவபெருமானின் முன்கைகளுள் ஒன்று வேழமுத்திரையிலோ, அர்த்தரேசிதத் திலோ அமைவது வழக்கம். இக்கைகள் பரதரின் நாட்டிய சாத்திரத்தில் காட்டப்பட்டிருக்கும் நிருத்தக் கைகளுள் அடங்கும். 'உயரத் தூக்கிய இடது காலுக்கு இணையாக மேலே உயர்ந்து

விளங்குவதாக' நீலகண்டனால் சுட்டப்பட்டுள்ள இத்திருமேனியின் இட இரண்டாம் கை 'அர்த்தரேசிதத்தில் உள்ளது. 'வீசி ஆடுவதாக அமைந்திருக்கும் வலக்கரம்மாக்'த் திரு. நீலகண்டனால் குறிக்கப்படும் இரண்டாம் வலக்கை கடகத்தில் உள்ளது. கடகம் ஒற்றைக்கை முத்திரைகளுள் ஒன்றாகும். தமிழ்நாட்டில் கிடைக்கும் பழஞ் செப்புத்திருமேனிகளுள் விஷ்ணுகிராந்தத்தில் அமைந்த ஒரே திருமேனி இதுதான். ஆனால், இது போன்ற கல் திருமேனிகள் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் கச்சபேசுவரர் திருக்கோயிலிலும் காணப்படுகின்றன." கல்கி இதழ் இந்த என் விளக்கத்தைப் பதிப்பிக்கவில்லை.

அக்டோபர் 20 மிகத் துயரமான நாளாகப் பிறந்தது. சிராப் பள்ளியின் பெருமைக்குரிய நிறுவனங்களுள் ஒன்றான கலைக் காவிரியைக் கருவுயிர்த்து, வளர்த்து, செழிக்கச் செய்தவரும் எங்கள் ஆய்வு மையத்தின்பால் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்தவருமான எங்கள் இனிய நண்பர் அருட்தந்தை ஜார்ஜ் அடிகளார் அமரரான செய்தியை நண்பர் அஷ்ரப் தெரிவித்த போது உள்ளம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தது. ஏறத்தாழ 25 ஆண்டுப் பழக்கம். ஆடற்கலை வரலாற்றில் நான் பெற்றிருந்த பட்டறிவைத் தம் நிறுவனத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அவர் எடுத்த முயற்சிகள் கணக்கில. எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையிலும் அந்நிறுவனத்தில் மிகப் பெரிய இடத்தை எனக்களித்திருந்தார். எதிலும் ஒழுங்கை எதிர்பார்த்த அன்பிற்கினிய கலைஞரவர். அவரது அழகுணர்ச்சியையும் இரசிப்பு மேன்மையையும் அருகிருந்து பார்த்தவன் நான். மிக நெருக்கமாக அவருடன் பழகியிருந்தமையால் அவரது பிரிவு பேரிழப்பாகத் தோன்றியது.

அடுத்த இரண்டு நாட்களும் அவரது நல்லடக்கம் முடியும் வரை கலைக்காவிரி வளாகத்தில்தான் இருந்தேன். தான் போற்றி வளர்த்த அந்த வளாகத்திற்குள்ளேயே அடக்கமாக வேண்டும் என்ற அவரது எண்ணத்தை நிறுவனத்தார் நிறைவேற்றி வைத்தனர். ஜார்ஜ் அடிகளார் போன்ற தொலைநோக்குப் பார்வையுடைய ஆற்றலாளர்கள் மிக அரிதாகவே காணக் கிடைப்பதால் அவரது மறைவு கலைக்காவிரிக்கு நிகழ்ந்த ஈடுசெய்ய முடியாத இழப்பென்றே எண்ணத் தோன்றியது.

வரலாறு 19ஆம் தொகுதியில் உண்டாலம்ம இவ்வுலகம் பகுதியில் அப்பெருந்தகையைப் பற்றி எழுத எண்ணம் கொண்டேன்.

பணி நிமித்தமாக ஜெர்மனியில் பிராங்க்பர்ட் சென்றிருந்த என் மகள் குந்தவி என்னையும் என் வாழ்வரசியையும் ஐரோப்பிய நாடுகளில் ஒரு மாத காலம் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வருமாறு அழைத்தார். பாரிஸ், சுவிட்ஸர்லாந்து, ரோம், பெர்லின், வெனிஸ் எனப் பல நகரங்களை நாங்கள் பார்க்கவேண்டுமென அவர் திட்டமிட்டார் ஏதென்ஸையும் இணைத்துக் கொள்ளுமாறு கூறியதுடன், பயணத்திற்கான ஏற்பாடுகளை மூவரும் ஒருங்கிணைந்து மேற்கொண்டோம். டிசம்பர் இறுதியில் பயணத்தைத் தொடங்கி, பிப்ருவரி தொடக்கத்தில் இந்தியா திரும்புவதாக முடிவாயிற்று.

சென்னை அண்ணாநகர் பொன்னிக் குடியிருப்பில் உறையும் திரு. எம். சுவாமிநாதன் வரலாற்றில் மிகுந்த ஆர்வமுடையவர். வரலாறு மின்னிதழ் வாசகரான அவர் அவ்வப்போது தொலைபேசி வழித் தொடர்புகொள்வார். 'உங்களது முயற்சிகள், கட்டுரைகளின் மூலம் நீங்கள் தெரிவிக்கும் எண்ணங்கள் மிகவும் உயர்ந்தவை. உங்கள் நூல்கள் அனைத்தையும் பெற விரும்புகிறேன். அன்புகூர்ந்து அனுப்பிவையுங்கள்' என்று எழுதியிருந்தார். அதுவரை வெளியாகியிருந்த நூல்களின் படிகளை அவருக்கு அனுப்பி வைத்தோம். கல்பாக்கம் மருத்துவத் தொழில் நுட்ப ஆய்வாளரான திரு. வேணுசீனிவாசன் எங்கள் மையத்தின் வெளியீடான டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் வரலாறு பேசும் வரலாற்றின் வரலாறு நூலைப் படித்துத் தம் கருத்தை எழுதியிருந்தார்.

'தங்களது ஒப்பற்ற படைப்புகளுள் ஒன்றான வரலாற்றின் வரலாறு என்ற நூலைப் படித்தேன். டாக்டர் மா. இராச மாணிக்கனார் மீது ஏற்கனவே பற்றும் பாசமும் கொண்ட எனக்கு அவரது வாழ்க்கை வரலாறு மிகப் பெரிய வாழ்க்கைப் பாடங்களை போதித்தது. நான் தங்களது பல நூல்களைக் கல்பாக்கம் கிளை நூலகம் வாயிலாக இரவல் வாங்கிப் படித்து ரசித்திருக்கிறேன். பல்லவர் காலக் கட்டடக்கலை, நளினி எழுதிய சோழர் காலக் கட்டடக்கலை, உங்கள் இருவரின் தளிச்சேரிக் கல்வெட்டு போன்ற நூல்கள் இதில் அடங்கும்.

நான் மருத்துவத்துறை சார்ந்தவனாக இருந்தபோதிலும் தமிழின் மீது ஏற்பட்ட காத்லால் எண்ணற்ற புத்தகங்களைப் படித்ததோடு, எழுதவும் ஆர்ம்பித்தேன். இதன் பயனாக, கடந்த 25 ஆண்டுகளாக எழுதி வருகிறேன். நீங்களும் மருத்துவராக வாழ்க்கையை ஆரம்பித்து, எழுத்துத்துறையில் வந்தவர் என்பதை அறிந்து மகிழ்ச்சி இரட்டிப்பாகிவிட்டது.

தங்களது வரலாற்றின் வரலாறு நூல் எனக்கு மன நிறைவை ஏற்படுத்தியது.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் எனும் குறளுக்கும்

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல் எனுஞ்சொல் என்ற குறளுக்கும் உங்கள் தந்தையாரும் நீங்களும் இலக்கணமாக இருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

தாங்கள் வெளியிட்டு வரும் வரலாறு இதழ் குறித்து அறிய விரும்புகிறேன். அதன் ஆண்டுச் சந்தா எவ்வளவு என்பதைத் தெரிவிக்கவும். பேராசிரியரின் படைப்புகளுள் பத்துப்பாட்டு ஆராய்ச்சி, தமிழர் திருமணத்தில்தாலி ஆகிய இரண்டு நூல் களும் தற்போது கிடைக்குமா? அவ்விரு நூல்களையும் படிக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்துள்ளது. இதற்கு வரலாற்றின் வரலாறே காரணம். இந்த நூல்கள் தங்களிடம் இருந்தாலும் தெரிவிக்கவும். பணம் அனுப்பி வைக்கிறேன்.

ஒரு சமயத்தின் வளர்ச்சியையும் எழுச்சியையும் கல்வெட்டு களின் பின்னணியில் உருவாக்கித் தந்த ஒரே தமிழறிஞர் என்ற பெருமை டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்கு மட்டுமே உரியது என்ற உங்கள் கூற்று உண்மையானது. வெறும் புகழ்ச்சி அல்ல. தற்காலத்தில் ஒரு நூல் எழுத விரும்புகிறவர்கள் ஏதோ கைக்கு கிடைத்த இரண்டு நூல்களைப் படித்துவிட்டு அதே போல ஒரு நூலை அவசரக்கோலத்தில் அள்ளித் தெளித்து விடுவதை நான் பல இடங்களில் பார்த்து வருகிறேன். அப்படியிருக்க, பேராசிரியர் அவர்கள் தனக்குக் கிடைத்த இலக்கியம், இலக்கணம், கல்வெட்டுச் செய்திகளைப் பயன் படுத்தி இவற்றோடு இன்னும் பலதரப்பட்ட தரவுகளையும்

கலந்து நூல்களைப் பட்டத்திருக்கிறார் இது இன்றைய எழுத் தாளர்களுக்குத் தேவையான மிகச் சிறந்த பாடமாகும். அயராத உழைப்பினால் உருவான காரணத்தினால்தான் அவரது நூல் கள் தலைசிறந்த நூல்களின் வரிசையில் முதல் தரமானதாகப் பாராட்டப்படுகிறது. தங்களது நட்பை விரும்பியே இக்கடிதம் எழுதி இருக்கிறேன். பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.' வேணுசீனிவாசன் எதிர்பார்த்தபடியே மடல் அனுப்பினேன்.

நவம்பர் 19 அன்று வரலாறு பற்றிக் கலந்துரையாடுவதற் காகக் காவல்துறைத் துணைஆணையர் திரு. சின்னசாமி வந்திருந் தார். பேராசிரியர் தொ. பரமசிவம் என் பெயரைச் சுட்டி என் னுடன் கலந்துரையாடுமாறு அனுப்பியதாகக் கூறியவர் தமிழ் நாட்டுக் கோயிற்கலை வரலாற்றில் தமக்கு ஆர்வமும் ஈடுபாடும் இருப்பதாகத் தெரிவித்தார். அது நாள்வரை வெளிவந்திருந்த மையத்தின் ஆய்வுநூல்கள் அனைத்தையும் விலைக்குப் பெற்றுக்கொண்டவர் ஏறத்தாழ அரைமணி நேரம் சோழர் கலை பற்றிப் பல செய்திகளைப் பகிர்ந்துகொண்டார். என் கருத்துக்களையும் அவ்வப்போது கேட்டுத் தெளிவு கொண்டார். காவல்துறை உயர் அலுவலர்களுடன் பல முறை அளவளாவி யிருப்பதால் அக்கலந்துரையாடல் பயனுடையதாக அமைந்தது. 21 அன்று சிராப்பள்ளி மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் கோயிற்கலை ஆய்வுகளில் ஆர்வம் கொண்டிருந்த அவரது கணவர் சார்பாக என்னைச் சந்தித்தார். மறுநாள் அவரது கண வர் நேரில் வந்து அரைமணி நேரம் உரையாடியிருந்து ஆய்வு மைய நூல்கள் அனைத்தும் பெற்றுச் சென்றார்.

டிசம்பர் இறுதியில் வெளிநாடு செல்லவிருந்தமையால் அப்பயணத்திற்குரிய விசா, விமானச் சீட்டுகள் பெறும் பணி நவம்பர் இறுதியில் தொடங்கியது. விசா நேர்முகத்திற்காகச் சென்னை செல்லவேண்டியிருந்தமையால், மாமல்லை ஆய்வை உடனிணைத்துக் கொண்டோம். டிசம்பர் 6 அன்று நான், அகிலா, நளினி மூவரும் மாமல்லபுரத்திருந்த பாறைச் சிற்பங் களை ஆய்வுசெய்தோம். தொல்லியல்துறை அலுவலகத்திற்குப் பின்னால் இருந்த நான்கு பாறைச் சிற்பங்களும் தனித் தன்மை யன. சாளுவன்குப்பத்தில் காணப்படும் யாளி மண்டபம் போன்ற அமைப்பின இவை.

அவற்றுள் ஒன்றில், வலப்புறத்தே குதிரையின் சிற்பமும் முகப்பில் யானை அமர்ந்திருப்பது போன்ற அமைப்பும் யானையின் மேல் உள்ள அம்பாரி போல் சிறு கருவறையும் உருவாக்கப்பட்டிருந்தன. மற்றொரு பாறைச் சிற்பத்தில் யாளி மண்டபத்தைப் போலவே பாறையின் விளிம்பில் ஐந்து யாளித்தலைகள் செதுக்கப்பட்டிருந்தன. உச்சித்தலை அளவில் பெரியதாகவும் நேர்ப் பார்வையதாகவும் அமைய, பிற தலைகள் பக்கவாட்டுப் பார்வையில் இருந்தன. அதிலும் நடுவில் சிறிய அளவிலான கருவறை ஒன்று வெட்டப்பட்டிருந்தது. மற்றொரு பாறைச் சிற்பம் பல மனிதச் சிற்பங்களைக் கொண்டிருந்தது. கடலலைகள் தழுவும் இடத்திலிருந்த மகிடாசுரன் பாறைச் சிற்பம் உன்னதமான காட்சியாகப் பொலிந்தது. இப்பாறைச் சிற்பங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரு கட்டுரை உருவாக்க எண்ணினேன்.

'மாமல்லபுரம் குடைவரைகள்' என்ற தலைப்பில் மல்லைக் குடைவரைகள் அனைத்தையும் ஆய்வுசெய்து நூலாக்கக் கருதியிருந்தமையால் கொற்றவைக் குடைவரையை அணுகினோம். குன்றின் பின்பகுதியில் அக்குடைவரை இருந்தமையால், பொதுவாக அங்கு மக்கள் வரத்து இருப்பதில்லை. அதனாலேயே, அக்குடைவரை விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவாரின் சொர்க்கமாக இருந்தது. நாங்கள் சென்றபோது மூன்று உள்ளூர் இளைஞர்கள் மதுவருந்திக்கொண்டிருந்தனர். நல்ல வேளையாக எங்களுடன் வந்த தொல்லியல்துறை அலுவலர் அவர்களை அப்புறப்படுத்திக் குடைவரையைத் துப்புரவு செய்து தந்தார். உடைந்திருந்த போத்தல்களை அகற்றுவதே பெருஞ்செயலாக இருந்தது.

பாதுகாப்பு நிறைந்த மாமல்லபுரத்திலேயே ஒரு கலைப் படைப்பு இத்தகு நெருக்குதல்களுக்கு ஆளாகுமாயின், ஒதுக்குப்புறமாக அதிகப் பாதுகாப்பில்லாமல் இருக்கும் கலைச் சின்னங்களைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. இந்தியா முழுவதும் இதே நிலைதான். பின்னாட்களில் மகாராட்டிர மாநிலத்துக் குடைவரைகளைப் படமெடுக்க நாங்கள் பட்ட பாடு எழுத்தில் எழுத முடியாதது. ஆள்வரத்து அதிகமில்லாத கலைப்படைப்புகள் உள்ள இடங்கள் தவறான செயல்களுக்கும் குடியிருப்புக்கும் பயன்படுத்தப்படுவதைப் பல மாநிலங்களில்

கண்டு வருந்தியிருக்கிறோம். தொல்லியல்துறை அலுவலர்கள் எவ்வளவோ முயன்றும் ஆள் பற்றாக்குறையினாலும் காவல் துறை உதவி இல்லாமையாலும் இவற்றைத் தவிர்க்க முடியாமல் போகிறது. சில இடங்களில் இவர்களே உடனிருந்து உதவுவ தாலும் இக்கொடுமைகள் நாளும் வளர்ந்த வண்ணம் உள்ளன.

கொற்றவைக் குடைவரை எளிய குடைவரை என்றாலும், கருவறை வாயிலின் இருபுறத்தும் கொற்றவைத் தளி, பெருவரா கர் குடைவரை போலவே காவற்பெண்டுகளைக் கொண்டது. கொற்றவைத் தளி பற்றிய கட்டுரையின் போதே இம்மூன்று இணைக் காவற்பெண்டுகளைப் பற்றியும் ஒப்பீடு செய்து எழுதியமை நினைவுக்கு வந்தது. தளியை முழுமையாக ஆய்வு செய்து அளவுகள் எடுத்த பிறகு, இராமானுஜர் மண்டபம் காணச் சென்றோம். மல்லைக் குடைவரைகளில் இராமானுஜர் மண்டபம் தனித் தன்மையது. பிற குடைவரைகளிலிருந்து அதை வேறுபடுத்தும் முக்கியமான இருப்புகளில் விமானச் செதுக்கல்கள் குறிப்பிடத்தக்கவை. மாலைவரை அங்குத் தரவுகள் சேகரித்துச் சென்னை மீண்டோம்.

30. 11. 2008 கல்கி இதழில் வெளியாகியிருந்த திரு. த. கி. நீல கண்டனின், 'யாதுமாகி நின்றாய் காளி' கட்டுரையில் கூறப் பட்டிருந்த சில கருத்துக்கள் வரலாற்றுத் தரவுகளுக்கும் ஆகம வரையறைகளுக்கும் முரணாக இருந்தமை சுட்டிக் கல்கி ஆசிரி யருக்கு மடல் எழுதினேன். சென்ற மடலையே கல்கி பதிப்பிக்க வில்லை என்ற போதும் பெருவாரியான மக்கள் படிக்கும் தரமான இதழ் ஒன்றின் கட்டுரையில் தவறுகள் இருக்கலாகாது என்பதொன்றே நோக்கமாக இம்மடலை அனுப்பினேன். அம்மடலின் சுருக்கம் காண்க:

"1. பழந்தமிழர் காளியைக் கொற்றவை என்ற பேரில் வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்றும் சங்க இலக்கியங்கள் காளியைப் பாலை நிலத்தின் தெய்வமாகப் பேசுகின்றன என்றும் திரு. நீலகண்டன் குறிப்பிட்டுள்ளார்.

- பழந்தமிழர் வழிபட்ட கொற்றவை வேறு. பின்னாளில் உருவாக்கப்பட்ட காளி வேறு. இரண்டுமே முற்றிலும் வேறு பட்ட பெண் தெய்வங்கள். எந்தச் சங்க இலக்கியமும் காளியைப் பாலை நிலத்தின் தெய்வமாகப் பேசவில்லை.

2. வீராசனத்தில் கம்பீரமாகக் காட்சிதரும் காளியின் செப்புச்சிலை ஒன்று சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கிறது என்று கூறியுள்ளார்.

- வீராசனத்தில், மடிக்கப்பட்டிருக்கும் கால், தொங்கவிடப் பட்டிருக்கும் காலின் மேல் நீட்டப்பட்டு அமையும். அருங் காட்சியகக் காளியின் அமர்வு அவ்வமைப்பில் இல்லை. அவர் சுகாசனத்தில் உள்ளார்.

3. சதுரதாண்டவம் என்னும் தாண்டவக்கோலத்தில் (பாதங்களைச் சேர்த்து வைத்து முழந்தாள்களை அகல விரித்தாடும் கோலம் சதுரதாண்டவக் கோலம்) விளங்கும் இந்த வடிவம் ஓர் அரிய பொக்கிஷம் என்று எழுதியுள்ளார்.

- நூற்றியெட்டுத் தாண்டவங்களை இறைவன் நிகழ்த்திய தாகக் கூறும் ஆகமங்களில் இரண்டுதான் அந்த ஆடற் கோலங்களில் சிலவற்றை விரித்துரைக்கின்றன. சிற்பரத்னா பதினொரு வகைத் தாண்டவங்களைப் பெயரிடாமல் விரித் துரைக்கிறது. ஸ்ரீதத்துவநிதி ஏழு தாண்டவங்களை விரிவாகக் கூறுகிறது. இவ்விரு ஆகமங்களிலுமே 'சதுரதாண்டவம்' என்று ஒரு தாண்டவ நிலை விவரிக்கப்படவில்லை. பரதரின் நாட்டிய சாத்திரத்தில் உள்ள நூற்றியெட்டுக் கரணங்களில் ஒன்றுதான் சதுரம். இதற்கான வரையறையை, '***இடக்கை அஞ்சிதத்தி லும் வலக்கை சதுரத்திலும் அமைய, வலக்கால் குட்டித மாக இருக்கவேண்டும்***' என்று பரதர் தெளிவுறக் கூறியிருக் கிறார். சதுரகரணத்தில் அமைந்த சிவபெருமானின் சோழர் காலத் திருமேனிகள் சிராப்பள்ளிக் குமாரவயலூர், கொடுமுடி மகுடேசுவரர் கோயில்களில் உள்ளன.

திரு. நீலகண்டன், 'சதுரதாண்டவம்' என்பதற்குத் தரும் விளக்கம் எந்த ஆகமத்தில் உள்ளது என்பதறிய விழைகிறேன். பாதங்களைச் சேர்த்து வைத்து முழந்தாள்களை அகல விரித் தாடும் கோலம் சதுரதாண்டவமென்கிறார் அவர். அவர் கூறுமாறு ஒரு தாண்டவ நிலை உள்ளதென்று கொண்டாலும் கோலவிழி அம்மன் ஆடற்கோலத்தில் இரண்டு பாதங்களும் சேர்த்து வைக்கப்படவில்லை. இடப்பாதம் பார்சுவமாக உள் ளது. வலப்பாதம் இடப்பாதத்தின் பின் அக்ரதலசஞ்சாரத்

தில் ஸ்வஸ்திகமாக நிறுத்தப்பட்டுள்ளது. 'பாதங்களைச் சேர்த்து வைக்காத' இந்த நிலையைக் கண்டபிறகும், 'பாதங்களைச் சேர்த்து வைத்த' சதுரதாண்டவ நிலையாக இதை நீலகண்டனால் எப்படிக் கொள்ளமுடிந்தது?

4. ஆடற்கோலப் படிமத்தின் இடது கீழ்க் கரம் டோல அஸ்தத்தில் திகழ, இடது மேல் கரம் பதாக முத்திரையில் உள்ள தென்கிறார் நீலகண்டன்.

- பக்கவாட்டில் தொங்கியமையும் கையே டோலஅஸ்தம் எனப்படும். மார்புக்குக் குறுக்காக வீசப்படும் கை கஜஅஸ்தம். இங்குக் காட்டப்பட்டிருப்பது கஜஅஸ்தமே தவிர, டோல அஸ்தம் அன்று. இடமேற்கை பதாக முத்திரையில் இல்லை. மாறாகத் தீயகல் ஏந்த விரிந்த கை போலக் காட்சிதருகிறது. பதாகத்தில் கட்டைவிரல் மடங்கியிருக்கும். பிறவிரல்கள் ஒன்றியிருக்கும். இங்கு அனைத்து விரல்களுமே விரிந்துள்ளன.

5. திரு. நீலகண்டன் குறிப்பிடும் பிணக்குண்டலம் சாமுண்டியின் செவிகளில் காணப்படுவது. சாமுண்டி இயமனின் மனைவி. தமிழ்நாட்டில் கிடைக்கும் காலத்தால் முற்பட்ட எழுவர் அன்னையர் சிற்பங்களுள் சாமுண்டியும் ஒன்று. சாமுண்டியின் செவிகளை அல்லது செவியை அலங்கரித்த இப்பிணக் குண்டலமே பின்னால் வந்த பிடாரி வடிவங்களிலும் (காளி) கொள்ளப்பட்டது.

படத்தைக் கொண்டு பார்க்கும்போது கோலவிழி அம்மன் கோயிலில் காணப்படும் இவ்வாடல் வடிவத்தின் கைகள் பரதர் சுட்டும் அஞ்சிதத்திலோ, சதுரத்திலோ இல்லை என்றாலும் வலப்பாதம், 'குட்டிதம்' (உத்கட்டிதம்) அமைப்பில் இருப்பதால் இந்த ஆடற்கோலத்தைச் சதுரகரணமாகக் கொள்ள வாய்ப் புண்டு. ஆடையணிகலன்களைப் பார்க்கும்போது இது மிகத் தொன்மையான வடிவமாக இராதென்றே தோன்றுகிறது. இருப்பினும் நேரிடையாகப் பார்க்காமல் அது குறித்துக் கருத்துச் சொல்லுதல் சரியன்று."

நான் எதிர்பார்த்தாற் போலவே கல்கி இந்த மடலையும் பதிப்பிக்கவில்லை. பிழைகள் மலிந்த இது போன்ற கட்டுரை

களைத் தொடர்ந்து வெளியிடத் தயங்காத கல்கி போன்ற இதழ் கள், அத்தவறுகள் சுட்டிக்காட்டப்படும் இடத்து நேர் செய்து கொள்ளத் தயங்குவதன் பின்னணியை இன்றுவரை என்னால் விளங்கிக் கொள்ளக்கூடவில்லை. இத்தகு இதழ்கள்தான் பத்திரிகை தர்மம் பற்றிப் பலபடப் பேசுகின்றன. தமிழ்நாட்டில் வெளிவரும் பெரும்பாலான பருவ இதழ்கள் தாங்கள் வெளி யிடும் கட்டுரைகளிலுள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டப் படும் நிலையில்கூட ஏற்றுக்கொள்வதில்லை என்பது துன்ப மான உண்மையாகும்.

டிசம்பர் 13, 14 மீனாட்சியம்மன் கோயில் ஆய்வுக்காக மதுரை சென்றோம். எங்களுடன் திருவாளர்கள் வேலாயுதமும் வேதாசலமும் இணைந்துகொண்டனர். 13 காலை அழகர் கோயில் சென்று கல்வெட்டுகளைப் பார்த்தோம். அழகர் கோயிலுக்கு எதிரிலிருந்த திருமலை நாயக்கர் ஆடலரங்கை விரிவாக ஆய்வுசெய்தோம். மிகவும் சிதைந்த நிலையில் இருந்த அந்த ஆடலரங்கு தமிழ்நாடு தொல்லியல்துறையின் பாதுகாப் பில் இருப்பதாக அங்கிருந்த அறிவிப்புப் பலகை கூறியது. நாயக்க அரசர்கள், அலுவலர்களின் சிற்பங்கள் கம்பீரமாகவும் மிகுந்த அலங்கரிப்புடனும் விளங்கின. இது போன்ற சிற்பங் களைப் பரங்குன்றத்திலும் மீனாட்சியம்மன் கோயிலிலும் புது மண்டபத்திலும் கண்டிருந்தமையால் அவற்றோடு ஒப்பீடு செய்து தரவுகள் தொகுத்தோம்.

மாலை ஆயிரக்கால் மண்டபத்தை ஆய்வுசெய்தோம். மதுரையில் ஆங்காங்கே கிடைத்த பல சிற்பங்கள், கல்வெட்டு கள் அங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒரு சிற்பம் நாயக்கர் காலத் தண்டனை முறையை விளக்குவதாக இருந்தது. மூன்று நிகழ்வுகளின் கூட்டிணைவாகப் படைக்கப் பட்டிக்கும் அச்சிற்பம் நாயக்கர் காலச் செதுக்கலாகும். இரண்டு பிரிவுகளாக உள்ள அச்சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் இளம்பெண் ஒருவர் இட ஒருக்கணிப்பில் சாய்ந்திருக்கிறார். அவரது கைகள் மார்பகங்களை மறைக்க முயலுமாறு மடிந்துள்ளன. அவருக் குப் பின் நிற்கும் ஆடவர் அப்பெண்ணின் இடுப்பிற்குக் கீழ்ப்பட்ட பகுதியில் தம்முடைய வலக்காலை அழுத்தியவாறு அப்பெண்ணிடம் முறை தவறி நடக்கும் முயற்சியில் உள்ளார்.

அவ்விருவருக்கும் பின் நிற்கும் காவலர் வலப்புறம் முடிச் சிடப்பட்ட தொப்பியைப் போன்ற நாயக்கர் காலத் தலைப் பாகை அணிந்திருக்கிறார். செவிகளில் பனையோலைக் குண்ட லங்கள். கழுத்தில் சரப்பளி. கைகளில் கங்கணங்கள். மார்பில் சன்னவீரம். தம் வலக்கையிலுள்ள கத்தி போன்ற கருவியால் பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முயற்சித்துக் கொண்டி ருக்கும் ஆடவரின் பின்பகுதியில் குத்தியவாறே, இடக்கையால், அந்த ஆடவரின் வலக்கையைப் பற்றி அவரைத் தாக்க முயற்சிக் கும் காவலர், அக்காலத்துக் காவல் அமைப்பைக் கண் முன் நிறுத்துகிறார். இதற்கு மேலுள்ள பகுதியில் தண்டனைக்கூடம் காட்டப்பட்டுள்ளது. சட்டகம் ஒன்றின் பக்கப்பகுதியில் கைகளும் கால்களும் பிணைக்கப்பட்ட நிலையில் முறை தவறி நடந்த ஆடவர் கட்டப்பட்டுள்ளார். சட்டகத்தின் மேற்பலகை யில் கயிறுகளால் வளையமிட்ட நிலையில் அசையாதவாறு அவர் தலை பிணைக்கப்பட்டுள்ளது. ஆடைகளற்ற நிலையில் நிறுத்தப்பட்டிருக்கும் அவருடைய பிறப்புறுப்பை விலங்கு ஒன்று கடித்தவாறுள்ளது.

பெண்களிடம் தவறாக நடந்துகொள்ளும் ஆடவர்களுக்கு நாயக்கர் காலத்தில் அளிக்கப்பட்ட கடுமையான தண்டனையை இச்சிற்பம் பதிவுசெய்துள்ளமை வரலாற்றுக்குப் புதிய வரவு என உடனிருந்தவர்களிடம் விளக்கினேன். ஆயிரக்கால் மண்டபத் தூண்கள் சிலவற்றின் சதுரங்களில் பாலுணர்வுச் சிற்பங்களைக் காணமுடிந்தது. நுழைவாயிலின் இருபுறத்தும் உள்ளும் வெளியுமாக இருந்த பெருஞ்சிற்பங்களும் ஆய்வுக் காளாயின. இது போன்ற பெருஞ்சிற்பங்கள் நாயக்கர் திருப்பணி பெற்ற பல தமிழ்நாட்டுக் கோயில்களில் இடம் பெற்றுள்ளமை கருதினோம்.

மதிய உணவுக்குப் பிறகு மீனாட்சியம்மன், சொக்கர் விமானங்களின் மேற்றளங்களையும் கிரீவம், சிகரம் ஆகியவற்றை யும் பார்த்துக் குறிப்புகள் எடுத்தோம். அப்போதுதான் எழுத் துப் பொறிப்புடன் விளங்கிய அந்த மணி கண்ணில் பட்டது. சித்திவிநாயகர் திருமுன்னுக்கு முன்பாகக் கட்டப்பட்ட ஆராய்ச்சிமணியாக அதைக் குறிக்கும் பொறிப்பு, அதன் எடை 560 சேர் என்கிறது. பொ. கா. 1884ஆம் ஆண்டுச் சித்திரைத்

திங்கள் கார்த்திகைப் பிரதோசமும் சுக்கிர வாரமும் பொருந்திய நாளில் மணிக்கூண்டு எழுப்பட்டதாகக் கூறுவதுடன், மணிக் கான செய்கூலியை அடியவர்கள் பலர் கொடையாகத் திரட்டித் தந்ததாகவும் அப்பொறிப்பு விளம்புகிறது. மணிக்கூண்டு அமைக்கும் பணியைக் கோயிலார் மேற்கொண்டனர். 14 வரி களில் அமைந்துள்ள இப்பொறிப்பை அடுத்துப் பல இறை வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சந்திரனும் சூரியனும் பக்கத்திற்கொருவராக விளங்கும் மேற்பகுதியை அடுத்துக் கீழ்நிலையில் நடுநாயகமாகத் தம் ஊர்தியான எலியின் மேல் இலலிதாசனத்தில் உள்ள விநாயக ரின் தலையைக் கரண்டமகுடம் அலங்கரிக்கிறது. முன் கைகளில் வலப்புறம் தந்தமும் இடப்புறம் மோதகமும் உள்ளன. இடம் புரியாக உள்ள அவரது பின்கைகளில் அங்குசமும் கரும்புத் தோகையும் காட்டப்பட்டுள்ளன. விநாயகரின் வலப்புறம் அவரையடுத்து முத்தலைஈட்டியும் பாம்பும் விளங்க, இடப்புறம் முருகனுக்கு உரிய வேலும் மயிலும் செதுக்கப்பட்டுள்ளன. மதுரைக் கோயில் வளாகத்தில் பல பெரிய மணிகள் இருந்த போதும் இது ஒன்றே எழுத்துப் பொறிப்புடனும் வடிவச் செதுக்கல்களுடனும் வரலாற்றைப் பகிர்ந்தவாறே பேரொலி எழுப்புகிறது.

டிசம்பர் 15 அன்று 'காவிரி வளர்த்த கலைகள்' என்ற பொதுத்தலைப்பின் கீழ்ச் சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பவிருந்த தொடருக்காகச் சிற்பக்கலை, கட்டடக்கலை, ஆடற்கலை, வார்ப்புக்கலை குறித்த ஆய்வுக்கட்டுரைகளைப் பதிவுசெய்ய அங்குச் சென்றிருந்தேன். நிலைய நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. வடலூர் வாசகர் அன்புடன் வரவேற்று என் உரைகளைப் பதிவுசெய்தார். காலநிரலான வரலாறாகக் காவிரிக் கரையோரம் வளர்ந்த அந்நான்கு கலைகள் பற்றிய தரவுகளையும் இயன்றவரை தொகுத்தளித்தேன்.

பதிவுசெய்த திரு. வாசகர் உரைகளின் செறிவு குறித்து மிக மகிழ்ந்து பாராட்டினார். ஒலிபரப்பப்பட்டபோதும் அவ்வுரை கள் சுவைஞர்களின் வரவேற்பைப் பெற்றமை அவர்தம் மடல் களால் தெரியவந்தது. இக்கட்டுரைகளுக்கான தரவுகளைத் தொகுக்கும்போது வானொலி நிலைய நண்பர் திரு. தே. சந்திரன்

நினைவிற்கு வந்தார். அவரும் நானும் இணைந்து பல ஆண்டு களுக்கு முன்னால் 'கோயில்கள் வளர்த்த கலைகள்' என்ற தலைப்பில் ஒரு வானொலித் தொடர் செய்தமை மறக்கமுடி யாத அனுபவமாகும். அப்போது எழுதப்பட்ட கட்டுரைகளுக் கும் இப்போது பதிவுசெய்த உரைகளுக்கும் இடையில் இருந்த கருத்து முன்னேற்றங்களும் தரவுகளின் செழிப்பும் கள ஆய்வு களின் பெருமை உணர்த்தின.

21 அன்று சுமிதாவின் முனைவர்பட்ட ஆய்வேட்டிற்காக மலையடிப்பட்டிக் குடைவரைகளைக் காணச் சென்றோம். சிவ பெருமான் குடைவரை இலிங்கம் தாய்ப்பாறையில் உருவானது தானா என்ற ஐயம் சுமிதாவுக்கு இருந்தது. ஓர் இலிங்கம் தாய்ப்பாறையில் உருவானதுதானா என்பதைக் கண்டறிய ஆவுடையாரையும் இலிங்கபாணத்தையும் ஆராயவேண்டும். ஆவுடையார் அடிப்பகுதியில் பூச்சுக்கள் ஏதும் பெறாமல் கருவறைத் தரையோடு ஒன்றியிருக்குமானால் அது தாய்ப் பாறை இலிங்கம் எனக் கொள்ளலாம். அது போலவே ஆவுடையாரிலிருந்து வெளிப்படுமிடத்தில் இலிங்கபாணத் தின் கீழ்ப்பகுதி மருந்திடப் பெறாமல் ஆவுடையாரோடு ஒன்றி அதன் ஒரு பகுதியாகக் காட்சி தருமானால் அது தாய்ப்பாறை இலிங்கம் என உறுதிசெய்யலாம். சில இடங்களில் தாய்ப்பாறை இலிங்கங்கள்கூட மருந்திடப் பெற்றும் ஆவுடையாரருகே எங்கேனும் பாறை பிளந்திருக்குமானால் பூச்சுக் கொண்டும் இருப்பதுண்டு. அதனால், குடைவரைப் படைப்புகளைத் தாய்ப் பாறை உருவாக்கமாக உறுதி செய்ய மிகுந்த கவனமும் எச்சரிக்கையும் இணைந்த ஆய்வுப் பார்வை இன்றியமையாதது. அன்றைய தேடல் அக்குடைவரையின் இலிங்கத்திருமேனி யைத் தாய்ப்பாறைப் படைப்பு அன்று என்றறியச் செய்தது.

அருகிலிருந்த ஒளிபதி விஷ்ணு கிருகத்திலும் தாய்ப் பாறையில் உருவான சிற்பங்களுடன் இணைந்த நிலையில் செய்தமைத்த சிற்பத்தொகுதியும் இருப்பதை ஒப்பாய்வுக்காகச் சுமிதா காணுமாறு செய்தேன். பள்ளிகொண்ட பெருமாளின் பின்சுவரில் உள்ள சுதை பூசப்பட்ட சிற்பங்களை அன்று முழுமையான அளவில் ஆய்வுசெய்தோம். அவற்றுள் சில வடிவங்களை இன்னார் என அடையாளப்படுத்த முடிந்தது.

சில சிற்பங்களை வானவர்களாகக் கொண்டோம். உரிய வழி காட்டுதல்கள் புராணங்களிலோ, ஆகமங்களிலோ கிடைக்காத நிலையில் சிற்பங்கள் அமைந்திருக்கும் நிலை கொண்டும் அவற் றின் சூழல் கொண்டும் அவற்றை இன்னாராக இருக்கலாம் என்ற ஊக அடிப்படையில் இனங்காணவேண்டியுள்ளது. இத்தகு சூழல்களில் எங்கள் கட்டுரைகளில் இத்தகு அடையா ளப்படுத்தல்கள் ஊக அடிப்படையிலானவை என்பதை வெளிப்படையாகச் சுட்டுவோம். சில ஆய்வாளர்களைப் போல ஊகங்களை உறுதியான அடையாளப்படுத்தல்கள் போலக் காட்டும் முறையை நாங்கள் கைக்கொள்வதில்லை. அது சரியான வரலாற்று அணுகுமுறை அன்று.

மதிய உணவுக்குப் பிறகு குன்றாண்டார்கோயில் சென் றோம். பலமுறை பார்த்த கோயில்தான் என்றாலும், கட்டுரை உருவாக்கிய நிலையில் தரவுகளைச் சரிபார்க்கக் கருதியே அப்பயணம் அமைந்தது. குன்றின் மேலிருந்த முருகன் கோயில், முதன்மைக் குடைவரையின் இருபுறத்தும் இருந்த சிறு குடை வரைகளில் இருத்தப்பட்டிருந்த சிற்பங்கள் ஆகியவற்றை சுமிதா ஆய்வு செய்தார். அவரது துணைவர் குடைவரைகளின் அளவுகளைச் சரிபார்க்க உதவினார். குடைவரையின் பழங் கல்வெட்டுகளை நளினி மீளாய்வு செய்தார். இங்குள்ள 65 கல்வெட்டுகளில் பல்லவர் காலத்தனவாக 4ம் சோழர் காலம் சார்ந்து 8ம் இரண்டாம் பாண்டிய அரசுக்கு உரியனவாக 18ம் விஜயநகர அரசர் காலப் பொறிப்புகளாக 11ம் அமைய, எஞ்சியன அரசர் பெயரற்றன. இங்குள்ள ஆடல் அரங்கில் மட்டும் 18 கல்வெட்டுகள் உள்ளன.

இவ்வளாகத்துள்ள கல்வெட்டுகளுள் தெற்குக் குடை வரையிலுள்ள சோழர் கல்வெட்டுகள் அனைத்துமே மண்ட பக் கட்டுமானத்தில் சிக்கித் தொடர்பிழந்துள்ளன. சுற்றிலுள்ள கல்வெட்டுகளுள் பல சிதைந்துள்ளன. மண்டப வாயிலுக்கு மேலுள்ள சுவர்ப்பகுதியில் கண்டறியப்பட்ட மல்லிகார்ச்சுனர் கல்வெட்டுப் படிக்கமுடியாதபடி பெயர்ப்பலகை ஒன்றன் பின் மறைந்துள்ளது. நடுவணரசின் கல்வெட்டுத் துறையினரால் கூட இக்கல்வெட்டைப் படியெடுக்கக்கூடவில்லை. இங்குக் கிடைத்த 65 கல்வெட்டுகளின் தரவுகளையும் பல்வேறு

தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தியபோது இப்பகுதியின் வரலாற்றையும் கோயிலின் காலநிரலான வளர்ச்சியையும் அறியமுடிந்தது.

இக்கல்வெட்டுகள் வழி 10 நாடுகளின் பெயர்களும் 33 ஊர்களின் பெயர்களும் கிடைத்தன. பாலைவாயில், காட்டுப் பற்று, கடம்பண்டல், நெல்புக்கை, முல்லைவாயில் முதலிய ஊர்ப்பெயர்கள் கவனத்தைக் கவர்ந்தன. இப்பகுதி நிலங்கள் ஒன்பதிற்றடிக் கோலால் அளக்கப்பெற்றதை மூன்றாம் குலோத்துங்கர் கல்வெட்டு வழி அறியமுடிந்தது. கொடையளிக்கப்பட்ட நிலங்கள், 'ஆறும் காலும் துரவும் மரமும்' உட்படத் தரப்பட்டதாகச் சில கல்வெட்டுகள் தெரிவித்தன. பெயரேற்றிருந்த நிலத்துண்டுகளுள் ஒன்று, 'பெருபூ சித்திரைக் கால் எனும் இறுங்கு தூங்கு புல்லு' என்றழைக்கப்பட்டது. இறுங்கு என்ற சொல்லுக்குப் பேரகராதி சோளம், காக்காச் சோளம் என்ற பயிர்களின் பெயர்களைப் பொருளாகத் தருகிறது. குளங்களுள் ஒன்று மாவிலங்கைக் குளம் எனும் பெயர் கொண்டிருந்தமை வியப்பளித்தது. மாவிலங்கை சங்க இலக்கியம் குறிப்பிடும் ஊராகும். திண்டிவனத்துக்கு அருகிலுள்ள இவ்வூர், இந்நாளில் கீழ்மாவிலங்கை, மேல்மாவிலங்கை என இரண்டு பகுதிகளாகப் பிரிந்துள்ளது. அவற்றுள், கீழ்மாவிலங்கை பல்லவர் காலக் குடைவரை ஒன்றைக் கொண்டுள்ளது.

கல்வெட்டுகளில் காலநிரலாகக் குன்றக்குடித் தேவர், குன்றக்குடி நாயனார், குன்றப் பெருமாள் என்றழைக்கப்படும் இறைவன் தற்போது பருவதகிரீசுவரராகியுள்ளார். குன்றக்குடியும் குன்றாண்டார்கோயிலாகிவிட்டது. கோயில் கட்டமைப்புகள் தொடர்பான சில கல்வெட்டுகள் இங்குள்ளன. கோயில் திருமதில் வடபுறத்தே சரிந்தபோது தேவரடியாரில் நல்லாள் பிள்ளைபெற்றார் மகள் ஆதனமழகியார் அம்மதிலைக் கட்டித் தந்தார். பதையாமாலன் அழகியசோழ நாடாள்வான் கோவதரையன் திருமண்டபத்தையும் நிருத்தமண்டபத்தையும் கட்டுவித்தார். வண்ணார் சங்காத அருணியான நாற்பத்தெண்ணாயிரப் பெருவண்ணாரும் அவர் வண்ணாத்தியும் இணைந்து கூத்தாடும் தேவர் சோபானத்துச் சித்திரக் கண்டக்காலைச் செய்தளித்தனர். வாகன மண்டபமாகப் பயன்படும் சுற்றின் கிழக்குப்பகுதித் தூண்களை அளித்தவர்களாகப் பெரிய

பிள்ளை மகள் உடையநாச்சி, பெரும்புனவார்க் கிழவன் சீரன் சின்னதாழிப் பிள்ளை, மன்றாடி அடிகள் சூற்றியான வத்த ராயர்கோன், உடையான் பெரியகோன் ஆகியோரை 3 கல்வெட்டுகள் அறிமுகம் செய்கின்றன.

ஆடல் அரங்கிலுள்ள 18 தூண்களைத் தந்தவர்களாகப் பெருங்களூர் நாடாள்வான் மகன் குன்றன் கொப்பிலி சிங்க தேவன் இரண்டுமலை நாட்டுப் பிள்ளை, பெரும்புலியூரைச் சேர்ந்தவர்களான பிள்ளான் திருந்தான், வியாபாரி அம்பல வனத்தாண்டான், காத்தான்ன இராஜராஜ முத்தரையன், வியா பாரி அம்பலவன் கோவிஞ்சாண்டான், சோழன் பொன்னன், பெரியகோன் மக்கள், பலபடாரர் ஆகியோர், இளங்கத்தரை யன் மகன் பிள்ளாண்டான், துவரங்கோட்டையைச் சேர்ந்த பொன்னதுண்டராயன், கிளிநல்லூரைச் சேர்ந்தவர்களான மூவரைசியார், மாதன் நிலையான், பேரையர் மக்கள் அரச பண்டாரம் சேயான் பொன்னன், சோழன்காரி ஆகியோர், தெற்றியூரைச் சேர்ந்த பாலையூர் நாடாள்வான் மகன்கள் கயிலாண்டான், எழுவன், வெழச்சிக்குடி சாத்தனான உத்தம சோழ நாடாள்வான், தென்மாவூர் தேவாண்டாரான மழவ ராயர், மூவன் குன்றந்தை எனும் 19 பேர் வெளிப்படுகின்றனர்.

குன்றாண்டார்கோயில் கல்வெட்டுகளுள் சில அக்காலத்தே நிகழ்ந்த குற்றங்களையும் அவற்றின் வழி நேர்ந்த உறுதிப்பாடு களையும் பதிவுசெய்திருந்தன. ஒரு கல்வெட்டு வடபனங்காட்டு நாட்டு நாட்டார் அறிவிப்பாக அமைந்திருந்தது. அதன்படி நல் வயலூர் வயலிலோ அல்லது வழியிலோ தவறு செய்பவர்கள் ஒரு மா நிலத்துண்டைக் கோயிலுக்குத் தண்டமாகச் செலுத்த வேண்டும். தவறு செய்தாரைக் கல்வெட்டு அழிபிழை செய்தா ராகக் குறிக்கிறது. இரண்டுமலைநாட்டு அரையர்கள் தங்களுக் குள் பகைநேர்ந்து ஒருவர் மேல் ஒருவர் அம்பு எய்கையில் அவர் தம் காவலில் உள்ள ஊர்களின் வழிநடைக்குடிகள், இடைக் குடிகள் ஆகியோரை அழிப்பதில்லை என அறிவித்திருந்ததாகக் கூறும் கல்வெட்டு, தவறிப்போய் அழிவு நேருமாயின், ஒருவர் அழிந்தால் 100 பணமும் ஊரே அழிவுற்றால் 500 பணமும் தண்டம் செலுத்துவதாக உறுதிசெய்து கொண்டதாகவும் தெரிவிக்கிறது.

ஆச்ரயம் எனப்படும் புகலிடம் பற்றிப் பேசும் கல்வெட்டு கள் இங்குப் பலவாக உள்ளன. தவறு செய்தவர்களும் அம்பு எய்து அழித்தவர்களும் இருந்த பகுதி என்பதால், புகலிடம் தேடியவர்களும் அத்தகு பாதுகாப்புத் தந்தவர்களும் இங்கி ருந்தனர். பாண்டியராயன் அமைத்த புகலிடம் உய்யக்கொண் டான் ஆற்றிற்கு வடக்கிலிருந்தது. இங்கு வந்தவர்கள் உணவும் பொருளும் தந்து பாதுகாக்கப்பட்டார்கள். அரசு ஆவுடை நயினாரான பிள்ளைப் பல்லவராயரும் அரசு வளர்த்தான் வதந்தரையர் மகனான தம்பிக்கு நல்லானும் இரண்டுமலை நாட்டு நாட்டாரிடமும் இறைவனிடமும் புகலிடம் புகுந்தனர். பெருமாள் கோனேரிராசப் பல்லவராயர் உள்ளிட்டவர்கள் அவர்களுக்கு உண்டான அத்தஹானி, பிராணஹானி மற்றும் எப்பேர்ப்பட்ட ஜீவதனப் பகையங்கள் தீர இறைவனிடமும் இரண்டுமலை நாட்டு நாட்டாரிடமும் புகலிடம் பெற்றனர்.

புதிதாகக் கண்டறியப்பட்ட சுந்தரபாண்டியர் காலக் கல்வெட்டு, இறைக்கோயில் உள்ள ஊரும் இறைவனின் தேவ தானங்களும் சுந்தரபாண்டியர் திருவாயில் முதலிகளில் ஒருவரான வடுகன் மதுரைக்கு வாய்த்த பாண்டியதேவரின் ஆசிரயமாக விளங்கியமையைத் தெரிவிக்கிறது. உத்தமசோழன் கற்பனை உடன்கூட்டம், திருவரங்கன் திருப்பதிப் பெருமாள் உடன்கூட்டம், அழகிய திருவானைக்கா உடையார் உடன்கூட் டம், தென்கரை இராஜகம்பீர வளநாடு, வடகரை இராஜராஜ வளநாடு, பாண்டிகுலாசனி வளநாடு, நித்தவிநோத வளநாடு இவற்றின் நான்கு வகை, ஆறுவகைத் தொழில் இரதகாரர் சமைய சங்கதிகள், முதலிகள் ஆகியோர் கூடி அவர்களுக்கு வந்த அத்தஹானி, பிராணஹானி, விதனாற்புதையங்கள் இவற்றை இறைவன் நீக்கியருள வேண்டுமென்று, 'கள்ள வேளைக்காறன்' என்றவாறு இக்கோயிலில் சரண் புகுந்தனர். இறைவன் தரும் புகலிடத்திற்காக இவர்கள் வருடம் ஒன்றுக்குக் குடி ஒன்றுக்கு ஓர் ஆடும் திருமணத்தின்போது ஒரு திருவாழி மோதிரமும் ஆடூர பணம் ஒன்றும் தருவதாக ஒப்பினர். இந்த ஆவணத்தை எழுதியவராய்ப் பதினெண்பூமி ரதகாரச் சமையக் கணக்கன் வெளிப்படுகிறார். இக்கல்வெட்டில் வரும், 'கள்ள வேளைக்காறன்' என்ற தொடர் யாரை அல்லது எதைக் குறிக் கிறது என்பதை அறியக்கூடவில்லை.

ஓர் ஆணை கல்வெட்டாகும் முறைமையைக் குலசேகர பாண்டியரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வழி அறிய முடிந்தது. அரசரிடமிருந்து கோயிலுக்கு வந்த ஆணையைக் கோயில் கணக்கர் படியெடுத்து வாசிக்க, அதை அப்படியே கல்வெட்டாக வெட்டியதாகத் திருவம்பலப் பெருமாளான குலோத்துங்க சோழ ஆசாரி குறித்துள்ளார்.

டிசம்பர் 25, 26, 27 மூன்று நாட்களும் தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் சிலவற்றைப் பார்ப்பதற்காக வரலாறு மின் னிதழ்க் குழுவினருடன் மைய ஆய்வர்களும் இணைந்து புறப்பட்டோம். முதல் நிறுத்தம் திருச்சுழியலில் அமைந்தது. அங்குள்ள கோயிலைப் பார்த்துப் பாறைக்குளம் குடைவரை காணச் சென்றோம். இக்குடைவரை திருச்சுழியலுக்கு அருகில் 2 கி. மீ. தொலைவில் உள்ளது. நான் அதைப் பார்ப்பது அதுவே முதல் முறை. பெயருக்கேற்றாற் போல் பெரும் பாறையொன்றும் அதையொட்டி அருமையான குளமும் அமைந்துள்ளன. சரிந் திறங்கும் பாறையின் மேற்குப் பகுதியில் கருவறை மட்டுமே கொண்ட குடைவரை அகழப்பட்டுள்ளது. குடைவரையின் முன் எழுப்பப்பட்டுள்ள சிறிய மண்டபம் சாளரங்கள் பெற்றிருந் தது. கருவறை குடையப்பட்டுள்ள பாறையில் வாயிலும் அதை அணைத்தவாறு இருபுறத்தும் அரைத்தூண்கள் அமைக்கும் முற்றுப்பெறா முயற்சியும் கண்டோம். கருவறையின் கூரையும் சுவர்களும் வெறுமையாக இருந்தன. தரையில் தாய்ப்பாறையில் வெட்டிய சதுர ஆவுடையாரும் உருளைப் பாணமும் இலிங்கத் திருமேனியாகக் காட்சியளித்தன. வெள்ளியம்பலநாதர் என்பது இறைவனின் பெயர் எனத் தெரிவித்த கோயில் பூசாரி திரு. முனி யாண்டி அளவுகள், தேவையான படங்கள் எடுக்கவும் பேருதவி செய்தார்.

சற்று வறட்சியான சூழல் என்றாலும், ஊரின் ஒதுக்குப் புறமாக அமைந்திருந்த அக்குடைவரை எங்கள் அனைவரை யுமே ஒன்று போலக் கவர்ந்தது. அருப்புக்கோட்டையில் மதிய உணவருந்தி, கழுகுமலையை அடைந்தபோது மணி மாலை 5. 30. கழுகுமலைக் கோயில் நிருவாக அலுவலர் திரு. தமிழானந்தன் எங்கள் அனைவரையும் வரவேற்றுக் குடைவரையையும் அதன் முன் அமைந்திருந்த கட்டுமானப் பெருக்கத்தையும் காண

அழைத்துச் சென்றார். கழுகுமலைக் குடைவரையை நானும் நளினியும் முன்பே ஒருமுறை கண்டிருந்தபோதும் இம்முறை தென்மாவட்டக் குடைவரைகள் நூலுக்காக விரிவான அளவில் ஆய்வு செய்யவேண்டியிருந்தது. அதனால், 2 மணி நேரம் குடைவரைப் பகுதியை மட்டும் பார்த்துத் தரவுகள் சேகரித்தோம்

மலைச்சரிவில் குடையப்பட்டுள்ள இக்குடைவரையின் முகப்பு பின்னாளைய தளஅமைப்பு, படிக்கட்டுகள் ஆகியவற்றால் உருமாறியுள்ளது. பாறைத் தரையிலிருந்து எழும் முகப்பின் இடையில் இரண்டு முழுத்தூண்களும் வடக்கு, தெற்குப் பாறைச் சுவர்களை ஒட்டியநிலையில் இரண்டு அரைத்தூண்களும் வெட்டப்பட்டுள்ளன. இவை அனைத்துமே பெருஞ் செவ்வகம், நீள்கட்டு எனும் புதிய அமைப்பில் உருவாகியுள்ளன. முகப்பையடுத்து முகமண்டபமும் உள்மண்டபமும் கருவறையும் அமைந்துள்ளன. முகப்புத் தூண்களின் செவ்வகப் பகுதிகள் அளவிற்குப் பாறைத் தரையிலிருந்து கட்டப்பட்டுள்ள மேடை, முகப்பின் நான்கு தூண்களையும் தழுவி, முகமண்டபத் தரையையும் உயர்த்தியுள்ளது. தூண்களுக்கு இடைப்பட்டுள்ள வழிகளில் தெற்கிலும் வடக்கிலும் படிக்கட்டுகள் உள்ளன. தூண்களின் கட்டுப்பகுதிக்கு மேலுள்ள போதிகைகள் விரிகோணக் கைகளால் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், கூரை. இக்கூரை வடிவமைக்கப்படாத கபோதமாக நீட்டப்பட்டுள்ளது.

முகப்பை அடுத்துள்ள மண்டபம் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலான நான்கு தூண்களால் முகமண்டபம், உள்மண்டபம் என இரு பிரிவுகளாக்கப்பட்டுள்ளது. இத்தூண்களுக்கு இடையிலுள்ள வழிகளில் வடவழி சுவரமைப்பால் அடைபட்டுள்ளது. தென்வழி வாயிலாகப் படியொன்றுடன் நிலையமைப்புக் கொண்டுள்ளது. இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள நடுவழியே முதன்மை வாயிலாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. உள்மண்டபம் வெறுமையாக உள்ளது. அகலமான உபானத்தின்மீது எழும் மண்டபப் பின்சுவரிலிருந்து சற்றுப் பிதுக்கமாக 1. 98 மீ. பக்கமுடைய சதுரக் கருவறை அகழப்பட்டுள்ளது. கருவறையில் செய்தமைத்த திருமேனிகளாக முருகன், வள்ளி, தெய்வானை காட்சிதருகின்றனர். கருவறையின் சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. குடைவரையை

ஆய்வு செய்யச் சிவாச்சாரியார் புலவர் சு. செல்லக்கண்ணுவும் திரு. நா. அனந்தராமனும் துணையிருந்தனர். இரவு தொடங்கி விட்டதால் பிறபகுதிகளை மறுநாள் காணலாம் எனத் தங்க நெல்வேலி சென்றோம்.

மறுநாள் காலை 9. 00 மணியளவில் கழுகுமலை அடைந்து மலைமேலுள்ள சமணச் சிற்பங்களைக் காணச் சென்றோம். கோயில் அலுவலர்கள் ஜெயராமனும் கங்காராமும் உடன் வந்தனர். பல்வேறு உரையாடல்களுக்கிடையே அனைத்து சமணச் சிற்பங்களையும் கண்டு இரசித்தோம். தமிழ்நாட்டில் சமணம் பெற்றிருந்த செல்வாக்கை நிறுவும் இடங்களில் கழுகு மலைக்குத் தனியிடமுண்டு. அளவில் அதிகமான சிற்பங்கள் இடம்பெற்றுள்ள சமணத்தலங்களில் கழுகுமலையும் ஒன்று. தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதியில் இங்குள்ள கல்வெட்டுகள் பதிவாகியுள்ளன. எங்களின் அடுத்த இடமாக வெட்டுவான் கோயில் அமைந்தது. மின்னிதழ்க் குழுவினருக்குக் கழுகுமலைப் பயணம் அதுவே முதல் முறை என்பதால் வெட்டுவான் கோயில் அவர்களை வயப்படுத்தி மயக்கத்தில் ஆழ்த்தியது. ஒவ்வொரு சிற்பத்தையும் அவர்கள் இரசித்த விதம் வரலாற்றை அவர்கள் எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பதை உணரச் செய்தது. பாண்டியர்தம் சிற்பக்கலை ஆற்றலைப் பதிவு செய்திருக்கும் மிக முக்கியமான இடமாக வெட்டுவான் கோயிலைக் குறிக்கலாம்.

ஒன்பது ஒருகல் தளிகளை உருவாக்கியிருக்கும் பல்லவப் பேராற்றலை ஈடுசெய்யுமளவிற்கு இந்த ஒரு தளி உருவாகியிருக் கும் தகைமை இன்னமும் சரியான தளங்களில் வெளிப்படுத் தப்படவில்லை. ஒருகல் தளிகள் நூலில் நானும் அகிலாவும் வெட்டுவான் கோயிலின் சிறப்பை, அதன் அலங்கரிப்பு உத்தி களைப் பல்லவர் பங்களிப்புடன் ஒப்பிட்டு எழுதியுள்ள மையை நினைத்துப் பார்த்தேன். வெட்டுவான் கோயில் தனி யொரு நூல் பெறுமளவு பாண்டியர் கற்பனை ஆற்றலையும் செய்திறனையும் உள்வாங்கியுள்ளது. மின்னிதழ்க் குழுவினர் சிற்பங்களில் மூழ்கிட, நானும் நளினியும் குடைவரை சென்று, நேற்றுக் காணாதுவிட்ட பகுதிகளை ஆய்வு செய்தோம். சிவாச் சாரியார் உடனிருந்து உதவினார்.

குடைவரையே பழங் கட்டுமானமாக விளங்க, அதன் முன் பிற்கால இணைப்புகள் பல்கிப் பெருகியிருந்தமையைக் காண முடிந்தது. குடைவரை முன்னிருந்த மண்டபத்தின் கீழ்ப்பகுதி யைப் பார்த்தால்தான் தாய்ப்பாறைப் படிகளையோ, முகப்பின் தளத்தையோ அறியமுடியும் என்பதால் நிருவாக அலுவலர் உதவியை நாடினோம். அதற்கான வாயில் ஒன்று இருப்பதாகத் தெரிவித்த அலுவலகத்தார், திடீரென அதனுள் செல்வது பாது காப்பாக இராது, அடுத்த முறை வரும்போது முன்கூட்டியே திறந்து வைத்துப் பார்க்கலாம் என்றனர். மதிய உணவு கழுகு மலைப் பார்வதி உணவுவிடுதியில் அமைந்தது. மாலை முழுவ தும் வெட்டுவான் கோயில் சிற்பங்களைத் துய்த்து இரவு மதுரை திரும்பினோம். 27 மதுரை மீனாட்சியம்மன் கோயில் பார்த் தோம். புலவரும் இராஜேஷும் உடனிருந்து உதவினர். கோபுரங்கள், நாங்கள் கண்டுபிடித்த கல்வெட்டுகள், ஆயிரக்கால் மண்டபம் என அனைத்தும் பார்த்துச் சிராப்பள்ளி திரும்பினோம்.

2008 டிசம்பர் 30 அன்று காலை எங்கள் ஐரோப்பியப் பயணம் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளுக்கு அதுவே என் முதல் பயணம் என்பதால் பார்க்கவிருந்த நாடுகள், நகரங்கள் பற்றிய வரலாற்றுப் பின்னணிகளை நவம்பர், டிசம்பரில் தேர்ந்த நூல்கள் வழிப் படித்துத் தெளிந்திருந்தேன். 1978க்குப் பிறகு ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பிறகு அமையும் நெடுந்தொலை வுப் பயணம். சென்னையிலிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் துபாய் சென்று, அங்கு விமானம் மாறி பிராங்க்பர்ட் அடையு மாறு பயணம் அமைந்திருந்தது. இருக்கைக்கு முன்னிருந்த காட்சிப் பேழையில் விமானம் பயணிக்கும் வழி தொடர்ந்து காட்டப்பட்டமையால் எத்தனை கடல்களைக் கடந்து எத்தனை நாடுகளைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை நன்குணர முடிந்தது. பகல் நேரப் பயணம் என்பதால் தொடர்ந்து காட்சியின்பமும் கிடைத்தது. அரேபியப் பாலைவனங்களை, கட்டுமானங்களைக் கண்டபோது வியப்பேற்பட்டது.

12. 30 அளவில் துபாய் விமான நிலையத்தையடைந்தோம். கடல் போல் விரிந்து கிடந்த அந்த நிலையத்தின் கடைகளைக் காண்பதே வியப்பின் எல்லைக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

தொடர்பு விமானத்திற்குத் தேவையான நேரம் இருந்தமையால் விமான நிலையத்தைச் சுற்றிப்பார்த்தோம். பிற்பகல் 2. 30 அளவில் பிராங்க்பர்ட் விமானம் புறப்பட்டது. சில மணி நேரத்திற்குப் பாலைவனக் காட்சிகள்தான் கண்கள் முன் விரிந்தன. ஏறத்தாழ நான்கு மணிநேரம் பல நாடுகளைக் கடந்து பிராங்க்பர்ட் விமானத்தளத்தில் இறங்கினோம். விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் அந்நிலையம் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. மகள் குந்தவியின் துணையுடன் நிலையம் நீங்கி அவர் இல்லம் அடைந்தோம். வழியெல்லாம் பனிப்பொழிவு காரணமாகத் தெருக்களில் பனி உறைந்திருந்தது. 8. 30 அளவில் இல்லம் அடைந்து இரவு உணவு கொண்டோம்.

31 காலை குந்தவி இல்லத்திலிருந்து புறப்பட்டுத் தொடர் வண்டி வழி பிராங்க்பர்ட் அடைந்தோம். பனிக்காலத்திற்குத் தேவையான உடைகள் வாங்குவதற்காகச் சில கடைகளுக்குச் சென்றோம். எல்லா இடங்களிலும் ஓர் ஒழுங்குமுறை தென்பட்டது. மக்கள் தாங்களாகவே வரையறைகளுக்கு உட்பட்டு இயங்குவதைக் கண்டேன். சாலைகளில் மக்கள் இயங்கினாலும் நடைபாதைகளிலேயே நடப்பதையும் சாலைகளைக் கடப்பதற்கு அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களையே பயன்படுத்துவதையும் சாலை விதிகளை அனைவருமே ஒன்று போல் மதித்து நடப்பதையும் கண்டபோது இந்த ஒழுங்கு முறைகளெல்லாம் நம் நாட்டில் எப்போது வரும் என்ற வேதனைதான் ஏற்பட்டது. பிராங்க்பர்ட் இரயில்நிலையம் மிகப் பெரிதாக, இரண்டடுக்குகள் கொண்டதாகப் பல்வேறு கடைகளுடன் அமைந்திருந்தது. இரயில்நிலையத்தின் முகப்பு மிகுந்த கலையெழிலுடன் திகழ்ந்தது. மதிய உணவுக்குப் பிறகு இல்லம் திரும்பும் வழியில் சிட்டுக்குருவிகளையும் புறாக்களையும் பார்த்தேன். இந்தப் புறாக்கள் அனைத்துப் பொதுஇடங்களிலும் கூட்டம் கூட்டமாக வளையவருவது கண்களுக்கும் உணர்வுகளுக்கும் பேரின்பமாக இருந்தது.

சைக்கிள் பரவலாகப் பலராலும் பயன்படுத்தப்பட்டமை வியப்பளித்தது. ஒவ்வொரு தெருவிலும் சைக்கிள்களை நிறுத்துவதற்கென்றே இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. கார்களின் எண்ணிக்கையைப் போலவே பொதுஊர்திகளின் எண்ணிக்கை

யும் கூடுதலாக இருந்தது. குந்தவியின் இல்லத்திற்கு அருகி லிருந்த அங்காடிகளுக்குச் செல்வதும் இரயில் நிலையத்திற்குச் செல்வதும் பனிப்பொழிவு காரணமாகக் கடினமாக இருந்த போதும் புது அனுபவமாக அமைந்து மகிழ்வு தந்தது. 31 இரவு புத்தாண்டை எதிர்கொள்ளும் வாணவேடிக்கைகள் பார்ப்ப தற்காகக் குந்தவியும் என் வாழ்வரசியும் பிராங்க்பர்ட்டிலுள்ள நதிக்கரைக்குச் சென்றனர். நான் இரவுக் குளிருக்கு அஞ்சிக் கற்பனையில் அந்தக் காட்சிகளைக் கண்டவாறு இல்லத்தில் இருந்தேன்.

2009 ஜனவரி முதல் நாள் ஜெர்மனியின் குளிரில் பவ்லோ வின் பிரிடா நூலை வாசித்தவாறு அந்த இளங்காலையை அனுபவித்தேன். வாழ்நாளில் முதல் முறையாகக் கீரையைப் பாடம் செய்யப்பட்ட சிறுசிறு கட்டிகளாகக் கண்டேன். குந்தவியின் கைவண்ணத்தால் அத்துண்டுகள் விரைவில் கீரை மசியலாயின. உணவுப்பொருட்கள் எல்லாமே உறைய வைக்கப் பட்டு, வேண்டும்போது தேவைக்கேற்ப வடிவம் மாற்றிக் கொள்ளப்படும் அதிசயம் பார்த்தேன். தங்கள் புத்தாண்டு அனுபவங்களை மகளும் வாழ்வரசியும் பகிர்ந்துகொண்டனர். அன்று மதியம் பிராங்க்பர்ட் நதிக்கரைக்குச் சென்று ரைன் நதியில் படகுப் பயணம் கொண்டோம். இக்கரைக்கும் அக்கரைக்குமாய் நதியின் நடுவே பல பாலங்களைப் பார்த் தோம். பறவைக் கூட்டங்கள் மீன்களைக் கொத்திச் செல்லும் அழகை இரசித்தோம். குளிர் இருந்தபோதும் கதிரவனின் பளிச் சென்ற வெளிச்சமும் இருந்தது. படகுப் பயணம் ஜெர்மனியின் அழகைக் காண உதவியது. 55 தளங்கள் கொண்ட கட்டடம் ஒன்றின் மேல் மாடியிலிருந்து நதியின் அழகைப் பார்க்க வாய்ப்பமைந்தது. கதிரவன் மறையும் நேரம் என்பதால் பிராங்க் பர்ட் வண்ணங்களில் குளித்திருந்தது. இயற்கையின் கோலங் களுக்கு வடிவங்களோ வரையறைகளோ இல்லைதானே.

ஜனவரி 2ஆம் நாள் ஓட்டமும் நடையுமாக பிராங்க்பர்ட் இரயில்நிலையம் அடைந்து பாரிஸ் தொடர்வண்டியைப் பிடித்தோம். மணிக்கு 315 கி. மீ. வேகத்தில் பயணித்தபோதும் எந்தவிதமான அசைவுகளும் இன்றிச் சிறிதளவும் உடல் துன்பம் இல்லாது பயணத்தை அனுபவிக்க முடிந்தது. வழிநெடுக

ஜெர்மனியின் புறநகர்கள், பெருநகர்கள் பார்த்துச் சென்றோம். எங்கும் பனிப்பொழிவு. சாலைகளின் ஓரங்களில் பனி அடர்த்தியாகப் படர்ந்திருந்தமை பார்த்தோம். பாரிஸ் இரயில்நிலையத்தில் இறங்கியபோது கடுங்குளிர் வாட்டியது என்றாலும், சிறிது நேரத்தில் பெய்த மழையின் விளைவால் குளிர் அடங்கியது.

உள்ளூர்த் தொடர்வண்டி உதவியுடன் தங்குமிடமடைந்தோம். அங்கிருந்து ஈஃபில் கோபுரம் பார்க்கச் சென்றோம். முதல் பார்வையில் அக்கோபுரம் என்னை ஈர்க்கவில்லை. சீட்டுக் கொடுக்குமிடத்தில் நூற்றுக்கணக்கான பயணிகள் வரிசைகளில் நின்றிருந்தனர். மகளும் துணைவியும் வரிசையில் நிற்க, நான் அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தேன். கட்டமைப்பின் அடித்தளப் பகுதியில் ஜகதி, குமுதம் போன்ற அமைப்புகளைக் கண்டேன். ஏறத்தாழ ஒருமணிநேரம் கீழ்க் கட்டமைப்புகளைப் பார்த்துப் படமெடுத்தேன். மின்தூக்கி வழி இரு இடங்களில் மாறி உச்சிக்குச் செல்வது உண்மையிலேயே உணர்வுகளைத் தூண்டியது.

உச்சியிலிருந்து பாரிஸ் நகரம் முழுவதையும் பார்க்க முடிந்த அந்தச் சில நிமிடங்கள் வாழ்க்கையின் மறக்கமுடியாத பதிவுகள். ஒரு முக்கியமான சுற்றுலா இட்த்தை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்குப் பல சான்றுகளை என் ஐரோப்பியப் பயணத்தில் கண்டேன். பயணிகளுக்கு அவர்கள் தரும் மரியாதையும் செய்துதரும் வசதிகளும் இந்தியாவில் காணமுடியாதவை. மேல் தளத்தில் சுற்றுச் சுவரில் உலகத்தின் முக்கியமான நாடுகள், நகரங்கள் இருக்கும் திசைகளில் அந்த நாடுகள் நகரங்களின் பெயர்களைப் பொறித்திருந்தனர். நாடுகளின் தேசியக்கொடிகளும் இடம்பெற்றிருந்தன. சென்னை எனக் குறிப்பிட்டிருந்த இடத்தில் நின்று படம் எடுத்துக் கொண்டதில் குழந்தைத்தனமான ஒரு மகிழ்வு இருந்தது. இரவில் வண்ண விளக்குகளின் ஒளிவெள்ளத்தில் அக்கோபுரத்தைக் காண்பது தனி சுகம்தான். இரவு உணவைத் தேடி நாங்கள் பட்டபாடு எங்கள் கால்களுக்கு மட்டுமே தெரியும்.

மூன்றாம் நாள் காலை 8 மணிக்கு லுவர் அருங்காட்சியகம் சென்றோம். அரண்மனை ஒன்றே அருங்காட்சியகமாகத் திகழ்ந்தது. அந்தக் காலை நேரத்திலும் நூற்றுக்கணக்கான பல நாட்டுப்

பயணிகள் நுழைவுச் சீட்டு வரிசையில் நிற்பதைக் காண முடிந்தது. மகள் வரிசையில் நிற்க, நான் அரண்மனையின் அந்த முற்றத்தைப் பல கோணங்களில் படமெடுத்தேன். தமிழ்நாட்டில் பழம் பேரரசர்களின் அரண்மனைகள் ஏதும் இல்லை என்றாலும், இருக்கும் மிகச் சில அரண்மனைகளைக்கூட நாம் உரியவாறு காப்பாற்றிக் காட்சிப்படுத்தவில்லை என்ற என் ஏக்கம் இந்த அருங்காட்சியக அரண்மனையைப் பார்த்தபோது மிகக் கூடுதலானது. வரலாற்றையும் பழைமையையும் வெளி நாட்டார் போற்றிக் காக்கும் பாங்கில் பத்து விழுக்காடு அளவிற்குக்கூட இந்திய அரசோ, நிறுவனங்களோ முயற்சி யெடுக்கவில்லை என்ற உண்மையை அந்த அருங்காட்சியகம் தெற்றென விளக்கியது.

ஒரு நாளை மட்டுமே அக்காட்சியகத்தைப் பார்க்க மகள் ஒதுக்கியிருந்தமையால் எதைப் பார்ப்பது எதை விடுவது என்ற பெருங்குழப்பம் ஏற்பட்டது. எகிப்து, கிரேக்கம், ரோம் முதலிய காட்சிக்கூடங்களையாவது ஓரளவிற்கேனும் பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்புடன் எகிப்து அரங்கத்தில் நுழைந்தோம். நுழைந்த பிறகுதான் அங்குள்ள ஒவ்வொரு காட்சிக் கூடத்தைப் பார்க்கவும் சில நாட்கள் தேவைப்படும் என்பதை உணரமுடிந்தது. என் வாழ்நாளில் இது போன்ற பிரம்மாண்டமான அருங்காட்சியகக் கூடத்தை அதுநாள்வரை கண்டிராத காரணத்தால் அதிர்ந்தேன். எகிப்தின் வரலாற்றைப் படித்திருந்தமையால் அந்தக் கூடத்தில் எகிப்தையே கொண்டு வந்து நிறுத்தியிருப்பது போல் உணர்ந்தேன். அகழ்ந்தெடுக்கப்பட்ட பானைகள் மட்டுமே ஆயிரக்கணக்கில் இருந்தன. பல பானைகள் வண்ணம் பூசப்பட்டு வரைவுகளுடன் காட்சியளித்தன.

படித்தபோது நைல்நதி நாகரிகம் பற்றி ஏற்பட்ட கற்பனைகள் இந்தக் காட்சிப்பொருட்களின் முன் தூசுகளாயின. பாடம் செய்யப்பட்ட மம்மி என்றழைக்கப்படும் உடல்கள் மட்டுமே கணக்கற்று இருந்தன. பாடம் செய்யப்பட்ட விலங்குகளின் உடல்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அங்கிருந்த பொருள்கள் ஒவ்வொன்றையும் படமெடுக்க வேண்டும் என்றால் அன்று முழுவதும் அந்தக் கூடத்திலேயே இருக்கவேண்டும் என்பதால், மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு முக்கியமான

வைகளை மட்டுமே படப்பதிவு செய்து, பிறவற்றை உளப்பதிவு செய்தேன். மதியத்திற்குள் மிக முயன்று எகிப்து அரங்கின் பெரும்பாலான பகுதியைப் பார்த்து முடித்தேன். மதிய உணவிற்குப் பிறகு கிரேக்கக்கூடம் பார்த்தோம்.

மோனோலிசா ஓவியம் பார்க்க மகள் விழைந்ததால் கிரேக்கத்தைப் பாதியில் கைவிட்டு ஓவியக்கூடம் சென்றோம். நூற்றுக்கணக்கான பார்வையாளர்களின் நடுவே நாங்களும் நின்றவாறு மோனோலிசாவை இரசித்தோம். ஓர் ஓவியத்தைப் பார்க்க லுவர் அருங்காட்சியகம் செய்தளித்திருக்கும் வசதி வாய்ப்புகளைப் பார்த்தபோது அஜந்தாவிலும் சித்தன்னவாசலி லும் தஞ்சாவூரிலும் பனைமலையிலும் நம் முன்னோர்கள் வரைந்து வைத்திருக்கும் ஓவியங்கள் எத்தனை பொறுப்பற்ற முறையிலும் எவ்வளவு மோசமான நிலையிலும் நிருவகிக்கப் படுகின்றன என்பதை உணரமுடிந்தது. நமக்கு வரலாற்றின் மதிப்போ, பழைமையின் பெருமையோ, கலைகளின் சிறப்போ முக்கியமில்லை. பக்தியைத் தவிர, பக்தியின் பெயரால் மடமையை வளர்ப்பதைத் தவிர நாம் வேறொன்றும் அறி யோம். உள்ளம் குமைந்தது. அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் இந்த நாடு எப்போது விழிப்புறும் என்று உள்ளம் ஏங்கியது.

பிரெஞ்சு ஓவியங்களைப் பார்ப்பதற்குள் அருங்காட்சியகம் முடியும் நேரம் நெருங்கிவிட்டது. அருங்காட்சியக நூலகத்தை யும் விற்பனைக்கூடத்தையும் பார்க்க விரைந்தோம். அந்த நூலகத்தைப் பார்த்து பிரமித்தேன். ஓவியங்களைப் பற்றிய நூல்களுக்கென்றே சில அலமாரிகள். எகிப்து பற்றி நூற்றுக் கணக்கான ஆய்வுநூல்கள். விழி திரும்பிய இடமெல்லாம் அருங்காட்சியகச் சிறப்புப் பேசும் நூல்கள்தான். இந்தியாவின் எந்த ஓர் அருங்காட்சியகத்திலும் அதிலுள்ள பொருட்கள் குறித்து இத்தனை நூல்கள், இவ்வளவு ஆய்வுகள் கண்ட தில்லை. ஆய்வுப் போக்குகளிலும் அது தொடர்பான பதிவுகளி லும் நாம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறோம் என்பதை உணர முடிந்தது. அருங்காட்சியகத்தின் இருப்புகள் தொடர்பான விற்பனையகமும் அதிசயிக்க வைத்தது. நூற்றுக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் போட்டி போட்டுக்கொண்டு நூல் களையும் பொருட்களையும் வாங்கியது பார்த்து அதிசயித்

தேன். பாராட்டும் பழக்கமும் படிக்கும் இயல்பும் அங்குப் பரவலாக இருப்பதை உணரமுடிந்தது.

பிரிய மனமின்றி லுவர் அருங்காட்சியகத்தைப் பிரிந்து போர் நினைவகம் செல்ல மெட்ரோ வந்தோம். போர் நினைவக மிருந்த தெரு முழுவதுமே விளக்குகளால் ஒளிர்ந்தது. சாலை யின் இருபுறமும் மரங்கள் வளர்ந்திருந்தன. ஏறத்தாழ 3 கி. மீ. நடந்து நினைவகத்தையடைந்தோம். அந்நினைவகத்தின் உச்சிக் குச் செல்ல ஓரளவுவரை மின்தூக்கியும் அதற்கு மேல் படிக் கட்டுகளும் இருந்தன. அங்கிருந்து அந்த இரவுப்போதில் பாரிஸைப் பார்க்க மிக இன்பமாக இருந்தது. நெடுநேரம் காட்சிகளில் எங்களை மறந்திருந்து அறையை அடைந்தபோது இரவு மணி 10. பாரிஸ் பயணத்தின் இறுதி நாளான ஞாயிறன்று வெர்சலைஸ் அரண்மனைக்குச் செல்லும் வழியில் புகழ் பெற்ற நோற்றிடாம் தேவாலயத்தைப் பார்த்தோம். அதன் கட்டுமானம் தமிழ்நாட்டுக் கோயில் கட்டுமானங்களின் அடிப்படை களையே பெற்றிருந்தமை கண்டேன். பேரளவிலான தூண்கள் வியக்கவைத்தன.

வெர்சலைஸ் அரண்மனையை அடைந்தபோது காலை 9. 30. நுழைவுச்சீட்டு வாங்குமிடத்தில் பெருங்கூட்டம் இருந்தது. பிரெஞ்சு அரண்மனையைப் பார்க்கக் கிடைத்த அந்த வாய்ப்பு அவர்தம் அரசவாழ்க்கையைப் பற்றிய புரிதலைத் தந்தது. அரண் மனையின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்ல இயன்றதால் அதன் முழுப் பரிமாணத்தையும் புரிந்துகொள்ள முடிந்தது. கூரைகளில் வரையப்பட்டிருந்த ஓவியங்களும் சுவர்களை அலங் கரித்த ஓவியங்களும் மிகச் சிறப்பானவை அரசர், அரசியர் அறைகள் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையெல்லாம் பார்க்கமுடிந்தது. மதிய உணவு அரண்மனைத் தோட்டத்தில் அமைந்தது. மாலை 7 மணிக்கு பிராங்க்பர்ட் தொடர்வண்டி யிருந்தமையால் மதிய உணவுக்குப் பிறகு பாரிஸ் இரயில் நிலையத்தை அடைந்தோம். மூன்று நாட்களில் பிரெஞ்சு தேசத்தின் சில முக்கியமான இடங்களையாவது பார்க்கும் வாய்ப்பமைந்தது குறித்து உரையாடி மகிழ்ந்தோம். இந்த மூன்று நாட்களில் நான் புரிந்துகொண்ட பாரிஸ் வாழ்க்கை பற்றி என் நாட்குறிப்பில் விரிவாக எழுதினேன்.

ஒரு நாள் ஓய்வுக்குப் பிறகு, ஜனவரி 6 பெர்லின் சென்றோம். மகளுக்குப் பணியிருந்தமையால் நானும் துணைவியும் மட்டுமே பயணித்தோம். வழிநெடுக ஜெர்மனியின் ஊரகப் பகுதிகளையும் பனியால் மூடப்பட்டிருந்த நிலப்பகுதிகளையும் பார்த்தவாறே பெர்லின் அடைந்தோம். தங்கும் விடுதியைக் கண்டறிந்து, அறை பெற்று, ஹிட்லர் முகாம் தொடர்பான நினைவகங்களைக் காணச் சென்றோம். ஒரு நடைப்பயணமாக அந்தச் சுற்றுலா அமைந்தது. வழிகாட்டியின் வேகத்திற்கு நடக்க முடியவில்லை என்றாலும், மிகுந்த முயற்சியுடன் பின் பற்றினோம்.

'கான்சன்ட்ரேஷன் கேம்ப்' என்றழைக்கப்பட்ட ஹிட்லரின் இராணுவ முகாமின் எச்சங்களைக் காட்டி விளக்கினார்கள். எப்படியெல்லாம் யூதர்கள் அங்குக் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதை நேருக்கு நேர் பார்த்தபோது உள்ளம் கலங்கியது. புறநானூற்றுப் போர்களும் சோழர் மெய்க்கீர்த்திகளும் கண்முன் நிழலாடின. போர்க் கொடுமைகள் எல்லா மண்ணிலும் ஒன்று போலவே நிகழ்ந்தேறுவது இயற்கையின் சாபம் போலும். அந்தப் பயணத்தை முடித்து இரவு ஓட்டலுக்குத் திரும்பியபோது இரயில் நிலையத்திலிருந்த ஏசியன் கடையின் நூடுல்ஸ்தான் இரவு உணவாக அமைந்தது.

மறுநாள் பிராண்டன்பர்க் வாயிலைப் பார்வையிட்டோம். பாராளுமன்றம், பெர்லின் சுவர் பார்த்து அருங்காட்சியகம் வந்து அது திறந்திருக்கும் நேரம் அறிந்தோம். இரவு தொலைக்காட்சிக் கோபுரத்திலேறி பெர்லினை விளக்குகளின் ஒளியில் அனுபவித்தோம். வியாழன் அன்று உலகக் கடிகாரம் பார்த்து, அருங்காட்சியகம் சென்று, முதல் தளத்திலிருந்த எகிப்து அரங்கைப் பார்வையிட்டோம். லுவர் அருங்காட்சியகத்திற்கு இணையாகக் காட்சிப் பொருட்கள் இருந்தன. 3 மணி நேரம் அனைத்தும் பார்த்துப் படம் எடுத்து, கிரேக்கக்கூடம் சென்றோம். வாழ்க்கையின் மிகப் பெரிய வாய்ப்பாக பெர்லின் அருங்காட்சியகம் பார்த்ததைக் குறிப்பிட வேண்டும். அன்றிரவு பிராங்க்பர்ட் திரும்பவேண்டியிருந்ததால், 4 மணியளவில் அருங்காட்சியகத்திலிருந்து மீண்டோம். பெர்லின் அருங்காட்சியகத்தை விரிவான அளவில் பார்க்கக் குறைந்தது ஒரு

வாரமாவது தேவை. அது போலவே லுவர் அருங்காட்சியகத் தைப் பார்க்கப் பதினைந்து நாட்களாவது வேண்டும்.

ஜனவரி 9 கடைவீதி நாளாகவும் முழு நிலா நாளாகவும் அமைந்தது. மேகங்களற்ற வானில் அந்த நிலவைப் பார்க்க பெரும் மகிழ்வேற்பட்டது. மறுநாள் ரோம் செல்ல வேண்டி யிருந்ததால் பயண ஏற்பாடுகளில் மூழ்கினோம். மறுநாள் காலை பிராங்க்பர்ட் விமானத்தளம் சென்று லுஃப் தான்சா விமானம் மூலம் ஆல்ப்ஸ் மலையையும் இரு பேரேரி களையும் இரசித்தவாறே ரோம் சென்றடைந்தோம். விடுதிக்குச் செல்லும் வழியில் ரோம் நகரச் சாலைகளைப் பார்க்க முடிந்தது. நான் பார்த்த ரோமப் பேரரசு குறித்த ஆங்கிலப் படங்கள் மனத்திரையில் காட்சியளித்தன.

விடுதி ஏற்பாடு முடிந்ததும் செயின்ட் மரியா தேவாலயம் பார்த்து கொலீசியம் சென்றோம். ஒரு வழிகாட்டியின் துணை யுடன் கொலீசியத்தின் வரலாற்றைப் பெற்றோம். ரோமப் பேரரசின் எச்சமாக நின்றிருந்த அந்தக் கட்டுமானம் பார்த்த அளவிலேயே பிரமிக்க வைத்தது. கிடைத்த சிறிது நேரத்தில் அதன் அனைத்துப் பகுதிகளையும் ஓடி ஓடிப் பார்த்தேன் அங்கு நிகழ்த்தப்பட்டிருந்த அனைத்து அகழ்வுகளையும் வெளிப் பட்டிருந்த கட்டடச் சிதைவுகளையும் கண்டோம். அருங் காட்சியகம், நீரூற்று கண்டு, ஸ்பேனிஷ் ஸ்டெப்ஸ் எனுமிடத் தில் அமர்ந்து நிலவை இரசித்து அதன் ஒளியில் மகிழ்ந்தோம்.

ஞாயிறன்று வாடிகன் சென்று தேவாலயத்தை விரிவான அளவில் பார்த்தோம். போப்பாண்டவர் அன்று அங்கு வழி பாடு நிகழ்த்தியதால் கூட்டம் இருந்தது. போப் அரண்மனை யையும் அருங்காட்சியகத்தையும் அருகிருந்த சில அகழ்விடங் களையும் பார்க்கமுடிந்தது. கலிலியோவுடன் தொடர்புடைய தேவாலயத்தையும் மற்றோர் அருங்காட்சியகத்தையும் பார்த் தோம். அதை முடித்துத் திரும்பும்போது இரவு 7. 30 ஆகிவிட்டது.

திங்களன்று தொடர்வண்டி மூலம் பைசா கோபுரம் காணச் சென்றோம். ஒரு கோட்டை போல மதில் சுவரால் சூழப்பட் டிருந்த பைசா கோபுரத்தின் அருகே இரண்டு தேவாலயங்களும்

இரண்டு அருங்காட்சியகங்களும் இருந்தன. கோபுரத்தின் உச்சிக்குச் செல்லும் வாய்ப்பமைந்தது. சென்று திரும்ப 15 நிமிடங்களே தரப்பட்டதால், சுற்றிலும் தென்பட்ட காட்சிகளை இரசிப்பதும் படமெடுப்பதுமாக இருந்தேன். உச்சியில் இருந்து பார்வையைச் சுழற்றியபோது பனிமூடிய சிகரங்களைக் காண முடிந்தது. கீழிறங்கித் தேவாலயங்களின் உள்ளும் புறமும் ஆய்வு செய்து தேவையான படங்கள் எடுத்தோம். அருங்காட்சியகங்களில் ஒன்று பைசா கோபுரத்தின் வரலாற்றைக் கொண்டிருந்தது. மற்றொன்று இத்தாலியின் பண்பாட்டு வரலாற்றைக் காட்சிப்படுத்தியது.

செவ்வாய் காலை வெனிஸ் புறப்பட்டோம். இத்தாலியின் ஊரகக் காட்சிகள் கண்களைக் கவர்ந்தன. 11 மணியளவில் படகுப் பேருந்து வழி விடுதியை அடைந்து மதிய உணவு கொண்டு, செயின்ட் மார்க்கோ சதுக்கம் பார்வையிடச் சென்றோம். அங்கு டோகி அரண்மனையும் சிறு அருங்காட்சியகமும் இருந்தன. அவற்றைக் கண்டு திரும்பினோம். மறுநாள் செடோரி அருங்காட்சியகம் பார்த்தோம். மிகச் சிறிய அளவிலான மற்றோர் அருங்காட்சியகத்தையும் பார்க்கமுடிந்தது. முதல் நாள் டோகி அரண்மனையை ஓரளவே பார்த்திருந்தமையால் மறுநாள் அதை விரிவான அளவில் பார்த்தோம். அன்று மாலை விமானம் மூலம் பிராங்க்பர்ட் அடைந்து அங்கிருந்து குந்தவியின் இல்லம் உள்ள புஷ்லாகிற்குக் காரில் வந்தோம்.

15 ஓய்வெடுத்து 16 அன்று பிரஸ்ஸல்ஸ் சென்று அங்கிருந்து மற்றொரு தொடர்வண்டி வழி பெல்ஜியத்தின் புரூஜ் நகரை அடைந்தோம். விடுதியில் அறை எடுத்த பிறகு அங்காடிச் சதுக்கத்தைப் பார்வையிட்டோம். மணிக்கோபுரம் 366 படிகளுடன் அமைந்திருந்ததால் அதன் உச்சிக்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டுக் கீழ்ப்பகுதியை மட்டும் சுற்றிப் பார்த்தோம். நகரச் சுற்றுலாப் பேருந்து ஒன்றில் ஏறித் தேவாலயங்கள், கலைக் கண்காட்சிகள், சாக்லேட் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பார்த்தோம். மாலை மயங்கும் வரை புரூஜைச் சுற்றிப் பார்த்து விடுதிக்குத் திரும்பினோம். மறுநாள் காலை அங்காடி மையத்திலிருந்த அனைத்து அருங்காட்சியகங்களையும் பார்வையிட்டோம்.

புரூஜ் சாக்லேட் நகரம் என்பதால், சாக்லேட் கடைகளைப் பார்ப்பதே பேரின்பமாக இருந்தது. இத்தாலிய உணவு விடுதி யொன்றில் மதிய உணவு கொண்டு பிரஸ்ஸல்ஸ் வழி இரவு 11 மணியளவில் புஷ்லாக் அடைந்தோம்.

18 ஞாயிறன்று பிராங்க்பர்ட் உயிர்க்காட்சிச் சாலைக்குச் சென்றோம். ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த பலவகையான மீன் கள், பறவைகள், விலங்குகளைப் பார்த்தோம். மிகப் பெரிய காண்டாமிருகம், பலவகையான குரங்குகள் ஆகியவற்றைக் கண்டவாறே நடந்தபோது திடீரெனச் சிறு விலங்குகள் சில இயல்பாக எங்களைக் கடந்து சென்றன. அது புதிய அனுபவ மாக இருந்தது. மாலை புகழ்பெற்ற சில கடைகளைக் கண்டு இல்லம் திரும்பினோம். அன்றைய பனிப்பொழிவும் புதிய அனுபவமாகவே அமைந்தது.

19 ஆல்ப்ஸ் தேசமான சுவிட்ஸர்லாந்தின் லுசர்ன் நகருக் குச் சென்றோம். நகரின் நடுப்பகுதியிலிருந்த ஏரிக்கருகிலேயே விடுதி அமைந்திருந்தமையால் பெரும்பாலான நேரம் ஏரிக் கரையில் அமர்ந்து பனிமலைகளைப் பார்த்து மகிழ்ந்தோம். அருகிலிருந்த கிலேசியர் அருங்காட்சியகம் மிக அருமையான காட்சிகளைத் தந்தது. பல அடுக்குகளாக இருந்த அக்காட்சி யகத்தின் உச்சியிலிருந்து ஆல்ப்ஸைப் பார்ப்பதே தனி மகிழ்வு தந்தது. ஏரியின் இருகரைகளையும் இணைக்கும் பாலங்களில் நடப்பதும் அப்பாலங்களில் அமைக்கப்பட்டிருந்த ஓவியங் களை இரசிப்பதும் உற்சாகமான செயல்களாக இருந்தன.

மறுநாள் மௌண்ட் பிலாட்டஸ் சென்றோம். மூன்று நிலைகளில் அமைந்திருந்த மின்தூக்கிகள் வழியே ஏழாயிரம் அடி உயரத்தில் இருந்த அப்பனிமலையின் உச்சிக்குச் சென்றது மறக்கமுடியாத அனுபவம். எங்கும் பனி உறைந்து கிடந்தது. கூட்டமில்லாத சூழலில் ஒவ்வோர் இடத்தையும் நன்கு அனுபவிக்க முடிந்தது. வெளியே மெல்லிய பனிப்பொழிவு. அதில் நனைந்தபடியே தொலைவில் தெரிந்த காட்சிகளைப் பார்ப்பது மாறுபட்ட உணர்வலைகளைத் தோற்றுவித்தது. அங்கிருந்த உணவகம், சிறு அருங்காட்சியகம், கடைகள் அனைத்தையும் பார்த்தோம். ஒவ்வொரு நிலையிலும் மின்

தூக்கியிலிருந்து இறங்கி, அந்நிலை சார்ந்த பனிமலைப் பகுதி களைப் பார்ப்பது இன்பமாக இருந்தது.

மலையிலிருந்து இரயில்நிலையம் திரும்பும் வழியில் கல்லறைத் தோட்டம் ஒன்றைக் கண்டோம். மிகுந்த கலை நயத்துடன் ஒரு சிற்பத் தோட்டம் போல அது அமைந்திருந்தமை வியப்பூட்டியது. லுசர்ன் பல்கலைக்கழகத்தில் இந்தியக் கலை களில் ஆய்வுசெய்து கொண்டிருந்த மாணவர் ஒருவரைச் சந்தித் தோம். மனச்சிதைவு நோயிலிருந்து மீண்டிருந்த அவருடன் பேசுவது உற்சாகமாக இருந்தது. இந்தியக் கலைகளைப் பற்றி நெடுநேரம் உரையாடினோம். அங்கிருந்த வரலாற்று அருங் காட்சியகத்தைப் பார்வையிட்டோம். கலத்துண்டுகளின் காட்சிப் பகுதி சிறப்பாக இருந்தது. இயற்கைக் காட்சியகப்பகுதி அந்நாட்டுப் பறவைகள், விலங்குகள், பூச்சிகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

புதனன்று லுசர்னில் இருந்து தொடர்வண்டி மூலம் ஏங்கல்பெர்க் சென்று மௌண்ட் டிட்லிஸ் அடைந்தோம். வழி யெல்லாம் இயற்கையின் அழகு கொடிகட்டிப் பறந்தது. பனி மூடிய குன்றுகளும் சிறுசிறு வீடுகளும் கண்கொள்ளாக் காட்சி யாக இருந்தது. மௌண்ட் டிட்லிஸிலும் மூன்று நிலைகளில் காட்சியிடங்கள் இருந்தன. மூன்றாவது நிலையிலிருந்து உச்சிக் குச் செல்லும் வழியெங்கும் பிலாட்டஸைவிட அற்புதமான காட்சிகள் கண்களை நிறைத்தன. ஏறத்தாழ 10, 000 அடி உயரத் தில் பனிமலை உச்சியில் முழங்காலளவு பனியில் புதைய நடப் பது அதுவே முதல் முறை. இயன்ற தொலைவு நடந்து மகிழ்ந் தேன். கடற்கரை மணலில் நடப்பதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடில்லை. பல இடங்களில் நாற்காலி வடிவிலான மின் இயங்கிகள் தொலைவிலுள்ள குன்றுகளுக்கு அழைத்துச் சென்றன. அவற்றில் ஒன்றில் பயணித்த அனுபவம் வாழ்க்கை யில் மறக்க முடியாதது.

பல நாட்டுப் பயணிகளுடன் டிட்லிஸில் உரையாடி அந்தக் குளிரையும் பனிமலையின் எழிலையும் அனுபவித்தமை பெரு மகிழ்வளித்தது. இங்கும் அருங்காட்சியகம், உணவகம் அனைத் தும் இருந்தன. பனிப்பொம்மைகள் அமைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் செல்வது எளிதான செயலாக இல்லை. எனினும்,

முயன்று பனிச்சரிவுகளில் விழுந்துவிடாமல் தட்டுத்தடுமாறிச் சென்று அவற்றைக் கண்டமை மறக்கமுடியாத அனுபவம் பிலாட்டஸும் டிட்லிசும் மனித முயற்சிகள் இயற்கையை வயப்படுத்த அறிவியலை எந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளன என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

வியாழன் அன்று சுவிட்சர்லாந்தின் கலைக்காட்சியகம், போர்புக்கி அருங்காட்சியகம் கண்டோம். போர்புக்கி உலகப் போரின்போது சுவிட்சர்லாந்தின் பங்களிப்புப் பற்றிய காட்சி களைக் கொண்டிருந்தது. மூன்று தளங்களில் இருந்த அரங்கு களைக் கண்டு வரலாற்றுத் தெளிவு பெற்றோம். மேல் தளத்தி லிருந்து பார்க்கப் பனிமலைக் காட்சிகள் பதிவாயின. அந்த அருங்காட்சியகத்திற்கு அருகிலிருந்த காஞ்சி உணவகத்தில் மதிய உணவு அருந்தி, பிராங்க்பர்ட் திரும்பும் வழியில் ஊரகக் காட்சிகள் பலவும் பார்த்தோம்.

புகுமுக வகுப்புப் படித்த நாளிலிருந்து என் உள்ளத்தில் இடம்பெற்றிருந்த கிரேக்கம் காண வெள்ளி மாலை பிராங்க் பர்ட் விமான நிலையம் வந்தோம். இரவு 9. 40க்கு எங்கள் விமானம் ஏதென்ஸ் சர்வதேச விமான நிலையத்தையடைந்தது. சுரங்க இரயில்வழி அக்ரோபோலிஸ் இரயில்நிலையம் அடைந் தோம். அங்கிருந்து விடுதியைத் தேடி வெளியில் வந்தபோது நல்ல மழை. சில நிமிடங்கள் அங்கும் இங்கும் விடுதியைத் தேடி 12 மணியளவில் அறைக்குள் நுழைந்தோம். உறக்கம் கண்களை அழுத்த நாளை காணவிருக்கும் ஏதென்ஸ் கனவுகளில் மூழ்கி னேன். மறுநாள் காலைச் சிற்றுண்டியின்போது விடுதிக் காப்பா ளர் ஒருவர், ஏதென்ஸ் பற்றி நான் கேட்ட கேள்விகளுக்கு விடையிறுக்குமாறு விளக்கச் சுவடி ஒன்றையளித்தார். ஏதென் ஸின் அகழ்வாராய்ச்சிக்கு உட்பட்ட அக்ரோபோலிஸ் காணச் சென்றோம். அகழப்பட்ட அனைத்து இடங்களையும் பார்த் தோம். அக்ரோபோலிஸிலிருந்த பழங்காலக் கல் நாற்காலி களில் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்து வியந் தோம். பின் பேந்தியான் பகுதிக்குச் சென்றோம்.

ஏதென்ஸ் நகரத்தையும் விரிவான அளவில் பார்த்தோம். அச்சுச்சாலை, பழங்கோயில் பார்த்து அருங்காட்சியகத்திற்குள்

நுழைந்தோம். கிரேக்க வரலாறு தொடர்பான அற்புதமான காட்சியகமாக அது விளங்கியது. பொருட்கள் நிறைய இருந்த போதும், லுவர் போன்ற காட்சிப்படுத்தல் இல்லை. பார்வையாளர்களுக்கான வழிகாட்டல்களும் சிறப்பாக இல்லை. கிரேக்க நாகரிகத்தில் பாலுணர்வின் வெளிப்பாடு குறித்து ஆய்வு செய்யுமளவிற்கு உடற்சேர்க்கை காட்டும் ஏராளமான பழங் கலத்துண்டுகளைப் பார்த்தோம். அக்ரோபோலிஸ் இரயில் நிலையத்திலேயே சுரங்கம் தோண்டும்போது வெளிப்பட்ட அகழ்வாய்வுச் சின்னங்களைக் காட்சிப்படுத்தியிருந்தார்கள். அவற்றையும் பார்த்து இரசித்தோம்.

ஜனவரி 25ஆம் அன்று காலை ஏதென்ஸின் தொல்லியல் காட்சியகம் சென்றோம். அதுவும் லுவர், பெர்லின் அளவுக்கு இல்லை. பொருட்கள் இருந்தபோதும் காட்சிப்படுத்தலில் தெளிவில்லை. விளக்க அட்டைகளும் பல இடங்களில் இல்லை. வழிகாட்டுச் சுவடிகள் விரிவான அளவில் தகவல்கள் தராமை அளவற்ற வருத்தமளித்தது. மதியத்திற்குப் பிறகு மலைமீது சென்று நகரத்தைப் பறவைப் பார்வையில் பார்த்து, பாராளுமன்றத்தில் காவலர் மாறும் காட்சி காணச் சென்றோம். மாலை கதிரவன் மறையும் நேரம் ஏதென்ஸ் கடற்கரையில் இருக்க முடிந்தமை பெரும் வாய்ப்பாக அமைந்தது. பெரும் பறவைக் கூட்டமொன்று வானில் பறந்தவாறே பல வடிவங்களை உருவாக்கிய அற்புதக் காட்சியை அன்று காணமுடிந்தது. இருள் சூழத் தொடங்கும்வரை ஏதென்ஸ் கடற்கரையின் அழகை இரசித்திருந்து விடுதி திரும்பினோம்.

திங்கள் காலை ஹேலியன்ஸ் வாயில், தூண்கள் பார்க்கப் புறப்பட்டோம் பாராளுமன்றக் கட்டடத்தைப் பார்த்து முடித்தும் அருகிலிருந்த பழங் கல்லறை ஒன்றை அடைந்தோம். அங்கே அற்புதமான அருங்காட்சியகம் ஒன்றைக் காண முடிந்தது. அந்த அருங்காட்சியகத்தில் அதுநாள்வரை பார்த்திராத கலத்துண்டுகளைக் காணமுடிந்தது. கல்லறையில் அகழாய்வு நிகழ்ந்த இடங்களில் விரிவான விளக்கக் குறிப்புகள் இருந்தன. பழங்கால ஆறு ஓடிய இடம், பிளேட்டோவின் அறிவரங்கம் எனக் குறிப்பிடத்தக்க பல இடங்களைப் பார்த்தோம்.

மதியத்திற்குப் பிறகு அகோரா சென்றோம். அற்புதமான அகழாய்வு மிக அருமையாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. எல்லா இடங்களிலும் தேவையான விளக்கக் குறிப்புகள் இருந்தன. கோயில் ஒன்றின் அழிவு மிகச் சிறக்க வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நான் பார்த்த ஒவ்வோர் இடத்திலும் அகழாய்வுக்குத் தரப்பட்டிருந்த முக்கியத்துவத்தை உணர்ந்தேன். தமிழ் நாட்டில் நடந்த அகழாய்வுகள் எப்படிக் காப்பாற்றப்படுகின்றன என்பதை நான் கண்டவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது உள்ளம் குமைந்தேன். எந்தக் காலத்தில் தமிழ்நாடு இந்நிலைகளை அடையுமோ என்ற கேள்வியுடன் மேலும் சில அகழ் விடங்களைப் பார்த்து விமானத்தளத்திற்குத் திரும்பினோம்.

புதனன்று பிராங்க்பர்ட்டுக்கு அருகில் ஹிடல்பர்க்கிலிருந்த கோட்டையைக் காணச் சென்றோம். அவ்வூர்ப் பல்கலைக்கழக வளாகத்தை ஒரு மாணவ வழிகாட்டியின் உதவியுடன் பார்த்தோம். பல்கலைக்கழக மாணவர் சிறைச்சாலை பார்த்தபோது அதிர்ச்சியேற்பட்டது. அங்குச் சிறையிருந்த மாணவர்கள் அறைகளின் சுவர்களிலும் அங்கிருந்த மரச்சாமான்களிலும் எழுதியும் செதுக்கியும் வைத்திருந்த செய்திகள், ஓவியங்கள் வரலாறு போல் போற்றப்படுகின்றன. கோட்டையைக் காண இரயில் உதவியது. சிறிய அளவிலான கோட்டைதான் என்றாலும், நன்கு புரக்கப்பட்டிருந்தது. கோட்டையின் உள்ளும் புறமும் பார்க்க வாய்த்தது. அரண்மனைச் சிதைவுகளையும் மது தயாரிப்புக் கூடத்தையும் மருந்தக நிலையத்தையும் கண்டோம். கோட்டையின் புறப்பகுதியிலிருந்து ஹிடல்பர்க் முழுவதும் பார்க்கமுடிந்தது. ஹிடல்பர்க்கின் மிகப் பழைமையான பாலத்தைப் பார்வையிட்டு, டோம்ஸ்டட் சென்றோம். அங்குள்ள தேவாலயத்தில்தான் இரஷ்ய இளவரசர் ஒருவர் ஜெர்மன் இளவரசியை மணம் செய்துகொண்டார் என்ற தகவலை அங்குள்ள வழிகாட்டி தந்தார். தேவாலயத்திலிருந்த அருங்காட்சியகத்தைப் பார்த்து மகிழ்ந்த நிலையில் இரவு ஊர்திரும்பினோம்.

கடைசி மூன்று நாட்கள் பிராங்க்பர்ட் பார்ப்பதில் நிறைந்தது. சென்னை திரும்பும் வழியெல்லாம் பார்த்த இடங்களைப் பற்றியும் அங்கு நிலவும் சமுதாய ஒழுங்குகள் பற்றியுமே

சிந்தனைகள் இருந்தன. ஜெர்மனி இந்தியப் பயணிகளை விரும்பவில்லை. எங்கள் கடவுச் சீட்டுகளைப் பரிசோதித்த இடங்களிலெல்லாம் நீங்கள் எப்போது திரும்புகிறீர்கள் என்ற கேள்வியையே காவலர்கள் முன்வைத்தனர். ஜெர்மனியி லிருந்து துபாய்வரை அமைந்த எமிரேட்ஸ் விமானச் சேவை தரமானதாக இருந்தது. இருக்கைகளின் அமைப்பும் அளிக்கப் பட்ட உணவும் தரப்பட்ட உபசரிப்பும் சிறப்பாக இருந்தன. துபாயிலிருந்து சென்னை வரையிலான எமிரேட்ஸ் விமானச் சேவை முன்னதற்கு நேரெதிராக அமைந்தது. முதற் பயணம் பல வெளிநாட்டினருடன் இணைந்த நிலையில் அமைந்தது. இரண்டாம் பயணத்தில் 90 விழுக்காடு பயணிகள் இந்தியர்கள். ஏன் நம்மவரை வெளிநாடுகளும் வெளிநாட்டு விமானங்களும் பிறநாட்டுப் பயணிகளுக்கு இணையாகக் கருதவில்லை என்பதை எண்ணி வருந்தினேன். யாரோ சிலர் செய்யும் முறை கேடுகளுக்கு ஒரு நாடே பொறுப்பேற்கும் இந்த அவலச் சூழலுக்காக மனம் நொந்தேன்.

பிப்ருவரி 6 தினமலர் 'திருச்சி சிட்டி நியூஸ்' பகுதியில் 'திருச்சி வரலாற்று டைரி' என்ற தலைப்பின் கீழ் என் பணி களைப் பற்றிக் கட்டுரையொன்று வெளியிட்டிருந்தார்கள். அதன் தொடர்ச்சி மறுநாளும் பதிவானது. அக்கட்டுரையைப் படித்த பல நண்பர்கள் எங்கள் பணிகளின் பன்முகத் தன்மைகள் பற்றி அப்போதுதான் அறிய நேர்ந்ததாகத் தெரிவித்ததுடன், எங்கள் உழைப்பையும் கண்டுபிடிப்புகளையும் பாராட்டி மகிழ்ந்தனர்.

பிப்ருவரி 6-8 மதுரைக் கோயில்களைப் பார்வையிட் டோம். 6 காலை விருதுநகர் சிவகாசிச் சாலையில் சிவகாசி யிலிருந்து 3 கி. மீ. தொலைவிலுள்ள திருத்தங்கல் சென்றோம். இவ்வூரின் குன்றில் தென்பார்வையாகப் பெருமாளுக்கு ஒரு குடைவரையும் சற்றுத் தள்ளிய நிலையில் பாறைச் செதுக்கலாக மகிடாசுரமர்த்தினியின் சிற்பத்தொகுதியும் உள்ளன. நின்ற நாராயணப் பெருமாள் கோயில் வளாகத்துள் இணைந்த நிலை யில் குடைவரையும் தனியார் பாதுகாப்பில் மகிடாசுரமர்த்தினித் தொகுதியும் உள்ளன.

தென்பார்வையாய் அமைந்துள்ள அரங்கநாதர் திருமுன்னே குடைவரையை உள்ளடக்கியுள்ளது. குடைவரையின் முன் பின்னாளில் எட்டுத் தூண்கள் தாங்கும் மண்டபமொன்று இணைக்கப்பட்டுள்ளது. அதன் வடபுறத்தே முகப்பு, முகமண்டபம், கருவறை எனக் குடைவரை அமைந்துள்ளது. இரண்டு அரைத்தூண்களும் இரண்டு முழுத் தூண்களும் கொண்ட முகப்பு விரிகோணப் போதிகைகளும் கூரையுறுப்புகளும் கொண்டுள்ளது. முகப்பை அடுத்துள்ள முகமண்டபம் வெறுமையாக அமைய, அதன் பின்சுவரில் மண்டபத்திற்குள் சற்றே பிதுக்கமாக இருக்குமாறு கருவறை குடையப்பட்டுள்ளது.

கருவறையின் முன் சுவரை அதன் கீழ்ப்புறத்தே காட்டப்பட்டுள்ள உபானத்திலிருந்து எழும் நான்கு உறுப்பு வேறுபாடற்ற அரைத்தூண்கள் அணைக்க, மேலே கூரையுறுப்புகள். நடு அரைத்தூண்களுக்கு இடைப்பட்டுள்ள வாயிலின் முன் படிக்கட்டுகளோ, சுவரின் கீழ்ப்பகுதியில் தாங்குதள அமைப்போ இல்லை. ஏறத்தாழச் சதுரமாக அகழப்பட்டுள்ள கருவறையின் பின்சுவர் தழுவியுள்ள பாம்பணையில் தெற்கு நோக்கி ஒருக்கணித்தவராக மேற்கில் தலைவைத்துக் கிழக்கில் திருவடிகள் நீட்டிப் படுத்துள்ளார் அரங்கநாதர். கருவறைக் கூரையை நாற்புறமும் உத்திரம், வாஜனம் தழுவியுள்ளன.

பாம்பணையின் அருகே மேற்கிலும் கிழக்கிலும் முனிவர் வடிவங்களும் அவர்களுக்கிடையில் திருமகள், நிலமகள், பெருமாள் செப்புத்திருமேனிகளும் உள்ளன. இரண்டு தலையணைகளில் தலை சாய்த்து, வலக்கையைக் கீழ்த் தலையணையில் இருத்தி ஒருக்கணித்துள்ள பெருமாளின் இடக்கையைக் காணக்கூடவில்லை. பெருமாளின் தலைக்கு மேல் சுதையாலான ஆதிசேடனின் ஐந்து தலைகள் குடை போல் உள்ளன. தெற்கு நோக்கித் திருப்பப்பட்டுள்ள பாதங்களின் பின்னிருக்குமாறு காட்டப்பட்டுள்ள திருமகளும் நிலமகளும் பின்னாளைய சுதையிணைப்புகள். கருவறைச் சுவர்களின் முப்புறத்தும் ஓவியங்கள் காட்சியளித்தன. நாங்கள் அதுநாள் வரை பார்த்திருந்த பாம்பணையான் குடைவரைகளில் திருத்தங்கல் குடைவரையே மிக எளிமையானது எனலாம்.

நின்ற நாராயணப் பெருமாள் கோயில் வளாகத்திற்கு மேற்கே சற்றுத் தொலைவில் தென்பார்வையாக அமைந்துள்ள மகிடாசுரமர்த்தினிச் சிற்பம் தனித்தன்மையது. பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, சமபாத நாயகியாகக் காட்சிதரும் அம்மையின் இட முன் கை கடியவலம்பிதமாக அமைய, வல முன் கை உடைந்துள்ளது. இடைக்கட்டுடனான பட்டாடை யும் அகலக் குறைவான கச்சும் கொண்டுள்ள தேவியின் வலப் புறத்தே சிம்மமும் இடப்புறத்தே மானும் காட்டப்பட்டுள்ளன. திருவடிகளின் கீழே பாறை சிதைந்துள்ளமையால் மகிடத் தலையைக் காணக்கூடவில்லை என்றாலும், கொம்புகள் இரு புறத்தும் வளைந்து திரும்புவதைக் காணமுடிகிறது.

இறைவியின் இருபுறத்தும் வானவர்கள் போற்ற, கீழே பக்கத்திற்கிருவராக அடியவர்கள். இறைவியின் கால்களை ஒட்டி அமர்ந்துள்ளவர்களுள் ஒருவர் தலைப்பலித் தர, மற்றொருவர் மலர் மொட்டு ஏந்தியுள்ளார். அவர்களை அடுத் துள்ளவர்கள் பெருந்தனக்காரர்களாகவோ, சிற்றரசர்களாகவோ இருக்கலாம். இது போல் நான்கு அடியவர்களுடன் அமைந்த பழங் கொற்றவைச் சிற்பங்கள் மிக அரிதாகவே காணப்படுவ தால் தங்கல் சிற்பம் சிறப்புப் பெறுகிறது. பூசை செய்யும் அம்மை, புலவர் துணையுடன் அந்தச் சிற்பத்தைத் தூய்மை செய்து வேண்டிய படங்கள் எடுத்து மதுரை திரும்பும்போது மாலையாகிவிட்டது.

7 முழுவதும் மீனாட்சி சொக்கர் கோயில் விளக்குமாலை களைக் கோயிலார் துணையுடன் தூய்மை செய்து பொறிப்பு களைப் படியெடுத்ததோடு மாலைகளில் இணைக்கப்பட் டிருந்த வார்ப்புருவங்களையும் முழுமையான அளவில் ஆய்வு செய்தோம். மிக்க அழகுடனும் செறிவான உடலமைப்புடனும் விளங்கிய விளக்குமாலை வார்ப்புருவங்கள் இக்கோயிலின் அருஞ் சிறப்பெனலாம். பல கோயில்களில் இத்தகு விளக்கு மாலைகளைச் சிறியனவாகவும் பெரியனவாகவும் பார்த்திருந்த போதும் நாங்கள் அறிந்தவரையில் இத்தனை வார்ப்புருவங்கள் இணைந்த நிலையில் அமைக்கப்பட்ட எழிலார்ந்த விளக்கு மாலைகளை யாங்கனும் கண்டதில்லை.

8 அன்று மதுரையில் தெப்பத் திருவிழா அமைந்தமையால் கோயில் வெறிச்சோடியிருந்தது. அச்சூழல் ஆய்வுக்கு மிக உகந்ததாக அமைந்தது. புலவர் துணையுடன் அக்னி, அகோர வீரபத்திரர் சிற்பங்களை ஆய்வுசெய்தோம். அக்னி வீரபத்திரரின் கைகளில் ஒன்று சிதைந்தமையால் அக்கைக்கு மாற்றாகப் பித்தளைக் கை பொருத்தப்பட்டிருந்ததை ஆய்வின்போது அறியமுடிந்தது. புலவருக்கே அச்செய்தி வியப்புத் தருவதாக அமைந்தது.

இறைவி திருமுன் வளாகத்தின் முன்னுள்ள சுற்றில், நுழை வாயிலுக்குச் சற்று முன்பாக உள்ள தரையில் சிற்பத்தொகுதி ஒன்றைக் கண்டோம். நாயக்க மன்னர் தம் தேவியருடன் இறைவியை வணங்கிய நிலையில் அத்தொகுதியில் காட்சிதருகிறார். நடுவில் மன்னரும் இருபுறத்தும் பக்கத்திற்கொருவராய்த் தேவியரும் உள்ளனர். வலப்புறத்தே இளையவர் ஒருவர் உடனிருக்கிறார். அவரது கைகள் மன்னர், தேவியர் போல் வணக்க முத்திரையில் இல்லாமல் தாளம் கொண்டுள்ளமையால் அவரை இசையும் பாடலுமாய் உடன் சென்ற ஓதுவாராகக் கொள்ள முடியும். இக்கோயில் வளாகத்துள்ள முக்குறுணிப் பிள்ளையார் திருமுன் திருவாசியிலும் அழகர் கோயிலிலும் புதுமண்டபத்திலும் காணப்படும் திருமலை நாயக்கர் வடிவங்களோடு ஒப்பிட்டு நோக்கியதில் தரையில் செதுக்கப்பட்டிருந்த நாயக்க மன்னரைத் திருமலையாகவே அடையாளப்படுத்த முடிந்தது.

தரையில் கிடந்தால் வருவார், போவார் மிதித்துச் செல்வர் என்பதறிந்தும் இறைக்கோயில் வருவாரின் திருவடிமுத்திரையினும் பெருமைக்குரியது வேறொன்றில்லை எனக் கருதியோ, என்னவோ திருமலை தம் தேவியருடன் அங்கயற்கண்ணியின் திருவாயில் எதிரில் மீனாட்சியின் அருள்வேண்டி வருவோரை எல்லாம் வரவேற்பவர் போல வணங்கி நிற்கிறார் பல மலைக் கோயில் படிகளில், இறைத்திருமுன்களில் இத்தகு வணக்க நிலையில் அடியவர் சிற்பங்களைக் கிடந்த நிலையில் காண முடிந்தாலும், இங்கு மன்னரே தேவியருடன் நின்று வணங்கி வரவேற்கும் அரிய காட்சி உள்ளத்தை நெகிழ்த்தியது. பல நூறு முறை தாம் அச்சுற்றில் நடைபயின்றிருந்தபோதும் தம் கண்களில் அச்சிற்பத்தொகுதி விழவில்லையே என்று வருந்திய

புலவர் அன்று மாலை இணை ஆணையரிடம் இப்புதிய கண்டு பிடிப்புப் பற்றி மகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார்.

மாங்காடு அருகிலுள்ள கோவூரைச் சேர்ந்த ஆசிரியர் திரு. ச பன்னீர்செல்வம் தம் ஊர் சிவன்கோயிலில் கல்வெட்டு ஒன்றைத் தாம் காண நேர்ந்ததாகவும் அதைப் படியெடுத்து மடலுடன் இணைத்திருப்பதாகவும் அதைப் படித்துத் தகவல் தெரிவிக்குமாறும் கேட்டு மடல் அனுப்பியிருந்தார். தம் ஊரில் இரண்டு நடுகற்கள் இருப்பதாகவும் அவற்றிலும் எழுத்துக்கள், உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தவர் அவற்றை மாங்காடு வரும்போது காணலாம் என்றும் எழுதி யிருந்தார். அகிலாவிற்குத் தகவல் தந்து அவற்றைப் பார்க்கு மாறு வேண்டியதுடன், பன்னீர்செல்வத்துக்கும் செய்தியைத் தெரிவித்தேன் அவர் அனுப்பியிருந்த கல்வெட்டுப் படியில் சூரியன் சந்திரன் இலிங்கத்திருமேனி இருந்ததுடன், 21 கட்டங் களில் 21 எழுத்துக்கள் வரையப்பட்டிருந்தன. கிரந்த, தெலுங்கு எழுத்துக்கள் போலத் தோற்றமளித்த அவற்றை நேரில் பார்த் தால்தான் படிக்க இயலும் என்பதால் அந்தப் படத்தையும் அகிலாவிற்கு அனுப்பிவைத்தேன்.

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தைச் சேர்ந்த திரு. ஜி. பெர்னாண்டஸ் சென்னை இலஞ்ச ஒழிப்புத் துறையில் காவலராகப் பணியாற்றுபவர். அழகப்பா பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வியில் முதுநிறைஞர் பட்டத்திற்காகப் பயின்று கொண்டிருந்த அவர், 'பல்லவர் காலக் கோயில்களில் துவாரபாலகர்' என்ற தலைப்பில் தாம் ஆய்வுக்கட்டுரை ஒன்று எழுதி வருவதாகவும் அக்கட்டுரைக்கு வரலாறு 16ஆம் தொகுதி யில் நாங்கள் பதிப்பித்திருந்த பல்லவர் காலக் கட்டடக்கலை யும் சிற்பமும் என்ற கட்டுரை மிகுந்த தகவல்களைத் தந்ததாக வும் குறிப்பிட்டு அதற்கு நன்றி தெரிவித்திருந்தார். தம் தலைப்புச் சார்ந்து கூடுதல் தரவுகள் இருப்பின் அனுப்பி உதவுமாறும் கேட்டிருந்தார்.

15 ஞாயிறன்று இந்திய மருத்துவ மன்றச் சிராப்பள்ளிக் கிளையில் பொங்கல் விழா அமைந்தது. இந்த ஆண்டு மதுரைத் தமிழறிஞர் தமிழண்ணல், மருத்துவர் சு. பழனியாண்டியின் சிறந்த தமிழறிஞர் விருதைப் பெற்று உரையாற்றினார். விழா

முடிவில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பேராசிரியர் அரசு வெளியிட்டிருந்த நூற்றாண்டு மாணிக்கம் என்ற நூலைக் கேட்டுப் பெற்றார்.

19 காலை தூய வளனார் கல்லூரி வரலாற்றுத் துறையில் 'பல்லவர் கட்டடக்கலை' என்ற தலைப்பில் நளினியின் காட்சியுரை நிகழ்ந்தது. களஆய்வுகளின் பயனாகக் கிடைத்த தரவுகளை நன்கு தொகுத்து உரிய சான்றுகளுடன் மாணவர்களுக்குப் பயன்படுமாறு அவர் நிகழ்த்திய உரை அனைவராலும் வரவேற்கப்பட்டது. தினமணி நாளிதழ் அவ்வுரையின் முதன்மைப் பகுதிகளைச் சிறக்க வெளியிட்டது.

செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனமும் நெய்வேலித் தமிழ்ச் சங்கமும் இணைந்து ஆய்வு மாணவர்களுக்காக நிகழ்த்திய, 'ஆய்வு நோக்கில் சங்க இலக்கியம்' குறித்த பயிலரங்கில் உரையாற்றுவதற்காக 20 காலை நானும் நளினியும் நெய்வேலி சென்றோம். 'சங்க இலக்கியத்தின் காலம்' என்ற தலைப்பில் என் உரை அமைய, 'சங்க இலக்கியங்களில் பெண் தெய்வ வழிபாடு' என்ற தலைப்பில் நளினி உரையாற்றினார். திரு. மருதூர் அரங்கராசன் அவையினருக்கு எங்களை அறிமுகப் படுத்தியதோடு, மையத்தின் ஆய்வுப் பணிகளையும் முன்னிருத்திப் பேசினார். உரைகளுக்குப் பின் நிகழ்ந்த ஆர்வம் நிறைந்த வினா-விடை நிகழ்ச்சி மாணவர்களின் எழுச்சியைக் காட்டியது. திரு. அரணமுறுவல் இக்கூட்டத்தில்தான் நண்பரானார். அவரது தமிழ்ப்பற்றும் வரலாறு, இலக்கியம் சார்ந்த நுண்ணறிவும் என்னை ஈர்த்தன.

24 அன்று ஒருகல் தளிகள் ஒன்பது நூலின் அச்சுப் பணி முடிந்தமையால் அட்டைப்பட அமைப்பைத் தீர்மானித்தோம். முன் அட்டையில் அருச்சுனர் ரதத்தின் கீழ்த்தளக் கிழக்குச் சுவரிலுள்ள தோழியர் சிற்பத்தைப் பொலியச் செய்தோம். பின் அட்டையில் மாறுபட்ட கட்டமைப்புகள் கொண்ட கணேச ரதமும் நகுலசகாதேவ ரதமும் இடம்பெற்றன. 1980இல் என் வாழ்க்கையின் மிக நெருக்கடியானதொரு கட்டத்தில் உடனிருந்து உற்றுழி உதவிய உறவுகளான மருத்துவர்கள் வி. ஜெயபால், வி. கனகராஜ், சி. கேசவராஜ் ஆகிய மூவருக்கும் ஒருகல் தளிகள் ஒன்பது நூலைப் படையலாக்கினேன். மாமல்லபுரத்

தைப் பற்றிய என், எங்கள் அனுபவங்களை, பயணங்களை, பார்வைகளை முன்னுரையாக அமைத்தேன். அம்முடிவுரை யின் இறுதி இரண்டு பத்திகளை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

'இந்நூலில் மாமல்லபுரத்தில் காணப்படும் ஒருகல் தளி கள் ஒன்பதையும் விரிவான அளவில் ஆராய்ந்து தரவுகளைப் பதிவு செய்துள்ளோம். இற்றை இயலில் ஒன்பது தளிகளையும் ஒப்பீடு செய்து கட்டுமானம், சிற்பம் எனும் இரண்டு சார்ந்தும் கிடைத்துள்ள ஒற்றுமை, வேற்றுமைக் கூறுகளையும் தனித் தன்மைகளையும் சிறப்பு அமைவுகளையும் பொதுக் கூறுகளை யும் உங்கள் பார்வைக்கு வைத்துள்ளோம். பாண்டியரின் ஒரே ஒரு கல் தளியான கழுகுமலை வெட்டுவான் கோயிலை இவ்வொன் பது தளிகளின் கட்டமைப்பு, சிற்ப அமைவு ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்துள்ளோம்.

கல்வெட்டுகளின் அடிப்படையிலும் பிற சான்றுகளைக் கொண்டும் இக்கட்டுமானங்கள் உருவாகக் காரணமாக இருந்த கலை மேதையாக இராஜசிம்மப் பல்லவரை அடையாளப் படுத்தியுள்ளோம். பல்லவர் காலத் தமிழர் பண்பாட்டு வரலாற் றுக்கு எங்களின் எளிய கொடையாக இதைக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.' இந்நூலில் 36 பக்கங்கள் படங்கள் பெற்றன. அப்படங்களுள் சில வரலாறு மின்னிதழ்க் குழுவினருள் ஒருவரான திரு. இராமின் கை, கண் வண்ணமாகும். அவற்றுள் நாங்கள் மீண்டும், மீண்டும் இரசிக்குமாறு அமைந்தது பக்கம் 267இல் பதிவான வீணாதரரின் திருமுகக் காட்சிதான். அந்தச் சிற்பம் அழகா, அல்லது இராமின் படக்காட்சி நேர்த்தியானதா என்பதை அந்த வீணாதரர்தான் கூறமுடியும். பல ஆண்டு களுக்கு முன்னால் செய்யக் கருதிய ஒரு பணி நிறைவுற்றதில் உள்ளம் அமைதியானது. இந்தப் பணி முடிக்க அகிலாவும் நளினியும் உடனிருந்து உழைத்த உழைப்பை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தேன்.

மார்ச்சு 6 சுமிதாவின் ஆய்வுக்காகவும் எங்களின் புதுக் கோட்டை மாவட்டக் குடைவரைகள் நூலுக்காகவும் சிற்றண் ணல்வாயில் குடைவரைக்குப் பயணமானோம். சிராப்பள்ளி யிலிருந்து விராலிமலைவரை பயணித்து அங்கிருந்து இடப்

புறம் பிரியும் புதுக்கோட்டைச் சாலையில் 27 கி. மீ. சென்றால் சிற்றண்ணல்வாயிலை அடையலாம். வடக்குத் தெற்காக நீண்டிருக்கும் குன்றுத் தொடரின் வடகோடியிலுள்ள சரிவைத் தெரிந்தெடுத்து அதன் கீழ்ப்பகுதியில் மேற்குப் பார்வையாகக் குடைவரை அகழப்பட்டுள்ளது. பெருங்கற்காலப் பண்பாட்டு எச்சங்களும் சமணர் படுக்கைகளும் அது சார்ந்த கல்வெட்டுகளும் நிறைந்திருக்கும் சிற்றண்ணல்வாயில் தொல்லியல் ஆய்வுக்கு உகந்த இடம். சமணப் படுக்கைகள் உள்ள ஏழடிப் பட்டத்தை விடுத்துக் குடைவரைக்குச் சென்றோம்.

குடைவரையின் முன் பின்னாளைய மண்டபம் உள்ளது. குடைவரை முகப்பின் முன் தென்புறச் சுவரிலுள்ள முற்பாண்டியரின் சிதைந்த கல்வெட்டை நளினி படித்து வெளியிடப்பட்டிருக்கும் பாடத்துடன் ஒப்புநோக்கினார். முன் மண்டபத் தரையிலிருந்து 67 செ. மீ. உயரத்தில் உள்ள குடைவரையை அடையப் பாறையிலேயே பிடிச்சுவரற்றனவாய் மூன்று படிகள் வெட்டப்பட்டுள்ளன. இரண்டு முழுத் தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் கொண்டுள்ள முகப்பு விரிகோணப் போதிகைகளுடன் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. கூரை, முகப்பிற்கு முன்னுள்ள தரையளவிற்கு நீண்டு சற்றே கீழிறங்கியுள்ளது. முகப்பை அடுத்துள்ள மண்டபம் அதன் தெற்கு, வடக்குச் சுவர்களில் தாங்குதளத்துடனான கோட்டங்களும் பின்சுவரில் சற்றே பிதுக்கமான கருவறையும் பெற்றிருந்தது மண்டபத்தின் கூரை முழுவதும் வரையப்பட்டிருந்த ஓவியங்களில் நடுப்பகுதி காட்சி மட்டுமே ஓரளவிற்கு எஞ்சியுள்ளது.

மண்டபத் தரையில் படுத்தவாறு கூரை ஓவியக் காட்சியைத் தரவுப்படுத்துவதில் முனைந்தேன். அக்காட்சியைக் காணக் காண இயற்கையோடு இயைந்த சங்கத் தமிழர் வாழ்க்கை முற்பாண்டியர் காலத்திலும் தொடர்ந்தமையை உணரமுடிந்தது. கூரையின் நடுப்பகுதியில் வரையப்பட்டிருந்த குளத்தில் மலர்தலின் பல நிலைகளில் தாமரைகளும் அல்லிகளும் காட்சி தர, அவற்றின் அரும்புகளும் இலைகளும் குளமெங்கும் பரவியிருந்தன. மூன்று யானைகள், மூன்று எருமைகள், பதினொரு பறவைகள், பல மீன்கள், ஒரு தவளை இடம்பெற்றிருக்கும் அக்குளத்தில் மலர் பறிப்பவர்களாக மூன்று ஆடவர்கள்

காட்டப்பட்டுள்ளனர். ஒருவர் தனியராக மலர் பறிக்க, இருவர் அருகருகே நின்றவாறு பூக்கொய்வதைக் காணமுடிந்தது.

தனியர் தாம் பறித்த தாமரைகளை இடக்கையில் பிடித்த வாறு தோளில் சாய்த்துள்ளார். வலக்கையில் நீண்ட தண்டுடன் அல்லிமலர். அவருக்கு முன் யானையொன்றும் முன்னும் பின்னும் மீன்களும் காட்டப்பட்டுள்ளன. இருவராய் உள்ளோரில் ஓர் இளையர் தாம் பறித்த பூக்களை இட்ட பூக்குடலையை இடக்கையில் கொண்டுள்ளார். வலக்கை பூக்களைப் பறிக்க முயல்கிறது மற்றோர் இளைஞர் தாம் பறித்த பூக்களை இடக் கையால் பற்றித் தோளில் சாய்த்துள்ளார். இம்மூவரின் உடல் அமைப்பு, ஆடையணிகள், மெய்ப்பாடுகள் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கிப் பதிவுசெய்ததோடு, மற்றவர்களையும் பார்க்கு மாறு ஊக்கினேன்.

குளத்துப் பறவைகளில் ஐந்து இணைகளும் தனித்த நிலை யில் ஒன்றும் இருந்தன. அனைத்துமே வெள்ளை வண்ணத்தில் காட்டப்பட்டுள்ளன. சில பறவைகள் அமைதியாய்க் காட்சிதர, சில கூச்சலிட்டவாறு இறக்கைகளை விரித்துப் பறக்க எத்தனிப்பது போல் வரையப்பட்டிருந்தன. இந்தப் பறவை களின் ஒலியைக் கம்பலை எனச் சங்க இலக்கியங்கள் பேசுவது நினைவிற்கு வந்தது. இந்தப் பதினொரு நீர்ப்பறவைகளைக் காட்சிப்படுத்தியிருக்கும் பாங்கு மட்டுமே ஓர் ஆய்வுக் கட்டுரைக்குத் தேவையான தரவுகளைக் கொண்டுள்ளமை உணர்ந்தேன். கலைஞர்கள் வெளிப்படுத்துவது சிறிதாகவும் அதன் வழிக் கருத வைப்பது பெரிதாகவும் இருப்பதைக் கோயிலாய்வுகள் பலமுறை உணர்த்தியுள்ளன.

முழங்கால் அளவாகக் காட்டப்பட்டுள்ள மூன்று ஆண் எருமைகளுள் இரண்டினைக் குளத்தின் மேற்குப்பகுதியிலும் ஒன்றைக் கிழக்குப்பகுதியிலும் காணமுடிந்தது. மூன்றுமே நன்கு வளைந்து, வளர்ந்த கொம்புகளைக் கொண்டிருந்தன. அவற்றின் உடல் செழுமை, பார்வை இரண்டுமே சங்க இலக்கிய மருதத்திணைக் காட்சிகளைக் கண்முன் நிறுத்தின. உள்ளுறை உவமமாகவும் வெளிப்பட விரித்துரைக்கும் வண்ண னைகளாகவும் பல பாடல்களில் எருமைகள் பதிவாகியுள்ளன. சில நிமிட நேரம் தலைவி, தோழியரின் அங்கலாய்ப்புகள்

கண்முன் விரிந்தன. யானைகளைக் காட்சிப்படுத்தியிருக்கும் இடத்து அவற்றின் தோழமை உணர்வைக் குறிப்பாய்ச் சுட்டியிருந்தமை உள்ளத்தைத் தொட்டது. அந்த யானைகளில் இரண்டு தம் துளைக்கைகளில் மலர் கொண்டிருக்க, மற்றொன்று முன் நிற்கும் யானையின் முதுகைத் தன் துளைக்கையால் வருடுமாறு காட்டப்பட்டுள்ளது.

குளத்தின் பல்வேறு பகுதிகளில் முழு அளவிலும் தலையளவிலுமாய்க் காட்டப்பட்டிருக்கும் நீளமான மீன்கள் குளத்தின் தூய்மைக்குக் கட்டியம் கூறுகின்றன. இரை பிடிக்கத் தாவும் தவளையொன்றும் கண்டோம். பின்னங்கால்களை உதைத்தவாறு தாவும் அதன் முகம் உடலினும் பெரிய அளவில் இருந்தது. படுத்துக் காண்பதும் தேவை நேர்ந்தபோது எழுந்து அருகில் சென்று நிமிர்ந்து காண்பதுமாய் அன்றைய பொழுது குளத்துள் மூழ்கி மறைந்தது.

மார்ச்சு 6 சமயபுரத்துக்கு அருகிலுள்ள இராமகிருஷ்ணன் பொறியியல் கல்லூரியின் விவேகானந்தர் தமிழ்ப் பேரவையின் சார்பில் நிகழ்ந்த விழாவில் நானும் நளினியும் பங்கேற்றோம். கல்லூரி முதல்வர் வெ. சிவராமகிருஷ்ணன் தலைமையேற்றார். 'தமிழ்நாட்டுக் கோயில்கள் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் நானும் பெண்தெய்வ வழிபாடு குறித்து நளினியும் காட்சியுரை நிகழ்த்தினோம். கட்டுமானப் பொறியியல் மாணவர்கள் பல ஐயங்களை எழுப்பியமை மகிழ்வளித்தது. கோயில் கட்டடக்கலை சார்ந்த திறனார்ந்த பல நுணுக்கங்களை அவர்களிடம் பகிர்ந்துகொள்ள முடிந்தது. குறிப்பாகப் பல்லவர் காலச் சுவர்ப் பங்கீடுகள் பற்றிய என் தகவல்கள் அவர்களுக்கு வியப்பளித்தன.

மார்ச்சு 14 திருவாளர்கள் இளங்குமரன், மூக்கப்பிள்ளை, தவத்துறை சிவப்பிரகாசம் ஆகியோரின் தமிழ், சமயப் பணிகளைப் பாராட்டித் திருவரங்கம் செண்பகத் தமிழரங்கில் நிகழ்ந்த விழாவில் பங்கேற்றேன் இம்மூவரில் ஒருவரைத் தேர்ந்து பாராட்டுமாறு தமிழரங்கினர் என்னைக் கேட்டபோது நான் திரு. சிவப்பிரகாசத்தையே தேர்ந்தேன். அதற்குக் காரணம் இருந்தது. எந்தப் பின்புலமும் அற்ற நிலையில்

அப்பெருமகனார் தவத்துறையில் சாதித்த அரும்பணிகள் என் நெஞ்சில் நிறைந்திருந்தன.

வரலாறு இதழைத் தவத்துறையிலும் அதையொட்டி யுள்ள ஊர்களிலும் உள்ள அனைத்துப் பள்ளிகளின் நூலகங் களுக்கும் கொண்டு சேர்த்த பெருந்தகையாளர் அவர். ஏழ்மை யிலும் செம்மையாக வாழ்ந்த இனிய மனிதர். எங்கள் தவத்துறை ஆய்வுகளின்போதுதான் அவரது இல்லச் சூழலும் வாழ்க்கை நிலையும் அறிந்தோம். கொடைகளின் வழிதான் அவரது பணி கள் அனைத்தும் நடந்தேறின். கொடைகள் பெறுவது எத்தனை கடினம் என்பதைக் கடந்த 30 ஆண்டுகளாக எனக்குக் கிடைத்த அனுபவங்கள் உணர்த்தியுள்ளன. வாய் வல்லார் நிறைந்த இந்த நாட்டில் கை சிவந்தார் மிகக் குறைவு. அதனால்தான், உள்ளத் தால் பெரியவராய் வாழ்ந்த சிவப்பிரகாசத்தைப் பாராட்டிப் பேச மனங்கொண்டேன். உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட பொழிவென்பதால் என் உரை அம்மனிதரின் மாண்புக்கு மாலையாயிற்று.

மார்ச்சு 15 நேர்ந்த சிற்றண்ணல்வாயில் பயணத்தின்போது கருவறையும் கோட்டைச் சிற்பங்களும் ஆய்வுக்காளாயின. மண்ட பத்திற்குள் பிதுக்கமாக அகழப்பட்டிருந்த கருவறையின் முன் சுவர் பாதபந்தத் தாங்குதளம் பெற்று நான்கு அரைத்தூண் களால் அணைக்கப்பட்டிருந்தது. விரிகோணத் தரங்கப் போதிகை களும் கூரையுறுப்புகளும் பார்த்தோம். கருவறைக்குள் நுழைய வாய்ப்பாக வேழயாளிப் பிடிச்சுவருடன் மூன்று படிகள் இருந் தன. கருவறையின் பின்சுவரில் மூன்று சிற்பங்கள் மேற்குப் பார்வையாக உள்ளன. நாற்புறத்தும் வாஜனம் அணைத்துள்ள கூரையின் நடுவில் தாமரை மலர் வெட்டப்பட்டிருந்தது. இது போன்ற அமைப்பு மேலைச்சேரிக் குடைவரையிலும் மலையக் கோயில் ஓக்காலீசுவரத்திலும் மதுரைக் குன்னத்தூர் மூன்றாம் குடைவரையிலும் இருப்பதை நினைத்துப் பார்த்தேன்.

கருவறைக் கூரையிலும் ஓவியத் துணுக்குகள் உள்ளன. கருவறைத் தரையின் நடுப்பகுதியில் தாய்ப்பாறையிலான வேசர ஆவுடையார் இருந்து அகற்றப்பட்டிருக்கலாம் என்று கருது மாறு பெரு வட்டமாய் அமைந்திருந்த பொளிவு கருத்தைக் கவர்ந்தது. கருவறைப் பின்சுவர்ச் சிற்பங்களில் வடக்கிலும்

நடுவிலும் உள்ளவை தலைக்கு மேல் முக்குடை பெற்றுத் தீர்த்தங் கரர்களாக விளங்கின. தெற்கின் தலைக்கு மேல் ஒரு குடை மட்டுமே உள்ளது. அர்த்தபத்மாசனத்தில் தியான முத்திரையில் உள்ள அம்மூவர் செவியமைப்பும் மண்டபக் கோட்டத் தீர்த்தங்கரர்களின் செவியமைப்பிலிருந்து முற்றிலும் மாறு பட்டு இயல்பான செவிகளாய் அமைந்திருந்தமை வியப்பூட்டி யது. மூன்று சிற்பங்களின் காலமைப்பு, கையமைப்பு ஆகிய வற்றில் செம்மையில்லை.

மண்டபக் கோட்டச் சிற்பங்களில் தெற்கில் பார்சுவநாதர் ஐந்து தலைப் பாம்பைக் குடையாகக் கொண்டு அர்த்தபத்மா சனத்தில் அமைய, வடக்கில் இன்னார் என அடையாளப் படுத்த முடியாத சமண முனிவர் அதே அர்த்தபத்மாசனத்தில் காட்சிதந்தார். அவர் தலைக்கு மேல் பேரளவிலான ஒற்றைக் குடையே செதுக்கப்பட்டிருந்தது. இவ்விரு கோட்டங்களுக் கும் தாங்குதளங்கள் இருந்தபோதும் இரண்டின் அமைப்பி லும் ஒத்திசைவு இல்லை. அது மண்டபத்தை உருவாக்கியவர் களின் திறன் குறைவைக் காட்டுவதாகக் கருதினேன். அன்று முழுவதும் குடைவரையில் இருந்ததன் பயனாகப் பல அரிய கண்டறிதல்களைப் பெறமுடிந்தது.

18 காலை பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் அ. அறிவுநம்பி தொலைபேசி மாத இறுதியில் நிகழவிருந்த ஆனந்தரங்கரின் 300ஆம் பிறந்த நாள் விழாவிற்குத் தலைமையேற்குமாறு அன்புடன் கேட்டார். ஆனந்தரங்கர் நாட்குறிப்பைப் படித்து 18ஆம் நூற்றாண்டு வரலாற்றை நான் அறிவதற்குக் காரணமாக இருந்ததே அந்தப் பல்கலையின் தமிழ்த்துறைதான். அதனால், நம்பி கேட்டதும் மகிழ்ந்து இசைந்தேன்.

கல்வெட்டாய்வுக்காக 26இல் சிற்றண்ணல்வாயில் சென் றோம். நண்பர்கள் கா. இராசனும் சு. இராசவேலுவும் கண்ட றிந்து ஆவணம் இதழில் வெளியிட்டிருந்த 5ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி வட்டெழுத்துக் கல்வெட்டுகளை அன்று படித் தோம். அவை இருக்குமிடத்தை அறிய திரு. வேதாசலம் தொலைபேசி வழி உதவ, சுமிதாவும் அவரது கணவரும் அவ்விடத்தைக் கண்டறிந்தனர். குடைவரைக்கும் ஏழடிப்பட்

டத்திற்கும் இடையிலுள்ள மலைப்பிளவு ஒன்றில் இந்தக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. 'சம்பொய்கை பேடு தைத கல், பெந்தோடன் பொய்கை, நக்கன், கொற்றை காய்வன், சம்பொகல் சாத்தன், காதன், சிறுசெண்ணன்' என்ற அந்தப் பதிவுகள் மேலோட்டமான பொறிப்புகளாகவே அமைந்திருந்தன. நக்கன் என்ற பதிவைக் குறிப்பிடத்தக்கதாகக் கருதினேன்.

பொ. கா 5ஆம் நூற்றாண்டிலேயே நக்கன் என்ற சொல் லாட்சி மக்கள் வழக்கிலிருந்தமை சிந்தனையைத் தூண்டியது. இது குறித்து மேலும் ஆராயவேண்டும் என நளினியிடம் தெரிவித்தேன். ஆடற்பெண்களில் பெரும்பாலோரும் கோயில் பணியாளர்களில் சிலரும் நக்கன் என்ற முன்னொட்டைத் தங்கள் பெயர்களுக்கு முன் கொண்டிருந்தமையால் அச்சொல் எங்கள் கவனத்தைக் கவர்ந்து ஆய்வுப் பட்டியலில் நுழைந்திருந்தது. இலக்கியம், கல்வெட்டுச் சார்ந்து அச்சொல்லாய்வை நளினியும் அகிலாவும் மேற்கொண்டிருந்தனர்.

ஏழடிப்பட்டப் படுக்கைகளையும் அங்கிருந்த கல்வெட்டுகளையும் அடுத்த கட்டமாகப் பார்த்தோம். 'எருமிநாடு குமுழ் ஊர் பிறந்த கவுடிஇ தென்கு சிறுபொசில் இளயர் செய்த அதிட்அனம்' என்று திரு. மகாதேவனால் படிக்கப்பட்ட பொ. கா. மு. முதல் நூற்றாண்டுக் கல்வெட்டை எழுத்தெண்ணிப் படித்தோம். அதே படுக்கையின் விளிம்பிலுள்ள இரண்டு கல்வெட்டுகளுள் 'காயவனூர்' எனத் தொடங்கும் முதல் கல்வெட்டுத் தொடர்ச்சியை இழந்திருந்தது. அதன் கீழுள்ள இரண்டாம் கல்வெட்டைக் காயவனூர்க் கட்டுளன் எனப் படித்தோம். மற்றொரு கல்வெட்டுத் திட்டைச் சாணன் எனும் பெயரைத் தர, குகைத் தளத்தின் வெளிப்புறத்தே உள்ள பாறையில், 'எருக்காட்டூரு கட்டுளன், கட்டுள' எனும் கல்வெட்டுகள் படிக்கப்பட்டன. கட்டுளன் என்ற பெயருடையவர்கள் காயவனூரிலும் எருக்காட்டூரிலும் இருந்தமை இக்கல்வெட்டுகளால் வெளிப்பட்டது.

மார்ச்சு 30 அன்று பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக விழாவில் கலந்துகொண்டேன். ஆனந்தரங்க ரவிச்சந்தரும் பேராசிரியர் அறிவுநம்பியும் வரவேற்றனர். பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தொடக்க உரையாற்ற, ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் கருத்தரங்கங்கள் தொடர்பான என் அனுபவங்களைத் தலைமையுரையில்

அவையோருடன் பகிர்ந்துகொண்டேன். கருத்தரங்க வெளியீடுகள் தமிழ்த்துறை சார்பாகச் சில ஆண்டுகள் வெளியிடப் பட்டமையைச் சுட்டிக்காட்டி, அது தொடர வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன். நண்பர் ம. சா. அறிவுடைநம்பி கூட்ட முடிவில் அப்பணி தொடரும் என உறுதியளித்தார்.

திருவையாறு தமிழய்யா கல்விக் கழகத்திலிருந்து வந்த மடலில் அவ்வமைப்பு நிகழ்த்தவிருந்த ஏழாவது அனைத்துலக வரலாற்றுத் தமிழ் ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் எனக்குச் சிறந்த வரலாற்றுப் பேரறிஞர் விருது வழங்கிச் சிறப்பிக்க விழைவதாக மாநாட்டு இயக்குநர் முனைவர் மு. கலைவேந்தன் தெரிவித்திருந்தார். அக்கருத்தரங்கம் தொடர்பாக அவ்வமைப் பிடமிருந்து வந்த அழைப்பறிக்கையில் 'ஆய்வுத் தலைப்பும் அமர்வுகளும்' என்ற தலைப்பின் கீழ்ப் பல உள் தலைப்புகள் இருந்தன. அவற்றுள், தமிழறிஞர்கள்/நினைவுச்சின்னங்கள் வரலாறு என்பதன் கீழ்த் திரு வி. க. தொடங்கி, வா. செ. குழந்தைசாமி வரையிலான பலர் பெயர்கள் இருந்தன. ஆனால், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் பெயர் இல்லை. அவரைத் தமிழறிஞராகக் கருதாத ஓர் அமைப்பிடமிருந்து விருது பெற என் உள்ளம் ஒப்பாமையின், நான் உணர்ந்ததை வெளிப்படுத்தி விடையிறுத்தேன்.

நூற்றாண்டு மாணிக்கம் நூலைப் படித்த மகிழ்வில் பேராசிரியர் தமிழண்ணல் எழுதியிருந்த கடிதம் மார்ச்சு இறுதியில் கிடைத்தது. மா. இராசமாணிக்கனாரைத் தம் வழிகாட்டியாகக் குறிப்பிட்டுக் காரைக்குடியில் தாம் உயர்நிலைப்பள்ளி ஆசிரியராக இருந்தபோது காரைக்குடியில் நிகழ்ந்த பெரும்பாலான விழாக்களுக்கு அவரை அழைத்துப் போற்றியது பற்றியும் தம் இல்லத்தில் அவர் தங்கியிருந்தபோது நிகழ்ந்தன பற்றியும் எழுதியிருந்தார். இராசமாணிக்கனாரின் சோழர் வரலாறு, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சைவசமய வளர்ச்சி முதலிய ஆய்வு நூல்களின் பெருமையைப் போற்றி அவற்றில் மூழ்கித் திளைத்தவர் தாம் என்பதைச் சுட்டித் தம்நெஞ்சம் நிறைந்தவரின் மலரைக் கலைக்களஞ்சியமாக நாங்கள் வெளியிட்டிருப்பதாகப் பாராட்டி எங்கள் ஆய்வு மையப் பணிகளைத் தாம் தொடர்ந்து பின்பற்றி வருவதாகவும் வரலாறு ஆய்விதழ் நேரிய

செவ்விதழாகத் தமிழுக்கும் வரலாற்றுக்கும் அரும்பணியாற்றுவ தாகவும் இராசமாணிக்கனார் பெயரில் அமைந்த ஆய்வு மையம் அவரைப் போலவே அயராத உழைப்பும் உயரிய சிந்தனை களும் கொண்டு ஆற்றல் வல்ல இளைஞர்களை நன்கு ஆற்றுப் படுத்தி வருவதாகவும் இவை அனைத்தும் குறித்துத் தாம் பெருமிதம் கொள்வதாகவும் எழுதியிருந்தார். அவரது மிக நீண்ட அந்த மடல் எங்கள்பால் அப்பெருந்தகைக்கு இருந்த நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

ஏப்ரல் 2ஆம் நாள் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறை மாணவி செல்வி இராதிகா தம் முதுநிறைஞர் ஆய்வேட்டிற்காக நாமக்கல் குடைவரைகள் எனும் தலைப்பில் ஆய்வு செய்ய விழைந்து என்னை அணுகினார். குடைவரை களைப் பற்றிய எங்கள் நூல்களைப் படித்திருப்பதாகவும் சிராப் பள்ளிக் குடைவரைகளைத் தம் முதுகலைப் பருவத்தில் பேரா சிரியர் கீதாவின் வழிகாட்டலில் பார்த்திருப்பதாகவும் தெரிவித் தார். அவர் ஊர் நாமக்கல்லுக்கு அருகிலிருந்தமையால், பலமுறை அக்குடைவரைகளைப் பார்த்திருப்பதாகவும் அவற்றைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ள வேண்டும் என்பது தம் நெடுநாளைய விருப்பம் என்றும் அவர் கூறியது என்னைக் கவர்ந்தது.

பொதுவாகவே சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத் துறை மாணவிகள் களஆய்வுகளில் ஆர்வமுள்ளவர்கள். எங்க ளிடம் ஆய்வுசெய்த அக்கல்லூரி மாணவியர் அனைவருமே அவர்தம் ஆய்வுக் காலத்தில் பல புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர்கள். அதனால், மிகுந்த மகிழ்வுடன் அவரது வேண்டுகோளையேற்று மையத்தில் ஆய்வு மாணவியாகப் பதிவு செய்தோம். நாமக்கல் குடைவரைகளைப் பற்றி அவர் அறிந் திருக்கும் தகவல்களை மையப்படுத்தித் தமிழில் கட்டுரை ஒன்று எழுதித் தருமாறு ஆற்றுப்படுத்தினேன். ஒரு வார இடை வெளியில் அவர் எழுதிக் கொணர்ந்த கட்டுரை கீதாவிடம் அவர் பெற்றிருந்த பயிற்சியின் முதிர்ச்சியைக் காட்டியது. நாமக்கல் குடைவரைகளுக்குக் களஆய்விற்குச் செல்லும் முன் அங்குள்ள கல்வெட்டுகளைப் படித்தறியச் சொன்னேன்.

ஏப்பிரல் 16 அன்று நியூயார்க் நகரத்திலிருந்து திருமதி திலகா தொடர்புகொண்டார். அவரது வரலாற்று ஆர்வத்தைத் தெரிவித்தவர், வரலாறு மின்னிதழ் வழி எங்கள் கட்டுரைகள் அனைத்தையும் படித்திருப்பதாகவும் கோயில் ஆய்வுகளில் தமக்கு அளவற்ற ஈடுபாடு இருப்பதாகவும் தெரிவித்ததுடன், தம் நெடுநாளைய ஐயங்கள் சிலவற்றைக் கேள்விகளாக்கி முன் வைத்தார். நான் அறிந்த அளவில் அவரது ஐயங்களைத் தெளி வித்ததோடு, சோழர் பண்பாடு குறித்து அவர் அறிந்துகொள்ள விரும்பிய தகவல்களையும் அதற்கான நூல்களையும் கூறினேன். அவரது ஆர்வமும் படிப்பறிவும் அவரது பேச்சில் வெளிப்பட் டன. தமிழ்நாடு வரும்போது ஆய்வு மையத்தின் வழிகாட்டலில் சில கோயில்களைப் பார்க்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

சிற்றண்ணல்வாயில் கட்டுரையை எழுதத் தொடங்கிய போது அதன் முகப்பு முழுத் தூண்களின் மேற்சதுர மேற்கு முகங் களில் தூணுக்கொரு அழகியென மேகங்களுக்கிடைப்பட்ட நிலையில் காட்சிதரும் இரண்டு ஆடல் நங்கையரை வண் ணிக்க விழைந்தேன். இவ்விருவர் ஓவியங்களுமே மார்புக்குக் கீழ் முற்றிலுமாய்ச் சிதைந்திருந்தபோதும் திரு. டி. என். இராமச் சந்திரன் இவர்தம் தோற்றங்களைக் கரணங்களாகத் (இலதா விருச்சிகம், புஜங்காஞ்சிதம்) தம் கட்டுரையொன்றில் அடை யாளப்படுத்தியுள்ளார்.

கைக்குறிப்புகள், உடல்நிலை, கால் நிலை எனும் மூன்றின் இணைவே கரணம் என்ற அடிப்படை உண்மையைப் புறந் தள்ளிய இவர் கூற்றுத் திரு. இரா. நாகசாமி உள்ளிட்ட சிலரை இவ்வோவியங்கள் கரணக் காரிகைகளைக் காட்டுவனவே என எழுத வைத்துள்ளன. அதனால், இரு ஓவியங்களையும் எங்கள் பயணத்தின்போது விரிவான அளவில் ஆய்ந்து தரவுகள் சேர்த் திருந்தோம். அவற்றின் அடிப்படையில் பெண்களின் ஓவியங் களையும் தெற்குத் தூண் மேற்சதுர வடமுகத்தில் பெரிதும் அழிந்த நிலையில் இருந்த அரசர், அரசி, துறவி ஓவியத்தையும் கட்டுரையில் விவரிக்க முடிந்தது. இவ்வோவியத்தின் நடுப் பகுதியில் 'கச்சமங்கலம் உடையான்' என்ற எழுத்துப் பொறிப்பு சோழர் கால எழுத்தமைதியில் மூன்று வரிகளில் இருந்தமை வியப்பளித்தது. அதையும் கட்டுரையில் குறிப்பிட்டேன்.

வரலாறு 19 தயாரான நிலையில் அதனுடன் திரும்பிப் பார்க்கிறோம் மூன்றாம் தொகுதியை இணைத்து 316 பக்க அளவில் தொகுதியை வெளிக்கொணர்ந்தோம். 1988 ஜூலை யிலிருந்து 1989 டிசம்பர்வரையிலான எங்கள் அனுபவங்களும் பணிகளும் திரும்பிப்பார்க்கிறோம் மூன்றாம் தொகுதியில் பதிவாயின. திரு. ஐராவதம் மகாதேவன் தாம் தாமரைத்திரு விருது பெற்ற ஒளிப்படத்தையும் தமக்களிக்கப்பட்ட பாராட்டுப் பட்டயத்தையும் வரலாறு இதழில் வெளியிடுமாறு அனுப்பி யிருந்தார். பட்டயத்தைப் பின்னட்டையிலும் அவர் குடியரசுத் தலைவரிடம் விருது பெற்ற படத்தை முன் அட்டையிலும் வெளியிட்டு அப்பெருந்தகையைச் சிறப்புச் செய்தோம்.

மே 2ஆம் நாள் சிராப்பள்ளியில் நிகழ்ந்த இந்திய மருத்துவ மன்றத் தமிழ்நாடு கிளையின் 63ஆம் மாநில மாநாட்டில் தமிழ் நாடு மருத்துவ மன்றத் தலைவர் திரு. இரா. குணசேகரன் என் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி மருத்துவர் பானுமதி முருகநாதன் தமிழ் விருதினை வழங்கி வாழ்த்தினார். இம்மாநாட்டுக்கான மலர் தயாரிக்கும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டிருந்தது. நானும் மருத்துவர் சு. பொன்னையாவும் ஒன்றிணைந்து அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றினோம்.

தென்மாவட்டக் குடைவரைகள் நூல் வடிவம் பெறத் தொடங்கியிருந்தது. பாறைக்குளம், மலையடிக்குறிச்சி, வீரசிகா மணி, திருமலைப்புரம், ஆனையூர், சொக்கம்பட்டி, குறத்தியறை, சிவகிரி, விழிஞம், திருநந்திக்கரை, திருமலை, கூத்தம்பூண்டி யான்வலசு, திருத்தங்கல், செவல்பட்டி, ஆண்டிச்சிப்பாறை ஆகிய ஊர்களின் குடைவரைகளைப் பற்றிய கட்டுரைகள் தயார் நிலையில் இருந்தன. மூவரைவென்றான், கழுகுமலைக் குடைவரைகள் பற்றிய கட்டுரைகள் பெருமளவு முடிந்திருந்தன. புதுப்பட்டிக் குடைவரையைக் காணவேண்டியிருந்தது. நூல் ஏறத்தாழ உருவான நிலையில் முன்னுரை எழுதத் தொடங்கி னேன். எங்கள் குடைவரைப் பயணங்களுக்குத் துணைநின்ற அனைவரையும் முன்னுரையில் நினைவுகூர்ந்தேன்.

'எங்கள் ஆய்வுகளின்போது கட்டமைப்புகளுடனும் சிற்பங் களுடனும் மட்டும் பழகவில்லை. அந்தந்த ஊர்களிலிருந்த

எத்தனையோ இனிமையான மனிதர்களுடன் பழக முடிந்தது. எந்த உறவும் இல்லாமல், தேவை கருதாமல், எதிர்பார்ப்புக் கொள்ளாமல் துணைநின்ற நேயம் நிறைந்த அந்த உள்ளூர் அன்புள்ளங்களே தொய்வின்றிப் பணியாற்றும் பேராற்றலை எங்களுக்குத் தந்துள்ளன. அந்த இனிய உள்ளங்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இந்நூலைத் தமிழ்நாட்டுக் கலைப்படைப்புகளின் தரவுப் பதிவாக உருவாக்கியுள்ளோம். குறைகள் தென்படின் கூறுங்கள். நிறைகள் மின்னலிட்டால் அந்தப் படைப்புகளைச் சிந்தித்த பேராற்றலாளர்களுக்கும் அவற்றை இம்மியும் பிசகாமல் வடிவமைத்துத் தந்த கண்ணுள் வினைஞர்களுக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறி வாழ்த்துங்கள். ஏனெனில், அந்தப் படைப்புகள்தான் இன்றள வும் நம் தலைப்பெழுத்துக்களாய் விளங்கி நம்மை இந்த ஆழி சூழ்ப் பேருலகிற்கு முறையாக அடையாளப்படுத்தி வருகின்றன.'

புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர் தங்கள் அமைப்பும் அதன் சார்பில் இயங்கும் கணேசர் கலை அறிவியல் கல்லூரியும் நூற்றாண்டு விழாக் கொண்டாட விருப்பதால், 'செம்மொழித் தமிழின் செவ்வியல் கூறுகள்' என்ற பொதுத்தலைப்பில் மலர் வெளியிடக் கருதியிருப்பதாக வும் அதற்கு என் கட்டுரை ஒன்றை வழங்க வேண்டும் என்றும் மடல் எழுதியிருந்தனர். கணேசர் செந்தமிழ்க் கல்லூரியாக இருந்து கலை அறிவியல் கல்லூரியாக மாற்றம் பெற்ற அங்கு தான் என் இளைய தமையனார் புலவர் மா. ரா. வஞ்சிக்கோவன் தம் புலவர் படிப்பை மேற்கொண்டார். அக்கல்லூரி நூற் றாண்டு கொண்டாடுவதும் அற்கான மலருக்கு என் கட்டுரை கேட்டிருப்பதும் மகிழ்வளித்தன. சங்க காலத்தின் காலம் என்ற என் கட்டுரையை மீள்படிப்புச் செய்து, கூடுதல் தரவுகள் இணைத்து அவர்களுக்கு அனுப்பியிருந்தேன்.

ஜூன் 7 காலை சில ஐயப்பாடுகளை நேர்செய்து கொள்வ தற்காக மூவரைவென்றான் குடைவரை சென்றோம். மதுரை திருவில்லிப்புத்தூர்ச் சாலையில் அழகாபுரிக்கருகில் மேற்கில் பிரியும் பாதையில் 4 கி. மீ. பயணித்தால் இக்குடைவரை அமைந் துள்ள குறிஞ்சி நிலத்தை அடையலாம். பொதுவாகவே குடை வரைகள் அமைந்துள்ள மலைப்பகுதிகளெல்லாம் எழில்

கொழிக்கும் சூழல்களிலேயே அமைந்துள்ளன. மூவரைவென்றான் விதிவிலக்கல்ல. 'மூவரைவென்றான்' என்ற தலைப்பில் திரு. நா. பார்த்தசாரதி எழுதியிருந்த கதையை நளினியிடம் பகிர்ந்தவாறே வளாகத்திற்குச் சென்றோம்.

அக்குடைவரையின் இலிங்கத்திருமேனி பற்றி எங்களுக்குள் கருத்துவேறுபாடு இருந்தது. கோயில் பூசாரி திரு. சி. கணேசனின் உதவியோடு கருவறை இலிங்கத்திருமேனி செய்தமைத்த ஒன்றே, தாய்ப்பாறைப் பிறப்பன்று என்பதை உறுதிசெய்தோம். இந்த வளாகக் கல்வெட்டுகளின் வழிக் குடைவரையின் பெயரையோ, இறைவனின் பெயரையோ, அம்மன் திருமுன் தொடர்பான செய்திகளையோ பெறமுடியாமல் இருந்ததால், கோயில் வளாகம் முழுமையும் நாங்கள் அறிந்தது தவிர, வேறு கல்வெட்டுத் துணுக்குகள் உள்ளனவா எனத் தேடினோம். உதவியாளர் லோகநாதனும் தேடலில் துணைநின்றார். அப்போதுதான் ஏற்கனவே படியெடுத்திருந்த சில கல்வெட்டுகள் புதிய திருப்பணியில் காணாமல் போயிருப்பதை அறியமுடிந்தது.

அங்கிருந்து எரிச்சநத்தம் சென்று சிவகாசிச் சாலையில் 9 கி. மீ. பயணித்து மங்கலம் புதுப்பட்டியை அடைந்தோம். ஊரின் புறத்தே அருச்சுனா நதியின் மேற்குக் கரையில் உள்ள சுண்ணாம்புப் பாறையின் கிழக்குச் சரிவில் புதுப்பட்டிக் குடைவரை பாறைச்சரிவையே கூரையாகப் பெற்று, முன்னால் இரு மண்டபங்களுடன் காட்சியளித்தது. கருங்கல் நிலையுடன் கிழக்கில் வாயில் பெற்றுச் செங்கற்கட்டுமானமாய் விளங்கிய முன்மண்டபத்தின் வடக்கிலும் தெற்கிலும் காணப்பட்ட திறப்புகள் குடைவரையைச் சூழ அமைந்துள்ள சுற்றுக்கான வழிகளாக அமைய, மேற்கு வாயில் முகமண்டபத்திற்கு வழிவிட்டது. அவ்வாயிலின் இருபுறத்தும் வெறுமையான கோட்டங்களைக் கண்டோம்.

எங்களைப் பின்தொடர்ந்து வந்திருந்த ஊரார் சிலர், பாம்புகள் உள்ளிருப்பதாகவும் அதனால், உள்ளே செல்ல வேண்டாம் என்றும் கூறினர். அது உச்சிவேளையாக இருந்ததாலும் பாம்புகளோடு ஏற்கனவே எங்களுக்குப் பல அனுபவங்கள் இருந்ததாலும் ஊராருடன் இணைந்த நிலையில் நாங்கள்

உள் நுழைந்தபோது ஏற்பட்ட ஓசைகளே பாம்புகளை வெளி யனுப்பியிருக்கும் என்ற நம்பிக்கையாலும் உள் நுழைந்தோம்.

முகமண்டபத்தின் மேற்குச் சுவரில், முன்னால் இரண்டு படிகளுடன் கருவறை அகழப்பட்டிருந்தது. வாயிலின் இருபுறத் தும் இருந்த கோட்டங்கள் முன், திண்ணைகள் எனச் செங்கல் மேடைகள் காணப்பட்டன. முகமண்டபத் தென்சுவர்த் திறப்பு சுற்றுவழிக்கான வாயிலாகவும் குடைவரை வளாகத்திற்கான தென்வாயிலாகவும் இருப்பதைக் கண்டோம் வடசுவர் நடுவில் திருமுன்னாகக் கொள்ளத்தக்க ஆழமான கோட்டமும் அதன் வலப்புறத்தே சிறிய கோட்டமொன்றும் இருந்தன. மண்டபக் கிழக்குச் சுவரில் வாயிலின் இருபுறத்தும் உயரமான, வெறுமை யான கோட்டங்களைப் பார்த்தோம். முற்றிலும் சுண்ணாம்புப் பாறையில் குடையப்பட்டிருந்த அரைக்கோள வடிவக் கரு வறைச் சுவர்களில் விளக்கு மாடங்கள் இருந்தன.

ஊரார் துணையுடன் தென்புறமிருந்த திறப்பு வழியாகச் சுற்றுக்குள் நுழைந்தோம். கைவிளக்குகளின் ஒளியால் மண்டி யிருந்த வெளவால் கூட்டம் சிதறிப் பறந்தது. அவை வெளி யேறும் வரை பொறுத்திருந்து சுற்றுவழியில் நிரம்பியிருந்த குப்பைகளை எச்சரிக்கையுடன் பார்த்தவாறே முன்னும் பின் னும் ஊர்ச் சிறுவர்களும் இளைஞர்களும் துணைவரச் சுற்றை வலம் வந்தோம். சுற்றின் வடக்கு வழி, வெளிமண்டபத்தில் முடிந்தது. தெற்கு வழிக்கு முகமண்டபத்திலும் திறப்பிருந்த தைப் பார்த்தோம். தமிழ்நாட்டுக் குடைவரைகளில் கருவறை யைச் சுற்றிவர வழியமைக்கும் முயற்சி மாமண்டூர் மூன்றாம் குடைவரை, மாமல்லபுரம் பஞ்சபாண்டவர் குடைவரை, குன்றாண்டார்கோயில் நடுக்குடைவரை ஆகியவற்றில் மேற் கொள்ளப்பட்டிருந்தாலும் அவற்றுள் ஒன்றேனும் முற்றுப் பெறவில்லை. தென்மாவட்டக் குடைவரைகளில் இத்தகு சுற்று முயற்சி வேறெங்கும் அமையவில்லை. அவ்வகையில் முற்றி லும் சுண்ணாம்புப் பாறையிலேயே குடையப்பட்டுள்ள புதுப் பட்டிக் குடைவரையின் முழுமையான இத்திருச்சுற்று, தனிச் சிறப்புப் பெறுவதை அறிந்தோம். ஆய்வுக்குத் துணைநின்ற ஊரார் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெற்றோம்.

புதுப்பட்டி ஆய்வுடன் தென்மாவட்டக் குடைவரைகள் நூல் முடிவடைந்த நிலையில் அதில் இடம்பெற்றிருந்த 19 குடைவரைகளைப் பற்றிய ஒப்பீடு குறித்துச் சிந்திக்கத் தொடங்கினோம். அவற்றுள் பாறைக்குளம், ஆண்டிச்சிப்பாறை, குறத்தியறை (?குரத்தியறை), சிவகிரி, விழிஞம் குடைவரைகள் தாய்ப்பாறை வடிப்பாகக் கருவறை மட்டுமே பெற்றுள்ளன. பாறைக்குளம், கருவறையின் முன் கட்டுமான மண்டபம் பெற, சிவகிரியில் மண்டபத்துடன் கிழக்கிலும் வடக்கிலும் வாயில்கள் பெற்ற சுற்றும் உள்ளது. எஞ்சிய மூன்றும் பிறந்த நிலையில் திகழும் குடைவரைகளாகும். தென்மாவட்டக் குடைவரைகளில் சேட்டைத்தேவி தாய்ப்பாறையில் உருவாகியுள்ள ஒரே இடம் ஆண்டிச்சிப்பாறை. தாய்ப்பாறை இலிங்கம் பாறைக்குளத்திலும் சிவகிரியிலும் அமைய, குறத்தியறை தாய்ப்பாறையிலான விஷ்ணு திருமேனியைக் கொண்டுள்ளது.

தென்மாவட்டங்களின் 14 மண்டபக் குடைவரைகளில் கூத்தம்பூண்டியான்வலசு முகப்பு மட்டுமே பெற்றுள்ளது. நான்கு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் கொண்ட முகப்புடன் விளங்கும் ஒரே தென்தமிழ்நாட்டுக் குடைவரை இதுதான். நிறைவடையாத வலசு, திருமலைப்புர இரண்டாம் குடைவரை தவிர்த்த ஏனைய 12இல் வெற்றுக் கருவறை பெற்றவை புதுப்பட்டியும் செவல்பட்டியுமே. மூன்று குடைவரைகளில் சிவபெருமானின் ஆடல்தோற்றங்கள் இருந்த போதும் மூவரைவென்றானின் ஆனந்ததாண்டவக் கோலம் குடைவரைக் காலத்திற்குப் பிற்பட்டதாகும். செவல்பட்டியின் அர்த்தரேசித ஆடல், குன்றக்குடி மூன்றாம் குடைவரையிலும் காட்டப்பட்டுள்ளமை கருதினோம்.

இராஜசிம்மப் பல்லவர் காலத்தில் இவ்வாடல் பெருவழக்காக இருந்ததை அவர் கற்றளிகள் மெய்ப்பிக்கின்றன. திருமலைப்புர மண்டலநிலை ஆடல் தனித்தன்மையது. செவல்பட்டியிலும் இங்கும் சிவபெருமானின் கைகளில் ஒன்று நாட்டிய நன்னூல் கொண்டிருப்பதை நல்லூர் ஆடவல்லான் கையிருப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தோம். தமிழ்நாடு முழுவதுமான பரவலான ஆடல் பார்வை பல்லவர், பாண்டியர், சோழர் கால ஆடல் நுட்பங்களை தரவுப்படுத்த உதவும் எனக் கருதினோம்.

பின்னாளில் வாய்ப்பமையும்போது அதைச் செய்திடலாம் என நளினி அமைதிப்படுத்தினார்.

முகமண்டபத் தரையில் தாய்ப்பாறையில் அமைந்த நந்தியைத் திருமலைப்புரம் முதல் குடைவரை மட்டுமே கொண்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள் பலவற்றில் காணப்படும் தாய்ப்பாறை நந்தி தென்மாவட்டக் குடைவரைகளில் அருகிப்போனமை வியப்பளித்தது. அணைவுத் தூண்களால் கருவறை முன்சுவரில் ஏற்படும் வாயிலடுத்த பிரிவுகளில் காவலர் அல்லது அடியவர் சிற்பங்கள் அமைப்பது குடைவரைக் கலைமரபாக இருந்துவருகிறது. ஆனால், மூவரைவென்றான், நந்திக்கரை, தங்கல், கழுகுமலை, புதுப்பட்டி, ஆண்டிச்சிப்பாறை ஆகிய தென்மாவட்டக் குடைவரைகளில் இப்பிரிவுகள் வெறுமையாக விடப்பட்டுள்ளன.

செவல்பட்டி, வீரசிகாமணி, திருமலைப்புரம், ஆனையூர், சொக்கம்பட்டி ஆகிய குடைவரைகளின் கருவறைச் சுவர்க் கோட்டங்களில் காணப்படும் காவலர், அடியவர் சிற்பங்கள் பல்லவர் பகுதியில் உள்ளாற் போல சிவபெருமானின் கருவிகளுக்குத் தரப்பட்ட மானுடவடிவங்களாக, அதாவது சூலத் தேவராகவும் மழுவடியாராகவும் காட்சியளிப்பது இச்சிந்தனை தமிழகம் தழுவிய நிலையில் இடம்பெற்றிருந்ததை வலியுறுத்தியது. இம்மரபை இப்பகுதி விஷ்ணு குடைவரைகளில் (தங்கல், குறத்தியறை) காணமுடியவில்லை. தென்மாவட்டக் குடைவரைகள் 19இல் பூதவரி வலபியும் கூடுவளைவுகளுடன் கபோதமும் பூமிதேச அடையாளமும் பெற்றுள்ள கருவறைகளைச் சொக்கம்பட்டியில் மட்டுமே காணமுடிகிறது

கருவறை வாயிலின் மேல் அழகிய மகரதோரணம் பெற்ற ஒரே தென்மாவட்டக் குடைவரையாக மலையடிக்குறிச்சி விளங்கியது. கோளக்குடி மகரதோரணத்தைவிடப் பல மடங்கு செழுமையானது இது. திருமலை, வீரசிகாமணி, திருமலைப்புரம், நந்திக்கரை, மலையடிக்குறிச்சி ஆகிய 5இல் கல்வெட்டுகள் உள்ளபோதும் குடைவரையை உருவாக்கியவரை அடையாளப்படுத்தும் கல்வெட்டு மலையடிக்குறிச்சியில் மட்டுமே கிடைத்துள்ளது. தங்கல், மூவரைவென்றான், கழுகுமலை ஆகிய மூன்றிலும் குடைவரை தவிர்த்த பிற இடங்களில் கல்வெட்டு

களைக் காணமுடிகிறது. எஞ்சியவற்றில் கல்வெட்டுப் பொறிப்புகளைக் காணக்கூடவில்லை

தனிப்பட்ட நிலையில் ஒவ்வொரு குடைவரையையும் ஆய்வுசெய்து கட்டுரைப்பதென்பது எளிதானதே. ஆனால், ஓர் அரசர், ஓர் அரசமரபு அல்லது ஒரு பகுதி சார்ந்த குடைவரைகள் அனைத்தையும் ஒரு நோக்கில் நிறுத்தி, அவற்றின் அனைத்து உறுப்புகளையும் ஒப்பிட்டு, அவற்றுள் ஒன்றுபடுவனவற்றையும் மாறுபடுவனவற்றையும் குறிப்பதோடு, தனித்தன்மைகளையும் அறிந்து வெளிப்படுத்தல் ஐயத்திற்கிடமற்ற களஆய்வுத் தரவுத் தொகுப்புகளின் அடிப்படையில் மிகுந்த கவனத்துடன் செய்யப்படவேண்டிய ஒன்றாகும். என் தொடக்கக் கால மாடக் கோயில்கள் ஆய்விலேயே இது போன்ற ஒப்பாய்வை மேற் கொண்டுள்ளேன். கோயிற் கட்டடக்கலை பற்றிய தெளிவான புரிதலற்ற நிலையில் மேற்கொள்ளப்பட்ட அந்த ஆய்வு மலைக்கவைக்கும் மாடக்கோயில்கள் நூல் பணியின்போது முற்றிலுமாய் மாற்றியமைக்கப்பட்டது.

தளிச்சேரிக் கல்வெட்டு ஒப்பாய்வும் வரலாறு இதழில் வெளியானதைவிட நூல் வடிவம் பெற்றபோது மேம்பட்ட நிலையில் பதிவானது. இவ்விரண்டும் தந்த அனுபவமும் எச்சரிக்கை உணர்வும் மகேந்திரர் குடைவரைகள் ஒப்பாய்வில் வழிகாட்டியபோதும், சிறு சிறு குறைகள் நேர்ந்தமையைத் தவிர்க்க முடியவில்லை. மகேந்திரர் குடைவரைகள் என்ற எங்கள் நூலின் 172, 206ஆம் பக்கங்களில் இலலிதாங்குரக் கருவறையின் முன்சுவர் அரைத்தூண்கள் வீரகண்டம் கொண்டிருப்பதாகவும் போதிகைகள் அவற்றின் மேலமர்ந்து விரிகோணத் தரங்கக் கைகளால் உத்திரம் தாங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளோம். இதுவே குடைவரையில் உள்ள நிலை.

ஆனால், 207ஆம் பக்கத்தில் போதிகைகள் கும்பத்தின் மீதமர்ந்துள்ளதாகத் தவறுதலாக எழுதிவிட்டோம். இந்தப் பிழை எப்படி நேர்ந்ததென்றே தெரியவில்லை. நூல் வெளியான பிறகே அதைக் கண்டுபிடித்தமையால் சரிசெய்ய முடியாமல் போய்விட்டது அது போலவே, நூலிலுள்ள 'மகேந்திரர் குடைவரைகள் ஓர் ஒப்பாய்வு' என்ற கட்டுரையின் 31ஆம் அடிக்

குறிப்பிலும் பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் இரண்டாம் வரிசைத் தூண்களோ, உயர்த்தப்பட்ட தரையமைப்போ இல்லை என்று எழுதியுள்ளோம்.

பாண்டியர் பகுதியில் வடபரங்குன்றம், கோளக்குடி, கழுகுமலை ஆகிய மூன்றிலும் இரண்டாம் வரிசைத் தூண்கள் இருப்பதை எங்களின் பின்னாள் ஆய்வுகள் உணர்த்தியபோது நூலில் நேர்ந்த தவறுக்காக மிக வருந்தினோம். கட்டுரைகளில் தரவுப் பிழைகள் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே முழுமையான அளவில் களப்பணிகள் மேற்கொண்டபோதும், அங்குமிங்குமாய் ஓரிரு கருத்துப் பிழைகள் நேர்ந்துவிடுவதை எதிர்காலத்தில் தவிர்க்க வேண்டும் என்பதில் உறுதி கொண்டமையால், தென்மாவட்டக் குடைவரைகள் நூலின் முடிவுரையைக் கலந்துரைக்குப் பின்னரே எழுதத் தொடங்கினோம்.

அந்நூலில் இடம்பெற்ற 19 குடைவரைகளில் திருமலைக் குடைவரை உள்ள மலையில் மட்டுமே வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ஓவியங்களையும் பழந்தமிழ்க் கல்வெட்டுகளையும் குகைத்தளப் படுக்கைகளையும் காணமுடிந்ததால், சமணர்கள் வாழ்ந்த அம்மலையில் பொ. கா. 8ஆம் நூற்றாண்டளவில் சைவத்தை நிலைநிறுத்தும் பணி முழு வீச்சில் இருந்தமைக்கான அடையாளமாகவே மலைக்கொழுந்தீசுவரர் குடைவரை உருவாக்கப்பட்டதாகக் கருதினோம். வீரசிகாமணி மலையில் குகைத்தளங்களும் படுக்கைகளும் இருந்தபோதும் பழந்தமிழ்க் கல்வெட்டுகளைக் காணமுடியவில்லை. படுக்கைகளின் அமைப்பு வீரசிகாமணி சமணர் இருப்பிடமாக இருந்திருக்கலாம் எனக் கருத வைத்தது.

கழுகுமலையில் படுக்கைகளோ, பழந்தமிழ்க் கல்வெட்டுகளோ இல்லாதபோதும் சமணச் சிற்பங்களும் அவை சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் அப்பகுதி சமணர் ஆளுகையில் சில நூற்றாண்டுகளேனும் செழித்திருந்தமையை உணர்த்தின. ஏறத்தாழ அதே காலத்தில் சைவமும் அங்கே எழுச்சி பெறத் தொடங்கியதை வெட்டுவான்கோயில் நிறுவியது. கழுகுமலைக் குடைவரையின் எப்பகுதியிலும் சிற்பங்கள் இருந்து அழிந்தமைக்கான தடயங்கள் இன்மையால், அக்குடைவரை எச்சமயம் சார்ந்து அகழப்பட்டது என்பதை அறியக்கூடவில்லை.

மலையடிக்குறிச்சிக் குன்றில் இதுநாள்வரை படுக்கைகளோ, பழந்தமிழ்க் கல்வெட்டுகளோ கிடைத்தில. குடைவரைக் கல்வெட்டு அதைக் கல் திருக்கோயிலாகக் குறிக்கிறதே தவிர, இறைவன் பெயரைச் சுட்டவில்லை. எனினும், கருவறை முன் சுவரிலுள்ள காவலர் சுவடுகளும் மகரதோரணத்தின் நடுப் பகுதியிலுள்ள முருகனாகக் கொள்ளத்தக்க சிற்பமும் அதை சிவபெருமான் குடைவரையாகக் கருதவைக்கின்றன. மூவரை வென்றான், வலசு ஆகிய இரண்டு இடங்களிலும் படுக்கை களோ, பழந்தமிழ்க் கல்வெட்டுகளோ அறியப்படவில்லை.

இந்நிலையில் தென்மாவட்டங்களில் பரவலாக இடம்பெற் றுள்ள இந்த 19 குடைவரைகளின் அடிப்படையில் இப்பகுதி யில் பொ. கா. 7, 8ஆம் நூற்றாண்டுகளில் சைவம் தழைத்திருந்த மையையும் வைணவம் வடதமிழ்நாடு போலவே சுருங்கிய அளவில் புரக்கப்பட்டமையையும் அறியலாம். சமணத்தின் செல்வாக்கும் தென்மாவட்டங்களில் குறைந்த அளவிலேயே இருந்தது. அச்சமயம் இடைக்காலத்தில் பெற்ற எழுச்சியைக் கழுகுமலை உணர்த்தினாலும் அதற்கு இணையாகச் சைவமும் அங்கு ஆளுகை செலுத்தியுள்ளமை வெட்டுவான்கோயிலால் நிறுவப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள குகைத்தளப் படுக்கைகள் குறித்து விரிவான அளவில் ஆய்வு நிகழ்த்துவது அவை சமணம் சார்ந்து மட்டுமே அமைக்கப்பட்டனவா அல்லது பழந் தமிழ கத்திலிருந்த பிற சமயங்கள் சார்ந்தும் உருவாக்கப்பட்டனவா என்பதைத் தெளிவுபடுத்த உதவும் எனக் கருதினோம். பழந் தமிழகத்தின் சமய வரலாறு குறித்த உறுதியான முடிவுகளை முன்வைப்பதற்குப் பத்திமை இலக்கியங்களிலும் காப்பியங் களிலும் இடம்பெற்றுள்ள சமயச் செய்திகள் அனைத்தையும் தொகுத்து மலைகளில் காணப்படும் வாழிடங்கள், கல்வெட்டு கள், குடைவரைகள் ஆகியவற்றின் தரவுகளோடு ஒப்பீடு செய்வதே வழிவகுக்கும் என எண்ணினோம்.

ஜூன் 13 அன்று பேராசிரியர் அரசுவின் பணி நிறைவு விழா சென்னையில் நிகழ்ந்தது. அவரது மாணவர்கள் முனைந்து நிகழ்த்திய அவ்விழா அரசுவின் உழைப்பையும் ஆற்றலையும் ஆழ்ந்த அறிவையும் முன்னிலைப்படுத்தி அமைந்தது. ஓர்

ஆசிரியருக்கு அவர் ஓய்வு பெறும் காலத்தே அவரது மாணவர் கள் விழா எடுப்பதென்பது அரிதினும் அரிதான நிகழ்வாகும். விழா எடுத்தவர்களோ அவரிடம் பல ஆண்டுகளுக்கு முன் னால் படித்தவர்கள். அவரால் உருவாக்கப்பட்டவர்கள். கல்வித் துறையின் பல நிலைகளில் முன்னோடிகளாகப் பணியாற்று பவர்கள். ஒரு நல்லாசிரியரின் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதற்கு அரசு சிறந்த சான்றாவார்

அவரால் எங்கள் ஆய்வு மையம் பெற்ற பயன்கள் எண்ணில. எங்கள் வடதமிழ்நாட்டு ஆய்வுகள் அனைத்துமே அவரது அன்பான புரத்தலின் கீழ்தான் நிறைவேறின. எத்தனை பேர், எவ்வளவு நாள் என்றெல்லாம் எந்தக் கணக்கும் பார்க்கா மல் உணவும் இடமும் அளித்துத் துணையிருந்ததோடு, தேவைப் பட்ட நூல்களை எல்லாம் தேவைப்பட்ட காலங்களில் அவை எத்தனை அரிய நூல்களாக இருந்தபோதும் பெற்றுத் தந்த பெருந்தகை அவர். மையத்தின் சார்பில் எங்கள் அன்பைத் தெரிவிக்கும் விதமாக அவரைச் சிறப்பித்து மகிழ்ந்தோம்.

ஜூன் 14 காலை சில ஐயங்களை நேர்செய்து கொள்வதற் காக சுமிதாவுடன் மலையடிப்பட்டி சென்றோம். சிற்பத் தரவுகள் குறித்த சுமிதாவின் ஐயங்களைச் சரிசெய்து சிவன் கோயிலிலிருந்து வெளிவந்தபோது அங்கேயிருந்த பாறையில் எழுத்துக்கள் இருப்பதைக் கண்ட நான் அதை ஆராயுமாறு நளினியை ஆற்றுப்படுத்தினேன். அப்பாறையில் மூன்று சதுரங்கள் பொளியப்பட்டிருந்தன. 1. 43 மீ. பக்கமுடைய வெளிச் சதுரத்தினுள் வெட்டப்பட்டிருந்த உள் சதுரம் 1. 26 மீ. அளவில் இருந்தது. அதன் நடுவே தளம் போல் செதுக்கப்பட்டிருந்த மூன்றாம் சதுரம் 61 செ. மீ. பக்கம் கொண்டிருந்தது.

அதற்கு வடக்கில் 'ஸ்ரீகைக்கட்டி' எனும் தமிழ்க் கல் வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது. பொ. கா. 7ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் காட்சியளித்த அப்பொறிப்பு அரசர் ஒருவ ரின் விருதுப்பெயராக இருக்கக்கூடும் எனக் கருதினோம். பல்லவப் பேரரசரான இராஜசிம்மரின் பல விருதுப் பெயர்கள் ஸ்ரீ என்ற முன்னொட்டுடன் அமைந்துள்ளமையை நளினி நினைவுகூர்ந்தார். பலமுறை ஆய்வுசெய்த ஓரிடத்தில் புதிய கல்வெட்டைக் கண்டறிந்த மகிழ்வு அனைவருக்கும் நிறை

வளித்தது. இது குறித்த செய்தி 17. 7. 2009 தினமணியில் வெளியானது.

மலையடிப்பட்டியில் புதியது கண்டுபிடித்த மகிழ்வோடு குடுமியான்மலை சென்றோம். ஏற்கனவே அக்கோயில் வளாகத் தைப் பார்வையிட்டிருந்தபோதும் புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள் நூலுக்காகவும் சுமிதாவின் ஆய்வேட்டிற்காக வும் அப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. குடுமியான்மலைக் கோயில் வளாகம் மிகப் பெரியது. கோயிலின் எதிரில் மண்ட பம் ஒன்றும் அதற்குச் சற்றுத் தொலைவில் நந்திமண்டபமும் உள்ளன கோபுரமற்ற நுழைவாயிலுடன் தொடங்கும் கோயில் வளாகத்தின் இரண்டாம் வாயிலுக்கும் முதல் வாயிலுக்கும் இடைப்பட்ட திருச்சுற்று வடக்கிலும் தெற்கிலும் சிதைந்துள் ளது. கோபுர வாயிலை அடுத்துள்ள மண்டபம் சிற்பமண்டப மாகத் திருமெய்யம் விஷ்ணு கோயிலை ஒத்து அமைந்துள்ளது. அதன் தெற்கில் மடைப்பள்ளியும் உற்சவமண்டபமும் அமைய, வடமேற்கில் கிழக்கு நோக்கிய அகிலாண்டேசுவரி அம்மன் கோயிலும் மேற்கில் வெளிச்சுற்றுக்குச் செல்ல வாய்ப்பாக வாயில் ஒன்றும் உள்ளன. அவ்வெளிச்சுற்றில்தான் குடைவரைக் கோயிலும் அதன் வலப்புறத்தே சவுந்தரநாயகி அம்மன் கற்றளி யும் இடப்புறத்தே பிள்ளையார் திருமுன்னும் உள்ளன.

குடுமிநாதர் திருமுன்னாக அறியப்படும் மையக்கோயில் கட்டுமானங்கள் பிற்சோழர் காலத்தனவாகலாம் எனக் கருதி னோம். உள்ளூர் மக்களால் மேலைக் கோயில் என்றழைக்கப் படும் குடைவரை, குன்றின் கிழக்குமுகத்தில் குடையப்பட்டிருந் தது. குடைவரையின் முன்னால் உள்ள இரண்டு மண்டபங் களில் முன்மண்டபம் பின்னாளையது. அதன் பின்னுள்ள மண்டபத்தை அதில் காணப்பட்ட கல்வெட்டுகள் கொண்டு பிற்சோழர் காலத்ததாகக் கொண்டோம். சுமிதாவும் நளினியும் குடைவரைக் கல்வெட்டுகளில் ஆழ்ந்தனர். தமிழ்நாட்டுக் குடைவரைகளிலேயே குடைவரைப் பகுதிக்குள் எண்ணிக்கை யில் மிகுதியான கல்வெட்டுகளைப் பெற்றிருக்கும் ஒரே குடை வரையாக இக்குடைவரையைச் சுட்டலாம்.

இங்கிருந்து 45 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், முகப்புத் தூண்களில் 26ம் முகமண்டபச் சுவர்களில்

18ம் அமைய, எஞ்சிய ஒன்று கருவறை வாயிலை அணைத்துள்ள வடக்கு அரைத்தூணில் உள்ளது. அனைத்துக் கல்வெட்டுகளின் பாடங்களும் வெளியாகியிருந்தபோதும் அவற்றின் புதுக்கோட்டைத் தொகுதிப் பதிவிற்கும் தென்னிந்தியத் தொகுதிப் பதிவிற்கும் இடையே குறிப்பிடத்தக்க பாடவேறுபாடுகள் இருந்தமையால் எங்கள் முதல் வருகையின்போதிருந்தே இங்குள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் படித்துப் படியெடுக்கும் பணியைத் தொடர்ந்தோம். அதன் விளைவாக இரண்டு பதிவுகளிலுமே பாடப் பிழைகளும் விடுபட்ட வரிகளும் இருந்தமை அறிந்தோம்.

கல்வெட்டுகள் அனைத்தையும் படித்த நிலையில் தமிழ் நாட்டுக் குடைவரைகளிலேயே அதிக அளவில் முற்சோழர் கல்வெட்டுகளைக் கொண்டிலங்கும் ஒரே குடைவரையாகக் குடுமியான்மலைக் குடைவரையை அடையாளப்படுத்த முடிந்தது. அது போலவே முகப்புத் தூண்களில் 26 கல்வெட்டுகளைப் பெற்றிருக்கும் ஒரே குடைவரையும் இதுதான். தமிழ்நாட்டில் மிகச் சில குடைவரைகளிலேயே பல்லவர், பாண்டியர், சோழர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இதுவும் ஒன்றாகும். இங்குள்ள கல்வெட்டுகளில் 33 விளக்கறம் பேசுவதால் அந்த வகையிலும் அதிக அளவிலான விளக்கறக் கல்வெட்டுகள் கொண்டிலங்கும் ஒரே தமிழ்நாட்டுக் குடைவரையாகவும் இதைக் குறிப்பிடலாம்.

இங்கு 45 கல்வெட்டுகள் இருந்தபோதும் குடைவரை இறைவனைக் குறித்துப் பேசுவன ஐந்தே. எஞ்சியவை தற்போது குடுமிநாதர் என்றழைக்கப்படும் திருநலக்குன்றத்துப் பெருமானடிகளுக்கு அளிக்கப்பட்ட கொடைகளையே சுட்டுகின்றன. பல்லவ கிரந்தத்தில் அமைந்த பரிவாதினி எனும் கல்வெட்டுக் காணப்படும் புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகளுள் இதுவும் ஒன்று. இவ்வளவு பெருமைகள் கொண்ட இக்குடைவரையின் கல்வெட்டுகளில் நேர்ந்திருந்த ஐயப்பாடுகளை சுமிதாவின் துணையுடன் நளினி சரிபார்த்தார்.

நான் குடைவரைக் கருவறை வாயில் மேல்நிலையின் வட, தென் மூலைகளை மறைத்தவாறு பக்கத்திற்கொன்றாகப் பறக்கும் நிலையில் காட்டப்பட்டிருந்த பூதங்களைப் பார்த்தேன். உட்

கைகளால் உத்திரத்தையும் வெளிக்கைகளால் வாஜனத்தையும் தாங்கும் அவற்றின் மடங்கிய உட்கால்கள் அரைத்தூண்களைத் தொட்டவாறு இருக்க, வெளிக்கால்கள் மடங்கி மேலுயர்ந்து உத்திரம் தாங்குமாறு இருந்தன. தலையோ வாஜனம் தாங்கியது. கற்றளிகளில் பின்னாளில் உருவான தாங்குசிற்பங்களின் முன்னோடிகள் போல அமைந்திருந்த அவை ஒரு வகையில் வாயில் தோரணம் போலவும் காட்சிதந்தன. இது போல் மேலு மிரண்டு பூதங்கள் போதிகைக் கைகளை மறைத்தவாறு பக்கத்திற் கொன்றாக அவ்வத்திசை நோக்கிப் பறக்கும் நிலையில் காட்சி யளித்தன. நாங்கள் அறிந்தவரை கருவறை வாயிலில் பூதத் தோரணம் பெற்ற ஒரே குடைவரையாக இதைக் குறிப்பிடலாம்.

மதிய உணவுக்குப் பிறகு குடைவரைக்குத் தெற்கிலுள்ள பாறைச்சரிவுக்குச் சென்றோம். அங்குதான் உலகப் புகழ்பெற்ற இசைக்கல்வெட்டு உள்ளது. அருகே இலலிதாசனப் பிள்ளை யார். சுமிதா பிள்ளையார் சிற்பத்தைப் பற்றிய தரவுகளைத் தொகுத்தார் திருமெய்யத்திலும் இசைக்கல்வெட்டு இடம் பெற்றிருந்து பிற்பாண்டியர் காலத்தில் அழிக்கப்பட்டதை நளினி நினைவுகூர்ந்தார். குடுமியான்மலை இசைக்கல்வெட்டை ஆய்வுசெய்த பெருமக்கள் பலர் அதை முதலாம் மகேந்திரவர்மர் காலத்ததாகக் கொண்டமை குறித்து எண்ணிப் பார்த்தோம்.

மலையக்கோயில், திருமெய்யம் குடைவரைகளில் காணப் படும் இசை சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகளையும் பரிவாதினிப் பொறிப்பையும் இந்த இசைக்கல்வெட்டுடன் இணைத்துப் பார்ப்பதே பொருத்தமாக இருக்கும் எனத் தோன்றியது. பல்லவர் ஆட்சிக்கு உட்படாத ஒரு பகுதியில் பொ. கா. 7, 8ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல் வெட்டுகள் வேறோர் அரசமரபு சார்ந்தனவாகவே இருக்க வேண்டும் என்ற உறுதிப்பாடு தோன்றியது. அந்த அரசமரபு முத்தரையர்களாக இருக்கலாமென்றும் அது குறித்து மேலும் ஆராயவேண்டும் என்றும் முடிவுசெய்தோம்.

ஜூன் 16 அன்று இராதிகாவின் ஆய்வேட்டிற்காக நாமக்கல் குடைவரைகள் சென்றோம். நாங்கள் ஏற்கனவே நாமக்கல் குடை வரைகள் இரண்டையும் பெருமளவிற்கு ஆய்வுசெய்து தரவுகள் தொகுத்திருந்தமையால் அவற்றைச் சரிபார்க்கவும்

அப்பயணம் உதவியது. தொல்லியல், அறநிலையத்துறை நண்பர் கள் துணையோடு நாமக்கல் மலை மேல் இருந்த அதியேந்திர விஷ்ணு கிருகத்தை அணுகினோம். தமிழ்நாட்டிலுள்ள மிகச் சில பாம்பணையான் குடைவரைகளில் அதுவும் ஒன்று. மிகச் சிறப்பான பாம்பணையான் குடைவரையாக மெய்யம் முதலில் நிற்குமானால், அடுத்த இடம் நாமக்கல்லுக்குத்தான். குடை வரைக் கலையில் தேர்ந்தவர்களாகக் கருதப்படும் பல்லவர்களை விஞ்சி முத்தரையர்களும் அதியர்களும் தங்கள் கைவண்ணம் காட்டிய இடங்கள் அவை.

இராதிகாவுக்கு முகமண்டபச் சுவர்களில் இருந்த சிற்பத் தொகுதிகளை அடையாளப்படுத்தி அவற்றின் பின்னிருந்த புராணக்கதைகளையும் தெரிவித்தேன். புராணக்காட்சிகளை விழிமுன் வைக்க அமைந்த சிற்பத் தொகுதிகள்தான் அவை என்ற போதும் அவற்றை உருவாக்கிய சிற்பாசிரியர்கள், தம் சமகால நாகரிகத்தையும் பண்பாட்டையும் அக்காட்சிகளில் ஊடாட வைத்திருப்பதை எப்படியெல்லாம் அணுகி அறியலாம் என்பதையும் அவருக்கு விளங்க வைத்தேன். ஊரகப் பின்புலத் தில் வளர்ந்தவர் என்ற போதும் ஆர்வமும் ஈடுபாடும் கோயிற் கலைகளை ஆழத் தெரிந்துகொள்ள அவரை ஊக்கின. கல் வெட்டுப் படிப்பதிலும் அவர் காட்டிய இணையான ஆர்வம் நளினிக்குத் துணையானது.

மண்டபக் கோயிலாய் அமைந்துள்ள அதியேந்திர விஷ்ணு கிருகம் தற்போது அரங்கநாதர் குடைவரையாக அறியப்படு கிறது. குடைவரை முகப்பை அடைய இருபுறத்தும் படிகள் கொண்ட மேடையுள்ளது. அதன் முகப்பில் குத்துக்காலிட்ட நிலையில் குறளர் சிற்பமொன்று முழங்கால்களின் மேல் கை வைத்த நிலையில் காட்சியளித்தது. இது போன்ற இருபுறப் படி யமைப்புடனான மேடை தாய்ப்பாறைப் பிறப்பாக மதுரைக் கந்தன் குடைவரையிலும் உள்ளமை நினைவுக்கு வந்தது. அதை விடவும் நாமக்கல் மேடை பல சிறப்பான அலங்கரிப்புகளுடன் தனித்தன்மை பெற்று விளங்கியது. குடைவரையின் முகப்பு கீழே பாதபந்தத் தாங்குதளமும் இடையில் தூண்களும் மேலே கூரையுறுப்புகளும் பெற்றிருந்தது. ஏறத்தாழ 2. 17 மீ. உயரம்

பெற்றிருந்த அத்தாங்குதளம் தமிழ்நாட்டின் வேறெந்தக் குடை வரையிலும் காணவியலா அதிசயமாக மிளிர்ந்தது.

தூண்களின் சதுரங்களில் தாமரை, கொடிக்கருக்குப் பதக் கங்கள் இருந்தமையை இராதிகாவுக்குக் காட்டி, இது போன்ற கொடிக்கருக்குப் பதக்கங்கள் சிராப்பள்ளி இலலிதாங்குரத்தி லும் இடம்பெற்றுள்ளமையை ஒப்பாய்வுக்குக் கொள்ளுமாறு கூறினேன். கூரையின் வெளிநீட்டலாய் இறங்கும் கபோதம் மூன்று வளைவுகள் பெற்றுப் படியமைப்பையும் தாண்டி வளர்ந் துள்ளமை, மெய்யம் விஷ்ணு குடைவரை, கழுகுமலைக் கந்தன் குடைவரை ஆகியவற்றின் கபோதங்களோடு அதை ஒப்பிடச் செய்தது. கபோதத்தின் கீழ்ப்பகுதியில் அதற்கான தாங்கலாக இரும்புச் சலாகைகள் போல் நீளவாக்கில் வெட்டப்பட்டிருந்த பட்டைகள் கவனம் கவர்ந்தன. ஆவுடையார் கோயில் கபோதமே நினைவுக்கு வந்தது. குடைவரைக் காலத்திலேயே கபோதம் பல நிலை அலங்கரிப்புகளைப் பெறத் தொடங்கிவிட்டமையை எங்கள் களஆய்வுகளில் கண்டு வியந்திருக்கிறோம். குடை வரைக் காலக் கபோதம் பற்றியே ஓர் ஆய்வேடு எழுதக்கூடிய அளவிற்குச் செய்திகள் உள்ளன. முகப்புத் தூண்களிலிருந்த கல்வெட்டுகளின் பாடங்களை நளினி சரிபார்த்தார்.

அது போழ்து அதுவரை படியெடுக்கப்படாத சோழ அர சர் மூன்றாம் இராஜராஜர் காலக் கல்வெட்டுகள் நான்கையும் விஜயநகர அரசர் அச்சுததேவராயர் காலக் கல்வெட்டொன்றை யும் கண்டறிந்ததோடு, நடுவணரசின் கல்வெட்டுத்துறை தென் னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 22இல் பதிப்பித்துள்ள நிறை வடையாத கல்வெட்டொன்றின் தொடர்ச்சியையும் நளினி கண்டுபிடித்தார். மூன்றாம் இராஜராஜரின் 21ஆம் ஆட்சியாண் டில் வெட்டப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுகளுள் ஒன்று, கீழ்க்கரை நாட்டு மேல்சேரியைச் சேர்ந்த வேட்டுவன் ஊராளிப் பிள்ளையாரான இருங்கோளன், மலையிலுள்ள வேதநாயகப் பெருமாளுக்கும் கீழுள்ள சிங்கப்பெருமாளுக்கும் வேட்டம் பாடியிலிருந்த தம்முடைய குளக்கீழ் நீர்நிலத்தில் ஒரு மா அளவு நிலத்தைத் திருமடைப்பள்ளிப் புறமாகக் கொடை யளித்த தகவலைத் தந்தது.

மற்றொரு கல்வெட்டு, ஊராளிமலை வேட்டுவரான கோயான் இருங்கோளன் கரியபெருமாளான வலங்கை மீகாமன் அவர் ஊரான சேந்தமங்கலத்திலிருந்த குளக் கழனி நிலத்தில் மாகாணி அளவு நிலத்தை இரண்டு குடைவரை இறைத்திரு மேனிகளின் படையல் செலவினங்களுக்காக அளித்ததாகக் கூறியது. முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, வலங்கை ஆளப்பிறந்தான் நரசிங்கதேவன் என்பார் வேதநாயகப் பெருமா ளின் பிராட்டியாருக்குப் பவித்திரமாணிக்கத்தில் துத்தக் குளத் தின் வடக்குத் தூம்பிலிருந்து மாவோடு வாய்க்கால் வழி நீர்ப் பாய்ந்த நிலப்பகுதியில் அரை மா நிலத்துண்டை படையலுக் களித்த செய்தியைத் தெரிவித்தது.

ஆட்சியாண்டு சிதைந்துள்ள அவருடைய மற்றொரு கல்வெட்டு, மடைப்பள்ளிச் செலவினங்களுக்காக நரசிங்கதேவ னும் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தியும் தங்கள் மாபுரத்து நிலத் தில் இரண்டு மா அரைச்செய் நிலம் கொடையாகத் தந்தமை சொன்னது. இந்நான்கு கல்வெட்டுகளுமே கொடைகளைக் காப்பாற்றுவார் திருவடிகளைக் கொடையாளிகளின் வழிவரு வோர் தம் தலைகளில் தாங்கிப் போற்றுவார் எனக் கூறுவதுடன், கொடைகளை அழிக்க நினைப்பார் மரபு அறுபட்டுச் சந்ததி யில்லாமல் போவார் என்றும் எச்சரிக்கின்றன.

அச்சுதராயர் காலக் கல்வெட்டு, அவருடைய ஊழியர் சவுத்தான் லக்கையன், முகப்பின் முன்னுள்ள படியடுக்கையும் பிடிச்சுவர்களையும் சீரமைத்த தகவலைத் தந்தது. தம் முதல் வருகையிலேயே புதிய கல்வெட்டுகள் சில கண்டுபிடிக்கப் பட்டமை இராதிகாவிற்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இச்செய்தி ஆகஸ்டு 7 தினமணியில் வெளியானது. தென்னிந்தி யக் கல்வெட்டுத் தொகுதி 22இன் முதற்பகுதியில் கல்வெட்டு எண் 9இன் கீழ் 4 வரிகளே பதிவாகியிருந்த மூன்றாம் இராஜ ராஜரின் 30ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் எஞ்சிய 3 வரிகளைக் கண்டறிந்தமையால் கொடை மடைப்பள்ளிப்புற மாகத் தரப்பட்டமையை அறியமுடிந்ததது.

மதிய உணவுக்குப் பிறகு கருவறையில் கவனம் செலுத்தி னோம். முகமண்டப மேற்குச் சுவரின் பெரும் பகுதி கருவறை வாயிலாக்கப்பட்டிருந்தது. எஞ்சிய அதன் வட, தென்பகுதி

களில் செவ்வகக் கோட்டங்கள் அகழப்பட்டுத் தெற்கில் மகா பலியும் வடக்கில் நரசிம்மரும் நின்றகோலத்தில் செதுக்கப் பட்டுள்ளனர். கருவறை வாயிலும் இக்கோட்டங்களும் பாத பந்தத் தாங்குதளம் பெற, இடையில் பிடிச்சுவருடன் பாறைப் படிகள். கருவறை வாயில் இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் பெற்று மூன்று அங்கணங்களாகக் காட்டப் பட்டிருந்தது. கூரையுறுப்புகளில் கல்வெட்டுகள் இடம்பெற் றிருந்தன ஏற்கனவே பதிப்பிக்கப்பட்டிருந்த இக்கல்வெட்டு களின் பாடங்களை நளினியும் இராதிகாவும் சரிபார்த்தனர்.

கருவறையில் பாம்பணையில் பள்ளிகொண்டபெருமாள் சாய்ந்திருந்தார். கருவறை மேற்குச் சுவரின் வடக்கு மடிப்பில் மது, கைடபர் நின்றிருந்தனர். வட, தென் சுவர்களில் சந்திரனும் சூரியனும் அமைய, பின்சுவரில் பெருமாளுக்கு மேலே மேகங் களுக்கிடையில் 8 சிற்பங்கள் இருந்தன. படுக்கை முகப்பிலும் 7 சிற்பங்களைக் காணமுடிந்தது. பட்டாச்சாரியார் உதவியுடன் அனைத்துச் சிற்பங்களையும் ஏற்கனவே தொகுத்திருந்த தரவு களின் துணையோடு ஆய்வுசெய்தோம். கல்வெட்டின் உதவி கொண்டு சில சிற்பங்களை அடையாளப்படுத்தவும் முயற்சித் தோம். இராதிகாவிற்குச் சிற்பஆய்வில் அனுபவமில்லை என்பத னால், அது குறித்த அடிப்படை வழிகாட்டல்களை வழங்கி னோம். அவருக்குத் தெரிந்த அளவில் ஓரிரு சிற்பங்களையேனும் நன்கு கவனித்துத் தரவுகள் தொகுக்குமாறு கூற, அவரும் இயன்றவரை முயன்றார். மாலை மயங்கும் நேரம் வெளி மண்டபங்களைப் பார்வையிட்டுத் திரும்பினோம்.

வரலாறு 19ஆம் தொகுதி வெளியான நிலையில் 20ஆம் தொகுதிக்கான திட்டமிடலுக்காக இதழின் ஆசிரியர் குழுக் கூட்டம் நிகழ்ந்தது. ஓர் ஆய்விதழின் வரலாற்றில் 20 ஆண்டுப் பயணம் எளிய செயலன்று. உண்மைகளைச் சார்பின்றி முன் வைக்கும் மகிழ்வே வரலாறு இதழை வழிநடத்துவதாகக் கூறிக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தேன். புதிய கல்வெட்டுகள் பகுதியில் விளங்குளம் அட்சயபுரீசுவரர், அம்புக்கோயில், மெய்யம் சத்தியமூர்த்தி கோயில், நாலூர் பலாசவனநாதர், பட்டீசுவரம் திருசோமீசுவரர் ஆகிய கோயில்களில் கண்டறி யப்பட்ட கல்வெட்டுகளைப் பதிவுசெய்ய முடிவாயிற்று. பதிப்

பிக்கப்படாத பாடங்களாகத் திருமங்கலத்துக்கு அருகிலுள்ள நகரைச் சேர்ந்த அப்ரதீசுவரர் கோயில் கல்வெட்டுகளை இணைத்துக் கொள்ளலாம் என நளினி தெரிவித்தார்

புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள் நூலுக்காக நாங்கள் மேற்கொண்டிருந்த திருமெய்யம் ஆய்வுகள் முடிவுற்றிருந்த நிலையில், 'மெய்யத்து மலைத்தேவரும் மகாதேவரும்' என்ற தலைப்பில் சிவன் கோயில்களைப் பற்றிய கட்டுரையையும் 'மெய்யத்தே பள்ளிகொண்டவரும் நின்றருளியவரும்' என்ற தலைப்பில் விஷ்ணு கோயில்களைப் பற்றிய கட்டுரையையும் பதிவுசெய்யக் கருதினோம். மெய்யம் கோயில் ஆய்வுகள் பல புதிய உண்மைகளையும் புதிய கல்வெட்டுகளையும் வெளிக் கொணர்ந்திருந்தமையால் வரலாறு இதழில் அக்கட்டுரைகள் வருவது ஆய்வாளர்களுக்குப் பயனளிப்பதாக அமையும் என்று அகிலா கருத்துரைத்தார்.

ஆய்வுக்கட்டுரைகளின் களப்பணிகளுக்கான அனைத்துச் செலவுகளையும் தாம் மேற்கொள்வதாகக் கூறிய திரு இல. இராமச்சந்திரன், திருமதி ந பாக்கியலட்சுமி இராமச்சந்திரன் இணையர் அறக்கட்டளையின் நிருவாக அறங்காவலர் இசையாசிரியை இரா. இலலிதாம்பாள் அதற்கான நல்கையை வழங்கினார் குன்றாண்டார்கோயில் ஆய்வுப்பணி முடிந்திருந்த நிலையில் அது குறித்த கட்டுரையையும் அவ்விதழில் இணைக்க விழைந்தோம். மாமல்லபுரம் குடைவரைகள் பணி தொடர்ந்து கொண்டிருந்தமையை நினைவூட்டிய அகிலா அப்பகுதி சார்ந்த தருமராஜர், கொற்றவை மண்டபக் கட்டுரைகளையும் இதழில் சேர்த்துக்கொள்ள வாய்ப்புள்ளமையைத் தெரிவித்தார். பொதுப் பகுதி பற்றி அடுத்த கூட்டத்தில் திட்டமிட முடிவானது

ஜூன் 24 பாரதிதாசன் பல்கலைக்கழகத் தேர்வாணையர் திரு. எஸ். ஸ்ரீதரன் கண்மருத்துவத் தொழில் நுட்பப் பட்டயக் கல்வி, இளநிலைக் கண்ணாடியியல் படிப்பு ஆகியவை சார்ந்த தேர்வுத்தாள்களை மதிப்பீடு செய்யுமாறு கேட்டு மடலெழுதியிருந்தார். இசைவு தெரிவித்ததுடன், அவர்கள் குறிப்பிட்டிருந்த நாளில் பல்கலைக்கழகம் சென்று தேர்வுத்தாள் திருத்தம் செய்து வந்தேன். அது போலவே சிராப்பள்ளித் தென்னூரிலிருந்த மகாத்மா காந்தி கண் மருத்துவமனையைப் பார்வை

யிட்டுக் கருத்துரைக்குமாறு பாரதிதாசன் பல்கலைக்கழக வணிக விரிவாக்க நடுவத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கிருஷ்ணன் கேட்டிருந்தமை ஏற்று அப்பணி செய்தளித்தேன்.

ஜூன் 25 என்னைச் சந்தித்த கி. ஆ. பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 29 திங்கள் காலை நிகழவிருந்த 'அமுதம் 2009' எனும் மருத்துவக் கல்லூரி விழாவில் பங்கேற்றுத் தமிழ் மன்றத்தைத் தொடங்கி வைப்பதுடன், மாணவர் பட்டி மன்றத்தையும் நடுவராக இருந்து நடத்தித் தரவேண்டும் எனக் கேட்டனர். நான் படித்த கால வாழ்க்கை நினைவிற்கு வரவே பூரிப்புடன் இசைந்தேன். 29 காலை கல்லூரி சென்ற என்னைத் தமிழர் உடையில் மாணவர்களும் பேராசிரியர்களும் அன்புடன் வரவேற்றனர். முதலில் நிகழ்ந்த கிராமத்துச் சமையல் போட்டி கண்ணையும் கருத்தையும் நாசியையும் ஒருசேரக் கவர்ந்தது.

அடுத்தாற் போல் இருந்த ஐவகை நிலக் காட்சி மருத்துவக் கல்லூரி மாணவர்களின் தமிழ்ப் பற்றையும் இலக்கிய அறிவையும் கற்பனை வளத்தையும் வெளிப்படுத்தியது. குறிஞ்சி நிலப் பண்பாடே அனைவரையும் கவர்ந்து பரிசு பெற்றது. அதற்கு முக்கியமான காரணமாக அந்நிலத்துக் குறத்தியராகப் பங்கேற்ற மாணவிகளின் நடிப்புத் திறனைச் சொல்லலாம். 'இன்றைய சூழலில் சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் தேவைப்படுவது ஆற்றல் மிக்க இளமையே, அனுபவம் மிக்க முதுமையே' என்ற தலைப்பில் அமைந்த பட்டிமன்றத்தில் இரு தரப்பினரும் சிறக்கப் பேசி நடுவரான என் பணியை எளிதாக்கினர். இளமையின் ஆற்றலும் முதுமையின் பட்டறிவும் இணையும்போது தான் சமுதாயம் முன்னேற்றமடையும் என்ற தீர்ப்பை இரு பக்கக் கருத்துக்களையும் இணைத்த நிலையில் வழங்கியபோது அவை மகிழ்ந்து வரவேற்றது. மதிய விருந்து கிராமத்துச் சமையலின் சிறப்பான உணவுகளைக் கொண்டிருந்தது.

வரலாறு 19ஆம் தொகுதி பார்த்து, 'வரலாறு 19இன் முன் அட்டையிலும் பின் அட்டையிலும் உள்ளேயும் எனக்கு அளிக்கப்பட்டுள்ள இடம் நான் பெற்ற பத்மஸ்ரீ விருதைவிடப் பல மடங்கு உயர்ந்தது என உளமாரக் கருதுகிறேன். உங்கள் பணி மேலும் சிறக்க என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பது ஒன்றுதான் நான் செய்யக்கூடிய கைம்மாறு' என்று திரு. மகாதேவன் எழுதி

யிருந்த கடிதம் கண்களை நனைத்தது. பழந்தமிழ்க் கல்வெட்டு களுக்கு அவர் ஆற்றியுள்ள பணிக்கு வரலாறு தன் கடமையைச் செய்திருப்பதாகவே கருதினோம்.

ஜூன் 30 செவ்வாய் சிறப்புக்குரிய நாளாக அமைந்தது. வரலாறு மின்னிதழ்க் குழுவினர் அம்மாத இதழைப் பேராசிரி யர் மா. ரா. அரசுவின் பணிகளைப் பாராட்டும் விதமாகச் சிறப்பிதழாக வெளியிட்டிருந்தனர் அனைத்துக் கட்டுரைகளை யும் படித்து மகிழ்ந்தேன். வரலாறு ஆசிரியர் குழுவினர் அவரவருக்கு அரசுவுடன் நேர்ந்த அனுபவங்களைக் கட்டுரை களாகப் பகிர்ந்துகொண்டிருந்தனர். இளைஞர்களை ஊக்குவ திலும் அவர்தம் ஆற்றலைச் சரியான திசைகளில் பயணப்பட வைப்பதிலும் அரசுவுக்கு நிகர் வேறு யாருமில்லை.

ஜூலை 4 சனிக்கிழமை காலை ஆவின் நிறுவன மேலாளர் திரு. ச. சுந்தரேசன் தொலைபேசி வழி அறிமுகம் செய்து கொண்டு சந்திக்க வந்திருந்தார். ஒளிப்பட வல்லுநராக விளங்கிய அவரது வரலாற்று ஆர்வம் மகிழ்வளித்தது. மைய வெளியீடு கள் அனைத்தையும் கேட்டுப் பெற்றவர் களப்பயணங்களுக்குச் செல்லும்போது தமக்குத் தெரிவித்தால் இணைந்து கொள்வ தாகத் தெரிவித்தார். அவரது ஒளிப்படங்கள் சிலவற்றைப் பார்க் கும் வாய்ப்பமைந்தது. ஓவியம் தீட்டினாற் போல் அத்தனை கலையழகுடன் அப்படங்கள் அமைந்திருந்தமை வியப்பூட்டிய துடன், அவரது திறம் உணர்த்தின. அது போல் படங்கள் கட்டுரைகள் எழுதப் பேருதவியதாக அமையும் என்பதை உணர்ந்தேன். நிறைய எழுதுமாறு அவரை ஊக்கினேன்.

27 திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் நிகழ்ந்த காய்கறி, பழங்களில் உள்ள சத்துக்கள் குறித்த தொலைபேசிக் கலந்துரையாடலில் பங்கேற்றேன். ஒரு மணி நேரம் தொடர்ந்த அந்த நிகழ்வில் பொதுமக்களில் பலர் பயனுள்ள கேள்வி களைக் கேட்டு உரிய விடைகளைப் பெற்றனர். ஓரிரு ஆண்டு களாகப் பொதுமக்களிடையே உணவுப் பழக்கங்கள் குறித்து நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதை இத்தகு வானொலி உரைகள் வழி அறியமுடிந்தது. சுவைஞர்களில் சிலர் உணவு குறித்த நுட்பமான செய்திகளைக்கூடத் தெரிந்து வைத்திருந் தமை இம்முறை அமைந்த கலந்துரையாடலில் தெளிவானது.

வரலாறு 19 கிடைக்கப் பெற்றமை தெரிவித்துத் திரு. சூ. சுவாமி நாதன் எழுதியிருந்த மடலில், 'ஒவ்வோர் இதழிலும் பல அரிய செய்திகள் நல்ல தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளன. படிப்ப தற்குச் சுவையாக இருப்பது மட்டுமல்லாமல், இவ்வளவு விஷயங்கள் நமக்குத் தெரியவில்லையே, என்று இவற்றை எல்லாம் அறிந்துகொள்ளப் போகிறோம் என்ற உணர்வும் எனக்குத் தோன்றுகிறது' என்று குறித்திருந்தார். அவரது பண்புள்ளத்தின் வாழ்த்து எப்போதுமே எங்களுக்கு அளப் பரிய உற்சாகம் தரும்.

28 காலை இராதிகாவின் ஆய்வுக்காக நாமக்கல் சென் றோம். இம்முறை நரசிம்மர் குடைவரை பார்த்தோம். பலமுறை அக்குடைவரை வளாகம் சென்றிருந்தபோதும் அதன் வட, மேற்கு வாயில்களின் கதவுகள் இராமாயணச் சிற்பங்களைப் பெற்றிருந்தமை தெரிந்திருந்தபோதும் அவற்றை ஆய்வுசெய்ய வாய்த்ததில்லை. இம்முறை காலை முழுவதும் அக்கதவுகளின் ஆய்வில் நிறைந்தது. ஏறத்தாழ 200 அல்லது 300 ஆண்டுக் கால பழைமை வாய்ந்த அந்நெடுங்கதவுகள் நன்கு திட்டமிடப்பட்ட நிலையில் இராமாயணக் கதையின் முக்கியமான காட்சிகளைச் சிற்பங்களாகக் கொண்டிருந்தன. தமிழ்நாட்டுக் கோயில்கள் சிலவற்றில் இது போல் சிற்பக் கதவுகள் காணப்படினும் முழுமையும் இராமாயணம் சார்ந்த சிற்பங்களாலான கதவுகள் நாமக்கல் போல் வேறெங்கேனும் உள்ளனவா என்பதை அறிய வேண்டும் என நளினியிடம் கூறினேன்.

3. 80 மீ. உயரம், 1. 16 மீ. அகலம் கொண்ட வடக்கு வாயிலின் இரண்டு கதவுகளிலும் கதவொன்றிற்கு நான்கு நெடுக்குப் பட்டைகளும் பதினொரு குறுக்குப் பட்டைகளும் அமைக்கப் பட்டுள்ளன. குறுக்குப் பட்டைகள் ஒவ்வொன்றிலும் மூன்று சதுரங்களும் நெடுக்குப் பட்டைகள் ஒவ்வொன்றிலும் பத்து சதுரங்களும் சிற்பங்களுடன் உள்ளன. பட்டைகள் இணையு மிடம் ஈட்டிமுனை போன்ற இரும்பாணிகளால் பொருந்தச் சேர்க்கப்பட்டிருந்தது. பல சிற்பங்கள் நன்னிலையில் இருந்தன. இராதிகாவுக்கு இராமாயணப் பயிற்சி இல்லாமையால் அடுத்த முறை வரும்போது இராமாயணம் படித்துவருமாறு கூறினேன். இராமாயணப் பின்புலம் இருந்தாலும், அக்கதவுச் சிற்பங்கள்

அனைத்தையும் அடையாளப்படுத்திவிடமுடியாது என்பதை மேலோட்டமாகப் பார்த்த நிலையிலேயே அறிந்தேன். நரசிம்மர் குடைவரை அதியேந்திரர் குடைவரையிலிருந்து நன்கு மாறுபட்டிருந்தது. முதல் பார்வையிலேயே இராதிகாவிற்கும் அது விளங்கியது என்ற போதும் அவரால் அம்மாறுபாடுகளைக் குறிப்பிடமுடியவில்லை. முகமண்டபம் அர்த்தமண்டபம், கருவறை, முன்றில் என அமைந்திருந்த அக்குடைவரையின் ஒவ்வோர் உறுப்பையும் விளக்கிக் குடைவரையின் உருவாக்கத் திட்டத்தை அவர் அறிய நளினி உதவினார்.

அதியேந்திர விஷ்ணுகிருகம் போல் இக்குடைவரைக்குள் கல்வெட்டுகளைக் காணக்கூடவில்லை. வெளியிலுள்ள பாறைச் சரிவுகளிலேயே கல்வெட்டுகள் உள்ளன. குடைவரை வளாகத்திற்கும் அதன் முன்னுள்ள மண்டபத்திற்கும் இடையே கட்டுமானத்தால் மறைக்கப்பட்டுள்ள படிப்பகுதியை ஆராயத் தொல்லியல், அறநிலையத் துறையினர் அனுமதியோடு உள் நுழைந்தோம். ஏற்கனவே படியெடுக்கப்பட்டிருந்த துணுக்குக் கல்வெட்டுகள் படிக்கப்பட்டன.


மதிய உணவிற்குப் பிறகு குடைவரையின் சுவர்ச் சிற்பங்களை இராதிகாவிற்கு விளக்கினோம். தமிழ்நாட்டுக் குடைவரைகளில் வேறெங்கும் காணப்படாத வைகுந்தநாராயணர் தொகுதி வடகோட்டத்தில் இருந்தமை அக்குடைவரையின் தனித்தன்மை என்பதைக் கூறி, அத்தொகுதியின் அனைத்துச் சிற்பங்களையும் இராதிகா அறியுமாறு செய்தோம். பெருமாளின் இருபுறத்தும் சிவபெருமானும் நான்முகனும் நின்ற கோலத்தில் காட்சிதருவதை இங்குக் காணலாம். அத்துடன் பெருமாளின் இடப்புறத்தே இலலிதாசனத்தில் நரசிம்மரைக் காணமுடிவதும் இங்கு மட்டும்தான் மிக அரிய இச்சிற்பத் தொகுதி விரிவான ஆய்வுக்கு உட்பட்டது. உக்கிரநரசிம்மர், பூவராகர், உலகளந்தவர் சிற்பங்களைக் கண்டு தரவுகள் தொகுத்தோம். அன்று மாலை சிராப்பள்ளித் திரும்பும் வழியில் குரங்கநாதர் கோயிலைப் பார்வையிட்டோம். சிறப்பான கட்டுமானமும் அற்புதமான முற்சோழர் சிற்பங்களும் கொண்ட அக்கோயில் காணுந்தோறும் கண்களை நிறைப்பது. கவரிப்பெண்கள் ஆய்வுக்காகச் சில படங்கள் எடுத்துத் திரும்பினோம்.

ஆகஸ்டு 9 இந்து நாளிதழில் திரு. டி. எஸ். சுப்பிரமணிய னால் எழுதப்பட்டிருந்த செய்திக் கட்டுரை ஒன்று சென்னைக் கொளப்பாக்கம் தீர்த்தங்கரர்கள் பற்றிய உண்மைகளைப் பதிவு செய்திருந்தது. ஒரு வீட்டின் முன்பு பல காலம் இருத்தப்பட் டிருந்த அத்தீர்த்தங்கரர் சிற்பங்களைப் புதிதாகக் கண்டறியப் பட்டனவாகவும் அவை புத்தரின் சிற்பங்கள் என்றும் இந்தியத் தொல்லியல்துறை அறிவித்திருப்பதாகச் செய்தி வெளியிட்ட திரு. சுப்பிரமணியனே இப்போது சிற்பங்கள் குறித்த உண்மை களை ஏறத்தாழ மூன்றாண்டுக் கால இடைவெளியில் தெரிவித் திருந்த நேர்மை பாராட்டுக்குரியதாக இருந்தது. தவறான செய்தி வெளியான 2006இன் போதே அச்சிற்பங்கள் சமணத் தீர்த்தங்கரர் களைக் குறிப்பவை எனச் சுட்டி எழுதியதுடன், கொளப்பாக் கம் சென்று நேரிடையாக ஆய்வும் செய்தவன் என்ற முறையில் சுப்பிரமணியத்தின் இந்தப் பதிவு ஆறுதலளித்தது.

ஆகஸ்டு 11 பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டிருந்தபடி அப்பல்கலைப் பேராசிரியர் முனைவர் தாஜூதி னோடு தவத்துறையிலுள்ள ஒரு மருத்துவமனை ஆய்வுக்குச் சென்றோம் அம்மருத்துவமனையினர் தொடங்கக் கருதியிருந்த மருத்துவஞ் சார் துணைப் படிப்புகளுக்கு ஏற்றவாறு கட்ட மைப்புகளும் கல்விச் சூழல்களும் உள்ளனவா எனக் கண்டு தெரிவிப்பது எங்கள் பணியாக இருந்தது. நேரிடை ஆய்வு மிகுந்த ஏமாற்றம் அளித்தது. நூலகம் என்ற பெயரில் ஓர் அலமாரியை மட்டும் நிருவாகத்தார் காட்டியபோது அதிர்ந் தோம் செய்ய வேண்டுவன குறித்து நானும் பேராசிரியரும் நிருவாகத்திடம் விரிவாகப் பேசினோம். அனைத்தும் நிறை வேற்றிய பிறகு தெரிவிக்குமாறும் அதன் பிறகே மீளாய்வு நிகழ்ந்து படிப்புகள் தொடங்க அனுமதி கிடைக்கும் எனவும் கூறி விடைபெற்றோம். தனியார் நிறுவனங்கள் பெரும்பாலா னவை மிகக் குறைந்த வசதிகளில் கல்விக் கூடங்கள் அமைப்ப தையே கொள்கையாகக் கொண்டிருந்தமையை என் ஆய்வு அனுபவங்கள் வெளிக்காட்டின சில நேரங்களில் இது போன்ற பணிகளுக்குச் செல்லாமல் இருப்பதே மன அமைதியைத் தக்கவைத்துக் கொள்ளும் வழி எனக் கருதியிருக்கிறேன்.

- வளரும்

இராஜ் தினேஷ் கட்டமைப்புகள்



அந்தமான் சிறை

மெய்ஞ்ஞானி ஆன்மீகம் வளர்ப்பார் (பாரதி)

பிராங்க்பர்ட்டில் ஒரு காட்சி

சுஃபில் டவரிலிருந்து ஒரு பாரிஸ் பார்வை


வெளிச்சவெளிப் அரங்கமனை

லுவர் காட்சியகத்தில் ஓர் அரங்கு

ஓவியில் மம்மி காட்சியகம்



பெர்லின் அருங்காட்சியக முகப்பு



பெர்லின் காட்சியக எகிப்துக் கூடம்

கொலோசியம் - ரோமாபுரி



ரோம அரண்மனையின் சிதைவுகள்



வாடிகன் தேவாலயம்

டோகி அரண்மனை - லெனின்ஸ்

டி.யோனிசான் அரங்கு - ஏதெனஸ்

சுவிட்ஸர்லாந்து பிலாட்டஸ் பயணக் காட்சி



வெள்ளி விழா விருது பெறும் அர. அகிலா



ISBN 978-81-921110-8-7

ஊர்த்வஜாநு - திருவக்கரை